கண்ணன் கிருஷ்ணன்



செப்பேடு தந்த செம்மல்

செப்பேடு தந்த செம்மல்

கண்ணன் கிருஷ்ணன்

சாந்தா பதிப்பகம்

முத்துவிழா இல்லம்

13(5), ஸ்ரீபுரம் இரண்டாவது தெரு,

இராயப்பேட்டை, சென்னை-600 014.

தொலைபேசி : 28115618, 28116018.

முன்னுரை

தமிழக வரலாற்றை, குறிப்பாகப் பாண்டியர் வரலாற்றை நாம் அறிவதற்கு நமக்குப் பெரிதும் துணையாக இருப்பவை **வேள்விக்குடிச்**செப்பேடுகளும், **சீவரமங்கலச்** செப்பேடுகளும் ஆகும். இவை கி.பி. எட்டாம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்த **பராந்தகன் நெடுஞ்சடையன்** காலத்தில் எழுதப்பட்டவை. அதற்கு முன் நில உரிமைப் பட்டயங்கள் ஓலை ஏட்டில் எழுதப்பட்டதால் நாளடைவில் அழிந்தொழிந்தன. அந்நிலையை மாற்றி அவற்றைச் செப்பேட்டில் எழுதும் பழக்கத்தைத் தொடங்கிவைத்த மன்னன் **நெடுஞ்சடையன்.** அவற்றில் அழகிய தமிழ்நடையில் வரலாற்றுக் குறிப்புகளை வரைந்த அறிஞன், **ஏனாதி சாந்தஞ் சாத்தன்.** இவ்வாறு வரலாற்றுச் சுரங்கத்தைத் திறந்துவைத்த மன்னனையும், அறிஞனையும் நடுநாயகமாகவைத்து-அவர்களுடையநெடுந்தூரப்பார்வையையும்தமிழ்த் தொண்டினையும்பாராட்டும்நோக்குடன்உருவானதேஇப்புதினம்.

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்" என்று தொல்காப்பியப் பாயிரம் தமிழ்மொழி வழங்கிவந்த நிலப் பரப்பை வரையறுத்துக்கூறியது. ஆயினும் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு முதல், மேற்குத் தொடர்ச்சி **மலைக்கும் அரபிக்கடலுக்கும்** இடையே நீண்டுகிடக்கும் நிலப்பரப்பில் **தமிழ்மொழி** மெல்ல மெல்ல மறைந்து **மலையாளம்** என்ற புதியமொழி வழங்கத் தொடங்கியது. தமிழ் முதல் காப்பியம் படைத்த **இளங்கோவடிகளும்** சங்ககாலப் பெரும்புலவரான **பரணர்,குலசேகர ஆழ்வார்** போன்ற சமய இலக்கியப் பெரியோர்களும் பிறந்து, வளர்ந்து, தமிழ்மொழிக்கு வளம் சேர்த்த மண்ணிலிருந்து அந்தமொழிமறைந்ததுஏன்?

வடமொழியின் புதிய ஒலிவகை வனப்பிலும் **காளிதாசன் வால்மீகி** போன்ற பெரும்புலவர்களின் படைப்புகளிலும் மயங்கி அங்கு வாழ்ந்த மக்கள் வடமொழி ஆதிக்கத்தை வரவேற்று, முதலில் தமிழ்மொழியுடன் இணைத்து மணிப்பிரவாளம் என்ற கலப்பு மொழியையும், பின்னர் அதன் குறைதீர்த்து முறைப்படுத்திய மலையாளம் என்ற மொழியையும் பெற்றெடுத்தனர் என்பது ஓரளவு உண்மையே. அத்துடன் தமிழகத்தின் பெரும்பகுதியை ஆண்ட பேரரசர்களான பாண்டியர்களும், பின்னர் சோழர்களும் அடிக்கடி மேற்கொண்ட படையெடுப்புகளும் வேணாட்டிலும் சேரநாட்டிலும் வாழ்ந்த மக்களிடையே அந்த மன்னர்கள் மீதும் அவர்களுடைய மொழி மீதும் வெறுப்பை ஊட்டின என்பதும் ஒரு வரலாற்று உண்மையாகும். மூவேந்தர்க்கிடையிலும், அவர்களுக்குத் திறைசெலுத்தி ஆண்ட குறுநில மன்னர்க்கிடையிலும் இடையறாது நிகழ்ந்து கொண்டிருந்த போர்கள், பழம்பெருந் தமிழகத்திற்குப் பெருந்தீங்கு விளைவித்து நாட்டை வலிமையிழக்கச் செய்தன. அந்தத் தீங்குகளில் தலையாயது நம் அமிழ்தனைய தமிழ்மொழி ஒரு வளம்கொழிக்கும் நிலப்பரப்பில் வழக்கொழிந்ததாகும். இப்புதினம் அந்த வரலாற்றுப் பின்னணியையும் ஆற்றுநோக்குகிறது.

'வரலாறு படைக்க விரும்பும் மனிதன் முதலில் வரலாற்றைப் படிக்க வேண்டும்' என்று உலக வரலாற்றில் சில புதிய அத்தியாயங்கள் சேர்த்த **நெப்போலியன்** கூறினான். வரலாற்றைப் பள்ளிப் பாடங்களிலிருந்து கற்கும் வாய்ப்பு எல்லோர்க்கும் கிடைப்பதில்லை. மேலும் பாடமாகப் படிக்கும்பொழுது அது ஒரு சுமையாகத் தோன்றும்; மனத்திலும் நிலையாக நிற்பதில்லை. வரலாற்றுப் புதினங்கள், சுவையோடு வரலாறு கற்க வழிவகுக்கின்றன. அந்த நோக்குடன் எழுதப்பட்ட இப்புதினம் தமிழ்பெருமக்களின் வரவேற்பைப் பெறும் என்று நம்புகின்றேன்.

9B, பாந்தியன்
அப்பார்ட்மெண்ட்ஸ்,
கொச்சி-682024
0484-2577066

அன்பன்
கண்ணன் கிருஷ்ணன்

பொருளடக்கம்

		பக்கம்
1.	தோழனும் துரோகியும்	7
2.	நீரோடும் நதியில் போராடும் படைகள்	15
3.	பெண்ணாகடப் போர்	23
4.	வெற்றிமேல் வெற்றி	31
5.	கடமையும் காதலும்	39
6.	அன்னையும் மகளும்	48
7.	உறையூருக்குப் பின் தகடூர்	57
8.	சிறையில் அடைத்த சிற்றரசன்	66
9.	ஆறியது சினம்; தேறியது திட்டம்	75
10.	கள்ளில் விளைந்த கதை	84
11.	சாத்தன் செய்த சபதம்	93
12.	சிறை மீட்கும் சிறிய படை	102
13.	அடைத்துவைத்தாலும் அஞ்சா நெஞ்சம்	111
14.	வேள்விக்குடிச் செப்பேடு	120
15.	காதலுக்குத் தடை	129
16.	ஆசிபெற்ற மன்னனும் ஆணை ஏற்ற வீரனும்	138
17.	பஞ்சத்திலும் விளையும் வஞ்சம்	147
18.	பஞ்சத்தை ஒழிக்கும் படை	156
19.	படை புறப்பாடு	165
20.	களம் அமைத்தல்	174
21.	கடற்படைக் காப்பு	183

22. ஒற்றனை ஒற்றிய உறவினன். 192

23. விழிஞத்தின் வீழ்ச்சி 201

24. பொருள் வளர மொழி தேய்கிறது 209

25. தேரில் வந்த ஊர்வசி 217

26. ஊர்வசி வரலாறு 226

27. சிங்கத்தின் குகையில் சிறுநரி 235

28. வலைக்குத் தப்பிய பறவை 243

29. அன்னை அளித்த பரிசு 252

30. ஊர்வசி புராணம் 260

31. மதுரைக் காஞ்சி 268

32. அருள் பொழியும் அறம் வளர்த்த நாதர் 276

33. போர்த்திட்டமும் எதிர்த்திட்டமும் 285

34. வெற்றிக்குத் தேவை ஒற்றரின் சேவை 294

35. அறிந்த தகவலும்அறிவித்த செய்தியும் 302

36. காஞ்சிப் பயணம் 310

37. மீண்டும் ஊர்வசி 319

38. அதியமான் காணும் கனவு 328

39. சேரன் விடுத்த செய்தி 337

40. திட்டங்களும் மாற்றங்களும் 346

41. முக்கூட்டுப் படையின் முடிவு 355

42. மொழி காக்கும் முயற்சி 364

1. தோழனும் துரோகியும்

இளந்தென்றலில் மெல்லப் பறந்து கொண்டிருந்த 'மீன் கொடி' அது பாண்டிய மன்னரின் பாசறை என்பதைப் பறை சாற்றிக்கொண்டிருந்தது. கொடி கட்டிப் பறந்த கூடாரத்தைச் சுற்றிலும் அதைவிட அளவிலும் அலங்காரத்திலும் குறைந்தவையாக மேலும் பல கூடாரங்கள் காணப்பட்டன. அந்தக் கூடாரங்களைக் காத்து நிற்பன போல் பெரிய பந்தல்கள் நான்கு பக்கங்களிலும் பரவியிருந்தன. அவற்றில் ஆயிரக்கணக்கான வீரர்கள் தரையில் அமர்ந்தும் பாய்களில் படுத்தும் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர். சற்றும் கருணையின்றிக் காய்ந்துகொண்டிருந்த கதிரவனும், ஐந்து நாள்கள் நடந்து வந்த களைப்பும் பலரையும் அந்தப் பிற்பகலில் அரையுறக்கத்தில் ஆழ்த்தின.

களிறுகளின் பிளிறலும் குதிரைகளின் கனைப்பும் கேட்டுக் கொண்டிருப்பினும் கடந்த ஐந்து நாள்களாக அவைகளுடனேயே கலந்து உறவாடியதால் அது ஒரு தொல்லையாக அந்தக் காலாள் வீரர்களுக்குக்கூடத் தோன்றவில்லை. யானைப் பாகர்களுக்கும் குதிரைவீரர்களுக்கும் அந்த ஒலிகள் என்றும் தாலாட்டாக அமைந்ததால் தொல்லை என்ற பேச்சிற்கே இடமில்லை.

இவ்வாறு காலாள், தேர், குதிரை, யானை என நால்வகைப் படைகளையும் சேர்ந்த வீரர்கள் ஓய்வும் உறக்கமும் கண்ட நேரத்தில் அப்படைகளின் தலைவர்கள் உறங்கவும் இல்லை, ஓய்வு கொள்ளவும் இல்லை. பயணக் களைப்பும், வெயிலின் கொடுமையும் அவர்களையும் வருத்தினாலும் அத்தகைய அல்லல்களைப் பொருட்படுத்தும் மனநிலையில் அவர்கள் இல்லை. அவர்கள் எல்லோருக்கும் தலைவனான பாண்டிய மன்னரோ சோர்வும் களைப்பும் தன்னை அணுகவே முடியாது என்று எடுத்துரைப்பதுபோல் பொலிவுடனும் வலிவுடனும் காணப்பட்டார்.

தந்தையான அரிகேசரி பாரங்குச மாறவர்மன் மரணமடையவே, மதுரை அரியணையில் ஏறி ஆட்சிபுரியத் தொடங்கி இரண்டு ஆண்டுகளே ஆயினும் தந்தையுடன்கூட இருந்து பல ஆண்டுகளாக அரசுப் பணியில் ஈடுபட்டிருந்ததால் தன் கடமைகளை நிறைவேற்றுவது

பராந்தகன் நெடுஞ்சடையனுக்கு எளிதாகவே இருந்தது. மேலும் அன்னை பூசுந்தரி மகாராணியாரின் அறிவுரையும் அன்புப் பொழிவும் அவருக்குப் பேருதவி அளித்தன. அமைதியாக ஆட்சி புரிந்து நாட்டின் வளத்தையும் நாட்டு மக்களின் நல்வாழ்வையும் பெருக்கவேண்டும் என்று உறுதிபூண்டு முன்னோக்கிச் சென்று கொண்டிருந்த பொழுதுதான் இந்தப் போர் அவன் மீது திணிக்கப்பட்டது.

சங்ககாலத்தில் தமிழகத்தை ஆண்டுவந்த சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர்கள் ஆட்சி நிலை மாறி, புதிய அரசுகள் தோன்றிவிட்டன. களப்பிரரும் அன்னோரன்ன பிறரும் ஆட்சியைக் கைப்பற்றி ஆங்காங்கே தலையெடுத்து வளர்ந்தனர். பாண்டியன் கடுங்கோன் களப்பிரர்களை விரட்டி மதுரையில் மீண்டும் பாண்டிய அரசை நிறுவினான். ஆனால் சோழர்கள் சிற்றரசர்களாகவே வாழ்ந்து வந்தனர். சேரர்களும் அவ்வாறே சேர நாடு, ஆய் நாடு, வேணாடு என்று சிதறிக் கிடந்தனர். சோழநாட்டின் வடபகுதியையும் தொண்டை மண்டலத்தையும் பல்லவர் ஆண்டு வந்தனர். அதன் தென் பகுதியோ, பாண்டியரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. காவிரி நதி சோழ வளநாட்டைச் சோறுடைத்து என்று ஆக்கியதாயினும், அது பல்லவர்களின் ஆதிக்கத்தையும், பாண்டியர்களின் ஆதிக்கத்தையும் வரம்பு படுத்தும் எல்லையாக விளங்கியது.

இந்த நிலைமையை மாற்றி. சோழ நாடு முழுவதையும் தன் கீழ்க் கொண்டுவர வேண்டுமென்று முடிவுசெய்தான் பல்லவ நாட்டை ஆட்சிபுரிந்துகொண்டிருந்த நந்திவர்மப் பல்லவ மல்லன். அதோடு திருப்தி அடையாமல், மதுரையையும் தாக்கிப் பாண்டியனை அடக்கி, தமிழகத்தின் தனிப்பெரும் சக்கரவர்த்தியாக விளங்கவேண்டும் என்றும் அவன் கனவு கண்டிருக்கலாம். எனவேதான் ஒரு பெரும் படையுடன் காஞ்சியிலிருந்து தென்திசை நோக்கிப் புறப்பட்டான்.

பாண்டியன் கடுங்கோன் பரம்பரையில் ஏழாவது தலைமுறையாகப் பட்டம் சூட்டி மதுரை அரியணையில் அமர்ந்த நெடுஞ்சடையன், அமைதி விழைந்தாலும் நாட்டின் வலிமையிலும் பாதுகாப்பிலும் கண்ணும் கருத்துமாக இருந்தான். பல்லவர்களுடனும் கொங்கு நாட்டு மன்னனுடனும் தன் முன்னோர்களும் தந்தையும் போரிட நேர்ந்ததையும் சில போர்களில் வெற்றியும் சில போர்களில் தோல்வியும் கண்டதையும் நெடுஞ்சடையன் அறிந்திருந்தான். பல்லவர்களுக்கும் பாண்டிய

நாட்டின்மேல் என்றும் ஒரு கண் உண்டு என்பதை நன்குணர்ந்து, தன் ஒற்றர்படைத் தலைவனிடம் காஞ்சியின்மீது தவறாது கவனம் செலுத்தவேண்டும் என்பதை வலியுறுத்தியிருந்தான். அதன் பயனாகவே நந்திவர்மனின் படை புறப்படும் முன்பே நெடுஞ்சடையனுக்கு ஒற்றர் மூலம் செய்தி கிட்டியது.

ஐம்பது யானை, ஐந்நூறு குதிரை, முப்பது தேர்கள் கொண்ட பல்லவர் படையில் காலாள் உட்பட பதினாயிரம் வீரர்கள் உள்ளதாக ஒற்றர் படைத்தலைவன் பாண்டிய மன்னரிடம் தெரிவித்தான். தன் அமைச்சரான மாறன் காரியையும் சேனாதிபதி சாத்தன் கணபதியையும் அழைத்துப் பாண்டிய அரசின் படைபலத்தை ஆராய்ந்தான் நெடுஞ்சடையன். மதுரையைக் காப்பதற்குத் தேவையான படையை ஒதுக்கியபின் எண்ணாயிரம் பேர் கொண்ட படையைத் திரட்டமுடியும் என்று முடிவுசெய்யப்பட்டது. சோழ மண்டலத்தின் பாதுகாப்பிற்காக உறையூரில் பாசறை அமைத்து வாழும் மூவாயிரம் வீரர்களைக்கொண்ட படையைக் காவிரிக் கரையில் தேவையான இடத்தில் சந்திக்கச் செய்தால், பல்லவர் படையை விடப் பெரும்படையாக விரியும். அது மட்டுமன்று ''கொங்கு வேந்தன் அதியன் என் நண்பன். அவனிடம் மூவாயிரம் வீரர்களையாவது அனுப்ப சொல்லி இன்றே ஒரு தூதனை அனுப்புகிறேன். பல்லவன் காவேரி நதியைக் காண்பதற்கு முன்னரே அவனை விரட்டிவிடுவோம்''. என்று நம்பிக்கையோடு நவின்றான் பாண்டிய மன்னன்.

அந்த நம்பிக்கைதான் இப்பொழுது சற்றே ஆட்டம் கண்டது. தகடூரிலிருந்து அதியன் அனுப்பும் படை உறையூருக்கு வந்து சேரும் என்றும், உறையூரிலிருந்து இருபடைகளும் சேர்ந்து விசலூர் வந்துசேரும் என்றும் திட்டம் தீட்டப்பட்டது. மதுரைப் படை புதன் கிழமை நண்பகல் நேரத்தில் வந்தடையும் என்றும் உறையூர் இணைந்தபடை அதற்கு முன்தினம் மாலையிலேயே வந்து சேரும் என்றும் முடிவு செய்திருந்தனர்.

குறித்த நேரத்தில் மதுரைப்படை விசலூரை அடைந்தது. மிகவிரைவில் கூடாரங்களும் பந்தல்களும் எழுப்பப்பட்டன. ஆனால் முந்திய நாளே வரவேண்டிய உறையூர்ப் படை இன்னும் வந்து சேரவில்லை.

இருப்புக் கொள்ளாத ஒற்றர்படைத் தலைவன் இளந்தத்தன் தன்னுடைய குதிரையில் ஏறி உறையூர்ப் படை வரவேண்டிய திசையில் சற்றுத்தூரம் சென்றான். மூன்று கல் தொலைவில் சென்றபொழுது எதிரே ஒரு குதிரைவீரன் வருவதைக் கண்டான்.

அந்தக் குதிரை வீரன் அருகில் வந்தபொழுது அவன் தான் எதிர்பார்த்த தன்னுடைய ஒற்றன் அல்ல என்பதையும் ஆனால் பாண்டியப்படையைச் சேர்ந்த வீரன் என்பதையும் உணர்ந்தான். உறையூர்ப் படை பற்றிச் செய்திகொண்டுவரும் தூதன் என்பதையும் குறிப்பால் அறியவே, அவனையும் அழைத்துக்கொண்டு மன்னரிடம் சென்றான். தூதனை வெளியில் நிறுத்தி அவன் கொண்டு வந்த ஓலையை மன்னரின் கூடாரத்திற்குள் கொண்டுவந்த இளந்தத்தன், அங்கே சேனாதிபதி சாத்தன் கணபதியும், துணைத் தளபதி தீரதரன் மூர்த்தி எயினனும் யானைப்படைத் தலைவன் சங்கரன் சீதரனும் இருப்பதைக் கண்டு மன்னரிடம் தூதன் கொண்டு வந்த ஓலையைக் கொடுத்தான்.

"அரசே! உறையூரிலிருந்து தூதன் கொண்டுவந்த ஓலை'' என்று அறிவித்தான்.

கூட்டை உடைத்து ஓலையைப் படித்த நெடுஞ்சடையன் "அதியனின் படை இன்னும் வந்து சேரவில்லை. இன்றும் காத்திருந்துவிட்டு அந்தப் படை வந்தாலும் வராவிட்டாலும், உறையூரிலிருந்து மூவாயிரம் வீரர்களும் முப்பது யானைகளும் இருநூறு குதிரைகளும் கொண்ட படை நாளை வந்து சேரும்" என்று தன் படைத் தலைவர்களிடம் தெரிவித்தான்.

"தகடூரில் படைதிரட்டும் பணி நடைபெறுகின்றது என்று எனக்குத் தகவல் வந்தது. அப்படி இருக்க ஏன் இன்னும் அந்தப் படை வந்து சேரவில்லை என்று தெரியவில்லை" என்று கவலையுடன் தெரிவித்தான் இளந்தத்தன்.

சேனாதிபதி கவலை அடைந்ததாகத் தோன்றவில்லை. 'சாமந்த பீமன்' என்று வீரர்களால் அழைக்கப்பட்ட அவர் தன் பட்டப்பெயருக்கேற்ப உடல் வலிமையும் அஞ்சா நெஞ்சமும் கொண்ட அனுபவம் வாய்ந்த போர் வீரர். "உறையூர்ப் படை வந்தாலே நம்மிடம் உள்ள எண்ணாயிரம் வீரர்களுடன் சேரும் பொழுது பல்லவன் படையைவிட நம் படை பெரிய படை ஆகிவிடும். நாளையோ மறுநாளோ ஆற்றைக் கடந்து பல்லவர்படை எதிர்பாராத நேரத்திலேயே நாம் தாக்கலாம்" என்று மார்தட்டினார்.

"அதைப் பற்றி எனக்கு அச்சம் இல்லை. ஆனால் அதியன் ஏன் படை அனுப்பவில்லை என்பதுதான் எனக்கு விளங்கவில்லை." என்றான் பாண்டியன்.

"என்னுடைய ஆள் எப்படியும் இன்று என்னை இங்கு வந்து சந்திப்பான். அவன் நேற்றே தகடூரிலிருந்து புறப்பட்டிருக்க வேண்டும். அவன் வந்தால் எல்லாம் தெரியவரும்" என்று தன் எதிர்பார்ப்பை வெளியிட்டான் ஒற்றர் படைத் தலைவன்.

அவன் எதிர்பார்ப்பு வீண்போகவில்லை. தகடூரில் ஒற்றாடும் பணியில் ஈடுபட்டிருந்த உலகணன் அன்று மாலையிலேயே விசலூருக்கு வந்து, தன் தலைவனான இளந்தத்தனைச் சந்தித்துச் செய்தியை அறிவித்தான். உடனே மன்னரிடம் சென்ற இளந்தத்தன் ''அரசே! நம்மை கொங்கு நாட்டு அரசர் ஏமாற்றிவிட்டார். தகடூரில் படைதிரண்டது உண்மைதான். மூவாயிரம் வீரர்களுக்குமேல் திரண்ட படை பல்லவனுக்கு உதவிசெய்வதற்காகச் சென்று விட்டது!'' என்று வியப்பும் கசப்பும் மேலிடத் தெரிவித்தான்.

"என்ன! அதியன் எனக்குத் துரோகம் செய்துவிட்டானா!" என்று வேதனையோடு பேசினான் நெடுஞ்சடையன். எதிர்பார்த்த படை வரவில்லை என்பதைவிட உண்மையான நண்பன் என்று தான் கருதியிருந்த அதியன், தன்னைக் கைவிட்டது மட்டுமன்றி தன்னை அழிக்க வரும் பகைவனின் அணியில் சேர்ந்துவிட்டானே என்பதுதான் அவனை அதிகமாக வருத்தியது.

ஈராண்டுகளுக்குமேல் மதுரையில் பாண்டியர் அரண்மனையில் நெடுஞ்சடையனுடன் வாழ்ந்து உயர்கல்வியும் படைக்கலப் பயிற்சியும் ஒரே ஆசிரியர்களிடம் பெற்று உற்ற நண்பர்களாக அவர்கள் வாழ்ந்தனர். இரண்டு ஆண்டுகளுக்கு முன் நெடுஞ்சடையனிடம் விடைபெற்றுப் பிரியும்பொழுதும் தம் நட்பு தொடரும் என்றும் ஒருவர்க்கொருவர் தேவைப்படும்பொழுது உதவுவது உறுதி என்றும் கூறிவிட்டுத்தான் அதியன் சென்றான். பாண்டிய மன்னர் காலமான பொழுது நேரில் வர முடியாவிட்டாலும் இரங்கல் செய்தி அனுப்பினான் அதியன். நெடுஞ்சடையனின் திருமண விழாவில் அதியன் கலந்து கொள்ளவில்லை. ஆயினும் அது நட்புக் குறைந்ததால் என்று பாண்டியன் கருதவில்லை. படையுதவ கோரி அதியனிடம் பாண்டியன் விடுத்த தூதனும் அதியன் அன்புடன் அவனை நடத்தியதாகவும், கட்டாயம் படை அனுப்புவதாக உறுதி கூறியதாகவும் திரும்பி வந்து தெரிவித்தான். அப்படி இருக்க, அதியன் ஏன் இவ்வாறு தனக்குத் துரோகம் செய்தான் என்பதை நெடுஞ்சடையனால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் அதைப்பற்றிச் சிந்திக்கவோ, அதற்கான காரணம் கண்டு பிடிக்கவோ, இப்பொழுது நேரமில்லை. முதலில் பல்லவனை முறியடிக்க வேண்டும்.

"சேனாதிபதி! நாளை மதியத்திற்கு முன்பே உறையூர்ப்படை வந்து சேரும். தங்கள் தம்பி சாத்தஞ்சாத்தன் அறிவும் ஆற்றலும் மிக்கவன்; படை வீரர்களைப் போருக்கு ஆயத்தம் செய்து வைத்திருப்பான். அவன் தலைமையில் இயங்கும் அந்தப் படையைப்பற்றிக் கவலைப்படத் தேவை இல்லை. நாளை அவனும் வந்து கலந்துகொள்ள வசதியாகப் பிற்பகலில் நாம் மீண்டும் கூடிப் போர்த்திட்டம் வகுப்போம்" என்று அறிவித்தான் பாண்டியன் மன்னன். சேனாதிபதி சாமந்த பீமனும் மற்ற படைத் தலைவர்களும் பிரிந்து சென்றனர்.

பாண்டியன் சொன்னவாறே உறையூரிலிருந்து சாத்தஞ்சாத்தன் தலைமையில் சோழ நாட்டில் அமைதிகாக்கும் படை மறுநாள் நண்பகலில் வந்து சேர்ந்தது. தன் தமையனாகிய சேனாதிபதியைக் கண்டு வணங்கி, தன் வருகையை அறிவித்த சாத்தஞ்சாத்தன் உடனேயே நெடுஞ்சடையனின் கூடாரத்திற்குச் சென்றான். தலை குனிந்து, கை கூப்பி மன்னனை வணங்கினான்.

நெடுஞ்சடையனோ முன்னால் வந்து அவனுடைய இருகைகளையும் தன் கைகளால் பற்றி, சாத்தஞ் சாத்தனை மார்போடு தழுவினான். பின்னர் அந்தக் கைகளை விடுவிக்காமலே இரண்டடி பின்னால் மாறி நின்று அவனை ஏற இறங்கப் பார்த்தான்.

"சாத்தா! நான் உன்னைப் பார்த்து ஓராண்டு ஓடிவிட்டது. நாம் இவ்வளவு நாள்கள் ஒருவரை ஒருவர் காணாமல் இருந்தது இதுவே முதல் முறை என்று எண்ணுகிறேன். முதன் முதலாகக் கையில் எழுத்தாணி பிடித்து 'அ' என்று எழுதிய நாள் முதல் நான் மதுரை அரியணையில் அமர்ந்த நாள்வரை நாம் இருவரும் பெரும்பாலும் ஒன்றாகவே இருந்துள்ளோம். ஆனால் இந்தப் பிரிவு உன்னைப் பெரிதும் வருத்தியதாகத் தெரியவில்லை. நான் முன்பு உன்னைக் கண்டதைவிட இப்பொழுது வலுவான உடலும் ஒளிவீசும் முகமுமாகக் காட்சியளிக்கிறாய்!" என்று மனம் மகிழ்ந்து முகமன் கூறி வரவேற்றான் தன் உயிர்த்தோழனை.

சாத்தஞ்சாத்தனும், தன் நண்பன் மட்டுமன்றிப் பாண்டி நாட்டின் வேந்தனுமாகிய நெடுஞ்சடையனை நெடிது நோக்கிப் புன்முறுவலுடன் புகன்றான் "அரசே! ஓராண்டு காலமாகத் தங்களைக் காணாத நான், இவ்வளவு, நாள்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்திய மன்னன் என்ற முறையில் தங்களிடம் பெரும் மாற்றம் ஏற்பட்டிருக்கும் என்று எண்ணினேன். ஆனால் தாங்கள் இந்த எளியோனிடம் காட்டும் அன்பின் அளவில் எவ்விதமான மாற்றமும் ஏற்படவில்லை என்பதைத் தங்கள்

வார்த்தைகளால் மட்டும் அல்ல முகத்தில் விளங்கும் மலர்ச்சியாலும் உணர்ந்து கொண்டேன். எனக்கும் அப்படியே. தாங்கள் கருணைகூர்ந்து கூறியபடி என் உடல் சற்று மாற்றம் அடைந்திருந்தாலும் உள்ளத்தில் எந்த மாற்றமும் இல்லை. அன்று போலவே இன்றும் என்றும் இந்த உயிரும் உடலும் எல்லாம் உங்களுக்காகவே இயங்கும் என்பதை என் வாள்மேல் ஆணையிட்டு உறுதி மொழிகின்றேன்" என்று வாளின் பிடியில் கைவைத்துப் பேசினான்.

சாத்தஞ்சாத்தனை மீண்டும் தழுவிக்கொண்ட மன்னன் "நீ குறிப்பிட்டது முற்றிலும் உண்மை. ஆட்சிப் பொறுப்பு என்பது மிகப்பெரிய சுமைதான். நம் அமைச்சர் என் தந்தையின் காலம் தொட்டே பணிபுரிவதால் அவர் எனக்குப் பெருந்துணையாக இருக்கிறார். இருந்தாலும் பல சிக்கல்கள் எழத்தான் செய்கின்றன. உன்னை உறையூரிலிருந்து விடுவித்து மதுரைக்கு அழைக்க வேண்டும் என்று விரும்பினேன். உன்னிடம் மனம்விட்டுப் பேசுவதுபோல் வேறுயாரிடமும் என்னால் பேச முடியாது. ஆனால் அன்னை மகாராணி அதற்கு இணங்கவில்லை. உறையூரில் ஒரு படைத்தலைவன் மட்டும் இருந்தால் போதாது. அறிவும் கூர்மையும் உள்ள ஆள் இருந்தால்தான் சோழநாட்டில் ஏற்படக்கூடிய நிகழ்ச்சிகளைக் கண்காணித்துப் பாண்டிய அரசின் வலிமையைக் கட்டிக் காக்க முடியும் என்றும், அதற்குச்சாத்தஞ் சாத்தனைப் போன்ற ஒருவன் இருந்தால்தான் முடியும் என்றும் அவர் நம்புகிறார். அவருடைய அறிவுரை நாட்டின் நலத்தைப் பற்றியதாகையால் நானும் அதை ஏற்கவேண்டியுள்ளது'' என்று தன் நண்பனின் சிறப்பையும் சுட்டிக் காட்டினான் நெடுஞ்சடையன்.

"மதுரை யானாலும் உறையூரானாலும் தங்களுக்குத் தொண்டு செய்வதே என் கடமை. அதுவே என் குறிக்கோள்" என்று தலை வணங்கினான் சாத்தஞ்சாத்தன்.

"அது சரி. நீ படைக்கலப் பயிற்சியும் போர்ப் பயிற்சியும் போதாது, மொழிக் கல்வியும் இலக்கிய அறிவும் பெருக்க வேண்டும் என்று அடிக்கடி சொல்வாயே! உறையூரில் அதற்கேற்ற வாய்ப்புகளும் வசதிகளும் உள்ளனவா?"

"நன்றாக உள்ளன. நான் பெரும்பாலும் எல்லா நாள்களும் படைவீரர்களுடனும் படைத் தலைவர்களுடனும் சேர்ந்து உடற்பயிற்சியும் படைக்கலப் பயிற்சியும் பெறுகிறேன். வாரம் ஒரு முறை யானை, குதிரை, காலாள் படைகளைப் பங்கு சேர்த்துப்

போர்ப் பயிற்சி அளிக்கிறோம். பகல் நேரங்களில் அலுவல்களில் மூழ்கியிருந்தாலும் பொழுது சாய்ந்தபின் அறிவு வளர்ச்சிபெறும் செயல்களை மேற்கொள்கிறேன். இலக்கியமும் இலக்கணமும் கற்றுத் தேர்ந்த தமிழறிஞர்கள் சிலர் உறையூரில் வாழ்ந்து வருகின்றனர். வடமொழியில் புலமை பெற்ற ஓரிரு அறிஞர்களும் உள்ளனர். அவர்களுடன் பேசிப் பழகி, இலக்கிய அறிவை மேலும் வளர்க்க முயன்று வருகிறேன். ஒருசில கவிதைகளும் எழுதியுள்ளேன்" என்று சற்று நாணத்துடன் வெளிப்படுத்தினான் அவன்.

"அப்படியா! மிகவும் நன்று. நேரம் கிடைக்கும் பொழுது உன் கவிதைகளைப் படிக்க விரும்புகிறேன். அதற்காகப் பரிசளிக்க வேண்டும் என்று மற்ற புலவர்களைப் போல் கேட்கமாட்டாயே?" என்று கேலிசெய்தான் வேந்தன்.

"எனக்குத்தான் வேறு யாருக்கும் கிட்டாத பரிசு கிடைத்துள்ளதே! மாமன்னர் பராந்தக நெடுஞ்சடையரின் அன்புக்குப் பாத்திரமான நண்பன் என்பதைவிடப் பெரிய பரிசு இவ்வுலகில் என்ன இருக்க முடியும்?" என்று தன் நன்றியை உணர்த்தினான் சாத்தன்.

"நாம் ஒன்றாக உணவருந்தி வெகுநாள்கள் ஆகிவிட்டன. நீ வந்தபின் உணவருந்தலாம் என்று எண்ணித்தான் நான் காத்திருந்தேன். வா" என்று அழைத்தான் மன்னன். "அரசே! தாங்கள் என்னை மிகவும் பெருமைப் படுத்துகின்றீர்கள். இந்தப் பாசறையில் இருக்கும் சேனாதிபதியும், துணைத் தளபதியும் என்னைவிட உயர்ந்த நிலையில் உள்ளவர்கள். அவர்கள் இல்லாமல் நான் அரசரோடு உணவருந்துவதை அவர்கள் வரவேற்கமாட்டார்கள்.தாங்கள் முடிசூடுவதற்குமுன் இருந்த நிலைமை வேறு! இப்பொழுது மன்னர் கடைப்பிடிக்க வேண்டிய அரசியல் நெறிமுறைகள் உள்ளன. எனவே நான் மற்ற படைத்தலைவர்களுடன் சேர்ந்து உணவு உண்பதே முறை. மன்னியுங்கள்" என்று கூறி மன்னனிடம் விடைபெற்றான் சாத்தன். அந்த இளைஞன் எவ்வளவு அறிவு முதிர்ச்சி பெற்றுவிட்டான் என்று வியந்தான் பாண்டியன் நெடுஞ்சடையன்.

2. நீரோடும் நதியில் போராடும் படைகள்

எட்டாம் நூற்றாண்டில் பல்லவ நாட்டிற்குத் தென் எல்லையாகவும் பாண்டிய நாட்டிற்கு வட எல்லையாகவும் விளங்கியது, சோழநாட்டின் உயிர் நாடியான காவிரி ஆறு என்று கூறுவது மிகையாகாது. எங்கோ ஒரு மூலையில் கரிகால் சோழனின் சந்ததியார் சோழர் பரம்பரையின் பெயரை நிலைநாட்டி வந்தாலும், தமிழ் மண்ணில் பரவியிருந்த பல குறுநிலமன்னர்களில் ஒருவராகவே அவர்கள் வாழ்ந்து வந்தனர். அந்தக் காவிரியின் தென்கரையில் அமைந்திருந்த பெண்ணாகடம் என்னும் சிற்றூர் ஆற்றைக் கடப்பதற்குத் தேவையான படகு வசதிகள் உள்ளதாகையால் பயணிகளும் வணிகர்களும் அவ்வழியைப் பயன்படுத்துவது வழக்கம்.

இருவணிகர்கள் தம் குதிரைகளில் பெண்ணாகடத்தில் காவிரியாற்றின் கரையில் வந்து இறங்கினர். ஆற்றைக் கடக்க விரும்புவோருக்காகக் காத்திருந்த படகோட்டியைக் கண்டு அருகில் வரும்படி அழைத்தனர்.

"நாங்கள் வணிகர்கள் சோழநாட்டிலிருந்து அரிசி முதலான பொருள்களை வாங்கி, காஞ்சியில் போய் விற்கவும், அங்கிருந்து சில விளைபொருள்களையும், துணிவகைகளையும் வாங்கிச் சோழநாட்டில் விற்கவும் விரும்புகிறோம். வண்டிகளில் ஏற்றிவரும் பொருள்களை ஆற்றிற்கு அப்பால் கொண்டு செல்வதற்குத் தேவையான படகு வசதியைப் பற்றி விசாரிக்க வந்துள்ளோம்" என்று படகோட்டியிடம் கூறினர்.

"அதைப் பற்றிக் கவலைகொள்ள வேண்டாம். பொதுவாக இக்கரையில் இரண்டு படகுகளும் அக்கரையில் இரண்டு படகுகளும் இருக்கும். முன்னதாகவே அறிவித்தால் பத்துப்படகுகள் வரை அருகிலுள்ள துறைகளிலிருந்து கொண்டு வரமுடியும்" என்று விடையிறுத்தான் அந்தப் படகோட்டி.

"ஒரு படகில் எத்தனை அரிசிமூட்டைகள் ஏற்றமுடியும் அல்லது எத்தனை ஆள்களை ஏற்ற முடியும்?" என்று வணிகன் வினவினான்.

"மூட்டைகளைப் பற்றிய கணக்கு அவைகளை ஏற்றிப் பார்த்தால்தான் தெரியும். ஆள்கள் என்றால் இருபது பேரை ஏற்றிச் செல்ல முடியும்." என்றான் படகோட்டி.

"சரி எங்களை அக்கரையில் கொண்டு போய் விடு. அங்கேயும் விசாரிப்போம்" என்றான் வணிகர்களில் மூத்தவன் போல் தோன்றியவன்.

அக்கரையிலும் படகோட்டிகளிடம் இதேபோல் விசாரணை நடத்தினர் வணிகர்கள். இக்கரையில் உள்ள படகோட்டிகள் கூறியது போலவே அவர்களும் பேசினர். "இன்னும் ஓரிரு நாள்களில் தேவை ஏற்பட்டால் ஏழெட்டுப் படகுகளை ஏற்பாடு செய்ய முடியுமா?'' என்று மேலும் வினவினான் மூத்த வணிகன்.

"அதில் ஒரு சிக்கல் ஏற்படலாம். பல்லவ நாட்டிலிருந்து சிலர் வந்து போனார்கள். இன்னும் மூன்று நாளில் பத்துப் படகுகளோ அதற்குமேல் முடியுமானால் அவ்வளவு படகுகளோ இங்கே திரட்டிவைக்க வேண்டும் என்றும் சில கனமான பொருள்களையும் ஆள்களையும் தென்கரைக்குக் கடத்த வேண்டும் என்றும் கேட்டார்கள் முன்பணமும் தந்திருக்கிறார்கள். ஆகவே அவர்கள் தேவை முடிந்த பிறகுதான் உங்களுக்குப் படகுகள் தர முடியும்" என்று முதிர்ந்த படகோட்டி தெரிவித்தான்.

"சரி நாங்கள் சில நாள்களுக்குப்பின் மறுபடியும் வந்து என்று தேவைப்படும், எத்தனை படகுகள் வேண்டும் என்ற விவரங்களையெல்லாம் சொல்கிறோம்" என்று அவர்களிடம் கூறிவிட்டு, மீண்டும் படகில் ஏறி, தென்கரையில் இறங்கி, தங்கள் குதிரைகள் மேல் ஏறித் திரும்பிச் சென்றனர் இரு வணிகர்களும். ஆனால் அவர்கள் அதிகதூரம் செல்லவில்லை. ஒரு நாழிகை நேரத்தில் விசலூரை அடைந்து அங்கே அமைக்கப்பட்டிருந்த பாண்டியன் பாசறையில் புகுந்து ஒரு கூடாரத்தின்முன் குதிரைகளை நிறுத்திவிட்டு அந்தக் கூடாரத்திற்குள் நுழைந்தனர். மூத்தவன், தான் அணிந்திருந்த தலைப்பாகையையும் போர்த்தியிருந்த நீண்ட துண்டையும் அகற்றி, தன்னுடைய இயல்பான தோற்றத்தில் இளந்தத்தனாக மாறினான். அவனோடு வந்த இளைஞனும் தன் மாறுடைகளைக் களைந்தான்.

"நாம் நினைத்தபடியே நடந்துவிட்டது. பல்லவப்படை இன்னும் மூன்று நாள்களில் காவிரியின் வடகரைக்கு வந்து சேரும். ஆற்றைக் கடப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வைரவா! நீ நம் ஆள்கள் இருவரை பெண்ணாகடத்துக்கு அனுப்பி

எல்லாவற்றையும் கண்டறிந்து என்னிடம் அவ்வப்பொழுது செய்திகளைத் தெரிவிக்க வேண்டும். உலகணனிடமிருந்து தகடூரைப் பற்றிய தகவல் எது வந்தாலும் நான் எங்கு இருந்தாலும் என்னிடம் வந்து சொல்லவேண்டும். நாம் பெண்ணாகடம் சென்று வருவதற்குள் சாத்தஞ்சாத்தன் உறையூர்ப் படையுடன் வந்து சேர்ந்துவிட்டார். இன்னும் சற்று நேரத்தில் மந்திராலோசனைக் கூட்டம் நடக்கும். நான் அதில் கலந்துகொள்ள வேண்டும்." என்று தன் உதவியாளனுக்குச் செயல் முறையை எடுத்துரைத்தான் ஒற்றர்படைத் தலைவன்.

நெடுஞ்சடையனின் கூடாரத்தில் மந்திராலோசனைக் கூட்டம் நடந்தது. சேனாதிபதி, துணைத்தளபதி, யானைப் படைத் தலைவன், குதிரைப் படைத் தலைவன், வில்லாளர் தலைவன், சாத்தஞ் சாத்தன், இளந்தத்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். மன்னனே கூட்டத்தைத் தொடங்கிவைத்துப் பேசினான்.

"படைத் தலைவர்களே! நாம் மதுரையிலிருந்து புறப்பட்டபொழுது, உறையூரிலிருந்தும், தகடூரிலிருந்தும் எதிர்பார்த்தபடி படைகள் வந்து சேர்ந்தால் பல்லவன் படையை விட நம் படை பெரிதாக இருக்கும் என்று எண்ணினோம். ஆனால் தகடூரிலிருந்து நமக்கு உதவிசெய்ய அதியனின் படை வரவில்லை. மாறாக அந்தப் படை பல்லவன் படையோடு சேரப் போகிறது. எனவே இதுவரை நமக்குக் கிடைத்த தகவல்களை எல்லாம் வைத்துப் பார்த்தால், நம் படையைவிட பல்லவன் படையில் இரண்டாயிரம் வீரர்களுக்குமேல் அதிகமாக இருப்பார்கள். யானை, குதிரை ஆகியவையில் பெரிய வேறுபாடு இருக்காது என்று நினைக்கிறேன். ஆனால் இரண்டாயிரம் வீரர்களாவது அதிகம் என்றால் அது பகைவனுக்கு அதிகபலம் அளிக்கும் என்பதை மனத்தில்கொண்டுதான் நாம் நமது போர்த்திட்டத்தை வகுக்க வேண்டும்" என்று நிலைமையை விளக்கிப் பேசினான் வைகை வேந்தன்.

சேனாதிபதி சாத்தன் கணபதி தன் கருத்தை எடுத்துரைத்தார். "அரசே! தங்கள் தந்தையார் காலஞ்சென்ற பாண்டிய வேந்தர் அரிகேசரி பராங்குச மாறவர்மர் மதுரை அரியணை ஏறியபொழுது சோழநாடு முழுவதுமே பல்லவர் கையில்தான் இருந்தது. பேராசை பிடித்த பல்லவமன்னன் அதோடு திருப்திப்படாமல் பாண்டிய நாட்டையும் அடிமைப்படுத்த முயன்று படையெடுத்து வந்தான். அந்தப் பல்லவப் படையைக் குழும்பூர், திருமங்கை கொடும்பாளூர் ஆகிய இடங்களில் நம் பாண்டியப் படை

தோற்கடித்தது. பல்லவன் படை தோல்வியுற்று ஓடும்பொழுது நாம் விரட்டிச் சென்றோம். நென்மேலியிலும் மண்ணையிலும் நாம் அவர்களிடம் தோற்க நேர்ந்ததால் அதற்குமேல் முன்னேற முடியவில்லை. என்றாலும் சோழநாட்டின் பெரும்பகுதி இன்றும் பல்லவர் ஆளுகைக்கு உட்பட்டிருந்தாலும் காவிரிக்குத் தெற்கே உள்ள பகுதி நம்மிடம் உள்ளது. பல்லவர் படையை நாம் பலமுறை தோற்கடித்தோம் என்பதை நினைவு படுத்தவே இதைச்சொன்னேன். அந்தப் போர்களின் நானும் பங்குபெற்றேன். நம் வீரர்கள் பல்லவ வீரர்களைவிடச் சிறந்த போராளிகள் எனவே இரண்டாயிரம் வீரர்கள் அதிகம் ஆயினும் நம்முடைய போர்த் தந்திரத்தாலும், வீரர்களின் திறமையாலும் வெற்றிகாண்போம் என்பதில் எந்த ஐயமும் இல்லை". என்று வீரமுழக்கம் செய்தார் சாமந்த பீமன்.

சாத்தஞ்சாத்தன் எழுந்து நின்றான் "மன்னரும் சேனாதிபதியும் அனுமதித்தால் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன்" என்றான்.

"தாராளமாகச் சொல்! எல்லோருடைய கருத்துகளையும் கேட்பதற்குத்தானே நாம் இங்குக் கூடியிருக்கிறோம்" என்று அனுமதியளித்தான் நெடுஞ்சடையன். சேனாதிபதியும் தலையை ஆட்டினார், சாத்தஞ்சாத்தன் பேசினான்.

" நமது அனுபவம் மிக்கசேனாதிபதி கூறியதுபோல் நாம் வெற்றி காண்போம் என்பதில் சற்றேனும் ஐயம் இல்லை. பதின் மூன்றாயிரம் வீரர்களைக் கொண்ட படையைப் பதினோராயிரம் வீரர்களைக் கொண்ட படை வெற்றி கொள்வது இயலாத செயல் அல்ல! நம் சேனாதிபதியின் அனுபவமும் போரை நடத்தும் திறமையுமே நமக்கு வெற்றியைத்தரும். ஆனால் அத்தகையபோர் மிகமிகக் கடுமையாக இருக்கும். ஏராளமான வீரர்கள் உயிர் இழக்கவும் புண்படவும் நேரும். எனவே பல்லவன் படையை அதன் முழுமையில் நேரிடாமல் இரண்டாகப்பிரித்து, நாம் முழுபலத்துடன் மோதினால் வெற்றி எளிதாகும். உயிர்ச் சேதமும் குறையும்" என்றான் அவன்.

"நீ சொல்வது சரியாக விளங்கவில்லை பல்லவன் படையை எவ்வாறு இரண்டாகப் பிரிப்பது?" என்று வினாவினான் பாண்டியன்.

தன் தம்பியின் மூளை எவ்வாறு வேலைசெய்கிறது என்பதைப் புரிந்துகொண்ட சேனாதிபதி இப்பொழுது மேலும் பலமாகத் தலையை ஆட்டினார்.

"நான் புரிந்துகொண்டேன் ஆயினும் நீயே விளக்கிச் சொல்" என்றார் அவர். அவ்வாறே சாத்தஞ் சாத்தன் விளக்கினான்.

"நாம் காவிரியாற்றைக் கடந்து சென்று பல்லவன் படையுடன் மோதினால் அவர்கள் முழுவலிமையுடன் இருக்கும் பொழுது போர் செய்ய வேண்டிய கட்டாயம் வரும். ஆகவே நாம் ஆற்றைக் கடக்காமல் பல்லவர் படை ஆற்றைக் கடக்கத் தொடங்கும் வரை காத்திப்போம் பதின்மூவாயிரம் வீரர்களையும் யானைகளையும் குதிரைகளையும் கொண்ட படை திடீரென்று மிகச் சுருங்கிய நேரத்தில் ஆற்றைக் கடக்க முடியாது. ஆற்றை அவர்கள் கடக்கும் இடத்தையும் நேரத்தையும் கண்டறிந்து அந்த இடத்திற்கு அருகில் நாம் காத்திருந்து, பாதிப் படை வந்தவுடன் அவர்களைத் தாக்க வேண்டும். அணிவகுப்பு முறையாக அமைவதற்குக்கூட நேரம் கிடைக்காத படை நம்மிடம் விரைவில் தோல்வியடையும். பாக்கிப் படை கடக்க முனைந்தால் அவர்களையும் எளிதில் முறியடிக்கலாம் வேண்டுமானால் அவர்களைத் துரத்திச் செல்லவும் செய்யலாம்" என்று எடுத்துக் காட்டினான் சாத்தஞ்சாத்தன்.

"மிகவும் நல்ல யோசனை. ஆனால் நீ சுட்டிக் காட்டியதுபோல் பல்லவப் படை எப்பொழுது எந்த இடத்தில் காவிரி ஆற்றைக் கடக்கப்போகிறது என்பதை நாம் முன் கூட்டியே அறிந்தால்தான் இந்தத் திட்டம் வெற்றி பெறும்." என்றான் பாண்டிய வேந்தன்.

ஒற்றர் படைத்தலைவன் இளந்தத்தன் எழுந்து நின்றான்.

"அரசே! அதைப் பற்றி ஐயம் தேவையில்லை. அதை நான் இப்பொழுதே அறிவிக்கிறேன். இதற்குமுன் பலமுறை நடந்த போர்களில் பல்லவர் படை காவிரி ஆற்றைக் கடந்த இடங்களை நாம் குறித்து வைத்துள்ளோம். காஞ்சியிலிருந்து புறப்பட்டு, படைமுன்னேறி வரும் வழியை நாள்தோறும் நம் ஒற்றர்கள் அறிவித்து வருகிறார்கள். அதை வைத்துப் பகைவர்கள் ஆற்றைக் கடக்கும் இடம் பெண்ணாகடத்துக்கு அருகில்தான் இருக்கமுடியும் என்று ஊகித்து, இன்று நானும் வைரவனும் வணிகர்களைப்போல் வேடமணிந்து அங்கே சென்றோம். இக்கரையிலும் அக்கரையிலும் உள்ள படகோட்டிகளிடம் பேசினோம். நாம் ஆற்றைக் கடக்க விரும்பினால் செய்யவேண்டிய முன்னேற்பாடுகளைப் பற்றியும் தெரிந்துகொண்டோம். அதோடு இன்னும் மூன்று நாள்களில் மிகப் பெரிய அளவில் ஆள்களும் தளவாடங்களும் ஆற்றைக் கடப்பதற்குத் தேவையான படகுகள்

ஏற்பாடு செய்வதற்காகச் சிலர் வடக்கிலிருந்து வந்து முன் பணமும் கொடுத்துச் சென்றிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டோம். வரப்போவது பல்லவர் படை என்பது படகோட்டிகளுக்குத் தெரியாது. ஆனால் அது கண்டிப்பாகப் பல்லவர்கள்தான் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை" என்று உறுதியாகக் கூறினான் இளந்தத்தன்.

"இளந்தத்தரே! ஓர் நல்ல அரசிற்குக் கண்ணும் செவியுமாக இருப்பது ஒற்றர்படை என்று அரசியல் வல்லுநர்கள் கூறுவது எவ்வளவு பெரிய உண்மை என்பதை நீங்கள் நன்றாக நிரூபித்துள்ளீர்கள். பல்லவர் படையின் நோக்கமும் வரும் வழியும், நேரமும் தெளிவாகத் தெரிய வந்ததால் நம் போர்த்திட்டத்தைச் செம்மையாகத்தீட்ட முடியும்" என்று ஒற்றர் படைத் தலைவனைப் பாராட்டினான் நெடுஞ்சடையன்.

துணைத்தளபதியான மூர்த்தி எயினன் ஓர் ஐயத்தை எழுப்பினார்." ஒருவேளை நம்மைப் போலவே பல்லவனும் நினைத்தால்? ஆற்றைக் கடக்காமல் காத்திருந்து நாம் ஆற்றைக் கடக்கும்போது தாக்கமுனைந்தால்?

"அப்படி நினைக்க வாய்ப்பில்லை! பாண்டிய நாட்டின் மீது போர் தொடுப்பதற்காகவே காஞ்சியிலிருந்து புறப்பட்ட படை முன்னேறி வருமேயன்றிக் காத்திருக்காது. மேலும் கொங்கு நாட்டின் படையும் சேர்ந்த பிறகு பெரியபடை ஆகிவிட்டதால் வெற்றி உறுதி என்ற எண்ணத்தில் மிகவேமாக மதுரையை நோக்கிப் பாய்வார்களே தவிர, காத்திருக்க மாட்டார்கள்." என்று சேனாதிபதி தெளிவாகக் கூறினார்.

"சேனாதிபதியும், சாத்தஞ்சாத்தனும் கூறிய யோசனைகளை நான் ஏற்றுக் கொள்கிறேன். நாம் காவிரியாற்றைக் கடக்க வேண்டாம். நம் படையைத் தகுந்தவாறு அணி வகுத்து நிறுத்தி, பல்லவப்படையில் பாதியளவு இக்கரைக்கு வந்தவுடன் திடீரென்று தாக்குவோம். சேனாதிபதியும் துணைத்தளபதியும் இளந்தத்தருடன் சென்று பெண்ணாகடம் என்னும் ஊரையும் அதன் சுற்றப்புறங்களையும் கூர்ந்து நோக்கி, நம் யானை, குதிரை தேர், காலாள் ஆகிய நான்கு படைகளையும் எவ்வாறு இயங்கச் செய்ய வேண்டும் என்று முறைப்படுத்த வேண்டும். நாளையே நம் படை அதற்கேற்ப, தகுந்த இடங்களில் அணிவகுத்து நிறுத்தப்படும்" என்று கூட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தான் மதுரை மன்னன்.

மன்னரின் ஆணைப்படி படைத்தலைவர்கள் பெண்ணாகடத்தையும் சுற்றுப்புறங்களையும் நன்கு பார்வையிட்டு விரிவான போர்முறையை உருவாக்கினர். காவிரியாற்றை ஒட்டி அமைந்த வளர்ந்த மரம் இடம் ஆதலால் அடர்ந்த தோட்டங்களும் வளர்ந்தமரம், செடி கொடிகளும் நிறைந்த பகுதிகள் நெருங்கிக்கிடந்த நிலப்பகுதி அவர்களுடைய திட்டத்திற்கு உதவியது. யானைப்படையும் குதிரைப்படையும் முற்றிலுமாகத் தோட்டங்களில் மறைத்து வைக்கப்பட்டன. கண்ணுக்குத் தெரிவதோடன்றி அவை எழுப்பும் ஒலிகளும் நெடுந்தொலைவில் கேட்கும். ஆதலால் ஆற்றங்கரையிலிருந்து இரு நாழிகைத் தொலைவிலேயே அவை நிறுத்தப்பட்டன. மரம், செடி கொடிகளில் மறைந்து நின்ற வில்லாளிகள் முதல் தாக்குதல் தொடங்க வேண்டும் என்றும் அதைத் தொடர்ந்து வேலும் வாளும் ஏந்திய காலாள் படை களம் புக வேண்டுமென்றும் ஆணை இடப்பட்டது. வில்லாளிகள் முதல் அம்புவரிசை தொடுத்தவுடன் குதிரைகளும் யானைகளும் போர்க்களம் நோக்கி வேகத்தில் செல்லவேண்டும் என்றும் திட்டம் தீட்டப் பட்டது.

போரில் வெற்றி பெறுவதற்கு வழிதிறப்பது பல்லவர் படை பெண்ணாகடம் அருகில் காவிரியைக் கடக்கும் என்ற ஊகம்தான். எனவே அதை மேலும் உறுதிசெய்ய வேண்டும் என்று மன்னனும் சேனாதிபதியும் வலியுறுத்தினர். எனவே இளந்தத்தன் தன் ஒற்றர்களையெல்லாம் அந்த வேலையில் கண்ணும் கருத்துமாகச் செயல்படத் தூண்டினான். காவிரியின் வடகரையில் படகோட்டிகளிடம் உறவாடிக் கொண்டிருந்தனர் இரு ஒற்றர்கள். அங்கிருந்து ஐந்து கல் தொலைவில் வடதிசையிலிருந்த மாங்குடி என்னும் சிற்றூரிலும் வடமேற்குத் திசையில் இருந்த திண்ணையூரிலும், வடகிழக்குத் திசையில் இருந்த துறவூரிலும் பாண்டிய ஒற்றர்கள் பல்லவப்படை வரவை நோக்கிக் காத்திருந்தனர்.

காத்திருப்பு அதிகநாள் நீடிக்கவில்லை. பாண்டியன் படை திட்டமிட்டவாறு அணிவகுப்புநடத்தி முடிவுபெற்ற இரண்டாவது நாளே பல்லவப் படையின் முன்னிலை அணி மாங்குடியிலிருந்து காவிரியின் வடகரைவரை சென்று, படகோட்டிகளிடம் ஆயத்தமாக இருக்கும்படி உத்தரவிட்டுத் திரும்பிச் சென்றது. அன்று இரவில் மாங்குடிக்கும் ஆற்றின் கரைக்கும் நடுவில் படை தங்கும் என்றும், அடுத்த நாள் காலையில் ஆற்றைக் கடக்கும் என்றும் பாண்டிய ஒற்றர்கள் இளந்தத்தனிடம் தெரிவித்தனர். எனவே தாங்கள் வகுத்த

போர்த்திட்டத்தில் எவ்விதமான மாற்றமும் செய்ய வேண்டிய தேவை இல்லை என்ற மன நிறைவுடன் பகைவரின் வருகையை எதிர்நோக்கி, தினவெடுக்கும் தோள்களுடன் காத்திருந்தனர் பாண்டிய மன்னனும் அவனுடைய படையினரும்.

பல்லவர் படையின் முன்னேற்றத்தைப் பாண்டியனின் ஒற்றர்கள் கண்காணித்தது போலவே, பல்லவனின் ஒற்றர்கள் பாண்டியன் படை மதுரையிலிருந்து புறப்பட்டதையும் விசலூரில் வந்து சேர்ந்து கொங்கு நாட்டிலிருந்து வரவேண்டிய படைவருதற்காகக் காத்திருப்பதையும் தெரிவித்தனர். உறையூரிலிருந்த பாண்டியரின் பாதுகாப்புப் படை விசலூரில் வந்து சேர்ந்த பின்னும், கொங்கர் படைக்காகக் காத்திருப்பதாகவே அவர்கள் அறிந்து வந்த செய்தி பல்லவனுக்கு எட்டியது. எனவே தன்னுடைய பெரிய படையுடன் விரைவில் காவிரி ஆற்றைக் கடந்து, அங்கிருந்து சற்றுத் தொலைவில் உள்ள விசலூரில் அடுத்த நாளே பாண்டியர் படையைத் தாக்கி, முறியடித்து மதுரையை நோக்கி முன்னேறலாம் என்ற எண்ணத்துடன்தான் நந்திவர்மப் பல்லவ மல்லன் படை நடத்திக் கொண்டிருந்தான். விசலூரில் அரசனுக்குரிய கூடாரமும் படைத்தலைவர்களும், வீரர்களும் தங்குவதற்கான அமைப்புகளும் எழுப்பியதை ஒற்றர்கள் கண்டறிந்து தெரிவித்ததால் பாண்டியன் பல்லவர்படையை எதிர்த்துப் போராடுவதற்காக விசலூரைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறான் என்று முடிவுசெய்தான் அவன். விசலூர் அருகில் பாண்டியன் படை வந்து தாவளம் அமைத்தபின் பாண்டிய வீரர்களின் நடமாட்டமும், பாண்டிய ஒற்றர் படையின் நடவடிக்கைகளும் மிகுதியானதால், பல்லவ ஒற்றர்கள் அவ்விடங்களை அணுகமுடியவில்லை. எனவே பாண்டியர் படையின் யானைப்படையும் குதிரைப் படையும் தோப்புகளில் புகுந்ததோ, காலாள் படையினர் கொஞ்சம் கொஞ்சமாகச் சிதறியும், கூடியும் பெண்ணாகடம் அருகில் பதுங்கியதோ பல்லவன் செவிகளுக்கு எட்டவில்லை.

மாங்குடிக்கு அருகில் மாலையில் வந்து சேர்ந்து, இரவில் ஓய்வெடுத்தும் உறங்கியும் அடுத்த நாள் விடியற்காலையில் புறப்பட்டது பல்லவனின் படை. காவிரி நதியில் வெள்ளம் அதிகம் இல்லையெனினும் படகுகளின் உதவியின்றி ஆற்றைக் கடக்க முடியாது என்பது விளங்கியது. முதலில் பத்து யானைகள் பாகர்களின் கட்டளைப்படி ஆற்றில் இறங்கி நடக்கத் தொடங்கின. அதன்பின் பத்துப் படகுகளில் இருநூறு வீரர்கள் ஏறினர். படகுகள் தெற்கு நோக்கி மிதந்தன.

3. பெண்ணாகடப் போர்

"பல்லவன் படை காவிரி ஆற்றில் இறங்கிவிட்டது முதல் வரிசையில் பத்து யானைகளும் அவற்றின் பின்னால் பத்துப் படகில்போர் வீரர்களும் ஆற்றைக் கடக்கும் முயற்சி நடந்து கொண்டிருக்கிறது" என்ற செய்தியை அவசரமாக ஓர் ஓலையில் எழுதி, அருகில் காத்து நின்ற தூதுவனிடம் கொடுத்து விரைவில் செல்லும்படி சைகை காட்டினான் பாண்டியரின் ஒற்றர்படைத் தலைவன் இளந்தத்தன். தூதுவன் உயர்ந்து வளர்ந்து நின்ற கரும்புத் தோட்டத்தின் வழியாகப் பாய்ந்து சென்று சற்றுத்தூரத்தில் நின்ற வேறொருவனிடம் கொடுத்தான். அவனும் அவ்வாறே விரைந்து சென்று மற்றொருவனிடம் கொடுத்தான். இவ்வாறு ஒருவனிடமிருந்து மற்றொருவனுக்குக் கைமாறி மிக விரைவிலேயே பாண்டியன் நெடுஞ்சடையனிடம் ஓலை சென்றடைந்தது. ஆற்றில் இறங்கி யானைகளும் படகுகளும் இக்கரையை அடைவற்கு முன்னரே செய்தி பாண்டிய மன்னனுக்குக் கிடைத்தது. ஒரே தூதன் வெகுதொலைவு சென்று ஓலைகொடுப்பதால் களைப்படைய நேரும் என்பதையும், காலதாமதம் ஏற்படும் என்பதையும் மனத்தில் கொண்டு இத்தகைய அஞ்சல் முறையை அமைத்தனர் போர்க்களப் பகுதியில்.

"பத்துப் படகுகளில் இருநூறு வீரர்களும் பத்து யானைகளில் நாற்பது பேரும் இக்கரையில் இறங்கியுள்ளனர். படகுகள் திரும்பி அக்கரைக்குச் செல்கின்றன" என்று சற்று நேரத்திற்குப்பின் அடுத்த ஓலை அறிவித்தது.

இவ்வாறு சில ஓலைகள் வந்தபின் சேனாதிபதி சாத்தன் கணபதி மன்னரிடம் தன் கருத்தை எடுத்துரைத்தார்.

"யானைப் படையையும் குதிரைப் படையின் பெரும் பகுதியையும் கொண்டு வருவதைப் பார்த்தால் அக்கரையில் அவைகளுக்குத் தேவையான தீனி கிடைக்கவில்லை என்று தெரிகிறது. யானைப் பாகர்களும், குதிரை வளர்ப்பவர்களும் வந்து இறங்கியவுடனேயே தீனி தேடும் பணியில் இறங்கியதால் இது தெளிவாகின்றது. இவ்வாறு போனால் முழுப் படையும் ஆற்றைக் கடந்து இக்கரைக்கு வருவதற்காக இன்று முழுவதும் ஆகுமென்று பல்லவன் கருதியிருக்கிறான். நண்பகல்வரை இதுபோலவே

நடந்தால் ஐயாயிரம் வீரர்கள் இக்கரைக்கு வந்து சேர்வார்கள் என்று தோன்றுகிறது. நண்பகலுக்குப்பின் இரண்டு நாழிகை நேரம் கழித்து நாம் பகைவரைத் தாக்கினால் சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன். நண்பகல் ஆகும்பொழுதே நம் யானைகளையும் குதிரைகளையும் தோட்டங்களிலிருந்து வெளிப்பட்டு முன்னேறிவரச் சொல்லலாம். நம் காலாள் படை பகைவரைத் தாக்கும் நேரத்தில் நம் யானைப்படையும் குதிரைப்படையும் இங்கு வந்து சேர்ந்து அவர்களுடைய யானைகளுடனும் குதிரைகளுடனும் மோதினால் போதும்."

துணைத் தளபதி மூர்த்தி எயினன் காலாள் படையின் அணிவகுப்பைப் பார்வையிட்டு அப்பொழுதுதான் திரும்பி வந்தார். அதைப் பற்றி அவர் விளக்கினார்.

"பல்லவரின் யானைப்படையில் ஒரு பகுதிதான் நண்பகலுக்குள் இக்கரைக்குவரும் என்று நினைக்கிறேன். எனவே நம் யானைகள் எல்லாமே பகைவனின் யானைகளுடன் மோதுவதற்குத் தேவை இல்லை. இருபது யானைகளை நம் வில்லாளர்களின் தேவைக்காகத் திருப்பிவிடச் சொல்லியிருக்கிறேன். நம் வில்லாளர்களில் வலிமையும் திறமையும் மிக்க நாற்பதுபேர் யானைப் பாகனுடன் யானையின் மேல் இருந்துகொண்டு பகைவர் மீது அம்புகளை எய்வர். நம் காலாள் படை பகைவனின் வீரர்களுடன் போர்புரியும் பொழுது. குதிரை வீரர்களும் அவர்களுக்குத் துணை நிற்பார்கள். யானைகளின்மேல் இருக்கும் வில்லாளர்கள் ஆற்றைக் கடந்துகொண்டிருப்போர் இக்கரைக்கு வந்து சேராமல் ஆற்றிலேயே விழும் வண்ணம் அம்புகளைச் செலுத்துவர். இன்னும் அருகில் நெருங்கும் பகைவர்களின்மேல் வேல்களும் எறியப்படும்." என்று போர் முறையை எடுத்துரைத்தார் துணைத் தளபதி.

அவர்களுடைய யோசனையை ஏற்றுக்கொண்ட பாண்டிய வேந்தன் யானைப்படை, குதிரைப்படைத் தலைவர்களுக்கு அவ்வாறே ஆணை பிறப்பித்து அனுப்பினான்.

"நான் சில நாள்களாக என் படைவீரர்களுக்குக் காவிரி நதியின் கரையில் மணல் மிகுந்த நிலப்பரப்பிலேயே போர்ப்பயிற்சி அளித்து வருகிறேன். உறையூரில் வாழ்வதால் எனக்கு அதற்கு வசதியாக இருந்தது. எனவே நானும் என்னோடு வந்த படைவீரர்களும் ஆற்றின் கரையில், ஆற்றுநீரோடு மிக நெருங்கிய பகுதியில் பகைவர்களோடு மோதுவதற்குத் தகுந்த

போர் முறைகளைப் பயின்றுள்ளோம். எங்களுக்கு அதை முற்றிலும் பயன்படுத்துமாறு முன் அணியில் நின்று போரிட அனுமதிதர வேண்டுகிறேன்." என்று வேண்டினான் சாத்தஞ்சாத்தன்.

"நாம் சில போர்த் தந்திரங்களைச் செய்வது போலவே பல்லவனும் செய்வான் என்பதை மறந்துவிடக்கூடாது. தம் படைவீரர்கள் தீடீரென்று தென்கரையில் தாக்கப் படுவதைக் காணும்பொழுது வடகரையில் உள்ள பல்லவர் படைத் தலைவர்கள் கண்டுகொண்டிருக்க மாட்டார்கள். படகுகளில் வீரர்கள் சென்று உதவிசெய்வது கடினம் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆகவே யானைகளின் மேலிருந்து வேலும், அம்பும் செலுத்துவதற்கான முயற்சியை அவர்களும் மேற்கொள்வார்கள். ஆகவே ஆற்றிற்கு அருகில் முன்னிலையில் நின்று போர்புரியும் நம் படைவீரர்கள் இரும்புக் கவசங்களும் கேடயங்களும் உள்ளவர்களாக இருக்கவேண்டும். பகை வீரர்களைக் கொல்வது போலவே தம்மையும் காத்துக்கொள்வது மிகவும் முக்கியம்" என்றான் நெடுஞ்சடையன்.

"முற்றிலும் சரி அரசே! அதற்காகவே நானும் என் வீரர்களில் ஐந்நூறு பேரும் கவசத்தோடும் கேடயத்தோடும் வந்திருக்கிறோம்" என்று தன் நெஞ்சை மறைத்திருந்த துணி உடுக்கையைத் திறந்து காட்டினான் சாத்தஞ்சாத்தன்.

"அனுமதி கொடுங்கள் அரசே! சாத்தஞ் சாத்தன் இளைஞன் தலைசிறந்த வாள் வீரன். முன்னணியில் கற்சிலைபோல் நின்று போர் புரியும் ஆற்றல் படைத்தவன். அவன் விருப்பம் போலவே போர் புரியட்டும்" என்று தன் தம்பியைப் பாராட்டி, மன்னனிடம் வேண்டினார்சேனாதிபதி."அப்படியேஆகட்டும்.ஆனால்சேனாதிபதி! நானும் இளைஞன் தானே! கவசமும் அணிந்திருக்கிறேன். அதோடு சாத்தஞ்சாத்தன் என் உயிர்த் தோழன். நானும் அவனுடன் தோளோடு தோள் நின்று முன்னணியில் போர் செய்கிறேன்! என்றார் பாண்டிய மன்னர்.

"அரசே! தாங்கள் வாளும் வேலும் வீசிப் போர் செய்வதை நான் கண்டுள்ளேன். உங்கள் திறமையிலோ, துணிவிலோ, எனக்குச் சற்றும் ஐயம் இல்லை. ஆனால் அன்று நீங்கள் இளவரசர் இன்று நீங்கள் இந்த நாட்டின் மன்னர். முடிசூட்டிக்கொண்டபின் இது உங்களுக்கு முதல் போர். இதில் நாம் வெற்றிபெறப் போவது திண்ணம். எனவே நீங்கள் இப்பொழுது எத்தகைய ஆபத்தையும் நேரிட வேண்டிய சூழ்நிலை இல்லை. நீங்கள் நடுநாயகமாக

நின்று இந்தப் போரை நடத்தினால் போதும். அதுவே என் வேண்டுகோள்" என்று வேண்டினார் சேனாதிபதி. மன்னனும் இணங்கினான்.

மன்னரும் படைத்தலைவர்களும் இளந்தத்தனிடமிருந்து தவறாமல் வந்துகொண்டிருந்த ஓலைகளைப் படித்துக்கொண்டும் தங்கள்போர்த் திட்டத்தை மேன்மேலும் ஆராய்ந்துகொண்டும் இருக்க பல்லவ வீரர்கள் ஆற்றைக்கடந்து கொண்டிருந்தனர். நண்பகலுக்குப்பின் ஒரு நாழிகை நேரம் கழிந்தபின் கணக்குகளை கவனித்துக்கொண்டிருந்த சாத்தஞ்சாத்தன் கூறினான். "ஐயாயிரம் வீரர்களும், முப்பது யானைகளும், நூற்றுக்குமேல் குதிரைகளும் வந்து சேர்த்துவிட்டன. நம் யானைப் படைக்கும் குதிரைப் படைக்கும் முன்னேறி வரும்படி ஆணையிடலாம். நானும் என் முன்னணிப் படையுடன் ஆற்றை நெருங்கித் தாக்குவதற்கான ஆணையை எதிர் நோக்கிக் காத்திருக்கிறேன். கொம்பு ஊதியவுடன் நான் என் படையுடன் ஆற்றை நோக்கிப்பாய்வேன்" என்று அறிவித்தான்.

துணைத் தளபதி வில்லாளர்களுக்கும் அவ்வாறே உத்தரவிட்டார். "கொம்பு ஊதும் ஒலி கேட்டவுடன் வாழைத் தோட்டத்திலிருந்து வெளிப்பட்டுப் பகைவர்கள் மேல் அம்புகள் எய்ய வேண்டும். நம் முன்னணிப் படையினர் வாளும் வேலும் ஏந்திப் போர்புரியத் தொடங்கியபின் நாற்பது வில்வீரர்கள் இருபது யானைகளின்மீது ஏறி, ஆற்றைக் கடந்து கொண்டிருக்கும் படகுகளை நோக்கி அம்பு எய்யவேண்டும். போர் முடியும்வரை நாற்பது வில்லாளர்கள் மாறிமாறி யானைகளின்மேல் இருந்தே போர்புரிய வேண்டும்" என்று அறிவித்தார் அவர்.

யானைப்படை, குதிரைப்படைத் தலைவர்களுக்கும், காலாள்படையின் ஒவ்வொரு அணித் தலைவர்களுக்கும் மன்னனின் ஆணைகள் தெளிவாக அனுப்பப்பட்டன. பாண்டியன் படை தன் முழுவலிமையுடன் பாண்டிய நாட்டை அடிப்படுத்தும் நோக்குடன் வந்து கொண்டிருந்த பல்லவப் படையையும், நம்பிக்கைத் துரோகம் செய்து பல்லவனுடன் சேர்ந்து கொண்ட அதியமான் படையையும் முறியடிக்கும் நோக்குடன் முன்னேறியது.

ஆற்றின் தென் கரையில் வந்து இறங்கிய பல்லவ, கொங்கர் படைகளைச் சேர்ந்த வீரர்கள், அடுத்த நாள் பாண்டியர் படையுடன் போர் நடக்கும் என்றே எதிர்பார்த்தனர். பல்லவ மன்னனும் படைத்தலைவர்களும் தங்களுடைய பெரும்படையை நோக்கிச் சிறிய படையுடன் பாண்டியன் வருவான் என்று சற்றும்

எதிர்பார்க்கவில்லை. ஆற்றைக் கடந்து, அன்று கரும்புத் தோட்டத்திலும், வாழைத் தோட்டத்திலும், மற்ற தோப்புகளிலும் இரவைக் கழித்து விட்டு, அடுத்த நாள் காலையில் முறையாக அணி வகுத்துச் சென்று விசலூர்வரை வந்திருக்கும் பாண்டியன் படையைப் போரில் முறியடித்து மதுரையை நோக்கி முன்னேற வேண்டும் என்பதே பல்லவனின் திட்டம். ஆகவே காவிரியாற்றின் கரையில் தம் மீது ஒரு தாக்குதல் நடக்கும் என்று பல்லவப் படைவீரர்கள் நினைக்கவே இல்லை.

பொன்னி ஆற்றின் பொய்யாத கருணையால் பொன் விளையும் பூமியாதலால் ஆற்றின் இருபக்கமும் ஏராளமான விளைபொருள்கள் வளர்ந்தன. வாழைத் தோட்டங்களும், கரும்புத் தோட்டங்களுமே மற்ற மரம் செடிகொடிகளைவிட அதிகமாகப் பரவிக் கிடந்தன. ஆற்றைக் கடந்து வந்த யானைகள் ஒரு கரும்புத் தோட்டத்தில் விருந்துண்ணவும் தொடங்கியிருந்தன. சில வீரர்களும் பழுத்த வாழைக் குலைகள் தேடித் தோட்டங்களை நோக்கி நடந்தனர்.

திடீரென்று எங்கிருந்தோ கொம்பு ஊதும் ஒலி எழுந்தது. போர் முரசு பல இடங்களிலிருந்தும் கொட்டத்தொடங்கியது. வாழைத் தோட்டமும், கரும்புத் தோட்டமும் உயிர்பெற்று எழுந்து மனிதர்களை வெளியில் விட்டன. வேலும், வாளும், கேடயமும் ஏந்திக் கவச மணிந்த போர் வீரர்கள் ஆற்றை நோக்கிப் பாய்ந்து வந்தனர்.

ஒரு சில பல்லவ வீரர்கள் உடைவாளும், வேறுசிலர், வேலும் வைத்திருந்தனர். ஆயினும், வேல், வாள், மழு, கேடயம் போன்ற ஆயுத வகைகள் பலவும் யானைகளின்மேல் கொண்டு வந்து குவிக்கப்பட்டிருந்தன. அவற்றை முறையாக அடுக்கவோ வீரர்கள் பயன்படுத்துமாறு எடுக்கவோ முடியாமல் கிடந்தன. அதுபோலவே வீரர்களும் ஒரு போரை நேரும் வண்ணம், அதிலும் பயிற்சிமிக்க ஒரு படை திட்டமிட்டுத் தாக்குவதைத் தடுத்து நிற்கும் வண்ணம் அணிவகுத்து நிறுத்தப்படவில்லை. கூட்டமும் கும்பலுமாக நின்று கொண்டிருந்த பல்லவ வீரர்கள், எதிர்பாராமல் வந்த திடீர்த்தாக்குதலால் ஏற்பட்ட திகைப்பிலிருந்து விடுபட்டு, தங்கள் படைக்கலன்களைக் கைப்படுத்தும் முன்னரே பலரும் உயிர் நீத்தனர். கையில் வாளுடனும் கேடயத்துடனும் பாய்ந்து முன்னணிப் படையைத் தலைமை ஏற்று நடத்திக் கொண்டிருந்த சாத்தஞ்சாத்தன் வாளுக்கே பலர் இரையாயினர். அவனுடைய படைவீரர்களும் திகைத்து நின்ற வீரர்கள் பலரையும் வெட்டி வீழ்த்தினர்.

இத்தாக்குதலிலிருந்து தப்பிவந்த வீரர்களுடன் அலை அலையாக வந்து கொண்டிருந்த பாண்டிய வீரர்கள் கைகலந்து போர்புரிந்தனர். அதற்குள் யானைகள் யானைகளுடன் மோதுகின்ற செவிபிளக்கும் ஒலியும் எழுந்தது. குதிரைகளின் குளம்படி ஓசையும் குதிரை வீரர்கள் போர்வெறி ஊட்டும் ஒலிகளை எழுப்பிக்கொண்டு பகைவர்களுடன் மோதும் ஓசையும் உயர்ந்து எழுந்தன. வாளுடன் வாள்மோதுவதும், கேடயங்கள் ஒன்றுடன் ஒன்று உரசுவதும். கை, கால் அற்றவர்களும், நெஞ்சிலும் தோளிலும் புண்பெற்றவர்களும் வலிபொறுக்கமுடியாமல் கூக்குரல் எழுப்புவதுமாகப் பல்வேறு ஓசைகள் விண்ணைப் பிளந்தன.

தன்னுடைய படைவீரர்கள்தாக்கப்படுவதை வடகரையிலிருந்து கண்ட பல்லவனும், அதியனும் செய்வதறியாது திகைத்தனர். ஆயிரக் கணக்கான வீரர்கள் அவர்களுடன் நின்று அக்கரையில் தம் தோழர்கள் பகைவனின் தாக்குதலைத் தாங்க முடியாமல் திணறுவதைக் கண்ணுற்றாலும் கைகால்களை அசைத்துக் கொண்டு அங்கு மிங்கும் ஓடுவதன்றி வேறொன்றும் செய்ய இயலாமல் செயல் இழந்து காணப்பட்டனர். நட்டாற்றில் பல்லவ வீரர்களை ஏற்றிக்கொண்டு செல்லும் படகுகளில் இருந்த வீரர்கள் மீது யானைகளின் மேல் இருந்துகொண்டு பாண்டியனின் வில்லாளர்கள் அம்புகளை எய்து கொல்வதையும், படகோட்டிகள் போர்க் களத்தைக் கண்டிராத சாதாரணமான பொதுமக்கள் ஆதலால் படகுகளைத் திருப்பிக் கொண்டு வடகரையை நோக்கித் திரும்புவதையும் பல்லவ மன்னனும் படைத் தலைவர்களும் கண்டு கைகளைப் பிசைந்துகொண்டு நின்றனர்.

சாமந்த பீமன் என்று புகழ்பெற்ற பாண்டிய சேனாதிபதி சாத்தன்கணபதி தன்னுடைய தேரைப் பயன்படுத்தாமல், குதிரையின் மீது ஏறி, அங்கும் இங்கும் விரைந்து, படைத்தலைவர்களுக்குக் கட்டளை இடுவதும், வீரர்களைப் புதிய இடங்களுக்குத் தேவைக்குத் தக்கவாறு திருப்பி விடுவதும், வீரவார்த்தைகள் பொழிந்து உற்சாகப் படுத்துவதுமாக மிக்க திறமையுடன் போரைத் தலைமை தாங்கி நடத்திக்கொண்டிருந்தார். அவருக்குத் துணையாகத் துணைத்தளபதி தீரதரன் மூர்த்தி எயினனும் தம்பியும் உறையூர் அணியின் தலைவனுமான சாத்தஞ் சாத்தனும் பம்பரம்போல் சுழன்று பல்வேறு இடங்களிலும் வாளும், வேலும் ஏந்திப் போர் புரிந்தனர்.

போர்த்திட்டங்களையும், முறைகளையும் போர் தொடங்குவதற்கு முன்னரே நீள நினைந்து, ஆராய்ந்து

உருவாக்குவது மிகவும் இன்றியமையாத தேவையாகும். அதைப் போலவே, அவ்வாறு உருவாக்கிய திட்டத்தை முறையாகப் போர்க்களத்தில் செயற்படுத்தவும் போரின் நிலைமைக்கும் போக்கிற்கும் ஏற்ப, தேவைப்படும் இடத்திலும் நேரத்திலும் சிறுசிறு மாற்றங்களைச் செய்து வெற்றிக்கு வழிகோல்வதும் படைத்தலைவர்களின் பணியாகும். இவ்விரு துறைகளிலும் பல்லவனின் படைக்குப் பேரிழப்பு நேர்ந்தது. சேனாதிபதியோ, அனுபவம் மிக்க படைத் தலைவர்களோ ஆற்றின் தென்கரைக்கு வரவில்லை. மன்னருக்குப் பாதுகாப்பாகவும், அவரை மகிழ்விப்பதற்காகவும் அவர்கள் வடகரையிலேயே இருந்து அவரோடு சேர்ந்து ஆற்றைக் கடக்கத் திட்டமிட்டனர்.

இரண்டாம் தர அணித்தலைவர்களுள் சிலர் மட்டும் வீரர்களுடன் தென்கரைக்கு வந்திருந்தனர். சாமந்த பீமனுக்கு இணையாகப் படைநடத்தும் ஆற்றல் அவர்கள் யாருக்குமே இல்லை. அது போலவே பாண்டியவேந்தர் தன் வீரர்களுடன் கலந்து கையில் வாளை உயர்த்தி அவர்களுக்கு உற்சாகம் ஊட்டியபொழுது, தூரத்தில் ஆற்றின் அக்கரையில் ஒரு பார்வையாளனாக நிற்கவே பல்லவனால் முடிந்தது.

பெண்ணாகடப் போர் தமிழக வரலாற்றில் மிகவும் முக்கியமானப் பங்கு வகிக்கிறது. அந்தப் போரில் பல்லவன் வெற்றி பெற்றிருந்தால் பாண்டிய நாடு பல்லவருக்குக் கீழ் திறைசெலுத்தும் சிற்றரசாகச் சுருங்கியிருக்கும். பாண்டியன் நெடுஞ்சடையன் வெற்றி பெற்றதால் காவிரி நதியின் தென் பகுதியில் கிடந்த சோழநாடு பாண்டிய அரசிடமே தங்கி நின்றது.

பல்லாயிரக் கணக்கான பல்லவப்படை வீரர்களும், பல்லவனுக்குத் துணைவந்த கொங்கு நாட்டு வீரர்களும் உயிர் இழந்தனர். வாளுக்கும், வேலுக்கும், மழுவிற்கும் இரையானவர்கள் மட்டுமன்றி, தாக்குதலை நேரிட முடியாமல் சிதறி ஓடி ஆற்றில் சாடி வடகரைக்குச் செல்ல முயன்று ஆற்றுவெள்ளத்தில் மூழ்கி இறந்தவர்களும் ஆற்றுவெள்ளம் அடித்துச் செல்லவே அங்கும் இங்கும் கரையில் ஏறி அரை உயிரும் குறை உயிருமாக ஓடியவர்களும் போக ஆயிரம் வீரர்களுக்குமேல் சிறைபிடிக்கப்பட்டனர். மேலும், பல யானைகளும் குதிரைகளும், யானைகளின்மேல் ஏற்றித் தென் கரைக்குக் கொண்டுவந்த ஏராளமான படைக்கலன்களும் போர்த்தளவாடங்களும் படைவீரர்களுக்கான உணவும் பொருள்களும் பாண்டியருக்கு உரிமை ஆயின.

"பகல் வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது" என்ற வள்ளுவனின் வாக்குக்கு ஏற்ப தக்க நேரத்தில் தக்க இடத்தில் எண்ணிக்கையில் மிகுந்த பகைவனின் படையைத் தாக்கிப் பெருவெற்றி பெற்றது பாண்டியன் படை. பொழுது சாய்வது வரை தம் படைகள் தோல்வியடைந்து சிதறிச் சின்னாபின்னமாவதைக் கண்டு கலங்கிய பல்லவனும், கொங்கு மன்னனும் இனிமேல் பாண்டியனின் படையை முறியடிப்பதோ அல்லது மதுரையை நோக்கி முன்னேறுவதோ முடியாத செயல் என்பதை நன்குணர்ந்தனர். ஆற்றைக் கடக்காமல் வடகரையில் எஞ்சிநின்ற ஐயாயிரம் வீரர்கள் அடங்கிய படையுடன் திரும்பிச் சென்றனர். வைகறையில் துயில் எழுந்து, தென்கரையிலிருந்து வடகரையைப் பார்த்த பாண்டியன் நெடுஞ்சடையனும் அவனுடைய படைத் தலைவர்களும் தலைநாள் பல்லவர் படை தங்கியிருந்த இடம் வெறிச்சோடிக் கிடந்ததைக் கண்டனர். சற்று நேரத்திற்குப் பின் அங்கு வந்த ஒற்றர்கள் இளந்தத்தனைச் சந்தித்து, பல்லவர் படை மாங்குடியைக் கடந்து விட்டது என்றும் காஞ்சிக்குத் திரும்பிச் சென்று கொண்டிருக்கிறது என்றும் தெரிவித்தனர்.

பாண்டியரும் படைத்தலைவர்களும் போர்க்களைப்பு என்று சொல்லும் அளவுக்கு உழைக்காமல் எளிதாகவே கிடைத்த வெற்றியில் மனம் மகிழ்ந்து பெருமிதமும் கொண்டனர். சொல்லத் தக்க உயிர்ச் சேதமோ, பொருட் சேதமோ இன்றி வலிமைமிக்க பகைவனை முறியடித்தது, அந்த வெற்றியின் தனிச்சிறப்பாக விளங்கியது.

அந்த வெற்றிக் களிப்பின் இடையில் இளந்தத்தனுக்குக் கிடைத்த செய்தி எல்லோரையும் உலுக்கியது. "பொதியமலைத் தலைவன் ஆய்வேள் மதுரையைத் தாக்குவதற்காகப் படைதிரட்டிக் கொண்டிருக்கிறான். பாண்டியன் பல்லவப் படையுடன் மோதும் போது ஆய்வேள் மதுரைமீது படையெடுப்பான். இன்னும் இரண்டு நாளில் படை புறப்படும்" என்பதுதான் ஒற்றன் கொண்டுவந்த தகவல்.

4. வெற்றிமேல் வெற்றி

தென்னாட்டின் நிலப்பரப்பை வடக்கிலிருந்து தெற்கு நோக்கி இரண்டாகப் பிரித்த மேற்குத் தொடர்ச்சி மலையின் கீழ்ப்பகுதியைப் பாண்டிய நாடாகவும் மேற்பகுதியைச் சேர நாடாகவும் அழைத்தாலும், அரசர்களின் ஆட்சி என்றும் அவ்வாறு நிலைக்கவில்லை. சேரநாட்டின் தென்பகுதி வேணாடு என்று அழைக்கப்பட்டது. சேரருக்குத் திறைசெலுத்தும் சிற்றரசர்களாகப் பெரும்பாலும் ஆட்சி புரிந்தாலும் வேணாட்டரசர்கள் சில காலங்களில் தனியரசுகளாகவும் விளங்கினர். கடையேழு வள்ளல்களில் ஒருவன் என்று சிறப்புப் பெற்ற ஆய் ஆண்டிரன் பரம்பரையில் வந்த ஆய்வேள், பாண்டியன் நெடுஞ்சடையன் மதுரையில் ஆட்சி புரிந்த நாளில் அவ்வாறு தனியுரிமை பெற்ற அரசனாக ஆய்க்குடியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தான். இப்பொழுது பாண்டிய வேந்தனின் ஒற்றர் படைத் தலைவன் கொண்டு வந்த தகவலின்படி அந்த ஆய்வேள் மதுரைமேல் படையெடுத்தும் செல்லப்போகிறான் என்பது தெரிய வந்தது.

வேணாட்டிலிருந்து இந்த முக்கியமான தகவலைக் கொண்டு வந்த ஒற்றன், மதுரையில் அமைச்சர் மாறன் காரியால் பாண்டியனின் பாசறைக்குத் திருப்பி அனுப்பப்பட்டான். அவனிடம் பல வினாக்கள் எழுப்பி, தகவல் முற்றிலும் சரியானது என்பதை உறுதிசெய்துகொண்ட பின்னரே இளந்தத்தன் பாண்டியன் நெடுஞ்சடையனிடம் அறிவித்தான்.

"இதுவும் நல்லதுதான் நேற்று இங்கு நடந்த போர் உண்மையில் போர் அல்ல. பகைவன் நம்மைத் தாக்கவில்லை. பகைவனை நாம் தாக்கினோம். இது ஒரு ஒத்திகை என்று வைத்துக் கொள்வோம். அடுத்து ஆய்வேள் படையுடன் போர்புரியும் பொழுது உண்மையான போர் எப்படி இருக்கும். என்பது நம் படையில் உள்ள புதிய இளைஞர்களுக்குப் புரியும்" என்று ஓரளவு மனமகிழ்ச்சியுடன் பேசினான் சேனாதிபதி சாத்தன் கணபதி.

"அரசே! நமக்குத் துரோகம் புரிந்த கொங்கு நாட்டு மன்னனின் கை இதிலும் இருக்கும் என்று தோன்றுகிறது எனக்கு. நாம் பல்லவன் படையுடன் மோதுவதற்காகப் புறப்படுவதைத்

தெரிந்து கொண்டு மதுரையைத் தாக்குவதற்கு இது நல்ல தருணம் என்று ஆய்வேளே அறிவித்திருப்பான். தன் படையையும் பல்லவன் படையுடன் சேர்த்து பாண்டியர் படையை முறியடித்து மதுரைக்குச் செல்லும் பொழுது மேல்திசையிலிருந்து மதுரையைத் தாக்கும் பணியை ஆய்வேளுக்கு விட்டு விட்டு, கிழக்கிலும் வடக்கிலும் தாக்குவதற்குப் பல்லவனும் அதியனும் முனைந்திருப்பர். இப்பொழுது நாம் பல்லவனையும் அதியனையும் முறியடித்துவிட்டோம். ஆய்க்குடிக்கும் மதுரைக்கும் இடையில் எங்கேனும் ஆய்வேளின் படையைச் சந்திக்க முடியும் அந்தப் படையையும் விரட்டியபின் நாம் அதியனை மறந்து விடக் கூடாது" என்று சீறினான் சாத்தஞ் சாத்தன்.

"சாத்தா! எப்பொழுதும்போல் நீ நினைப்பது முற்றிலும் சரியே. நானும் நீயும், அதியனும் ஒன்றாக அமர்ந்து பல கனவுகள் கண்டோம். இப்பொழுது அதே அதியன் நம் பகைவன் ஆகிவிட்டானே என்று எண்ணும் பொழுது எனக்குச் சினம் பொங்குகிறது என்பதைவிட என் மனம் வருந்துகிறது என்பதுதான் உண்மை. உன் மொழி அறிவையும், என் வாள் வன்மையையும் எவ்வளவு பாராட்டிப் பேசினான் அவன்! அவையெல்லாம் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிய போலி வார்த்தைகள் என்பது இப்பொழுது தெளிவாக விளங்குகிறது அல்லவா! இருக்கட்டும். என்றிருந்தாலும் அவனுக்குப் பாடம் புகட்டியே ஆகவேண்டும். இப்பொழுது அதற்கு நேரம் இல்லை. முதலில் வேணாட்டரசனைச் சந்திக்க வேண்டும். சேனாதிபதி கூறியதுபோல் நமது வீரர்களுக்கு உண்மையான போர்ப்பயிற்சி பெற உதவும் பொதிய மலையில் வாழும் ஆண்கள் சிறந்த போர்வீரர்கள் என்று பேசப்படுகிறது. இன்று பொழுது சாயப்போகிறது. வீரர்களும் களைப்பாக இருப்பார்கள். சேனாதிபதி! நாளை பொழுது விடியும் முன் நாம் புறப்படுவோம் எல்லோருக்கும் ஆணை அனுப்பிவிடுங்கள்" என்றான் மன்னன்.

ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ந்து வரும் போர்கள் போர்வீரர்களின் உடலும், மனமும் களைப்படையச் செய்யும் என்பது உண்மை. ஆனால் பல்லவர் படையுடன் நிகழ்ந்தது போன்ற ஒருபோர், அதாவது ஒருசில மணிநேரங்களில் கடுமையான எதிர்ப்பு இன்றி எளிதாகப் பகைவரை வீழ்த்திய போர், உண்மையான போராளிகட்கு ஏமாற்றமாகவே இருக்கும். பல்லாண்டு காலம் பயிற்சி பெற்று, பலவிதமான படைக்கலன்களைக் கையாளும் முறைகளில் தேர்ச்சி பெற்று நேருக்கு நேர் நின்று பகைவனோடு போர் புரிந்து அவனை முறியடிக்க விரும்பும் வீரன்

தக்க எதிர்ப்பின்றிப் பெறும் வெற்றியால் மனம் மகிழமாட்டான். ஆகவே வேணாட்டுப் படைகளுடன் போர்புரிவதற்காகப் புறப்பட வேண்டும் என்ற பாண்டிய வேந்தனின் ஆணை வீரர்களின் "செருப்பறை கேட்டு விருப்புறும்" வெற்றியைத் தூண்டிவிட்டது. அவர்கள் உற்சாகத்துடன் போர்க்களம் தேடிப் புறப்பட்டனர்.

முதல் செய்தி கிடைத்தவுடனேயே ஒற்றர் படைத்தலைவன், தன் உதவியாளனான வைரவனை ஆய்க்குடிக்கு அனுப்பி ஒற்றர்படையை அந்தப் பகுதியில் விரிவாக்கினான். எனவே காலையும் மாலையும் வேணாட்டுப் படைகளைப் பற்றிய விவரங்களை ஒற்றர்கள் இளந்தத்தனுக்கு அறிவித்துக் கொண்டே இருந்தனர். வேணாட்டரசன், தன் அண்டை நாட்டுக் குறுநில மன்னர்களுள் ஒருவனான குறும்பனின் ஆள்களையும் சேர்த்து நான்காயிரத்துக்கும் ஐயாயிரத்துக்கும் இடையில் உள்ள படைபலத்துடன் குறிப்பிட்ட நாள் காலையில் ஆய்க்குடியிலிருந்து புறப்படுகிறான் என்ற செய்தி பாண்டியனுக்கு எட்டியது. எனவே படைகள் புறப்படும் முன்பே ஆய்க்குடியை அடைந்து தாக்கும் எண்ணத்தைக் கைவிட்ட வைகை வேந்தன் நாட்டுக்குறும்பு என்னும் ஊருக்கு அருகில் படைகளுடன் தங்கினான்.

படைத்தலைவர்களுடன் மந்திராலோசனை நடத்திய மன்னவன், வேணாட்டுப் படைகள் வரும் வழியை நிர்ணயம் செய்தான். தன் படையை மூன்று பகுதிகளாகப் பிரித்து சேனாதிபதியின் தலைமையின் கீழ் நான்காயிரம் வீரர்கள், ஆய்வேளின் படையை எதிர் நோக்கி நேருக்கு நேர் மோதும் வண்ணம் அணிவகுத்து நிறுத்தினான். போர் தொடங்கிய பின் துணைத்தளபதியின் தலைமையில் ஆயிரம் வீரர்கள் தெற்குத் திசையிலிருந்தும், சாத்தஞ்சாத்தனின் தலைமையில் ஆயிரம் வீரர்கள் வடக்குத் திசையிலிருந்தும் அதிரடித் தாக்குதல் நடத்தவும் திட்டம் வகுத்தான். எஞ்சியிருந்த பாண்டிய வீரர்கள், பல்லவர் படையிலிருந்து சிறைப் பிடித்துக் கொண்டு வந்த வீரர்களைக் காவல் காப்பதற்குத் தேவைப்பட்டனர்.

சேரநாடும், வேணாடும், யானைகள் கூட்டம் கூட்டமாக வாழும் மலைப்பகுதியையும் அடர்ந்த காட்டுப் பகுதியையும் உட்கொண்ட நாடுகள் ஆதலால், வேணாட்டுப் படையில் யானைப்படைக்குச் சிறப்பான இடம் அளிக்கப்படும் என்பதை நன்கறிந்த சாமந்த பீமன், பாண்டியர் படையில் இருந்த

யானைகளுடன் பல்லவரிடமிருந்து கைப்பற்றிய யானைகளையும் சேர்த்து நிறுத்தி ஒரு பெரிய யானைப்படை, ஆய்வேளின் படையைக் காத்து நிற்பதாகத் தோன்றச் செய்தான். மின்னல் வேகத்தில் அதிரடித் தாக்குதல் நடத்தும் பொருட்டு குதிரைப்படையில் பெரும் பகுதியைத் துணைத்தளபதிக்கும், சாத்தஞ் சாத்தனுக்கும் உதவியாக அனுப்பினான். மன்னனும் சேனாதிபதியும், துணைத்தளபதியும், சாத்தஞ் சாத்தனும், திட்டமிட்டவாறு அவரவர்க்கு நிர்ணயிக்கப்பட்ட இடங்களில் பகைவரின் வரவை எதிர்நோக்கி இருக்கவே, ஆய்வேளின் படை புறப்பட்ட செய்தியும், அதன் முன்னேற்றமும் ஒற்றர்கள் தவறாமல் அறிவித்தனர். ஆனால் பல்லவனும், அதியனும் பாண்டியனிடம் தோல்வியடைந்து, காவிரிக் கரையிலிருந்து திரும்பிச் சென்றதை அறியாத ஆய்வேள் மதுரையை நோக்கி ஊக்கத்துடன் புறப்பட்டான். பாண்டியன் படை இரண்டு நாள்களுள் தன் படையுடன் மோதப் போகிறது என்பதை ஆய்வேள் சற்றும் உணரவில்லை.

ஆய்வேளின் படை நாட்டுக்குறும்பு என்னும் சிற்றூரை அடைந்தபொழுது, முன்னணிப் படையின் தலைவன் ஓடிவந்து மன்னிடம் ஒரு பெரிய படை ஏராளமான யானைகளைக் கொண்ட படை, அங்கே திரண்டிருக்கிறது என்ற செய்தியை அறிவித்தான். முன்னணிப் படையின் உறுப்பினர்களாக இருந்த இரு ஒற்றர்கள் அந்த ஊர் மக்களிடம் பேசி மன்னனிடம் வந்து, அங்கே காத்திருப்பது பாண்டியன் படை என்று அறிவித்தனர்.

இத்தகைய சூழ்நிலையைச் சற்றும் எதிர்பாராத ஆய்வேள், திரும்பிச்செல்ல வேண்டுமா அல்லது பாண்டியன் படையுடன் போர்புரிய வேண்டுமா என்று ஒருகணம் யோசித்தான். ஆனால் முடிவு அவன் கையில் இல்லை என்பதை அடுத்த கணமே உணர்ந்தான். ஏனெனில் பாண்டியனின் படை ஆய்வேளின் படையை நோக்கி முன்னேறி வந்துகொண்டிருந்தது. ஏராளமான யானைகளும், குதிரைகளும் தேர்களும் முன்னேவர பல்லாயிரக் கணக்கான. காலால்களும் விரைந்து வருவதை அவன் கண்டான். பகைவனைக் கண்டவுடன் புறமுதுகிட்டு ஓடும் எண்ணம் ஒவ்வாதது என்பது அவனுக்குத் தெரியும். அது அவனுக்கும் அவன் நாட்டிற்கும் பேரிழிவு பயக்கும் என்பது அவனுக்குத் தெரியும். பகைவனுடன் போர்புரிவதால் பேரழிவு நேர்ந்தாலும் அது பேரிழிவைவிடச் சிறந்தது என்று துணிந்தான். தன் வாளை உருவித் தலைக்குமேல் உயர்த்திப்பிடித்துத் தன் படைகளுக்குக் கட்டளை இட்டான், முன்னேறிப் போராடுக" என்று.

வைகை வேந்தனும் அவனுடைய படைத்தலைவர்களும் எண்ணியது போலவே இந்தப் போர் பல்லவப் படைகளுடன் நிகழ்ந்த போர் போல ஒருதலைப்பக்கமானதாக அமையவில்லை. காவிரியாற்றைக் கடந்து தென்கரையை அடைந்த பல்லவர்படை ஆற்றைக் கடந்து இக்கரைக்கு வருவதிலேயே கவனம் செலுத்தியிருந்தது. போர்க் கருவிகளும் படைக் கலன்களும் குவிந்தும் சிதறியும் கிடந்தன. ஆனால் ஆய்வேள் நடத்திவந்த படை எல்லாவிதத்திலும் போருக்கு ஆயத்தமாகவே முன்னேறிக் கொண்டிருந்தது. போர் எதிர்பார்த்ததைவிட முன்னரே நிகழ்ந்தாலும் அதைத் துணிவுடன் வரவேற்கப் படைவீரர்கள் முன்வந்தனர்.

யானைகள் ஒன்றுடன் ஒன்று மோதி, தந்தத்தால் குத்தியும் கால்களால் மிதித்தும், தலையோடு தலைசேர்த்தும் பேரோசையுடன் போர் புரிந்தன. மலை நாட்டில் வாழ்ந்து கடின உழைப்பை வாழ்க்கை முறையாக்கிக்கொண்ட வேணாட்டு வீரர்கள் பகைவனுக்கு அஞ்சாமல் வீரவெறியோடு போரிட்டனர். முதலில் வில்லாளர்களின் அம்புகளும், வேல் ஏந்தி வீரர்கள் எறிந்த வேல்களும் சற்றுத் தொலைவிலிருந்தே தாக்குவதற்காகப் பயன்படுத்திய பின், இருபக்கத்துப் படைவீரர்களுடன் ஒருவருடன் ஒருவர், வேல், வாள், மழு போன்ற படைக்கலன்களுடன் ஒருவரை ஒருவர் நெருங்கிக் கலந்து போர் புரிந்தனர். வெற்றி யாருக்கு, தோல்வி யாருக்கு என்று கூறமுடியாத அளவுக்குக் கொடும்போர் நிகழ்ந்து கொண்டிருந்த நேரத்தில் சற்றும் எதிர் பாராமல் தென்பக்கத்தி லிருந்து ஆய்வேளின் படைதாக்குதலுக்கு உள்ளானது. துணைத் தளபதி மூர்த்தி எயினன் ஒருகுதிரைப் படையுடன் தாக்குதல் தொடரவைக்க, அதன் பின்னால் வந்த காலாள் படையினர் ஆய்வேளின் படையில் பெருஞ்சேதம் விளைவித்தனர்.

தென்திசையிலிருந்து வந்த தாக்குதலால் திணறிக் கொண்டிருந்த பொழுது, வடதிசையிலிருந்து சாத்தஞ் சாத்தன் அதே போன்ற ஒரு விரைவுப் படையுடன் ஆய்வேளின் படைமேல் சாடி விழுந்தான். அவனுடைய வாள் வீச்சை நேரிடுவதே படைவீரர்களுக்கு மிகவும் கடினமாக இருந்தது.

தன்னுடைய படை மூன்று பக்கங்களிலிருந்து தாக்கப்படுவதைக் கண்ட ஆய்வேள் தோல்வியைத் தவிர்க்கமுடியாது என்பதை விரைவிலேயே உணர்ந்துகொண்டான். எல்லோரும் உயிர்துறப்பதைவிட, பிலராவது தப்பிப் பிழைப்பதே அறிவுடைமை என்று முடிவு

செய்து, போர் புரிந்துகொண்டே பின் வாங்குமாறு தன் படைத்தலைவர்களுக்குக் கட்டளையிட்டான். அவ்வாறே கதிரவன் சாயத் தொடங்கும் நேரத்தில் ஆய்வேளின் படையும் மேற்குத் திசையில் மலைப்பகுதியை நோக்கிப் பின்னடைந்து சென்றது. பாண்டியப் படை வெற்றி முழக்கம் செய்தது. ஆயினும் முந்திய போர் போலன்றி நூற்றுக் கனக்கான பாண்டிய வீரர்கள் உயிர் இழக்க நேர்ந்தது. விழுப்புண் பெற்று வலியால் துடிக்கும் வீரர்களும் பலர் இருந்தனர். படை நடத்திச் செல்லும்பொழுது உடன்செல்லும் மருத்துவர்கள் செய்த முதலுதவிக்குப்பின் புண்பட்டவர்களைத் தேர்களில் ஏற்றியும் சிறிய அளவில் காயமடைந்தோர் யானைகள் மீதும், மன்னனும், படைத் தலைவர்களும் குதிரைகளிலுமாகப் பயணம் செய்து, வெற்றி முரசு கொட்ட முருடு அதிர முழவு ஒலிக்க பாண்டியன் படை நான்மாடக் கூடல் எனப் புகழ்பெற்ற மதுரையம்பதிக்குத் திரும்பியது.

மதுரை மாநகரின் வலிமையும் பொலிவும் மிக்க கோட்டை மதிலிலிருந்து வைகையாற்றின் தென்கரையில் அமைந்த நெடுஞ்சாலை மாவிலைத் தோரணங்களாலும் கயல் பொறித்த கொடிகளாலும் அலங்கரிக்கப் பட்டு விழாக்கோலம் பூண்டிருந்தது. வைகையாற்றில் வெள்ளம் இல்லை என்பது மட்டுமன்றி ஒருசில இடங்களிலேயே முழங்கால் அளவு நீர் கூட இருந்தது. வெற்றிவாகை சூடி வரும் பாண்டியப் படை வைகையாற்றை அடைந்தவுடனேயே கோட்டையின் வடக்கு வாயிலில் வெற்றி முரசு கொட்டியது; கோட்டை மதிலின் மேல் அணிவகுத்து நின்ற வீரர்கள் கொம்பு ஊதி, பேரிகை முழக்கி வைகை வேந்தனுக்கு வரவேற்புக் கூறினர். ஆற்றைக் கடத்தவுடனேயே தன் குதிரையிலிருந்து இறங்கிப் பட்டத்து யானையின்மேல் ஏறிப்பெருமிதத்துடன் மதுரை வாழ் பெருமக்களுக்குக் காட்சியளித்தான் பாண்டியன் நெடுஞ்சடையன். அவனுக்குப்பின் வந்தயானைகளின்மேல் சேனாதிபதி சாத்தன் கணபதி, துணைத் தளபதி தீர்தரன் மூர்த்தி எயினன், படைத் தலைவன் சாத்தஞ் சாத்தன் ஆகியோர் மக்களிடம் கைவீசித் தம் மகிழ்ச்சியைப் பங்கிட்டுக் கொண்டனர். வெற்றியில் மிகவும் முக்கியமான பங்கு வகித்தாலும், தன் தொழில் மரியாதைக்கு ஏற்ப, ஒற்றர் படைத் தலைவன் இளந்தத்தன் பலருள் ஒருவனாக யார் கண்ணிலும் குறிப்பாகப் படாமல் கோட்டை வாயிலுக்குள் புகுந்தான்.

கோட்டை வாயிலைக் கடந்து நகருக்குள் நுழைந்த பாண்டிய மன்னன் மதுரைமாநகரம்முழுவதுமே விழாக் கோலம் பூண்டிருப்பதைக் கண்டான். அவன் இளவரசனாக இருந்த நாள்களில் தந்தையுடன் போர்க்களம் சென்று வெற்றிபெற்றுத் திரும்பியதுண்டு. ஆனால் அன்று இவ்வளவு பெரிய கொண்டாட்டம் நிலவியதாக அவனுக்குத் தோன்றவில்லை தெருக்கள் எல்லாம் வண்ணத்தோரணங்களும் கண்ணைக் கவரும் கயல் வகைகளும் விளங்கிப் பொலிந்ததோடு, வீடுகள் தோறும் வெற்றிக்கொடி பறந்ததைக் காண அவன் நெஞ்சம் பெருமிதத்தால் விம்மியது. மன்னனின் வெற்றியில் மக்கள் இவ்வளவு மகிழ்ச்சி கொள்வது அவர்கள் அவனிடம் கொண்டிருக்கும் அளவற்ற அன்பின் அறிகுறி என்பது அவனுக்கு விளங்கியது. அந்த அன்பும் ஆதரவும் இன்றுபோல் என்றும் நிலைக்குமாறு நடந்துகொள்ள வேண்டும் என்று அவன் உறுதிபூண்டான்.

"குடிதழிஇக் கோலோச்சும் மாநில மன்னன் அடிதழீஇ நிற்கும் உலகு" என்ற குறள் கூற்று எவ்வளவு மகத்தானது என்பது அந்த மன்னனுக்கு நன்கு விளங்கியது.

மக்கள் கூட்டத்தின் அன்பு வெள்ளத்தில் மிதந்து அரண்மனை வாயிலை அடைந்தனர் பாண்டியனும் அவனுடைய படைவீரர்களும். மதுரை மாநகரின் செல்வச் சிறப்பை எடுத்துக்காட்டுமாறு நிலக்கிழார்களும், வணிகர்களும் கலைஞர்களும் அவரவர் வீடுகளையும், தெருக்களையும் அழகுபடுத்தி மன்னரின் வெற்றியைக் கொண்டாடும் பொழுது, அரண்மனை அவற்றையெல்லாம்விட ஒரு படிமேலாக ஒளிரவேண்டும் என்ற எண்ணத்தினால் போலும் அரண்மனை வாயில் அலங்கார வளைவுகளும், வெண்குடைகளும், முத்துப்பந்தலுமாகக் கண்கவரும் வண்ணம் மின்னி விளங்கி நின்றது. அன்னை மகாராணியான பூசுந்தரியின் தலைமையில் அரசகுடும்பமும் அமைச்சர் மாறன் காரியின் தலைமையில் மூத்த அரசியல் அலுவலர்களும் வெற்றி வீரர்களை வரவேற்கக் காத்து நின்றனர்.

பட்டத்து யானையின் மேலிருந்து இறங்கித் தன் அன்னையின் திருவடிகளைத் தொட்டு வணங்கிய நெடுஞ்சடையனை அன்னை மகாராணி மார்புறத் தழுவி உச்சிமோந்தாள். ஒருசில மாதங்களுக்கு முன்னரே அவனுக்கு மாலை சூட்டிப் பாண்டியப் பேரரசின் மகாராணியான இளவெயினி இப்பொழுது தன் கணவனுக்கு வெற்றிமாலை சூட்டி வரவேற்றாள். பாண்டியன்

நெடுஞ்சடையனின் உடன் பிறந்த தங்கை தேவந்தியும் தன் தமையனுக்கு மாலை அணிவித்து மகிழ்ச்சியை வெளியிட்டாள்.

அமைச்சர் மாறன் காரி மன்னனைத் தலைவணங்கி, கைகூப்பி வரவேற்றார். பின்னால் வந்த சேனாதிபதியை மார்போடு சேர்த்துத் தழுவியும், துணைத்தளபதியையும், சாத்தஞ்சாத்தனையும் தோளில் தட்டியும் அன்பு காட்டினார். படைத் தலைவர்கள் எல்லோரிடமும் அன்பு மொழி பேசிப் பாராட்டிய அன்னை மகாராணி, சாத்தஞ் சாத்தனிடம் "உறையூர் வாழ்க்கை நன்றாக இருக்கிறதல்லவா? நீ முன்பு கண்டதைவிட இப்பொழுது பொலிவுடன் இருக்கிறாய்" என்று குறிப்பிட்டார்.

"மகாராணியாரின் கட்டளைப்படி எங்கு வாழ்ந்தாலும் அது எனக்கு நல்லதாகவே அமையும்" என்று கூறித் தலைதாழ்த்தி வணங்கினான் சாத்தஞ் சாத்தன். அவன் ஏதேனும் மறைபொருள்படப் பேசுகிறானோ என்று ஐயுற்றார் மகாராணி! ஆனால் அவனுடைய வார்த்தைகளில் தவறு எதுவும் இல்லாததால் ஒன்றும் கேட்கவில்லை. இளவரசி தேவந்தி முட்டிவந்த நகைப்பை மூடிவைப்பதுபோல் தன் வாயைக் காந்தள் விரல்களால் மறைத்துக் கொண்டாள். கடைக் கண்ணால் நோக்கியதன்றி அவள் சாத்தஞ்சாத்தனிடம் வாய்திறந்து ஒன்றும் பேசவில்லை.

"நீ நண்பன் என்று கருதியிருந்த அதியன் உன்னைக் கைவிட்டு விட்டான் இல்லையா!" என்று தன் மகனிடம் வினவினார் அன்னை மகாராணி "ஆமாம், அன்னையே, அவன் ஏன் அப்படிச் செய்தான் என்று எனக்குத் தெரியவில்லை! அது வியப்பைவிட வேதனையைத்தான் தருகிறது எனக்கு" என்று வருத்தத்துடன் கூறினார் பாண்டியர்.

"அமைச்சர் என்னிடம் அதை அறிவித்த பொழுது என்னால் நம்பவே முடியவில்லை! அவன் என் கால்களில் தொட்டு வணங்கி, என் ஆசிபெற்று விடைபெற்றதை நேற்று நடந்தது போல் காண்கிறேன் நான். ஒரு வேளை பல்லவன் அவனிடம் ஆசைவார்த்தைகள் பேசி அவன் மனத்தை மாற்றியிருக்கலாம்" என்று காரணம் கண்டுபிடித்தார் பூசுந்தரி.

"உண்மையான நட்பு ஆசை வார்த்தைகளால் அசைக்க முடியாதது என்று நம்புகிறேன் நான். ஆயினும் இதை ஓர் எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ளத்தான் வேண்டும்" என்று சேர்த்துக் கொண்டான் நெடுஞ்சடையன்.

5. கடமையும் காதலும்

சேனாதிபதி சாத்தன் கணபதியும், அவருடைய தம்பி சாத்தஞ்சாத்தனும், சேனாதிபதியின் இருநிலை மாடத்தில் மாடியில் அமர்ந்து மதுரைமாநகரின் வெற்றி விழாக்காட்சிகளைக் கண்குளிரக்கண்டு கொண்டு மனம் திறந்து பேசிக்கொண்டிருந்தனர். பாண்டிய மன்னனும் அவனோடு திரும்பி வந்த படைவீரர்களும் தலைநாள் வந்து சேர்ந்தபின் அன்றையப் பகலும், பெரும்பாலான இரவும் ஆடிப்பாடி மகிழ்ந்த மதுரைவாழ் மக்கள் இன்றும் அந்தக் களியாட்டங்களிலிருந்து முற்றிலும் விடுபடவில்லை என்று தோன்றியது. ஒரு சில குழுக்கள், குறிப்பாக இளைஞர் கூட்டங்கள் பாண்டியனின் மீன்கொடியை ஏந்திக்கொண்டு ஊர்வலம் வந்து கொண்டிருந்ததை இப்பொழுதும் காண முடிந்தது. அரண்மனையும், அரசின் அலுவலகங்களும், ஆவணக் களரிகளும், பெருங்கடைகளும், பண்டகசாலைகளும், அங்காடிகளும் மூடிக்கிடந்தன. இன்று மாலையும் நாட்டியம், நாடகம், கூத்து போன்ற கலைநிகழ்ச்சிகள் வெற்றி விழாவின் ஒரு பகுதியாக நடைபெற இருப்பதைச் சேனாதிபதியும் அறிந்திருந்தார்.

"நான் இதற்கு முன் பலமுறை காலஞ்சென்ற மன்னருடன் போரில் வெற்றிபெற்றுத் திரும்பியுள்ளேன். ஆனால் மதுரை மக்கள் இவ்வளவு விழா எடுத்துக் கொண்டாடியதைப் பார்க்கவே இல்லை. இந்த வெற்றிப் படையை நடத்திச் செல்லும் சேனாதிபதி நான் என்பதை எண்ணிப் பார்க்கும் பொழுது மிகவும் பெருமையாகத்தான் இருக்கிறது." என்று மனம் நிறைந்து பேசினார் சேனாதிபதி.

"பல்லவ மன்னன் பெரும் படையுடன் மதுரையைத் தாக்க வருகிறான் என்ற தகவல் மக்களுக்கு அச்சம் அளித்தது. இளைஞனான மன்னன், மதுரைக்குள் இருந்துகொண்டு பகைவனது தாக்குதலை முறியடிக்க விரும்பாமல் படையெடுத்துச் சென்று, வரும் வழியிலேயே பகைவனை மடக்கி எதிர்த்துப் போரிட்டு வெற்றியும் கண்டான். பகைவன் மதுரையை முற்றுகை இட்டிருந்தால் மக்கள் பல தொல்லைகளுக்கு ஆளாகி இருப்பார்கள். எனவே அவர்களையும் காத்து, தன் படையைவிட எண்ணிக்கையில் பெரிய படையை முறியடித்து வெற்றியுடன் வந்த பாண்டியன் நெடுஞ்சடையனுக்குத் தங்கள் பாராட்டையும்

வந்த பாண்டியன் நெடுஞ்சடையனுக்குத் தங்கள் பாராட்டையும் நன்றியையும் தெரிவிக்கிறார்கள் நாட்டு மக்கள். முடி சூடி இரண்டாண்டுகளுக்குள் இத்தகைய வெற்றி பெற்றது நம் மன்னருக்கு நல்ல தொடக்கம். அதில் பங்குகொள்ள நேர்ந்ததை நானும் பெருமையாக எண்ணுகிறேன் என்று அண்ணனின் மனநிலையில் பங்கு கொண்டான் சாத்தஞ் சாத்தன்.

சற்றுநேர இடைவெளிக்குப்பின் சேனாதிபதி கேட்டார் "நீ மதுரைக்குத் திரும்பிவருவதைப் பற்றி மன்னர் ஒன்றும் சொல்லவில்லையா?" "இல்லை" என்று ஒருவார்த்தையில் விடையளித்தான் சாத்தஞ் சாத்தன்.

"நீ அவரிடம் கேட்கவும் இல்லையா?"

"இல்லை" மறுபடியும் அதே பதில்.

"ஏன்? உறையூரிலேயே உன் நாள்களை ஓட்டிவிடலாம் என்று நினைக்கிறாயா?" என்று ஓரளவு எரிச்சலுடன் கேட்டார் சேனாதிபதி.

"இல்லை, இல்லை. ஆனால் நான் என் சொந்த விருப்பப்படி உறையூருக்குப் போகவில்லை. தன் முழு நம்பிக்கைக்குப் பாத்திரமான ஓர் ஆள் உறையூரில் பாண்டியர் படையைப் பேணிக்காப்பதோடு, சோழநாட்டில் பாண்டியருக்கு எதிரான சக்திகள் தலைதூக்காமலும் பார்த்துக் கொண்டால்தான் நிம்மதியாக மதுரையில் ஆட்சிபுரிய முடியும் என்று மன்னர் நேரில் என்னிடம் கூறி என்னை அனுப்பிவைத்தார். என் முயற்சியால் நம் படை வலிமை அடைந்து இப்பொழுது நடந்த போரில் மிக முக்கியமான பங்கு வகித்தது. மேலும் சோழர் குலத்தோன்றல் நலங்கிள்ளியின் மகளைப் பாண்டியன் நெடுஞ்சடையனுக்கு மணம் புரிந்து வைக்கவும் முடிந்தது. உண்மையில், மன்னர் திருமண விழாவில் கலந்து கொண்டபோது அதைப்பற்றி அவர் என்னிடம் பேசுவார் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் அவர் ஒன்றும் பேசவில்லை. நான் உறையூரில் இருப்பதே நல்லது என்று நினைக்கிறார் போலும். நாளை நான் மன்னரைக் காணப் போகிறேன். அப்பொழுதுதான் தெரியும்" என்று தன் நிலைமையை விளக்கினான் சாத்தஞ் சாத்தன்.

"உனக்குத் தெரியுமே மன்னர் உன்னை உயிர் நண்பனாகக் கருதுகிறார். நீ அவருக்கு அருகில் இருப்பதையே அவர் விரும்புகிறார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். நீ அவருடைய

நட்பை உன் சொந்த நேட்டத்திற்காகப் பயன்படுத்தமாட்டாய் என்றும், உன்னிடம், எதையும் மனம் திறந்து பேசலாம் என்றும், நீ சிந்தித்து, ஆராய்ந்து நல்ல அறிவுரை கூறும் நுண்மதியாளன் என்றும் மன்னருக்குத் தெரியும். அப்படி இருந்தும் அவர் உன்னை உறையூரில் வைத்திருப்பதற்குக் காரணம் என்ன? அது உனக்குத் தெரியும் என்று நினைக்கிறேன் நான்". சேனாதிபதி மனக்குறையுடன் பேசுகிறார் என்பதைப் புரிந்துகொண்டான் அவருடைய இளவல்.

"தெரியும்! மன்னர் அன்னை மகாராணியின் ஆணையைத் தட்டமுடியாததால் என்னை மதுரையிலிருந்து அகற்றி நிறுத்துகிறார். அது அவர் அரசுப் பொறுப்பை ஏற்றவுடன் நடந்தது. இப்பொழுது நெடுஞ்சடையன் மன்னனாகி இரண்டாண்டுகள் ஓடிவிட்டன இனியும் அரசுச் செயல்களில் அன்னை மகாராணியின் அறிவுரையைத் தேடவேண்டிய தேவை இல்லை. அவராகவே ஒரு முடிவை எடுக்கலாம்" சாத்தஞ் சாத்தன் எடுத்துரைத்தான்.

"நீ இவ்வளவுநாள் மதுரையிலிருந்து விலகி இருந்தாலும், அதனால் அன்னை மகாராணி எதிர்பார்த்த விளைவு ஒன்றும் ஏற்படவில்லையே! இளவரசி இப்பொழுதும் கன்னிப் பெண்ணாகத்தானே இருக்கிறாள்!" என்று ஒரு விதமான வரட்டுச் சிரிப்புடன் பேசினார் சாமந்த பீமன் என்று பெயர்பெற்ற சேனாதிபதி. ஆருயிர் இளவலின் நெஞ்சில் ஆறாமல் கிடந்த புண்ணைக் கிளறிவிட்டோமே என்ற வருத்தம் உடனேயே அவரை ஆட்கொண்டது.

"நான் சொன்னதை மறந்துவிடு! வாய்தவறிப் பேசிவிட்டேன். உன் மனதைப் புண்படுத்தும் எண்ணம் இல்லை" என்று மனம் நொந்தார் அவர்.

சாத்தஞ் சாத்தன் தன் உணர்ச்சிகள் வெளிப்படாதவாறு சற்று நேரம் பேசாமல் இருந்தான். பின்னர் மிகவும் தாழ்ந்த குரலில் நிதானமாகப் பேசினான். "அண்ணா! தன்னுடைய மகள் எவ்வாறு வாழவேண்டும் என்றும், அவள் யாரை மணந்து கொண்டால் அவளுடைய வாழ்க்கை வளமாக அமையும் என்றும் எண்ணிப் பார்த்து அதற்கேற்ற முடிவெடுக்கும் உரிமை பெற்றோர்க்கு உண்டு. அத்தகைய ஒரு முடிவைத்தான் அன்னை மகாராணி எடுத்தார். இளவரசியை ஓர் இளவரசனுக்கு மணம் முடித்து அனுப்பினால் அந்த நாட்டு மன்னனின் ஆதரவு நிலையாகப் பாண்டிய அரசிற்குக் கிடைக்கும். அந்த எண்ணத்தால்தான் இளவரசி என்னோடு நெருங்கிப் பழகுவதை அவர் தடுக்க முனைந்தார். ஆனால் அரசரின் உற்ற தோழனும், ஒருசிறந்த

படைத்தலைவனுமான என்னை அரண்மனைக்குள் நுழையக்கூடாது என்று சொல்லவோ, இளவரசியைக் கண்டால் பேசாமல் முகத்தைத் திருப்பிக் கொள்ளவேண்டும் என்று சொல்லவோ அவருக்கு மனம் வரவில்லை. இளவரசியிடம் பேசியதும் பயனளிக்கவும் இல்லை. எனவேதான் நான் மதுரையிலிருந்து வெகுதொலைவில் வசித்தால் நானும் இளவரசியும் சந்திக்கும் வாய்ப்பு இல்லாமல் போகும் இளவரசியின் மனமும் மாறும் என்று எதிர்பார்த்தார் அன்னை மகாராணி. ஒருவேளை அப்படி மாறியும் இருக்கலாம். எப்படி யானாலும் நான் இளவரசியை மறக்க முயல்கிறேன். எதற்காக எட்டாத பழத்திற்குக் கொட்டாவி விடவேண்டும்?" என்று தன் உள்ளத்தைத் திறந்து காட்டினான் தமையனிடம்.

சாத்தன் கணபதி கரவந்தபுரத்தில் வாழ்ந்த சாத்தன் குடும்பத்தில் மூத்த மகனாகப் பிறந்தவன். ஏழு ஆண் மக்கள் பிறந்த அந்தக் குடும்பத்தில் இறுதியாகத் தோன்றியவன் சாத்தஞ் சாத்தன். எனவே அவர்கள் இருவருக்கும் இடையில் பெரும் இடைவெளி இருந்தது. தம்பி ஆயினும், சாத்தஞ் சாத்தனை மகனைப் போலவே வளர்த்ததால் அவனிடம் மிக்க பாசம் கொண்டிருந்தான் கணபதி. அவன் மனைவி நற்கொற்றியும் சாத்தஞ் சாத்தனைச் சொந்த மகனைப் போலவே நினைத்து அன்பு பொழிந்தாள். மகப்பேறில்லாத அவர்களுக்குச் சாத்தஞ் சாத்தனும் மகனைப் போலவே நடந்து கொண்டான். கணபதிக்கும் சாத்தஞ் சாத்தனுக்கும் இடையில் பிறந்த ஐவரும் பல போர்களில் உயிர் நீத்ததால் எஞ்சியிருந்த இருவருக்குள் பாசம் இன்னும் மிகுதியாக வளர்ந்தது. சாத்தஞ் சாத்தன், மதுரையில் படைத்தலைவனாக இருந்த சாத்தன் கணபதி, துணைத்தளபதி தீரதரன் ஆகியோருக்கு அடுத்தபடியாக மூன்றாவது தகுதிப்படியில் இருந்தவன். அவன் உறையூர்ப்படையின் தலைவனாக மன்னன் ஆணைப்படி மதுரையிலிருந்து சென்றதால் அவனைவிட வருத்தம் கொண்டனர் சாத்தன் கணபதியும் நற்கொற்றியும்.

சேனாதிபதி சாத்தன் கணபதியைப் பாண்டியன் பராந்தகன் நெடுஞ்சடையனும் அன்னை மகாராணி பூசுந்தரியும் பெரிதும் மதித்தனர். தன் தம்பியை மதுரைக்குத் திரும்பிக் கொண்டு வரவேண்டும் என்று அவர்களிடம் வேண்டுகோள்விடுக்கும் உரிமையும் தகுதியும் அவருக்கு இருந்தது. ஆனால் இளவரசி தேவந்தியும் சாத்தஞ் சாத்தனும் ஒருவரை ஒருவர் சந்திக்கும் வாய்ப்பு எழாமல் இருப்பதற்காகவே அன்னை மகாராணி சாத்தஞ் சாத்தனை உறையூருக்கு அனுப்பினார் என்பதை நன்கறிந்த

சேனாதிபதி அத்தகைய வேண்டுகோள் விடுக்கத் தயங்கினார். உண்மையில் அத்தகைய தொடர்பும், அதனால் வளரக்கூடிய காதலும் தன் தம்பிக்கு நல்லதல்ல என்று சேனாதிபதியும் நம்பினார். இளவரசியின் திருமணம் முடிந்தபின் சாத்தஞ் சாத்தன் மதுரைக்குத் திரும்புவதே அவனுக்கும் நல்லதாக இருக்கும் என்று எண்ணினார் அவர். ஆனால் ஓரிரு அரச குடும்பங்கள் மணம் பேசி வந்தாலும் இளவரசியின் பிடிவாதத்தால் திருமணம் நடக்காமலே நாள்கள் நகர்ந்தன.

மாலைக் கதிரவன் மஞ்சள் ஒளி பரப்பிக் கொண்டு மேற்குத் திசையில் சாய்ந்து கொண்டிருக்கும் நேரம் எந்தப் பூங்காவிலும் எழில் பூத்துக் குலுங்கும் காலமாகும். கவிஞருக்கும் காதலருக்கும் சிறப்பு விருந்தளித்துப் புத்துணர்ச்சி அளிப்பதோடு, அத்தகையோர் அல்லாதார்க்கும் மனநிறைவு தரும் நேரம் அது. மதுரை அரண்மனைக்குப் பின்புறம், கொற்றவை கோயிலின் புறமதிலைச் சுற்றி அமைந்திருந்த பூங்கா, ஆம்பல் குளமும் முல்லைக்கொடிப் பந்தலும், மல்லிகைமலர்ச் செடிகளும் வெண்காந்தளும், செங்காந்தளும், பிச்சியும், கொன்றையுமாகப் பலவண்ண மலர்ச்செடிகொடிகளால் கண் நிறைக்கும் வனப்பும் மனம் நிறைக்கும் மணமும் செறிந்து விளங்கியது. அரச குடும்பமும் அமைச்சர் படைத்தலைவர் உயர்ந்த அலுவலர் போன்றோரும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களும் உலவும் இடமாகையால் காவலும் கட்டுக்கோப்பும் அதன் சிறப்பைக் கட்டிக்காக்கும் வண்ணம் அமைந்திருந்தன. சேனாதிபதியின் மாளிகையிலிருந்து வெளியேறி ஒரு குறிப்பிட்ட இலக்கின்றி நடந்த சாத்தஞ் சாத்தனை அவன் கால்கள் அந்தப் பூங்காவிற்கு உய்த்தன. மதுரையில் வாழ்ந்து கொண்டிருந்த நாள்களில் வழக்கமாகச் செல்லும் இடம் ஆகையால் அவன் குறிப்பாக அங்குச் செல்லவேண்டும் என்று எண்ணவில்லை. ஆயினும், அந்தக் கால்கள் தாமாகவே முடிவெடுத்தன போலும்!

பூங்காவின் அமைப்பிலும் பூக்களின் வகைகளிலும் புதுமை ஒன்றும் தோன்ற வில்லை சாத்தஞ் சாத்தனின் கண்களுக்கு. உள்ளே நுழைந்தவுடனேயே மல்லிகைமணம் வரவேற்றது. காந்தள் கையசைத்தது. குவளை கண் சிமிட்டியது. தாமரை புன்முறுவல் பூத்தது. தாழை சோறிட வாழை குருத்து இட்டது! ஆம்பல் குளத்தின் கரையில் அடர்ந்து வளர்ந்திருந்த மலை மல்லிகைப் புதர் வெண்பற்களைக் காட்டிப் பண்பாடியது! அது மட்டுமன்றி, அங்கு அமைக்கப்பட்டிருந்த அழகிய சிற்பங்களின் நடுவில் இருந்து உயிருள்ள சிற்பம் ஒன்று எழுந்து நின்றது! திகைத்து நின்ற

அந்த இளைஞனை நோக்கிச் சிரிக்கவும் செய்தது!

"ஏன் அப்படியே நின்றுவிட்டீர்கள்! அஞ்ச வேண்டாம்! நான் தேவந்திதான்! தேவதை அல்ல" என்று தன் கருநெடுங் கண்களில் குறும்பு மலரக் கூறினாள் அங்கு நின்ற பாண்டிய மன்னரின் தங்கை தேவந்தி.

இளவரசியைத் தனிமையில் சந்திக்கும் சூழ்நிலை உருவாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணியிருந்த உறையூர்ப் படைத் தலைவனுக்கு அது ஓர் இக்கட்டான நிலையை உருவாக்கியது. அந்தக் கண்களில் பட்டு விட்டால் தன் உள்ளம் உருகிவிடும் என்றும் நெஞ்சம் நெகிழ்ந்துவிடும் என்றும் அவனுக்குத் தெரியும். அவள் குறிப்பிட்டதுபோல் அவன் அஞ்சியது உண்மையே. ஆனால் அதனை அவளே சுட்டிக்காட்டியபொழுது ஒத்துக்கொள்ள அவன் மனம் இடம் தரவில்லை.

"அச்சமா! நான் ஏன் அஞ்சவேண்டும்! இளவரசியைக் கண்டால் வணங்கி நிற்பது ஒரு படைத் தலைவனின் கடமை. அதனால் தான் நின்றேன்" என்று பொய்விளக்கம் அளித்தான் அவன்.

"அஞ்சவில்லை என்று எனக்கும் தெரியும். காவிரி ஆற்றின் கரையில் பல்லவர் படைமீது சாடி வீழ்ந்து எண்ணிறந்த பகைவர்களை வாளுக்கு இரையாக்கிய மாவீரர் சாத்தஞ் சாத்தன் எதற்காக அஞ்சவேண்டும்? ஆனால் அஞ்சியது போல் காட்டிக் கொண்டீர்கள் என்றுதான் நான் நினைத்தேன். ஏனென்றால் நான் இங்கே இருப்பேன் என்று எதிர் பார்க்கவில்லை அல்லவா"! என்று நேரடியாகவே கேட்டாள் அவள்.

"காவிரியாற்றில் பல்லவர்படைமேல் சாடி வீழ்ந்ததை யார் சொன்னார்கள் தங்களிடம்?"

"ஏன்! நேற்றும் இன்றும் என் அண்ணன் வாயிலிருந்து அந்தப் போரைத் தவிர வேறு எதுவுமே வெளிவரவில்லையே! அதிலும் மன்னனுடைய உயிர்த்தோழன் சாத்தஞ் சாத்தனின் அறிவும் ஆற்றலும் தான் இந்த வெற்றிக்கு முக்கிய காரணம் என்றல்லவா அவர் அன்னையிடம் புகழ்ந்து பேசுகிறார்! உறையூரில் இருந்த படைக்குக் காவிரி மணற்புறத்தில் நின்று போர் புரிவதற்கான சிறப்புப் பயிற்சி அளித்து அந்தப் பயிற்சியின் முழுப்பலனையும் பெறுவதற்காக அந்தப் படையையே முன்னணியில் நிறுத்தி, சாத்தஞ் சாத்தனே அந்தப் படையை நடத்தி வாளும் கேடயமுமாகச் சுழன்று போராடியதை அன்னையிடம்

படம் பிடித்துக் காட்டினார் என் அண்ணன். சாத்தஞ் சாத்தனார் கையில் எழுத்தாணி சுழலும் விந்தையைக் கண்டு மகிழ்ந்த நான் வாள் சுழலும் வித்தையைக் கற்பனையில் கண்டு மகிழ்ந்தேன்" என்று தன்னுடைய பாராட்டையும் கூட்டிக்கொண்டாள் அந்தத் தென்னவன் தங்கை.

சாத்தஞ் சாத்தன் உள்ளத்தில் உவகை பூத்தாலும் அவளுடைய முகப்புகழ்ச்சி அவனை நாணச் செய்தது.

"மன்னர் என் மீது பேரன்புகொண்டவர். என்னை இளம் பருவம் முதலே உயிர்த்தோழனாகக் கருதுபவர். எனவேதான் நான் என் கடமையை ஆற்றியதைப் பெரிதுபடுத்திப் பேசுகிறார். அவருடைய தலைமையும் அவர்மீது நம் படைத் தலைவர்களும் வீரர்களும் கொண்டிருக்கும் பற்றும் பாசமும்தான் நாம் பெற்ற இரு வெற்றிகளுக்கும் காரணம்" என்று அடக்கம் மிகக் கூறினான் சாத்தஞ் சாத்தன்.

"உயிர்த்தோழனாகிய சாத்தஞ்சாத்தன்மேல் வைத்திருக்கும் பேரன்பால்தான் மன்னர் அவரை மதுரையிலிருந்து வெளியேற்றி உறையூரை உறைவிடமாக்கியுள்ளார் போலும்!" தேவந்தியின் சொற்களில் நிழலிட்டது அவளுடைய மன வருத்தமா அல்லது அண்ணன்மேல் எழுந்த ஆத்திரமா என்பது சாத்தஞ் சாத்தனுக்குப் புரியவில்லை.

"அரசன் ஆணையை ஏற்று அதன்படி நடப்பதுதான் என்னைப்போன்ற குடிமகனின் கடமை. அவர் ஆணையின் நோக்கம் என்னவாக இருக்கும் என்று ஆராய்ந்து பார்ப்பது சரியன்று. என்னை எவ்வாறு நாட்டின் நன்மைக்காகப் பயன்படுத்த வேண்டும் என்று முடிவு செய்யும் உரிமை அரசருக்கு உண்டு. என் பணி உறையூர்ப் படைக்குத் தேவை என்று அரசர் கருதினால் அவ்வாறுதானே செய்ய வேண்டும்?"

தேவந்தி அண்ணனிடம் குறைகண்டாலும் அவன் அரசன் மீது குறை கூற விரும்பவில்லை. ஆனால் தேவந்தி விட்டபாடில்லை.

"அப்படி அரசருக்கு ஒரு முடிவுக்கு வரமுடியாமல் இருந்தால் அவருக்குத் தேவையான அறிவுரை வழங்க அன்னை மகாராணியார் அருகில் இருக்கிறார்கள் அல்லவா!" என்று வெடுக்கென்று கேட்டாள்.

"இளவரசி! அரசருக்கு அறிவுரை கூறுவதற்கு எல்லா விதத்திலும் தகுதியுள்ளவர் தானே அன்னை மகாராணி! முப்பது

ஆண்டுகளுக்குமேல் பாண்டிய வேந்தனுடன் மதுரை அரியணையில் அமர்ந்து அரசியல் அலுவல்களில் அனுபவம் பெற்றவர். இன்றைய மன்னரை ஈன்ற அன்னை அவருடைய அறிவுரையை மன்னர் செவிகொள்ளாமல் இருக்க முடியுமா?" என்று மேலும் தனக்கு அரசர் மீதும் அரசக்குடும்பத்தின் மீதும் இருந்த பற்றையும் பக்தியையும் வலியுறுத்திப் பேசினான் சாத்தன்.

"சரியாகக் கூறினீர் சாத்தனாரே! அரசரோடும் அரச குலத்தோடும் தங்களுக்குள்ள பெருமதிப்பு பாராட்டிற்குரியது. மிகவும் நன்று. நானும் அந்த அரச குலத்தில் பிறந்தவள் தானே! மறைந்த மன்னர் அரிகேசரி பராங்குச மாறவர்மனின் மகள்தானே! இன்றையப் பாண்டிய மன்னன் நெடுஞ்சடையன் பராந்தகனின் உடன் பிறந்த தங்கைதானே!" அடுக்கடுக்காக வந்தன. அவளுடைய வினாக்கணைகள்.

சாத்தன் மெல்ல நகைத்தான். "அதில் என்ன ஐயம் இருக்க முடியும்? தாங்கள் இந்தப் பாண்டிய நாட்டின் இளவரசிதான்!"

"அப்படியானால் என் ஆணையையும் கேட்டு அதன்படி நடப்பீர்களா?"

அவள் என்ன ஆணையிடப் போகிறாளோ என்று ஒரு கணம் தயக்கம் ஏற்பட்டாலும் தன் கடமையை அவன் ஏற்கத் தயங்கவில்லை.

"கட்டாயம் அப்படித்தான் செய்வேன் என்ன ஆணையிடப் போகிறீர்கள்?"

"நீங்கள் மதுரையைவிட்டுப் போகக் கூடாது. மீண்டும் உறையூருக்குச் செல்லும்படி மன்னர் ஏவினால் மறுக்க வேண்டும். மதுரையில் என்ன வேலை வேண்டுமானாலும் கொடுங்கள் செய்கிறேன். ஆனால் வெளியூருக்கு அனுப்பாதீர்கள் என்று மன்னரிடம் அழுத்திக் கூறவேண்டும். இதுதான் என் ஆணை." என்று மிடுக்குடன் மொழிந்தாள் அவள்.

சாத்தன் இப்பொழுது உரக்கச் சிரித்தான். "இளவரசி தங்கள், ஆணையை ஏற்பது என் கடமை! ஆனால் அந்த ஆணை மன்னருடைய ஆணைக்கு முரண்பட்டதாக இருந்தால் நான் மன்னருடைய ஆணைப்படிதான் நடக்க வேண்டும். ஏனென்றால் என் உயிரும், உடலும், உரிமையும் எல்லாமே மன்னருக்கு உரியவை" என்று உறுதியோடு உரைத்தான்.

"இப்பொழுது நீங்கள் குறிப்பிட்ட எல்லாமே எனக்குச் சொந்தம் என்று முன்பொருநாள் கூறியதாக எனக்கு நினைவு" என்று அவள் மெல்லிய குரலில் சோகத்துடன் பேசினாள்.

"சொன்னேன்! உண்மைதான். ஆனால் அது அரசரின் அனுமதி இருந்தால் தான். தேவந்தி! நான் பொய்சொல்ல விரும்பவில்லை. உன்னை நான் என் உயிரினும் மேலாகக் காதலிக்கிறேன். ஆனால் என் உயிர்த் தோழனான பாண்டியன் நெடுஞ்சடையன் தடை விதித்தால் அந்தக் காதலைத் துறந்து விடுவேன்" என்றான் அவன். "நானும் அப்படியே! இன்றுபோல் என்றும் இருப்பேன். வேறொருவன் என் கழுத்தில் மாலை சூடமாட்டான்" என்றாள் அவள்.

6. அன்னையும் மகளும்

பாண்டிய மன்னர்களின் தலைநகரமாக விளங்கிய மதுரையம்பதியின் தென்மேற்குத் திசையில் ஒருநாள் பயணத் தொலைவில் இருந்த கரவந்தபுரத்தில் பிறந்து வளர்ந்தவன் சாத்தஞ் சாத்தன். ஆனால் பத்து வயதிலேயே மதுரையில் வாழ்ந்து கொண்டிருந்த சேனாதிபதியான அண்ணன் சாத்தன் கணபதியின் வீட்டிற்கு வந்து அவன் மகனைப்போல் வளர்ந்தவன். அந்த உரிமையினால் பாண்டியன் அரண்மனையிலும் பொதுவாகக் குடிமக்களுக்கு நுழைய அனுமதியில்லாத இடங்களிலும் ஓடியாடித் திரிந்து மகிழ்ந்தவன். அவனைவிட ஓரிரு வயது மூத்தவனான இளவரசன் நெடுஞ்சடையனுடன் பிள்ளைப்பருவம் முதலே நெருங்கிப் பழகி, நட்பு வளர்ந்து, இருவரும் உயிர்த் தோழர்களாகினர். சேனாதிபதியின் மேற்பார்வையில் ஒன்றாக வாள், வேல், மழு, வில் போன்ற படைக்கலப் பயிற்சியும், யானையேற்றம், குதிரையேற்றம், தேர் செலுத்துதல், மல்யுத்தம் போன்ற மற்ற பலவிதமான பயிற்சிகளும் இருவரும் கற்றனர். அவ்வாறே கல்வியறிவும் இலக்கிய இலக்கண அறிவும் புலவர் பூங்குன்றனாரிடம் இருவரும் ஒன்றாகக் கற்றனர். "தேவி என்று நெடுஞ்சடையனும், சாத்தனும் அழைத்துக் கொண்டிருந்த தேவந்தியும் அவர்களைவிட மிகவும் இளையவள் ஆயினும் எப்பொழுதும் அவர்களுடனேயே காணப்படுவாள். அவள் பிடிவாதம் பிடித்து முரண்டு செய்யும் நேரங்களில் நெடுஞ்சடையனைவிட அதிக அன்புடனும் அக்கறையுடனும் அவளைப் பார்த்துக் கொள்வான் சாத்தன். புலவரிடம் கற்கும் பாடங்கள் மிகவும் எளிமையாக அவளுக்கு விளங்கும் வண்ணம் பொறுமையுடன் எடுத்துரைப்பான். மேலும் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியக் கதைகளையும், நாடோடிக் கதைகளையும் சொல்லி அவளை மகிழ்விப்பான்.

இளவரசன், இளவரசி ஆகிய இருவரும் சேனாதிபதியின் இளவலுடன் நட்பாடி, மிகவும் நெருங்கிப் பழகுவதை மன்னன் பராங்குச மாறவர்மனோ மகாராணி பூசுந்தரியோ தவறாகக் கருதவில்லை. சாத்தஞ் சாத்தனின் தமையனான சாத்தன் கணபதி பாண்டிய மன்னனின் படைத் தலைவனாகப் பணியாற்றிப் படிப்படியாக உயர்ந்து சாமந்த நாயகனாகவும், இறுதியில் சேனாதிபதியாகவும் ஆனவர். பாண்டியனுக்காக உயிரையும்

பெரிதாகக் கருதாமல் முன்னணியில் போர் புரிந்து பல வெற்றிகளைக் குவித்தவர். கொங்கு நாட்டை வென்று மதுரைக்குத் திறைசெலுத்தும் சிற்றரசாக மாற்றிய பெரும்போர் சாத்தன் கணபதியின் திறமையினால்தான் வெற்றியடைந்தது என்பதை மன்னன் உணர்ந்திருந்தான். அவனுடைய இளவல் சாத்தஞ் சாத்தனும் எல்லோரையும் கவரும் பண்புகள் நிறைந்த இனிய சிறுவனாக இருந்தமையால் இளவரசனும் இளவரசியும் அவனோடு கொண்டிருந்த அன்புப் பிணைப்பை அரசனோ அரசியோ தடைசெய்யவில்லை.

சிறுவனும் சிறுமியும் ஆக இருந்த நாள்களில் நிலவிய உறவு, இளைஞனும் இளையோளும் ஆக வளர்ந்த பின்னரும் சற்றும் தொய்யாமல் மேலும் வலுப்பெற்றதைக்கண்ட பூசுந்தரி கவலை கொண்டாள். கங்க மன்னனின் மகளாகிய அவள் பாண்டிய வேந்தனின் மனைவியானதைப் போலவே தன் மகளும் ஓர் இளவரசனை மணந்து மகாராணியாக வாழவேண்டும் என்று விரும்பினாள். எனவே தேவந்திக்கும் சாத்தஞ்சாத்தனுக்கும் இடையே இருந்த அன்பும் நட்பும் காதலாக வளரவிடக்கூடாது என்று உறுதி பூண்டாள். தன் மகளைச் செல்லமாகக் கடிந்துகொண்டாள்.

"நீ இப்பொழுது சிறு குழந்தை அல்ல; பருவமடைந்த மங்கை. பாண்டிய நாட்டின் இளவரசி. என்றாவது ஒருநாள் வேறு ஒரு நாட்டின் மகாராணியாக வாழவேண்டியவள். அதற்கேற்ப நீ நடந்து கொள்ள வேண்டும். சாத்தஞ் சாத்தன் சேனாதிபதியின் தம்பி. எவ்வளவு நல்ல பண்புகள் நிறைந்த வீரனாக இருந்தாலும் அவன் அரசகுமாரன் அல்ல. அதனால் உன் தகுதிக்கும் பெருமைக்கும் தக்கவாறு நீ சற்று ஒதுங்கி வாழவேண்டும். அவனுடன் தனிமையில் உலவுவதும் பேசுவதும் தவறு" என்று அறிவுரை கூறினாள்.

தேவந்தி, அன்னையின் அறிவுரையை ஏற்று நடக்க முயற்சி செய்தாள். இளவரசன் நெடுஞ்சடையனுடன் சாத்தன் வனவிலங்குகளை வேட்டையாடச் சென்றிருந்ததால் சில நாள்கள் இளவரசி சாத்தனைச் சந்திக்காமல் இருந்தாள். ஒவ்வொரு நாள் முற்றுப்பெறும் பொழுதும் ஒரு வெற்றி பெற்றதைப் போலத் தோன்றியது அவளுக்கு. நான்கு நாள்கள்அவ்வாறு சென்றதும், சாத்தஞ் சாத்தனைக் காணாமல் இருக்க முடியும் என்ற தெம்பு ஏற்பட்டது. வேட்டைக்குச் சென்ற இளவரசனும் தோழர்களும் திரும்பிவந்தவுடன் தன் அண்ணன் வேட்டையாடும் பொழுது அவனுடைய குதிரையை ஒரு வன விலங்கு தாக்கியதாகவும்,

குதிரையிலிருந்து விழுந்து காயமடைந்த இளவரசனைக் காப்பாற்றியது சாத்தனின் சமயோசித புத்திதான் என்றும் அறிந்தாள் தேவந்தி. காயமடைந்த இளவரசனைக் காணச் சென்ற பொழுது கண் கலங்கினாள். அருகில் நின்றுகொண்டிருந்த சாத்தன் அவளுக்கு ஆறுதல் கூறினான். அப்பொழுதுதான் அவளுக்கு அந்த ஐயம் எழுந்தது. தான் செய்தி கேட்டவுடன் ஓடிவந்தது புண்பட்ட அண்ணனைக் காணவா அல்லது நான்கு நாள்களாகக் காணாமல் இருந்த சாத்தனைக் காணவா என்று. சாத்தனின் வார்த்தைகளில் கலந்து வந்த அன்பும் அரவணைப்பும் அவளுக்கு அவ்வளவு மகிழ்ச்சி அளித்தன.

அரண்மனை மருத்துவரைத் தவிர இளவரசனின் அறைக்குள் நுழையும் அனுமதி சாத்தனுக்கும் தேவந்திக்கும் மட்டுமே இருந்தது. இளவரசன் நலமடைந்து எழுந்து நடமாட சில நாள்கள் ஆயின. அந்த நாள்களில் சாத்தனும் தேவந்தியும் அன்புப்பெருக்காலும் பருவச் செருக்காலும் உந்தப்பட்டுக் காதலர்களாயினர். அதன் பின்னர் கொற்றவை கோயிலை ஒட்டியிருந்த அரண்மனைப் பூங்கா அவர்கள் நாள்தோறும் சந்திக்கும் அன்பரங்காக மாறியது.

"என் அன்னை நான் ஓர் அரசகுமாரனை மணந்து ஒரு நாட்டின் மகாராணியாக வாழவேண்டும் என்று விரும்புகிறார். தெரியுமா உங்களுக்கு?" ஒருநாள் மல்லிகைப் பந்தலின் அடியில் அமர்ந்துகொண்டு ஓர் ஆம்பல் பூவைத் தன் முகத்தில் மெதுவாகத் தடவிக் கொண்டு சாத்தனிடம் வினவினாள் அரசகுமாரி.

"தெரியாது. ஆனால் அது நியாயம்தானே. அரசிளங்குமரி அரசிளங் குமரனை மணந்து அரசியாக வாழவேண்டும் என்று தானே எந்த அன்னை மகாராணியும் விரும்ப முடியும்?" என்று ஒரு மறுக்கமுடியாத உண்மையை எடுத்துரைப்பதுபோல் உணர்ச்சியின்றி விடையிறுத்தான் பந்தலின் மறுபக்கத்தில் ஒரு தூணில் சாய்ந்து அமர்ந்திருந்த சாத்தஞ்சாத்தன்.

"அப்படியானால் நீங்கள், எந்த நாட்டைப் பிடித்து அந்த நாட்டிற்கு என்னை அரசி ஆக்கப் போகிறீர்கள்?" என்று நேரடியாகவே கேட்டாள் தேவந்தி.

"நான் உன்னை அரசியாக்கப் போகிறேன் என்று சொல்லவில்லையே! நாட்டின் அரசியாக்க என்னால் முடியாது. என் இல்லத்தின் அரசி ஆகலாம். என் உள்ளத்தின் மகாராணி ஆகலாம். அவ்வளவுதான்" என்றான் சாத்தன்.

"நீ விரும்பினால் நான் எந்த நாட்டையும் வென்று உன்னை அதன் அரசியாக்குவேன் என்று வீரமொழி பேசுவீர்கள் என்று எண்ணினேன் நான்" என்று அவன் தன் கற்பனையைக் கலைத்துவிட்டானே என்பதைச் சுட்டிக் காட்டினாள் தேவந்தி.

"வீரமொழி வீண்மொழி ஆகிவிடக் கூடாதே! நீ தலைமுறை தலைமுறையாகப் பாண்டியர் குலத்தில் பிறந்த அரசிளங்குமரி. நானும் பரம்பரை பரம்பரையாகச் சாத்தர் குடும்பத்தில் பிறந்த போர்வீரன். எங்கள் முன்னோர்களில் ஒருவரான பாவூர்ச் சாத்தனார், களப்பிரர்களை முறியடித்து, மதுரையில் பாண்டிய அரசை மீண்டும் நிறுவிய மன்னர் கடுங்கோனுக்குப் படைத்தலைவனாகவும் அமைச்சராகவும் இருந்தார் என்று கூறக் கேட்டிருக்கிறேன். அன்று முதலே அவருடைய வழித்தோன்றல்கள் பாண்டிய மன்னர்களின் படைத் தலைவர்களாகவும் அமைச்சர்களாகவும் பணியாற்றி வருகின்றனர். அந்த வழியில்தான் என் தமையன் சாத்தன் கணபதி இன்று சேனாதிபதியாக இருக்கிறார். நானும் அவருக்குக் கீழ் ஓர் அணியின் படைத் தலைவனாக இருக்கிறேன். நாங்கள் எல்லோருமே பாண்டிய அரசகுலத்தின் பற்றாளர்கள். நீ என்னோடு வாழ முடிவு செய்தால் ஒரு படைத்தலைவனின் இல்லத்தரசியாகத்தான் வாழமுடியும். நாட்டின் அரசியாக முடியாது" என்ற வரலாற்று உண்மையை விளக்கினான் சாத்தன்.

தேவந்தி கலகலவென்று நகைத்தாள். "யாருக்கு வேண்டும் அரண்மனை வாழ்க்கை? இப்பொழுதுகூட அரண்மனைக்குத் திரும்பாமல் நாம் இருவரும் உங்கள் குதிரையில் ஏறி வைகைக் கரை ஓரமாகவே சென்று மலைநாட்டிற்குப் போனால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்கிறேன் நான்" என்று தன் குவளைக் கண்களை மேற்கு நோக்கித் திருப்பிக்கொண்டு கடைக்கண்ணால் காதலனை நோக்கினாள் இளவரசி.

"அப்படி நாம் போனால் ஒரு படையே நம்மைத் துரத்திக்கொண்டு வரும். அரசருமாரியைக் கடத்திச் சென்றதற்காக என் தலையே போகும். ஆனால் ஒரு நாள் நாம் போவோம். அரசரிடம் அனுமதிபெற்று என் தேவியை நான் மாலை சூட்டி அழைத்துச் செல்வேன்! என் அண்ணன் கேட்டால் மன்னர் எதையும் மறுக்கமாட்டார்" என்று நம்பிக்கை மலர நவின்றான் சாத்தன்.

மன்னரிடம் தன் தம்பியின் மணம் பற்றிப் பேசும் வாய்ப்பு சேனாதிபதி சாத்தன் கணபதிக்கு எழவே இல்லை. ஏனென்றால் பாண்டிய வேந்தன் பராங்குச மாறவர்மன் தீடீரென்று காலமானான். மகன்

பராந்தகன் நெடுஞ்சடையன் முடிசூடினான். அவனுக்கு அரசியல் அனுபவம் ஏற்படும்வரை அறிவுரை வழங்கும் பொறுப்பை அன்னை மகாராணி பூசுந்தரி ஏற்றுக்கொண்டார். பாண்டிய மன்னன் காலஞ்சென்று, இளைஞனான பராந்தகன் நெடுஞ்சடையன் மதுரை அரியணையில் அமர்ந்தால் பாண்டியனுக்குத் திறைசெலுத்தும் சிற்றரசனாக ஒடுங்கிப்போன சோழன் தலை தூக்க முயற்சி செய்வான் என்று அமைச்சர் மாறன் காரியும், அன்னை மகாராணியும் எண்ணினர். எனவே விரைவிலேயே ஒரு படையை உறையூருக்கு அனுப்பிச் சோழ நாட்டில் பாண்டியருக்கு உரிமையான பகுதியில் குழப்பம் விளையாமல் காக்க வேண்டும் என்று அத்தகைய ஒரு படை உறையூரிலேயே நிரந்தரமாக இருக்கவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. இளைஞன் ஆயினும், வீரனும் அறிவாளியுமான சாத்தஞ் சாத்தனே அந்தப் பொறுப்பை ஏற்பதற்குத் தகுதிவாய்ந்தவன் என்று அன்னை மகாராணி தன் மகனிடம் உறுதியாகக் கூறினாள். "உன் மீது அசைக்க முடியாத பற்றுள்ள நண்பன் அவன். நம்பிக்கைக்கு முற்றிலும் பாத்திரமான ஒருவனையே இந்தப் பணிக்கு அனுப்ப முடியும்" என்று வாதாடினாள். சாத்தஞ் சாத்தன் தன் அருகில் இருப்பதே நல்லது என்று நெடுஞ்சடையன் நினைத்தாலும் அன்னையின் கருத்திலும் உண்மையுள்ளது என்பதை உணர்ந்ததால் அதற்கு இணங்கினான்.

"சாத்தா! உண்மையில் உன்னைப் பிரிய எனக்கு மனம் இல்லை. அரசியல் அலுவல்களில் பல சிக்கல்கள் வரலாம். அமைச்சரும் அன்னையும் சேனாதிபதியும் இருந்தாலும் எனக்கு மனம் விட்டுப் பேச உன்னைப்போல் ஓர் உற்றதோழன் இருப்பது இன்றியமையாதது. ஆனால் சோழ நாட்டில் குழப்பம் விளையாமல் காப்பது மிகவும் முக்கியம். அதற்கு உன்னைவிடத் தகுதியுள்ளவர்கள் யாரும் இல்லை என்று அன்னை மகாராணி கருதுவதாலும் நானும் அவ்வாறு நம்புவதாலும் உன்னை உறையூருக்கு அனுப்ப முடிவு செய்துவிட்டேன். சேனாதிபதியிடமும் சொல்லிவிட்டேன். மூவாயிரம் வீரர்களைக் கொண்ட படையுடன் நீ நாளையே புறப்படவேண்டும்." என்று ஆணையிட்டான் பாண்டியன் நெடுஞ்சடையன்.

உறையூருக்குப் புறப்படும்முன் அன்னை மகாராணியைக் காணச் சென்ற சாத்தஞ் சாத்தனிடம் அவள் வேறு ஒரு பொறுப்பையும் கொடுத்தாள். "சோழநாட்டிலிருந்து எந்தத் தொல்லையும் வராமல் இருப்பதற்கு வேறொரு வழியும் தேடவேண்டும். சோழன் மகள் இளவெயினி மணப்பருவம்

எய்திவிட்டாள் என்றும் நம் நெடுஞ்சடையனுக்கு மணம் முடிக்கத் தக்கவள் என்றும் தெரிய வந்துள்ளது. நீ உறையூர்ப் படையை நடத்துவதோடு நிற்காமல் சோழகுடும்பத்தோடு தொடர்புகொண்டு அந்தத் திருமணத்திற்கான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். அதையும் மனத்தில் வைத்துத்தான் என் மகனின் உயிர்த்தோழனான உன்னை இந்த வேலைக்குத் தேர்ந்தெடுத்தேன்" என்றாள் அவள்.

"தங்கள் நம்பிக்கை வீண்போகாமல் இந்த இரண்டு பொறுப்புகளையும் நிறை வேற்றுவேன் மகாராணி" என்று உறுதி கூறினான் சாத்தன்.

அன்னை மகாராணி தன்னை மதுரையிலிருந்து வெகுதொலைவிலுள்ள உறையூருக்கு அனுப்புவது தேவந்தியிடமிருந்து விலகி இருப்பதற்காகவே என்பதைச் சாத்தன் அறிந்திருந்தான். பாண்டியனுக்குச் சோழன் மகளை மணம் முடிக்கும் பணியைத் தன்னிடம் கொடுத்ததும் அரச குலத்தினர் குலத்திலேயே பெண் எடுக்கவும் கொடுக்கவும் வேண்டும் என்ற கருத்தை அவன் மனத்தில் அழுத்தமாகப் பதிப்பதற்காக இருக்கலாம் என்று எண்ணினான் அவன்.

அன்று மாலையில் மல்லிகைப்பூப்பந்தலின் கீழ் மன்னனின் தங்கையைச் சந்தித்தபொழுது தான் இனி வரப்போகும் மாலைப்பொழுதுகள் எப்படி இருக்கும் என்ற எண்ணம் அவன் மனத்தை வாட்டியது. எவ்வளவு அலுவல்கள் இருப்பினும் மாலையில் அந்த மங்கை நல்லாளுடன் உரையாடிமகிழும் இன்பத்தை அவன் இழப்பதில்லை. அவளும் ஒருநாள் கூட அங்கு வரத் தவறியதில்லை. சேனாதிபதியுடன் முக்கிய வேலையாக வெளியூர் சென்று திரும்பி வந்த பொழுது ஒரு நாள் பொழுது சாய்ந்து இருள் படரத்தொடங்கியிருந்தது. இளவரசி திரும்பிப் போயிருப்பாள் என்று முடிவு செய்தாலும் சற்று நேரம் பூங்காவில் உலவிச் செல்லலாம் என்று எண்ணி அங்குச் சென்றபொழுது அவள் அவனுக்காகக் காத்திருந்ததைக் கண்டு அவன் அவளைக் கடிந்து கொண்டான்.

"இளவரசியாக இருந்தாலும் இருட்டிய பிறகு இவ்வளவு நேரம் இங்கே இருந்தது தவறு" என்றான் அவன்.

"நான் அதைப்பற்றி நினைக்கவே இல்லை! உங்களைச் சந்திப்பதற்காக வந்தேன். சந்திக்காமல் போக மனம் வரவில்லை. அப்படிப் போனால் இரவு முழுவதும் அதைப் பற்றியே எண்ணிக்

கொண்டிருப்பேன். அதனால்தான் காத்திருந்தேன்" என்றாள் அவள். அவ்வாறு காத்திருந்த காதலி இனிமேல் மாலைப் பொழுதுகளில் என்ன செய்யப் போகிறாளோ என்று ஏங்கினான் சாத்தன்.

அவன் உறையூருக்குப் போகிறான் என்பதை இளவரசியும் அறிந்திருந்தாள். அவளைக் கண்டவுடன் கதிரவனைக் கண்ட கமலமலர்ப்போல் மலரும் அவளுடைய முகம் அன்று வாடியிருந்தது. "என் அன்னையின் சூழ்ச்சி வெற்றி பெற்றுவிட்டது. எவருக்கும் எவ்விதமான ஐயமும் எழாதவிதத்தில் உங்களை மதுரையிலிருந்து விரட்டி நம்மைப் பிரித்து வைத்துவிட்டார் மகாராணி!" என்று தன் மன எரிச்சலை வெளியிட்டாள் அவள்.

"அப்படித்தான் நானும் நினைக்கிறேன். ஆனால் அரசர் உண்மையிலேயே அன்னையின் அறிவுரை நாட்டின் நன்மைக்காகச் செய்யப்பட்டது என்று நம்புகிறார். அவர் கட்டளையை மீற என்னால் முடியாது. அது மட்டுமன்று; மகாராணி வேறு ஒரு வேலையும் எனக்கு அளித்திருக்கிறார்."

"என்ன வேலை அது?"

"சோழமன்னன் மகள் இளவெயினியைப் பாண்டிய வேந்தன் நெடுஞ்சடையனுக்கு மணம் பேசி முடிக்கவேண்டும். ஒருவேளை அந்த வேலையை நான் செய்து முடித்தால் மீண்டும் மதுரைக்கு வரமுடியும் என்று நம்புகிறேன்" என்றான் அவன்.

இளவரசி பெருமூச்சுவிட்டாள். "அப்படி நடந்தால் நல்லதே. ஆனால் என் அன்னை அவ்வளவு எளிதில் தன் மனத்தை மாற்றிக்கொள்பவர் அல்ல. வேறு வேலை எதையாவது கொடுத்து மறுபடியும் வெளியில் அனுப்புவார். அதே நேரத்தில் நான் அவருடைய மகள். நானும் அதே குணம் உள்ளவள். என் மனமும் மாறாமல் உறுதியாக நிற்கும் தன்மை உள்ளது. அந்த மனதிலிருந்து என் சாத்தனை யாராலும் அகற்ற முடியாது" என்று வஞ்சினம் கூறினாள் அவள்.

"தேவி! என் மனதில் நீதான் என்றும் நிற்பாய் எத்தனை ஆண்டுகள் ஆயினும் அங்கு வேறு யாரும் இடம் பிடிக்க முடியாது. பொறுத்திருப்போம். காலம் மாறும்" என்று நம்பிக்கையுடன் அவள் மனதைத் தேற்றி விடைபெற்றுச் சென்றான் சாத்தன்.

ஏற்றபொறுப்பை நிறைவேற்றும் முனைப்பும் திறமையும் இயற்கையிலேயே அமைந்த சாத்தன், அன்னை மகாராணி கொடுத்த பணியை வெற்றிகரமாகச் செய்து முடித்தான். மூவேந்தர்களில் ஒருவன் என்ற பெருமை பெற்றிருந்தாலும், கரிகால் பெருவளத்தான் போன்ற பேரரசர்கள் ஆண்ட சோழர் பரம்பரை வலிகுன்றிச் சிற்றரசாகச் சுருங்கியிருந்த காலம் அது. சோறுடைத்து என்று புகழ்பெற்ற சோழவளநாடு பல்லவர் கீழ் வட பகுதியும் பாண்டியர் கீழ் தென்பகுதியுமாகச் சிதறிக் கிடந்தது. எனவே தன் மகளைப் பாண்டிய மன்னனுக்கு மணம் செய்து கொடுப்பதில் சோழன் பெருமகிழ்ச்சியே கொண்டான். உறையூர் சென்று ஓராண்டுகாலம் முடிவதற்கு முன்னரே சாத்தஞ் சாத்தன் அந்த வேலையைச் செய்து முடித்தான்.

நெடுஞ்சடையன் இளவெயினியை மாலை சூட்டிய மணவிழா மதுரையில் சிறப்பாக நடந்தேறியது. அரண்மனையில் சாத்தனும் தேவந்தியும் ஒருவரை ஒருவர் கண்டாலும் விழாக் கோலம் பூண்ட மதுரைமாநகரில் அவர்கள் தனிமையில் சந்திக்கும் வாய்ப்பு எழவில்லை. உறையூரிலிருந்து அவனை மதுரைக்கு அழைப்பதைப் பற்றி மன்னனோ, அன்னை மகாராணியோ ஒன்றும் பேசவும் இல்லை. எப்படியும் விரைவிலேயே உறையூர் வாழ்வு முடிவுபெறும் என்ற நம்பிக்கையுடன் காத்திருந்தான் சாத்தஞ்சாத்தன்.

சோழநாட்டிலிருந்து பாண்டியனுக்கு எதிராக எதுவும் நடக்காது என்ற நிலைமை இளவெயினியின் திருமணத்தால் ஏற்பட்டது. எனவே உறையூரில் ஒரு தனிப்படையை நிறுவவேண்டிய தேவையும் இல்லை என்று எண்ணினான் சாத்தன். சில மாதங்கள் சென்றபின் உறையூருக்கு வந்த ஒற்றர்படைத் தலைவன் இளந்தத்தன் வேறொரு செய்தியை அறிவித்தான். பல்லவ நாட்டில் படைதிரட்டுவதாகவும் அது பாண்டியனுக்கு எதிராகத்தான் இருக்கமுடியும் என்றும் அவன் கூறினான். அதன் பயனாக உறையூரிலிருந்த படை இன்னும் சற்றுப் பெரிதாக ஆகும் வாய்ப்பு உள்ளது என்றும் ஒற்றர் படைத்தலைவன் தெரிவித்தான். அதுபோலவே ஆயிரம் வீரர்கள் மதுரையிலிருந்து வந்து சேர்ந்து உறையூர்ப் படையை மேலும் பலப்படுத்தினர்.

இப்பொழுது பல்லவர் படையையும் தோற்கடித்து விரட்டிவிட்டபடியால் இனியும் உறையூரில் ஒரு படையை நிறுத்திவைக்கவேண்டிய தேவை இருக்காது. அவ்வாறு நிறுத்தி வைக்க மன்னர் விரும்பினாலும் சாத்தனைப் போன்ற தலை சிறந்த வீரனுடைய தலைமை அந்தப் படைக்குத் தேவைப்படாது என்று

ஓடியது சாத்தனின் சிந்தனை. ஆகவே இளவரசி தேவந்தி தனக்காகவே காத்திருப்பது வீண்போகாது என்ற ஓர் ஆசையும் அவன் நெஞ்சில் முளைவிட்டது. அவள் கூறியது வெறும் பேச்சல்ல, உண்மையிலேயே வேறுயாருக்கும் அவள் மனத்தில் இடம் இல்லை என்பதை அவன் உணர்ந்தான். சேர நாட்டிலிருந்தும் வேணாட்டிலிருந்தும் இளவரசர்கள் அவளை மணம் பேசச் செய்த முயற்சிகள் அவளுடைய மறுப்பால் கைவிடப்பட்டன என்பதும் அவனுக்குத் தெரியும். எனவே தனக்கு ஒருவாய்ப்புக் கிடைக்குமானால் பாண்டியன் நெடுஞ்சடையனிடமே அதைப் பற்றிப் பேச வேண்டும் என்று முடிவு செய்தான்.

7. உறையூருக்குப் பின் தகடூர்

சேனாதிபதியாகிய தமையன் சாத்தன் கணபதியுடன் அரண்மனைக்கு வரும்படி அரசனிடமிருந்து ஆணை வந்திருக்கிறது. புதிய படையெடுப்பு எங்கிருந்தாவது வருகிறதோ என்ற ஐயம் எழுந்தது சாத்தஞ்சாத்தனுக்கு. ஏனென்றால் அப்பொழுது தமிழகத்திலும், பொதுவாகத் தென்னாடு முழுவதிலுமே எங்காவது போர் நடந்து கொண்டுதான் இருந்தது.

"ஒளிறுவாள் அருஞ்சமமுருக்கிக் களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" என்ற புறநானூற்று அடிகள் அன்றைய போர் வெறிக்கு எடுத்துக்காட்டாகும். "தோன்றுவன் மாதோ போர்களத்தானே" என்று பெருமையாகத் தன் மகனின் வீரவாழ்க்கையைப் பறைசாற்றும் தாயின் மனப்பாங்கு அதுவே ஓர் ஆண்மகனுக்கு இயல்பான வாழ்க்கைப் போக்கு என் பதை விளக்கும் மன்னர்கள்" இடம் சிறிதென்னும் ஊக்கம் துரப்ப", தம் நாட்டை விரிவுபடுத்துவதற்காக அயல் நாட்டின் மீது படையெடுத்தலும் அதை எதிர்த்து அந்த நாட்டு மன்னன் போர் புரிவதும் அன்றாட நிகழ்ச்சியாக விளங்கியது. இவ்வாறு இடையறாத போர்களால் நாட்டின் அமைதி குலைவதையும் ஆக்கம் குறைவதையும் மன்னர்கள் பொருட்படுத்தவில்லை. வெற்றிபெற்றால் வரும் புகழும் தோற்ற நாட்டிலிருந்து கிடைக்கும் செல்வமும் அவர்களை அதிகமாகக் கவர்ந்தன.

சேனாதிபதியும், சாத்தஞ் சாத்தனும் மன்னனைக் காண அரண்மனைக்குச் சென்றபொழுது அமைச்சர் மாறன் காரியும் அங்கு இருந்தார். அவர்களை வரவேற்ற பாண்டியன் நெடுஞ்சடையன் "வாருங்கள் நானும் அமைச்சரும் சிலகாரியங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம் உங்களிடமும் பேசியபின் முடிவெடுக்கலாம் என்று நினைத்தேன்" என்றான்.

அமைச்சர் மாறன் காரி விளக்கமாகப் பேசினார். "கொங்கு நாட்டரசரைப் போரில் வென்று ஆண்டுதோறும் திறைசெலுத்தும்படி ஏற்பாடுசெய்திருந்தார் மறைந்த மன்னர் பராங்குச மாறவர்மர். இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன் கொங்குநாட்டு இளவரசர் மதுரையில் வந்து ஈராண்டு காலம் போர்ப் பயிற்சியும் உயர்கல்வியும் பெற்றார். திரும்பிச் சென்று முடிசூட்டிக்கொண்டபின்

அவருடைய தந்தை செலுத்திக் கொண்டிருந்த திறையை நிறுத்திவிட்டார். ஓராண்டுக்குமேல் இங்கு வாழ்ந்து அன்று நம் இளவரசராக இருந்த இன்றைய பாண்டிய வேந்தருடன் நெருங்கிய நண்பராக மாறிவிட்டதால் அவரிடம் திறை செலுத்தும்படி வற்புறுத்தவோ அச்சுறுத்தவோ நம் மன்னருக்கு மனம் இடம்கொடுக்கவில்லை ஆனால் இப்பொழுது நிலைமை மாறிவிட்டது. நம் நாட்டின்மீது படையெடுத்து வந்து பல்லவர் படையுடன் சேர்ந்து கொண்டதால் கொங்கு நாட்டரசர் நம்மன்னரின் நண்பர் அல்லர் என்பதையும், மாறாக நம் பகைவர் என்பதையும் காட்டிவிட்டார். ஆகவே நாம் இனியும் தயங்கவேண்டிய தேவை இல்லை. அவர் திறை செலுத்தும்படி செய்தே ஆகவேண்டும்".

"தகடூருக்குப் படையெடுத்துச் செல்லலாம் என்கிறீர்களா?" சேனாதிபதி வினவினார்.

பாண்டிய மன்னர் அதற்கு விடை அளித்தார்.

"உடனே படையெடுத்துச் செல்வது சரியல்ல என்று நினைக்கிறேன். முதலில் ஒரு தூதனை அனுப்புவோம். மூன்றாண்டுகளாகத் திறைசெலுத்தவில்லை என்பதைச் சுட்டிக் காட்டி, காரணம் கேட்போம். அதன்பின் திறை செலுத்துவதற்கான ஆணையை அனுப்புவோம். அந்த ஆணையை நிறைவேற்றத் தவறினால் படையெடுப்போம். அதியன் நமக்குத் துரோகம் செய்தாலும், நாம் முறைப்படியே நடந்துகொள்ள வேண்டும் என்று எண்ணுகிறேன். தன் தவறை உணர்ந்து, நம் வலிமையையும் அனுபவத்தால் அறிந்து, திறைசெலுத்தும் சிற்றரசனாக அவன் வாழ முன்வந்தால் அவனை மன்னித்து, ஏற்றுக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன்" என்று வெற்றிபெற்றாலும் பெருந்தன்மையுடன் நடந்துகொள்ள வேண்டும் என மன்னர் கூறியதை எல்லோரும் ஏற்றுக்கொண்டனர்.

மன்னர் மேலும் தொடர்ந்து பேசினார். "யாரைத் தூதனாக அனுப்பலாம் என்று பெரிதாக யோசனை செய்யவேண்டியதில்லை. அதியனை நன்றாக அறிந்த, என்னைப் போலவே அவனிடம் ஓராண்டு காலம் நெருங்கிப் பழகி நட்புக் கொண்டொழுகிய சாத்தஞ் சாத்தனையே தகடூருக்கு அனுப்பலாம் என்று நினைக்கிறேன்" என்று அறிவித்தார்.

அமைச்சர் மாறன் காரி அதனை வரவேற்றார். "ஆம் சாத்தஞ் சாத்தன்தான் அதற்கு உகந்த ஆள். கொங்கு மன்னனுடன் மனம் திறந்து பேசலாம். நமக்கு எதிரியாக மாற்றுவதற்குப் பல்லவன்

அதியனிடம் காட்டிய தூண்டுகோல் என்ன என்று தெரிந்துகொள்ள வேண்டும். அது மட்டுமல்ல ஒருவேளை தூதனிடம் கடுமையாக அதியன் நடந்துகொண்டால் வாய் வளத்தாலோ அல்லது வாள் பலத்தாலோ அங்கிருந்து தப்பி வரும் ஆற்றலும் வேண்டும். அது சாத்தனால் முடியும்" என்றார் அவர்.

சேனாதிபதி சாத்தன் கணபதி இதுதான் தன் தம்பியை உறையூரிலிருந்து மதுரைக்குக் கொண்டு வருவதைப்பற்றிப் பேசுவதற்கான தருணம் என்று எண்ணினார்.

"ஆமாம். அவன் இரண்டாண்டுகள் உறையூரில் வாழ்ந்து விட்டான். இனிமேல் அவன் வேறு பணிகள் செய்யட்டும் உறையூருக்கு வேறு யாரையாவது அனுப்பலாம்" என்றார். "உண்மைதான். அமைச்சரின் தம்பியான மாறன் எயினனை உறையூருக்கு அனுப்பலாம். இன்னும் சில ஆண்டுகளுக்குப் போர் எதுவும் அங்கு மூள்வதற்கு வாய்ப்பில்லை. அமைதி நாள்களில் சோழநாட்டு நிகழ்ச்சிகளைச் கண்காணிக்க அனுபவம் வாய்ந்த எயினன் நல்ல ஆள்" என்றார் மன்னர்.

"சாத்தா! உனக்கு உறையூருக்கே போக வேண்டும் என்ற ஆர்வம் ஒன்றும் இல்லையே?" என்று புன்னகையுடன் வினவினார் மன்னர்.

"இல்லை அரசே! மன்னர் விருப்பம் போல் எங்கு வேண்டுமானாலும் இருப்பதுதான் என் விருப்பம்" என்று தன் உறையூர் வாழ்வு முடிந்து விட்டதே என்ற நிம்மதியுடன் பேசினான் சாத்தன்.

"நீ புறப்படுவதற்குமுன் இளந்தத்தனிடம் கலந்து பேசி, தகடூரைப் பற்றியும் கொங்கு நாட்டைப் பற்றியும் அங்கு நிலவும் அரசியல் நிலவரங்களைப் பற்றியும் தெரிந்துகொண்டு போவது நல்லது. தேவையானால் உதவிக்குச் சில வீரர்களையும் அழைத்துக்கொண்டு போகலாம்." என்று அறிவுரை கூறினார் அமைச்சர்.

"அப்படியே செய்கிறேன்" என்று ஒப்புதல் அளித்தான் சாத்தன். அவ்வாறே இளந்தத்தனைக் கண்டு பேசினான்.

"கொங்கு நாட்டு மன்னர் திடீரென்று மனம் மாறினாரா அல்லது நம் மீது பல நாள்களாகவே பகைமை உணர்ச்சி கொண்டிருந்தாரா என்பது தெரியவில்லை. பொதுவாகக் கொங்கு நாட்டில் வாழும் மக்கள் பாண்டிநாட்டு மக்களிடம் நட்பும்

நல்லிணக்கமும் உள்ளவர்களாகவே இருந்தனர். இப்பொழுது பல்லவருடன் சேர்ந்து பாண்டியர் படையை எதிர்த்துப் போர்செய்ததால் மன்னரைப் போலவே மக்களுக்கும் பகைமை ஏற்பட்டிருக்கலாம். நம்முடைய உலகணன் அங்கே ஒரு கூலவணிகனான மாலவன் என்பவருடைய கடையில் வேலைசெய்கிறான். அவன் நம்முடைய ஒற்றன் என்பது யாருக்கும் தெரியாது. நீங்கள் அங்குள்ள சத்திரத்தில் தங்கலாம். ஏதேனும் பொருளுக்கு விலை கேட்பதுபோல் அந்தக் கடைக்குச் சென்றால் அவன் உங்களை அடையாளம் கண்டுகொள்வான். உங்களை அவன் நன்கு அறிவான். நீங்கள் அவனிடம் ஒன்றும் பேசவேண்டாம். அவனே சத்திரத்திற்கு வந்து உங்களைச் சந்திப்பான். ஆனால் யாருக்கும் எந்த ஐயமும் எழாதவாறு நீங்கள் நடந்துகொள்ள வேண்டும். அவன் நம் ஒற்றன் என்பது அங்குள்ளவர்களுக்குத் தெரியவந்தால் அவனுக்கு ஆபத்து ஏற்படும்" என்றான் ஒற்றர் படைத் தலைவன். எல்லோரும் அறிய பாண்டிய வேந்தன் தூதனாகக் கொங்குவேந்தனைக் காணச் செல்லும்பொழுது, மறைந்து வாழும் ஒற்றனை அடிக்கடி காணாமல் இருப்பதே நல்லது என்று சாத்தனும் எண்ணினான்.

தேவந்தி தன் காதலன் இனி உறையூருக்குப் போகமாட்டான் என்றறிந்து மிக்க மகிழ்ச்சி யடைந்தாள். தகடூருக்குச் சென்று ஒருவாரத்தில் திரும்பி வந்தபின் அவன் மதுரையிலே வசிக்கப் போகிறான் இனி என்றும் காணவும் பேசவும் முடியும் என்ற களிப்பு மேலிட்டது அவளுக்கு.

"கொங்கு மன்னரால் உங்களுக்குத் தீங்கு எதுவும் ஏற்படாது அல்லவா?" என்று சாத்தனிடம் சற்றுக் கவலையுடன் வினவினாள்.

"கொங்கு மன்னராக முடிசூடுவதற்குமுன்னால் இளவரசராக இருந்த நாள்களில் நாங்கள் நண்பர்களாக இருந்தோம் என்பது உனக்கே தெரியுமே!" என்றான் சாத்தன். "அது எனக்குத் தெரியும் என்னிடமும் அதியன் அளவுக்கு அதிகமாக நட்புக்கொள்ள முயன்றார். அது எனக்குப் பிடிக்கவில்லை என்பதை நான் தெரிவித்தபின் என்னிடம் சற்று விலகியே இருந்தார். நீங்களும், அண்ணனும் அவரை நண்பராக எண்ணினாலும் அன்றே எனக்கு அவரிடம் நட்புத்தோன்ற வில்லை. அவர் பல்லவனுடன் சேர்ந்து நம்மை எதிர்த்தார் என்று அறிந்தபோது அண்ணன் பெரிதும் வியப்படைந்தாலும் எனக்கு அது அவ்வளவு அதிர்ச்சியை அளிக்கவில்லை. அவர் நம்பத் தக்கவர் அல்லர் என்று நான் எப்பொழுதும் நினைத்தேன். அதனால்தான் இப்பொழுதும்

கேட்கிறேன் அவர் உங்களுக்குத் தீங்கு செய்ய மாட்டாரே என்று" மேலும் வலியுறுத்தினாள் இளவரசி.

"நான் பாண்டிய மன்னரின் தூதனாகத்தானே தகடூருக்குச் செல்கிறேன். என்னை அவர் என்ன செய்யமுடியும்? தூதன் மன்னரின் சார்பாகச் செய்தி தெரிவிக்கத்தானே போகிறான். அவனுக்கு எந்த மன்னரும் தீங்கு செய்ய மாட்டார்கள். ஏனென்றால் அவ்வாறு செய்தால் அது தூதனை அனுப்பிய மன்னருக்குச் செய்யும் அவமானம் என்று கருதப்படும். அதன் விளைவு இரு நாடுகளுக்குள் போராகும். அதியனுக்குப் பாண்டிய மன்னரிடம் பகை இருந்தாலும் பாண்டியரின் படையுடன் மோதும் அளவிற்கு வலிமை இருக்காது. ஆகவே அதைப்பற்றி அஞ்சவே தேவை இல்லை" என்று தைரியமாகப் பேசினான் சாத்தன்.

"வேலையை வெற்றிகரமாக நிறைவேற்றிவிட்டு விரைவில் திரும்பி வாருங்கள்! இரண்டாண்டுகளாகப் பிரிந்திருந்து இப்பொழுதுதான் சந்திக்கிறோம். இனி மேலாவது தடையொன்றும் இருக்காது என்று நம்புவோம்" என்று இன்பமயமான எதிர்காலம் கண்முன் காட்சியளிப்பதுபோல் தொலைதூரத்தில் கண்களைச் செலுத்திக்கொண்டு பேசினாள் இளவரசி. அதே எதிர்காலத்தை மனத்தில் பதித்துக்கொண்டு புறப்பட்டான் சாத்தன்.

தேவையானால் உதவிக்குச் சிலவீரர்களையும் அழைத்துக்கொண்டு செல்லும்படி அமைச்சர் அறிவுரை கூறினாலும் தனியனாகச் செல்வதே நல்லது என்று எண்ணினான் சாத்தன். மன்னர் கொடுத்த ஓலையை இடுப்பில் பத்திரமாகச் செருகிக்கொண்டு குதிரைமேல் ஏறிப் பயணம் தொடங்கினான். வீரர்களை உடன் அழைத்துச் சென்றால் அவனைப் போல் விரைவாகப் பயணம் செய்யமாட்டார்கள். அவர்களுடைய வசதிகளையும் உணவு முதலிய தேவைகளையும் அவன் கவனிக்கவேண்டும். சுதந்திரமாகத் தன் விருப்பம்போல் பயணம் செய்வதையே அவன் விரும்பினான்.

மதுரையிலிருந்து வடக்கு நோக்கிப் புறப்பட்டு, வைகையாற்றைக் கடந்து, காவிரியாற்றின் தென்கரையில் உறையூரில் தங்கி ஆற்றின் கரை ஓரமாகவே வடமேற்குத் திசையில் சென்று, வெள்ளூரில் காவிரி ஆற்றைக் கடந்து, நான்காவது நாளில் தகடூரை அடைந்தான். அரசு விருந்தினர் தங்குவதற்காக அமைக்கப்பட்ட மாளிகையில் பாண்டிய மன்னரின் தூதன் என்ற தகுதியுடன் தங்கினான். பொழுது சாயும் நேரம் நெருங்கிவிட்டபடியால் அடுத்த நாள் கொங்கு வேந்தனைக்காண முடிவு செய்தான்.

மாலை மயங்கிய பின் தகடூர் நகரைச் சுற்றிப் பார்த்தான். இளந்தத்தன் குறிப்பிட்ட மாலனின் கூலக்கடையை எளிதில் கண்டுபிடித்து அந்தக் கடைக்குள் நுழைந்து சில தானிய வகைகளின் விலையை விசாரித்தான். கடையில் கணக்குகளைச் சரிபார்த்துக்கொண்டிருந்த உலகணன்சாத்தஞ்சாத்தனைஅடையாளம் கண்டுகொண்டாலும் எதுவும் பேசவில்லை. சாத்தனும் உலகணனைக் கண்ணால் கண்டு ஒருமுறை சிமிட்டியதைத் தவிர வாயால் ஒன்றும் பேசவில்லை.

இரவு உணவு உண்டு முடிந்து சற்று நேரத்தில் தங்கியிருந்த மாளிகைக்கு வெளியில் வந்து உலவுவதுபோல் அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தான் சாத்தன். அவன் எதிர்பார்த்தது போலவே சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே நடந்து வந்த ஒரு மனிதன் "என் பின்னால் வாருங்கள்" என்று மெல்லப் பேசி விரைவாக நடந்து சென்றான். சற்று தூரம் நடந்ததும் ஒரு குமரன் கோயில் இருந்தது. அதன் முன்புறம் இருந்த படிக்கட்டில் அமர்ந்தான் அந்த மனிதன். அவன் உலகணன் என்பதை நன்குணர்ந்த சாத்தன் அவன் அருகில் சென்று அந்தப் படிக்கட்டில் அமர்ந்தான். கோயில் வாயிலுக்குச் செல்வதற்காக அமைந்த அந்தப் படிக்கட்டில் வேறு சில வழிப்போக்கர்களும் ஏழைப் பயணிகளும் அமர்ந்துகொண்டும் படுத்துக்கொண்டும்காணப்பட்டனர். கோயில்கள்இறைவழிபாட்டிற்கு மட்டுமன்றி, வழிப்போக்கரும் வசதி குறைந்தோரும் இளைப்பாறவும் ஓய்வுகொள்ளவும் பயன்பட்ட காலம் அது.

சாத்தன் அருகில் வந்து அமர்ந்தவுடன் உலகணன் கேட்டான். "தாங்கள் இங்கு வருவதாக எனக்குச் செய்தி கிடைக்கவே இல்லையே" என்று.

"நான்மன்னரின்தூதனாகவந்திருக்கிறேன். தகடூருக்குத்தூதனை அனுப்பும் முடிவு திடீரென எடுக்கப்பட்டது. எல்லோரும் அறிய அரசரின் அலுவலுக்காக வருவதால் உன்னிடம் அறிவிக்கத் தேவையில்லை என்று கருதினார் இளந்தத்தனார் ஆயினும் நான் இங்கு வந்திருப்பதை நீ அறிய வேண்டும் என்பதற்காகத்தான் உன் கடைக்கு வந்து முகம் காட்டவேண்டும் என எண்ணினேன். நாளை நான் கொங்கு வேந்தரைக் காண அரண்மனைக்குப் போவேன்" என்றான் சாத்தன்.

"கொங்குவேந்தன் பல்லவருடன் நட்புக்கொண்டதால் நம் அரசர் கோபம் கொண்டிருக்கிறார் என்பது தெளிவு. மிரட்டுவதற்காக வந்திருக்கிறீர்களா என்ன?" என்று வினவினான் ஒற்றன். "மிரட்டல் என்று சொல்லமுடியாது. மூன்று ஆண்டுகளாகக்

கொங்குவேந்தன் திறை செலுத்தவில்லை அதைச் செலுத்தும்படி வற்புறுத்துவதுதான் என் வேலை."

"கொங்குவேந்தருக்கு ஒரு சிற்றரசராக இருந்து திறைசெலுத்துவது பிடிக்கவில்லை. அந்தப் பல்லவ மன்னன் தன்னுடன் சேர்ந்து பாண்டியனை முறியடிக்க உதவினால் அதன்பின் கொங்குமன்னன் திறைசெலுத்த வேண்டாம் என்று ஒப்பந்தம் எழுதித்தருவதாக ஆசை காட்டியதனால்தான் பாண்டியருடன் போர்புரியத் துணிந்தார் கொங்கு மன்னர் என்று அரசியல் வல்லுநர்கள் கூறுகின்றனர். பொதுவாக அதியனின் ஆட்சியில் மக்களுக்குத் திருப்தி இல்லை. இப்பொழுதே வரிச்சுமை அதிகம். மன்னரின் ஆடம்பரச் செலவுகள் அளவுக்குமேல் நடக்கின்றன. திறை செலுத்தவேண்டுமானால் மக்களின் துன்பம் அதிகரிக்கும். சரி நாளை இரவில் இங்கேயே இதே நேரத்தில் தங்களைச் சந்திக்கிறேன்" என்று கூறி எழுந்து சென்றான் உலகணன்.

அடுத்த நாள் முற்பகலில் அரண்மனைக்குச் சென்று தன் வரவை அறிவித்தான் சாத்தன். உள்ளே செல்ல அனுமதிபெற்று அரசர் முன்சென்று நின்றபொழுதுதான் வந்திருப்பவன் சாதாரணத் தூதன் அல்ல என்றும் பாண்டிய மன்னனின் உற்ற நண்பனும், உயர் நிலைப் படைத்தலைவனுமாகிய சாத்தஞ் சாத்தன் என்றும் அதியன் உணர்ந்தான்.

"சாத்தஞ் சாத்தனா! சாதாரணத் தூதன் என்றல்லவா நினைத்தேன். பாண்டிய வேந்தர் இத்தகைய தூதனை விடுத்து என்னைப் பெருமைப் படுத்துகிறாரோ?" என்று வியப்பும் சற்றே ஏளனமும் கலந்த குரலில் பேசினான்.

சாத்தன் ஒன்றும் பதில் பேசாமல் மன்னனை வணங்கி தன் இடுப்பில் செருகி வைத்திருந்த ஓலையை எடுத்து நீட்டினான். "பாண்டிய வேந்தர் தங்களுக்குக் கொடுக்கும்படி பணித்த ஓலை இது" என்று எடுத்துரைத்தான்.

அரக்கினால் மூடி, இலச்சினை பொறிக்கப்பட்டிருந்த கூட்டை ஒருமுறை நன்கு சோதனை செய்து, அதைத் திறந்து உள்ளே இருந்த ஓலையை எடுத்துப் படித்தான் அதியன். அவன் முகத்தில் இருந்த ஏளனம் மாறி கடுமை நிழலிட்டது.

"மூன்று ஆண்டுகளாகச் செலுத்தாத திறையைச் செலுத்த வேண்டும். பிறகு தவறாமல் ஒவ்வோர் ஆண்டும் திறை செலுத்த வேண்டுமாம். ஏன்? மூன்றாண்டுகளாகப் பாண்டிய அரசு, உறங்கிக் கொண்டிருந்ததோ?" என்று வார்த்தைகளைத் துப்பினான் அதியன்.

"பாண்டிய மன்னர் கொங்கு மன்னரைத் தம் நண்பர் என்று கருதியிருந்தார். நண்பரிடம் எப்படி திறைசெலுத்தச் சொல்வது என்று தயங்கினார். ஆனால் தாங்கள் பல்லவ மன்னனுடன் இணைந்து பாண்டியனை எதிர்க்கத் துணிந்ததால் நண்பர் அல்ல என்று அறிவித்துவிட்டீர்கள். ஆகவே இதற்குமுன் நிலவிய வழக்கப்படி கொங்குநாடு பாண்டியப் பேரரசிற்குத் திறைசெலுத்த வேண்டும் என்று கேட்கிறோம். ஒரு சாதாரணத் தூதனிடம் ஓலைகொடுத்து அனுப்பினால் உரிய கவனம் செலுத்தமாட்டீர்கள் என எண்ணித்தான் என்னை அனுப்பித் தங்களிடம் நேரில் வற்புறுத்துமாறும் மன்னர் கட்டளையிட்டார்" என்று விளக்கினான் சாத்தஞ் சாத்தன்.

"சாத்தஞ் சாத்தன் சிறந்த வாள்வீரன், சொல்வன்மை மிக்க பேச்சாளன் என்பதெல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும். எனவே நான்நிலைமையைப் புரிந்துகொண்டு உடனே திறைசெலுத்த ஒத்துக்கொள்வேன் என்று முடிவுசெய்திருப்பார் உங்கள் வேந்தர் நெடுஞ்சடையன் பராந்தகன். அதுமட்டுமல்ல நாம் மூவருமே ஒரு காலத்தில் நெருங்கிய நண்பர்கள் அல்லவா? அந்த நட்பின் பெயராலும் நீ என்னை வற்புறுத்தலாமே!" என்று சாத்தன் வாயைக் கிளறினான் அதியன்.

"அந்த நட்பைத் தாங்கள் மறந்ததுமட்டுமல்ல அதைப் புறக்கணித்து விட்டீர்கள் என்பது எனக்கு விளங்குகிறது. எனவே நான் அதை குறிப்பிட விரும்பவில்லை" என்று வேதனையோடு பேசினான் சாத்தன்.

சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்த அதியன் "சரி நான் அமைச்சரோடும், படைத்தலைவர்களோடும் பேசிய பின்னர்தான் முடிவுக்கு வரமுடியும். நீ போய் நாளை வா. நான் என்பதிலை எழுதித் தருகிறேன்" என்றான். சாத்தன் மன்னனை வணங்கித் திரும்பிச் சென்றான்.

அன்று இரவு தன்னைச் சந்தித்த உலகணனிடம் அடுத்தநாள் கொங்கு மன்னரின் ஓலை கிடைத்த பின்னரே முடிவு தெரியுமென்றும், இரவில் மீண்டும் தன்னைச் சந்திக்கும்படியும் கூறினான் சாத்தன்.

அன்று நள்ளிரவிற்குப்பின் உறக்கத்தில் ஆழ்ந்திருந்த சாத்தனின் அறைக்குள் நான்கு பேர் நுழைந்தனர். திடுக்கிட்டுக் கண்விழித்த சாத்தன் பகைவர்கள் தன்னைத் தாக்க வந்திருக்கிறார்கள் என அறிந்து முதலில் நெருங்கியவன் முகத்தில்

கையால் குத்தினான். வேறோரு வனைக் காலால் உதைத்து வீழ்த்தினான். அதே நேரத்தில் வேறொருவன் ஒரு கனமான துணியால் அவன் முகத்தை மூடினான். சாத்தனின் தலையில் பலமான ஓர் அடியும் விழுந்தது அவன் மயக்கமடைந்தான்.

"நல்ல வேளை! இவன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோதே இப்படித்தாக்கினால், விழித்து முழுத் திறமையுடன் போராடியிருந்தால் நாம் செத்துப்போயிருப்போம். தலைவர் எச்சரித்தது நல்லதாய் போயிற்று அவன் பெரிய வீரன். மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். உயிரோடு கொண்டு வரவேண்டும் என்று சொன்னார்" என்றான் அவர்களின் தலைவன். சாத்தனின் கையும் காலும் வாயும் கட்டி, நால்வரும் அவனைத் தூக்கிச் சென்றனர்.

8. சிறையில் அடைத்த சிற்றரசன்

அடுத்த நாள் இரவில் சாத்தஞ் சாத்தனைச் சந்திப்பதற்காகக் குமரன் கோயிலுக்குச் சென்ற உலகணன் வெகு நேரம் காத்திருந்தான். சாத்தன் வரவில்லை அரண்மனைக்குச் சென்றவன் இவ்வளவு நேரம் திரும்பாமல் இருப்பதற்குக் காரணம் இல்லை. விருந்தினர் சத்திரத்தில் சென்று விசாரித்தால் தன் மீது சந்தேகம் எழுவதற்கு வாய்ப்பு உண்டு. எனவே அடுத்த நாள் பகலில் எப்படியாவது விசாரித்துக் கண்டுபிடிக்கலாம் என்று எண்ணித் திரும்பிச் சென்றான்.

சாத்தஞ் சாத்தன் மாலவனின் கூலக் கடைக்கு வந்து சில தானியங்களின் விலையைப்பற்றிக் கேட்டது உலகணனுக்கு நினைவு வந்தது. அடுத்த நாள் பகல் நேரத்தில் சத்திரத்திற்குச் சென்று அங்குள்ள காவலர்களிடம் பேசினான்.

"இந்தச் சத்திரத்தில் தங்கியிருந்த பாண்டிய நாட்டுக்காரர் ஒருவர் எங்கள் கடைக்கு வந்து சில பொருள்களின் விலைபற்றிக்கேட்டார். அடுத்த நாள் வருவதாகச் சொல்லிப்போனார். வரவில்லை. அவர் இங்கே இருந்தால் பார்க்க வேண்டும். அவர் நிறைய தானியங்கள் வாங்குவார் என்று நினைக்கிறேன்" என்று கேட்டான் உலகணன்.

"அவர் போய்விட்டார். நான்கு வீரர்கள் அரண்மனையிலிருந்து வந்து இரவோடு இரவாக அவரைக் கட்டித் தூக்கிக் கொண்டு போய்விட்டனர். அந்த ஆள் தானியம் வாங்க வந்த ஆளாகத் தோன்றவில்லை. அவரைப் பிடிக்க வந்த நான்குபேரில் ஒருவனுடைய மூக்கை உடைத்து விட்டார். வேறொருவனுக்கு நெஞ்செலும்பு ஒடிந்துவிட்டது. படுத்துக்கொண்டே இவ்வாறு செய்த ஆள் ஒரு போர்வீரனாக இருக்க வேண்டும்" என்று சாத்தனின் வீரத்தைப் பாராட்டினான் ஒரு காவலன். சாத்தனைப்பற்றி நன்கறிந்த உலகணன் அவர்கள் குறிப்பிடுவது அவனைப்பற்றித்தான் என்பதைப் புரிந்து கொண்டான்.

உலகணன் அன்று முழுவதும் யோசனை செய்தான் சாத்தஞ்சாத்தனைப் பிடித்துக்கொண்டு போனவர்கள் அரண்மனையிலிருந்து வந்த வீரர்கள் என்று காவலர்கள்

கூறியதால் கொங்கு வேந்தனின் ஆணைப்படிதான் சாத்தஞ் சாத்தன் கைது செய்யப்பட்டிருக்கிறான் என்பது உறுதியாகிறது. ஆனால் அரசன் ஏன் இரவோடு இரவாக அதைச் செய்ய வேண்டும் பகலில் அரண்மனைக்குச் சென்றபொழுதே தன் வீரர்களை ஏவி அவனைப் பிடித்திருக்கலாமே. இப்பொழுது சாத்தஞ்சாத்தனைச் சிறையில் அடைத்துவைத்திருக்கிறார்களா அல்லது வேறு எங்காவது கொண்டு போய் வைத்திருக்கிறார்களா என்று கண்டு பிடிக்க வேண்டும். அது மட்டுமல்ல. ஒற்றர் படைத்தலைவருக்கு உடனே செய்தி அனுப்பவேண்டும் அது போன்றவேலைகளுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்காக அவனுக்கு உதவியாளனாக இருக்கும் காளமேகம் வேறொரு கடையில் வேலை செய்கிறான். ஆனால் சாத்தஞ் சாத்தன் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்தபின் செய்தி அனுப்புவதே சரியாக இருக்கும் என்று முடிவு செய்து அதற்கான முயற்சியை மேற்கொண்டான் உலகணன்.

அன்று மாலை, கடையில் தன் வேலை முடிந்தவுடன் வீட்டிற்குச் செல்லாமல் சித்திரைத் தெருவிற்குச் சென்றான் உலகணன். தகடூரில் எல்லோரும் நன்கறிந்த பகுதி சித்திரைத் தெரு. சிலர் விரும்பிச் செல்வதும், சிலர் அந்தப் பெயரைக் கேட்டாலே கூசுவதும் ஆகிய சித்திரைத்தெரு பரத்தையர் வாழும் பகுதி. செல்வந்தரும் உயர்ந்த அலுவலரும் விரும்பும் தரமுயர்ந்த பரத்தையர் முதல் எளியோரை இன்ப உலகத்திற்கு இழுத்துச் செல்லும் தரம் தாழ்ந்த பரத்தையரும் தங்கள் "விருந்தோம்பும்" கலையைத் தடையின்றிச் செய்தொழுகிய இடம் அது. சித்திரைத் தெருவின் சிகரமாக விளங்கிய காமினியின் வீட்டிற்குள் நுழைந்தான் உலகணன்.

காமினியின் முன்னோர்கள் சேரநாட்டிலிருந்து வந்தவர்கள். மூன்று தலைமுறைகளாகத் தகடூரில் வாழ்ந்தாலும் சேரநாட்டின் பழக்க வழக்கங்களை விடாமல் பிடித்துக் கொண்டிருந்தாள் அவள். அது அவளுடைய தொழில் வளர்ச்சிக்கு மிகவும் உதவுகிறது என்பது அவளுடைய கருத்து. மூன்றோ நான்கோ சேரநாட்டு இளம்பெண்கள் அவளுடைய இல்லத்தில் எப்பொழுதும் காணப்படுவர். உள்ளூர் இளம்பெண்கள் பணியாற்றும் பல பரத்தையர் இல்லங்களை விட காமினியின் இல்லத்தை வாடிக்கையாளர்கள் விரும்புவதும், அதிகப் பணம் தர முன்வருவதும் அந்தக் காரணத்தால்தான் என்று அவள் நம்பினாள். காலையிலே பல நறுமணச் சாந்துகள் கலந்த நீரில் மூழ்கிக் குளித்து, கூந்தலை முழுநீளத்தில் தொங்கவிட்டு,

வெண்பட்டு ஆடைகள் புனைந்து, பலவண்ணக் கல் பதித்தப் பொன்மாலை அணிந்து காணப்படும் காமினியும் அவள் இல்லத்தில் வாழ்ந்த அவளைப் போலவே ஆடையும் அணிகலன்களும் பூண்ட மற்ற இளம் பெண்களும் உடற்பசியோடு வரும் ஆண்களுக்குத் தேவைக்கேற்ற விருந்து படைத்தனர்.

உலகணன் தன் இல்லத்தில் புகுவதைக் கண்ட காமினி அவனை வரவேற்று அவளுடைய தனி அறைக்கு அழைத்துச் சென்றாள். உலகணன் இதற்கு முன்னும் அங்கு வந்ததுண்டு. அவன் வருவது உடற்பசிக்காக அல்ல என்பது அவளுக்குத் தெரியும் சில முக்கியமான தகவல்களைத் தன்னிடம் வரும் அலுவலர்களிடமிருந்து கேட்டறிந்து சொல்வதற்காக அவளை அணுகுவான் உலகணன். அவள் எதிர்பார்த்ததைவிட அதிகமாகப் பணமும் கொடுப்பான். அவன் யார் என்றோ, யாருக்காகத் தகவல் கேட்கிறான் என்றோ அவளிடம் இதுவரை சொல்லவில்லை. அவளும் கேட்கவில்லை. கேள்விகள் எதுவும் கேட்காமல் இருப்பதற்காகவே அதிகப் பணம் தருவதாக அவன் ஒருமுறை அவளிடம் கூறினான். அதுமட்டுமன்றி அவனுடன் பேசும்பொழுது அவளுக்குச் சிலநேரங்களில் அச்சமும் தோன்றியதுண்டு. அவன் அறியவிரும்பும் தகவல்களைப்பற்றி வேறு யாருடனும் பேசினாலோ அல்லது அவனைப் பற்றி யாரிடமாவது விசாரணை செய்தாலோ அவளுடைய உயிருக்கே ஆபத்து ஏற்படும் என்று அவன் அவளிடம் எச்சரித்திருந்தான்.

"உன் நன்மைக்காகத்தான் சொல்கிறேன். என்னைப் பற்றியோ நான் கேட்கும் தகவலைப் பற்றியோ யாரிடமாவது நீ பேசினால் அது உன் உயிருக்கே ஆபத்தாக முடியலாம். நான் கேட்கும் தகவலை அறிந்து சொல்வதற்கு நீ எவ்வளவு பணம் கேட்டாலும் நான் தருவேன். ஆனால் அதை நீ முற்றிலும் மறந்துவிடவேண்டும்" என்று அவன் சொன்ன விதமும், அவன் முகத்தின் தோற்றமும், அவன் இடுப்பில் செருகியிருந்த குத்துவாளும் அவன் சொல்வது வெறும் மிரட்டல் அன்று என்பதை அவளுக்கு உணர்த்தின. பொருள் ஈட்டுவது மட்டுமே நோக்கமாகக் கொண்ட அவளுக்குத் தேவையற்ற ஆபத்துக்களைத் தேடிப் பிடிக்க விருப்பமில்லை. எனவே அவள் அவன் கூறியபடியே நடந்து கொண்டாள். அவனும் அவள் அதிகக் கடினம் இல்லாமல் அறியக்கூடிய தகவல்களைத்தான் அவளிடம் கேட்டான். அவளால் இயலாது என்று கூறிவிட்டால் அவன் வற்புறுத்துவதும் இல்லை.

காமினியின் தனி அறையில் அமர்ந்து அவள் கொண்டுவந்து கொடுத்த நீர்மோரைப் பருகிக்கொண்டே காமினியிடம் பேசினான் உலகணன். "உன் தொழில் வழக்கம்போல் மிகச் சிறப்பாக நடக்கிறது என்று நன்றாகத் தெரிகிறது. நான் சென்ற முறை வந்ததைவிடச் செழிப்பாக இந்த அறையும் விளங்குகிறது" என்றான் அவன். "உண்மைதான் இப்பொழுது மூன்று இளம் பெண்கள் புதிதாக வந்திருக்கிறார்கள். அதனால்தான் இன்னும் கொஞ்சம் வளர்ச்சி" என்றாள் காமினி. "ஆனால் உங்களுக்குத்தான் அதைப் பற்றிய தேவை இல்லையே!" என்று சேர்த்துக் கூறினாள்." ஆமாம் என் தேவை வேறு உன் விருந்தினர்களில் பல அரசு அலுவலர்களும், படைத்தலைவர்களும் உட்படுவார்கள் அல்லவா?" என்று வினவினான் அவன்.

"அவர்கள் வருவதால் பெரிய லாபம் ஒன்றும் இல்லை. அதிகமாக விலைபேசுவார்கள். ஆனாலும் அவர்களை மகிழ்விப்பது முக்கியம்" என்றாள் காமினி "எனக்கு அவர்களிடமிருந்து ஒரு செய்தி கிடைக்க வேண்டும். அது உன்னால்தான் முடியும்".|"என்ன வேண்டும்? சொல்லுங்கள்."

"இரண்டு நாள்களுக்கு முன் மதுரையைச் சேர்ந்த நண்பர் ஒருவர் இங்கே வந்திருந்தார். மதுரை மன்னரிடமிருந்து கொங்குமன்னருக்குத் தூது வந்திருப்பதாகச் சொல்லி விருந்தினர் சத்திரத்தில் தங்கியிருந்தார். நேற்று முன்தினம் இரவில் நான்கு வீரர்கள் அரண்மனையிலிருந்து வந்து அவரைத் தூக்கிச் சென்றார்கள் என்று தெரியவந்துள்ளது. அவர் எங்கே அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார் என்று தெரிய வேண்டும். சிறையில் அடைத்து வைத்திருக்கிறார்களா? அல்லது வேறு எங்காவது கொண்டுபோய் விட்டார்களா என்று தெரிய வேண்டும். உன்னால் முடியுமா?"

காமினி சிரித்தாள் "இவ்வளவு தானா! அரண்மனைக் காப்பாளர் இன்றோ நாளையோ இங்கு வருவார் ஒரு புதிய இரை வந்திருக்கிறது என்று சொல்லி ஆள் அனுப்பியிருக்கிறேன். அதை அறிந்தால் அவர் வராமல் இருக்கமாட்டார். அது மட்டுமல்ல சிறைக் காவலரும் இங்கே சிலர் வருவர். நாளை மறுநாள் என்னைச் சந்தியுங்கள், அதற்குள் நான் கண்டிப்பாகத் தகவலை அறிந்துகொள்வேன்" என்று நம்பிக்கையுடன் கூறினாள்.

அடுத்த நாள் அரண்மனைக் காப்பாளர் வருவதற்கு முன்னரே ஒரு சிறைக்காவலன் அவள் இல்லத்திற்குவந்தான். அவனுக்கு விருந்தளித்த காமினி அவனிடம் குறைபட்டுக்கொண்டாள். "இரண்டு நாள்களுக்கு முன் நம் சத்திரத்தில் ஒரு பணக்காரர்

தங்கினார். அவர் சிலநாள் இங்கு இருப்பார் என்றும் என் இல்லத்திற்கு வருவார் என்றும் எனக்குச் செய்திவந்தது. ஆனால் அவரைக் கைதுசெய்துவிட்டார்கள் என்று கேள்விப்பட்டேன். ஒரு நல்ல வாய்ப்பு கைதவறிப் போய்விட்டது" என்றாள்.

"அவன் உன் இல்லத்திற்கு விருந்தினனாக வருவான் என்று நீ எதிர்பார்த்தாய். ஆனால் அவன் அரசாங்க விருந்தினனாக இருக்கிறான் இப்பொழுது" என்று கூறிச்சிரித்தான் அவன்.

"என்ன சொல்கிறீர்கள்?"

"உண்மையைத்தான் சொல்கிறேன். அவன் சிறையில் இருக்கிறான். இன்று காலையில் நான்தான் அவனுக்கு உணவு கொடுத்தேன். முரட்டுப் பயல். தனியாக அவன் அறைக்குப் போகக் கூடாது என்று தலைமைக் காவலர் எங்களிடம் சொல்லியிருக்கிறார். அவனைக் கைது செய்யும் பொழுதே இரண்டு வீரர்கள் காயம் அடைந்தார்களாம்" என்றான் சிறைக் காவலன்.

காமினியிடமிருந்து தகவல் கிடைத்தவுடன் ஓர் ஓலையில் எல்லா விவரங்களையும் எழுதி காளமேகத்திடம் கொடுத்து மதுரைக்கு அவனை அனுப்பினான் உலகணன். இளந்தத்தரிட மிருந்து கட்டளை வருவதற்காகக் காத்திருந்தான். மேலும் காமினியிடம் அந்தச் சிறைக் காவலனின் பெயரையும் கேட்டுக் குறித்துவைத்துக்கொண்டான். அவனைப்பழகிவைத்துக்கொள்வதால் பயன் விளையலாம் என்று எண்ணி அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டான்.

சாத்தஞ் சாத்தனின் இருப்பிடத்தைக் கண்டு பிடிப்பதற்காக உலகணன் முயற்சிசெய்து கொண்டிருந்த நேரத்தில் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்த அவனுடன் கொங்கு நாட்டு வேந்தன் அதியன் உரையாடிக் கொண்டிருந்தான்.

"உன்னை நான் சிறையில் அடைப்பேன் என்று நீயும் உன்னைத் தூதனுப்பிய பாண்டியப் பேரரசன் பராந்தகன் நெடுஞ்சடையனும் சற்றும் எதிர் பார்க்கவில்லை. அல்லவா?" என்று ஒரு பெருஞ்செயலைச் செய்து முடித்த செம்மாப்புடன் சாத்தஞ் சாத்தனிடம் வினவினான் அதியன்.

"நான் பாண்டியரின் தூதனாக வந்தவன். இந்த நாட்டிற்குத் தீங்கிழைக்கவோ அல்லது ஒற்றாடவோ வரவில்லை. எல்லோரும் காண தனி மனிதனாக இந்த நாட்டின் அரண்மனையில் அரசனைக்

கண்டு ஓலைகொடுக்க வந்தேன். மாண்புமிக்க மன்னர்கள் கடைப்பிடிக்கும் அரசியல் நெறிப்படி, தூதனை யாரும் எதுவும் செய்வதில்லை. இருநாடுகளுக்குள் போர் நடந்துகொண்டிருக்கும் நேரங்களில்கூட தூதனாக வரும் ஒருவனைக் கைது செய்வதோ சிறையில் அடைப்பதோ நீதியல்ல என்பது அரசியல் நெறி. ஆகவே நானோ என்னை விடுத்த மன்னரோ இத்தகைய செயலைத் தங்களிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. என்பது உண்மைதான்" என்று சற்றும் அச்சமோ தயக்கமோ இன்றி விடையிறுத்தான் சாத்தன்.

"எதிர்பாராத செயல்களைச் செய்வதுதான் என் வழக்கம் எனக்கு அது மிகவும் பிடிக்கும். நான் பாண்டியனின் அடிமை என்று நினைத்தான், உன் மன்னன். அவன் ஆணையிட்டால் நான் படையுடன் வந்து அவனுக்காகப் பல்லவருடன் போர்செய்வேன் என்று எண்ணினான். ஏனென்றால் அவன் தமிழகத்தின் மாபெரும் மூவேந்தரில் ஒருவன். நானோ திறை செலுத்தி, அவனுக்கு அடங்கி வாழவேண்டிய சிற்றரசன். பாண்டிய மாமன்னனின் ஆணையைத் தலைமேல் ஏற்றுக் கீழ்ப்படிய வேண்டியவன்! அந்த எண்ணத்தை அவன் நெஞ்சிலிருந்து அகற்றுவதற்காகத்தான் நான் பல்லவனுடன் சேர்ந்தேன். அவன்அதையும் சற்றும் எதிர்பார்க்கவில்லை அல்லவா?" என்றுகேட்டு வெறிபிடித்தவன் போல் சிரித்தான் அதியன்.

"ஆமாம் சற்றும் எதிர்பார்க்கவில்லை, நீங்கள் சிற்றரசர் ஆகையால் பேரரசர் பாண்டியரின் ஆணைப்படி நடப்பீர்கள் என்பதல்ல அவருடைய எதிர்ப்பார்ப்பு. ஈராண்டு காலம் நெருங்கிப் பழகி பாண்டியர் அரண்மனையிலேயே விருந்தினராக வசித்து ஒரே களரியில் படைக்கலப் பயிற்சிபெற்று ஒரே ஆசிரியரிடம் உயர்கல்வி பெற்று சிற்றரசர் பேரரசர் என்ற வேறுபாடு இன்றி குடும்பத்தில் ஒருவராக விருந்தோம்பிய பெருமையும் சிறப்பும் பெற்ற நண்பர் என்ற முறையில் எக்காலத்தும் நடந்துகொள்வீர்கள் என்பதுதான் பாண்டிய வேந்தரின் எதிர்பார்ப்பு. நட்பு என்பது நலம் கொழிக்கும் நாள்களில் பயன்கொள்ளவும், நலிவுற்ற நாள்களில் பகைகொள்ளவும் உள்ளதல்ல என்று கருதினார் எங்கள் மன்னர். அதனால்தான் எதிர்பார்த்த நாளில் கொங்குப்படை வந்து சேரவில்லை என்று தகவல் வந்தபோது அதற்குத் தக்க காரணம் இருக்கும் என்று எண்ணினாரே தவிர, கொங்குமன்னர் பகைவனுடன் கைகோர்ப்பார் என்று சற்றும் நினைக்கவில்லை. உயர்ந்த பண்பும் சிறந்த உள்ளமும் கொண்ட பாண்டிய மன்னருக்கு

நம்பிக்கைத் துரோகம் நண்பனைக் காட்டிக்கொடுத்தல் போன்ற நயவஞ்சகச் செயல்களை எண்ணிப் பார்க்கவே முடியவில்லை" என்று தன் மன்னனும் நண்பனுமான நெடுஞ்சடையனைப் பாராட்டி உணர்ச்சி பொங்கக் கூறினான் சாத்தன்.

"நிறுத்து! நீ பாண்டியனின் சேவகன் மட்டுமல்ல அவனுடைய ஆருயிர் நண்பன் என்று நம்பிக்கொண்டிருப்பவன் என்பது எனக்குத் தெரியும். நட்பைப் பற்றியும் துரோகத்தைப் பற்றியும் உன்னுடைய விளக்கவுரையைக் கேட்பதற்காக நான் இங்கே வரவில்லை. என்றாலும் நீ பேசும் நட்பு துரோகம் என்பவையெல்லாம் உன்னைப் போன்ற ஊழியர்களுக்காக வகுக்கப்பட்டவை. என்னைப் போன்ற அரசனுக்கு அவையெல்லாம் பொருந்தாதவை. அரசியலில் நிரந்தரமான நண்பனும் இல்லை. பகைவனும் இல்லை - என் அரியணையைக்காக்கவும், நாட்டை ஆளவும் எனக்கு உதவுவோர் நண்பர்கள்; என்னை அடிப்படுத்தவும் அடக்கியாளவும் விரும்புவோர் பகைவர்கள். அவ்வளவுதான். அது மட்டுமல்ல, நட்பு என்பது எல்லா விதத்திலும் ஒத்த இருவருக்குள் ஏற்படும் பிணைப்பு. எலியும் தவளையும் நட்புக்கொண்டால் என்ன ஆகும்? அது போலத்தான் பேரரசனுடன் சிற்றரசன் கொள்ளும் நட்பும். உன் மன்னன் ஒரு நாள் உன்னைக் கைவிடும்பொழுது நீ அதை உணர்ந்துகொள்வாய்!" என்று தன்னுடைய அரசியல் நெறியையும் நீதியையும் விளக்கினான் அதியன்.

"ஆகா! எவ்வளவு உயர்ந்த எண்ணங்கள்! எவ்வளவு சிறந்த அரசியல் கொள்கை! உங்கள் முன்னோர்களில் ஒருவரான அதியமான் நெடுமானஞ்சி நீண்ட நாள் உயிர்வாழச் செய்யும் சக்தி நிறைந்த அரிய நெல்லிக்கனியைப் பெருமலை விடரகத்திலிருந்து பெற்று அதைத் தான் தின்னாமல், தன்னுடைய நண்பரான ஔவையாருக்குக் கொடுத்து அவரை நீண்ட நாள் வாழச் செய்ததாகச் சங்க இலக்கியங்கள் புகழ்பாடுகின்றன. அந்தப் பெருமானின் வழித்தோன்றலாகிய தாங்கள் நட்பைப் பற்றிக் கூறிய விளக்கம், இன்று அவர் கேட்டிருந்தால் எவ்வளவு மகிழ்ந்திருப்பார்!" என்று அங்கதம் படக்கூறினான் சாத்தன். ஆனால் அதியன் அதைத் கேட்டு நாணவில்லை.

"என் முன்னோர்கள் செய்தவை எல்லாமே நல்லவை என்று நான் கருதவில்லை. நீ குறிப்பிட்ட நெடுமானஞ்சி பெருவீரனாக இருந்தார். ஔவையார் போன்ற புலவர்களுக்கும் கலைஞர்களுக்கும் பாணர்களுக்கும் வாரி வழங்கிய வள்ளல்

என்று பெயர்பெற்றார். அவ்வாறு அழித்த செல்வத்தைப் படைபலத்திற்காகச் செலவுசெய்து தகடூரின் அரணையும் வலிமையையும் பெருக்கி, கொங்கு நாட்டை, சேர, சோழ, பாண்டிய நாடுகளுக்கு ஒப்பான வலிய நாடாக ஆக்கியிருந்தால் இன்று பாண்டியன் திறை செலுத்தும்படி ஆணையிட்டு உன்னை என்னிடம் அனுப்பியிருக்க மாட்டான். நானும் சிற்றரசனாக அவனுக்குத் தலைவணங்கி நிற்க வேண்டிய நிலைமை மாறியிருக்கும். நானாவது அதைச் செய்து முடிக்கவேண்டும். என்றுதான் துணிந்திருக்கிறேன். அதனால்தான் எனக்கு முழு உரிமை அளிக்க ஒப்புக்கொண்ட நந்தி வர்மப் பல்லவருடன் நட்புக்கொண்டேன்" என்றான்

"அந்த நட்பில் எலி யார்? தவளை யார்?" என்று அதியனின் உவமைக்கு விளக்கம் கோரினான் சாத்தன்.

"நீ உனக்குத் தேவையில்லாத ஒன்றைப் பற்றியும் கவலைகொள்ள வேண்டாம். உன்னுடைய நிலைமையை எண்ணிக் கவலைப்படு" என்று உரையாடலின் போக்கை மாற்றினான் அதியன்.

"நான் எதற்காகக் கவலைப்பட வேண்டும்?"

"நீ இப்பொழுது இருக்கும் இடம் சிறை. உன் உயிரும், உரிமையும் எல்லாம் என் கையில் உள்ளன. நான் ஏன் உன்னைச் சிறையில் அடைத்தேன் தெரியுமா? தூதனைச் சிறையில் அடைப்பது தவறு என்று தெரியாததால் அல்ல" என்று முதலில் தொடங்கிய இடத்திற்கே சென்றான் அதியன்.

"நான் உறையூரில் வாழத்தொடங்கியபின் சில வடமொழிப் புலவர்களிடம் அந்த மொழியைக் கற்கத் தொடங்கியுள்ளேன். அது நம் தமிழ்மொழி போலவே இலக்கிய வளம் மிக்க மொழி. அதில் ஒரு பழமொழி உள்ளது. விநாசகாலே விபரீத புத்தி என்று. அதாவது அழிவுக் காலம் வரும் பொழுது தவறான யோசனைகள் தோன்றும் என்று பொருள். அப்படித்தான் நீங்கள் என்னைச் சிறையில் அடைத்ததும்" என்றான் சாத்தன். ஆனால் அதியன் அதைச் செவிமடுத்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை.

"இரண்டு காரணங்களுக்காக உன்னைச்சிறையில்அடைத்தேன். நீ சாதாரணத் தூதனாக இருந்தால் அவ்வாறு செய்திருக்கமாட்டேன். நீ மன்னனின் ஆருயிர் நண்பன் அல்லவா? கொங்கு நாட்டின் மீது பாண்டியன் படையெடுத்து வந்தால் அவனுடைய உயிர்த்தோழன் தூக்குமரத்தில் தொங்குவான் என்று அறிவிப்பேன். அது

இப்பொழுதல்ல. தக்கதருணம் வரும்பொழுது. நீ எங்கு தொலைந்தாயோ என்று தவிக்கட்டும் கொஞ்ச நாள்கள்" என்று நகைத்தான் அதியன். "இரண்டாவது காரணம்?" அதியனின் குறுகிய மனம் எவ்வளவு கோணலாக இருக்குமோ என்ற வியப்புடன் வினவினான் சாத்தன்.

"இரண்டாவது காரணத்தை நீ அறியத்தான் வேண்டும். குறுநில மன்னனான என்னை இழிவுபடுத்தி, என் காதலை உதறித்தள்ளி, ஒருநில மன்னனும் அல்லாத உன் காதலை ஏற்றுக்கொண்டாளே அந்தப் பாண்டிய இளவரசி! அவளுடைய காதலனின் உயிர் என் கையில் ஊசலாடுகிறது என்பதை அவளுக்கு உணர்த்த வேண்டும் என்பது தான்" என்று உறுமினான் அதியன்.

9. ஆறியது சினம்; தேறியது திட்டம்

ஒற்றர் படைத்தலைவனின் முகம், அவன் நீட்டிய ஓலையில் எழுதப்பட்டிருக்கும் செய்தி நல்ல செய்தியன்று என்பதைத் தெளிவாக உணர்த்தியது. எனவே கேள்வி ஒன்றும் கேட்காமல் அந்த ஓலையை வாங்கிப் படித்தான் பாண்டியன் பராந்தகன் நெடுஞ்சடையன். அவன் முகத்தோற்றமும் மாறியது. கண்கள் சிவந்தன இதழ்கள் மூடிக்கொண்டன. மீசை துடித்தது.

"அவன் துரோகி என்று மட்டும்தான் நான் எண்ணினேன். மூடன் என்பதும் இப்பொழுது தெரியவருகிறது" என்று வார்த்தைகளைத் துப்பினான் அவன்.

அருகில் நின்ற அமைச்சர் மாறன் காரி இளந்தத்தனின் முகத்தை நோக்கினார். வாயால் ஒன்றும் பேசாமலே கண்களால் வினா எழுப்பினார். அதைப் புரிந்துகொண்ட ஒற்றர் படைத் தலைவன் விடையளித்தான்.

"நம் தூதனாகச் சென்ற சாத்தஞ்சாத்தனை கொங்கு நாட்டரசர் சிறையில் அடைத்து வைத்திருக்கிறார்."

"இனி அதியனிடம் கருணைகாட்டவேண்டிய தேவை இல்லை. பழைய நண்பன் என்று கருதவும் இடம் இல்லை. கொங்கு நாட்டின்மீது படையெடுத்துச் சென்று, தகடூரைத் தரைமட்டமாக்கி, சாத்தனைச் சிறை மீட்க வேண்டியதுதான்" என்று சினத்தோடு சீறிய வேந்தன். "போய் சேனாதிபதியை அழைத்து வா" என்று வாயிலில் நின்ற காவலனையும் ஏவினான்.

சேனாதிபதி சாத்தன் கணபதி விரைவிலேயே வந்தார். "சேனாதிபதி! நாம் பல்லவனையும் ஆய்வேளையும் தோற்கடித்த படை அப்படியே இருக்கிறதா அல்லது கலைத்துவிட்டீர்களா?" என்று அவரிடம் வினவினான் வேந்தன். அவன் முகத்தோற்றத்திலும் பேசிய விதத்தாலும் வைகைவேந்தன் வெகுண்டு நிற்கிறான் என்பதை அனுபவம் மிக்க சேனாதிபதி அறிந்து கொண்டார்.

"படையின் பெரும்பகுதி மதுரையில்தான் இருக்கிறது. கொற்கை அணியையும் கரவந்தபுர அணியையும் திருப்பி அனுப்பி விட்டேன். மற்ற அணிகள் நாளை திரும்பிச் செல்லும் அரசே! ஏதாவது மாற்றம் செய்ய வேண்டுமா என்று மன்னனிடம் கேட்டார் சாத்தன் கணபதி.

"அப்படியானால் ஐயாயிரம் வீரர்களுடன் தகடூரை நோக்கி நாளையே புறப்பட வேண்டுமானால் முடியும் அல்லவா?"

"தகடூருக்குப் புறப்படவா?" என்று வியப்போடு வினவிய சேனாதிபதி உடனே தன் இளவல் அங்குச் சென்றதை நினைவுகூர்ந்தார்." ஏன்? சாத்தனுக்கு என்ன ஆயிற்று?" என்று கவலையோடு கேட்டார்.

"சாத்தனை அதியமான் சிறையில் அடைத்து விட்டான். அவனை விடுவித்தே ஆகவேண்டும்" என்று இன்னும் கொதிக்கும் மனத்துடன் கூறினான் பாண்டியன்.

அமைச்சர் மாறன் காரி மெதுவாகப் பேசத் தொடங்கினார். "அரசே! சாத்தஞ் சாத்தன் தங்கள் நண்பன். சேனாதிபதியின் தம்பி! எனக்கும் மகனைப் போன்றவன். அவனைச் சிறையில் அடைத்த அதியமானுக்குத் தண்டனை கொடுக்கவேண்டும். சாத்தனைச் சிறையிலிருந்து மீட்கவும் வேண்டும். அவனுக்கு விளைந்த தீங்கை எண்ணி நாம் எல்லோரும் வருந்துகிறோம். சினம் கொள்கிறோம். அதே நேரத்தில் சற்றுச் சிந்திக்கவும் வேண்டும். நாம் தகடூர் மீது படையெடுத்துச் செல்வதால் சாத்தனை விடுவிக்க முடியாது என்று நினைக்கிறேன்". என்றார் அமைச்சர்.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று சற்றுக் குழப்பத்துடன் விளக்கம் கேட்டான் வேந்தன்.

"அதியமான் தங்கள் நட்பைப் புறக்கணித்து நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டான் என்பது உண்மையே. அவன் நாம் தூதனுப்பிய சாத்தனைச் சிறைவைத்தது நெறிபிறழ்ந்த செயல்தான். ஆனால் அவன் மூடன் அல்ல என்று தோன்றுகிறது எனக்கு. நம் அரண்மனையில் உங்களோடும் சாத்தனோடும் நெருங்கிப் பழகி வாழ்ந்த அதியனுக்கு சாத்தன் எவ்வளவு முக்கியமானவன் என்பது தெரியும். அதனால்தான் அவனைச் சிறையில் அடைத்து வைத்திருக்கிறான். நாம் படையெடுத்துச் சென்றால் அது சாத்தனின் உயிருக்கே ஆபத்தாகலாம். நம் கைகளைக் கட்டிப் போடுவதற்குத் தகுந்த கருவியாக அதியமான் சாத்தனைப் பயன்படுத்துவான். சாத்தன் அதியனின் கைதியாக இருக்கும் வரையில் நாம் தகடூரைத் தாக்குவது விபரீதமான விளைவுகளை உண்டாக்கும் என்று நினைக்கிறேன்" என்று விளக்கினார் அமைச்சர்.

"உண்மைதான் அரசே. அமைச்சரின் கருத்தை நானும் ஏற்றுக்கொள்கிறேன். படை எடுப்பதால் சாத்தனை விடுவிக்க

முடியாது. அவனைச் சிறையிலிருந்து விடுவித்த பின்னரே நாம் படையெடுக்க முடியும்" என்று சேனாதி பதியும் எடுத்துரைத்தார்.

தன் தந்தையின் அமைச்சராகப் பணியாற்றி, தன்னுடைய அமைச்சராகவும் விளங்கும் மாறன் காரியும், அதேபோல் தந்தையின் ஆட்சிக் காலத்திலேயே சேனாதிபதியாகி, பல போர்களில் அவருக்காக வெற்றிதேடித் தந்த சாத்தன் கணபதியும் கூறிய அறிவுசெறிந்த கருத்துகள் மன்னனின் சினத்தைத் தணித்து, மனத்தைக் கட்டுக்குள் கொண்டுவந்தன. சினம் சிந்திக்கும் ஆற்றலைச் சிதைத்து விடும் என்பதை அவன் உணர்ந்தான்.

"ஆம் அதியனுக்குப் புத்தி புகட்டுவதும் தண்டனை கொடுப்பதும் சற்றுத் தாமதிக்கலாம். சாத்தனை அதியனின் சிறையிலிருந்து மீட்பதே முதல் வேலை. நான் சற்று உணர்ச்சி வசப்பட்டுவிட்டேன் என்று" தன் தவறை உணர்ந்து பேசினான் பாண்டியன்.

இதுவரை வாய்திறக்காமல், மன்னனும் அமைச்சரும், சேனாதிபதியும் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்த ஒற்றர்படைத் தலைவன் இளந்தத்தன் இப்பொழுது உரையாடலில் கலந்து கொண்டான்"அரசே! கொங்குவேந்தரே நேரடியாகத் தலையிட்டுச் சிறையில் அடைத்திருக்கும் அரசியல் கைதி சாத்தஞ் சாத்தன். எனவே காவல் மிகவும் கடுமையாக இருக்கும். அது மட்டுமன்றி சாத்தன் எவ்வளவு முக்கியமானவர் என்பதும் பாண்டிய வேந்தரின் பேரன்பிற்குப் பாத்திரமானவர் என்பதும் அதியனுக்குத் தெரியும். ஆதலால், நாம் அவரைச் சிறையிலிருந்து மீட்பதற்கு முயற்சி செய்வோம் என்பதையும் உணர்ந்திருப்பார். அதற்கேற்றவாறு காவலை மேலும் பலப்படுத்தியிருப்பார்கள். ஆதலால் நாம் சிறைச்சாலையின் அமைப்பு, சூழல் இயங்கும் முறை, காவல் வலிமை ஆகிய எல்லாவற்றையும் கண்டறிந்து ஆராய்ந்த பின்னரே அங்கிருந்து சாத்தனாரை எவ்வாறு வெளியில் கொண்டுவர முடியும் என்று திட்டம் தீட்ட முடியும்" என்றான் அவன்.

"நீர் சொல்வது சரிதான். எனக்குப் புரிகிறது. ஆனால் நாம் விரைவில் செயலாற்றவேண்டும் என்பதையும் மறந்துவிடக் கூடாது. நாம் அதிகமாக எடுத்துக்கொள்ளும் ஒவ்வொரு நாளும் சாத்தன் சிறையில் வாடுகிறான் என்பதை மனத்தில் கொள்ள வேண்டும். சாத்தன் எனக்கு உயிருக்குயிரான தோழன் என்பதும், நமது பேரன்பிற்குரிய சேனாதிபதியின் இளவல் என்பதும் ஒருபுறம் இருக்க, அவன் பாண்டிய நாட்டின் விலைமதிக்க முடியாத வீரன் என்பதையும், படைத் தலைவன் என்பதையும்

கருதி அவனை விரைவில் சிறை மீட்க வேண்டியது நம் கடமையாகும்" என்று மேலும் வற்புறுத்தினான் மன்னன்.

"அரசே! சாத்தன் அஞ்சா நெஞ்சமும் அசைக்க முடியாத நாட்டுப்பற்றும் கொண்டவன். எந்த விதமான இன்னலையும் ஏற்றுக்கொள்ளும் மன உறுதியுள்ளவன். அதியனின் சிறை அவனைத் தளர்த்திவிடாது. நாம் பொறுமையாகவும், திறமையாகவும் செயலாற்றினால் போதும். நம் திட்டம் கட்டாயம் வெற்றிபெறக் கூடியதாக இருக்கவேண்டும். அவனுடைய உயிருக்கு இன்னல் விளையக் கூடாது என்பது மிகவும் முக்கியம்" என்று தன் தம்பியின் ஆற்றலையும் அவன் மீது கொண்ட பேரன்பையும் ஒருங்கிணைத்துப் பேசினார் சாத்தன் கணபதி.

"முதலில் இளந்தத்தனே நேரில் சென்று சிறைச்சாலையைப் பற்றிய எல்லா விவரங்களையும் கண்டறியட்டும். உதவிக்குத் தேவையானால் மூன்றோ நான்கோ ஒற்றர்களை மட்டும்கொண்டு சென்றால் போதும். உலகணன் பத்தாண்டுகளுக்குமேல் அங்குப் பணியாற்றுவதால் அவன் எல்லா ஏற்பாடுகளையும் கவனித்துக் கொள்வான். இளந்தத்தன் திரும்பி வந்து நம்மோடு கலந்து பேசியபின் சிறைமீட்கும் திட்டத்தை வகுக்கலாம்" என்றார் அமைச்சர்.

"ஆமாம் இளந்தத்தரே! நீங்கள் நாளையே புறப்படுங்கள். அமைச்சர் சொன்னபடி தேவையான ஆட்களை அழைத்துச் செல்லுங்கள். எவ்வளவு செலவு செய்தாலும் கவலையில்லை. சாத்தனை விரைவில் வெளியில் கொண்டு வரவேண்டும்" என்று ஆணையிட்டான் வைகை வேந்தன்.

இளந்தத்தன் தன் அலுவலகத்திற்குச் சென்று பல நாள்கள் மதுரைக்கு வெளியே வசிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளதால் அதற்கேற்ற முன்னேற்பாடுகளைச் செய்யும் பணியில் மூழ்கியிருந்தான். அதிகமான ஆள்களை உடனழைத்துக் கொண்டு சென்றால், செய்யும் வேலை மற்றவர்க்குப் புலப்படும் வாய்ப்புகள் அதற்கேற்ப அதிகமாகும் என்பது அவன் அனுபவத்தில் உணர்ந்த உண்மை. எனவே அவனுக்கு வலதுகை போன்ற வைரவனை மட்டும் தன்னுடன் கொண்டு சென்றால் போதும் என்று எண்ணினான் இளந்தத்தன். தகடூரை நன்கறிந்த உலகணனையும் பயன்படுத்திக் கொள்ளலாம். வெகு நாள்களுக்கு முன் கொற்கையைச் சேர்ந்த நற்சிங்கன் என்னும் ஒரு வணிகனுடன் இளந்தத்தன் தொடர்பு கொண்டிருந்தான். அந்த நற்சிங்கன் இப்பொழுது தகடூரில் வணிகத் தொழில் செய்துகொண்டு

வாழ்வதாக உலகணன் கூறியிருந்தான். அவனுடைய வீட்டில் வசதிப்பட்டால் தங்கலாம் என்று முடிவு செய்தான் இளந்தத்தன். சத்திரத்தில் தங்கினால் பலரும் தன்னைக் காணவும், பேசவும் நேருமாதலால் தன் வேலையில் தடங்கல் ஏற்படக் கூடும். ஒரு நண்பனின் வீட்டில் அவனுடைய உறவினனாகத் தங்கினால் யாரும் ஐயுறமாட்டார்கள் என்று எண்ணினான்.

இத்தகையை எண்ணங்களில் ஒற்றர் படைத்தலைவன் ஆழ்ந்திருக்கும்போது, தலையில் முக்காடு போட்டுக்கொண்டு ஒரு பெண்ணுருவம் அவனுடைய அறைக்குள் நுழைந்தது. வியப்புற்ற இளந்தத்தன், "என்ன வேண்டும்?" என்று கேட்க "இங்கு வேறு யாரும் இல்லையே?" என்று மறு கேள்வி எழுப்பி தன் முக்காட்டை முழுவதும் விலக்காமல் முகத்தைச் சற்றே காட்டிக்கொண்டு அவன் முன் நின்றாள், பாண்டிய நாட்டின் இளவரசி தேவந்தி. "இளவரசி! தாங்களா! ஆளனுப்பியிருந்தால் நானே வந்திருப்பேனே!" என்று எழுந்து நின்று வணங்கினான் இளந்தத்தன்.

"இல்லை. ஆளனுப்பி ஒற்றர் படைத்தலைவரை அழைத்துப் பேசவேண்டிய தருணமல்ல இது. நான் இங்கு வந்ததோ, உங்களிடம் பேசப்போவதோ வேறுயாருக்கும் தெரியக் கூடாது" என்று மீண்டும் சுற்றுமுற்றும் பார்த்தாள் இளவரசி.

"இளவரசி! நான் ஒற்றர் படைத்தலைவன். இரகசியங்களைக் காப்பது என் தொழில் எனவே என்னிடம் எதையும் தாங்கள் தயக்கமின்றிப் பேசலாம்." என்று அவள் மனத்தைத்திடப்படுத்தினான் இளந்தத்தன்.

"சாத்தஞ் சாத்தனைக் கொங்கு மன்னன் சிறையில் அடைத்து வைத்திருக்கிறான் என்று அறிந்தேன். அவரை எளிதில் கைதுசெய்ய முடியாது போராடியிருப்பார். அவருடைய உடலுக்கு ஊறு விளைந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்" என்றாள் இளவரசி.

இளவரசிக்கும் சாத்தஞ் சாத்தனுக்கும் ஓரளவு நெருக்கம் உண்டு என்பதை ஒற்றர் படைத் தலைவன் அறிந்திருந்தாலும், இளவரசி அவனைப்பற்றி இவ்வாறு கவலைகொள்ளும் அளவிற்கு அது வளர்ந்துள்ளது என்பதை இப்பொழுதுதான் உணர்ந்தான்.

"இல்லை இளவரசி. எனக்கு விவரமான அறிக்கை வந்துள்ளது. சாத்தனார் நள்ளிரவில் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தபொழுதுதான் அவரை நான்கு வீரர்கள் கைது செய்தனர். ஆகவே அவரால்

அவர்களுடன் எழுந்து நின்று போராட முடியவில்லை. ஆனால் படுத்துக்கொண்டே தன் கையாலும் காலாலும் ஒருவன் மூக்கை உடைத்தார். ஒருவன் விலா எலும்பை ஒடித்தார். அவர்மேல் துணியைப் போட்டுப்பிடித்துச் சென்றார்கள். அவருக்கு எந்தத் தீங்கும் ஏற்படவில்லை" என்று விளக்கினான் அவன்.

"நல்லது என் அண்ணனிடம் கேட்க முடியாததால்தான் உங்களிடம் கேட்டால் தெரிந்துகொள்ளலாமே என்று நினைத்தேன். இன்னொன்று நீங்கள் சாத்தனாரைச் சிறைமீட்கும் பணியில் ஈடுப்பட்டிருக்கிறீர்கள் என்றும் அதற்காக உடனே தகடூருக்குப் போகிறீர்கள் என்றும் அரசர் அன்னையிடம் சொல்லிக் கொண்டிருந்தார். எப்பொழுது புறப்படுகிறீர்கள்?."

"நாளையே புறப்படுகிறேன். இளவரசி"

"சிறை மீட்கும் முயற்சியில் ஆபத்து வரலாம். எல்லாப் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் கவனித்துத்தான் செயலாற்றுவீர்கள் என்பது எனக்குத் தெரியும் வெற்றியுடன் திரும்புங்கள். சாத்தனாரை எந்தச் சேதமும் இல்லாமல் கொண்டு வாருங்கள். நானும் ஒரு பரிசு தருகிறேன்" என்று உற்சாகம் ஊட்டினாள் அவள்.

"நன்றி இளவரசி எங்கள் முயற்சி தங்கள் நல்வாழ்த்துகளுடன் வெற்றிபெறும். தங்கள் கையால் அளிக்கும் எந்தப் பரிசையும் நான் நன்றியுடன் போற்றுவேன்." என்று மீண்டும் வணங்கினான் ஒற்றர்படைத் தலைவன். தன் முக்காட்டை மீண்டும் சரிப்படுத்தி முகத்தை நன்கு மறைத்துக் கொண்டு அங்கிருந்து வெளியேறினாள் இளவரசி.

இளவரசி சென்றபின் சாத்தஞ்சாத்தன் ஒருசிறந்த வீரன், பண்புள்ள படைத்தலைவன் என்பதைத் தவிர பாண்டிய மன்னனின் நட்பையும் இளவரசியின் காதலையும் பெற்றுள்ள இளைஞன் என்பதை நன்குணர்ந்த ஒற்றர் படைத் தலைவன் தான் ஏற்றுக்கொண்டிருக்கும் பணி எத்தகைய முக்கியம் வாய்ந்தது என்பதையும் எண்ணிப் பார்த்தான். தன்னுடைய தவறாலோ திறமைக் குறைவாலோ சாத்தனை விடுவிக்கும் முயற்சியில் தோல்வி அடைந்தால் அல்லது சாத்தனுக்கு ஆபத்து நேர்ந்தால் தன் தலை உருளும் என்பதை அவன் நன்குணர்ந்தான். எனவே தான் உருவாக்கப் போகும் திட்டம் வெற்றியை உறுதி செய்யக்கூடிய ஒன்றாக இருக்க வேண்டும். சில நாள்கள் தாமதமானாலும் தவறில்லை. ஆனால் தோல்வி ஏற்படக் கூடாது என்று உறுதி பூண்டான்.

உறையூர் நிலைப்படைக்குத் தலைமை ஏற்பதற்காக நியமிக்கப்பட்ட மாறன் எயினன் மதுரையிலிருந்து அடுத்தநாள் உறையூருக்குப் புறப்பட்டதால் இளந்தத்தனும் வைரவனும் உறையூர் வரை அந்தப் படைத்தலைவனுடன் சென்றனர். அதன் பின் அவர்கள் இருவரும் இரு குதிரைகளில் தகடூர் நோக்கிப் பயணம் செய்தனர். அரசாங்கத்தில் பெரிய பதவிகளில் இருப்பவர்கள் என்பதைக் காண்போர் அறியாத விதத்தில் மிகச் சாதாரணமான பொதுமக்கள்போல் உடையணிந்து யாருடைய கவனத்தையும் கவராதவாறு மெதுவாகவே தம் குதிரைகளை நடத்திச் சென்று தகடூரை அடைந்தனர். நற்சிங்கன் வாழும் வீட்டின் இருப்பிடத்தைப் பற்றி உலகணனிடம் முன்னரே பேசி அறிந்தமையால் அந்த வீட்டைக் கண்டு பிடிப்பது எளிதாகவே இருந்தது.

தன் வீட்டின்முன் இருகுதிரைகள் வந்து நின்றதையும் இருவர் குதிரைகளிலிருந்து இறங்கி வீட்டிற்கு வருதையும் கண்ட நற்சிங்கன் வீட்டிலிருந்து வெளியில் வந்து அவர்களை உற்று நோக்கினான். இருவரில் இளைஞனாகத் தோன்றியவனை இதற்குமுன் கண்டதில்லை ஆயினும், மூத்தவன் பழகியவனாகத் தோன்றியது. ஆனால் சரியாக அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. அவன் சில அடிகள் நடந்து முன்னால் வந்து தன் தலைப்பாகையைக் கழற்றிவிட்டு, "என்ன நற்சிங்கரே! என்னைத் தெரியவில்லையா?" என்று புன் முறுவலுடன் வினவியபொழுதுதான் யாரென்று புரிந்தது.

"இளந்தத்தர் அல்லவா! தலைப்பாகையைக் கழற்றியபின்தான் அடையாளம் தெரிந்தது. நாம் சந்தித்து ஆண்டுகள் பல சென்று விட்டன அல்லவா!" என்று கூறி இளந்தத்தனை வரவேற்றான் நற்சிங்கன்.

"ஆமாம் கொற்கையில் ஒரு வேலையாக நான் வந்தபொழுது நாம் பழகினோம். சென்ற ஆண்டு மீண்டும் கொற்கைக்குச் சென்றேன். அப்பொழுதுதான் நீர் தகடூரில் வசிக்கிறீர் என்று அறிந்தேன். எனக்குச் சில நாள்கள் தகடூரில் தங்கவேண்டிய வேலை உள்ளது. அதற்குத் தக்க இடம் எது என்று உம்மிடம் கேட்கலாம் என்று எண்ணித்தான் இங்கு வந்தேன்" என்றான் இளந்தத்தன். நற்சிங்கனுடன் தங்கலாம் என்ற எண்ணத்தில் வந்திருந்தாலும் ஒருவேளை நற்சிங்கனுக்கு வசதிக்குறைவு இருந்தால் அவனை தர்மசங்கடத்தில் ஆழ்த்தக் கூடாது என்று நினைத்தே இளந்தத்தன் அவ்வாறு கூறினான்.

"சில நாள்கள் தங்குவதற்குத் தக்க இடமா? அதற்குத்தானே என் வீடுஇருக்கிறது! இவ்வளவு பெரிய வீட்டில் நானும் என் வேலையாள்களும் தான் வசிக்கிறோம். நீங்கள் இருவரும், இன்னும்நான்குபேர்களும்வேண்டுமானாலும்இங்கேயேதங்கலாம்" என்று அவர்களை முகம் மலர்ந்து அழைத்தான் நற்சிங்கன்.

"உங்களுக்கு அதனால் தொல்லை ஒன்றும் இல்லை யானால் இங்கே தங்குவதற்கு எங்களுக்குப் பெருமகிழ்ச்சிதான். வீடு தேடி அலைந்து வேறு எங்கும் தங்குவதைவிட உம்மைப்போன்ற நண்பருடன் வசிப்பது நல்லதுதான்" என்று அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு நற்சிங்கன் வீட்டிலேயே வசிக்கத் தொடங்கினர் இளந்தத்தனும் வைரவனும். நற்சிங்கன் கொற்கை போன்ற கடற்கரையில் இருந்த ஊர்களிலிருந்து சங்கு, முத்து பவளம் போன்ற கடல்விளை பொருள்களை வாங்கி தகடூரில் விற்கும் வணிகத்தொழிலில் ஈடுபட்டிருந்தான். தொழில் சிறப்பாக நடந்துகொண்டிருந்ததால் நன்கு பொருள் ஈட்டி வளமாக வாழ்ந்து கொண்டிருந்தான். மனைவியும் மக்களும் கொற்கையிலேயே வசித்தனர். அடிக்கடி அங்குச் சென்று, சில நாள்கள் தன் மனைவிமக்களுடன் கழித்துவிட்டு விற்பனைக்குத் தேவையான பொருள்களையும் வாங்கி வண்டியில் ஏற்றிக்கொண்டு வருவது நற்சிங்கனின் பழக்கம். அவனுடைய கடையில் வேலைசெய்யும் இரு இளைஞர்களும் உணவு சமைப்பதற்கும், வீட்டுவேலைகளைச் செய்வதற்கும் வேறு இரு இளைஞர்களும் அவனுடன் அதே வீட்டில் வசித்து வந்தனர். எனவே தங்குவதற்கான வசதிகள் எல்லாம் நிறைந்த வீடு கிடைத்தது இளந்தத்தனுக்கு.

மாலை மயங்கும் நேரத்தில் இளந்தத்தனும் வைரவனும் வீட்டிலிருந்து வெளியேறி தகடூர் நகர்ப்பகுதிக்குச் சென்றனர். மாலவனின் கடைக்குள் நுழையாமலே உலகணனின் கவனத்தைத் தங்கள் பக்கம் சைகையால் திருப்பிவிட்டு மெதுவாக நடந்தனர். இளந்தத்தன் எதிர்பார்த்தது போலவே, அவர்களைக் கடைக்குள்ளிருந்து கண்ட உலகணன் அவர்களைப் பின் தொடர்ந்து நடந்து வந்தான். விரைவிலேயே அவர்களுக்குச் சைகை காட்டிவிட்டு அவர்களைக் கடந்து முன்னால் நடந்தான். பிறர் யாரும் காண முடியாதவண்ணம் உட்கார்ந்து பேசுவதற்குத் தகுந்த இடத்திற்கு, தகடூரை நன்கறிந்த உலகணன் அவர்களை அழைத்துச் செல்கிறான் என்பதை உணர்ந்துகொண்ட இளந்தத்தனும் வைரவனும் அவனைப் பின்தொடர்ந்து சென்றனர்.

உலகணன் சிலநாள்களுக்குமுன் சாத்தஞ் சாத்தனுடன் பேசிக்கொண்டிருந்த இடமாகிய குமரன் கோயிலையே மீண்டும் தேர்ந்தெடுத்தான். ஒரு சிறுகுன்றின் மேல் அமைந்திருந்த அந்தக் கோவிலுக்குச் செல்வதற்காக அகலமான படிக்கட்டு வழிப்போக்கர்கள் அமர்வதற்கும், படுப்பதற்கும் வசதியாக அமைந்திருந்தது ஆங்காங்கே பலர் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். யாரும் அருகில் இல்லாத ஓர் இடம் பார்த்து உலகணன் அமர்ந்தான். அவன் பின் வந்து கொண்டிருந்த இளந்தத்தனும் வைரவனும் சுற்றுமுற்றும் பார்த்து விட்டு உலகணன் பக்கத்தில் அமர்ந்தனர்.

10. கள்ளில் விளைந்த கதை

"எப்பொழுது வந்தீர்கள் தலைவரே? எங்கே தங்கி இருக்கிறீர்கள்?" என்று வியப்புடன் வினவினான் உலகணன். தலைவர் தன்னிடம் ஆளனுப்பிச் செய்தி அறிவித்துவிட்டு அவருக்குத் தங்குவதற்கான ஏற்பாடுகள் எல்லாம் செய்து முடித்த பின்னரே தகடூருக்கு வருவார் என்று எதிர்பார்த்த அவனுக்கு அவர்களின் திடீர் வருகை அதிசயமாகத் தோன்றியது.

"நாங்கள் நான்கு நாழிகைக்கு முன் வந்து சேர்ந்தோம். முன்பு உன்னிடம் கேட்டறிந்தேன் அல்லவா நற்சிங்கன் என்ற பழைய நண்பர் ஒருவரைப் பற்றி அவருடைய வீட்டில்தான் தங்கி இருக்கிறோம்" என்றான் இளந்தத்தன்.

"விரைவிலேயே நீங்கள் வருவீர்கள் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் வருவதற்குமுன் எனக்குச் செய்தி அனுப்புவீர்கள் என்று நினைத்தேன்."

"நேரம் சற்றும் வீணாகக் கூடாது என்றுதான் நானும் வைரவனும் உன் தகவல் கிடைத்த உடனேயே புறப்பட்டோம். நம்முடைய சாத்தஞ்சாத்தன் சிறையில் வாடுகிறார் அல்லவா? மன்னரும் அமைச்சரும் சேனாதிபதியும் அவரைச் சிறையிலிருந்து வெளியில் கொண்டு வரும் வேலையை நமக்குத் தான் தந்திருக்கிறார்கள். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளத்தான் இப்பொழுது நானும் வைரவனும் வந்துள்ளோம். நீ இதுவரை செய்த வேலையையும் சேகரித்துள்ள செய்திகளையும் சொல்" என்றான் ஒற்றர் படைத்தலைவன்.

உலகணன் சாத்தஞ்சாத்தனைத் தகடூரில் கண்டது முதல் நடந்த நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறினான்.

"இதே இடத்தில்தான் நானும் சாத்தனாரும் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அடுத்தநாள் அவர் அரண்மனைக்குச் சென்று மன்னரிடம் ஓலையைக் கொடுத்ததாகவும் பதிலுக்காகக் காத்திருப்பதாகவும் கூறினார். பதில் கிடைத்தபின் என்னிடம் தகவல் சொன்னபின்னரே மதுரைக்குத் திரும்புவதாகச் சொன்னார். ஆனால் அன்று மாலையில் நான் இங்குவந்து காத்திருந்தும் அவர் வரவில்லை. எனவே அடுத்த நாள் மாலவன் கடையிலிருந்து வருவதாகச் சொல்லிச் சத்திரத்தில் விசாரித்தபொழுதுதான் இரவோடு

இரவாக அவரைக் கைது செய்துகொண்டு போய்விட்டார்கள் என்று தெரிய வந்தது. எனக்குப் பல முறை பயன்பட்டுள்ள காமினி என்னும் பரத்தையர் இல்லத் தலைவியை மீண்டும் பயன்படுத்தி, சிறைக்காவலன் ஒருவன் வாயைக் கிளறி அவர் சிறையில் அடைக்கப் பட்டிருக்கிறார் என்பதை உறுதி செய்தேன். உடனே ஓலை எழுதி, காள மேகத்திடம் கொடுத்துத் தங்களுக்குத் தகவல் அனுப்பினேன். அதன்பின் அந்தச் சிறைக்காவலனுடன் நட்பை வளர்த்து வருகிறேன். அவன் பெயர் தருமன். திருமணம் இன்னும் ஆகவில்லை. தீய பழக்கங்கள் பலவும் உள்ளவன். பரத்தையர் தொடர்பு மட்டுமன்றி, கள்குடிக்கும் பழக்கமும் உண்டு. எனவே அவனை நாம் பயன்படுத்த முடியும். கொங்கு வேந்தரே சிறைக்கு வந்து வெகுநேரம் சாத்தனாருடன் உரையாடிக் கொண்டிருந்ததாக அவன் என்னிடம் கூறினான். சிறைக் கைதிகளுக்கு உணவு கொண்டு செல்வது அவன் வேலையாதலால் சாத்தனாரைக் காணவும் அவரோடு பேசவும் அவனால் முடியும். இதுவரை சாத்தனாரை யாரும் துன்புறுத்தவில்லை யென்றும் நலமாக இருக்கிறார் என்றும் தருமன் என்னிடம் கூறினான்" என்று முடித்தான் உலகணன்.

இளந்தத்தன் உலகணனின் முயற்சியைப் பாராட்டுவது போல் தலையாட்டினான். "ஒவ்வொரு தொழிலுக்கும் தகுதி உடையவர்களைத் தேடிக் கண்டுபிடித்துச் சில வேலைகளைக் கொடுப்பதுதான் தொழில் திறமையின் இரகசியம். இவ்வாறு நீயும் நமக்குப் பயனுள்ள ஒருவனைத் தேடிக்கண்டு பிடித்துள்ளாய். குடிப்பழக்கமும் பரத்தையர் தொடர்பும் உள்ளவன் என்றால் அப்படிப்பட்டவனுக்கு எவ்வளவு பணம் இருந்தாலும் குறைவாகத்தான் தோன்றும். எனவே இன்னும் பணம் கிடைத்தால் இதைவிட இன்பமாக வாழலாமே என்று நினைப்பான். அந்தப் பணத்தாசையையும் நாம் பயன் படுத்திக் கொள்ளலாம். நீ ஒன்று செய்! இன்றே தருமனைச் சந்தித்து உன்னுடைய வீட்டிற்கு அவனை விருந்துக்கு அழைத்துப் பார். உன்னுடைய உறவினர்கள் பாண்டிய நாட்டிலிருந்து வந்திருக்கிறார்கள் என்று சொல்லி, எங்களை அறிமுகப்படுத்திவிடு. தேவைக்கு மேலாகவே கள்ளும் இறைச்சியும் மீனும் வாங்கி வைத்துக்கொள். அவனுக்குப் போதை ஏற்றிவிட்டு அவனிடம் பேசிப் பார்ப்போம். அந்தச் சிறைச்சாலை எப்படி நடத்தப்படுகிறது. பகலில் எத்தனைபேர் காவல் புரிகிறார்கள், இரவில் எத்தனைபேர் காவல் காக்கிறார்கள். ஒரு கைதியைக் கொண்டுவந்தால் அவனை உள்ளேஅடைப்பதற்கான நடை முறை என்ன? உணவு எப்பொழுது அளிக்கப்படுகிறது என்பன போன்ற எல்லா விவரங்களையும் நாம்

அவனிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டும். மேலும் அவனுடைய ஆசையை வளர்த்து அவனுக்குப் பணம் கொடுத்து நம்மோடு ஒத்துழைக்கச் செய்ய வேண்டும். சாத்தனாரைச் சிறைமீட்கும் வேலையிலும் அவனுடைய உதவியைப் பெறமுடியுமா என்பதை ஆராயவேண்டும்" என்று தன் மனத்தில் உருவாக்கி வைத்திருந்த திட்டத்தை வைரவனும் உலகணனும் புரிந்துகொள்ளுமாறு விளக்கினான் ஒற்றர்படைத் தலைவன். அடுத்த நாள் மாலையில் அதே இடத்தில் சந்திப்பது என்று முடிவு செய்து அவர்கள் பிரிந்து சென்றனர்.

காமினியின் இல்லத்தில் சந்தித்து, ஒன்றாகக் கள் அருந்தி நண்பர்கள் ஆகிவிட்டதால் தருமனை விருந்துண்பதற்காக அழைப்பது உலகணனுக்கு மிகவும் எளிய செயலாகவே இருந்தது. "எங்கள் சொந்தக்காரர்கள் இரண்டுபேர் பாண்டிய நாட்டிலிருந்து வந்திருக்கிறார்கள். ஒருவர் அண்ணன் முறையும் மற்றொருவர் மைத்துனன் முறையும் உள்ளவர். நாளை இரவில் ஒரு சிறிய விருந்து நடத்தலாம் என்று நினைக்கிறேன். இங்கே எனக்கு நண்பர்கள் அதிகம் இல்லை. இப்பொழுது நீதான் உற்ற நண்பன். நீயும் வரவேண்டும்" என்று அழைத்தான் அவன்.

"எனக்கு இந்த வாரம் நாளைவரை சிறைக்காவல் வேலை அதனால் நாளை வரமுடியாது. நாளை மறுநாள் வருகிறேன்" என்றான் தருமன். உலகணனும் அதற்கு ஒத்துக்கொண்டான். இளந்தத்தனிடம் அவ்வாறே செய்தி அறிவித்தான்.

ஒற்றர்படைத் தலைவனும், துணைத் தலைவனும் தங்கள் பொழுதை வீணாக்காமல், சாதாரணமான பொதுமக்கள்போல் உடை உடுத்துத் தகடூர் நகரைச் சுற்றி நடந்து பார்வையிட்டனர். முக்கியமாகச் சிறைச்சாலையைச் சுற்றி வந்து வெளியிலிருந்து பார்த்து என்ன வெல்லாம் தெரிந்துகொள்ளவும் மதிப்பிடவும் முடியுமோ அவையெல்லாம் செய்து முடித்தனர்.

சிறைச் சாலையின் புறமதில் முற்றிலும் உயரமாக எழுப்பப்பட்டிருந்தது மட்டுமன்றி, மதிலின்மேல் முள்நிறைந்த கம்பிகளும், கூர்மையான வேல்களும் பதிக்கப்பட்டிருந்தன. எத்தகைய வீரனும் தாவி ஏறமுடியாதவாறு உயரம் இருந்தது. ஏணி போன்ற கருவிகளின் உதவியால் மேலே ஏறினாலும், மதிலைக்கடக்க முடியாதவாறு அகலமாக முள் கம்பி சுருட்டப்பட்டு இணைந்து கிடந்தது. ஆகவே கோட்டை மதிலை முற்றுகை இடுவதைப் போலச் சிறையை முற்றுகையிட்டால் ஒழிய, மதில் வழியாக யாரையும் சிறை மீட்க முடியாது என்பதை இருவரும் நன்கு உணர்ந்தனர்.

சிறை மதிலைச் சுற்றிவந்து, ஒரே ஒரு வாயில் மட்டுமே இருந்தது என்பதையும் உறுதி செய்தனர். அந்த வாயில் எப்பொழுதும் அடைத்தே கிடப்பதையும் அதன் இருபக்கத்திலும் வேல் ஏந்திய இருகாவலர்கள் காத்து நிற்பதையும் கண்டனர். அந்த வாயிலின் கதவுகள் தேர்களோ, வண்டிகளோ அல்லது குதிரைமேல் வரும் வீரர்களோ உள்ளே செல்வதற்கும் வெளியில் போவதற்கும் மட்டுமே திறக்கப்படும். சிறையில் பணிபுரியும் ஊழியர்கள் உள்ளே செல்வதற்காக வாயில் கதவுகளைத் திறக்காமல், ஒரு வாயில் கதவின் சிறுபகுதியாக அமைந்த கிளிவாயில் என்று கூறப்படும் சிறிய இடைவெளியின் வழியாகக் குனிந்தும், கால்களை உயர்த்தி வைத்தும் செல்வதற்கு வழி வகுக்கப்பட்டிருந்தது.

இளந்தத்தனும், வைரவனும் பார்வையிட்டுக் கொண்டிருக்கும் பொழுதே ஒரு வண்டி சிறைவாலில் வந்து நின்றது. சிறைக் காவலர்களில் ஒருவன் முன்னால் வந்து வண்டி ஓட்டிக்கொண்டு வந்தவனிடம் பேசிவிட்டு மற்ற காவலனுக்குச் சைகை காட்ட, வாயில் திறக்கப்பட்டது. வண்டி உள்ளே சென்றது. அப்பொழுது சற்றுத் தொலைவில் வேறொருமதிலும் அதற்கும் வேறொரு வாயிலும் இருந்ததையும் அங்கும் இரு வீரர்கள் காவல் காத்துக் கொண்டு நிற்பதையும் அவர்கள் கண்டனர். எல்லாவற்றையும் கண்ட பின்னர் தகடூரில் இருந்த கொங்கு நாட்டின் சிறையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலமாகவே உள்ளன என்ற முடிவுக்கு வந்தனர். சிறை மதிலுக்குள் செய்யப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பற்றியும் நன்கறிந்த பின்னரே சாத்தனைச் சிறையிலிருந்து மீட்கும் திட்டத்தை வகுக்க முடியும் என்பதையும் நன்கு உணர்ந்தனர். அதற்குத் தருமனின் உதவி தவிர்க்க முடியாதது என்பதும் தெளிவானது.

தருமன், வாழ்க்கை வாழ்ந்து முடிப்பதற்கே என்ற தத்துவத்தைக் கடைப்பிடித்தவன். முப்பது வயதைக் கடந்து விட்டாலும் தனிக்கட்டையாகவும் தன்னிச்சையாகவும் வாழ்ந்து கொண்டிருந்தான். தகடூருக்கு அண்மையில் இருந்த ஒருசிற்றூரில் பிறந்து வளர்ந்து பெற்றோருடன் பூசலிட்டு இளமையிலேயே தகடூர் நகருக்கு ஓடி வந்து பல விதமான தொழில் செய்து கடைசியில் சிறைக் காவலன் ஆனான். அவனுக்குக் கிடைக்கும் ஊதியத்தில் பெரும்பகுதி காமினி வீட்டிலும் ஒரு பகுதி கள்ளுக் கடையிலுமாகச் செலவானதால் அவனுக்கு எப்பொழுதும் பணத்தேவை இருந்தது. அதனால் தான் உலகணன் வலையில் அவன் எளிதில் வீழ்ந்தான். உலகணன் தருமனை அழைத்துச்

சென்றால் கள்ளுக்கும் இறைச்சி வகைகள் அடங்கிய உணவிற்கும் அவனே பணம் கொடுப்பான். தருமனுக்குச் செலவு செய்யவேண்டிய தேவையே ஏற்படாது. எனவேதான் உலகணன் அழைப்பை உடனே ஏற்று விருந்துண்ண வந்தான் தருமன்.

காரமும் கறிப்பொடிகளும் விரவி சுவையோடு பக்குவம் செய்யப்பட்ட மான் இறைச்சியும் தலை நாள் மாலையிலேயே இறக்கி இரவில் புளித்துப் போதை ஏறிய கள்ளும் தருமனின் பருமனான வயிற்றுக்குள் ஓரளவு புகுந்து, கள்ளின் வேகம் மூளையைத் தாக்கத் தொடங்கிய அறிகுறிகள் காணத் தொடங்கின. அதுவரை தருமனின் தரத்திற்கும் சுவைக்கும் ஏற்றவாறு நகைத் துணுக்குகளையும் காமக் குறிப்புகளையும் பற்றிப் பேசிக்கொண்டிருந்த இளந்தத்தனும் வைரவனும், பேச்சுப் பொருளை மாற்றித் தங்களுக்குப் பயன்படும் திசைக்குத் திருப்பும் முயற்சியில் இறங்கினர்.

"பெண்ணாசையைப் பற்றிப் பேசும்போது பெண்ணின் திறமையை நாம் மறந்துவிடக் கூடாது. ஏன் சொல்கிறேன் என்றால் எங்கள் ஊரில் ஒரு குழந்தையின் அணிகலன்களைத் திருடியதற்காகச் சிறையில் அடைக்கப்பட்ட ஓர் இளம் பெண், அந்தச் சிறைக் காவலனையே மயக்கிச் சிறையிலிருந்து தப்பிச் சென்று விட்டாள்" என்று தொடங்கினான் இளந்தத்தன்.

"சிறையிலிருந்து தப்புவது அவ்வளவு எளிதான செயலா?" என்று ஐயத்துடன் கேள்வி எழுப்பினான் வைரவன்.

"ஏன்? நம் தருமன் ஒருசிறைக்காவலன் தானே! என்ன தருமா! நீ என்ன சொல்கிறாய்?" என்று கள்ளின் போதையில் கலங்கத் தொடங்கியிருந்த தருமனிடம் கேட்டான் உலகணன்.

"நான் நான்கு ஆண்டுகளாக இந்தச் சிறையில் காவலனாக இருக்கிறேன். இதுவரை யாரும் எங்கள் சிறையிலிருந்து தப்பியதில்லை" என்று பெருமையுடன் பதில் உரைத்தான் தருமன்.

"நேற்று நாங்கள் தகடூர் நகரத்தைச் சுற்றிப் பார்க்கப் போனோம். அப்பொழுது உங்கள் சிறைச் சாலையையும் பார்த்தோம். இரண்டு வீரர்கள் சிறை வாயிலில் காவல் காத்து நிற்கிறார்கள். வாயிலின் முன் ஒரு வண்டி வந்து நின்றால் ஒரு காவலன் போய் வண்டியை ஓட்டுபவனுடன் பேசிவிட்டு மற்ற காவலனுக்குச் சைகை காட்டுகிறான். அவன் வாயிலைத் திறந்து விடுகிறான். வண்டியில் மூன்று நான்கு பேர் வந்து சாடி இறங்கி அந்த இருகாவலர்களையும்

தாக்கிவிட்டு வாயிலைத் திறக்கலாம் அல்லவா?" என்று எடுத்துக் காட்டினான் இளந்தத்தன்.

"நீங்கள் சரியாகக் கவனிக்கவில்லை! வெளியில் நின்று காவல் புரியும் காவலர்களிடம் சிறைக்கதவைத் திறக்கும் சாவி இல்லை. சிறைக் கதவு உள்ளேதான் பூட்டப்பட்டிருக்கிறது. வண்டியை ஓட்டிவந்தவனிடம் பேசிவிட்டுச் சைகை காட்டியது சரிதான். ஆனால் அதைப் பார்த்தவுடன் கதவில் இருக்கும் சிறிய சாளரத்தின் வழியாக வெளியில் நிற்கும் காவலன் உள்ளே நிற்கும் காவலனிடம் பேசுவான். அதன்பின் உள்ளே நிற்கும் காவலன் தான் கதவைத் திறப்பான். வெளியில் காவல் நிற்கும் காவலர்கள் வருபவர்களிடம் உள்ளே நுழைவதற்கான காரணம் கேட்டு, தக்க காரணம் இருந்தாலோ அல்லது மேல் அலுவலர்களிடமிருந்து அனுமதிச் சீட்டு இருந்தாலோ மட்டுமே கதவைத் திறக்கும்படி உத்தரவிடுவார்கள். அவர்களைத் தாக்கினாலும் யாரும் சிறைக்குள் நுழைய முடியாது" என்று விளக்கினான் தருமன்.

"அப்படியா! அது நல்ல ஏற்பாடுதான்" என்று பாராட்டினான் இளந்தத்தன்.

"சரி எப்படியோ உள்ளே யாராவது புகுந்து விட்டார்கள் என்று வைத்துக்கொள்வோம். அதன் பிறகு என்ன நடக்கும்?" என்று மேலும் வினவினான் வைரவன்.

"சிறை மதிலுக்குள் வாயிலுக்கருகில் உள்ள கூடாரத்தில் நான்கு வீரர்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருப்பார்கள். ஆறு நாழிகை நேரம் ஆகும்பொழுது வெளியில் வேலைசெய்யும் இரண்டு காவலர்களும், உள்ளே வேலைசெய்யும் இரண்டு காவலர்களும் ஓய்வுக்காகக் கூடாரத்திற்குத் திரும்புவார்கள். கூடாரத்திற்குள் ஓய்வில் இருக்கும் நால்வரும் இருவர் உள்ளேயும் இருவர் வெளியிலுமாக வேலையைத் தொடங்குவர்கள்."

"அப்படியானால் சிறைக்குக் காவல் காக்கும் காவலர்களும், ஓய்வெடுக்கும் காவலர்களுமாக எட்டுப்பேர் இருப்பார்கள் அல்லவா?" என்று தொகுத்து உரைத்தான் உலகணன்.

"இல்லை, இல்லை! நான் சொன்ன எட்டுப் பேரும் வெளிவாயிலைக் காப்பவர்கள். சிறைக்குள் அறுபது ஆண்களையும் பத்துப் பெண்களையும் அடைத்துவைப்பதற்கான வசதி உள்ளது. மிக முக்கியமானவர்களும், மிகவும் ஆபத்தானவர்களும் தனி அறைகளில் அடைக்கப்படுவார்கள். அப்படிப்பட்ட பத்து அறைகள் உள்ளன. மூன்றோ நான்கோ ஆள்களை அடைத்துவைக்கக் கூடிய

பதினாறு அறைகள் உள்ளன. இவையெல்லாம் தனித்தனியாகப் பூட்டிவைக்கப்படும். அவற்றின் சாவிகள் சிறையின் முதல் அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. அங்கும் இரண்டு வீரர்கள் காவலாக இருக்கிறார்கள். கைதிகளை வெளியில் விடுவதற்கும், மீண்டும் அடைத்து வைப்பதற்கும் இவர்கள் பொறுப்பானவர்கள். இந்த வீரர்கள் இரவில் இருவரும் பகலில் இருவருமாகப் பணியாற்றுகின்றனர். மேலும் சிறையில் அதிகமான கைதிகளோ அல்லது முக்கியமான கைதிகளோ அடைக்கப்பட்டால், அதற்கேற்ப இன்னும் அதிகமாக வீரர்கள் காவல் வேலைக்காக நியமிக்கப்படுவார்கள். இப்பொழுதுகூட உங்கள் பாண்டிய நாட்டிலிருந்து வந்த ஒரு முக்கியப் புள்ளி எங்கள் சிறையில் இருக்கிறார். அவரை எங்கள் அரசரே வந்து சந்தித்துப் பேசுகிறார். அதனால் அவரைப் பாதுகாப்பதற்காக இரண்டு வீரர்கள் சிறைக்கு வந்துள்ளனர். எப்பொழுதும் ஒருவன் அவர் அறைக்குவெளியிலேயே உட்கார்ந்திருப்பான்." என்று சிறைக்குள் நிலவும் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் படம் வரைந்து காட்டுவதுபோல் விளக்கினான் தருமன்.

நள்ளிரவு நெருங்கிக்கொண்டிருந்தது. இனிமேல் தன்னால் தின்னவும் குடிக்கவும் முடியாது என்ற நிலைமையை அடைந்த தருமன் தள்ளாடித் தள்ளாடி எழுந்தான். "நான் என் வீட்டிற்குப் போகிறேன். நாளைக்குப் பகலில் நான் சிறைக் காவலுக்குப் போகவேண்டும்" என்றான்.

"உன்னால் நடந்து போக முடியுமா? இங்கேயே படுத்துக் கொள்ளேன். காலையில் எழுந்து போகலாம்" என்று உபசரித்தான் உலகணன். "இல்லை, இல்லை எனக்கு நடந்து செல்வதில் கடினம் ஒன்றும் இல்லை. இதைவிட அதிகமாகக் குடித்தாலும் என்னால் நடக்க முடியும்" என்று பொதுவாகக் குடிப்பவர்கள் அடித்துக்கொள்ளும் பெருமையோடு கால் பின்னிப் பின்னி நடந்து சென்றான் தருமன்.

"நீ சரியான ஆளைத்தான் பிடித்திருக்கிறாய். நம் கள்ளும் இறைச்சியும் வீண்போகவில்லை. தகடூர்ச் சிறையின் அமைப்பும், நடைமுறையும், பாதுகாப்பு ஏற்பாடுகளும் இப்பொழுது மிகத் தெளிவாக நமக்குத் தெரியும் நம்மில் ஒருவன் உள்ளே சென்று பார்வையிட்டாலும் இதைவிட அதிகமாகத் தெரிந்துகொள்வதற்கு எதுவும் இல்லை" என்று உலகணனைப் பாராட்டினான் ஒற்றர் படைத் தலைவன்.

"உண்மையில் நாம் நினைத்ததைவிட மிகவும் கடினமான செயல் நாம் ஏற்றுக்கொண்டிருப்பது" என்றுதான் தோன்றுகிறது. ஏறத்தாழ மதுரைச் சிறையைப் போலத்தான் இங்கும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஒரு கைதியைச் சிறையிலிருந்து யாரும் அறியாமல் வெளியில் கொண்டு வருவது மிகக்கடினமான காரியம். நாம் பல தடைகளைத் தாண்டியாக வேண்டும். சாத்தனாரை ஆபத்து எதுவும் நேர்ந்து விடாமல் வெளியில் கொண்டுவரவேண்டும். சாத்தனாரின் அறைக்கு வெளியிலேயே ஒரு காவலன் இருப்பது மற்றொரு பெரிய தடை" என்று கவலையுடன் பேசினான் வைரவன்.

"எப்படியானாலும் இருபது வீரர்களையாவது நாம் இந்த வேலைக்கு ஒதுக்கவேண்டும். எல்லோரும் சிறந்த போர்வீரர்களாக மட்டும்இருந்தாலும்போதாது. புத்திசாலிகளாகவும், சமயோசிதசாலிகளாகவும் இருக்க வேண்டும். நாம் திட்டமிட்டவாறு காரியங்கள் நடக்க வில்லையானால் சூழ்நிலைக்கு ஏற்றவாறு திட்டத்தை மாற்றிச் செயலாற்றும் திறனுள்ளவர்களாக இருக்க வேண்டும்" என்று மேலும் சில சிக்கல்களைக் காட்டினான் உலகணன்.

"சிறைக்கு உள்ளேயே நமக்கு ஓர் ஆள் தேவை. அதற்கு இந்தத் தருமனையே பயன்படுத்திக் கொள்ளலாம். காமினியின் கருணையாலும், கள்ளின் போதையாலும் அவனை இன்னும் நம்முடன் நெருங்கவைப்பது உலகணனின் பொறுப்பு. இந்த வேலைக்குத்தேவைப்படும் வீரர்களை மதுரையிலிருந்துதான் கொண்டுவர வேண்டும். சேனாதிபதியிடம் நம் தேவையைச் சொன்னால், அதற்குரிய வீரர்களை அவர் தருவார். சிறையில் வாடுவது அவருடைய தம்பி என்பதால் அவருடைய முழு ஒத்துழைப்பும் கிடைக்கும். ஆனால் இருபது வீரர்கள் ஒன்றாகப் பயணம் செய்து தகடூருக்குள் புகுந்தால் அது காண்போரின் கவனத்தை ஈர்க்கும். அதன் நோக்கம் என்ன என்று யோசனை எழும். நுண்ணறிவுள்ள அமைச்சரோ, சேனாதிபதியோ, மற்ற படைத்தலைவர்களோ ஒருவேளை உண்மை யைக் கூடக் கண்டு பிடிக்கலாம். ஆகவே நம் வீரர்கள் ஒருவனோ, இருவரோ ஆக வரவேண்டும். தகருக்குள் வெவ்வேறு திசைகளிலிருந்து புகவேண்டும். குறிப்பிட்ட இடத்தில் ஒன்றாக இணைய வேண்டும்" என்று செய்யவேண்டிய முன்னேற்பாடுகளைச் சுட்டிக் காட்டினான் ஒற்றர் படைத் தலைவன்.

சற்றுநேரம் யோசித்துவிட்டு மேலும் கூறினான். "இன்னொன்று வைரவா, நான் மதுரைக்குச் சென்று மன்னரிடமும் மற்ற

பெரியவர்களிடமும் பேசி திட்டத்தை முடிவு செய்து, மன்னரின் அனுமதியையும் பெற்றுத் திரும்புகிறேன். அதற்குள் நீயும் உலகணனும் வேறொரு முயற்சியும் எடுத்துக்கொள்ள வேண்டும். மன்னரோ அல்லது அமைச்சரோ ஓலைகொடுத்து அனுப்பினால் மட்டுமே ஒருவனைச் சிறையில் அடைக்க உள்ளே விடுவார்கள் சிறைக்காவலர்கள் என்று தருமன் சொன்னான் அல்லவா? அந்த ஓலை எப்படி இருக்கும் என்பதை அறியவேண்டும். அதுபோன்ற ஒரு பழைய ஓலை கிடைக்குமா என்று பார்! அது நமக்கு மிகவும் பயனளிக்கும்" என்று பணித்தான். அடுத்த நாளே இளந்தத்தன் மதுரைக்குப் பயணமானான். போவதற்குமுன் நற்சிங்கனிடம் வெகுநேரம் உரையாடினான்.

11. சாத்தன் செய்த சபதம்

சாத்தஞ்சாத்தனைச் சிறையில் அடைத்து வைத்து, அதன் மூலம் பாண்டிய வேந்தனைத் தன் வாள்முனையில் நிறுத்திவிட்டதாகக் கருதிப் பெருமகிழ்ச்சி கொண்ட கொங்குமன்னன் நேரம் கிடைக்கும்பொழுதெல்லாம், சிறைச் சாலைக்குச் சென்று சாத்தனுடன் உரையாடி அவனை அலைக்கழிப்பதை வழக்கமாக்கிக் கொண்டான். அந்த உரையாடலில் தவிர்க்கமுடியாத அல்லது தவிர்க்கவிரும்பாத பேச்சுப் பொருளாக அதியன் எழுப்புவது பாண்டிய இளவரசி தேவந்தியாக இருக்கும். தன் உள்ளத்தில் உயர்ந்த மேடையில் ஏற்றிவைத்திருக்கும் இளவரசியின் பெயரைக்கூட அதியன் வாயிலிருந்து கேட்க விரும்பாத சாத்தஞ்சாத்தனுக்கு அது மிகவும் எரிச்சலையும் பொரிச்சலையும் ஊட்டுகின்றது என்பதை நன்குணர்ந்ததனால் அதியன் அந்தக் கொடிய விளையாட்டிலேயே இன்பம் கண்டான்.

சாத்தஞ்சாத்தனோ, பாண்டியன் நெடுஞ்சடையனுக்கும், தனக்கும் நண்பனாக இருந்த அதியன், பல்லவனுடன் சேர்ந்து பாண்டியனுக்கு எதிராகப் போர்தொடுத்ததற்கு அரசியல் காரணங்கள் இருக்கலாம் என்றுதான் எண்ணியிருந்தான். இளவரசிக்குப் புத்திபுகட்டுவதற்காகவும், அவள் அவனுடைய காதலைப் புறக்கணித்ததற்காகவும் தண்டனையாக அதியன் தன்னைச் சிறைவைத்தான் என்று அவன் வாயிலிருந்தே கேட்டபொழுது, நம்புவதற்கே கடினமாக இருந்தது சாத்தனுக்கு. இளவரசி தேவந்தியுடன் தன்னைப் போலவே அதியனும் நெருங்கிப்பழகியது சாத்தனுக்குத் தெரியும். ஆனால் அதைக் காதல் என்று கருதி அதியன் இளவரசியை அணுகியதோ, அவளிடம் அதைப் பற்றிப் பேசியதோ அவனுக்குத் தெரியாது. இளவரசியும் அதைப்பற்றி அவனிடம் பேசியதில்லை. அவன் தகடூருக்குப் புறப்படும்முன் அவளைக் கண்டு பேசியபொழுது கூட அதியன் அளவுக்கு அதிகமாக நட்புக்கொள்ள முயன்றதாகவும், அதை அவள் விலக்கியதாகவும் குறிப்பிட்டாளே தவிர அதியன், தன்னைக் காதலித்தான் என்று சொல்லவில்லை என்பதை அவன் நினைவு கூர்ந்தான். அதியனின் வெளிப்படுத்தல் சாத்தனுக்கு இளவரசியின்மேல் இருந்த அன்பு, காதல் மதிப்பு ஆகியவற்றை மேலும் வலுப்படுத்தியது. கொங்கு நாட்டின் இளவரசனான

அதியன் காதலைப் புறக்கணித்து ஓர் எளிய படைத்தலைவனான தன் காதலை ஏற்றுக்கொண்ட தேவந்தி தன்னிடம் வைத்த அன்பு எத்தகைய மகத்தானது என்பதை எண்ணி வியந்தான் அவன். தேவந்தி அதியனுக்கு மாலைசூட்ட விரும்பியிருந்தால், அன்னை மகாராணியின் எதிர்ப்பும் வந்திருக்காது என்பதையும் அவன் உணர்ந்தான்.

சாத்தஞ்சாத்தன் இத்தகைய எண்ண அலைகளில் மூழ்கியிருந்த நேரத்தில் அவன் அறைக்கு வெளியில் ஆரவாரம் எழுந்தது. அவனுடைய அறைக்கதவின் அருகில் அமர்ந்திருந்த காவலன் சாடி எழுந்து, விரைவில் நடந்து முன்னால் சென்று தலைவணங்கி நின்றான். மற்றொரு சிறைக் காவலன் ஓர் எடுப்பான இருக்கையைச் சுமந்துக்கொண்டு வந்து அறைக்கு வெளியில் வைத்து வணங்கி நின்றான். கொங்கு வேந்தனின் வருகைக்கான அறிகுறிகள் என்பது சாத்தனுக்குத் தெரியும். இரும்புக் கம்பிகளால் ஆன வேலியும் கதவுமே சிறை அறையையும் வெளிப்பக்கத்தையும் பிரித்தன. வெளியில் இருக்கையில் இருந்துகொண்டு சாத்தனை நிற்க வைத்தோதரையில் அமரவைத்தோ. பேசிக்கொண்டிருப்பதும் அதியன் கண்ட வினோதங்களில் ஒன்று. சாத்தனைச் சிறையில் அடைத்தபின் மூன்றாவது முறையாக அதியன் இன்று வந்திருக்கிறான் என்பதையும் சாத்தன் நினைத்துக்கொண்டான்.

"என்ன சாத்தா! நீ நலமாக இருக்கிறாய் அல்லவா? சிறையில் எந்தக் குறையும் இல்லையே!" என்று ஒரு நண்பன் மற்றொரு நண்பனிடம் கேட்பதுபோல் அக்கறையோடு வினவினான் கொங்கு மன்னன்.

"இல்லை, இல்லை நான் சிறையில் இருந்தாலும் மன்னனின் விருந்தினன் அல்லவா! மன்னரே அடிக்கடி வந்து என் நலம் விசாரித்துச் செல்வதால் எல்லோரும் என்னை நன்றாகக் கவனித்துக்கொள்கிறார்கள்" என்று உட்பொருள் வைத்து விடையிறுத்தான் சாத்தன்.

"ஆமாம் நீ நெடுநாள்கள் இந்தச் சிறையில் வாழவேண்டியவன். பாண்டியச் சக்கரவர்த்தி என்று தன்னைக் கருதிக்கொள்ளும் பராந்தகன் நெடுஞ்சடையன் கொங்கு நாட்டின் மேல் படையெடுத்து வருவதைத் தடுப்பதற்காக அவனே எனக்கு அளித்த ஆயுதம் நீ. அந்த ஆயுதத்தைப் போற்றிக் காக்கவேண்டியது என் கடமை. நான் மதுரை மீது படையெடுத்துச் செல்லும் அளவிற்கு வலிமைபெறும் வரை உன்னை அப்படிப் பயன்

படுத்துவேன். மதுரையைக் கைப்பற்றியபின் உனக்கு விடுதலை அளிப்பேன். அதுவரை இந்தச் சிறைதான் உனக்கு உறைவிடம்" என்று கூறிச் சிரித்தான் கொங்கு மன்னன்.

"அப்படியானால் என் வாழ்நாள் முழுவதும் இந்தச் சிறையிலேயேதான் கழிக்கவேண்டும் என்று சொல்லுங்கள்" என்று அவனை மறைமுகமாக எள்ளி நகையாடினான் சாத்தன்.

"நீ அப்படித்தான் சொல்வாய் என்று எனக்குத் தெரியும். பாண்டியரை வெற்றிகொள்ள என்னாலும் உன்னாலும் முடியாது என்று எண்ணித்தானே நீ வேறு வழியைத் தேடியிருக்கிறாய்! ஆனால் நான் போராடி வெல்வது என்னும் அரசனுக்கு ஏற்ற வழியைத்தான் தேர்ந்தெடுத்துள்ளேன். பாண்டிய நாட்டின் பரப்போடும் வளத்தோடும் ஒப்பிடும்போது என்னுடைய கொங்குநாடு, சிறியது. தனியாக நான் போராடிப் பாண்டியனை முறியடிப்பது முடியாத செயல் என்று எனக்குத் தெரியும். அதற்காகத்தான் பல்லவனுடனும் ஆய்வேளுடனும் கைகோர்த்தேன்' ஆனால் எங்கள் போர்த்திட்டம் சரியாக வகுத்துச் செயல்படுத்தப்படாததால் ஒரு முயற்சி தோல்விகண்டது. இன்னும் தொடர்ந்து பாடுபடுவேன். சேரனின் துணையும் கிடைக்க ஏற்பாடு செய்து வருகிறேன். எங்களுடைய ஒருமித்த தாக்குதலைப் பாண்டியனால் சமாளிக்கமுடியாது. நெடுஞ்சடையனை மதுரை அரியணையிலிருந்து அகற்றி, உன்னுடைய பாண்டிய நாட்டை நாங்கள் பங்கிட்டுக் கொள்வோம்" என்று அவனுடைய பேராசையை வெளியிட்டான் கொங்குவேந்தன். அவனுடைய கண்கள் அந்த நேரத்தில் சாத்தஞ் சாத்தனைக் காணவில்லை எங்கோ வெகுதொலைவில் கண்களுக்கு எட்டாத கற்பனை உலகில் அவன் வடித்தெடுத்த சொல்லுருவத்தைக் கண்டுகொண்டிருந்தன!

"கொங்கு வேந்தரே! நீர் ஏன் இவ்வளவு இழிவாக நடந்து கொள்கிறீர் என்று வியந்தேன் நான். இப்பொழுதுதான் புரிகிறது மண்ணாசையும் பெண்ணாசையும் உம்மை மதிஇழக்கச் செய்துவிட்டன. மாயப் பொன்மானைத் தேடிச் செல்லும் மடைமை, உம்மை ஆட்கொண்டு விட்டது. நண்பன் யார், பகைவன் யார் என்பதைக் கண்டறியும் பகுத்தறிவை நீர் இழந்துவிட்டீர். பாண்டிய வேந்தருடன் மோதி, குன்றின்மீது மோதிய குருவிபோல நீர் குலையப் போகிறீர். அப்பொழுதுதான் உமக்கு நல்லறிவு பிறக்கும். அது போகட்டும், நான் வேறு வழியைத் தேடியிருப்பதாகச் சொன்னீரே, அது என்ன? எனக்குப் புரியவில்லையே?" என்று வினவினான் சாத்தன்.

தன்னுடைய கற்பனை வடித்த கனவுலகிலிருந்து விடுபட்டு நிகழுலகத்திற்கு வந்த அதியன் மீண்டும் வாய்விட்டுச் சிரித்தான். "உனக்குப் புரியவில்லையா? உன் மனத்தில் நீ தீட்டிவைத்திருக்கும் திட்டத்தைத்தானே நான் சுட்டிக் காட்டினேன்? பாண்டிய நாட்டை ஆள்வதற்கான நேர்வழி பாண்டியன் மகனாகப் பிறக்க வேண்டும் என்பது. அந்தப் பாக்கியம் உனக்குக் கிடைக்கவில்லை. மற்றொரு வழி நான் சொன்னது போல் போரில் வெற்றிபெற்றுப் பாண்டிய நாட்டைக் கைப்பற்றுவது. அதைத்தான் நான் தேர்ந்தெடுத்தேன். அதுவும் உன்னால் முடியாது. நீ மிகத் தந்திரமாக மூன்றாவது வழியைக் கண்டுபிடித்துவிட்டாய். பாண்டியனின் மகளை மயக்கி, காதல் என்னும் வலைவீசி, அவள் கழுத்தில் தாலி கட்டிவிட்டால் அரசுக் குடும்பத்தின் உறுப்பினன் ஆகிவிடலாம். நெடுஞ்சடையனுக்கு உடன் பிறந்த தம்பி இல்லை. அவன் தந்தையின் உடன் பிறந்தோரும் யாரும் இல்லை. நெடுஞ்சடையனுக்கு ஏதாவது நேர்ந்து விட்டால் இன்றைய இளவரசி தான் மகாராணியாக முடிசூட்டிக்கொள்ள வேண்டும். அவளுடைய கணவன் என்ற முறையில் நீதான் பாண்டிய நாட்டை ஆள்வாய்! எவ்வளவோ போர்கள் நிகழ்கின்றன. மன்னனுக்கு எப்பொழுது வேண்டுமானலும் ஆபத்து வரலாம். அல்லது ஆபத்து வருமாறு செய்யலாம். ஏன் உன் முகம் இப்படி மாறுகிறது? உன் திட்டத்தை நான் கண்டுபிடித்து விட்டேனே என்பதாலா?" என்று வார்த்தைகளால் குத்தினான் அதியன்.

"இல்லை உமது குறுகிய மனமும் கோணல் புத்தியும் எப்படியெல்லாம் வேலைசெய்கின்றன என்பதை எண்ணி வியப்படைந்ததால்தான் என் முகத்தோற்றம் மாறியது. மனித வாழ்க்கையில் குன்றேறி நிற்கும் குணங்களாகிய நட்பு, காதல் என்னும் புனிதமான கூறுகளை எவ்வளவு இழிவுபடுத்த முடிகிறது உம்மால் என்பதை என்னால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. பலதலைமுறைகளாக அரசாண்ட குடும்பத்தில் பிறந்த நீர், ஔவையார் போன்ற சங்கப் பெரும்புலவர்கள் புகழ்ந்து பாடிய அதியமான் நெடுமானஞ்சியின் வழித்தோன்றலாகிய நீர், இவ்வாறு சீரழிந்து, சிதைந்து, குறுகி, குலைந்து போய்விட்டீரே என்று நினைக்கும்பொழுது என் நெஞ்சம் உண்மையிலேயே கலங்குகின்றது. தேவந்தியை என் உயிரினும் மேலாகக் காதலிக்கும் நான் அவளிடம் காணும் ஒரே குறை அவள் இளவரசி என்பதுதான். அது ஒன்றுதான் இன்னும் எங்கள் திருமணத்திற்குக் குறுக்கே நிற்கிறது. பாண்டியன் நெடுஞ்சடையனோ என் உயிருக்குயிரான நண்பர் என் உயிரைக் கொடுத்தேனும்

என்மன்னனைக் காப்பேன் என்று உறுதிமொழி கூறிப் பாண்டியப் படைத்தலைவனானவன் நான். நான் கலந்துகொள்ளும் எந்தப் போரிலும் என் உயிர் பிரிந்த பின்னரே என் அரசனைப் பகைவன் தொடமுடியும். எனக்கு மன்னனிடம் உள்ள பற்றையோ, தேவந்தியிடம் உள்ள காதலையோ உம்மால் புரிந்துகொள்ள முடியாது என்பதை நான் இன்று நன்றாக உணர்ந்துகொண்டேன். பிறவியிலேயே நோய் நொடியில் தேய்ந்து கொண்டிருப்பவனுக்கு உடல்நலத்தைப் பற்றி எப்படித் தெரிந்துகொள்ள முடியும்?" என்று இளிவரல் பெருகப் பேசினான் சாத்தன்.

சாத்தன் பேசிய உணர்ச்சிமயமான பேச்சோ, அதில் அடங்கியிருந்த தூற்றல்களோ அதியனை வருத்தியதாகத் தோன்றவில்லை. அவன் தன் கற்பனையிலேயே களிப்படைந்து நின்றான். "தேவந்தி! ஆம் அவள் இன்னும் என் மனத்திலிருந்து மறையவில்லை. இளவரசி என்னும் கர்வமும் செல்வச் செருக்கும் அவளைப் பிணித்த நோய்கள், ஆயினும் அவளுடைய அழகை யாரும் குறை கூற முடியாது. காண்போரைக் கவர்ந்து இழுக்கும் அவளுடைய கருநெடுங்கண்கள் இன்னும் என் கண்முன்னால் நிற்கின்றன. அந்தக் கட்டுடலைக் கட்டியணைக்க என் உடல் துடிக்கிறது. தேன் துளும்பும் செவ்விதழ்களைச் சுவைக்க என் இதழ்கள் ஏங்குகின்றன. ஆண்களைப் போருக்கு அழைக்கும் அவளுடைய எடுப்பான..." "நிறுத்து!" என்று அலறினான் சாத்தஞ் சாத்தன்.

சிறைக் கம்பிகளைத் தன் கைகளால் ஒடிக்க முயல்வதுபோல் பலமாகப் பிடித்து ஆட்டிக்கொண்டு சிங்கம் சீறுவதுபோல் அடிவைத்து நின்றான் அவன்.

"இந்தச் சிறைக்கம்பிகள் மட்டும் நமக்கு இடையில் இல்லாமல் இருந்தால் இவ்வாறு இழிசொல் சிந்தும் உன் வாயைக்கிழித்திருப்பேன். உன் நாக்கை அறுத்துக் காக்கைக்கும் கழுகுக்கும் எறிந்திருப்பேன். என்னைச் சிறையில் அடைத்துவிட்டு, சிறைக்கு வெளியில் பாதுகாப்பாக இருந்துகொண்டு என் தேவந்தியை இழிவுபடுத்திய உன்னைப் பழிவாங்காமல் விடமாட்டேன்."

"நீ அடிபட்ட நாய் நன்றாகக் குரைக்கிறாய். நீ சொன்னது போல் உன் நாவை அறுக்க என்னால் முடியும் இப்பொழுதே! ஆனால் நான் அவ்வாறு செய்யமாட்டேன். உன் அழுகையும் அலறலும் என் செவியில் இசையமுதமாகத் தெரிகின்றன. இன்னும் என்ன வேண்டுமானாலும் சொல்! என்னை எப்படிப்

பழிவாங்கப் போகிறாய்? அதையும் சொல் கேட்போம்" என்று சாத்தனை மேலும் சீண்டிவிட்டான் அதியன்.

"பாண்டியர் நெடுஞ்சடையனும் நானும் படையெடுத்து வந்து தகடூரைக் கைப்பற்றுவோம். எங்களைப் பழித்த உன்னைப் போரில் வெல்வோம். உன்னை உயிருடன் பிடித்து மதுரைக்குக் கொண்டுசென்று சிறையில் அடைப்போம். உன்னுடைய இழிசொல் ஒவ்வொன்றிற்கும் வருந்தி, உன்னுடைய விடுதலைக்காக நீ எங்கள் காலில் மண்டியிடவைப்போம். இதை என் சபதமாகவே எடுத்துக்கொள்" என்று சூளுரைத்தான் சாத்தன். "இந்தச் சபதம் நிறைவேறாவிட்டால் என்ன செய்வாய்?" மேலும் ஏளனமாகக் கேட்டான் அதியன்.

"எங்கள் காதலை நீ இழிவுபடுத்தினாய் அல்லவா? என் சபதத்தை நிறைவேற்றியபின்தான் என் காதலியை நான் மணம் முடிப்பேன். இது சத்தியம்" என்று முழங்கினான் சாத்தன்.

"இதெல்லாம் செய்வதற்கு நீ முதலில் இந்தச் சிறையிலிருந்து வெளியில் செல்ல வேண்டும். அதை மறந்து விடாதே" என்று சிரித்துக்கொண்டே அங்கிருந்து எழுந்து சென்றான் அதியன்.

சிறைக்குள் சாத்தஞ்சாத்தனும் அதியனும் இவ்வாறு சொற்போரில் ஈடுபட்டிருந்த நேரத்தில் சிறைக்கு வெளியில் நற்சிங்கனின் வீட்டில் பாண்டிய நாட்டின் ஒற்றர் படையின் துணைத்தலைவனான வைரவனும் அவனுடைய தகடூர் ஒற்றனான உலகணனும் ஆலோசனையில் மூழ்கியிருந்தனர். ஒற்றர் படைத்தலைவனான இளந்தத்தன் அவர்களுக்குக் கொடுத்துச் சென்ற வேலையை எவ்வாறு நிறைவேற்றுவது என்பதுதான் அவர்களுடைய ஆலோசனையின் காரணம். சிறைக்குள் ஒரு கைதியை அடைப்பதற்காகக் கொண்டு வரும்பொழுது அமைச்சரின் இலச்சினைபொறித்த அனுமதிச்சீட்டு இருந்தால் மட்டுமே அந்தக் கைதியைக் காவலர்கள் உள்ளே விடுவார்கள் என்பதால் அந்த அனுமதிச்சீட்டு எப்படி இருக்கும் என்பது தெரியவேண்டும். எனவே ஒரு பழைய அனுமதிச் சீட்டை எப்படியாவது கைப்பற்ற வேண்டும் என்று கட்டளையிட்டுச் சென்றான் இளந்தத்தன். அதை எங்ஙனம் கைப்பற்றுவது என்பதைத்தான் அவர்கள் இருவரும் ஆராய்ந்து கொண்டிருந்தனர்.

"நீ முன்பு செய்ததுபோல் இதற்கும் அந்தக்காமினியையே பயன்படுத்தினால் என்ன?" என்று கேட்டான் வைரவன்.

"ஆனால் அமைச்சரின் இலச்சினை பொறித்த பழைய ஓலையைக் கேட்பதற்கு அவள் என்ன காரணம் கூற முடியும்?" என்று திருப்பிக் கேட்டான் உலகணன்.

"ஓலையை அவள் கேட்க வேண்டாம். ஓலையைப் பற்றி அவளுக்கு ஒன்றும் தெரியவும் வேண்டாம். அவள் புதிய இளம்பெண்களை அவளுடைய இல்லத்திற்குக் கொண்டு வரும் வழக்கம் உண்டல்லவா? ஒரு புதிய அழகி வந்திருப்பதாக அவனுக்கு ஆசை காட்டி அவளை அடையவேண்டுமானால் செலவு அதிகமாகும் என்று அவனிடம் சொல்லட்டும். அதன் பிறகு நாம் அவனிடம் பேச்சுக் கொடுத்து அவனுக்குத் தேவையான பணத்தைத் தரமுடியும் என்றும், அதற்குப் பதிலாக அவன் ஒரு பழைய அனுமதிச் சீட்டைக் கொண்டு வரவேண்டும் என்று சொல்வோம்" என்று எடுத்துரைத்தான் வைரவன். உலகணன் அதை ஏற்றுக்கொண்டு காமினியின் இல்லத்திற்குச் சென்றான்.

"நீங்கள் சொல்வது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. உண்மையிலேயே ஓர் அழகி நேற்றுத்தான் சேரநாட்டிலிருந்து வந்திருக்கிறாள். இந்தத் தருமனுக்கெல்லாம் அவள் கிடைக்கமாட்டாள். பத்துக் காசு தந்தால்தான் அவளை அடையமுடியும்" என்றாள் அவள். "நல்லது. அவனை ஆசைகாட்டி நான் இங்கே அனுப்பி வைக்கிறேன். நீ அந்த ஆசையை இன்னும் அதிகமாக்கிவிடு. பிறகு நான் பார்த்துக்கொள்கிறேன். அவன் பத்துக் காசு கொண்டு வந்தால் நீ அனுமதித்துவிடு. உனக்குப் பரிசாக நானும் பத்துக் காசு தருகிறேன்" என்று அவளுக்கு உறுதி அளித்தான் உலகணன்.

அடுத்தநாள் தருமன் வரும் வழியில் அவனுக்காகக் காத்திருந்த உலகணன், தற்செயலாக அவனைக் கண்டதுபோல் நடித்து அவனுடன் பேச்சுக் கொடுத்தான். பொதுவான உரையாடலுக்கிடையில்" உனக்குப் பிடித்தமான ஒரு செய்தி கேள்விப்பட்டேன். உனக்கும் ஒருவேளை தெரிந்திருக்கும்" என்றான்.

"என்ன செய்தி அது?"

"நம் காமினியின் இல்லத்திற்கு ஒரு புதிய சரக்கு வந்திருக்கிறதாம். அபூர்வமான அழகாம்."

"அப்படியா! எனக்குத் தெரியாதே ஒரு கை பார்க்க வேண்டியது தான்" என்று ஆர்வத்தோடு பேசினான் தருமன். மீன் தூண்டிலைக் கொத்துகிறது என்பதை உணர்ந்துகொண்டான் உலகணன். அவன் கருதியது சரியே என்று அடுத்த நாள் காலையிலேயே

தெரிய வந்தது. அவனைத் தேடிவந்தான் தருமன்.

"நீங்கள் சொன்னது உண்மைதான். உண்மையிலேயே மிகவும் அழகான சரக்கு ஆனால் தூரத்திலிருந்து கண்டதோடு சரி என்னால் நெருங்க முடியாது" என்று வாடிய முகத்துடன் மொழிந்தான் அவன்.

"ஏன்?"

"பத்துக் காசுகள் கொடுத்தால்தான் முடியும் என்று பிடிவாதமாகச் சொல்கிறாள் காமினி. என் ஒரு மாத வருவாய் ஐம்பது பொன்! அதாவது ஐந்து காசுகள். ஒரு நாள் தேவைக்காக பத்துக் காசுகள் செலவுக் செய்தால் நான் பட்டினி கிடந்து சாகவேண்டும்" என்று அலுத்துக்கொண்டான் தருமன்.

"அப்படியா! அதுவும் சரிதான். என்ன செய்வது? என் கையில் இருந்தால் தந்திருப்பேன். இல்லையே" என்று தன் கையை விரித்தான் உலகணன்.

"போகட்டும் எட்டாத பழத்திற்காகக் கொட்டாவி விடுவதில் பயனில்லை" என்று தேற்றிக்கொண்டான் தருமன்.

"இரு, இரு என் அண்ணன் வந்திருக்கிறாரே அவர் ஒரு புலவர்! பழைய அரசு ஆவணங்களையும் ஓலைச்சுவடிகளையும் விலைகொடுத்து வாங்குபவர். எப்பொழுதும் கைநிறையப் பணம் வைத்திருப்பார். அவரிடம் கேட்டுப் பார்க்கிறேன்" என்று தருமனை வெளியில் காத்திருக்கச் சொல்லிவிட்டு உள்ளே சென்றான் உலகணன். சற்று நேரம் கழித்து வெளியே வந்து "நான் நினைத்தது உண்மைதான். அவர் பணம் வைத்திருக்கிறார். உன்னால் வரலாற்றுச் சிறப்புள்ள ஓலை எதுவாவது கொண்டுவர முடியுமானால் தான் அவர் பணம் தருவார்" என்றான்.

தருமனின் முகம் மேலும் வாடியது. "அதற்கு நான் எங்கே போவேன்?" என்றான் அவன். உலகணனும் சிந்தனையில் ஆழ்ந்தவன்போல் இருந்தான். பின் திடீரென்று பேசினான். "எனக்கு ஒருவழிதோன்றுகிறது. அன்று நீ சொன்னாயே, அனுமதிச்சீட்டு இருந்தால் மட்டுமே சிறைக்காவலர்கள் கைதிகளைச் சிறைக்குள் நுழைய விடுவார்கள் என்று. அந்த அனுமதிச் சீட்டுகள் அதற்குப்பின் என்ன ஆகும்?"

"அவற்றைச் சிறையின் காவலன் வாங்கி சிறை அலுவலர்களிடம் கொடுப்பான். அலுவலகத்தில் அவை தொகுத்து வைக்கப்படும்."

"அதில் ஏதாவது ஒன்றை உன்னால் கொண்டு வர முடியுமா?"

தருமன் சற்று நேரம் யோசித்தான். "முடியும் என்று நினைக்கிறேன். நாளை எனக்கு இரவில் காவல். நானும் மற்றொரு வனும்தான் இரவில் அந்த அறையில் படுப்போம். அவன் உறங்கும்பொழுது ஓர் ஓலையை எடுப்பது கடினமல்ல" என்றான். "அப்படியானால் அதைக் கொண்டுவா பத்துக் காசுகளை அண்ணனிடம் பெற்றுத் தருகிறேன்" என்று உறுதியளித்தான் உலகணன்.

இவ்வாறு பத்துக் காசுகள் தருமனுக்கும், பத்துக் காசுகள் காமினிக்கும், அனுமதிச்சீட்டு உலகணனுக்கும் கிடைத்தன.

12. சிறை மீட்கும் சிறிய படை

ஒற்றர் படைத்தலைவன் அமைச்சர் மாறன் காரியைச் சந்தித்து அவன் அறிந்துவந்த செய்திகளைக் கூறத்தொடங்கவே "இரு! இது அரசர் நேரடியாகச் செய்ய விரும்பும் செயல். ஆகவே சேனாதிபதியையும் வரச்சொல்லி, எல்லா விவரங்களையும் மன்னரின் முன்னிலையிலேயே பேசுவோம்" என்று கூறி அவனையும் அழைத்துக்கொண்டு நெடுஞ்சடையனிடம் சென்றார். சேனாதிபதியும் விரைவிலேயே வந்து சேரவே அவர்களுடைய ஆலோசனைக் கூட்டம் தொடங்கியது.

"முதலில் சாத்தனைப் பற்றித் தெரிந்துகொண்ட செய்திகளைச் சொல்லும். அவன் நலமாக இருக்கிறானா?" சிறையில் அவனைக் கொடுமைப் படுத்துகிறார்களா?" என்று வினவினான் வைகைவேந்தன. ஆருயிர்த் தோழனான சாத்தஞ்சாத்தனின் உடல் நலம்தான் அவனைக் கவலைகொள்ளச் செய்திருந்தது.

"சாத்தனாருக்கு ஒருவிதமான தீங்கும் இதுவரை இழைக்கப்படவில்லை என்று தெளிவாகத் தெரிந்துகொண்டேன். கைதிகளுக்கு உணவு கொடுக்கும் சிறைக்காவலன் ஒருவனையே தன் கைக்குள் வைத்திருக்கிறான் உலகணன். சாத்தனார் முக்கியப் புள்ளி என்றும், அவர் அறைக்கு முன் ஒரு காவலன் அவருக்காகக் காவல் காப்பதாகவும் அவன் சொன்னான். மேலும் கொங்கு வேந்தரே சிறைக்குள் சென்று சாத்தனாரிடம் உரையாடுகின்றாராம்" என்றான் இளந்தத்தன்.

"அப்படியா! அதியன் என்னோடும் சாத்தனோடும் நட்புக்கொண்டாடியவன். இப்பொழுது எனக்குத் துரோகம் செய்தும், சாத்தனைச் சிறையில் அடைத்தும் இருவரையும் பகைவராக்கிக் கொண்டான். ஒரு வேளை அவன் செய்தது போலவே சாத்தனை எனக்கு எதிராகத் திருப்புவதற்கு முயற்சிசெய்கிறானோ என்னவோ? ஆனால் அதனால் ஒரு பயனும் விளையாது. சாத்தன் என் மீது அசைக்கமுடியாத பற்றாளன்." என்று நம்பிக்கையுடன் மொழிந்தான் பாண்டிய வேந்தன்.

மன்னருக்கும் அமைச்சருக்கும் சேனாதிபதிக்கும் நன்கு விளங்கும் வண்ணம் தகடூர் நகரின் வேறு பகுதிகளையும், சிறையின் அமைப்பையும் சிறையில் பாதுகாப்பிற்காகச் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகளையும் விரிவாக விளம்பினான் இளந்தத்தன். சிறையின் வெளிப்புற வாயிலைக் காப்பவரும் ஓய்வு கொள்வோருமாக எட்டுக் காவலர்களும், உட்புற வாயிலைப் பூட்டிக் காப்பதற்கு இருவரும், இப்பொழுது சாத்தஞ்சாத்தனின் அறைக்கு வெளியே ஒருவனுமாக ஒரே நேரத்தில் இரவு நேரத்தில் பதினோரு வீரர்கள் சிறையில் இருப்பார்கள் என்பதை எடுத்துரைத்தான். சிறையில் அடைப்பதற்காகக் கொண்டு வரும் கைதியைக் குறிப்பாகத் தேரில் கொண்டு வரும் உயர்ந்த தரக் கைதியை உள்ளே அனுமதிக்கும் விதத்தையும் விளக்கினான். அதற்குத் தேவையான அமைச்சரின் இலச்சினைபொறித்த அனுமதிச்சீட்டு ஒன்றை எப்படியாவது கைப்பற்ற வேண்டும் என்று வைரவனிடம் பணித்த செய்தியையும் தெரிவித்தான்.

"ஒரு போலி அனுமதிச் சீட்டின் உதவியால் சிறையின் வாயிலைத் திறக்கச் செய்துவிட்டால் நம் வீரர்கள், அந்தத் தேரிலிருந்தும், அருகிலுள்ள மற்ற மறைவிடங்களிலிருந்தும் திடீரென்று வெளிப்பட்டுச் சிறையில் புகுந்து அங்குள்ள கொங்கு வீரர்களை அடக்கிச் சாத்தனாரைச் சிறையிலிருந்து வெளியில் கொண்டு வர முடியும்" என்று தன் கருத்தையும் வெளியிட்டான் ஒற்றர்படைத் தலைவன். "நமக்கு எவ்வளவு வீரர்கள் இதற்காகத் தேவைப்படும் சேனாதிபதி?" மன்னர் வினவினார்.

"சிறைமீட்பு என்பது நீண்டநேரப் போராட்டமாக இருக்கக் கூடாது. எனவே நம் வீரர்கள் இருபது பேராவது சிறைக் காவலர்களுடன் மோதி, மிகவிரைவில் அவர்களைக் கீழ்ப்படுத்திச் சாத்தனைச் சிறைமீட்டு வெளியேறிவிட வேண்டும்." என்றார் சேனாதிபதி.

"அவ்வளவு வீரர்களை நாம் தகடூருக்கு அனுப்பினாலும் ஓரிரு நாள் அங்கே தங்கிச் சிறையையும் சூழலையும் நன்கு கண்டறிந்தபின்தான் சிறைமீட்கும் வேலையை நிறைவேற்ற முடியும். அவர்கள் யாரும் ஐயம்கொள்ளாத விதத்தில் தங்குவதற்கு அங்கே வசதிகள் உள்ளனவா?" மன்னர் மேலும் வினவினார்.

"நானும் வைரவனும் இப்பொழுது நற்சிங்கன் என்ற நண்பர் ஒருவர் வீட்டில்தான் தங்கி இருக்கிறோம். அது மிகவும் வசதியான இடம். பரந்த வெளியும் மதில்கட்டும் இருப்பதோடு பல அறைகளும் உள்ளன. நம் வீரர்கள் கூட்டமாக நுழையாமல் மூன்று

நான்கு பேர்களாக நான்கைந்து நாள்களில் அந்த வீட்டிற்குள் புகுந்தால் யாருக்கும் ஐயம் தோன்றாது."

"இது மிகவும் ஆபத்தான காரியம். சாத்தன் சிறையிலிருந்து தப்பியபின் கொங்கு மன்னன் அது எப்படி நடந்தது என்று ஆராய்வான். நீர் சொன்ன அந்த நற்சிங்கன் நமக்கு உதவிசெய்தான் என்று தெரியவந்தால் அவன் தலைஉருளும். இந்த நற்சிங்கன் நமக்காக அவ்வளவு பெரிய ஆபத்தான செயலை எதற்காகச் செய்ய வேண்டும்?" அமைச்சர் மாறன்காரி இளந்தத்தனிடம் வினவினார்.

"ஏனென்றால், நற்சிங்கன் நம் மன்னரிடம் ஒரு வரம் கேட்பதற்காகக் காத்திருக்கிறார் இத்தகைய ஓர் உதவியை நமக்குச் செய்தபின் அவர் தகடூரில் வாழப் போவதில்லை. அவர் வாழ்வதற்காக ஒரு புதிய இடத்தை மன்னரிடம் விண்ணப்பிப்பதற்காக மதுரைக்கு வரப்போகிறார். அது நம் அரசரின் முன்னோர் ஒருவர் நற்சிங்கனின் முன்னோருக்குக் கொடுத்த இடம். இடையில் வந்த களப்பிரர்கள் அதைப் பறித்து விட்டனர். இப்பொழுது மீண்டும் அந்த இடத்திற்கான தன் உரிமையை நிலை நாட்டுவதற்கு நற்சிங்கன் முயற்சி செய்கிறார்." என்று ஒரு புதிய தகவலை வெளியிட்டான் ஒற்றர் படைத் தலைவன்.

"இளந்தத்தரே! என்னவோ பழைய வரலாற்றுக் கதையை அல்லவா சொல்லுகிறீர்! விளக்கிச் சொல்லும் கேட்போம்" என்று ஆவலை வெளியிட்டான் வைகை வேந்தன். இளந்தத்தன் அவ்வாறே செய்தான்.

"பல தலைமுறைகளுக்குமுன் பாண்டிய நாட்டை ஆட்சிபுரிந்த பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்டிய வேந்தன் தன் குடிமக்களுள் ஒருவனாகிய கொற்கைக் கிழான் நற்கொற்றனுக்கு வேள்விக்குடி என்னும் ஊரை நன்கொடையாக வழங்கினார். கொற்கைக் கிழான் மன்னருக்குச் செய்த நற்பெரும் சேவைக்குப் பரிசாக அதை வழங்கியிருக்க வேண்டும். எவ்வாறாயினும், பாண்டிய அரசை மதுரையிலிருந்து அகற்றி ஆட்சியைக் கைப்பற்றிய களப்பிரர்கள் அந்த வேள்விக்குடியைக் கொற்கை கிழானின் சந்ததியார்களிடமிருந்து பிடுங்கிக் கொண்டனர். இப்பொழுது அது பாண்டியர் ஆட்சியின் கீழ்தான் உள்ளது. அதற்கான ஆவணங்கள் நற்சிங்கனிடம் உள்ளன. அந்த வேள்விக்குடியை மீண்டும் தனக்கு வழங்கவேண்டும் என்ற கோரிக்கையுடன்தான் நற்சிங்கர் நம் மன்னரிடம் வருவார். அதனால்தான் அவரை முற்றிலும் நம்பலாம் என்றும், அவர்

முழுமனத்துடன் ஒத்துழைப்பார் என்றும் நான் உறுதியாகச் சொல்கிறேன்" என்று அழுத்திக் கூறினான் இளந்தத்தன்.

"சாத்தனைச் சிறையிலிருந்து வெளியில் கொண்டுவரும் பணியில் நமக்கு நற்சிங்கன் செய்யும் தொண்டைப் பாராட்டி இந்த வேள்விக்குடியை மீண்டும் அவருக்குக் கொடுப்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சி தரும். அதைப்பற்றிக் கவலைகொள்ள வேண்டாம்" என்று வாக்களித்தான் வைகைவேந்தன்.

"சரி நாம் இருபது வீரர்களுடன் செல்வதாக வைத்துக் கொள்வோம். சிலர் கைதியைக் கொண்டுசெல்லும் தேரிலும், வேறு சிலர் சிறையின் அருகில் மறைந்து இருந்தும் திடீரென்று வெளிப்பட்டுச் சிறைக்குள் இருக்கும் பதினோரு காவலர்களுடன் மோதினால் வாள் வேல் போன்ற ஆயதங்களின் ஒலியும், வீரர்கள் ஒருவருடன் ஒருவர் போராடும் ஒலியும் எழத்தானே செய்யும், அந்த ஓசையைக் கேட்டு மேலும் தகடூர் வீரர்கள் ஓடிவந்தால் என்ன ஆகும்? நம் வீரர்கள் கொல்லப்படுவதோடு சாத்தனின் உயிருக்கும் ஆபத்து நேரலாம். ஆகவே இந்தத்திட்டம் சரியானது தானா என்பதை நன்கு ஆராயவேண்டும்" என்று எடுத்துரைத்தார் சேனாதிபதி.

"சேனாதிபதியின் சந்தேகம் முற்றிலும் சரியானதுதான். வாளோடு வாள் மோதும் ஓசையும், தாக்கும் வீரர்களின் ஆரவாரமும், புண்படும் காவலர்களின் அலறலும் கட்டாயம் வெளியில் கேட்கும். நாம் இத்தகைய செயலை இரவு நேரத்தில்தான் நிறைவேற்ற முடியும் என்பது தெளிவு. எனவே இரவு நேரத்தில் ஓசை வெகுதூரத்திலும் கேட்கும். இந்தத் திட்டத்தில் ஓரளவு மாற்றம் செய்தே ஆகவேண்டும். கூடுமானவரை ஒருநேரடி மோதலைத் தவிர்க்க வேண்டும். பத்தோ பதினைந்தோ வீரர்கள் சிறைவாயிலுக்கு அருகில் யார் கண்ணிலும் படாதவாறு மறைந்து இருக்க வேண்டும். அவர்கள் தலையிடவேண்டிய சூழ்நிலை எழுந்தாலன்றி அவர்கள் வெளியில் தலைகாட்டவே கூடாது. நாம் தேர்ந்தெடுக்கும் ஐந்து தலைசிறந்த போராளிகள் மட்டும் சிறை மீட்புப் பணியைச் செய்தால் போதும், அமைச்சரின் இலச்சினை பொறித்த அனுமதிச் சீட்டுடன் இரண்டு வீரர்கள் கைதியின் இருபுறமும் தேருக்குள் இருக்க வேண்டும். தேர் ஓட்டியும் அவனுக்குக் கையாளாக வேறு ஒரு வீரனும் தேருக்கு வெளியில் இருக்க வேண்டும். அனுமதிச் சீட்டைப் பரிசோதித்தபின் சிறைக் காவலர்கள் வாயிலைத் திறக்கும்பொழுது தேரை உள்ளே செலுத்த வேண்டும் தேர் நேரே உள்வாயிலுக்குச் சென்று நிற்க வேண்டும்.

கைதியும் அவனைப் பிடித்துக் கொண்டு இரு வீரர்களும் சிறைக்குள் நுழையவேண்டும். தேரோட்டியும் கையாளும் அவர்களின்பின் மெல்லச் செல்லவேண்டும். இந்த ஐவரும் இருசிறைக் காவலர்களையும் ஓசை வெளியில் வராமலேயே கீழ்ப்படுத்தி வாயைப் பொத்தி, கைகால்களைக் கட்டிப் போட்டபின் உள்ளே சென்று சாத்தனின் அறைக்குச் செல்லவேண்டும். அறைக்கு வெளியில் ஒரு காவலன் இருப்பதால் சாத்தன் அடைக்கப்பட்டிருக்கும் அறையை எளிதில் கண்டுபிடிக்கலாம். அந்தக் காவலனும் சிறைக்குப் புதிய கைதியைக் கொண்டு வருகிறார்கள் என்றுதான் நினைப்பான். அவனை நெருங்கியவுடன் நம் வீரர்கள் ஓசை எழுப்பாமல் அவனையும் கீழ்ப்படுத்திக் கைகால்களையும் வாயையும் கட்டிப்போட்டுவிட்டு சாத்தனை விடுவித்துவிடவேண்டும். தேரில் சாத்தனை மறைத்து வைத்து, உள்ளே புகுந்தது போலவே தேரை வெளியில் ஓட்டிக்கொண்டு வரவேண்டும். இரவோடு இரவாகவே தகடூரைவிட்டு வெளியேற வேண்டும். இதுதான் எனக்குச் சரியாகத் தோன்றும் திட்டம்" என்று தன் திட்டத்தை விளக்கியுரைத்தான் பாண்டியன் நெடுஞ்சடையன்.

அமைச்சரும், சேனாதிபதியும், ஒற்றர்படைத் தலைவனும் மன்னனின் மதிநுட்பத்தையும் போர்த்தந்திரத்தையும் பாராட்டி அவன் வகுத்ததிட்டத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டனர்.

"தகவல்களைச் சேகரிக்கும் கலைவேறு. அவ்வாறு சேகரித்த தகவல்களைத் தேவைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு பயன்படுத்தும் கலைவேறு என்பதை நான் தெளிவாகப் புரிந்து கொண்டேன்' என்று தான் வகுத்ததிட்டத்தின் குறையை உணர்ந்து மன்னனைப் புகழ்ந்தான் ஒற்றர் படைத் தலைவன்.

பாண்டிய வேந்தன் மேலும் திட்டத்தைக் கூர்மையாக்கிப் பேசினான். "இந்தத் திட்டம் வெற்றிபெறுவது தேரில் செல்லும் ஐவரின் திறமையில்தான் அடங்கியிருக்கிறது. என் தேரோட்டி இளங்குமரன் தேரை ஓட்டுவதோடு போர்புரிவதிலும் வல்லவன். நம் குதிரைப்படையின் துணைத்தலைவன் தேவரன் அவனுடைய கையாளாகச் செல்லலாம். என் மெய்க்காப்பாளன் தங்கனும், சேனாதிபதியின் மெய்க்காப்பாளன் வரதனும் கைதியைக் கொண்டுவரும் காவலர்களாகத் தேரில் இருக்கலாம். அவர்கள் இருவருமே ஆயுதம் இல்லாமலே பகைவனைப் பிணமாக்கும் ஆற்றல் படைத்தலைவர்கள். இரண்டு சிறைக் காவலர்களைக் கீழ்ப்படுத்துவது அவர்களுக்கு ஒரு சிறு விளையாட்டாகத்தான்

இருக்கும். தேவைப்பட்டால் அவர்களுக்கு உதவ கைதியாகச் செல்லும் வீரனும் இருப்பானே!" என்று நிறுத்தினார் பாண்டியர்.

ஐவரில் நால்வரை மட்டும் பெயரிட்டுக் குறிப்பிட்ட மன்னர் ஏன் கைதியாகச் செல்ல வேண்டிய ஐந்தாவது வீரனைக்குறிப்பிட வில்லை என்ற கேள்விக்குறி மற்றவர்களுக்கு முன் சேனாதிபதிக்கு எழுந்தது.

"கைதியாக யார் செல்லவேண்டும். அரசே! அதையும் தாங்களே கூறிவிடுங்கள்" என்று வேண்டினார் சேனாதிபதி. அதற்கு அமைச்சர் விடையளித்தார்.

"கைதியாகச் செல்லும் வீரனும் மற்ற நால்வரையும் போலவே சிறந்த வீரனும் திட்டத்தைத் தவறாது நிறைவேற்றும் ஆற்றல் உள்ளவரும் ஆக இருக்க வேண்டும். ஆகவே அது யார் என்பதை மன்னர் வெளிப்படுத்தவில்லை என்றாலும் நான் ஊகித்துவிட்டேன். இந்த நாட்டின் ஒப்புயர்வற்ற வீரன் பராந்தகன் நெடுஞ்சடையன்தான்" என்று புன்முறுவலுடன் மொழிந்தார் அவர்.

"ஆம் அமைச்சரே! சாத்தன் இந்நாட்டின் தலை சிறந்த படைத்தலைவர்களில் ஒருவன் என்பது மட்டுமன்றி என் ஆருயிர் நண்பன். என் உயிர்காத்த தோழன் முன்பொரு நாள் வனவிலங்குகளை வேட்டையாடச் சென்றபொழுது தன் உயிரைப் பற்றி அச்சம் இன்றி என் உயிரைக் காக்கும் துணிச்சலை அவன் காட்டவில்லையானால் இன்று நான் உங்கள் அரசனாக இருந்திருக்க மாட்டேன். எனவே அவனைச் சிறைமீட்கும் பணியில் நானே நேரடியாகப் பங்குகொண்டு அதற்குத் தலைமைதாங்கி நடத்த வேண்டும் என்று விரும்புகின்றேன்" என்று உணர்ச்சிபொங்கப் பேசினான் வைகை வேந்தன்.

அமைச்சரும், சேனாதிபதியும் பாண்டிய மன்னர் ஆபத்து விளையக் கூடிய சிறைமீட்புப் பணியில் ஈடுபடுவதை விரும்பவில்லை. ஆயினும் அவர் எடுத்த முடிவிலிருந்து மாறமாட்டார் என்பதை நன்குணர்ந்ததால் அந்த முடிவை ஏற்றுக் கொண்டனர். ஆனால் அமைச்சர் தம்முடைய பொறுப்பைத் தட்டிக் கழிக்கவில்லை. "அரசே! தங்களுடைய உயர் பண்புகளையும் அஞ்சா நெஞ்சையும் பாராட்டினாலும் நான் ஒன்றை வலியுறுத்த விரும்புகின்றேன். தாங்கள் வாழவேண்டியது இந்த நாட்டின் நல்வாழ்வோடு இணைந்தது. எனவே சாத்தனைச் சிறைமீட்கும் பணியில் ஏதேனும் தடையோ, தோல்வியோ நேர்ந்தாலும் தாங்கள் அபாயம்

இன்றித் திரும்பிவரவேண்டும் அதை மனத்தில் கொண்டு செயலாற்றுங்கள் என்று வேண்டுகிறேன்" என்று மன்றாடினார்.

"தங்கள் உணர்ச்சியையும் அறிவுரையையும் நான் மதிக்கிறேன் அமைச்சரே! தாங்கள் சற்றும் கவலைகொள்ள வேண்டாம். நான் எந்தக் கேடும் இல்லாமல் சாத்தனுடன் திரும்பி வருவேன்" என்று முழுநம்பிக்கையுடன் பேசினான் நெடுஞ்சடையன்.

ஒற்றர்படைத் தலைவன் மன்னனிடம் வேறு ஓர் அனுமதியும் வேண்டினான். "இந்த வேலைக்காக என் உதவியாளன் வேறு ஒருவனையும் தகடூருக்குக் கொண்டு செல்ல அனுமதிக்க வேண்டும் உலகணன் சிறையில் கைதியை அடைப்பதற்காக அமைச்சர் கொடுத்தனுப்பும் இலச்சினை பொறித்த அனுமதிச்சீட்டை இந்நேரம் கைப்பற்றி யிருப்பான். அதைக் கண்முன் வைத்துக்கொண்டு அதைப் போன்ற ஒரு போலி அனுமதிச்சீட்டை வேறு ஓர் ஓலையில் எழுதவேண்டும். சிறைக் காவலர்களுக்குச் சற்றும் ஐயம் எழாதவகையில் உண்மை அனுமதிச்சீட்டைப் போலவே அது தோற்றம் அளிக்கவேண்டும். அவ்வாறு எழுதும் வல்லவன் ஒருவன் என்னிடம் இருக்கிறான். அவனையும் தகடூருக்குக் கொண்டுசெல்லவேண்டும்" என்று வேண்டினான் அவன்.

"அப்படியே ஆகட்டும்! அது மிகவும் முக்கியமான வேலை அல்லவா" என்று அனுமதித்தான் அரசன்.

இந்த உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்த சேனாதிபதியின் மனத்தில் வேறு ஒரு யோசனையும் சந்தேகமும் தலைதூக்கின.

"அமைச்சரின் இலச்சினையையும் ஓலையின் எழுத்து முறையையும் சற்றும் ஐயம் எழாதவண்ணம் உண்மை ஓலையில் உள்ளது போலவே எழுதும் வல்லவன் ஒருவன் உன்னிடம் இருந்தால் ஏன் இவ்வளவு வளைந்த வழியைப் பின்பற்ற வேண்டும்? சிறைக்குள் ஒரு கைதியை அடைப்பதற்குள்ள உத்தரவைவிட சிறையிலிருந்து சாத்தஞ் சாத்தனை விடுதலை செய்யும்படி ஓலையில் எழுதி அதில் அமைச்சரின் இலச்சினையைப் பொறித்தால் என்ன? சாத்தனைச் சிறையிலிருந்து அவர்கள் விடுதலை செய்துவிட்டால் எந்த ஆபத்தும் இல்லாமல் நாம் அவனைத் தகடூரிலிருந்து வெளியில் கொண்டு வந்து விடலாமே! எதற்காக நம் மன்னரும் வீரர்களும் ஒரு பெரிய ஆபத்தான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்?" என்று வினவினார் அவர்.

அதற்கு ஒற்றர்படைத் தலைவன் விடை அளித்தான் "சேனாதிபதி! சிறைக்குள் இருக்கும் கைதியை வெளியில் கொண்டுவரும் முயற்சியில் வெற்றி கிடைக்காது என்பதை நன்குணர்ந்த பின்புதான் கைதியை உள்ளே புகுத்தும் யுக்தியை மேற்கொள்ள முடிவு செய்தோம். அமைச்சரோ அல்லது அரசரோ ஆணையிட்டால்கூட ஒரு கைதியை விடுதலை செய்யும் அதிகாரம் சிறைக் காவலர்களுக்குக் கிடையாது. அத்தகைய ஆணையை அரசு அலுவலர்களில் பொறுப்பான ஒருவர் சிறைக்காப்பாளரிடம் கொண்டு கொடுக்கவேண்டும். அவர்கள் ஒருவரை ஒருவர் அறிந்தவர்களாகவே பெரும்பாலும் இருப்பார்கள். சிறைக்காப்பாளர் பகல் நேரத்தில் மட்டுமே சிறை அலுவலகத்தில் காணப்படுவார். விடுதலை ஆணையைப் பெற்றவுடன் அவர் தன் காவலர்களுடன் சென்று கைதியின் அறையைத் திறந்து கைதியை விடுதலை செய்வார். பகல் நேரமாகையால் சிறை அலுவலர்கள் சமையல் செய்வோர், துப்புரவுத்தொழில் செய்வோர் ஆகிய பலரும் இருப்பார்கள். ஆகவே போலி ஓலையைக் கொண்டுபோய் கொடுத்து சிறையிலிருந்து சாத்தனாரை விடுதலையடைச் செய்வது இயலாத காரியம்" என்று விளக்கினான் இளந்தத்தன்.

"ஆம் சேனாதிபதி! ஒருவனைச் சிறையில் அடைப்பது மிகவும் எளிது. ஆனால் அவன் சிறையிலிருந்து விடுதலை ஆவது மிகவும் கடினம். அதனால்தான் தீர விசாரித்துக் குற்றம் புரிந்தவன் என்பதை ஐயம், திரிபின்றி உறுதி செய்த பின்னரே ஒருவரைச் சிறையில் அடைக்க ஓர் அரசன் முடிவுசெய்ய வேண்டும் என்று பெரியோர்கள் கூறியுள்ளனர்" என்று நீதி வழங்கும் நெறியில் பிழையின்றிச் செயல்படவேண்டும் என்ற தன் உள்ளக்கிடக்கையை வெளியிட்டார் வைகைவேந்தர்.

சாத்தஞ் சாத்தனைத் தகடூர்ச் சிறையில் அதிக நாள் வாடச்செய்ய விரும்பாத நெடுஞ்சடையனின் விருப்பத்தால் சிறைமீட்கும் திட்டம் விரைவிலேயே செயல்படத் தொடங்கியது. இரண்டு நாள்களில், செய்யவேண்டிய முன்னேற்பாடுகளையெல்லாம் செய்து முடித்து விட்டு நெடுஞ்சடையன் பயணமானான். அதற்கு முன்னரே நான்கு வீரர்கள் வீதம் மூன்று குழுக்களாகப் பொருக்கியெடுத்து வீரர்கள் பல்வேறு திசைகளிலிருந்து தகடூருக்குள் நுழைந்து ஒருவரோ இருவரோ ஆக நற்சிங்கனின் வீட்டிற்குச் சென்று காத்திருக்கவேண்டும் என்ற கட்டளையுடன் புறப்பட்டனர். இளந்தத்தனும் ஓலை எழுதும் வல்லவனான உத்தமனும் முதல் நாளே புறப்பட்டுச் சென்றனர்.

பாண்டிய வேந்தனின் தேரில் எப்பொழுதும் பறக்கும் மீன் கொடியும், மன்னனுக்கே உரிய மற்ற சிறப்பு அணிகலன்களும் அலங்காரங்களும் அகற்றப்பட்டன. வசதிகள் இருப்பினும் அலங்காரமும், ஆடம்பரமும் இல்லாத தேராக அதனை மாற்றியமைத்து ஒரு பெரு வணிகன் பயணம் செய்வதைப் போன்ற தோற்றம் உருவாக்கப் பட்டது. அதற்கேற்ப பராந்தகன் நெடுஞ்சடையனும் உடைஉடுத்திக் கொண்டார். அவருடைய தேரோட்டியும், மெய்காப்பாளனும் அவ்வாறே தகுதிக்கும், தொழிலுக்கும் ஏற்றவாறு உடையணிந்து கொண்டு மன்னருடன் தேரில் பயணம் செய்தனர்.

13. அடைத்துவைத்தாலும் அஞ்சா நெஞ்சம்

தகடூர் நகரம், மதுரை, உறையூர், வஞ்சி போன்ற நகர்களுடன் ஒப்பிடும் பொழுது சிறிய நகரமாயினும் பல நூற்றாண்டுகளாகக் கொங்கு நாட்டின் தலைநகராக இருந்ததாலும், அதியமான் நெடுமானஞ்சி போன்ற சிறந்த அரசர்களால் சங்ககாலத்திற்கு முன்பிருந்தே ஆளப்பட்டதாலும் வளமும், வனப்பும், வணிகப் பெருமையும் உள்ள நகரமாக விளங்கியது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து தங்களுக்குத் தேவையான பலவிதமான பொருள்களை வாங்குவோரும், அதுபோலவே பலவகையான விளைபொருள்களையும், தொழில் கருவிகளையும், துணிவகைகளையும் விற்போரும் நாள்தோறும் வந்து போகும் இடமாகையால், அங்காடிகளும் சந்தைகளும் நிறைந்து, நகரம் ஆரவாரமாகக் காணப்பட்டது. ஆகவே மூன்று நான்கு சிறுகுழுக்களாக நகருக்குள் வெவ்வேறு வழியாகப் புகுந்து நற்சிங்கரின் வீட்டை அடைந்த பாண்டிய வீரர்களை யாரும் கவனிக்கவில்லை. முதலாவதாகக் குழுவின் தலைவன், ஒற்றர்படைத் துணைத் தலைவன் வைரவனைச் சந்தித்து இன்னும் பலர் வருவர் என்று தெரிவிக்கவே வைரவன் நற்சிங்கனிடம் பேசி, வரும் வீரர்கள் தங்குவதற்கான வசதிகளைச் செவ்வெனச் செய்திருந்தான். ஆனால் பாண்டிய வேந்தர் நேரில் வரப்போகும் செய்தி யாருக்கும் தெரியாத இரகசியமாகவே வைக்கப்பட்டது.

அடுத்தநாள் மாலையில் ஒற்றர்படைத்தலைவன் போலி ஓலை வல்லுநன் உத்தமனுடன் வந்து சேர்ந்தான். உலகணனும் வைரவனும் சேர்ந்து அமைச்சர் இலச்சினைபொறித்த பழைய ஓலை ஒன்றைக் கைப்பற்றியதை அறிந்து மனம் மகிழ்ந்தான்.

"நான் போகும் முன்னால் இந்த வேலையை உங்களிடம் ஒப்படைத்துச் சென்றது எவ்வளவு நல்லதாகப் போயிற்று! இப்பொழுது சாத்தனாரைச் சிறை மீட்கும் திட்டமே இந்த ஓலையில்தான் இருக்கிறது" என்று சொல்லி, வைரவன் அளித்த பழைய அனுமதிச்சீட்டை நன்கு பரிசோதித்தான். பின் உத்தமனை அழைத்து அவன் கையில் அந்த அனுமதிச்சீட்டைக் கொடுத்தான். 'நன்றாகப் பார் இதைப் போன்று ஏதேனும் ஒரு பெயரில்

கைதியைச் சிறையில் அடைக்கும்படி ஓலை எழுதி, அமைச்சரின் இலச்சினையை அதில் பொறிக்க முடியுமா என்று பார்" என்று வினவினான்.

ஓலையை வாங்கிப் படித்து, அதன் கையெழுத்துக்களின் வடிவையும், இலச்சினையின் வளைவு நெளிவுகளையும் கூர்ந்து பார்வையிட்ட உத்தமன், நம்பிக்கையுடன் தலையாட்டினான். "முதலில் இதே பெயரில் ஓர் ஓலையில் எழுதிக் காட்டுகிறேன். அது சரியாக இருக்கிறது என்று தங்களுக்குத் தோன்றினால் வேறு பெயரில் எழுதித் தருகிறேன்" என்றான். அவ்வாறே செய்யும்படி உத்தமனிடம் கூறி அனுப்பிவிட்டு, வைரவனைத் தனியாக அழைத்துப் பேசினான் இளந்தத்தன்.

"வைரவா! நான் இப்பொழுது உன்னிடம் சொல்லப் போகும் செய்தி வேறு யாருக்கும் தெரியக் கூடாது. சாத்தனாரைச் சிறைமீட்கும் பணியை நம் அரசரே தலைமையேற்று நடத்தப் போகிறார். ஆனால் அவர் பாண்டிய வேந்தர் என்பது நம்மைத் தவிர வேறு யாருக்கும் தெரியக் கூடாது. நற்சிங்கனுக்கோ, அவருடைய ஆள்களுக்கோ தெரிந்தால் பெரிய பரபரப்பாகிவிடும். வெளியில் செய்தி பரவக் கூடும். பாண்டிய அரசர் இங்கே இருக்கும் செய்தி தெரிந்தால் அதியன் அவரைப் பிடிப்பதற்காகவும் அழிப்பதற்காகவும் என்ன வேண்டுமானாலும் செய்வான் என்பது உனக்குத் தெரியும் அல்லவா? அவரைக் கண்போல் காத்து எந்த விதத் தீங்கும் விளையாமல் திரும்பவும் மதுரைக்குக்கொண்டு செல்ல வேண்டியது நம் பொறுப்பு" என்று வைரவனை எச்சரித்தான் இளந்தத்தன்.

"மதுரையிலிருந்து வந்திருக்கும் வீரர்களில் சிலர் அரசரைப் பார்த்திருப்பார்கள். அவர்கள் மூலமாகவும் தற்செயலாக மன்னரைப் பற்றிய செய்தி வெளிப்படலாம் அல்லவா?" என்று வினவினான் வைரவன்.

"மன்னர் மாறுவேடத்தில் தான் வருவார். அதனால் நெருங்கிப் பழகியவர்கள் ஒருவேளை, அடையாளம் கண்டுகொண்டாலும் தூரத்திலிருந்து எப்பொழுதோ கண்டவர்களுக்கு அவர் மன்னர் என்பது தெரியவராது. மேலும் ஒரு படைத்தலைவனைச் சிறையிலிருந்து வெளியில் கொண்டுவருவதற்காக மன்னரே நேரில் வருவார் என்று யாரும் நினைக்கவாய்ப்பு இல்லை. ஆகவே சந்தேகம் எழுந்தால்கூட நம்பமாட்டார்கள். எதற்கும் நாம் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். உலகணன் மன்னரைக் கண்டால் அறிந்து கொள்வான். அவனிடமும் சொல்லிவைக்க வேண்டும்." என்றான் ஒற்றர் படைத் தலைவன்.

நற்சிங்கனிடமும் அவன் வெகுநேரம் பேசினான். "நற்சிங்கரே! தங்களுடைய வேள்விக்குடியின் வரலாற்றை மன்னரிடம் விரிவாக எடுத்துச் சொன்னேன். சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் சாத்தஞ்சாத்தன் மன்னருக்கு மிகவும் வேண்டிய நண்பர். அவரைச் சிறையிலிருந்து விடுவிப்பதற்கு நற்சிங்கன் பேருதவி செய்கின்றார் என்று நான் மன்னரிடம் கூறிவிட்டேன். சாத்தஞ் சாத்தனைச் சிறை மீட்பதற்கு நற்சிங்கன் செய்யும் சேவையைப் பாராட்டி அதற்குப் பரிசாக வேள்விக்குடியை மீண்டும் நற்சிங்கனுக்கும் அவருடைய வழிவந்தோர்க்கும் வழங்குவதாக மன்னர் உறுதி அளித்துள்ளார். மன்னருடைய நண்பரும் சேனாதிபதிக்கு அடுத்த பதவியை வகிப்பவருமான மனூபமன் என்ற வீரர் இந்தச்சிறை மீட்புப் பணியைத் தலைமை ஏற்று நடத்துவதற்காக நாளை வந்து சேர்வார். அவரையும் மிகவும் நன்றாக கவனித்துக் கொள்ள வேண்டும்' என்று மன்னரின் உண்மை அடையாளத்தை வெளியிடாமல் பாதுகாப்பின் முக்கியத்தை அழுத்திக் கூறினான் இளந்தத்தன்.

"இளந்தத்தரே! எங்கள் குடும்பம் எத்தனையோ தலைமுறைகளாகப் பாண்டிய வம்சத்திற்குச் சேவை செய்தது. அதனால்தான் எங்கள் முன்னோரான நற்கொற்றனுக்குப் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி பாண்டியன் வேள்விக்குடியை வழங்கினார். களப்பிரர் காலத்தில் அந்தத் தொடர்பு அற்றுப் போனபின், மீண்டும் அரசருக்குத் தொண்டு செய்யும் பேறு எங்களுக்குக் கிடைக்க வில்லை. இப்பொழுது அத்தகைய வாய்ப்பு ஒன்று தங்கள் மூலம் எனக்குக் கிடைத்துள்ளது. என் உயிரையும், உடைமைகளையும் இழக்க நேர்ந்தால்கூட மன்னருக்குத் தொண்டு புரியும் வாய்ப்பை நான் வீணாக்க மாட்டேன். ஆணையிடுங்கள், நான் நிறைவேற்றுகிறேன்" என்று முன்வந்தான் நற்சிங்கன்.

"மன்னரிடம் நான் உம்மைப்பற்றி எடுத்துரைத்த தகவல்களின் பலனாக இந்தச் சிறை மீட்புப் பணியை நிறைவேற்றுவதற்கான மையப்புள்ளியாக உம்முடைய வீடு செயல் படும். மனூபமரும், நானும் எங்களுக்கு உதவிசெய்வோருமாக இருபது பேர்வரை மூன்று நான்கு நாள்கள் இங்கே தங்கலாம். நேற்றும் இன்றுமாகப் பன்னிருவர் வந்துள்ளோம். நாளை மனூபமர் நால்வருடன் வந்து சேர்வார். இவ்வளவு பேர் இங்கே தங்கியிருக்கும் செய்தி யாருக்கும் தெரியக்கூடாது. அதாவது, உம்முடைய வணிகத்தொழிலோடு தொடர்புடைய சிலர் வந்திருப்பதாக மற்றவர்கள் நினைக்க வேண்டுமேயன்றி, வந்திருப்பவர்கள் போர்வீரர்கள் என்பதோ

பாண்டிய வீரர்கள் என்பதோ யாருக்கும் தெரியக்கூடாது. உம்முடைய வேலைக்காரர்களும் அவ்வாறே நினைக்க வேண்டும். இப்பொழுது நாம் செய்யவேண்டிய முன்னேற்பாடு இவ்வளவு தான். நாளை மனுபமர் வந்தபின் இன்னும் செய்யவேண்டிய செயல்கள் எவையாவது இருந்தால் அவரே சொல்வார்" என்று நற்சிங்கனிடம் விளக்கினான் இளந்தத்தன்.

எதிர்பார்த்தவாறே அடுத்த நாள் மாலையில் ஒரு பெரிய தேரில் மனுபமரும், இளங்குமரன், தேவரன், தங்கன், வரதன் என்ற நான்கு உதவியாளர்களும் வந்து சேர்ந்தனர். ஒரு செல்வந்தரான வணிகரும் அவருடைய ஆள்களும் பயணம் செய்வதுபோலவே அவர்கள் தோற்றமளித்தனர். தன்னுடைய பெயரை மாற்றிக்கொண்டது போலவே பாண்டியன் நெடுஞ்சடையன் தோற்றத்தையும் மாற்றியிருந்தார். அடர்ந்த தாடியும், பரந்த, சுருண்ட மீசையும் அவருடைய முகத்தோற்றத்தை நன்கு மறைவு செய்தன. தலைமேல் பல சுற்றுகளாகச் சுருட்டப்பட்ட தலைப்பாகை அவருடைய தலைமுடியின் இயற்கையான அழகையும் மறைத்தது. கைவிரல்களில் மின்னிய கணையாழிகள் அவர் செல்வச் சிறப்பு மிக்க வணிகன் என்பதை விளம்பரம் செய்யும் வண்ணம் மின்னின. மனுபமரும் அவர் உதவியாளர்களும் உடுத்திருந்த உடைகளும், அவர்களுடைய உடலின் பெரும்பகுதியை மறைக்குமாறு உருவாக்கப்பட்டிருந்தமையால், அவர்கள் வைத்திருந்தவாள், குத்துவாள் போன்ற படைக்கலன்கள் வெளியில் தெரியாதவாறு காத்தன.

பொழுது சாயும் முன்னரே, மனுபமர், இளந்தத்தனையும், உலகணனையும், மெய்க்காப்பாளன் தங்கனையும், அழைத்துக் கொண்டு தகடூர் நகரை வலம்வந்தார். பல்வேறு அலுவல்களுக்காக நடந்து செல்லும் பொதுமக்களோடு கலந்து நடந்து சென்று, நகரின் முக்கியப் பகுதிகளையும், குறிப்பாகச் சிறைச்சாலையையும் அதனைச் சுற்றியுள்ள இடங்களையும் பார்வையிட்டார். பொழுதுசாய்ந்து, எட்டு நாழிகைக்குப் பின்னர், நள்ளிருளில் மீண்டும் சிறைச் சாலையின் வெளிவாயிலின் அருகில் வரை சென்று, இருள் எவ்வளவு, அடர்த்தியாக இருக்கிறது என்பதையும், பன்னிரண்டு வீரர்கள் யார் கண்ணிலும்படாமல் வாயிலுக்கு அருகிலேயே பதுங்கியிருக்க முடியுமா என்பதையும் ஆராய்ந்தார். முன்னரே மனத்தில் உருவாகியிருந்த சிறை மீட்புத் திட்டத்தைப் பிழையின்றி நிறைவேற்ற முடியும் என்று உறுதிசெய்தார்.

உத்தமன் எழுதியிருந்த போலி அனுமதிச்சீட்டையும், அமைச்சர் அனுப்பிய உண்மை அனுமதிச் சீட்டையும் ஒப்பிட்டுப் பார்த்த மனுபமர் உத்தமனைப் பாராட்டினார். "எது உண்மை எது போலி என்று என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை இரவில் விளக்கு வெளிச்சத்தில் ஓலையைப் பார்க்கும் சிறைக் காவலர்களுக்கு ஒரு சந்தேகமும் வராது" என்று மனநிறைவோடு பேசினான். "ஓலையில் சிறையில் அடைக்கவேண்டிய கைதியின் பெயரை என்னவென்று எழுத வேண்டும்?" என்று வினவினான் இளந்தத்தன் "மனுபமன் என்றே எழுதலாம்" என்று கூறி உத்தமனை அனுப்பிவிட்டு இளந்தத்தனை நோக்கிப் புன்முறுவல் பூத்தார் பாண்டியர். "சாத்தன் சிறையிலிருந்து தப்பிச்சென்றபின் அது எப்படி நடந்தது என்று தீவிரமாக விசாரணை நடத்துவான் அதியன். அப்பொழுது இந்த ஓலையும் அவன் கண்ணில் படும். மனுபமன் என்பது என்னுடைய சிறப்புப் பெயர்களில் ஒன்று என்பது அவனுக்குத் தெரியும். எனவே நானே நேரில் அவனுடைய தலைநகருக்கு வந்து என் தோழனைச் சிறைமீட்டுச் சென்றுவிட்டேன் என்பதை அவன் புரிந்து கொள்வான். அப்பொழுது அவனுடைய குருதி கொதிக்கும். அதற்காகத்தான் அந்தப் பெயரையே ஓலையில் எழுதச் சொன்னேன்." என்று விளக்கினான்.

நற்சிங்கனுடனும் மனுபமர் மனம்திறந்து பேசினார்." நற்சிங்கரே! பாண்டிய மன்னர் ஒற்றர் படைத்தலைவர் தெரிவித்த வரலாற்றின் அடிப்படையில் வேள்விக்குடியைத் தங்களுக்கு வழங்க முடிவு செய்துவிட்டார். ஆயினும் இந்தச்சிறை மீட்புப் பணியினால்தங்களுக்கு நேரக்கூடிய இன்னல்களைநான்மறைக்காமல் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். சிறையிலிருக்கும் கைதி தப்பிச் சென்றால், எந்தஅரசும் அதைப் பற்றிக் கவலைகொள்ளும். அது எப்படி நடந்தது என்று ஆராயும். நாம்இந்தச் சிறைமீட்பை நிறைவேற்றியபின்னும் அப்படித்தான் செய்வார்கள். அப்பொழுது பத்துப்பதினைந்து பேர் வெளியூரிலிருந்து வந்து தங்கள் இல்லத்தில் தங்கியிருந்தனர் என்றும் சிறை மீட்பு நடந்தபின் அவர்கள் யாருமே காணப்படவில்லை என்பதும் தெரியவரலாம். தங்கள் மீது சந்தேகம் வந்து தங்களைச் சிறையில் அடைக்கவோ அல்லது வேறு தண்டனைகள் அளிக்கவோ அரசன் முடிவு செய்யலாம். அத்தகைய நிலைமை ஏற்பட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்று நேரடியாக வினவினார் மனுபமர்.

"தலைவரே! உங்கள் சிறைமீட்புப் பணி வெற்றிகரமாக நிறைவேற வேண்டும் என்பதுதான் என் கவலை எல்லாம். இங்கே

முன் காலங்களில் என் வணிகத் தொழில் சிறப்பாக நடந்துகொண்டிருந்தது. இங்குள்ள அரசும், மக்களும் நான் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவன் என்பதற்காக என்னிடம் வெறுப்போ, விரோதமோ இல்லாமல் நடந்து கொண்டனர். ஆனால் அன்மையில் நடந்த பெண்ணாகடப் போரில் பாண்டியர் படை பல்லவர் படையையும், அவர்களோடு சேர்ந்து நின்ற கொங்கர் படையையும் முறியடித்ததன் விளைவாக என்னிடமும் பகைமை உணர்ச்சியைக் காட்டுகின்றனர். இனிமேல் இந்த நாட்டில் நான் அமைதியாக அதிக நாள் தொழில் செய்ய முடியாது என்பது தெளிவு. மேலும் பாண்டிய வேந்தர் என் மீது கருணைகொண்டு வேள்விக்குடியை எனக்கு வழங்கினால் இங்கே வணிகத் தொழில் செய்யவேண்டிய தேவை இல்லை. என்பண்டகசாலையில் பொருள்கள் மிகக்குறைவாகவே இருக்கின்றன. ஆகவே தாங்கள் இங்கிருந்து செல்லும்பொழுது நானும் என் வேலையாள்களும் இங்கிருந்து புறப்பட்டுச் செல்வோம். அவர்கள் விசாரணைசெய்து உண்மையைக் கண்டுபிடிக்கும் பொழுது நாங்கள் கொற்கையில் இருப்போம். எனவே என்னுடைய எதிர்கால இன்னல்களைத் தாங்கள் பொருட்படுத்த வேண்டாம்." என்று நற்சிங்கனும் மனம்திறந்து பேசினான்.

"எங்கள் முயற்சி நாளை இரவில் வெற்றிபெறும் என்று நம்புகின்றேன். சாத்தனைச் சிறையிலிருந்து வெளியில் கொண்டுவந்த பின் ஒரு கணம் கூட இங்கே இருப்பது நல்லதன்று. சிறைச்சாலையிலிருந்து புறப்படும் தேர் இரவோடு இரவாகத் தகடூரிலிருந்து செல்லும். எவ்வளவு விரைவில் காவிரியாற்றைக் கடக்க முடியுமோ அவ்வளவு நமக்கு நல்லது. நம் வீரர்களும் அதிகம் ஓசை எழுப்பாமல் தேரின் பின்னால் ஒரு நாழிகைத் தொலைவு இடைவெளியிட்டுப் பாதுகாப்போடு வருவர். எனவே நீங்களும் அவ்வாறே நள்ளிரவில் தகடூரைவிட்டு வெளியேறுவது நல்லது" என்று அறிவுரை கூறினார். மனூபமர்.

"அவ்வாறே செய்கிறேன்" என்று இணக்கம் கூறினான் நற்சிங்கன்.

மறுநாள் பிற்பகலில் மனூபமன், சிறைமீட்புத் திட்டத்தை விளக்கி, ஒவ்வொருவனும் செய்துமுடிக்க வேண்டிய வேலையையும் ஒதுக்கினான். இளந்தத்தன், வைரவன், உலகணன், உத்தமன் ஆகிய ஒற்றர் படையாளர்களும், இளங்குமரன், தேவரன், தங்கன், வரதன் ஆகிய தேரில் செல்லவேண்டிய வீரர்களும், எல்லோருக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டிய பன்னிரு குதிரை வீரர்களும் குழுமியிருந்தனர்.

"நாளை பொழுது சாய்ந்து எட்டு நாழிகை முடிவுறும் வேளையில் தேர் சிறைச்சாலையின் வாயிலில் வந்து நிற்கும். அதற்கு ஒருநாழிகை முன்பே நமது பன்னிரு வீரர்களும் அவரவர்க்கு ஒதுக்கப்பட்டிருக்கும் மறைவிடங்களில் இடம் பிடித்துச் சாலையைக் கண்காணிக்க வேண்டும். குதிரைகள் எல்லாம் இங்கேயே எந்தநேரமும் புறப்படுவதற்கு வசதியாக நிறுத்திவைக்க வேண்டும். இல்லையென்றால் அவை கனைக்கும் ஓசை வீரர்களைக் காட்டிக்கொடுத்து விடும். தேர் சிறைசாலைக்குள் சென்று திரும்பிவரும்வரை சிறையின் வாயிலிலேயே கண்பதித்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும். உள்ளே வரவேண்டிய தேவை ஏற்பட்டால் நான் மூன்று முறை இந்தக் குழலால் ஓசை எழுப்புவேன். அந்த ஓசை எழுந்தாலன்றி நீங்கள் யாரும் உள்ளே வரக் கூடாது. தேர் திரும்பி வந்தால் முதலில் வந்த திசையிலேயே ஒரு நாழிகை தூரம் ஓரளவு வேகம் குறைவாகவே செல்லும். அதன்பின் தெற்கு நோக்கித் திரும்பும். அதற்குள் நீங்கள் சென்று உங்கள் குதிரைகளில் இருவர்வீதம் தேரைப் பின்தொடர்ந்து வரவேண்டும். ஒரு நாழிகை இடைவெளிவிட்டு இரு குதிரைவீரர்கள் வீதம் தொடர்வதால் ஆறுநாழிகை தூரம் வரை நம்மை யாராவது துரத்தி வருகிறார்களா என்பது தெரியவரும்" என்று அறிவித்து குதிரைவீரர்கள் பன்னிருவரையும் அனுப்பினார் மனூபமர். பின்னர் மற்றவர்களுக்கும் வேலைகளை ஒதுக்கினார்.

அவர்கள் திட்டமிட்டவாறே அடுத்தநாள் இரவில், பொழுது சாய்ந்து எட்டுநாழிகை கழிந்த நேரத்தில் தகடூர்ச் சிறைச்சாலையின் முன் இரு குதிரைகள் பூட்டிய தேர் ஒன்று வந்து நின்றது. சிறைவாயிலைக் காத்து நின்ற இரு வீரர்களில் மூத்தவன் தேரின் அருகில் வந்து காரணம் கேட்டான். தேரோட்டியின் அருகில் அமர்ந்திருந்த பாண்டியரின் குதிரைப் படைத் தலைவனான தேவரன் ஓர் ஓலையைக் காவலனிடம் நீட்டினான். அதனைச் சிறைவாயிலின் அருகில் இருந்த விளக்குக் கம்பத்தின் அடியில் கொண்டுபோய் படித்துப் பார்த்த காவலன் சிறைக் கதவின் கிளிவாயிலைத் தட்டினான். கிளிவாயில் திறக்கப்பட்டது. உள்ளேயிருந்து கை நீட்டிய காவலனிடம் அந்த ஓலையைக் கொடுத்தான் வெளிவாயில் காவலன். சற்று நேரத்தில் வாயிலின் தாழ் அகற்றப்படும் ஓசை கேட்டது. அதைத் தொடர்ந்து சிறை வாயில் தேர் உள்ளே புகும் அளவிற்குத் திறக்கப்பட்டது. தேரோட்டி தேரைஉள்ளே ஓட்டிக்கொண்டு வந்தவுடன், அதைக் கைகாட்டி நிறுத்தி அதே ஓலையை மீண்டும் தேவரனிடம் கொடுத்தான் அங்கு நின்றகாவலன்.

"தேரை உள்வாயிலுக்கு ஓட்டிக்கொண்டுபோ! அங்கே உள்ள காவலன் கதவைத் திறந்தபின் கைதியைத் தேரிலிருந்து இறக்கினால் போதும்" என்று அவன் தெரிவித்தான்.

தேர் மறுபடியும் புறப்பட்டு உள்வாயிலின் முன்நின்றது. தேவரன் இறங்கி அங்கே காவல் நின்ற இருவீரர்களில் ஒருவனிடம் ஓலையைக் கொடுத்தான். அதே நேரத்தில் தேரின் கதவைத் திறந்துகொண்டு, இரு வீரர்கள் கைதியை இருபக்கமும் பலமாகப் பிடித்துக் கொண்டு சிறைக் கதவை நோக்கி நடந்து வந்தனர். ஒருவன் கையில் கைதியை அடக்குவதற்காக உருவிய குத்துவாளும் மின்னியது. கைதியின் கைகள் கட்டப்பட்டிருந்தன என்றாலும் காவலன் எச்சரிக்கையுடன் அவனைக் கொண்டு வருகிறான் என்று தோன்றியது.

ஒரு பெரிய இரும்புச் சாவியை உள்ளே திணித்துச் சிறைக் கதவின் பூட்டைத்திறந்தான் ஒரு காவலன். குனிந்த நிலையில் இருந்த அவன் நிமிரத்தொடங்கும்போது குத்துவாளைத் திருப்பிப்பிடித்து அதன் பிடியால் அவன் தலையில் ஓங்கி அடித்தான் கைதியுடன் அவன் பின்னால் நின்ற ஆள். ஓலையை நீட்டிய ஆள் அவனைத் தாங்கிப் பிடித்து ஓசை வெளிவராமல் மெல்லத் தரையில் கிடத்தினான். கைகள் கட்டப்பட்டிருந்த கைதி அதே நேரத்தில் தன் கைகளை விடுவித்துக் கொண்டு மற்ற காவலனின் கழுத்தை நெரித்தான் அவனையும் அவ்வாறே தாங்கிப் பிடித்து எந்த வித ஓசையும் இன்றி, கைகால்களைக் கட்டி, வாயில் ஒருபெரிய துணிப்பந்தையும் திணித்து, சிறைக்குள் உருட்டிவிட்டனர் பாண்டிய வீரர்கள்.

'ப' வடிவில் அமைந்திருந்த சிறைக்குள் கைதியும் இருகாவலர்களும் மெல்லப் பதுங்கிச் சென்றனர். ஓர் அறையின் முன் ஒரு காவலன் மதிலில் சாய்ந்துகொண்டு உறங்குவதைக் கண்டதும் அந்த அறையில்தான் சாத்தஞ் சாத்தன் அடைக்கப் பட்டிருக்கிறான் என்பதை அறிந்துகொண்டனர். பதுங்கிச் சென்று அந்தக் காவலனையும் ஓசை எழாமல் சரிசெய்துவிட்டு, அவனுடைய குப்பாயத்தில் இருந்த திறவு கோலால் அந்த அறையின் கதவைத் திறந்தான் சிறையில் அடைப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட கைதி.

சாத்தஞ்சாத்தன் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தான். காதலி தேவந்தியுடன் கொஞ்சிக் குலவி, இன்பத்தில் திளைத்த கனவுலகில் மிதந்துகொண்டிருந்த அவனைத் தட்டி எழுப்பினார் மணாபமர். அவருடைய கையைத் தட்டிவிட்டு. "தொல்லைப்

படுத்தாதே! நான் இன்பமயமான கனவுகாண்கிறேன்" என்றான் சாத்தன். சற்றும் அச்சமின்றிப் பகைவன் சிறையில் கனவுகண்டு மகிழும் தன் தோழனின் மனவுறுதியைப் பாராட்டி "சரி கனவைப் பின்னால் தொடர்ந்து காணலாம்" என்று அவனை வாரி எடுத்தார் மனுபமர் "இப்பொழுது புறப்படு" என்றார்.

14. வேள்விக்குடிச் செப்பேடு

கடந்துபோன இரவில் நடந்தேறிய நிகழ்ச்சிகள் சாத்தஞ் சாத்தனின் மனத்தில் இப்பொழுது நிழலாடிக் கொண்டிருந்தன. விரைந்து செல்லும் தேரில் பாண்டியன் நெடுஞ்சடையனின் அருகில் அமர்ந்துகொண்டு" நீரெலாம் சேற்று நாற்றம் நிலமெல்லாம் கல்லும் முள்ளும்" என்று பின்னொரு காலத்தில் ஒரு புலவர் பழித்த வறண்ட கொங்குநாட்டின் நிலப்பரப்பைக் கண்டாலும் உள்ளம் உவகையால் துள்ளிக்கொண்டிருந்தது. இளவரசி தேவந்தியை மார்போடு அணைத்து அவளுடைய செவ்விதழின் தேன்மாந்திய கனவுக்காட்சி, அவன் மனக்கண்ணிலிருந்து மறையவே இல்லை.

கொங்குவேந்தன் அதியனின் சிறையில் அடைபட்டு, அவனுடைய இழிசொல்லுக்கும் பழிப்பேச்சிற்கும் ஆளாகவேண்டி வந்தாலும் அவனுடைய மிரட்டலும் உருட்டலும் எள்ளவும் தன்னை அச்சுறுத்தவில்லை. மாறாக அதியனின் காமவெறி ஏறிய வாக்குகளும் அவன் தேவந்தியை வருணித்துப் பேசிய வார்த்தைகளும் அவளைப் பற்றிய காதல் வேட்கையையும், அவளை அடையவேண்டும் என்ற அவாவையும் தன் மனத்தில் தூண்டிவிட்டதன் விளைவே அந்தக் கனவும், அதில் அவளுடைய தோற்றமும், கூட்டமும் என்று எண்ணினான் அவன். பகைவனின் சிறையிலும் பதற்றம் அடையாமல் கனவு கண்டு மகிழும் சாத்தனின் அஞ்சாமையைப் பாண்டியன் பாராட்டியதையும் அவன் எண்ணி மகிழ்ந்தான்.

"நீ என் நண்பன் என்று சொல்லிக் கொள்வதில் நான் பெருமைப் படுகிறேன். பகைவனின் சிறையில் அஞ்சி நடுங்கிப் பரிதாபத்திற்குரியவனாகத் தோன்றாமல், அந்தப் பகைவனையே எள்ளி நகையாடி, அவனிடம் சற்றும் அச்சம் இல்லை என்பதை எடுத்துக் காட்டிய வீரத்தைப் பாராட்டுகிறேன்" என்று அவனை மார்போடு சேர்த்துத் தழுவி, சிறையிலிருந்து கையைப் பிடித்து அழைத்துவந்து தேரில் ஏற்றிய நெடுஞ்சடையன், சிறைமீட்புத் திட்டத்தையும் விரைவில் சுருக்கமாக எடுத்துரைத்தான்.

சிறைச்சாலைக்குள் நுழைந்தது போலவே வெளியேறுவதும் எளிதாகவே முடிந்தது. சிறையிலிருந்து எவ்விதப் பரபரப்பும் இல்லாததால் கொண்டு வந்த கைதியைச் சிறையில் அடைத்து

விட்டுத் தேரில் வீரர்கள் திரும்பிச் செல்கின்றனர் என்று எண்ணி, சிறை வாயில் காவலர்கள் வாயிலைத் திறந்து, தேர் வெளியில் போக அனுமதித்தனர். தேரோட்டியும் எவருக்கும் ஐயம் தோன்றாதவாறு அமைதியாகத் தேரைச் செலுத்தி அமைச்சரின் அலுவலகத்திற்குச் செல்லும் சாலையில் வெகுதொலைவு சென்றான். பின்னர் தேர் தெற்கே செல்லும் வேறொரு சாலையில் திரும்பியது. சற்றுத்தூரம் மெல்லவே சென்று இரு குதிரை வீரர்கள் தேரை நெருங்குவதை உறுதி செய்தபின் தேரை வேகமாகச் செலுத்திய தேரோட்டி திட்டமிட்டவாறே ஒரு நாழிகை இடைவெளிவிட்டு, இரு வீரர்கள் வீதம் பன்னிரண்டு பாண்டிய வீரர்களும் பாதுகாப்பாகப் பின்தொடர்ந்து வருகிறார்கள். என்பதை உணர்ந்து கொண்டான். பொழுது விடியும் முன் தகடூரிலிருந்து எவ்வளவு தூரம் செல்லமுடியுமோ அவ்வளவு தூரம் செல்லவேண்டும் என்ற முனைப்புடன் தேர் முடுக்கிவிடப்பட்டது.

"அரசே! தாங்களே நேரில் பகைவனின் சிறைக்குள் புகுந்து, எனக்காகத் தங்கள் உயிரைத் துச்சமென நினைத்து என்னைச் சிறையிலிருந்து விடுவித்த செயலைப்பற்றி எண்ணும்பொழுது என் மீது தாங்கள் வைத்திருக்கும் அன்பும், நட்பும், கருணையும் எவ்வளவு மகத்தானவை என்பது விளங்குகின்றது. இதற்கு நான் என்ன கைம்மாறு செய்யமுடியும் என்று என்னால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. என் உயிர், உடல் பொருள் எல்லாம் தங்களுக்காக உள்ளவை என்று இன்னும் ஒருமுறை வலியுறுத்துவதைத் தவிர நான் வேறு என்ன செய்யமுடியும்? ஆனால் அதே நேரத்தில் தங்களுடைய படைத்தலைவன் என்ற முறையில் நான் ஒன்று சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். பாண்டிய வேந்தராகிய தாங்கள் இத்தகைய ஆபத்து நிறைந்த செயல்களில் ஈடுபடக்கூடாது. தங்கள் நல்வாழ்வில்தான் பாண்டிய நாட்டின் நலமும் அடங்கி இருக்கிறது" என்று நன்றியும், கடமையும் கலந்து நயம்பட மொழிந்தான் சாத்தன்.

"சாத்தா! நீ என் மீது கொண்டிருக்கும் அன்பு போல இந்த நாட்டின் நலத்திலும் அக்கறைகொண்டவன் என்பதை நான் நன்கு அறிவேன். உன் அறிவுரையில் அடங்கியுள்ள அரசியல் உண்மையையும் நான் மதிக்கிறேன். ஆனால் மன்னன் ஆயினும் நானும் ஒரு மனிதன் தானே! நீ என் ஆருயிர் நண்பன். அதியன் உன்னைச் சிறையிட்ட செய்திகேட்டவுடனேயே என் குதிரையில் ஏறி, தகடூர் சென்று சிறைக் காவலர்களையெல்லாம் என் வாளால் வெட்டி வீழ்த்தி, உன்னைத் தனியாகவே சிறையிலிருந்து வெளியில்

கொண்டுவர வேண்டும் என்ற வெறி ஏற்பட்டது எனக்கு. அடுத்த கணமே அது பேதைமை என்பதை உணர்ந்தாலும் என் முதல் எண்ணம் அப்படித்தான் என்னைத் தூண்டியது. சிறை மீட்பதற்காக ஒரு வீரர்குழுவைத் தகடூருக்கு அனுப்பிவிட்டு நான் மதுரையில் இருந்தால், என்னால் அமைதியாக இருக்கமுடியாது என்பதை நான் நன்றாக உணர்ந்தேன். அதனால்தான் நானே இந்த சிறைமீட்புப் பணியை ஏற்று நடத்தத் துணிந்தேன். இனி அப்படிப்பட்ட சூழ்நிலையோ தேவையோ ஏற்படாது என்று நம்புவோம்." என்று தன் உள்ளக் கிடக்கையை வெளியிட்டான் வைகைவேந்தன்.

கொங்கு நாட்டு எல்லையைக் கடந்து தேர் சோழநாட்டில் நுழைந்தது. சோழநாடாக நிலப்பரப்பு பெயர் வழங்கினாலும் அது பாண்டியரின் ஆட்சிக்குள் இருந்தமையால் இனி எவ்வித அபாயமும் இன்றிப் பயணம் செய்யலாம் என்ற நிலைமை நிலவினாலும், உறையூரை அடையும்வரை முன் போலவே தேர் முன்னும் பன்னிரு பாண்டிய வீரர்கள் குறிப்பிட்ட இடைவெளியில் பாதுகாப்பளித்தும் தொடர்ந்தனர்.

உறையூர் நகரை அடையும் முன்னரே படைத்தலைவர் மாறன் எயினன் முன்வந்து பாண்டியரை வரவேற்றார். மாறன் காரியின் இளவலான எயினன் அவருக்குப்பின் அமைச்சராகப் பதவி ஏற்க இருப்பவர் என்றும், பாண்டிய மன்னருக்கு நெருக்கமானோர் அறிந்திருந்தாலும் வயதில் தன்னைவிட மூத்தவர் ஆனதாலும் சாத்தஞ்சாத்தன் அவரை வணங்கி நின்றான். அவரும் அவனைத் தழுவிக்கொண்டு "சிறைவாசம் உன்னைச் சற்றும் சீரழிக்கவில்லை. மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்" என்று முகமன் கூறி வரவேற்றார். மன்னனுக்கும் அவனோடு தகடூரிலிருந்து வந்த படைத் தலைவர்களுக்கும் பாதுகாப்பாகச் சென்ற வீரர்களுக்கும் அவர் விருந்தளித்தார்.

மனூபமனும் சாத்தனும் இளந்தத்தனும் உறையூர் நிலைப்படை அமைந்திருக்கும் பாசறையில் தங்கிவிட்டே மேலும் பயணம் தொடர்வார்கள் என்பதை முன்னரே அறிந்ததால் நற்சிங்கன் அங்கே செல்லாமல் நேராகப் போய்விட்டான். அதுவும் நல்லதே என்று எண்ணினான் இளந்தத்தன். உறையூருக்கு நற்சிங்கன் வந்தால் இத்தனை நாள் தன் வீட்டில் தங்கியவர் பாண்டியன் நெடுஞ்சடையன் என்பதை அவர் உணர்ந்திருப்பார் என்பது அவனுக்குத் தெரியும் அன்று உறையூரில் ஓய்வெடுத்து அடுத்த நாள் மதுரைக்குப் புறப்படலாம் என்று மாறன் எயினன்

கோரிக்கையை ஏற்றுக் கொண்டார் மன்னர். நெடுஞ்சடையனும் சாத்தஞ்சாத்தனும் உப்பரிகையில் அமர்ந்து அளவளாவிக் கொண்டிருந்தனர். எங்கிருந்தோ காற்றினிலே மிதந்து வந்தது அந்தப் பாடல்

"அடியோ மோடும் நின்னோடும் பிரிவின்றி
ஆயிரம் பல்லாண்டு!
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு!
வடிவார் சோதிவ லத்துறை யும் சுடர்
ஆழியும் பல்லாண்டு!
படையோர் புக்குமு ழங்குமப் பாஞ்ச
சன்னியமும் பல்லாண்டே!"

பாண்டியன் நெடுஞ்சடையன் மெய்மறந்தான். அவன் கண்களிலே நீர் மல்கியது. முகத்தில்புத்தொளி மிளிர்ந்தது. அவன் வாய் மெல்லப் பாடியது

"பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு
பல கோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா உன்சேவடி
செல்வி திருக்காப்பு" என்று

இவ்வாறு ஈரடிகள் கொண்ட பாசுரத்தைப் பாடி முடித்ததும்தன் கண்களைத் திறந்து சாத்தனை நோக்கிய நெடுஞ்சடையன் "நண்பா! நான் செய்து முடிக்கவேண்டிய முக்கியமான ஒரு கடமையைச் செய்யத் தவறிவிட்டேன். இந்தத் தெய்வீகப் பாடல் என் செவிகளில் விழுந்தபோதுதான் இனிமேலும் அதைத் தள்ளிவைக்க முடியாது என்பதை நான் உணர்ந்தேன்" என்றான்.

"இப்பொழுது நாம் கேட்ட பாடல் விஷ்ணுசித்தர் பாடிய பாசுரம் அல்லவா?" என்று வினவினான் சாத்தன். பாண்டியன் நெடுஞ்சடையனைப்போல் வைணவன் அல்லன் ஆயினும் தமிழ் இலக்கியப் புலமை பெற்றிருந்த சாத்தஞ்சாத்தன் அந்தப் பாடலை இயற்றிய புலவரைப்பற்றி அறிந்திருந்தான்.

"ஆமாம் பாடியவர் அவர்தான். ஆனால் அவர் இப்பொழுது விஷ்ணுசித்தர் அல்லர். அவரை எல்லோரும் 'பெரியாழ்வார்' என்று அழைக்கின்றனர். உலகளந்த பெருமானையே இளங்குழந்தையாகக் கற்பனை செய்து பாடிய அவருடைய பேரருள் நிறைந்த பக்தியைப் பாராட்டுகின்றனர்" என்று பக்திமேலிடக் கூறினான் பாண்டியன்.

"அவர் பாடிய முதல் பாசுரத்தைத் தான் தாங்கள் பாடினீர்கள் அல்லவா?" என்று வினவினான் சாத்தன்.

"ஆமாம் அதை என் தந்தை எப்பொழுதும் பாடிக்கொண்டிருப்பார். அவர் மரணப் படுக்கையில் கூட முணுமுணுத்துக் கொண்டிருந்த அடிகள் அவை. நான் அரசுகட்டில் ஏறியவுடன் திருவில்லிபுத்தூருக்குச் சென்று பெரியாழ்வாரிடம் ஆசிபெற வேண்டும் என்று எனக்கு ஆணையிட்டிருந்தார். அதை நான் இன்னும் நிறைவேற்றவில்லை. ஆட்சி அறிவைப் பெருக்குவதில் ஆழ்ந்திருந்ததாலும், பல்லவன் படை யெடுப்பை எதிர்பார்த்ததாலும் மதுரையை விட்டு வெளியில் செல்லவே முடியவில்லை இப்பொழுது அந்த நிலைமை மாறிவருகிறது இன்னும் சிலகாலமாவது அமைதி நிலவும் என்று நம்புகிறேன். ஆகவே மதுரைக்குச் சென்ற ஒரு சில நாள்களிலேயே திருவில்லிபுத்தூருக்கு பயணம் செய்யவேண்டும். நீயும் என்னுடன் வருவதானால் நான் மிகவும் மகிழ்வேன். ஆனால் சைவசமயத்தில் வேரூன்றி நிற்கும் உன் அண்ணன் அதை விரும்பமாட்டார். ஆகவே நான் உன்னை வற்புறுத்த மாட்டேன்" என்றார் பாண்டியர்.

"உண்மைதான் அரசே! என் அண்ணன் மட்டுமல்ல, என் அண்ணியாரும் மிகுந்த சைவப்பற்று உள்ளவர். எனக்கு அன்னை போன்றவர்! என்னைப் பொறுத்தவரை வைணவமானாலும் சைவமானாலும் ஒன்றுதான். ஆனால் என்னை மகன் போல் கருதும் அண்ணைனையும் அண்ணியையும் வருந்தச் செய்யும் எந்தச் செயலையும் செய்ய விரும்பவில்லை. தாங்கள் மகாராணியையும் அழைத்துச் செல்லுங்கள். சோழ நாட்டிலிருந்து வந்து பாண்டியர் அரண்மனையில் புகுந்தபின் மகாராணி எங்கும் போகவே இல்லையே! திருவில்லிபுத்தூர் பயணம் அவர்களுக்கும் பெரும் பயன் அளிக்கும்" என்றான் சாத்தன்.

"சைவமானாலும் வைணவமானாலும் ஒன்றுதான் என்று நீ சொல்வதில் தவறில்லை. உண்மையில் என் முன்னோர்கள் எல்லோருமே சைவசமயத்தினராகத்தான் இருந்தனர். என் தந்தையார்தான் முதன் முதலாக வைணவர் ஆனார். அவருடைய பாட்டனார் திருஞான சம்பந்தரின் அடியாராக, நின்ற சீர் நெடுமாறன் என்ற பெயரோடு விளங்கியவர். மதுரையம் பதி சோமசுந்தரக் கடவுளும் மீனாட்சியும் வாழும் திருக்கோயிலைச் சுற்றி அமைந்ததே பாண்டிய வேந்தர்கள் சைவசமயத்தைப் போற்றிப் பாதுகாத்த காரணத்தால்தான். அப்பர் திருஞான சம்பந்தர் போன்ற சிவனடியார்களின் பெருமையால் சைவம் தழைத்தது

போலவே பெரியாழ்வாரின் சிறப்பால் வைணவம் வளர்ச்சி பெற்றது. விஷ்ணு சித்தராக இருந்த திருவில்லிபுத்தூர் ஆழ்வார் மதுரை நகருக்கு வந்தருளி, என் தந்தையின் முன்னிலையில் வைணவமதத்தின் பெருமையை நிலைநாட்டிப் பொற்கிழிபெற்று, கருடாழ்வார்மேல் வீற்றிருந்து காட்சியளித்த கண்ணனையும் திருமகளையும் கண்டு களித்து அவர்களின் நல்வாழ்விற்காகப் பல்லாண்டு பாடினார் என்று என் தந்தையே கூறக் கேட்டிருக்கிறேன். நம் அமைச்சர் மாறன் காரியும் தந்தை காலத்தில் வாழ்ந்த புரோகிதர் செல்வ நம்பியும் பெரியாழ்வாரின் பக்தர்கள் ஆவர். என் தந்தையார் வைணவராக மாறியதற்கு அவர்களும் காரணமாக இருந்தார்கள் என்று நம்புகின்றேன்" என்று பாண்டியன் பராங்குசன் மாறவர்மன் வைணவ மதத்தைத் தழுவிய வரலாற்றை எடுத்துரைத்தான் நெடுஞ்சடையன்.

"அரசே! தாங்கள் திருவில்லிபுத்தூருக்குச் சென்று பெரியாழ்வாரிடம் ஆசிபெறவேண்டியது முக்கியமாயினும் அதற்குமுன் செய்து தீர்க்கவேண்டிய வேலை ஒன்று காத்திருக்கிறது என்று நினைக்கிறேன்" என்றான் சாத்தன். "என்ன புதிர்போடுகிறாய்? அப்படி எந்தவேலை காத்திருக்கிறது?" என்று வினவினான் வைகை வேந்தன்".

"நற்சிங்கனுக்கு வேள்விக்குடியைத் திருப்பிக் கொடுக்கும் வேலையைத்தான் குறிப்பிட்டேன். நாம் கொங்கு நாட்டு எல்லையைக் கடந்து சோழ நாட்டில் நுழைந்தவுடனேயே நற்சிங்கன் நம் அணியிலிருந்து பிரிந்து சென்றுவிட்டார். மன்னர்தான் மனுபமர் என்ற பெயரில் வந்து என்னைச் சிறைமீட்கும் பணியைத் தலைமை ஏற்று நடத்தியவர் என்பது அவருக்குத் தெரியாது. ஆகவே போர் வீரர்களுடன் சேர்ந்து பயணம் செய்யும் பொழுது ஏற்படும் தொல்லைகளைத் தவிர்ப்பதற்காக அவர் தன் ஆள்களுடன் கொற்கை நோக்கிச் சென்றுவிட்டார். இன்னும் இரண்டு நாளில் மதுரைக்கு வந்து சேருமாறு வேண்டியுள்ளேன். இளந்தத்தர் அவர் செய்த உதவியை என்னிடம் விளக்கினார். நற்சிங்கரின் உதவி இல்லையாயின் இந்தத் திட்டத்தை இவ்வளவு எளிதில் நிறைவேற்றியிருக்க முடியாது என்பது தெளிவு. அவருக்கு வேள்விக்குடியை மீண்டும் தருவதாக மனுபமர் அவரிடம் உறுதியளித்தார் என்று இளந்தத்தர் என்னிடம் கூறினார். மனுபமரின் வாக்குறுதி மன்னரின் வாக்குறுதியாகையால் நற்சிங்கன் மதுரைக்கு வரும்பொழுது ஏமாற்றம் ஏற்படக் கூடாது" என்று தன்னைச் சிறைமீட்க உதவிய நற்சிங்கனுக்காக வாதாடினான் சாத்தஞ்சாத்தன்.

"நீ சொல்வது முற்றிலும் உண்மையே. நற்சிங்கனின் சேவையை நாம் பாராட்டத்தான் வேண்டும். உண்மையில் அது நாம் அளிக்கும் பரிசோ, கொடையோ அன்று. களப்பிரர்களால் அவருக்கு இழைக்கப்பட்ட தீங்கை நாம் சரிசெய்கிறோம். அவ்வளவுதான். நாம் மதுரைக்குத் திரும்பியவுடனேயே அதைச் செய்து முடித்துவிடுவோம்" என்று உறுதியளித்தார் பாண்டியர்.

"இந்த நற்சிங்கனையும், வேள்விக்குடியையும் பற்றி இளந்தத்தர் என்னிடம் பேசியபொழுது எனக்கு வேறொரு எண்ணமும் உதித்தது. நற்சிங்கனிடம், பல்யாகசாலை முதுகுடுமிப் பாண்டிய வேந்தர் கொற்கை கிழானுக்கு வேள்விக் குடியை வழங்கியதற்கான ஆவணம் இருப்பதாகவும் ஆனால் நூற்றாண்டுகள் சென்றதால் அது மிகவும் மங்கியும் தெளிவிழந்தும் காணப்படுவதாகவும் சொன்னார். அதைப் பற்றி நான் மேலும் சிந்தித்தேன். ஆவணங்கள் எல்லாமே பனை ஓலைகளில் எழுதப்படுகின்றன. நன்கு பதம் செய்து உருவாக்கப்பட்ட ஓலை என்றாலும் நாள்கள் செல்லச் செல்ல அது மங்கத்தான் செய்யும் அதில் எழுதப்பட்ட பொருளைப் படித்துப் புரிந்துகொள்வதும் கடினமாகும். அரசன் நாட்டு மக்களுக்கு வழங்கும் உரிமங்களைப் பற்றிய ஆவணங்கள் நெடுநாள் வாழவேண்டியவை. இந்த நற்சிங்கனிடம் இருக்கும் ஆவணம் கூட இன்னும் சில ஆண்டுகளுக்குப்பின் பயனற்றதாக ஆகிவிடும். ஆகவே அரசன் வழங்கும் பெருங்கொடைப் பொருள்களைப் பற்றிய ஆவணங்கள், அழியாத பட்டயங்களாக அமையவேண்டும்" என்று ஒரு புதிய யோசனையை எடுத்துரைத்தான் சாத்தஞ்சாத்தன்.

"இதற்காகத்தான் நான் பலமுறை சொன்னேன், நீ என் அருகிலேயே இருக்கவேண்டும் என்று! எதைப்பற்றியும் ஆழ்ந்து சிந்திக்கும் ஆற்றலும், சிக்கல்கள் தோன்றினால் அவற்றைத் தீர்த்துவைப்பதற்கான வழிகளைக் கண்டுபிடிக்கும் திறமையும் உனக்கு இயல்பாகவே அமைந்தவை. நம் அமைச்சர் மாறன் காரியும், ஏன், என் தந்தையாரும் இந்த ஆவணங்களைப் பற்றிப் பேசுவதை நான் கேட்டிருக்கிறேன். நடை வரலாற்றுக் குறிப்புகள் அடங்கிய பல ஆவணங்களும் கொஞ்சம் கொஞ்சமாகச் சிதைந்தும் அழிந்தும் வருவதைப் பற்றி அவர்களும் கவலையோடு பேசிக்கொண்டனர். ஆனால் அவற்றை அழியாத பட்டயங்களாக இனிமேலாவது மாற்றி அமைக்கவேண்டும் என்று யாருக்கும் தோன்றவில்லை. நீதான் இப்பொழுது அதற்கு வழிகாணவேண்டும் என்று சிந்திக்கத் தொடங்கியிருக்கிறாய் அதை எவ்வாறு செய்ய வேண்டும் என்றும் நீயே கண்டு

பிடித்திருப்பாயே! அதையும் சொல், கேட்போம்" என்று சாத்தனை உற்சாகப் படுத்தினான் வேந்தன்.

"ஆம் அரசே! நான் கண்டு பிடித்திருக்கும் வழி மிகவும் எளிமையானது. ஓலைகளால் ஆன ஏடுகளில் எழுதுவதால் தானே ஆவணங்கள் சேதமாகின்றன. செம்பினால் செய்த ஏடுகளில் எழுதினால் நிலைத்து நிற்குமே! தங்கள் ஆட்சிக் காலத்திலிருந்து இந்த முறையைத் தொடங்கிவைக்கலாம். இனி அரசர் வழங்கும் பெருங்கொடைகளைப் பற்றிய ஆவணங்கள் செப்பேடுகளில் எழுதப்படும் என்று ஆணை பிறப்பித்தால் போதும்" என்று எடுத்துக் காட்டினான் சாத்தன்.

"அப்படியே செய்வோம். இந்த ஆவணங்கள் என்றும் நிலையாக நிற்குமாகையால் அவற்றில் வரலாற்றுக் குறிப்புகளையும் சேர்த்துக் கொள்ளலாம். பாண்டியன் பராந்தகன் நெடுஞ்சடையன் வழங்குவது என்று மட்டும் குறிப்பிடாமல் நெடுஞ்சடையனின் முன்னோர்களைப் பற்றிய செய்திகளையும் எழுதலாம்" என்று யோசனை கூறினார் அரசர்!

"மிகவும் நல்லது. நம் பழைய வரலாறு விரிவாக நமக்குப் புலப்படவில்லை. ஆயினும் களப்பிரர்களை முறியடித்து மதுரையில் பாண்டியன் கடுங்கோன் பாண்டிய அரசை மீண்டும் நிறுவியது முதல் நாம் அறிந்த வரலாற்றுக்குறிப்புகளை நாம் உருவாக்கப்போகும் செப்பேடுகளில் எழுதலாம்" என்று ஆர்வமுடன் ஒத்துக் கொண்டான் சாத்தன்.

"அது மட்டுமன்று பிற்காலத்தில் அந்தச் செப்பேடுகளைப் படிப்பவர்கள் மகிழும்வண்ணம் நல்ல தமிழ்நடையில் எழுதவேண்டும். ஆகவே இந்த வேள்விக்குடிச் செப்பேடுகளை நீயே எழுது" என்று ஆணையிட்டார் வைகை வேந்தர்.

சாத்தஞ் சாத்தன், மன்னரின் கட்டளைப்படி சுருக்கமாக வேள்விக்குடி முதலில் முதுகுடுமியால் வழங்கப்பட்டதையும் களப்பிரர்கள் அதைக்கவர்ந்து கொண்டதையும், குறிப்பிட்டான். பின்னர் களப்பிரர்களை விரட்டி, படுகடல் முளைத்த பரிதிபோல் பாண்டியாதிராசன் வெளிப்பட்டு" பாண்டிய அரசை நிறுவியதையும் கடுங்கோனுக்குப் பின் அவனி சூளாமணி, செழியன் சேந்தன், அரிகேசரி, கோச்சடையன் ரணதீரன், மாறவர்மன், அரிகேசரி பராங்குசன், நெடுஞ்சடையன் ஆகியோர் மதுரை அரசுகட்டில் ஏறியதையும் அழகிய தமிழ்க் கவிதையாக உருவாக்கினான். நெடுஞ்சடையன் காடவனைப் பெண்ணாகடத்து

அமர்வென்றதையும், ஆய்வேளை நாட்டுக் குறும்பில் செருவென்றதையும் குறிப்பிட்டு இவையெல்லாம் மன்னரின் மூன்றாவது ஆட்சியாண்டிற்குள் நிகழ்ந்தன என்பதையும் சுட்டிக்காட்டினான்.

மதுரைக்குத் திரும்பியவுடன் நற்சிங்கனுக்குப் பாண்டியன் நெடுஞ்சடையன் வேள்விக்குடியை வழங்கிய ஆவணமே வேள்விக்குடிச் செப்பேடு என்ற வரலாற்றுக் களஞ்சியமாக இன்றும் விளங்குகிறது.

15. காதலுக்குத் தடை

பாண்டியன் நெடுஞ்சடையனிடம் தலை வணங்கி, இரு கைகளையும் ஏந்தி வேள்விக்குடிச் செப்பேட்டைப் பெற்றுக்கொண்ட நற்சிங்கன், பெருமகிழ்ச்சியுடன் திரும்பிச் சென்றான். சாத்தனிடமும், இளந்தத்தனிடமும் அவர்கள் செய்த உதவிக்கு நன்றி தெரிவித்துவிட்டு மனூபமரிடமும் விடைபெறவேண்டும் என்ற வேட்கையை இளந்தத்தனிடம் தெரிவித்தான். நெடுஞ்சடையனிடம் நேரில் பேசியும் செப்பேடு பெற்றும் வந்த நற்சிங்கனால் அவர்தான் மனூபமராக வந்தவர் என்பதை அறிந்துகொள்ள முடியாமல் போனது ஒற்றர்படைத் தலைவனுக்கு மன நிறைவை அளித்தது. வைகை வேந்தரின் மாறுவேடத்தை உருவாக்கியது ஒற்றர்படை ஆகையால் அதன் தலைவனான இளந்தத்தன் தன்னுடைய ஆள்கள் எவ்வளவு திறமையாக மன்னனின் அடையாளத்தை மாற்றிவிட்டார்கள் என்று வியந்தான். நெடுஞ்சடையன், அவனுடைய தந்தையைப் போலவே மாறுவேடம் பூண்டு நகர் மக்களைக் கண்டு பேசுவதற்காகப் போகும் பழக்கம் உள்ளவனாதலால் அவனுக்குத் தீங்கு ஒன்றும் நேராமல் காக்கவேண்டியது ஒற்றர் படைத் தலைவனின் கடமையாகும். போலி ஓலையை உருவாக்கும் வல்லுநன் போலவே போலி வேடம் புனைவதிலும் தன்னிடம் வல்லுநர்கள் இருப்பதில் அவன் பெருமை கொண்டான்.

பல்லவனையும் ஆய்வேளையும் புறங்கண்டு கூடல் நகருக்குத் திரும்பியபொழுது அளிக்கப்பட்ட ஆரவாரமும் ஆடம்பரமும் நிறைந்த வரவேற்புப்போல் அல்லாமல் பாண்டிய வேந்தரும், சாத்தஞ்சாத்தனும் யார் கண்ணிலும் படாமலேயே நகருக்குள் நுழைந்தனர். அரண்மனைவாயிலில் மன்னரிடமிருந்து விடைபெற்று அண்ணன் சாத்தன் கணபதியின் வீட்டிற்குச் சென்றான் சாத்தஞ் சாத்தன். தம்பியை மார்போடு தழுவி வரவேற்ற சேனாதிபதி "அந்த அதியனை இனி அதிகநாள் விட்டுவைக்கக் கூடாது" என்று தன் சினத்தை அடக்கிக்கொண்டு வஞ்சினம் உரைப்பதுபோல் பேசினான். அவன் மனைவி நக்கன் கொற்றியோ மகன்போல் பாசத்துடன் வளர்க்கும் கொழுநன்மெலிந்து போனதைக்கண்டு உள்ளம் நொந்தாள். "இன்னும் கொஞ்ச நாட்கள் உன் உடல் பழைய நிலைமையை அடையும்வரை நீ

வெளியில் எங்கேயும் போக வேண்டாம். நான் சமைக்கும் உணவை உண்டு ஓய்வு எடுத்துக்கொள்" என்று ஆணையிட்டாள் அவள். ஆனால் அந்த ஆணையை அவன் மீறுவான் என்பது அவளுக்கும், அதைக் கேட்டுக் கொண்டிருந்த அவளுடைய கணவனுக்கும் நன்கு தெரியும். அவனை வெளியில் ஈர்க்கும் சக்தி அருகிலேயே இருந்தது என்பதை இருவரும் அறிந்திருந்தனர்.

அரசனோ, அரசியோ அல்லது அவர்களைப் போன்ற அதிகாரம் மிகுந்த வேறு யாராரோ இட்ட பணியைச் செய்து முடித்தவுடன், அதை அவர்களிடம் நேரில் சென்று அறிவிக்க வேண்டும் என்ற அரசியல் அரிச்சுவடியை நன்கறிந்த ஒற்றர் படைத் தலைவன், அரண்மனைக்குள் சென்று இளவரசியைச் சந்தித்தான். அரண்மனையில் அரசன் வந்து சேர்ந்த செய்தியைத் தோழியர் மூலம் அறிந்த தேவந்தி சாத்தன் சிறையிலிருந்து வெளிவந்தானோ இல்லையோ என்ற கவலையில் இருந்தாள். அண்ணன் வந்தவுடனேயே முதலில் அன்னையையும், பின் மனைவியையும் காணச் சென்றதால் அவனிடமும் கேட்கமுடியாமல் தவித்த நேரத்தில் அங்கு வந்த இளந்தத்தனை அவள் ஆவலுடன் வரவேற்றாள். "வாருங்கள் இளந்தத்தரே! நல்ல செய்தி தானே கொண்டு வந்திருக்கிறீர்கள்?" என்று வினவினாள். ஒற்றர் படைத் தலைவனின் முகத்தில் நற்செய்தியின் ஒளி தெரிந்தாலும் அதை உறுதிசெய்ய விரும்பினாள் அவள். "மிகவும் நல்ல செய்திதான் கொண்டுவந்திருக்றேன் இளவரசி! தங்கள் ஆணைப்படி எவ்விதமான ஊறும் விளையாமல் சாத்தனாரை மதுரைக்குக் கொண்டு வந்து விட்டோம். தாங்கள் நேரில் வந்து என்னிடம் ஆணையிட்டதால் நானும் நேரில் வந்து அதை நிறைவேற்றியதை அறிவிக்கத்தான் வந்தேன்" என்று தலை வணங்கி நின்றான் ஒற்றர்படைத் தலைவன்.

"என் பாராட்டுகள் மட்டும் அல்ல நன்றியையும், தெரிவித்துக் கொள்கிறேன். இதை என் பரிசாக வைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறி நூறு பொற்காசுகள் கொண்ட பட்டுப்பை ஒன்றை அவனுக்கு வழங்கினாள் தேவந்தி.

"நன்றி, இளவரசி! தாங்கள் எனக்குத் தரும் அடுத்த பணிக்காகக் காத்திருப்பேன் நான்" என்று மீண்டும் அவளை வணங்கி மகிழ்ச்சியுடன் வெளியேறினான் இளந்தத்தன்.

அன்று மாலையில் சாத்தனைச் சந்திக்க முடியும் என்று எண்ணி, அவர்கள் வழக்கமாகச் சந்திக்கும் இடமாகிய பூங்காவில் காத்திருந்தாள் அவள். அவன் வரவில்லை ஆத்திரத்துடன்

அரண்மனைக்குத் திரும்பி வந்த பின்னர் தான் அன்று மாலை அரண்மனையில் வேள்விக் குடிச் செப்பேடு நற்சிங்கனுக்கு வழங்கும் விழா நடந்தது என்றும் அதில் கலந்துகொள்வதற்காக அரசனின் ஆணைப்படி சாத்தன் அரண்மனைக் கொலு மண்டபத்திற்குச் சென்றுவிட்டான் என்றும் அவளுக்குத் தெரியவந்தது. வெகுளி சற்றே அடங்கினாலும் அவளுடைய காதல் உள்ளம் முற்றிலும் அமைதி கொள்ளவில்லை.

அடுத்தநாள் மாலை நேரம் சாத்தன் பூங்காவிற்குச் சென்றான். அவன் கண்ணில் படாதவாறு செடிகளின் மறைவில் அவள் மறைந்து, ஒளிந்து நடந்து விளையாடினாள். எப்பொழுதும் அவளுடன் பேசி மகிழும் இடத்தில் ஒரு நாழிகை நேரம் காத்திருந்து, மேலும் அரை நாழிகைப் பொழுது அங்கும் இங்கும் நடந்து இனிமேல் இளவரசி வருவதற்கு வாய்ப்பில்லை என எண்ணி அவன் வாடிய முகமும், சோர்ந்த நடையுமாக பூங்காவை விட்டு வெளியேற முனைந்தபொழுது அவன் முன்தோன்றினாள் அவள். அவளுடைய வடிவொத்த செவ்விதழ்களிலும், வாளொத்த கருங்கண்களிலும் நிழலிட்ட குறும்பும், அரும்பும் புன்னகையும் அவள் வேண்டுமென்றே அவனைத் தவிக்கவிட்டுக் கண்ணாமூச்சி விளையாடினாள் என்பதை நுண் மதியனான சாத்தனுக்கு உணர்த்தின. "தேடிவந்தவனை வாடவைப்பது கொடுமையாகும்" என்று சொற்களை அடுக்கிக் குறைப்பட்டான் அவன்.

"காண்பதற்காக இங்குவந்து நேற்று மாலை முழுவதும் காத்திருந்து, ஏமாற்றத்துடன் போகவிடுவது மட்டும் கருணையோ?" என்று விடையும் வினாவும் இணைத்தாள் அவள். "அரண்மனைக்குள் நடக்கும் விழாவிற்கு அரசன் அழைக்கும்போது போகாமல் இருக்க முடியுமா? அது மட்டுமல்ல அரண்மனை விழாவில் என் தேவியின் கடைக்கண் பார்வையால் களிப்படையலாம் என்று நம்பினேன்" என்று தான் வராமைக்குத் தக்க காரணங்களை எடுத்துரைத்தான் அவன்.

"யாரோ ஒருவனுக்கு ஓர் ஊரை அரசன் வழங்குவதற்காக நிகழ்ந்த விழா அவ்வளவு முக்கியமானது என்று நான் கருதவில்லை" என்று தான் வராமைக்கு விளக்கம் அளித்தாள் அவள்.

"யாரோ ஒருவன் அல்ல. நான் தகடூர்ச் சிறையிலிருந்து தப்புவதற்குப் பேருதவிசெய்தவர் நற்சிங்கன். பாண்டிய வேந்தரும் அவருடைய வீரர்களும் தங்கியிருந்ததும் திட்டம் தீட்டியதும்

அவருடைய வீட்டில்தான். அந்த விழாவிற்கு நான் போகாமல் இருந்தால் அது நன்றி கொன்ற செயலாக இருக்கும்" என்று தன் கடமையுணர்வைக் காட்டினான் அவன்.

"சரி வாருங்கள். வழக்கம்போல் நமது ஆம்பல் குளக்கரையில் மலைமல்லிகை மணம் நுகர்ந்து, அமர்ந்து பேசுவோம். உங்கள் சிறை வாழ்க்கையையும், அதிலிருந்து விடுப்பட்ட விதத்தையும் விரிவாகச் சொல்லுங்கள். நான் முள்மேல் இருந்து துயில் இழந்து துன்பத்தில் உழந்து தவித்த அந்த நாள்களில் நீங்கள் எப்படி இருந்தீர்கள் என்பதை அறிய என் நெஞ்சம் கெஞ்சுகிறது" என்று முன்னால் நடந்தாள் அவள். அவளுடைய துடி இடையையும் பிடிநடையையும் கண்டு ரசித்துக்கொண்டு கனவுலகில் மிதப்பதுபோல் அவள் பின்னால் நடந்தான் அவன்.

பூங்காவில் உலவிக் களைப்படைவர்கள் அமர்வதற்காகவோ, அல்லது இளங்காதலர்கள் தங்கள் உள்ளம் துறந்து, உடல் இணைந்து, மனம் கிளர்ந்து மகிழ்வதற்காகவோ அந்தச் சாய்ந்திருக்கும் வசதியுள்ள பலகையால் அமைந்த இருக்கைகள் போடப்பட்டிருந்தன. கதிரவன் மறைந்து அந்தி மயங்கி இருள் பரவத் தொடங்கியிருந்தது. பூங்காவில் இருளை அகற்றுவதற்காகப் பொருத்தப் பட்டிருந்த விளக்குகளை ஏற்றி விட்டுப் பணியாள் சற்று முன்னர்தான் வெளியேறினான். மிக அருகில் வந்து பார்த்தால் அல்லது தாங்கள் இருப்பது யாருக்கும் தெரிய வாய்ப்பில்லை என்பதை நன்குணர்ந்த சாத்தனும் தேவந்தியும் கைகளை இணைத்துக்கொண்டு ஒருவரோடு ஒருவர் நெருங்கி அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர்.

தகடூருக்குச் சென்றதுமுதல் சிறையிலிருந்து வெளியேறியது வரை நடந்த பல்வேறு நிகழ்ச்சிகளையும் சாத்தஞ்சாத்தன் காதலிவிரும்பியதுபோல் விளக்கியுரைத்தான். "சிறையில் நான் இருந்தபொழுது, ஓரிரு நாள்கள் தவிர மற்ற நாள்கள் எல்லாம் அதியன் அங்கு வந்தான். அவன் அமர்வதற்காகவே காவலர்கள் ஓர் இருக்கையை அருகில் வைத்திருந்தனர். காவலனை எங்கள் உரையாடல் கேட்காத தொலைவில் நிற்கும்படி அனுப்பிவிட்டு, அதியன் வெகு நேரம் பேசிக்கொண்டிருப்பான். என்னை எவ்வளவு இழிவுபடுத்தினாலும் என் சினத்தை எவ்வளவு தூண்டிவிட்டாலும் சிறைக்குள் அடைந்து கிடக்கும் என்னால் ஒன்றும் செய்ய முடியாது என்ற தைரியத்தால் சற்றும் அச்சமோ தயக்கமோ இன்றிப் பேசுவான்."

"எனக்குப் புரியாதது என்னவென்றால் உங்களைச் சிறையில் அடைத்ததால் அவனுக்கு என்ன பயன் என்பதுதான் அரசரின் தூதனாகச் சென்றவரைச் சிறையில் அடைத்தவன் என்ற அவச்சொல்லைத் தவிர வேறு என்ன நன்மை விளையக்கூடும் அவனுக்கு?"

இந்த வினாவிற்குச் சரியான விடை அளிக்கவேண்டுமா அல்லது மழுப்பிவிடலாமா என்று சற்று நேரம் சிந்தித்தான் சாத்தன். பிறகு உண்மையை இளவரசியும் அறிந்திருப்பதே நல்லது என்று முடிவு செய்தான். "அதியன் என்னைச் சிறையில் இட்டதற்கு இரண்டு காரணங்கள் கூறினான். முதல் காரணம் தகடூர் மீது பாண்டியவேந்தர் படையெடுத்து வருவதைத் தடுப்பதற்காக என்னை ஒரு கருவியாக்குவது. பாண்டியர் படை அங்கு வந்தால் நான் தூக்கில் தொங்கவேண்டி வரும் என்று மிரட்டுவது."

தேவந்தி குறுக்கிட்டாள்." ஆனால் பாண்டியர் படையெடுப்பதைப் பற்றிச்சிந்திக்கவே இல்லையே!"

"திறைசெலுத்தச் சொல்லிதூதனை விடுத்ததைப் படையெடுப்பின் முதல் கட்டமாகக் கருதினான் அதியன். ஆகவே பாண்டியனுக்குப் பதிலடி கொடுப்பதாக நினைத்து என்னைப் பிடித்து வைத்தான்."

"சரி இரண்டாவது காரணம்?" அவள் விடுவதாக இல்லை. சாத்தன் தன் வார்த்தைகளைத் தேர்வு செய்து எச்சரிக்கையுடன் பேசினான்.

"இரண்டாவது காரணம் முதல் காரணம் போலவே ஓர் ஆள் தான். முதல் காரணம் நான். இரண்டாவது காரணம் நீ!" என்று சுருக்கமாகப் பேசி, அவள் முகத்தை உற்று நோக்கினான் சாத்தன். அவன் எதிர்பார்த்தது போல் வியப்போ, வேதனையோ அவள் முகப்படத்தில் காணவில்லை. அவள் மெல்லத் தலையாட்டினாள். "என் மனத்தில் அப்படி ஓர் ஐயம் தலைதூக்கியது. நம்மிடையில் நிலவும் உறவை அவன் அறிவான். என்மீது கொண்ட வெறுப்பை உங்கள் மீது தீர்த்துக் கொள்கிறானோ என்று எண்ணினேன்" என்று தன் எண்ணத்தை மறைக்காமல் வெளியிட்டாள் அவள். பின்னர் தொடர்ந்து வினவினாள்.

"அதியன் அதை எப்படி உங்களிடம் வெளியிட்டான். அவன் பேசிய வார்த்தைகள் நினைவில் உள்ளனவா?" "நன்றாக நினைவில் உள்ளன. நான் எப்படி மறக்க முடியும்? என் நெஞ்சைத் தொட்ட வார்த்தைகள் அல்லவா அவை? அவன் சொன்னான், குறுநில மன்னனான என்னை இழிவுபடுத்தி என் காதலை உதறித்

தள்ளி, ஒரு நிலமன்னனும் அல்லாத உன் காதலை ஏற்றுக் கொண்டாளே அந்தப் பாண்டிய இளவரசி, அவளுடைய காதலனின் உயிர் என் கையில் ஊசலாடுகிறது என்பதை அவளுக்கு உணர்த்த வேண்டும். "என்று. அவன் நெஞ்சிலிருந்து அந்த வார்த்தைகள் அகலவில்லை என்பதை அவளும் நன்கு உணர்ந்தாள்.

"நான் பாண்டிய நாட்டின் இளவரசி என்றோ, அதியன் குறுநில மன்னன் என்றோ, நீங்கள் ஒருநில மன்னனும் அல்ல என்றோ நான் எண்ணிப் பார்க்கவில்லை. சிறுவனும் சிறுமியுமாக இருந்த நாள்கள் முதல் நெருங்கிப் பழகி, ஓடி, ஆடி, விளையாடி மகிழ்ந்த நாம் என்று காதலர்கள் ஆனோம் என்று கூட எனக்குத் தெரியாது. ஆனால் நீங்கள் இல்லாமல் என்னால் வாழ முடியாது என்பதை நான் திடீரென்று ஒரு நாள் உணர்ந்தேன். என் அன்னை எனக்கு அறிவுரை கூறியும் கடிந்து பேசியும் என்னைத் தடுக்க முயன்றபொழுதுதான் அந்த உண்மை எனக்குப் பளிச்சென விளங்கியது. நீங்கள் என்னிடம் காதலை வெளியிடும் முன்பே நான் தங்கள் காதலியாகிவிட்டேன். அதியன் என்னிடம் தன் வேட்கையைத் தெரிவித்தபோது என் மனதில் வேறொருவர் இடம் பெற்றுள்ளார் என்று மட்டும்தான் குறிப்பிட்டேன். அது யார் என்பதை அவன் விரைவிலேயே தெரிந்துகொண்டான். அவனுடைய காழ்ப்புணர்ச்சியால் தங்களுக்குத் தீங்கிழைக்க முனைவான் என்று அஞ்சினேன். அதனால்தான் நானே நேரில் சென்று ஒற்றர் படைத் தலைவரிடம் தங்களைச் சிறைமீட்க வேண்டும் என்று வேண்டினேன். அவர் அதை உங்களிடம் சொன்னாரா?" என்று தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு வினவினாள் இளவரசி.

அவளுடைய காதல் கவிதையில் களித்துத்திளைத்துக் கொண்டிருந்த சாத்தனும், அதிலிருந்து விடுபட்டு நிதானமாகப் பேசினான்.

"இல்லை. ஒற்றர்படைத் தலைவர் இளவரசியின் ஆணையை வேறு யாரிடமும் வெளியிடமாட்டார். எல்லாவிதமான இரகசியங்களையும் நெஞ்சிற்குள் புதைத்து வைப்பதே அவர்கள் தொழில்" என்று பாராட்டினான் அவன்.

"அதியனுக்குக் காழ்ப்புணர்ச்சி மட்டும் அல்ல இன்னொருவரை நீ காதலிப்பதாகத் தெரிந்தபின்னும் உன்னை மறக்கவில்லை அவன். அவன் உன்னைக் காதலித்ததாகச் சொன்னது கூடப் பொய் என்று தோன்றுகின்றது எனக்கு. அவனை

வருத்துவது காதல் தோல்வி அல்ல. காமப் பசி! அவன் உன் உடல்வனப்பைத்தான் கனவுகாண்கிறான். அந்தக் கட்டுடலைத் தொட்டுப் பார்க்க முடியவில்லையே என்றுதான் ஏங்குகின்றான். நான் சினம் கொண்டதாகவோ, சிறையில் அடைத்ததால் சோர்ந்து விட்டதாலோ அவனிடம் காட்டிக்கொள்ளக் கூடாது என்ற உறுதியுடன் இருந்த என்னையே, அவனுடைய கீழ்த்தரமான பேச்சு சினம் கொள்ளச் செய்துவிட்டது. அவனிடம் ஒரு சபதம் செய்து விட்டுத் தான் வந்தேன்" என்று மேலும் கூறினான் சாத்தன் தான் செய்த சபதத்தை அவள் கடிந்து கொள்வாளோ என்ற கலக்கம் தொக்கி நின்றது. அவனுடைய சொற்களில்.

"என்ன சபதம் செய்தீர்கள்?" அவள் ஆவலுடன் வினவினாள்.

"என்னைச் சிறையில் அடைத்துவிட்டு, என் முன் இருந்துகொண்டு என் மன்னரையும் என் காதலியையும் இழிவாகப் பேசிய அதியனின் தகடூர் மீது படையெடுத்து அவனை உயிரோடு பிடித்து மதுரைச் சிறையில் அடைத்தபின்தான் நான் என் காதலியை மணம் முடிப்பேன்" என்று சபதம் செய்தேன்." என்று உண்மையை விளம்பி அவள் என்ன சொல்லப்போகிறாளோ என்று அவள் மலர்முகத்தைக் கூர்ந்து நோக்கினான் சாத்தன்.

அவள் உடனடியாக ஒன்றும் பேசவில்லை. அவளுடைய முகத்தோற்றத்திலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் அவனுடைய கண்ணுக்குத் தென்படவில்லை. ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக கருமுகில் விலகி வெண்மதி வெளிப்படுவதுபோல் மலர்ந்தது அவளுடைய அழகு முகம். முத்துப் பற்கள் ஒளிவீச முறுவல் மிதந்து வர அவள் மொழிந்தாள்.●

"உங்கள் சபதத்தில் இரு பகுதிகள் உள்ளன. ஒன்று பழிவாங்கும் பகுதி. இரண்டாவது மணம் புரியும் பகுதி. முதல் பகுதியால் மனம் மகிழ்ந்த நான் இரண்டாவது பகுதியால் சற்றே சோர்வடைந்தேன். ஏனென்றால் நம் திருமணம் எப்பொழுது நடக்குமோ என்ற கவலை தோன்றியது. ஆனால் அது கண்டிப்பாக நடக்கும் என்பதும் அதே பகுதியில் அடங்கியிருப்பதால் மனம் தேறினேன். இனி எவ்விதமான தடை ஏற்பட்டாலும் அதைத் தகர்த்து என்னை மணம் முடிக்கத்தானே வேண்டும்! அந்த நம்பிக்கை எனக்கு உறுதியும் பொறுமையும் தரும் நான் காத்திருப்பேன்" என்று காரண காரியங்களோடு விளக்கினாள் இளவரசி.

இணைந்திருந்த அவர்களின் கைகள் ஒன்றை ஒன்று அழுத்தின. அவளைத் தன் பக்கம் இழுத்து நெஞ்சோடு சேர்த்துத்

தழுவினான் அவன். அவனுடைய அகன்ற மார்பில் தன் மென்மையும், மதர்ப்பும் சேர்த்து அழுத்தி அவன் முதுகில் கைகளால் தடவிக்கொண்டே அவன் மீது சாய்ந்தாள் அவள். அவனுடைய இதழ்கள் தாகத்தோடு அவள் முகத்தில் பதிந்தன. தன் செவ்விதழ்களில் தேன் பொழிந்து அந்தத் தாகத்தைத்தீர்க்க முயன்றாள் அவள். அணைப்பிலும் பிணைப்பிலும் ஆழ்ந்த காதலர்கள் இரவுவளர்கிறதே என்ற கவலையால் மனமின்றிப் பிரிந்தனர்.

அடுத்தநாள் அன்னை மகாராணி அவனைக்கான விரும்புவதாகக் காவலன் வந்து அறிவித்தது சாத்தனுக்கு வியப்பளித்தது. அரண்மனையில் தற்செயலாகச் சந்திக்க நேரும் பொழுதோ அல்லது அரசு விழா ஏதேனும் நடக்கும் பொழுதோ அன்னை மகாராணி பேசியதைத் தவிர அவனைத் தனிமையில் அழைத்துப் பேசியதில்லை. இதுவரை இளவரசிக்கும் அவனுக்கும் வளரும் காதல் உறவை அன்னை மகாராணி விரும்பவில்லை என்பதை நன்கறிந்த சாத்தன் சற்றுக் கவலை யுடன்தான் அவரைக் காணச் சென்றான்.

அன்னை மகாராணி பூசுந்தரி தன் பெயருக்குத் தக்கவாறு பேரழகியாகத் திகழ்ந்தவள். கங்க அரசனின் மகளாகிய அவளை மன்னன் கோநெடுமாறனுக்கு மணம்புரிந்து வைத்தவர் அன்று படைநாயகனும் இன்று அமைச்சரும் ஆன மாறன் காரி ஆவார். பூசுந்தரியின் உடன் பிறந்த சகோதரர்களைத் தாக்க வந்த வடபுலத்து அரசர்களை விரட்டியடித்து கங்க அரசனின் மகளான அந்த அழகியைப்பாண்டியமன்னனுக்குமணம்முடித்துமகாராணியாக்கியவர் மாறன் காரி அமைச்சரின் ஆதரவும் நெடுஞ்சடையனின் அன்னை என்ற பெருமையும் சேர்ந்து இன்றும் பூசுந்தரிக்குச் செல்வாக்கு இருந்தது. பாண்டிய மன்னனும் அமைச்சரும் அவளுடைய அறிவுரையை மதித்தே செயல்பட்டனர் என்பது மற்றவர்களைப் போலவே சாத்தனுக்கும் தெரியும். எனவே போர்க்களத்தில் புலியெனப் பாயும் வீரன் ஆயினும் அன்னை மகாராணியிடம் சற்றே படபடக்கும் நெஞ்சத்துடன்தான் சென்றான் சாத்தஞ் சாத்தன்.

ஐம்பது வயதைக் கடந்து விட்டாலும் கணவர் காலம் சென்று இரண்டாண்டுகள் கழிந்தாலும் பூசுந்தரி இன்றும் ஓர் அரசிக்கே உரிய செம்மாப்பும் தோற்றப் பொலிவும் விளங்க ஒரு மஞ்சத்தில் சாய்ந்து அமர்ந்திருந்தாள். தன் முன் வந்து தலைவணங்கி நின்ற சாத்தனை மலர்ந்த முகத்துடன்

வரவேற்றாள். கூட இருந்த தோழியை வெளியில் அனுப்பிவிட்டு அவனிடம் தனிமையில் பேசினாள்.

"சாத்தா! உன் சிறை வாழ்க்கை உன்னைச் சற்றும் அச்சுறுத்தவில்லை என்று எனக்குத் தெரியும். என் மகனின் உயிரை முன்பொரு நாள் நீ காப்பாற்றினாய் இப்பொழுது அவனுக்காகத் தூது சென்று சிறையில் அடைக்கப்பட்டாய். உன் அரசப்பற்றை நானும் நேரில் பாராட்டத்தான் உன்னை வரச்சொன்னேன்| என்று அவனைப் புகழ்ந்தாள் அன்னை மகாராணி. "நன்றி மகாராணி! பாண்டியர் குலத்திற்குச் சேவை செய்வதையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்ட என் முன்னோர்களின் பாதையில் நானும் செல்கிறேன். அவ்வளவுதான்" என்று அடக்கமுடன் கூறினான் சாத்தன்.

"நீ சிறையில் இருந்தபொழுது அதியனிடம் செய்த சபதத்தைப்பற்றிதேவந்திஎன்னிடம்கூறினாள்."சாத்தன்திடுக்கிட்டான். இக்கட்டான கட்டம் வருகிறது என்று அஞ்சினான். மகாராணி நகைத்தாள்.

"செய்த தவறை நீ உணர்கிறாய் என்பது உன் முகத் தோற்றத்திலிருந்தே தெரிகிறது. அதியனைப் போரில் வென்று மதுரைச் சிறையில் அடைப்பது வீரனின் செயல்தான். அதை நான் பாராட்டுவேன். ஆனால் அதனால் மட்டும் என் மகளை நான் உனக்குத் தரமாட்டேன். என் அனுமதியின்றி நீ அவளை மணக்க முடியாது" என்று உறுதியாகக் கூறினாள்.

"தங்கள் அனுமதிமட்டுமல்ல. தங்கள் ஆசியும் பெற்ற பின்னரே நான் இளவரசியை மணப்பேன்" என்று சாத்தன் தன் உறுதியையும் வெளியிட்டான்.

16. ஆசிபெற்ற மன்னனும் ஆணை ஏற்ற வீரனும்

பாண்டியன் நெடுஞ்சடையனும் அவனுடைய மனைவியும் பட்டத்தரசியுமான இளவெயினியும், அன்னை மகாராணி பூசுந்தரியும் ஒரு தேரிலும், அமைச்சர் மாறன் காரியும், அவருடைய தம்பியும் உறையூர்ப்படையின் தலைவனுமான மாறன் எயினனும் வேறு ஒரு தேரிலுமாகத் திருவில்லிபுத்தூர் பெரியாழ்வாரின் புண்ணிய தரிசனத்திற்காகப் புறப்பட்டனர். இருபது குதிரை வீரர்கள் அரச குடும்பத்திற்கும், அமைச்சருக்கும் பாதுகாப்பாக உடன் சென்றனர். மாறன் காரியின் சொந்த ஊரான களக்குடியில் அவருடைய மாளிகையில் முதல் நாள் எல்லோரும் தங்கி அடுத்தநாள் வில்லிபுத்தூரை அடைந்தனர்.

திருவில்லிபுத்தூருக்குள் நுழைந்தவுடனேயே தேரிலிருந்து இறங்கி எல்லாரும் நடந்து சென்றே பெரியாழ்வாரைக் காணவேண்டும் என்ற முடிவுடன் நடந்தனர். அவர்கள் சென்ற சாலையின் ஒரு பக்கம் வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கி எங்கும் நறுமணம் பரப்பும் பூங்கா இருந்தது. மல்லிகை, செண்பகம், செங்கழுநீர், பாதிரி, முல்லை, அல்லி, குவளை, தாமரை போன்ற மலர்கள் மணமும் மலர்ச்சியும் வீச அவைகளுக்கிடையே காணப்பட்ட துழாய்ச் செடிகள் அவற்றிற்கே உரிய தனிப்பொலிவுடன் தாமே கண்ணுக்கு மிகவும் விருப்பமும் நெருக்கமும் உள்ளவை என்று பறை சாற்றின.

காலம் சென்ற பாண்டிய மன்னரோடும், தனிமையிலும் பலமுறை அங்குவந்து பெரியாழ் வாரை வணங்கி ஆசிபெற்ற மாறன் காரி, மற்றவர்களிடம் திருவில்லிபுத்தூரின் சிறப்பையும் பெரியாழ்வாரின் பெருமையையும் எடுத்துரைத்தார்.

"இந்த இடம் ஓர் அடர்ந்த காடாக இருந்ததென்றும் அதை ஊராக மாற்றியவன் வில்லி என்ற பெயருள்ள ஒரு வேடன் என்றும் சொல்வார்கள். புதிய ஊராகையால் இதனைப் புத்தூர் என்றும் கூறுவர். ஆகையால் இவ்வூருக்கு திருவில்லி புத்தூர் என்றும் பெயர் வந்ததாம். பண்டை நாள் முதலே பல முனிவர்கள் இங்கே தவம் செய்தனர். அவர்கள் உருவாக்கிய வடபெருங்

கோயிலுடையான் கோயிலாலேயே இந்த ஊர் பெருமை அடைந்தது. எனினும் விஷ்ணுசித்தர் பெரியாழ்வார் என்ற சிறப்புப் பெற்ற பின்னரே இது இவ்வளவு புகழ்பெற்றது. ஏராளமான ஆழ்வார்க்கடியார்கள் உலகின் பல பகுதிகளிலிருந்தும் இங்கு வந்து பெரியாழ்வாரையும், அவர் போற்றும் வடபெருங்கோயிலுடையானையும் வணங்கிச் செல்கிறார்கள். நாம் இப்பொழுது கண்டு மனம் குளிரும் இந்தப் பூங்கா விஷ்ணு சித்தரால் உருவாக்கப்பட்டது. வடபெருங்கோயிலுடையானாகிய கண்ணபிரானுக்கு மிகவும் விருப்பமானவை மலர்மாலைகள் என்று கண்டு அவனுக்குப் பூமாலைகள் புனைந்து அணிவித்துக் காண்பதற்காகவே இந்தப் பூங்காவை உருவாக்கினார் விஷ்ணு சித்தர். பாமாலை பல செய்து, ஆழ்வார்க்கடியார்களின் கண்கண்ட தெய்வமாகப் பெரியாழ்வார் மாறிய பின்னும் பூமாலை புனையும் பணியை நிறுத்த வில்லை. இன்றும் தன் கைகளாலேயே செய்த மலர் மாலைகளை இறைவனுக்குச் சார்த்துவதிலிருந்து ஒருநாள்கூட அவர்தவறுவதில்லை".

"பெரியாழ்வாரின் புகழுக்கும் பெருமைக்கும் காரணம் அவருடைய பக்தியின் ஆழமாகும். பொதுவாக இறைவன் தன் மீது அருள் பொழியவேண்டும் என்றும் தன் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டும் என்றும் தன்னைப் பாதுகாக்க வேண்டும் என்றுமே அடியார்களும், பக்தர்களும் வேண்டுவர் ஆனால் பெரியாழ்வாரோ, இறைவனுக்கே எந்தத் தீங்கும் ஏற்படக் கூடாது என்று வேண்டி, அவனுக்காகவும் அவன் மார்பில் குடிகொண்ட மங்கை நல்லாளுக்காகவும் பல்லாண்டு பாடியவர். தான் வணங்கும் கண்ணபெருமானையே குழந்தையாக மனத்தில் கண்டு அந்தக் குழந்தையின் பிள்ளைப் பருவத்தையும், விளையாடல்களையும் பாடிக் களித்து அவனை வாழ்த்திப் பாடியவர். அவர் வாழும் காலத்தில் வாழ்வதும், அவருடைய திருவடிகளைத் தொட்டு வணங்கும் வாய்ப்புக் கிடைத்ததும் நாம் பெற்ற பெரும் பாக்கியமாகக் கருத வேண்டும்" என்று பெரியாழ்வாரின் புகழ்பாடினார் அமைச்சர் மாறன் காரி.

வடபெருங்கோயிலுடையானின் திருக்கோயிலின் அருகிலேயே அமைந்திருந்த பெரியாழ்வாரின் இல்லத்திற்குப் பாண்டியரும் குடும்பத்தினரும் சென்றபொழுது ஒரு சில சீடர்களும், வைணவபக்தர்களுமே அங்கு இருந்தனர். அவர்கள் முன் வந்து எல்லாரையும் வரவேற்க மன்னன் நெடுஞ்சடையன் தன் அன்னையுடனும் மனைவியுடனும் முதலில் பெரியாழ்வார் காலில் விழுந்து வணங்கினான். மன்னனுக்கு ஆசிவழங்கிய

ஆழ்வார். "உன் தந்தையின் வழியிலேயே உன் ஆட்சியும் நல்லமுறையில் நடக்கிறது என்று மக்கள் புகழ்கின்றனர். நீ நெடுநாள் வாழ்ந்து நல்லாட்சி புரிவாயாக என்று வாழ்த்தினார்.

மாறன் காரியும் தம்பி மாறன் எயினனும் பலமுறை திருவில்லிபுத்தூருக்குச் சென்று பெரியாழ்வாரை வணங்கியவர்களாதலால் அவர்களுடன் அளவளாவிய பெரியாழ்வார் அவர்களிடம் ஒரு பணியையும் ஏற்பித்தார்.

"நான் திருமாலிருஞ்சோலைக்குச் சென்று திரும்பிவரும் வழியில் ஆனைமலை என்ற பெயருள்ள ஒரு சிற்றூரில் தங்கினேன். அன்று இரவில் கண்ணபிரான் என் கனவில் தோன்றினார். வெகுநேரம் என்னோடு அளவளாவினார். அந்த இரவு இன்பமாகக் கழிந்தது எனக்கு. அங்கே அவருக்கு ஒரு கோயில் எழுப்பவேண்டும் என்று எனக்கு ஆசை ஏற்பட்டுள்ளது. அந்த ஆசையை நீங்கள் நிறைவேற்றிவைக்க வேண்டும்" என்று வேண்டினார்.

"தேவரீரின் ஆணைப்படி கட்டாயம் ஆனை மலையில் பெருமாளுக்குக் கோயில் கட்டுவோம்" என்று உறுதியளித்தனர் காரியும், எயினனும். "எனக்கும் கட்டளை இடுங்கள் தங்கள் விருப்பப் படி எங்கு வேண்டுமானாலும் திருமாலுக்குக் கோயில் எழுப்புகிறேன்" என்று இறைஞ்சினார் பாண்டியர். "உம் பக்தியை நான் மனம் உவந்து பாராட்டுகிறேன். நீர் உம் ஆட்சியின் தொடக்கப் பருவத்தில் இருக்கிறாய். இன்னும் சில ஆண்டுகள் ஆட்சி நடக்கட்டும். உன் வீரத்தையும் பெருமையையும் உலகம் அறியட்டும். அப்பொழுது நான் உமக்குச் செய்தி அனுப்புகிறேன். கண்ணபிரானிடமிருந்து எனக்குக் கட்டளை வரும். அதை நான் உமக்குத் தெரிவிக்கிறேன்" என்று அருளிச் செய்தார் ஆழ்வார் பெருமகன். பாண்டியரும் குடும்பமும், அமைச்சரும் தம்பியும் பெரியாழ்வாரையும், வடபெருங்கோயிலு டையானாகிய திருமாலையும் வணங்கி வழிபட்டு, நிறைந்த மனத்துடன் கூடல் மாநகருக்குத் திரும்பினர்.

மன்னரின் வருகைக்காகக் காத்திருந்ததுபோல் அடுத்தநாள் காலையிலேயே ஒற்றர் படைத் தலைவன் இளந்தத்தன் அரசரைச் சந்தித்தான். சாத்தஞ்சாத்தன் சிறையிலிருந்து தப்பிச்சென்றபின் தகடூரில் நிகழ்ந்த செய்திகளைப் பாண்டியரிடம் விளக்கினான்.

"உலகணன் தகடூரிலிருந்து ஓலை அனுப்பியுள்ளான். தகடூர்ச்சிறையில் கடுங்காவலில் வைக்கப்பட்ட சாத்தனார்,

தப்பிச்சென்றது கொங்கு மன்னனைக் கடுங்கோபத்திற்கு உள்ளாக்கியிருக்கிறது. மறுநாள் காலையில் சிறையின் உள் வாயிலைக் காவல்காக்கும் வீரர்கள் பொறுப்பு ஏற்க வந்தபொழுதுதான் இரவில் காவல் காத்த இரு காவலர்களும், சாத்தனாரின் அறைவாயிலில் காவல் காத்த வீரனும் கைகால்கள் கட்டப்பட்டும், வாய் பேச முடியாமலும் கிடப்பதைக் கண்டனர். புறவாயிலைக் காவல் காத்த வீரர்களுக்குச் சிறையிலிருந்து ஒருவர் தப்பிச்சென்ற செய்தியே தெரியாது. சிறையின் தலைமைக் காவலர் தகவல் அறிந்தவுடன் சிறைக்குள் வந்து விசாரித்தபொழுதான் இரவில் நடந்த சிறைமீட்பு எப்படி நடந்தேறியது என்பது அவர்களுக்குப் புரிந்தது. தலைமைக் காவலரே நேரில் சென்று மன்னரிடம் செய்தி சொல்ல, கோபம், கொண்ட மன்னர், அந்தச் சிறைத் தலைமைக் காவலரையே சிறையில் அடைக்க உத்தரவிட்டார். பின்னர் சாத்தனார் தப்பிச் சென்ற இரவில் சிறையில் வேலையில் ஈடுபட்டிருந்த எல்லாருமே சிறையில் அடைக்கப்பட்டனர். அரசரின் ஆணைப்படி அமைச்சர் மேலும் விசாரணை செய்து கொண்டிருக்கிறார்' என்று பொங்கிவந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு பேசினான் இளந்தத்தன். பின்னர் தொடர்ந்தான் "அது மட்டுமல்ல தாங்கள் சொன்னது போலவே, சிறையில் இருந்த போலி ஓலையில் கைதியின் பெயர் மனுபமர் என்று எழுதப்பட்டிருப்பதைக் கண்ட கொங்கு வேந்தனுக்கு, பாண்டிய மன்னரே சிங்கத்தின் வாயில் தலையிடுவதுபோல் பகைவனின் தலைநகராகிய தகடூரில் நுழைந்து சிறையில் இருந்த நண்பனை மீட்டுச் சென்று விட்டார் என்ற ஐயம் எழுந்துள்ளது. அதனால்தான் ஆத்திரம் அதிகமாகியது."

நெடுஞ்சடையான் உரக்கச் சிரித்தான். "ஆம் அந்தப்பெயர் எனக்கு என் தந்தை ஒரு நாள் சூட்டிய புனைபெயர் என்பது அதியனுக்குத் தெரியும். அதனால்தான் அவன் கன்னத்தில் அறை விழுந்ததுபோல் ஆத்திரம் மூண்டிருக்கிறது அவனுக்கு. சாத்தனையும் அழைத்துவந்து இந்தச் செய்தியைச் சொல்ல வேண்டும்" என்று கூறிய வேந்தன் அதற்காக ஆளனுப்பினான்.

சாத்தன் வந்துசேர்ந்தவுடனேயே நெடுஞ்சடையன் அதியனின் ஆத்திரத்தையும் அதனால் சிறைக்காவலர்களுக்கு ஏற்பட்ட அவலங்களையும் அவனிடம் கூறிச் சிரித்தான். அதியனின் சினம் பொங்கும் முகத்தையும் கொக்கரிப்பையும் சிறையில் வாழ்ந்த நாள்களில் கண்டிருந்த சாத்தனுக்கு இப்பொழுதும் மனக்கண்முன் அந்தக் காட்சியைக் காண முடிந்தது. "கொங்கு மன்னன் கோபம் பொங்கிப் பேசுவதை நான் கண்டதும் கேட்டதும் உண்டு.

மகிழ்ச்சியுடன் இருக்கும் நேரத்திலேயே அதியன் அழகானவன் என்று யாரும் குறிப்பிட மாட்டார்கள். சினம் பொங்கி இருக்கும்பொழுதோ இன்னும் பல கோணங்களில் புருவங்களும் இதழ்களும் வளைந்தும் நெளிந்தும் போவதால் சற்று அருவருப்பாகவே இருக்கும் காண்போருக்கு. சிறையிலிருந்து நான் தப்பிவிட்டேனே என்பது ஒருபுறம் இருக்க, மனூபமர் என்ற பெயருடன் பாண்டிய வேந்தரே தகடூருக்குள் நுழைந்து இவ்வளவு துணிந்து செயல் பட்டது, அதைவிடப் பேரிடியாகத் தோன்றியிருக்கும். என்னைப் பிடித்துச் சிறையில் அடைத்ததுபோல், பாண்டிய வேந்தரையும் பிடிக்க முடிந்திருந்தால் அது எவ்வளவு பெரிய வெற்றியாக அமைந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கும்பொழுது அதியனின் ஆத்திரம் பொங்கி வழிந்திருக்கும். பாண்டிய நாடே தன் கைப்பிடியிலிருந்து நழுவிப் போய் விட்டதே என்று நைந்திருக்கும் அதியனின் நெஞ்சு" தன் கருத்தை வெளியிட்டான் சாத்தன்.

இளந்தத்தன் சென்ற பின்னரும் நண்பர்களாகிய நெடுஞ்சடையனும் சாத்தஞ் சாத்தனும் உரையாடிக்கொண்டிருந்தனர். பெரியாழ்வாரை வணங்கி ஆசிபெற்றதையும் அவர் மாறன் காரியும் மாறன் எயினனும் ஆனை மலையில் கோயில் எழுப்பும்படி அவர்களிடம் கேட்டுக்கொண்டதையும் நெடுஞ்சடையனிடம் தெரிவித்தான்.

"என் தமையனும் திருப்பரங்குன்றத்தில் சில புண்ணியப் பணிகள் செய்யப்போவதாகப் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டேன் நான். அவருக்கு ஓர் ஐயம். வைணவராக விளங்கும் பாண்டிய மன்னர் தம்முடைய சேனாதிபதி சிவன் கோயில் கட்டுவதை எதிர்ப்பாரோ என்று அஞ்சுகிறார்" என்றான் சாத்தன். ஆனால் நெடுஞ்சடையன் அந்த ஐயத்தை அப்பொழுதே தீர்த்து வைத்தான்.

"சாத்தா! நீ சேனாதிபதியிடம் தெளிவாகச் சொல்லிவிடு. நான் வைணவனாக இருப்பதால் என் அரசில் பணிபுரிபவர்கள் எல்லோரும் வைணவர்களாக இருக்க வேண்டும் என்ற எண்ணமோ, பிடிவாதமோ எனக்கில்லை. நான் முன்பே உன்னிடம் சொன்னதுபோல் என் முன்னோர்கள் எல்லாருமே சைவசமயத்தைச் சார்ந்தவர்கள். என் தந்தையார்தான் வைணவத்தைத் தழுவிய முதல் பாண்டியர். சைவம் தீயது என்று நான் எண்ணினால் என் முன்னோர்களை நானே பழிப்பதுபோல் ஆகும். இறைவன்மீது உள்ள பக்தி என்பது ஒவ்வொரு தனி மனிதனுக்கும் உள்ள சொந்த உரிமையாகும்.

சைவத்தைப் பின்பற்றுவோரை வைணவர் குறைகூறுவதும், வைணவத்தைப் பின் பற்றுவோரைச் சைவர் குறைகூறுவதும் அறியாமையாகும். களப்பிரர்களின் ஆட்சியால் நாம் எல்லோரும் வெறுத்து ஒதுக்கிய புத்தம், சமணம் ஆகிய சமயங்களும் பல சிறந்த பண்புகளைப் போற்றியும் மனித வாழ்வு சீரடைய வழிகாண முயற்சி செய்தும் பலரையும் கவர்ந்தவை. அந்த மதங்களைச் சார்ந்த பலரையும் நம்மவர்கள் துன்புறுத்திய பல நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. அவ்வாறு நடந்திருக்கவே கூடாது. ஓர் இலக்கை அடைவதற்குப் பல வழிகள் உள்ளனபோலவே இறைவன் திருவடியைச் சேர்வதற்கும் பெரியோர்கள் பலரும் கண்டுபிடித்த பல்வேறு வழிகளே சைவம், வைணவம், புத்தம், சமணம் முதலியன. அவற்றின் பெயரால் மக்களைப் பிரிப்பதும் பகைமையை வளர்ப்பதும் பேதைமை மட்டுமன்று மனித இனத்திற்கு இழைக்கும் கொடுமையும் ஆகும். எனவே என் அமைச்சர் மாறன் காரி திருமாலுக்குக் கோயில் எழுப்புவதும் சேனாதிபதி சாத்தன் கணபதி சிவனுக்குக் கோயில் எழுப்புவதும் என்னைப் பொறுத்தவரை ஏற்புடைய செயல்களே." என்று தன் உண்மை இறையன்பையும், சமயப் பொதுமையையும் விளக்கினான் வைகை வேந்தன். சாத்தனும் மிக்க மகிழ்ச்சியுடன் தன் மன்னனின் மதக் கொள்கையை ஏற்றுக்கொண்டான்.

"அரசே! இளந்தத்தர் அதியனின் ஆத்திரத்தையும் அதன் விளைவுகளையும் தெரிவித்ததில் நாம் மேலும் கவனம் செலுத்தவேண்டும். அவன் கண்முன்னாலேயே, அவனுடைய தலைநகரிலேயே அவனுக்கு நேர்ந்த பெரும் அவமானமாக அவன் இந்தச் சிறைமீட்பைக் கருதுகிறான் என்பது தெளிவு. அந்த அவமானத்தைத் துடைத்தெறிவதற்காக அவன் எதுவும் செய்யத் தயங்க மாட்டான். பழிக்குப் பழி வாங்கியே ஆகவேண்டும் என்று துடிப்பான் ஆகவே அவனுடைய முயற்சிகளைத் தோற்கடிப்பதற்கு நாம் என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்'| என்று வருமுன் காக்கும் வழிகளைப்பற்றி எச்சரித்தான் சாத்தன். மன்னனும் தலை ஆட்டினான். "நீ சொல்வது சரிதான்! அமைச்சரையும் சேனாதிபதியையும் அழைத்து நாம் கலந்துபேசி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்" என்று ஒப்புதல் அளித்தான்.

அடுத்தநாள் அமைச்சர் சேனாதிபதி, துணைத்தளபதி, ஒற்றர் படைத் தலைவன், சாத்தஞ்சாத்தன் ஆகியோரை அழைத்து ஒரு மந்திராலோசனைக் கூட்டம் நடத்தினான் பாண்டியன் நெடுஞ்சடையன்.

"நாம் அண்மையில் நடத்திய போர்களும், தகடூரிலிருந்து சாத்தஞ் சாத்தனைச் சிறைமீட்ட வீரச்செயலும் சில முக்கியமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. அவற்றைப் பற்றி அலசி ஆராய்ந்து நாம் இனி மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி உங்களுடைய கருத்துகளை அறிவதற்காகவே இந்தக் கூட்டம். இளந்தத்தர் தகடூரிலிருந்து வந்த தகவல்களை நேற்று என்னிடம் தெரிவித்தார். சாத்தனை நாம் சிறையிலிருந்து மீட்டது அதியனுக்குப் பெரும் அதிர்ச்சியை அளித்துள்ளது. அடிபட்ட புலிபோல வெறிபிடித்து அலைகிறான். சிறையில் வேலைசெய்துகொண்டிருந்த வீரர்களையும் காவலர்களையும் சிறையிலேயே அடைத்து விட்டான். இந்த வெறி அடங்கி அவன் தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கினால், அவனுடைய சினம் நம் பக்கம் திரும்பும் என்பது உறுதி நம்மோடு போர் தொடுக்கும் வலிமையோ துணிவோ அவனுக்குவராது என்றுதான் நம்புகிறேன். ஆயினும் நமக்குத் தீங்கிழைக்க அவனால் ஆனதெல்லாம் செய்வான் என்பது உறுதி. வருமுன் காப்பதே சிறந்த வழி. ஆகையால் நாம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதை ஆராயவேண்டும்." என்று முகவுரை செய்தான் மன்னன்.

அமைச்சர் மாறன் காரி, தன் எண்ணங்களை எடுத்துரைத்தார். "அதியன் எவ்வளவு சினம்கொண்டாலும் நமக்கு எதிராக எழுந்து செயல்படும் ஆற்றல் அவனுக்கு இல்லை. நம் மீது படையெடுத்து வருவதற்கான பொருள் வலிமையோ ஆள் வலிமையோ கொங்கு நாட்டிற்கு இல்லை. ஆகவே வேறு பலரையும் நண்பர்களாக வளர்த்து நமக்கு எதிராக அவர்களையும் திரட்டி, ஒரு பெரும் படையுடன் நம்மைத்தாக்க அதியன் முயலலாம். நந்திவர்மப் பல்லவ மன்னனும் நம்மோடு மோதித் தோற்று நம்மீது மிகவும் பகைமை உணர்ச்சியை வளர்த்துள்ளான். எனவே பெண்ணாகடத்தில் நடந்ததுபோலவே பல்லவனும் கொங்கு வேந்தனும் கைகோர்த்து நம்மோடு போர் தொடுக்க முயற்சி செய்யலாம்" என்றார் அவர்.

சேனாதிபதி சாத்தன் கணபதி மிகவும் நம்பிக்கையுடன் பேசினார். "அதியன் கோபமும் வெறுப்பும் கொண்டிருப்பது இயல்பே அதுபோலவே பல்லவனும் நம்மிடம் பகைமை பாராட்டுவதும் உண்மைதான். ஆனால் இவர்கள் இருவருமே நாம் கொடுத்த அடியிலிருந்து மீள்வதற்கு வெகுநாள்கள் ஆகும். பல ஆண்டுகள் முயற்சிசெய்து, ஏராளமான பொருள்செலவு செய்து பல்லவன் திரட்டிய பெரும் படையை நாம் சிதைத்துவிட்டோம். யானைகள், குதிரைகள் படைக்கலன்கள், போருக்கான தளவாடங்கள் ஆகிய பலவற்றையும் இழந்த வகையில் பேரிழப்பைச் சந்திக்க

நேரிட்டவன் பல்லவன். மக்களின் வரிச்சுமையை இனியும் அதிகரிக்க முடியாது. எனவே இன்னும் சில ஆண்டுகள் செல்லாமல் ஒரு பெரும் படையைத் திரட்டுவது என்பது பல்லவனால் முடியாத செயல் கொங்கு நாடு இயற்கையிலேயே வளம் குன்றிய நாடு. ஆத்திரம் அறிவை மறைக்குமாயினும், அதியன் மதுரை மீது படையெடுக்கும் அளவுக்கு மதி இழக்கமாட்டான் என்றுதான் நம்புகிறேன்."

துணைத்தளபதி மூர்த்தி எயினனும் சேனாதிபதியின் கருத்தை ஆதரித்துப் பேசினார்.

சாத்தஞ் சாத்தன் அதற்குப்பின் தன்னுடைய கருத்தை வெளியிட்டான். "பெருமதிப்பிற்குரிய அமைச்சரும், சேனாதிபதியும் துணைத்தளபதியும் கூறிய கருத்துகள் முற்றிலும் சரியே. பல்லவனோ, கொங்கு மன்னனோ இன்னும் சில ஆண்டுகளுக்கு நம்முடன் மோதத் துணியமாட்டார்கள். நமது படை, பகைவர்கள் தனித்தனியாக வந்தாலும் இணைந்து வந்தாலும் அவர்களை முறியடிக்கும் வலிமையும் ஆற்றலும் பெற்றது என்பதில் எந்த ஐயமும் இல்லை. ஆனால் பாண்டிய மன்னர் சொன்னதுபோல் வருமுன் காப்பதே சிறந்த வழி என்று நான் கருதுகிறேன். அதாவது அதியனும் பல்லவனும், ஆய்வேளும் தம் படை பலத்தைப் பெருக்கி, ஒன்று சேர்ந்து நம்மைத் தாக்க வரும் நாளுக்காகக் காத்திருக்காமல், நாம் நமக்கு வசதியுள்ள நாளில் அவர்களைத் தாக்கினால் என்ன? அவர்கள் நாட்டைக் கைப்பற்றவோ அல்லது அடிமையாக்கவோ வேண்டும் என்று நான் சொல்லவில்லை. அவர்களை நாம் தாக்கி அவர்களுடைய வலிமையை அழித்தால் பின்னர் அவர்களைப் பற்றிய அச்சம் இல்லாமல் நாம் வாழலாம். நாம் நாளையே படையெடுக்க வேண்டும் என்று நான் கூறவில்லை. ஆனால் நம் படையைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பலப்படுத்தி, போருக்கு ஆயத்தம் செய்வதாகத் தோற்றம் அளிக்காமல் செயல்படவேண்டுமென்று நான் நினைக்கிறேன்."

தகடூர்ச் சிறையில் தான் செய்த சபதம் நிறைவேற வேண்டுமானால், அதியனை விரைவில் தோற்கடித்து மதுரைச் சிறையில் அடைக்க வேண்டும் என்ற ஆசையும் சாத்தனின் கருத்திற்குத் தூண்டுகோலாக இருந்தது.

பாண்டியன் நெடுஞ்சடையன் சாத்தனின் கருத்தை ஏற்றுக்கொண்டான். "சாத்தனோடு நான் உடன் படுகின்றேன். பல்லவனும், அதியனும் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையையும் நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். சாத்தன் சொன்னதுபோல் நமக்கு

அவசரமாகச் செயல்பட வேண்டிய தேவை இல்லை. நம் ஒற்றர் படையை இன்னும் வலுவாக்கிப் பல்லவ நாட்டிலும் கொங்கு நாட்டிலும் உற்று நோக்கி தேவையான நேரத்தில் நாம் நம் தாக்குதலை நடத்தலாம். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும், அந்த வேலைக்காக முழுகவனத்தையும் செலுத்தவும் ஒரு துணைத்தள பதியாகச் சாத்தஞ் சாத்தனை நியமிக்கிறேன். ஒற்றர்படைத் தலைவரும் இனிமேல் சாத்தன் கீழ் பணியாற்ற வேண்டும். இந்த வேலைக்குத் தேவையான ஆட்களையும், பொருளுதவியையும் அமைச்சரும் சேனாதிபதியும் அளிக்கவேண்டும்." என்று ஆணையிட்டான் பாண்டிய மன்னன்.

தன் புதிய பதவியையும் பெரிய பொறுப்பையும் தலைமேல் ஏற்று காதலியைக் கைப்பிடிக்கும்முன் கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற உறுதியுடன் முன்னேறினான் சாத்தன்.

17. பஞ்சத்திலும் விளையும் வஞ்சம்

பெண்ணை, பாலாறு, பொன்னி, வைகை, பொருணை ஆகிய ஆறுகளே தமிழ்ப்பெருநாட்டின் பயிர் விளைவுக்கு நீர் நல்கி உயிர்வாழவும் வழிசெய்பவை. தமிழகத்தின் சமவெளிகளில் மழை பொய்க்கும் காலங்களில்கூட, மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து இறங்கி வரும் இந்நதிகள் ஓரளவு நீர்பாசனத்தேவைகளை நிறைவு செய்து, செழுமை குன்றினாலும் வறுமை வராமல் பாதுகாக்கும் தன்மையன. ஆனால் அந்த நதிகளின் நீர் நிலையும் மலைப்பகுதிகளில் பெய்யும் மாரியின் அளவைப் பொறுத்தே அமையும். மலை முகடுகளிலும் சமவெளிகளிலும் மொத்தமாகவே மழைபொய்த்தால் ஆறுகளும் வறளும், நிலமும் காயும். அத்தகைய இயற்கையின் கொடுமை சாதாரணமாக ஏற்படுவதில்லை. ஆனால் எப்பொழுதாவது ஏற்படுவதுண்டு. அத்தகைய கொடிய வறட்சியும், பஞ்சமும் கண்ணகி மதுரையை தீக்கிரையாக்கிய காலத்தில் நிலவியதாக இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார்.

அன்று தொட்டுப் பாண்டியன் நாடு மழை வறம் கூர்ந்து வறுமை எய்தி வெப்பு நோயும் குருவும் தொடரக் கொற்கையில் இருந்த வெற்றிவேல் செழியன் நங்கைக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று களவேள்வியால் விழாவொடு சாந்திசெய்ய நாடு மலிய மழை பெய்து, நோயும் துன்பமும் நீங்கியது. அதுகேட்டுக் கொங்கு இளங்கோசர், தங்கள் நாட்டகத்து நங்கைக்கு விழாவொடு சாந்தி செய்ய மழை தொழில் என்றும் மாறாது ஆயிற்று ... அது கேட்டுச் சோழன் பெருங்கிள்ளி... என்று வரும் சிலப்பதிகார உரைபெறு கட்டுரை தமிழகம் முழுவதுமே அந்த நாள்களில் பஞ்சத்தால் பரிதவித்தது என்பதை எடுத்துக் காட்டும்.

அத்தகைய கடும் பஞ்சம் பாண்டியன் நெடுஞ்சடையன் காலத்திலும் திடீரென்று ஏற்பட்டது. இரண்டு ஆண்டுகள் தொடர்ச்சியாக மழை பொய்த்ததால் ஆறுகள் வற்றின. வயல்கள் வறண்டன. நீர்நிலைகள் எல்லாமே வெறும் நிலப்பரப்பாயின. உண்ண உணவும், குடிக்க நீரும் இன்றி மக்கள் வாடினர். ஆசினி, அசோகு, கோங்கு, வேங்கை, வேம்பு போன்ற மழைகுறைந்தாலும் வாடாமல் நிற்கும் பெற்றியுள்ள மரங்கள்கூட இலைகளை உதிர்த்து, உடல் வருத்தி, நீருக்காக ஏங்கின.

காவிரியின் கருணையால் செழிப்புற்ற சோழ நாடும், வைகை, பொருணை நதிகளால் வளம்பெற்ற பாண்டிய நாடும் அடைந்த துன்பத்தைவிட, நீர் வளம் குறைந்த கொங்கு நாடு அடைந்த துன்பம் பன்மடங்கு வருத்தியது. அந்நாட்டு மக்களை வெம்மையின் கொடுமையும் வறுமையின் கடுமையும் வாட்டி வதைத்த அந்த நாள்களில் பாலைவனத்தின் நடுவில் தோன்றிய சோலை போலத் தகடூரில் தோன்றியது அறம் வளர்த்த நாதரின் மடம். அங்கே சென்ற ஏழை எளியவர்களுக்கு ஒரு நேரம் கஞ்சியும் ஒரு நேரம் கூழும் வழங்கப்பட்டது. காலைமுதல் நண்பகல் வரை கஞ்சிக்கான கூட்டமும் பிற்பகல் முதல் பொழுது சாயும் வரை கூழுக்கான கூட்டமும் நாள் தோறும் கூடத்தவறுவதில்லை. அந்த மடத்தில் வெயிலின் கொடுமையிலிருந்து காப்பதற்காகக் கட்டப்பட்டிருந்த ஓலைப் பந்தலில் மக்கள் நிரம்பி இருந்தனர்.

பட்டினிக் கூட்டம் மட்டுமன்றி, அறம் வளர்த்த நாதரிடம் ஆசி பெறுவதற்காகவும் அறிவுரை பெறுவதற்காகவும் வரும் பக்தர்களும் அங்கே காணப்பட்டனர். எல்லா நாள்களிலும் மாலை மயங்குவதற்குமுன் மூன்று நாழிகை நேரம் நாதர் தம் சீடர்களுடன் அந்தப் பந்தலில் காட்சியளிப்பார். பக்திப் பாடல்கள் இசைக்கப்படும். அவரைத் தனிமையில் சந்திக்க விரும்புவோர் சீடர்கள் மூலம் முன் அனுமதிபெற்ற பின்னரே காண முடியும். வயிற்றுப் பசியைப் போக்கவருவோர் பலரும் அறிவுப் பசியை ஆற்றவருவோர் சிலரும் பக்திப் பெருக்கால் வருவோர் இன்னும் சிலருமாக அறம் வளர்த்த நாதரின் மடம் எப்பொழுதும் கூட்டம் மிகுந்த கூடாரமாக விளங்கியது.

அறம் வளர்த்த நாதர் இளமையிலேயே துறவு பூண்டவர்; தமிழகம் மட்டுமன்றி, தென்புலம் முழுவதும் பயணம் செய்து பலவிதமான பண்பாடுகளையும், மதவழிபாடுகளையும் கண்டறிந்தவர். சைவமும் வைணவமும் போட்டிபோட்டுக் கொண்டும், சில இடங்களில் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டும் செயலாற்றிக் கொண்டிருந்த தமிழகத்தில் அறம்வளர்த்த நாதர் தமக்கென ஒரு தனிவழியை அமைத்துக் கொண்டு இந்தப் பூசல்களுக்கு அப்பால் நின்றார். துள்ளுநீர் வெள்ளம் சென்னிமேற் கொண்ட சிவனும் மங்கையை மார்பில் கொண்ட மாதவனும் அவருடைய வழிபாட்டில் சரிசமமாகப் போற்றப் பட்டனர். அவர்களோடு தமிழகத்தின் தனிக் கடவுளான குன்றுதோராடிவரும் குமரனும் இடம் பெற்றதோடு, வாதாபியிலிருந்து பரஞ்சோதி அடிகளால் கொண்டுவரப்பட்டுத் தமிழகத்தில் முந்தி விநாயகன் என்று முதல் இடம் பிடிக்கத் தொடங்கியிருந்த யானை முகக்கடவுளான

கணபதியும் சிறப்பிடம் பெற்று விளங்கினார். எனவே அறம்வளர்த்த நாதரின் அருளுக்காகக் குழுமியோரில் சைவரும் வைணவரும் இவ்விரண்டையும் ஒன்று போலக் கண்ட ஒப்புர வாளரும் விரவியிருந்தனர்.

கொங்கு வேந்தன் அதியன் அறம் வளர்த்த நாதரின் மடத்திற்குச் சென்று அவரை அடிபணிந்து வணங்கினான். தகடூரின் ஏழை மக்களுக்குக் கண்கண்ட தெய்வமாக நின்று அவர்களின் பசிக்கொடுமையைத் தணித்ததற்காக நன்றி அறிவித்தான். அவனுடைய அமைச்சரும், படைத்தலைவர்களும், மற்ற அலுவலர்களும் தங்கள் அரசனின் வழியைப் பின்பற்றி மடத்திற்கு அடிக்கடி வந்து வணங்கிச் சென்றனர்.

அரசனோடு நெருக்கமுள்ள படைத்தலைவர்கள், அமைச்சர் அலுவலகத்திலும் மற்ற அரசு அலுவலகங்களிலும் பணியாற்றிய மேல்நிலை அலுவலர் ஆகியோரை வரவேற்று உபசரிப்பதிலும். அவர்கள் வெகு நேரம் காத்திருந்து களைப்புறாமல் மடத்தலைவரைக் காண ஏற்பாடு செய்வதிலும் அறம்வளர்த்த நாதரின் அந்தரங்கச் சீடர்கள் கண்ணும் கருத்துமாய் இருந்தனர். தலைமைச் சீடன்போல் செயல்பட்ட தங்கவேலன் அத்தகையவர்களை நேரில். வரவேற்று, அமரச்செய்து நீரும்மோரும் பருகக் கொடுத்து அவர்களிடம் அளவளாவுவான். துறவியின் சீடனாயினும் அரசியல் செய்திகளில் தங்கவேலன் காட்டிய ஆவலை மதித்தும் அவனுடைய உபசரிப்பில் மகிழ்ந்தும் அவர்களும் மனம் திறந்து பேசுவர்.

கொங்குநாட்டு அமைச்சரின் வலதுகைபோலச் செயல்பட்ட சுந்தர மூர்த்தியும், தங்கவேலனும் இத்தகைய சந்திப்பும் உரையாடலும் மூலமாக நெருங்கிய நண்பர்கள் ஆயினர். தன்னுடைய அமைச்சகப்பணிகள் முடிந்த பிறகு, அறம் வளர்த்த நாதரின் மடத்திற்கு வந்து நாதரின் ஆசிபெற்று மடத்தில் மாலைநேரங்களில் நடக்கும் பக்திபாடல்கள் இசைக்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தங்கவேலனிடம் உரையாடி மகிழ்ந்தபின் வேண்டா வெறுப்புடன் தன் வீடு நோக்கிச் செல்வதை வழக்கமாக்கிக் கொண்டான் சுந்தர மூர்த்தி. வீட்டில் அது இல்லை இது இல்லை என்று எப்பொழுதும் இல்லாமையைப் பாடிக் கொண்டிருக்கும் இல்லாளின் புலம்பலைக் கேட்க விரும்பாத சுந்தர மூர்த்தி தங்கவேலுவின் நட்பில் மன நிறைவு கண்டான். அதை அவனாகவே வெளியிட்டபோதுதான் தங்கவேலனும் தெரிந்துகொண்டான்.

"நீ நாள் தோறும் இவ்வளவு நேரம் இங்கே இருந்து விட்டுத் தாமதமாக வீட்டுக்குப் போகிறாயே. உன் மனைவி கோபித்துக்கொள்ள மாட்டாளா?" என்று ஒரு நாள் சுந்தரமூர்த்தியிடம் வினவினான் தங்கவேலன்.

சுந்தரமூர்த்தி ஒரு வரட்டுச் சிரிப்புடன் பேசினான். "அவளுடைய கோபத்திற்கு அஞ்சித்தானே நான் தாமதித்து வீட்டுக்குப் போகிறேன். நல்ல காலத்திலேயே அவளுக்கு மனநிறைவு இல்லை. உள்ளவற்றை எண்ணித் திருப்திப் படாமல் இல்லாதவற்றைப் பற்றிக் குறைபடுவதே அவளுக்குப் பொழுதுபோக்கு. வறுமை தாண்டவமாடும் இப்பொழுதோ கேட்கவே வேண்டாம். காலையில் எழுந்ததுமுதல் இரவில் படுக்கையில் சாயும்வரை பஞ்சப் பாட்டுத்தான். நான் முன்னதாகவே வீட்டிற்குச் சென்றால், அந்தப் பாட்டை அவ்வளவு அதிகநேரம் கேட்க வேண்டி வரும். அதற்காகத்தான் மனத்திற்கு மகிழ்ச்சிதரும் பக்திப் பாடல்களை இங்குப் பாடியும் கேட்டும் தாமதமாக வீட்டிற்குச் செல்கிறேன்."

|சற்றேனும் ஏறு மாறாக இருப்பாளே யாமாகில் கூறாமல் சந்நியாசம் கொள்| என்று மனைவியர் பற்றி ஔவையார் பாடிய பாடல் நினைவுக்கு வந்தது தங்கவேலனுக்கு. கணவனை வீட்டிற்கு வராமல் தடுத்து நிறுத்தும் தகைமையுடைய மனைவியும் உள்ளாள் என்பது சுந்தர மூர்த்தியின் விளக்கவுரையால் விளங்கியது. ஆனால் அத்தகைய கணவர்களும் ஒரு விதத்தில் பயன் உள்ளவர்களே என்று மனம் தேறினான் அவன். அதனால் அல்லவா சுந்தரமூர்த்தி நாள் தவறாமல் அங்கு வந்து தன்னோடு உரையாடுவதும் எத்தனையோ அரசியல் செய்திகளைத் தெரிவிப்பதும் சாத்தியமாகிறது?

"உண்மையிலேயே இந்தப் பஞ்சம் இவ்வளவு காலம் நீடிக்கும் என்று யாரும் கருதவில்லை. ஓராண்டு பருவமழை குறைவாகப் பெய்தவுடன் அடுத்த ஆண்டு சரியாகிவிடும் என்று எண்ணினோம். ஆனால் அடுத்த ஆண்டு அதைவிடக் குறைவாக மழை பெய்தது. அதற்கடுத்த ஆண்டு முற்றிலுமாகப் பொய்த்துவிட்டது. சென்ற ஆண்டு சில இடங்களில் மழைபெய்தாலும், பெரும்பாலும் கடலோரங்களிலேயே பெய்தது. அதனால் சோழநாடும், பாண்டிய நாடும் பல்லவ நாட்டின் சில பகுதிகளும் பயனடைந்தன. ஆனால் கடலிலிருந்து வெகுதொலைவில் உள்ள கொங்கு நாடு வறட்சியிலிருந்து மீள முடியவில்லை. நாங்கள்கூட இங்கு வருகின்ற வறுமையில் வாடும் மக்களுக்கு கஞ்சியும் கூழும் கொடுப்பதற்கு வெளி நாடுகளில் வசிக்கும் பக்தர்களைத்தான்

நம்பியிருக்கிறோம். சுவாமிகளின் பற்றாளர்கள் தென்புலம் எங்கும் பரவியிருப்பதால்தான் இந்த மடம் இப்பொழுதும் இயங்கிக்கொண்டிருக்கிறது" என்று வறுமையின் கொடுமை எவ்வாறு கொங்கு நாட்டை அதிகமாக வருத்துகிறது என்பதை எடுத்துக் காட்டினான் தங்கவேலன்.

சுந்தரமூர்த்தி ஒரு பெருமூச்சுடன் பேசினான் "கொங்கு நாட்டிலும் வறுமை இந்த அளவிற்கு வருத்துவதைத் தவிர்க்க முடியும். ஏழை எளியோர்க்கு உதவும் வண்ணம் சில திட்டங்களைச் செயல்படுத்தினால் போதும். ஆனால் அரசர் அதைச் செய்ய மறுக்கிறார். பஞ்சம் தலைவிரித்தாடும் இந்த நேரத்திலும் படை பலத்தைக் குறைக்க அவர் முன்வரவில்லை. பாண்டியன் எப்பொழுது வேண்டுமானாலும் படையெடுத்து வந்து தகடூரைத் தாக்கலாம். அதைச் சமாளிப்பதற்குத் தேவையான படை எப்பொழுதும் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்ற ஒரே மந்திரத்தை இடைவிடாமல் ஓதிக்கொண்டிருக்கிறார்" என்று அலுப்போடு பேசினான் அவன்.

"ஏன்? உங்கள் அமைச்சர் அரசருக்கு அறிவுரை கூறக்கூடாதா? பாண்டிய நாடும் வறுமையில் வாடிக்கொண்டுதான் இருக்கிறது. அதனால் அவர்கள் யார் மீதும் படையெடுத்துச் செல்லும் நிலைமையில் இல்லை என்பதை எடுத்துக் கூறலாம். அல்லவா?" என்று மேலும் சுந்தர மூர்த்தியின் வாயைக் கிளறினான் தங்கவேலன்.

"அமைச்சர் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். ஆனால் அரண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய் என்ற பழமொழியைப்போல பாண்டியர் படையிடம் ஒரு முறை தோல்வியடைந்ததாலும் பாண்டியர் நெடுஞ்சடையனே நேரடியாகத் தகடூருக்கு வந்து சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவருடைய படைத்தலைவனை மீட்டுச் சென்றதாலும் எப்பொழுதும் பாண்டியப் பேயைக் கண்டு அஞ்சி நடுங்குகின்றார் மன்னர் நாம் என்ன செய்வது?" என்று மனம் நொந்தான் சுந்தர மூர்த்தி.

"ஒன்று செய்யலாம். அடுத்த முறை அரசர் நம் மடத்திற்கு வரும்பொழுது சுவாமிகளே அவரிடம் நேரில் சொன்னால் பாண்டியன் படையெடுக்கும் அச்சம் அவர் மனதிலிருந்து அகலக் கூடும். அமைச்சரிடம் நீயும் பேசிப்பார். அரசரை மடத்திற்கு வரும்படி வற்புறுத்தச் சொல். நானும் சுவாமிகளிடம் கேட்டுக்கொள்கிறேன். ஏழை எளியோர் அரைவயிற்றுக் கஞ்சிக்காக கெஞ்சும் வேளையில்

படைவீரர்களுக்கும் ஆயுதங்களுக்கும் செல்வம் விரயமாவதை நினைக்கும் பொழுது என் நெஞ்சம் கொதிக்கிறது" என்று உருக்கமாகப் பேசினான் தங்கவேலன்.

"முயற்சி செய்கிறேன்" என்று இசைந்தான் அமைச்சரின் செயலாளன்.

ஆசிக்காகவும் அருளுக்காகவும் வரும் பக்தர்களும் கூழுக்காக வரும் ஏழைகளும் சென்ற பின்னர், அன்று இரவில் அறம்வளர்த்த நாதரும் அவருடைய தலைமைச் சீடனும் உரையாடிக் கொண்டிருந்தனர். ஆனால் இப்பொழுது அறம் வளர்த்த நாதர் பகற்பொழுதில் காட்சியளித்த சுவாமிகளாகத் தோன்றவில்லை. அவருடைய தலைமீது மகுடம்போல் ஓங்கிநின்ற அடர்ந்த முடிக்கட்டு காணப்படவில்லை. நீண்டு வளர்ந்து முகத்தோற்றத்தை மூடிமறைத்துக்கொண்டிருந்த தாடியும் இல்லை நெற்றியில் பொலிந்து நின்ற மூன்று பட்டைத் திருநீறும், அவற்றின் நடுவில் குறுக்காக நிமிர்ந்து நின்ற செந்நிற நாமமும் மறைந்து விட்டன. உற்று நோக்கினால் அந்த மனிதன் பாண்டியன் மன்னனின் ஒற்றர் படைத் தலைவன் இளந்தத்தன் என்பது தெரிய வந்தது.

தங்கவேலனுக்குப் பெரிய மாற்றம் இல்லை ஆயினும், பட்டைத் திருநீறும், நெட்டை நாமமும் நெற்றியிலிருந்து நீங்கவே அவனும் சுவாமிகளின்முன் கைகட்டி வாய்புதைத்து நின்ற சீடனாகத் தோன்றவில்லை.

"வேலு! கொங்கு வேந்தர் படைபலத்தைக் குறைக்க விரும்பவில்லை என்பது உண்மைதான். ஆனால் அதைப் பெருக்கவும் அவரால் முடியவில்லை. இப்பொழுது படைவீர்களின் ஊதியமும், உணவும் மேலும் குறைக்கப்பட்டிருக்கின்றன. உலகணன், காமினியின் இல்லத்திற்கு வரும் விருந்தினர்களான படைவீரர்களிடமிருந்து அறிந்து வந்த தகவலின்படி மூவாயிரம் வீரர்களைக் கொண்ட படைதான் இப்பொழுது தகடூரில் உள்ளது. ஊதியமும் உணவும் குறையும்பொழுது பலர் படையிலிருந்து விலகிவிடுவார்கள். நாம் பாண்டியன் படையெடுக்கமாட்டான் என்று உறுதியாகத் தெரிவித்தால், மன்னரே சிலரை வெளியில் அனுப்பி விடுவார். இரண்டாயிரம் வீரர்களுக்குக் கீழ் கொண்டுவந்துவிட்டால், பின்னர் தகடூரைக் கீழ்ப்படுத்துவதற்கு மதுரையிலிருந்து படை வர வேண்டிய தேவை இல்லை. உறையூரில் இருக்கும் நமது நிலைப்படையே போதும். நான் அடுத்த வாரம் மதுரைக்குப் போவேன். திரும்பி வந்தபின்

அங்குள்ள படைத்தலைவர்களிடமிருந்து கிடைத்த தகவல் என்று கொங்கு வேந்தரிடம் கூறலாம். மதுரையிலும், காஞ்சியிலும் என் மடம் இருப்பது கொங்கு வேந்தருக்குத் தெரியுமாகையால் அந்தத் தகவலை அவர் நம்புவார்" என்று தன் திட்டத்தை வெளியிட்டான் இளந்தத்தன்.

"அது மட்டுமல்ல அத்தகைய ஒரு தகவலை நாம் தெரிவித்தால் கொங்கு வேந்தருக்கு நம்மிடம் உள்ள பற்று மேலும் அதிகமாகும். உண்மையாகவே தகடூர் மீது படையெடுக்கும் எண்ணம் தற்பொழுது பாண்டிய மன்னருக்கு இல்லாததால், நாம் அறிந்து சொன்ன தகவல் சற்றும் ஐயமின்றி ஏற்றுக் கொள்ளக் கூடியது என்று அவருக்குத் தெரியவரும்" என்று இளந்தத்தனின் திட்டத்தை ஆதரித்தான் தங்கவேலன்.

"அதுதான் என் நோக்கம், அத்தகைய நம்பிக்கையை நாம் உருவாக்கிவிட்டால் அதன்பின் நாம் சொல்வதை எல்லாம் மெய் என்று நம்பத் தொடங்குவான் கொங்குவேந்தன். சாத்தன். வயதில் இளையவர் ஆயினும் மதி நுட்பம் மிக்கவர். தவறான தகவலைப் பகைவனுக்குத் தெரிவித்து அதை உண்மை என்று அவனை நம்பச்செய்து விட்டால், படை புறப்படுவதற்கு முன்னரே பாதி வெற்றி பெற்றதுபோல் ஆகிவிடும் என்று சாத்தன் சொன்னது ஒற்றறியும் வேலையில் ஒரு சிறந்த அம்சமாகும். ஒற்றறிதல் என்பது பகைவனின் நாட்டில் நடப்பவற்றை அறிந்து கொள்வது மட்டுமன்று. தவறான தகவலைப் பகைவனிடம் ஊட்டுவதும் அதனால் அவனைப் பிழையான வழியில் செல்லத் தூண்டுவதும் மிகவும் முக்கியமானது என்றும் அதுதான் மிகவும் கடினமான ஒற்றுப்பணி என்றும் நன்றாகப் புரிகிறது" என்று சாத்தஞ் சாத்தனின் மதிநுட்பத்தைப் புகழ்ந்தான் ஒற்றர் படைத் தலைவன்.

நான்கு ஆண்டுகளுக்குமுன் போர்த் திட்டங்களைத் தீட்டுவதற்காகவே துணைத் தளபதியாகப் பாண்டிய மன்னனால் நியமிக்கப்பட்ட சாத்தஞ்சாத்தன் நீள நினைந்து உருவாக்கிய திட்டம்தான் இப்பொழுது இளந்தத்தன் புகழ் மாலை தொடுப்பதற்குக் காரணமாகியது. அதியனை முறியடித்துச் சிறையில் அடைப்பதே முதல் நோக்கமாயினும் அதனால் மட்டும் முழுவெற்றி பெற முடியாது என்பதைச் சாத்தன் நன்றாக உணர்ந்தான். அதியனுக்கு ஆதரவாகப் பல்லவன் கட்டாயம் வருவான். இனிமேல் பெண்ணாகடத்தில் செய்ததுபோல் காவிரி நதியின் கரையில் எதிர்பாராத நேரத்தில் தாக்கி வெற்றிபெற முடியாது. ஒரு முறை தோல்வியடைந்த பல்லவன் மீண்டும் அதே

தவறைச் செய்யமாட்டான். ஆகவே வேறு வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். அதற்கு முதற்படியாகத் தகடூரிலும் காஞ்சியிலும் நிகழும் எல்லா நிகழ்ச்சிகளையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான். ஒற்றர் படைத் தலைவனுடன் பலமுறை கலந்து பேசினான். தன் எண்ணங்களையும் அவனிடம் வெளியிட்டான்.

"இளந்தத்தரே! தகடூரில் உள்ள உலகணனையும், காஞ்சியில் உள்ள பரதனையும் மட்டும் வைத்து நாம் அங்கு நடப்பவற்றை யெல்லாம் தெரிந்துகொள்ள முடியாது. நம்முடைய ஒற்றர்கள் ஐந்தாறு பேராவது அங்கே தங்கியிருந்து பணியாற்றவேண்டும். ஒளிந்தும், மறைந்தும் அல்ல! வெளிப்படையாகவே செயல்படவேண்டும்."

"அது எப்படி முடியும் தளபதியாரே! அவ்வாறு நம் ஒற்றர்கள் செயல்பட்டால் அடுத்த கணமே அவர்களைப் பிடித்துச் சிறையில் அடைத்துவிடுவார்கள். தூக்கிலும் தொங்கவைப்பார்கள்" என்று சுட்டிக் காட்டினான் ஒற்றர் படைத் தலைவன். "அவர்கள் ஒற்றர்கள் என்று தெரிந்தால் தானே?"

"ஒற்றர்கள் என்று தெரியாமல் ஐந்தாறு பேரை நடமாடச் செய்ய முடியாது. ஒரு உலகணன் மாலவன் கடையில் வேலை செய்கிறான். ஒரு பரதன் மணவாளனின் கடையில் வேலைசெய்கிறான். அந்த மறை உருவில் அவர்கள் ஒற்றாடல் நடத்துகின்றனர். அவ்வாறு பலரை நாம் அனுப்பினால் அது விரைவிலேயே வெளிப்பட்டுவிடும்."

"ஆனால் எவருக்கும் ஐயம் தோன்றாதவாறு அவர்கள் அங்கே வாழ முடிந்தால்?"

"தாங்கள் சொல்வது புரியவில்லை. சற்றே விளக்கமாகச் சொல்லுங்கள்" என்று வேண்டினான் இளந்தத்தன்.

"வாதாபி மன்னன் புலிகேசி காஞ்சியின்மீது படையெடுத்து வெற்றிபெற்றான். அதற்கு முக்கியக் காரணம் அங்கிருந்த புத்தவிகாரம் புலிகேசியின் ஒற்றர்கள் வாழும் கூடாரமாகச் செயல்பட்டதுதான். அதைப் போன்ற ஒரு மதநிறுவனத்தை நாம் தகடூரிலும், காஞ்சியிலும் உருவாக்கவேண்டும். ஐயம் தோன்றாமல் இருப்பதற்காக மதுரையிலும் உருவாக்கலாம்" என்றான் சாத்தஞ் சாத்தன்.

"அதிலும் ஒரு சிக்கல் இருக்கிறது. காஞ்சியில் உள்ள பல்லவன் சைவன், பாண்டியரோ வைணவர்.

"நாம் இரண்டும் கலந்த ஒரு புதுவழியைக் காட்டலாம். சைவமும் வைணவமும் இறைவன் அடிசேர்வதற்கான இரண்டு வழிகள்தாம். அவை முரண்பட்டவை அல்ல என்ற தத்துவத்தை நாம் நிலைநாட்டுவோம். அது உண்மையும்கூட அதற்காகக் காஞ்சி, தகடூர், மதுரை, வஞ்சி ஆகிய தலைநகர்களில் மடம் நிறுவுவோம். அந்த மடத்தில் வாழும் சீடர்கள் வெளிப்படையாக நடமாடலாம். மடத்தின் சுவாமிகளைக் காண மன்னனும் அமைச்சர்களும்கூட வருவர் அவர்களிடம் அவர்கள் சந்தேகம். கொள்ளாமலே பல தகவல்களையும் கறக்கலாம். அவர்களுடைய நம்பிக்கையைப் பெற்றால் பொய்ச்செய்திகளைப் புகுத்தவும் செய்யலாம்" என்று விளக்கினான் சாத்தன்.

இளந்தத்தன் துள்ளி எழுந்தான். "தலைவரே! தளபதியாரே! தலைவணங்குகிறேன். அனுபவம் மிக்க என்னை இளைஞராகிய தங்களின்கீழ் இயங்கச் சொன்னதை முதலில் நான் விரும்பவில்லை. இப்பொழுது முழுமனத்துடன் அதை ஏற்றுக் கொள்கிறேன்" என்று பெருமைப் பட்டான்.

"அந்த மடத்தின் சுவாமிகள் யார்?" என்று வினவினான். 'தாங்கள்தான்" என்று புன்னகையுடன் மொழிந்தான் சாத்தன்.

18. பஞ்சத்தை ஒழிக்கும் படை

தகடூரையும் காஞ்சியையும் கண்காணிப்பதற்காகவே அறம் வளர்த்த நாதரின் மடம் நிறுவப்பட்டதால், இவ்விரு தலைநகர்களிலேயே முதலில் அது இயங்கத் தொடங்கியது. ஆனால் தமிழகத்தின் தலைசிறந்த தலை நகர்களாகியவை காஞ்சியும் மதுரையும். ஆதலால், மதுரையில் மடம் தொடங்காதது ஏன் என்ற கேள்வி எழக்கூடும், அதன் வழி ஐயமும் தோன்றக்கூடும் என்பதால் மூன்றாவது கிளையாக மதுரையிலும் மடம் தோன்றியது. தகடூரிலும் அதன் பின்னர் காஞ்சியிலும் மடம் அமைத்து ஏழை எளியோருக்குத் தொண்டு செய்துவிட்டு, மதுரையம்பதிக்கு எழுந்தருளிய அறம் வளர்த்த நாதருக்குப் பாண்டியன் நெடுஞ்சடையன், தன் அமைச்சர், சேனாதிபதி, துணைத்தளபதி ஆகியோருடன் வரவேற்பளித்தான்; நகருக்குள் மடம் அமைத்துக் கொள்ளவும் அனுமதி அளித்தான். எனவே ஒரு சிலருக்கு மட்டும் உண்மையில் சுவாமிகள் யார் என்பது தெரியுமேயன்றி, மதுரைவாழ் மக்கள் முற்றும் துறந்த முனிவராகவே அறம்வளர்த்த நாதரைக் கண்டனர். அவருடைய பக்தர்களும் மற்ற இரு நகரங்களைப் போலவே பெருவாரியாக மடத்திற்கு வந்து பக்திப்பாடல்களின் இனிமையில் மூழ்கினர். சாத்தஞ் சாத்தன் கூட இந்த ஆரவாரம் ஓய்ந்த பின்னரே மடத்திற்கு வந்து சுவாமிகளுடன் உரையாட முடிந்தது.

தகடூரில் தொடர்ச்சியாகப் பல மாதங்கள் தங்கி இப்பொழுது மதுரைக்கு வந்திருக்கும் இளந்தத்தன் கொங்கு வேந்தனைப் பற்றி முக்கியத் தகவல் ஏதாவது கொண்டு வந்திருப்பான் என்று எதிர்பார்த்த சாத்தன் அன்று மாலையிலேயே அறம் வளர்த்த நாதரின் மடத்துக்குச் சென்றான். ஆனால் அவன் கருதிய வண்ணம் மடத்திலிருந்து பக்தர்கள் கலைந்து போய் விடவில்லை.

"அஞ்சன வண்ணனை ஆய்குலக் கொழுந்தினை
மஞ்சளம் ஆட்டி மனைகள்தோறும் திரியாமே
கஞ்சனைக் காய்ந்த கழலடி நோவக் கன்றின்பின்
என்செயப் பிள்ளையைப் போக்கினேன் எல்லே பாவமே

என்ற பெரியாழ்வார் பாசுரத்தை இசைத்துப் பக்திப் பரவசத்தில் ஆழ்ந்திருந்த சீடர் கூட்டத்தைச் சாத்தன் கண்டான். அதுவே

இறுதிப் பாடலாக இருந்ததால் அறம் வளர்த்த நாதர் எழுந்தார். சீடர்களும் உடனேஎழுந்தனர். பக்தர்கள் கலைந்து சென்றனர். தலைமைச் சீடன் பொன்முடியுடன் சாத்தன் உள்ளே சென்றான். சுவாமிகளையும் சாத்தனையும் உள் அறைக்குள் அமரச்செய்துவிட்டு, வேறுயாரும் அவர்களுக்குத் தொல்லைகொடுக்கமுடியாத வண்ணம் பொன்முடி காவல் இருந்தான்.

"தளபதியாரே! முதலில் நான் தலையில் ஏற்றிவைத்திருக்கும் பாரத்தை இறக்கி வைக்கிறேன். அதன் பின் நாம் பேசலாம்" என்று கூறி, மிகவும் கவனம் செலுத்தித் தலையின்மேல் கோபுரம்போல் நின்ற சடைக்கட்டை எடுத்து வைத்தான் இளந்தத்தன்.

"ஏன் உங்கள் முகத்தைச் சூழ்ந்திருக்கும் காட்டிலிருந்தும் விடுபடலாமே!" என்று நகையோடு நவின்றான் சாத்தன்.

"ஆமாம் தங்களோடு உரையாடும்போது இளந்தத்தனாக இருப்பதே நல்லது. என்னுடைய தோற்றம் மாறும்பொழுது பேச்சும் மாறிவிடுகின்றது என்று தங்கவேலன் சொல்கிறான். நானும் விடாமல் பயிற்சி செய்து, இப்பொழுது நாயன்மார் பாடல்களும் ஆழ்வார்களின் பாசுரங்களும் படித்தும் அவற்றைப் பற்றி அறிஞர்களிடம் பேசியும் மதங்களைப் பற்றிய அறிவை வளர்த்துக் கொண்டேன். பரஞ்சோதி அடிகள் பல்லவர்களின் சேனாதிபதியாக இருந்து சிறுத்தொண்ட நாயனார் ஆனதுபோல் நானும் ஒற்றர்படைத் தலைவனாகப் பணியாற்றி ஓய்வு பெறும்போது சமயத்தொண்டன் ஆகிவிடுவேனோ என்று அஞ்சுகிறேன்" என்று தன்னுடைய இரட்டை வாழ்க்கையின் விளைவுகளைப் பற்றிப் பேசினான் இளந்தத்தன்.

"அதில் அஞ்சுவதற்கு ஒன்றும் இல்லை" ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும் தெற்றென்க மன்னவன் கண்" என்று உங்களுடைய பணி ஒரு நாட்டிற்கும் அதன் அரசனுக்கும் எவ்வளவு இன்றியமையாதது என்பதை விளக்கியுள்ளார் திருவள்ளுவர். எனவே நாட்டிற்குச் செய்யும் சிறந்த சேவையாகும் உங்கள் பணி. அது போலவே அன்றாட வாழ்க்கையின் அல்லல்களிலிருந்தும் தொல்லைகளிலிருந்தும் விடுபட்டு ஆறுதல் அடையவும், சற்றேனும் அமைதிகாணவும் உதவுவது இறைவழிபாடும் மதமும். ஆகவே அவை முரண் பட்டவை அல்ல" என்று செய்யும் தொழிலே தெய்வம் என்ற தத்துவத்தை எடுத்துரைத்தான் சாத்தன்.

"சாத்தனாரே! நான் பல ஆண்டுகளாக இந்த வேலை செய்துவருகிறேன். ஒரு சாதாரண ஒற்றனாக இருந்தபொழுது

தலைவர் எனக்குக் கொடுத்த வேலையை என் திறமை முழுவதையும் பயன்படுத்திச் செய்ய முயன்றேன். ஒற்றர் படைத்தலைவன் ஆக உயர்ந்த பின்னர் மன்னரோ, அமைச்சரோ இட்ட ஆணைப்படி செயலாற்றினேன். ஆனால் அது ஒரு பெரிய சேவை என்றோ பெருமை கொள்ளத்தக்க பணி என்றோ கருதியதில்லை. சென்ற நான்கு ஆண்டுகளாகத் தங்களிடம் பணியாற்றத் தொடங்கிய பின்னர்தான் அந்தப் பெருமை என் மனத்தில் உதிக்கத் தொடங்கியது. ஒரு நாட்டை ஆளும் அரசனுக்கும் அமைச்சருக்கும் கண்ணும் செவியுமாக விளங்குவது ஒற்றர் படைதான் என்ற உண்மையைத் தாங்கள் என் மனத்தில் பதித்த பொழுதுதான் நானே உணர்ந்தேன். அதனால்தான் என் பணியில் ஒரு பெருமிதமும் எனக்கு ஏற்பட்டது. இன்னும் முயற்சிசெய்து மிகச்சிறப்புடன் செயலாற்றவேண்டும் என்ற ஆர்வமும் எழுகின்றது" என்று சாத்தனின் ஆள்வினைத்திறத்தைப் புகழ்ந்தான் இளந்தத்தன்.

"முயற்சி திருவினையாக்கும் என்பது பெரியோர் வாக்கு. உங்கள் வேலையில் உள்ள தனிச்சிறப்பு அதுதான். ஓர் இலக்கைத்தான் மன்னரோ, அமைச்சரோ காட்ட முடியும். அதை அடைவதற்கான வழியை நீங்கள் தான் தேர்ந்தெடுக்கவேண்டும். உங்கள் சிந்தனையின் ஆழத்தையும் கற்பனையின் ஆற்றலையும் பொறுத்தது அந்தவழி. இப்பொழுது நாம் கண்ட வழியையே எண்ணிப்பாருங்கள். காஞ்சியிலும் தகடூரிலும் நடப்பவற்றைக் கண்காணிப்பதற்கு எத்தனையோ வழிகள் உள்ளன. நாம் நன்றாகச் சிந்தித்து இந்த வழியைத் தேர்ந்தெடுத்தோம். இரண்டு மூன்றாண்டுகள் நாம் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயன் இப்பொழுது விளையத் தொடங்கியுள்ளது. நாம் தகவல்களைத் தேடி அலையாமல் தகவல்களே நம்மைத் தேடி வருமாறு செய்து விட்டோம். அது நாம் பெற்ற முதல் வெற்றி ஒரு நல்ல தொடக்கம்" என்று சுட்டிக் காட்டினான் சாத்தன்.

ஒற்றர் படைத் தலைவன் மனநிறைவுடன் பேசினான் "தகவல்கள் நம்மைத் தேடி வருவது மட்டுமல்ல! பகைவனே நம்மை நாடி வருகிறான். நம்மிடம் அறிவுரை கேட்க வருகிறான். நம்மிடம் உதவிகேட்டு வருகிறான்."

"அப்படியா! மிகவும் நல்லது. விவரமாகச் சொல்லுங்கள் என் ஆவலைத் தூண்டிவிட்டீர்கள்" என்று செவிக்குணவு வேண்டினான் சாத்தன்.

"நான் அன்று மதுரைக்கு வந்தபொழுது தங்களிடம் சொன்னேன் அல்லவா? அமைச்சரின் அந்தரங்கச் செயலாளன் ஒருவனைப் பற்றி, அவன் இப்பொழுது என்னுடைய பக்தன் மட்டும் அல்ல. நம் தங்கவேலனின் உற்ற நண்பனும் ஆகிவிட்டான். அமைச்சரும், கொங்கு மன்னனும் செய்யும் ஒவ்வொரு செயலும் அவன் மூலமாக நமக்குத் தெரிய வருகின்றன. வறுமை இவ்வளவு கொடுமையாக வருத்தினாலும் கொங்கு மன்னன் தன் படை பலத்திற்காகப் பெரும் செலவு செய்கிறான். காரணம் பாண்டியன் எப்பொழுது வேண்டு மானாலும் தகடூரைத் தாக்கவரலாம் என்ற அச்சம்தான். அரசின் வருமானம் மிகவும் குறைந்துவிட்டதன் விளைவாக இப்பொழுது படைவீரர்களின் ஊதியத்தைக் குறைத்திருக்கிறான் கொங்குமன்னன். அதனால் சிலர் படையிலிருந்து வெளியேறக் கூடும். இருந்தாலும் படையின் தொகையில் பெரிய சேதம் ஏற்படாது என்று நினைக்கிறேன். கொங்கு நாட்டின் அமைச்சர், படையை இப்பொழுது உள்ளத்தில் பாதியாக்க வேண்டும் என்று விரும்புகிறார். ஆனால் பாண்டியனுக்கு அஞ்சி அதற்கு ஒப்புதல் அளிக்க மறுக்கிறான் மன்னன். பாண்டிய வேந்தன் தகடூர்மீது படையெடுக்கமாட்டான் என்று அறம் வளர்த்த நாதரே மன்னனிடம் உறுதி கூறினால் மன்னன் படைபலத்தைக் குறைப்பான் என்று அமைச்சர் நம்புகிறார். நான் மதுரையிலிருந்து திரும்பிச் சென்றவுடன் அந்த அறிவுரையை அளிக்கலாம் என்று நினைக்கிறேன். கொங்கு நாட்டின் வறுமைக்கு ஓரளவு நிவாரணம் ஏற்படுவது மட்டுமன்றி, தாங்கள் விரும்பிய வண்ணம் கொங்கர்படை குறுகிவிடும் மதுரையிலிருந்து ஒரு படை புறப்படாமல் உறையூர் நிலைப்படையே நாம் நினைக்கும்போது தகடூரைத் தாக்கிப் பிடிக்க முடியும்" என்று விளக்கினான். ஒற்றர்படைத் தலைவன்.

"நீங்கள் அவ்வாறு உறுதியளிப்பதற்குமுன் மதுரைக்கு வந்தது நல்லதே. இங்கு நடப்பவற்றை அறிந்து கொங்கு மன்னுக்குத் தெரிவிக்கும் ஒற்றர்கள் இருக்கலாம். அறம் வளர்த்த நாதர் மதுரைக்கு வருகை தந்தபொழுது படைத்தளபதி சாத்தஞ் சாத்தனும், சேனாதிபதி சாத்தன் கணபதியும் அவரை வந்து வணங்கி ஆசி பெற்றனர் என்ற செய்தி அதியனுக்குக் கிடைக்கலாம். அப்படியானால் அறம் வளர்த்த நாதரின் சொற்கள் வெறும் பேச்சல்ல. பாண்டியரின் படைத்தலைவர்களிடமிருந்து பெற்ற தகவலாகத்தான் இருக்கும் என்று அதியன் எண்ணுவான் என் அண்ணன் நாளைக்கே உங்களை வந்து சந்திப்பார்."

"தளபதியாரே! நான் ஒன்று கேட்டால் தேவையற்ற கேள்வியாகக் கருதமாட்டீர்களே?" என்று தயக்கத்துடன் கேட்டான் இளந்தத்தன்.

"நான் ஏன் அப்படி நினைக்க வேண்டும்? நானும் நீங்களும் இந்த நாட்டின் வளர்ச்சியும் வலிமையும் பெருகுவதற்காகத்தான் உழைக்கிறோம். நீங்கள் என்ன கேள்வி கேட்டாலும் அந்த நோக்கத்தோடுதான் கேட்பீர்கள் என்பது எனக்குத் தெரியும் தயங்காமல் கேளுங்கள்"

"பாண்டிய நாட்டிலும் வறுமை கடுமையாகத்தான் இருக்கிறது. பட்டினியால் வாடும் மக்கள் இங்கும் இருக்கிறார்கள். கொங்குநாட்டில் உள்ள அளவு கொடுமை இல்லை என்பது உண்மையே! இருந்தாலும் நாமும் படைச்செலவைச் சற்றுக் குறைத்து வறுமையை விரட்டுவதற்காகச் செலவு செய்யலாம் அல்லவா?" என்று வினவினான் இளந்தத்தன்.

சாத்தன் புன்முறுவலுடன் விடையிறுத்தான். "நீங்கள் சொல்வது உண்மைதான். வறுமையை ஒழிப்பதற்குப் பலவழிகள் உள்ளன. படைக்காகச் செய்யும் பொருட்செலவைக் குறைத்து வறுமையுடன் போராடுவதற்காகப் பயன்படுத்தலாம். அதே நேரத்தில் படைபலத்தைப் பெருக்கி அதன் வழியாகப் பொருள் திரட்டி, அந்தப் பொருளால் வறுமையை விரட்டியடிக்கலாம். பாண்டிய வேந்தனைப் போன்ற ஆற்றலும் அறிவும் வீரமும் மிக்க மன்னர் இரண்டாவது வழியைப் பின்பற்ற விரும்புகிறார். ஒரு படையைத் திரட்டுவதற்கும், படைக்கலன்கள் செய்வதற்கும், வீரர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கும், யானை, குதிரை, தேர் முதலியவற்றிற்காகவும் ஏராளமாகப் பொருட்செலவு செய்யவேண்டும் என்பது உண்மையே! அதனோடு தொடர்புடைய மற்றொரு உண்மையும் உள்ளது" என்று நிறுத்தினான் சாத்தன். "அது என்ன உண்மை?" ஆவலுடன் வினவினான் இளந்தத்தன்.

"அவ்வாறு பெரும் பொருட்செலவில் உருவானபடையை அதைவிட அதிகமாகப் பொருள் ஈட்டும் கருவியாகப் பயன்படுத்த முடியும். நாம் பல்லவர் படையைப் பெண்ணாகடப் போரில் முறியடித்தபொழுது நமக்குக் கிடைத்த யானை, குதிரை, தேர், போர்த்தளவாடங்கள், படைக்கலன்கள், உணவுப் பொருள்கள் போன்றவற்றின் மதிப்பு, அந்தப் போருக்காக நாம் செவவழித்த பொருளைவிட அதிகமாகும். ஒரு நாட்டின்மீது படையெடுத்து வெற்றிபெற்றால், தோல்வியுற்ற மன்னனிடமிருந்து எவ்வளவு செல்வம் வேண்டுமானாலும்

பெறலாம். பல ஆண்டுகள் திறையும் பெறலாம். சில அரசர்கள் செய்வதுபோல் பகைவன் நாட்டைச் சூறையாடுவதையும் கொள்ளையடிப்பதையும்விட்டுவிடுங்கள். அத்தகையை வேலைகளில் நாம் ஒரு நாளும் ஈடுபடமாட்டோம்" என்று போரால் விளையும் அழிவிலும் ஒரு நன்மை உண்டு என்று எடுத்துரைத்தான் சாத்தன்.

"ஆனால் எல்லா நாடுகளுமே மழையில்லாமல் பஞ்சத்தில் அடிப்பட்டிருக்கும் இந்த நேரத்தில் ஒரு நாட்டின்மீது படையெடுப்பது சரியா? பசியும் பட்டினியும் போதாதா? பகைவனின் தாக்குதலும் கூடவா வேண்டும்? எனக்கென்னவோ அத்தகைய போரும், அதனால் கிடைக்கும் செல்வமும் நல்லவையாகத் தெரியவில்லை" என்று தன் மனத்தில் தோன்றிய எண்ணத்தை மறைக்காமல் பேசினான் இளந்தத்தன்.

"உங்கள் நல்லுள்ளத்தை நான் போற்றுகிறேன். பஞ்சத்தாலும் பட்டினியாலும் வாடும் மக்களைத் துன்புறுத்தும் வண்ணம் அவர்கள் நாட்டின்மீது படையெடுக்கும் அளவிற்கு இரக்கமற்ற மனம் படைத்தவரா நம் பாண்டிய வேந்தர்? அத்தகைய செயலை அவர் ஒருநாளும் செய்யமாட்டார். நானும் அதற்குத் துணை நிற்கமாட்டேன். எல்லா நாடுகளிலுமே மழை பொய்த்தது என்றும் அதனால் வறுமை வாய்த்தது என்றும் நீங்கள் கருதியது தவறு. தமிழகத்திலேயே மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்குப் பகுதியில்தான் பருவமழை தவறியது. அதனால் பாண்டியநாடு, சோழநாடு, பல்லவநாடு, கொங்குநாடு ஆகியவை அல்லலுற்றன. மேற்குத் தொடர்ச்சி மலைக்கும், மேலைக்கடலுக்கும் இடையே நீண்டு கிடக்கும் சேரநாட்டிலும், வேணாட்டிலும் மழைபொய்க்கவும் இல்லை. வறுமை வருத்தவும் இல்லை. ஆய்வேளிடம் உணவுப்பொருள்கள் கேட்டு நாம்தூதனுப்பினோம். ஆனால் நம்மிடம் போரில் தோல்வியடைந்த பகைமையை மனத்தில் வைத்துக்கொண்டு நம் கோரிக்கையைத் தள்ளிவிட்டார் ஆய்வேள். வறுமையின் கொடுமையால் வலிகுன்றியிருக்கும் பாண்டியனால் இப்பொழுது அவரை ஒன்றும் செய்ய முடியாது என்ற இறுமாப்பு அவருக்கு! அந்த எண்ணத்தை மாற்றவேண்டும். அவருக்கு ஒரு பாடம் புகட்டவும் வேண்டும். அதோடு நம் நாட்டு மக்களின் துன்பத்தைத் துடைக்க முடியாவிட்டாலும், அதைக்குறைப்பதற்காவது நாம் மேற்கொள்ள வேண்டிய பணிகளுக்குத் தேவையான உணவுப் பொருள்களும், பொன்னும், மணியும், செல்வமும் திரட்டவேண்டும். அதற்காகத்தான் நாம் இப்பொழுது முனைந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். கொங்கு நாட்டிலும் பல்லவ

நாட்டிலும் அதிலும் குறிப்பாகத் தகடூரிலும், காஞ்சியிலும் உங்களுக்கு முழுநேரம் வேலை இருப்பதாலும், இன்னும் சிலகாலம் நீங்கள் அறம்வளர்த்த நாதராகவே இருக்கவேண்டிய கட்டாயம் உள்ளதாலும்தான் உங்களிடம் அதைப்பற்றிப் பேசவில்லை. வேணாட்டுப் படையெடுப்பிற்கான எல்லா வேலைகளையும் நானே ஏற்றுக்கொண்டேன். வேணாட்டில் அறம்வளர்த்த நாதரின் மடம்போன்ற ஒரு மறைவிடத்தை நிறுவமுடியவில்லை ஆயினும் நம் ஒற்றர்கள் ஓரளவு கால் ஊன்றிவிட்டனர்" என்று ஒற்றர் படைத்தலைவனைக் கலக்காமலே தான் எடுத்த நடவடிக்கைகளுக்குக் காரணம் காட்டினான் சாத்தன்.

பாண்டிய வேந்தன் இவ்வளவு பெரிய செயலை மேற்கொள்ளும் பொழுது ஒற்றர் படைத்தலைவனாகிய தன்னிடம் கலந்து ஆலோசிக்காமல் முடிவெடுத்தது சற்றே மனத்தாங்கலை ஏற்படுத்தினாலும், சாத்தன் கூறிய காரணங்கள் மிகவும் சரியானவையே என்பதை உணர்ந்த இளந்தத்தன் மனம் தேறினான். மேலும் சாத்தனின் மதிநுட்பத்திலும், ஆள்வினைத் திறமையிலும் பெருமதிப்பு கொண்டவனாதலால், அவன் தலைமையேற்று நடத்தும் எந்தச் செயலும் நன்றாகவே நடந்து நிறைவேறும் என்பதையும் இளந்தத்தன் மனங்கொண்டான். எனவே தன்னுடைய சொந்த இழப்பைப் பொருட்படுத்தாமல் சாத்தன் மேற்கொண்ட பணி வெற்றி பெறவேண்டும் என்ற நல்லெண்ணமே மேலெழுந்து நின்றது.

"தளபதியாரே! வேணாடு கொங்குநாடுபோல் எளிதாக வெற்றிபெறக்கூடியதல்ல. மலைநாட்டைச் சேர்ந்த வீரர்கள் போரில் வல்லவர்கள். மேலும்வேணாட்டின் தலைநகராகிய விழிஞம் ஒரு வலிமையும் அரணும் மிகுந்த துறை முகமாகும். நம் படைகள் விழிஞத்தை நெருங்கினால் கடலிலிருந்தும் தாக்குதல் வரக்கூடும். இதையெல்லாம் எண்ணிப்பார்த்தே திட்டம் தீட்டியிருப்பீர்கள் என்று நம்புகிறேன்" என்று தான் அறிந்த தகவல்களை எடுத்துரைத்தான் அவன். "ஆம் இளந்தத்தரே! அவை எல்லாவற்றையும் மனத்தில் கொண்டுதான் நாம் திட்டமிட்டுள்ளோம். மலைநாட்டு வீரர்களின் போர்புரியும் ஆற்றலை நானே நேரில் கண்டவனல்லவா! அதனால் மலைநாட்டில் அவர்களுடன் நாம் போரிடமாட்டோம். மேற்குத் தொடர்ச்சி மலையைக் கடந்து வேணாட்டுக்குச் செல்வதில்லை என்று முடிவுசெய்துவிட்டோம். தென்மேற்குத் திசையில் சென்று, நாஞ்சில் நாடு என்று பெயர்பெற்ற வேணாட்டின் தென் எல்லையைக் கடந்து,

கடற்கரை ஓரமாகவே வடக்கு நோக்கி முன்னேறி விழிஞத்தை அடைய வேண்டும் என்பதுதான் நம் திட்டம். அதற்காகக் கரவந்தபுரத்தில் ஒரு நிலப்படையை நிறுவியுள்ளோம். நமது யானைப்படைத் தலைவன் சங்கரன் சீதரன் அந்த நிலைப்படைக்குத் தலைமை தாங்கிப்யிற்சியளித்து வருகிறான். வேணாட்டு மன்னன் கருநந்தனின் கடற்படையைப் பற்றியும் நமக்குத் தெரியும். நாமும் கொற்கையில் உள்ள நம் சிறிய கடற்படையை இப்பொழுது விரிவாக்கியுள்ளோம். தக்க தருணத்தில் நம் கடற்படை புறப்பட்டு, குமரிமுனையைக் கடந்து வேணாட்டின் கடலோரத்தை அடையும். விழிஞத்தைக் கடலிலிருந்து தாக்கவும் நாம் திட்டமிட்டுள்ளோம். நான் முதலில் சொன்னேன் அல்லவா, வேணாட்டிற்குத் தூது அனுப்பினோம் என்று. ஒரு வணிகர் குழுவைத் தான் உதவிகேட்டு அனுப்பினோம். அந்த வணிகர்குழுவின் உறுப்பினனாக நானும் ஒரு வணிகனாக மாறிச் சென்றேன். மன்னன் கருநந்தனை நாங்கள் கண்டு பேசினோம். விழிஞத்தின் பல பகுதிகளையும், வேணாட்டின் அரணையும் நன்றாகக் கண்டறிய எனக்கு வாய்ப்புக்கிடைத்தது. அந்த அறிவு நமக்கு தேவைப்படும் என்று அன்றே மன்னரும் நானும் முடிவு செய்தோம். தூதுக்குழுவின் தலைவருக்கு மட்டுமே நான் ஒரு படைத்தலைவன் என்பது தெரியும் மற்றவர்கள் நான் ஓர் அரசு அலுவலன் என்று மட்டுமே அறிந்திருந்தனர்" என்று எல்லாவற்றையும் விளக்கிக் கூறினான் சாத்தன்.

"மிகவும் நல்லது. எப்பொழுது படையுடன் புறப்படப் போகிறீர்கள்?" இளந்தத்தன் கேட்டான்.

"இன்னும் அதை முடிவு செய்யவில்லை. செய்து முடிக்கவேண்டிய சிறுசிறு வேலைகள் இன்னும் பாக்கியுள்ளன. இத்தகைய படையெடுப்பு நடக்கிறது என்பது வெளியில் யாருக்கும் தெரியக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பதால் சற்றுத் தாமதம் ஏற்படுகிறது. ஒரு பெரிய படையாக மதுரையிலிருந்து புறப்படாமல் சிறுசிறு அணிகளாகச் சென்று கரவந்தபுரத்தை அடைந்து அங்கிருந்து விரைவாகப் பாய்ந்து செல்லவேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறோம்" என்றான் சாத்தன்.

"சரி! நீங்கள் வெற்றிபெற வாழ்த்துகிறேன். நான் இரண்டு மூன்று நாள்கள் இங்குத் தங்கி மீண்டும் தகடூருக்குச் செல்வேன். நான்செய்ய வேண்டிய வேலையைப் பற்றிச் சொல்லுங்கள்" என்று அறிவுரை கோரினான் இளந்தத்தன்.

"நீங்கள் திட்டமிட்டவாறே அதியனிடம் உறுதியாகச் சொல்லுங்கள் பாண்டிய நாட்டின் படை தகடூரைத் தாக்கும் நிலையில் இல்லை. ஆகவே அதனை எண்ணிச் சற்றும் அஞ்சத் தேவை இல்லை என்றும் சொல்லிவிடுங்கள். ஒரு வேளை மதுரையில் சில படைநீக்கங்கள் நடக்கின்றன என்ற தகவல் அதியனுக்குக் கிடைத்திருக்கலாம். அதைப்பற்றி நீங்கள் ஒன்றும் சொல்லவேண்டாம். ஆனால் அவன் கேட்டால் கரவந்தபுரத்தில் ஒரு கோட்டை கட்டும் பணி தொடங்குகிறோம். மழையின்மையால் உழுவதற்கும் பயிரிடுவதற்கும் இயலாத நேரத்தில் ஏதேனும் தொழில் செய்து எளியோர் வாழும்பொருட்டுக் கோட்டை கட்டும் பணியைத் தொடங்கியிருக்கிறோம். அதற்காகத்தான் மதுரையிலிருந்து சில இளைஞர்கள் அனுப்பப்படுகின்றனர் என்று கூறலாம். அதே நேரத்தில் உங்கள் ஆள்கள் செவிகளைத் தீட்டிவைத்துக் கொள்ளட்டும். நாம் வேணாட்டின்மீது படையெடுத்துச் செல்லும் நாள்களிலும், அங்குப் போர் நடக்கும் நாள்களிலும் கொங்கு நாட்டிலும், பல்லவ நாட்டிலும் அரசுவட்டாரங்களில் எத்தகைய எண்ணம் நிலவுகிறது, என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதை அறிந்து எனக்குத் தெரிவிக்கவேண்டும். முக்கியமாகப் பாண்டியர் வெற்றிபெற்றால் அடுத்த கட்டமாகக் கொங்கு நாட்டின் மீதோ அல்லது பல்லவ நாட்டின் மீதோ திரும்பலாம் என்று அஞ்சி, அதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கிறார்களா என்று தெரியவேண்டும்" என்று பணித்தான் சாத்தன். "அவ்வாறே செய்கிறேன்." என்று ஏற்றான் ஒற்றர் படைத் தலைவன்.

19. படை புறப்பாடு

வேணாட்டின்மீது படையெடுத்து வெற்றி பெற்று, பெருவாரியாகப் பொன்னும் பொருளும் திரட்டுவதே பாண்டிய நாட்டைப் பிணித்திருக்கும் வறுமைப் பேயை விரட்டுவதற்கான ஒரேவழி என்ற முடிவிற்கு வந்தபின் அதற்கான முயற்சிகள் விரைவாகத் தொடங்கின. பாண்டியன் பராந்தகன் நெடுஞ்சடையன், அமைச்சர் மாறன் காரி, சேனாதிபதி சாத்தன் கணபதி, சிறப்புத் தளபதி சாத்தஞ் சாத்தன் ஆகிய நால்வரும் கூடி, ஆலோசனை நடத்தி ஒருமுகமாக எடுத்த முடிவு அது. அதை அவ்வாறே காக்கவேண்டும் என்று அவர்கள் தீர்மானித்தனர். படை புறப்படும்வரை, அது எதற்காகத் திரட்டப்படுகிறது என்று யாருக்குமே தெரியக்கூடாது என்று கருதினர். அதற்கேற்பவே ஒவ்வொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது. ஒரு போருக்குத் தேவையான படைதிரட்டும் பரபரப்பு எங்கும் காணவில்லை. பஞ்சத்தின் கொடுமையால் சில கொள்ளைக் கூட்டங்கள் தோன்றியுள்ளன என்று அவற்றை அடக்குவதற்குத் தேவையான அளவுக்கு ஆளெடுப்பதாக அரசு அலுவலர்கள் கூட நம்பினர்.

தலைநகராகிய மதுரையில் பகைவரின் ஒற்றர்கள் கண்வைத்திருப்பர் என்பது மதிநுட்பம்மிக்க மன்னருக்கும் அவருடைய உதவியாளர்களுக்கும் தெரியும். ஆகவே பெரும்பாலான வேலைகள் மதுரையிலிருந்து வெகுதொலைவிலேயே நடந்தன. கரவந்த புரத்தில் நிலைப்படை அமைக்கத் தொடங்கி, ஓராண்டு காலத்தில் மூவாயிரம் வீரர்களைக் கொண்ட படை உருவாகியது. நாஞ்சில் நாட்டில் வேணாட்டு எல்லைக்கு அருகில் இருந்த காவலூரில் ஒரு நிலைப்படை அமைக்கும் பணி ஆறு மாதங்களுக்கு முன் தொடங்கி இப்பொழுது இரண்டாயிரம் வீரர்கள் திரண்டிருந்தனர். மதுரையில் எப்பொழுதுமே இருந்த ஐயாயிரம் வீரர்கள் அடங்கிய படையுடன், சிறிய அளவில் ஆள் சேர்க்கத் தொடங்கி இப்பொழுது இரண்டாயிரம் புதியவீரர்கள் சேர்ந்திருந்தனர். இவ்வாறு சிறு துளி பெரு வெள்ளமாகப் பெருகி, பதினாயிரம் வீரர்களும், ஆயிரம் குதிரைகளும் நூற்றுக்கு மேற்பட்ட யானைகளும் தேர்களும் கொண்ட பெரும்படை சந்தடி எழாமல் சந்தேகம் தோன்றாமல் போர் தொடுக்கும் வலிமையோடு ஆயத்தமாக நின்றது.

படையைத் திரட்டும்பொழுது செய்தது போலவே நடத்திச் செல்லும் பொழுதும் சிறுசிறு படைகளாகவே வேணாட்டிற்குள் நுழையவேண்டும் என்றும் விழிஞத்தை நெருங்கும் பொழுது மட்டுமே அதன் முழு எண்ணிக்கையும் வலிமையும் வெளிப்பட வேண்டும் என்றும் திட்டமிட்டனர். முதல் அணியாகச் சாத்தனின் தலைமையில் மூவாயிரம் வீரர்கள் வேணாட்டில் நுழைய வேண்டும். ஆயிரம் வீரர்களுடன் மதுரையிலிருந்து புறப்பட்டு, காவலூரிலிருந்து இரண்டாயிரம் வீரர்களையும் சேர்த்துக்கொண்டு சாத்தன் மெதுவாக நாஞ்சில் நாடுவழியாகப் புகுவான். அடுத்த நாள் சங்கரன் சீதரன் கரவந்த புரத்தில் இருக்கும் மூவாயிரம்பேர் கொண்டபடையுடன் சாத்தனைப் பின்தொடர்ந்து சென்று வேணாட்டிற்குள் புகவேண்டும். சேனாதிபதி சாத்தன் கணபதி மேலும் மூவாயிரம் வீரர்களுடன் மதுரையிலிருந்து புறப்பட்டுச் சென்று முன்னணிப் படை விழிஞத்திலிருந்து பத்துக்கல் தொலைவில் இருக்கும் பொழுது அதனுடன் சேர்ந்துகொள்ள வேண்டும். அதன் பின் பாண்டியன் நெடுஞ்சடையன் ஆயிரம் குதிரைவீரர்களுடன் வந்து சேர்வான். அடுத்த நாள் விழிஞத்தின் மீது தாக்குதல் தொடங்கும். அதற்கு முன் வேணாட்டுப் படை பாண்டியர் படையைத் தாக்க முற்பட்டால் அதற்குத் தக்கவாறு படை புறப்பாட்டுத் திட்டமும் மாற்றப் படும். இவ்வாறு முறைசெய்த கால அட்டவணையின் படி முதலில் சாத்தஞ்சாத்தன் மதுரையிலிருந்து புறப்பட நாளும் குறிக்கப்பட்டது. அதற்கு முன்னைய நாள் மாலைநேரத்தில் இளவரசி தேவந்தியும் சாத்தனும் அவர்களுக்கு விருப்பமான பூங்காவில் சந்தித்தனர்.

பலவண்ண மலர்களால் கண்களுக்கு விருந்தளித்தும், அவற்றின் நறுமணத்தால் மனத்திற்கு விருந்தளித்தும் எல்லோரையும் மகிழ்விக்கும் பூங்காவில் சிற்பி செதுக்கிய சிலைபோல் நின்றிருந்த காதலியின் கைகளைப் பற்றி மற்றொரு கையை அவள் மெல்லிடையில் சேர்த்து, மெல்ல நடந்து சாய்வு இருக்கையில் இருத்திய சாத்தன் அவளுடைய மதிமுகத்தையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றான். தன் முல்லைப் பற்களை மெல்லத் திறந்து, வெல்லச் சிரிப்புடன் அவள் கேட்டாள்." என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்?"

"இந்த அழகு முகத்தைப் பார்த்துப் பார்த்துப் பசியாறும் நான், பல நாள்கள் பார்க்காமல் இருக்கப் போகிறேனே எப்படி என் பசியை ஆற்றிக்கொள்ளப் போகிறேனோ என்று அஞ்சுகிறேன். அதனால்தான் அப்படியே என் மனத்தில் அழுத்திப் பதிவுசெய்கிறேன். ஏக்கம் வாட்டும் போது மீண்டும் மனக்கண்

முன் எடுத்துவைத்து பார்த்து மகிழலாம் அல்லவா!" என்று அவளை நலம் பாராட்டினான் அவன்.

"தாங்கள் போவது வேணாட்டிற்கல்லவா! சேரநாடும் வேணாடும் அழகிய பெண்களின் உறைவிடம் என்று புகழ்பெற்றவை எத்தனையோ எழில் மிக்க முகங்களை அங்கே காணப் போகிறீர்கள் அப்பொழுது என் முகம் ஒளிகுறைந்ததாகக் கூடத் தோன்றலாம். அதை எண்ணித்தான் நான் கவலைகொள்கிறேன்.!"

"தேவி! அழகு என்பது காணப்படும் முகத்திலோ பொருளிலோ உள்ளதல்ல; காண்போரின் கண்ணில் உள்ளது. ஆயிரம் அழகு முகங்கள் என் முன் தோன்றினாலும் அவையெல்லாவற்றிலும் மொத்தமாகத் திரண்ட அழகும் உன்முகத்தின் அழகிற்கு ஒப்பாகாது. ஏனெனில் என் கண்ணிலும் மனத்திலும் கதிரவன் நிறைந்து நின்று ஒளி வீசும் பொழுது விண் மீன்களின் ஒளிக்கு இடம் ஏது?" அவனுடைய கவிதைப் பெருக்கில் களித்த தேவந்தி அவன் தன்னிடமிருந்து சில நாள்கள் பிரியப் போகிறான் என்பதை நினைவுகூர்ந்து வினவினாள். "வேணாட்டுப் போரும் பயணமும் எத்தனை நாள் நீடிக்கும்?"

"அதைக் கணக்கிட்டுச் சொல்ல முடியாது நான் இங்கிருந்து நாளை புறப்படுவேன். பதினைந்து நாள்களில் என் படையுடன் விழிஞம் நகரின் எல்லையை அடைவேன். அதற்குள் மற்ற படைகளும் படைத்தலைவர்களும் இறுதியாக அரசரும் வந்து சேர்ந்துவிடுவார்கள். அதற்குப் பின் போர் தொடங்கும் வேணாட்டுப் படை நமது படையோடு ஒப்பிடும் போது சிறியபடைதான். ஆனால் அவர்கள் போர் புரிவது அவர்களுடைய நாட்டில் நாமோ வெளிநாட்டிலிருந்து போய் அங்கே போர் செய்கிறோம். எனவே நாட்டு மக்கள் அவர்களுக்குப் பல விதத்தில் உதவி செய்வதும் நமக்குப் பலவிதமான தொல்லைகள் தருவதும் இயல்பே. நாம் வெற்றிபெறுவது உறுதி ஆயினும் அவர்களால் நம்மை எதிர்த்துப் பல நாள்கள் போரிடமுடியும். வேணாட்டு மன்னன் கருநந்தனின் தலைமையும்படை நடத்தும் திறமையும் மிகவும் முக்கியம். எப்படியும் நான் திரும்பி வர மூன்று திங்கள் ஆகும் என்று நினைக்கிறேன்." என்றான் சாத்தன்.

தேவந்தி பெருமூச்செறிந்தாள்! "போருக்கான திட்டங்கள் தீட்டியும், கூட்டங்கள் நடத்தியும், களத்தில் போர் செய்தும் தீவிரநடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் தங்களுக்கு மூன்றுதிங்கள் என்பது மூன்று நாள்கள்போல் விரைவில் ஓடிவிடும். வேறு எதையும் பற்றிச் சிந்திக்கவோ மனத்தை அலையவிடவோ நேரம்

இருக்காது. ஆனால் தாங்கள் எப்படி இருக்கிறீர்களோ, என்ன செய்துகொண்டிருக்கிறீர்களோ போர்க்களத்தில் பகைவருடன் மோதிக்கொண்டிருக்கிறீர்களோ, புண்பட்டுவிட்டதோ என்றெல்லாம் பல்வேறு சிந்தனைகளில் ஆழ்ந்து கவலையில் நொந்து கொண்டிருக்கும் எனக்கோ, மூன்று திங்கள் என்பது மூன்று ஆண்டினும் நீண்டதாகத் தோன்றும். இரவும், பகலும் எப்பொழுதும் தங்களுடன் இருக்கவேண்டும் என்ற ஆசை நிறைவேறாவிட்டாலும், பல நாள்களிலும் மாலையிலாவது கண்டுபேசி மகிழ்கிறோமே என்ற ஆறுதல்தான் என்னைத் தேற்றுவது. இப்பொழுது அந்த ஆறுதலும் இல்லாமல் மூன்று திங்கள் எவ்வாறு வாழ்வேனோ தெரியவில்லை."

"உன் நிலைமையை நான் நன்றாக உணர்கிறேன். நீ மட்டுமல்ல! நானும், மன்னனும் நடத்திச் செல்லும் இந்தப் படையில் உறுப்பினராக உள்ள ஒவ்வொரு வீரனின் மனைவி, காதலி, தாய் ஆகிய பெண்கள் எல்லாருமே இத்தகைய துன்பத்தை அனுபவித்தே ஆகவேண்டும்.

"புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்களத்தானே"

என்று பாடிய வீரத்தாயும், தன் மகனுக்கு என்ன நேர்ந்ததோ என்ற கவலையுடன்தான் காத்திருந்திருப்பாள். போரே இல்லாமல் மனித இனம் வாழும் நாள் என்றாவது வரலாம். ஆனால் அது நாம் காணும் தூரத்தில் இல்லை. ஆகவே தனிமையையும் அதனால் விளையும் துன்பத்தையும் பெண்கள் பொறுக்கத்தான் வேண்டும். நீயும் அவ்வாறே மனம் தேறவேண்டும், மீண்டும் நாம் ஒன்று சேரும் நாளை எண்ணி! அன்று நாம் காணும் இன்பத்தைக் கற்பனை செய்து காத்திருக்க வேண்டும்" என்ற நல்லுணர்வோடு அவளை மார்புறத் தழுவி, இதழோடு இதழ் சேர்த்து முத்தமிட்டு விடைபெற்றான் சாத்தன்.

மதுரையிலிருந்து மறுநாள் காலையில் சாத்தஞ் சாத்தனின் தலைமையில் ஆயிரம் வீரர்களைக்கொண்ட முன்னணிப்படை புறப்பட்டது. நூறு குதிரைகளும், எட்டு வீரர்கள் பயணம் செய்யும் அளவிற்கு வசதியுடைய நூறு சகடங்களும் ஒரு சில தேர்களும் அடங்கியபடை வெயிலின் வெம்மையாலும், சாலைகளின் கரடு முரடான தன்மையாலும் மெதுவாகவே முன்னேறியது. மழையின்மையால் மரம், செடி, கொடிகள், கருகியும் வாடியும்

காணப்பட்டதோடு வெள்ளெருக்கு, கற்றாழை, காரை, கருவேல், ஆலை போன்ற வெம்மையைத் தாங்கும் வன்மையுள்ள வேனல் மரங்களும், புதர்களும்கூட வாடத்தொடங்கியிருந்தன. மதுரையிலிருந்து புறப்பட்ட படை தென்மேற்குத் திசையில் சென்று பொருணை நதிக்கரையை அடையும்வரை நிலப் பரப்பு எவ்வித மாற்றமும் இன்றி வறட்சியால் விளைந்த வாட்டத்தையே எடுத்துக் காட்டியது. பொருணை நதியிலும் வெள்ளம் இல்லை. ஆங்காங்கே சிறு சிறு குளங்கள் போல சில நீர் நிலைகள் காணப்பட்டன. ஆற்றின் அருகில் வாழும் மக்கள் ஆற்றைத் தோண்டி, ஊற்றுக்களில் வரும் நீரைப் பயன் படுத்தியதால் ஏற்பட்டவை அந்தக் குளங்கள். படை வீரர்களும், குதிரைகளும், சகடங்களை இழுத்துவந்த காளைகளும் அந்த நீர்நிலைகளின் வெள்ளத்தால் பயன்பெற்று ஓரளவு பயணக் களைப்பிலிருந்து ஆறுதல் அடைந்ததால் அங்கே ஒரு நாள் முழுவதும் தங்கி ஓய்வெடுத்து, அடுத்த நாள் பயணம் தொடர்ந்தது.

செல்லும் வழியின் அருகிலேயே கரவந்தபுரம் அமைந்திருந்ததால், படையை மெல்ல மெல்லக் காவலூரைநோக்கிச் செல்லும்படி பணித்துவிட்டு, சாத்தன் ஐந்தாறு குதிரை வீரர்களை மட்டும் அழைத்துக்கொண்டு கரவந்த புரத்திற்குச் சென்று தளபதி சங்கரன் சீதரனைச் சந்தித்தான். மூவாயிரம் வீரர்கள் கொண்ட நிலைப்படை புறப்படுவதற்கு ஆயத்தமாக இருப்பதைக் கண்டான். "சங்கரா! நான் இன்று மாலை காவலூர் சென்றடைவேன். அங்கு நன்னன் இரண்டாயிரம் வீரர்களுடன் காத்திருக்கிறான். அந்தப் படையையும் சேர்த்துக்கொண்டு நாளை காலை நான் நாஞ்சில் நாட்டிற்குள் நுழைவேன். நீ அதே நேரத்தில் இங்கிருந்து புறப்பட்டு முன்னேற வேண்டும். மதுரையிலிருந்து வருவதால் என் வீரர்கள் களைத்துப்போயுள்ளனர். நாங்கள் மெதுவாகவே செல்வோம். செல்லும் வழியில் நீ என்னைப் பின்தொடர்வதற்கு வசதியாக நான் ஒவ்வொரு ஐந்து நாழிகையிலும் நான்கு வீரர்களை விட்டுச் செல்வேன். அவர்கள் பாண்டிய மன்னர் வரும்வரை அங்கேயே தங்கி, அவருடைய படையுடன் விழிஞத்திற்கு வருவார்கள். உன் யானைகள் எப்படி இருக்கின்றன?" என்று தன் திட்டத்தை விளக்கியதோடு ஒரு முக்கியமான வினாவும் விடுத்தான் சாத்தன்.

"சாத்தனாரே! யானைகளைப் பற்றிக் கவலைகொள்ள வேண்டாம். தேவையான பயிற்சிகள் எல்லாம் முறையாகக் கொடுத்துள்ளேன். அவை போர்க்களம் செல்ல முனைந்து நிற்கின்றன" என்று நம்பிக்கையுடன் பேசினான் சங்கரன் சீதரன்.

"கருநந்தனிடம் நாம் செய்யப் போகும் போரில் யானைப் படைதான் முக்கியப் பங்கு வகிக்கப் போகிறது. காட்டிலிருந்து யானைகளைப் பிடிப்பதிலும் அவற்றைப் பழக்குவதிலும் மிகவும் திறமை வாய்ந்தவர்கள் வேணாட்டு யானைப் பாகர்கள். வேணாட்டுப் படையிலும் யானைப் படைதான் மிகவும் வலிமையுடையது என்று நமக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. அதனால்தான் யானைப்படைத் தலைவனாகிய உனக்கு இந்த நிலைப்படையின் தலைமையும் தரப்பட்டது. என் படையுடன் நான் நெய்யாற்றின் கரையில் பாசறை அமைத்து அங்குத் தங்குவேன். அதற்குள் நீ அங்கு வந்து சேரவேண்டும்" என்று சங்கரன் சீதரனுக்கு ஆணையிட்டு அங்கிருந்து புறப்பட்டு, காவலூருக்கு முன்னரே தன் படையுடன் சேர்ந்து கொண்டான் சாத்தன்.

காவலூர் பாண்டிய நாட்டிற்கும் வேணாட்டிற்கும் இடையே நிலவிய எல்லையில் அமைந்த சிற்றூர். அதைக் கடந்து மேற்குத் திசையில் நடந்தால் வேணாட்டின் தென் கோடியில் அமைந்த நாஞ்சில் நாட்டிற்குள் நுழையலாம். மேலைக் கடலை நோக்கி நீர் ஓடிய ஒரு வாய்க்கால் போன்ற சிற்றாறு இரு நாடுகளுக்கும் எல்லைக்கோடாக விளங்கியது. அதுவரை கரடு முரடான கட்டாந்தரையாக இருந்த நிலப்பரப்பு இப்பொழுது செந்நிறக் களிமண்ணும், சற்றே மணலும் கலந்ததாக மாறியது. காவலூரின் மேற்குத் திசையில் இதுவரை சாத்தனும் அவனுடன் வந்த படையும் காணாத பசுமை நிறம் காட்சியளித்தது.

சாத்தன் தலைமையில் முன்னணிப் படை வரும் என்று முன்னரே தூதன் வழி தகவல் வந்திருந்ததால் நன்னன் முன்னால் வந்து சாத்தனை வரவேற்றான். சாத்தனிடம் பயிற்சி பெற்று அவனிடம் முன்னரே பணியாற்றியவன் ஆதலால் நன்னன் சாத்தன் எதிர் பார்த்தது போலவே எல்லா ஏற்பாடுகளும் செய்து வைத்திருந்தான். நிலைப்படையின் அணிவகுப்பை நன்கு பார்வையிட்ட சாத்தன் நன்னனைப் பாராட்டினான்.

"நன்னா! ஆறு மாதங்களுக்குமேல் ஆகிவிட்டனவே இந்தப் படையின் தோற்றமும் வளர்ச்சியும் தொடங்கியபின், இந்த ஊரிலும் அருகிலுள்ள பகுதிகளிலும் பலரும் இதைப்பற்றிக் கேட்டிருப்பார்கள் அல்லவா? இதன் நோக்கம் என்னவென்று நம்பியிருக்கிறார்கள்?" என்று வினவினான் சாத்தன்.

"நாட்டின் எல்லைகளில் ஒரு நிலைப்படை நிறுவவேண்டும் என்று பாண்டிய வேந்தர் ஆணை பிறப்பித்துள்ளார். அதன்படி

தென்மேற்கு எல்லையில் இந்தப்படை நிறுவப்பட்டிருக்கிறது என்று தான் செய்தியைப் பரப்பியுள்ளோம். பகைவர் படையெடுத்து எதிர்பாராமல் தாக்குவதைத் தடுப்பதற்காகவும், உள் நாட்டில் கொள்ளை முதலான குழப்பங்கள் ஏற்பட்டால் உடனே அடக்குவதற்கும் இந்தப் படை பயன்படும் என்று சொல்லி வருகிறோம். அதை எல்லோரும் நம்புகிறார்கள் என்றுதான் நான் நம்புகின்றேன்" என்று நயமாக விடையிறுத்தான் நன்னன்.

"எல்லைக்கு அருகில் இருப்பதால் இந்தப் படை மிக எளிதாக வேணாட்டிற்குள் நுழையவும், தாக்குதல் நடத்தவும் பயன்படும் என்று யாரும் நினைக்கவில்லையே!"

"இங்கு அருகாமையில் உள்ள ஊர்களில் அத்தகைய எண்ணம் யாருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை. நமது படைக்குத் தேவையான அரிசி, பருப்பு இறைச்சி காய்கறிகள் முதலிய எல்லாவற்றையும் நாஞ்சில் நாட்டில்தான் வாங்குகிறோம். பகைமை உணர்ச்சி இருந்தால் அவ்வாறு நமக்குத் தரமாட்டார்களே! அது மட்டுமல்ல, நம் பாண்டிய நாட்டில் நிலவும் விலையைவிடக் குறைவாகத்தான் பல பொருள்களும் நாஞ்சில் நாட்டில் கிடைக்கின்றன" என்றான் நன்னன்.

"அத்தகைய ஐயம் யாருக்கும் எழக்கூடாது என்பதற்காகத்தான் காவலூர் நிலைப்படையில் இரண்டாயிரம் வீரர்களுக்குமேல் திரட்ட வேண்டாம் என்று முடிவு செய்தோம்" என்று விளக்கினான் சாத்தன்.

"ஆயினும் நாம் நாளைக்கு இங்கிருந்து அணிவகுத்து வேணாட்டிற்குள் நுழையும்பொழுது இங்குள்ள மக்களும் வேணாட்டு அரசின் அலுவலர்களும் உண்மையை உணர்ந்து கொள்வார்கள். உடனே விழிஞத்தில் இருக்கும் கருநந்தனுக்குத் தகவல் எட்டும்" என்று சுட்டிக் காட்டினான் நன்னன்.

"மூவாயிரம் வீரர்களைக் கொண்ட பாண்டியப் படை வேணாட்டிற்குள் புகுந்து விழிஞத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது என்ற செய்தி விழிஞத்தில் எட்டும்பொழுது நமது படையின் பலம் ஆறாயிரமாக வளர்ந்திருக்கும் அதை எதிர்த்து நிற்பதற்காகக் கருநந்தன் ஏற்பாடுகள் செய்வதற்குள் நம் படையின் பலம் பதினாயிரத்திற்கும் மேலாகப் பெருகிவிடும். விழிஞத்தை அடிப்படுத்துவதற்கு அந்தப் படை போதும் என்பது நம்முடைய துணிபு. ஆகவே இனி நம் படை இங்கே எதற்காக உருவானது என்பதை மறைக்கவேண்டிய தேவை இல்லை. நாம்

வேணாட்டின்மீது படையெடுக்கும் நோக்கத்துடன் தான் இதைத் தொடங்கினோம். அதைத் தான் செய்யப் போகிறோம். நாளை காலையில் நாம் இங்கிருந்து புறப்படுவோம். அதற்குத் தேவையான எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டியது உன் பொறுப்பு" என்று முடித்தான் சாத்தன்.

அவ்வாறே அடுத்தநாள் காலையில் காவலூரில் நிலைப்படையாக இருந்த இரண்டாயிரம் வீரர்களும், சாத்தனுடன் வந்த முன்னணிப்படையைச் சார்ந்த ஆயிரம் வீரர்களும் இணைந்து, சாத்தஞ்சாத்தன் தலைமையில் மூவாயிரம் வீரர்களைக்கொண்ட பாண்டியன் படை வேணாட்டிற்குள் புகுந்தது. படைவீரர்களும், குதிரைகளும் களைப்படையா வண்ணம் மிதமான வேகத்திலேயே நடந்தால் போதும் என்று கட்டளையிட்டான் சாத்தன். கரவந்தபுரத்து நிலைப்படையும் வந்துசேர்ந்த பின்னரே நாஞ்சில் நாட்டுப் பகுதியிலிருந்து வெளியேறினால்போதும் என்பதே அவன் நோக்கம்.

மதுரையிலிருந்து காவலூர்வரை கண்டது போலன்றி, நாஞ்சில் நாடு ஓரளவு பசுமையும் செழிப்பும் உள்ளதாகக் காட்சியளித்தது. கிழக்குப் பகுதியில் முழுமையாகப் பொய்த்த பருவ மழை, மேற்குப் பகுதியான நாஞ்சில் நாட்டில் ஓரளவு பெய்திருந்தது. எப்பொழுதும் உள்ள அளவு மாரி பெய்யவில்லை ஆயினும், மரம், செடி, கொடிகள் முற்றிலும் காய்ந்து போகவில்லை. எங்கும் பச்சை நிறம் கண்களுக்குக் களிப்பூட்டவில்லையெனினும் இடையிடையே வயல்களும், பழத்தோட்டங்களும் காணப்பட்டன. சாலையோரங்களிலும் சிற்றூர்களிலும் படையினர் கண்ட மாந்தர்களும் பசிக்கொடுமையாலோ, நோய்நொடியாலோ வருந்துவோராகத் தோன்றவில்லை. படைவீரர்களில் பலரும் முதன் முறையாகத் தமிழகத்தின் மேற்பகுதியைக் காண்பவர்கள் ஆதலால், அங்குக் கண்ட காட்சிகள் அவர்களுடைய பயணக் களைப்பை அகற்றி, புத்துணர்ச்சி அளிப்பவையாக இருந்தன. காவிரி, வைகை, பொருணை போன்ற பேராறுகள் மேற்குப் பகுதியில் நீர்வளம் பெருக்கவில்லை. ஆனால் இடையிடேயே மலைகளிலிருந்து உருவாகி, நீர் கொண்டு வரும் சிற்றாறுகள் நிலத்தைச் செழிப்பாக்கின.

மதுரையில் தீட்டிய திட்டத்தின்படியே கரவந்தபுரத்தில் நிலைப்படையும், சேனாதிபதியின் தலைமையில் மதுரையிலிருந்து புறப்பட்ட படையும், பாண்டியன் நெடுஞ்சடையன் நடத்திவந்த

ஆயிரம் வீரர்கள் அடங்கிய குதிரைப் படையும், ஒவ்வொன்றாகக் குறிப்பிட்ட கால அளவில் வந்துசேர்ந்தன. நெய்யாறு என்னும் சிற்றாறு விழிஞத்திலிருந்து பன்னிருகல் தொலைவில் கடலில் கலந்து தன் பயணத்தை முடித்துக்கொள்ளும். அதன் கரையில் இருந்த நெய்யாற்றின் கரை என்ற பெயருள்ள ஊரில் பாசறை அமைத்துத்தங்கியது பதினாயிரம் வீரர்களைக் கொண்ட பாண்டியர் படை.

20. களம் அமைத்தல்

ஒரு நாட்டின் மீது படையெடுத்துச் செல்லும் முன், அந்நாட்டில் நிலவும் அரசியல், பொருளாதார நிலைமைகளையும், நாட்டுமக்களின் மனப்பான்மையையும் நன்கறிதல் இன்றியமையாத அரசியல் முறைஆகும். களத்தில் அரசியல் போர்புரிந்து வெற்றிபெறச் செய்யும் பொறுப்பு போர்வீரர்களைச் சார்ந்தது. ஆயினும், அவர்களுக்குத் தேவையான பல முன்னறிவையும் கொடுப்பது ஒற்றர்படையின் பணியாகும். வேணாட்டின்மீது படையெடுக்க வேண்டும் என்ற முடிவை எடுத்தவுடனேயே அதற்குத் தேவையான படை திரட்டும் பணியைச் சேனாதிபதிக்கும், பொருள் திரட்டும் பணியை அமைச்சருக்கும், முன்னேற்பாடுகள் செய்யும் பணியைச் சாத்தஞ்சாத்தனுக்கும் அளித்தான் பாண்டியன் நெடுஞ்சடையன். ஒற்றர் படைத் தலைவன் இளந்தத்தன் வேறொரு முக்கிய வேலையாக மாறுவேடம் பூண்டு பணியாற்றிக் கொண்டிருந்தமையால், படையெடுப்பிற்கு முன்பு கிடைக்கவேண்டிய தகவல்களைத் திரட்டுவதற்காக ஒற்றர் படை அமைக்கும் பொறுப்பு சாத்தஞ் சாத்தனுக்கு வந்தது. இயல்பாகவே மதிநுட்பம் மிக்க சாத்தன் அரசு என்னும் சிக்கல்கள் பலகொண்ட பெரிய இயந்திரத்தின் பல கூறுகளையும் நன்கு ஆராய்ந்து அறிந்ததாலும், இளமைப் பருவம் முதலே அண்ணனாகிய சேனாதிபதியோடும், தோழனாகிய அரசனோடும் உறவாடி வளர்ந்ததாலும் ஒற்றாடல் என்னும் முக்கியக் கலையையும் நன்கு கற்றிருந்தான். மேலும் இளந்தத்தனிடம் கலந்துபேசிப் பல்வேறு திட்டங்களை வகுத்த அனுபவமும் அவனுக்குக் கைகொடுத்தது.

பாண்டிய வேந்தன் வேணாட்டிற்கு விடுத்த வணிகக் குழுவின் உறுப்பினனாக விழிஞத்திற்குச் சென்ற பொழுது, இளந்தத்தனின் உதவியாளர்களில் ஒருவனான சங்கரனையும் சாத்தன் அழைத்துச் சென்றான். பாண்டிய நாட்டிலும், நாஞ்சில் நாட்டிலும் வேணாட்டிலும் தமிழ்மொழியே வழங்கினாலும் பேச்சு முறைகளும் சொல்லாட்சிகளும் மாற்றம் உள்ளவையாக இருந்தன. வேணாட்டிற்குப் பாண்டியநாட்டிலிருந்து செல்லும் ஒருவன் வாய்திறந்து பேசத் தொடங்கும் பொழுதே அவன் அவ்வூரைச் சேர்ந்தவன் அல்ல, வெளியிலிருந்து வந்தவன்

என்பது புலப்படும். சங்கரன் பல ஆண்டுகள் நாஞ்சில் நாட்டிலும் வேணாட்டிலும் வாழ்ந்தவன். ஆதலால் அவனால் உள்ளூர்க் காரனாகவே பேசமுடியும். அதை மனத்தில் கொண்டுதான் விழிஞத்தில் பணியாற்றுவதற்குச் சங்கரனைத் தேர்ந்தெடுத்தான் சாத்தன்.

விழிஞம் நகரில் துறைமுகத்திற்கு அருகில் உள்ள அங்காடியில் சங்கரனும், அவனுடைய உறவினனான சிவராமனும் ஒரு கடை திறந்தனர் பாண்டிநாட்டிலிருந்து கொண்டுவந்த உழுந்து, பருப்பு மிளகாய், கருப்பட்டி, வெல்லம், அரிசி போன்ற பொருள்களை விற்பதும், வேணாட்டில் விலை குறைவாகக் கிடைக்கும் மிளகு, மஞ்சள், இஞ்சி, பட்டை, ஏலம் போன்ற மலைச்சரக்குகளை வாங்கிப் பாண்டிய நாட்டிற்கு அனுப்புவதுமாகிய வணிகத்தொழிலை மேற்கொண்டனர். தேவைப்படும்பொழுது மதுரை நகருக்கும், வேறு பல இடங்களுக்குச் செல்வதற்கும் இவ்வணிகத் தொழில் வாய்ப்பளித்தது. மேலும் கடை இயங்கும் இடம் அரசு அலுவலர்களும், வணிகர்களும், துறைமுகத் தொழிலாளர்களும் வந்து போகும் இடமாகையால் பலரோடும் பேசி நாட்டு நடப்பை அறிந்துகொள்ளும் வசதியும் இருந்தது.

பாண்டியப் படை நெய்யாற்றின் கரையில் பாசறை அமைத்த மறுநாள் காலை ஒரு இளம் வணிகன் சங்கரனின் கடைக்குள் நுழைந்தான். அவன் அணிந்திருந்த உடையும், கழுத்திலும், கையிலும், விரல்களிலும் ஒளிவீசிய அணிகலன்களும் அவன் ஓர் உயர்தர வணிகன் என்பதைப் பறை சாற்றின. அவனைக் கண்டதும் சங்கரன் எழுந்து வணங்கி, வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றான். முன் பக்கத்தில் கடையும், பின் பக்கத்தில் வீடுமாக அமைந்திருந்த அந்தக் கட்டிடத்தில், வீட்டிற்குள்ளேயே கொண்டு சென்று, ஓர் இருக்கையில் அமரச் செய்து, சங்கரன் நின்றுகொண்டே பேசினான்.

"தளபதியாரே! நான் இன்று மாலை நெய்யாற்றின் கரைக்கு வர எண்ணியிருந்தேன். தாங்கள் இன்று வந்து சேர்வதாக அல்லவா சொல்லியிருந்தீர்கள்? நேற்று வேணாட்டு வேந்தனின் அரண்மனையிலிருந்து கிடைத்த தகவலின் படியும் இவ்வளவு விரைவில் வருவீர்கள் என்று நான் நினைக்கவில்லை" என்று சற்றுப் பதற்றத்தோடு பேசினான் சங்கரன்.

வணிகனாக உருமாறி வந்த சாத்தஞ்சாத்தன் "நீ நினைத்ததில் தவறில்லை. நாஞ்சில் நாட்டிற்குள் நுழைந்தபின் மிக வேகமாக

முன்னேற முடிந்தது. மூன்று நான்கு அணிகளாக வருவதால் ஏதேனும் ஓர் அணி தாமதித்தாலும் படையின் முன்னேற்றம் தடுமாறுமே என்பதால்தான் ஒரு நாள் கூடுதலாக முதலில் திட்டமிட்டோம். ஆனால் எல்லா அணிகளுமே, சற்றும் இடையூறு இல்லாமல் முன்னேறியதால் ஒரு நாள் முன்னதாகவே வந்துசேர்ந்தோம். ஆய் வேளுக்குக் கிடைக்கும் இடைப்பொழுதும் குறையுமே என்று எண்ணினோம். நெய்யாற்றின் கரையில் ஆற்றின்மேல் பாலத்தைக் கடந்து பாசறை அமைத்துள்ளோம். நீ வரும் வரை காத்திராமல் நானே உன்னை வந்து கண்டால் இங்குள்ள நிலைமையை விரைவில் அறிந்து கொள்ளலாமே என்று எண்ணித்தான் வந்தேன்" என்று தன் வரவின் காரணத்தை விளக்கினான்.

"தாங்கள் இந்த நேரத்தில் இங்கு வருவது ஆபத்து என்பதால்தான் கேட்டேன். நான் எங்கு வேண்டுமானாலும் போகலாம்! யாரும் ஐயம் கொள்ளமாட்டார்கள். ஆனால் பகைவன் படை வந்துகொண்டிருக்கிறது என்ற செய்தி பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் வேளையில் தங்கள் மீது ஐயம் கொண்டு என்னவாவது செய்துவிட்டால்? அதனால்தான் நான் பதறிப் போனேன்." என்றான் சங்கரன்.

"என்னைக் கண்டாலும் ஒரு வணிகன் என்று தானே நினைப்பார்கள். நான் சில மாணிக்கக் கற்களையும், பவளங்களையும், இரத்தினங்களையும் என் பையில் வைத்திருக்கிறேன். என்னைக் கண்டாலும் நான் அத்தகைய பொருள்களை விற்பவன் என்றுதானே தோன்றும். அது போகட்டும் இங்கு என்ன நடக்கிறது? பாண்டியர் படையெடுப்பை எதிர்ப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளார்கள்? இங்குள்ள படைபலம் இப்பொழுது எவ்வளவு? உனக்குத் தெரிந்த தகவல்களைச் சொல்" என்று பணித்தான் சாத்தன்.

"ஒன்று மட்டும் உறுதியாகத் தெரிகிறது. மதுரையில் வேணாட்டு ஒற்றர்கள் யாரும் இல்லை. ஏனென்றால் மதுரையிலிருந்து ஒரு படை புறப்பட்டிருக்கிறது என்ற செய்திகூட விழிஞத்தில் யாருக்கும் தெரியவில்லை. மூன்று நாள்களுக்குமுன் பாண்டிய நாட்டிலிருந்து ஒரு படை நாஞ்சில் நாட்டிற்குள் புகுந்துள்ளது என்றும் ஆனால் யானைகள் இல்லை ஒரு சில குதிரைகளும், பல சகடங்களும் உள்ளன என்றும் தகவல் கிடைத்ததாம். அதை ஒரு படையெடுப்பாக வேணாட்டு மன்னரோ அமைச்சரோ கருதவில்லை. பாண்டிய நாட்டில் பஞ்சம் வருத்துவதால்,

உணவுப்பொருள்களை மிரட்டிப் பறித்துச் செல்வதற்காகச் செய்த முயற்சியாக இருக்கும் என்று எண்ணினார்களாம். அடுத்த நாள் மேலும் மூவாயிரம் வீரர்கள் நூற்றுக்கு மேற்பட்ட யானைகளுடன் புகுந்ததாகத் தகவல் வந்தபோதுதான் இது ஒரு படையெடுப்பு என்ற அச்சம் ஏற்பட்டது. நேற்று வந்த தகவலின்படி இன்னும் அதிகமான படைவீரர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி உறுதியானது. அரண்மனைக்காவலும் துறைமுகக் காவலும் பலமாக அமைக்கப்பட்டன. இரண்டாயிரம் வீரர்கள் மட்டுமே இங்கே இருக்கிறார்கள். ஆகவே சேரமன்னனிடம் படையுதவிகேட்டு மகோதயபுரத்திற்குத் தூதனை அனுப்பியுள்ளனர். விழிஞத்தின் துறைமுகத்தையும் அதைச் சார்ந்த பகுதிகளையும் பாதுகாப்பதற்காகக் கடற்படையையும் முடுக்கிவிட்டுள்ளனர். வேணாட்டு மன்னனின் கடற்படை மிக்க வலிமை உடையது. கோட்டைவாயில்அடைக்கப்பட்டுப்பகைவரின்தாக்குதலுக்குள்ளானாலும், கடலிலிருந்து கோட்டைக்குள் செல்லவும், கோட்டையிலிருந்து வெளியேறவும் தேவையான ஏற்பாடுகளை இந்தக் கடற்படை செய்யும். இதற்குமுன் நடந்த படையெடுப்புகளில் ஆய்வேள் பகைவர்களிடம் எதிர்த்து நிற்பதற்கும், இறுதியில் வெற்றி பெறுவதற்கும் இந்தக் கடற்படையே முக்கிய காரணமாகும்" என்று தான் தெரிந்து வைத்திருந்த செய்திகளை விளக்கியுரைத்தான் சங்கரன்.

"நம் படை நெய்யாற்றின் கரையை அடைந்த செய்தி இதுவரை இங்கே எட்ட வில்லையா?"

"நேற்று இரவு தொடங்கும்வரை அந்தச் செய்தி எட்டவில்லை. நீங்கள் நேற்று பொழுது சாயும் நேரத்தில்தானே வந்து சேர்ந்தீர்கள், பெரும்பாலும் நேற்று இரவிலோ, அல்லது இன்று விடியற்காலையிலோ தகவல் கிடைத்திருக்கலாம். இன்னும் துறைமுகம் வரை எட்டவில்லை. துறை முகத்தில் என்னுடைய ஆள் இருக்கிறான். எனக்கு உடனே தகவல் வரும்" என்று நம்பிக்கையுடன் பேசினான் சங்கரன் அதே நேரத்தில் கடைக்குள் ஒருவன் நுழைந்ததை உள்ளறையிலிருந்து கண்ட சங்கரன் அதோ, அவன்தான் அந்த ஆள்! செய்தி கொண்டு வந்திருக்கிறான் என்று தோன்றுகிறது. இங்கேயே இருங்கள். நான் அவனிடம் பேசிவிட்டு வருகிறேன்" என்று சொல்லி விரைந்து கடைக்குச் சென்றான் சங்கரன்.

சற்றுநேரத்தில் திரும்பிவந்து பரபரப்புடன் பேசினான். 'தளபதி! நாம் நினைத்தது சரியே! பாண்டியர் படை நெய்யாற்றின்

கரையை அடைந்துவிட்டது என்ற தகவல் வந்துவிட்டது. துறை முகக்காவலர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர். விழிஞம் நகருக்கு வெளியில் போயிருக்கும் படைத் தலைவர்களும் வீரர்களும் உடனே திரும்பிவரவேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ளார் சேனாதிபதி. அது போலவே நகருக்கு வெளியில் உள்ள யானைப்படை உடனேயே கோட்டைக்குள் வரவேண்டும் என்றும், கோட்டை வாயில்கள் இன்று மாலையில் அடைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. நான் கடற்படையைப் பற்றிக் குறிப்பிட்டதுபோலவே ஆய்வேளின் யானைப்படையும் மிகவும் வலிமையானது! உண்மையில் வேணாட்டின் படைபலம் என்பது இயற்கை அரணாக அமைந்த கடலைக் காக்கும் கடற்படையும், மலைவளத்தின் இடையில் வளர்ந்த களிறுகளால் நிறைந்த யானைப் படையும்தான். அதை மனத்தில் கொண்டுதான் நாம் போர்த் திட்டமும் அமைக்கவேண்டும் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது" என்று தன் கருத்தையும் வெளியிட்டான் சங்கரன்.

சங்கரன் தனக்கு கிடைத்த செய்திகளை அறிவித்து விட்டுத் திருப்தி அடைபவன் அல்ல. ஆழ்ந்து சிந்திக்கும் ஆற்றலும் உடையவன் என்பதை உணர்ந்த சாத்தன் அவனைப் பாராட்டினான். "நீ சொல்வது முற்றிலும் சரி! அதை முன்னரே உணர்ந்துதான் நாம் திட்டமிட்டோம். நமது கடற்படையும் தக்க நேரத்தில் இங்கே வந்துசேரும். ஆய்வேளின் கடற்படையும், யானைப்படையும் இந்த முறை அதிர்ச்சியடையப் போகின்றன. அதற்குத் தேவையான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோம்" என்று தன்னம்பிக்கை ஒலிக்கப் பேசினான்.

"தளபதியாரே! தாங்கள் இனி இங்கே இருப்பது நல்லதல்ல என்று நினைக்கிறேன். நானும் தங்களுடன் வந்து நகர எல்லைக்கு அப்பால் விட்டுவிட்டு வருகிறேன்" என்று எழுந்தான் சங்கரன்.

"வேண்டாம் சங்கரா! நாம் இருவரும்செல்வதுதான் சந்தேகம் தோன்றக் கூடியது. நான் வந்தது போலவே தனியாகக் குதிரையில் ஏறிச்சென்றால்! யாரும் ஐயப்பட மாட்டார்கள். நான் புறப்படுகிறேன்' என்று எழுந்த சாத்தன் மேலும் தொடர்ந்து கூறினான். "கோட்டை வாயில் இன்று மாலை அடைக்கப்பட்டால் நாம் சந்திப்பது கடினம். நீ கோட்டைக்கு வெளியில் வர முயற்சி செய்ய வேண்டாம். நானே வசதிப்படும் பொழுது உன்னை வந்து காண்பேன். நீ உன் கண்களையும், செவிகளையும் திறந்து வைத்துக்கொண்டு விழிப்புடன் இரு. நாம் சந்திக்கும் பொழுது அல்லது நான் அனுப்பும் தூதன் உன்னை

வந்து காணும் பொழுது எல்லாவிதத் தகவல்களையும் கூற வேண்டும். நான் என் தூதனை அனுப்பினால் அவன் உன்னைக் காணும்பொழுது 'இந்தக் கடலில் மீன்கள் நிறைய உள்ளன'. என்று சொல்வான். அந்த அடையாளச் சொல்லைச் சொன்னால்தான் நீ அவனிடம் பேச வேண்டும் நீ எனக்குக் கடல்மீன் பிடிக்காது" என்று பதில் சொல்லவேண்டும். அது தான் உன்னை அறிமுகப் படுத்தும் அடையாளச் சொல்" என்று அறிவுறுத்திவிட்டுத் தன் குதிரையில் ஏறிச் சென்றான் இரத்தின வணிகனாகத் தோன்றிய சாத்தஞ் சாத்தன்.

விழிஞம் நகரின் கோட்டைவாயிலில் சாத்தன் உள்ளே நுழைந்தபொழுது இரு வீரர்கள் நின்று கொண்டிருந்தாலும், அவனுடைய குதிரையை நிறுத்தவோ அவனிடம் கேள்வி எதுவும் கேட்கவோ இல்லை. ஆனால் இப்பொழுது நான்கு வீரர்கள் வேலேந்திக்கொண்டு கோட்டை வாயிலில் நிற்பதையும் உள்ளே வருவோரை நிறுத்தி விசாரிப்பதையும் அவன் கண்டான். ஆயினும் வெளியில் செல்லும் சாத்தனை அவர்கள் தடுத்து நிறுத்தவில்லை. கோட்டை வாயிலை அடைப்பதற்கு முன்னரே காவல் பலப்படுத்தும் வேலை தொடங்கிவிட்டது என்பதை உணர்ந்தான்.

நெய்யாற்றின் கரையிலிருந்து விழிஞத்திற்குச் செல்லும் பெருஞ்சாலை வழியாகக் கோட்டைக்குள் நுழைந்த சாத்தன் திரும்பிப் போகும்பொழுது அதே வழியில் போகவில்லை. கடற்கரையை ஒட்டியே செல்லும் குறுகிய சாலை வழியாகப் பயணம் செய்தான். ஓரிரு நாழிகை தூரம் கடந்து சென்றதும் குதிரையைக் கடலோரம் திருப்பினான். கடற்கரையில் குதிரையை நிறுத்திச் சற்று நேரம் கடலுக்குள் உற்று நோக்கினான். பின்னர் தொடர்ந்து பயணம் செய்தான். இவ்வாறு பல முறை செய்தும் அவன் எதிர்பார்த்த எதுவும் கடலில் காணப்படவில்லை என்பது அவன் முகத்தோற்றத்திலிருந்து தெரிய வந்தது. நெய்யாறு கடலில் கலக்கும் இடத்திலும் அவ்வாறு சற்றுநேரம் உற்றுநோக்கி விட்டு சற்றே ஏமாற்றத்துடன் திரும்பி, கிழக்கு நோக்கிப் பயணம் செய்து, பொழுது சாயும்முன் நெய்யாற்றின் கரையில் அமைக்கப்பட்ட பாண்டியன் பாசறையை அடைந்தான்.

சாத்தனின் வருகைக்காகவே காத்திருந்த சேனாதிபதி உடனே மன்னருக்கு செய்தி அறிவித்துவிட்டுப் படைத்தலைவர்களின் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார். கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய பாண்டியன் நெடுஞ்சடையன் "சாத்தா! நீ விழிஞத்திற்குச்

சென்று அறிந்து வந்த தகவல்களைச் சொல். அதற்கேற்ப நாம் போர்த் திட்டத்தை வகுக்கவேண்டும்" என்று கூறித் தொடங்கிவைத்தான். சாத்தன் அவ்வாறே விரிவாகப் பேசினான்.

"நாம் வேணாட்டின்மீது படையெடுப்போம் என்று ஆய்வேள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. நான் நடத்தி வந்த முதல் அணி நாஞ்சில் நாட்டிற்குள் நுழைந்தபொழுதுகூட, நமது வணிகக்குழுவின் கோரிக்கையை ஆய்வேள் மறுத்ததால், வேணாட்டிலிருந்து வன்முறையாக உணவுப்பொருள்களைக் கொண்டு செல்வதற்காகச் செய்த செயல் என்றுதான் கருதினார்களாம். நாம் யானைப்படையை அதன்பின் உள்ளே புகுத்தியபின்தான் இது ஒரு படையெடுப்பு என்பதைப் புரிந்து கொண்டார்கள். நம் படையின் முழு பலமும், நாம் நெய்யாற்றின் கரைக்கு வந்துசேர்ந்த செய்தியும் இன்று காலையில்தான் கருநந்தனுக்கு எட்டியுள்ளது. அவர்களுடைய படையில் முக்கியமான இரு உறுப்புக்களாகிய கடற்படையும், யானைப் படையும் இப்பொழுது போருக்கு ஆயத்தமாக்கும் பணி தொடங்கியிருக்கிறது. இன்று மாலையில் கோட்டை வாயில் அடைக்கப்படும். கோட்டைக்கு வெளியில் சென்ற படைத் தலைவர்களும். போர்க் களிறுகளும் அதற்குள் கோட்டைக்குத் திரும்பிவிட வேண்டும் என்று ஆய்வேள் ஆணையிட்டுள்ளார். இன்று முற்பகலிலிருந்தே கோட்டைவாயிலில் காவல் பலமாகி, வீரர்கள் உள்ளே வருவோரை நிறுத்தி விசாரிக்கத் தொடங்கி விட்டனர்."

"கோட்டை வாயிலும், மதிலும் எப்படி இருக்கின்றன? நம் யானைப் படையின் தாக்குதலைத் தாங்கும் வலிமை உள்ளவையாக உனக்குத் தோன்றுகின்றனவா?" சேனாதிபதி சாத்தன் கணபதி வினவினார்.

"கோட்டை மதில் வலிமையாகத்தான் தோன்றுகிறது. அகழியும் ஆழமும் அகலமும் உள்ளது என்று நினைக்கிறேன். ஆனால் மூன்று பக்கங்களில்தான் கோட்டை மதில் முற்றுப்பெற்று நிற்கிறது. மேற்குப் பகுதி கடலோடு கலந்தது போல் பல இடங்களில் மதில் இல்லாமலே இருக்கிறது. மரக்கலன்கள் நிறுத்தப்பட்டுள்ளன. நான் நான்கு கலன்களைப் பார்க்க முடிந்தது. ஒவ்வொன்றிலும் நூறு வீரர்கள் இருக்கலாம் என்று நினைக்கிறேன். இன்னும் ஐந்தோ ஆறோ மரக்கலங்கள் ஆழ்கடலில் உள்ளன என்றும் அவை ஆய்வேளின் ஆணையை அறிந்தவுடன் கரையைநெருங்கும் என்றும் தெரிகிறது. கோட்டை

வாயில் கணைய மரத்தினால் ஆனது. வலிமையானதானாலும் ஒரு நாள் தாக்குதலிலேயே தகர்ந்துவிடும் என்று நம்புகிறேன்."

"ஆய்வேளின் படைபலம் எவ்வளவு இருக்கும்?" தளபதி சங்கரன் சீதரன் கேட்டான்.

"எனக்குக் கிடைத்த தகவலின்படி இரண்டாயிரம் வீரர்கள் விழிஞம் நகரிலும், ஆயிரம் வீரர்கள்வரை கடற்படையிலும் இருக்கலாம். சேர மன்னனிடம் படையுதவி கோரி ஆய்வேள் தூதனுப்பியுள்ளார். சேர மன்னன் அனுப்புவானா என்று தெரியவில்லை. அப்படியே அனுப்பினாலும் ஒரு வாரத்திற்குள் மகோதய புரத்திலிருந்துபடைவந்து சேருவது கடினம்."

"கொற்கையிலிருந்து நமது கடற்படை புறப்பட்டுவிட்டது என்று தருமனிடமிருந்து தகவல் வந்ததல்லவா? நம் கடற்படை இன்னும் வந்து சேரவில்லையா?" பாண்டியன் நெடுஞ்சடையன் வினவினார்.

"இன்னும் கடற்படை கண்ணுக்குத் தெரியும் தொலைவில் இல்லை அரசே! நான் நெய்யாறு கடலில் கலக்கும் இடத்திலிருந்து பார்த்து விட்டுத்தான் வருகிறேன். இரண்டு வீரர்களைக் கடற்கரைக்கு அனுப்பியுள்ளேன். நம் மரக்கலன்கள் கண்ணுக்குத் தெரிந்தவுடன் அவர்கள் வந்து செய்தி சொல்வார்கள்" என்று அறிவித்தான் சாத்தன்.

"சேனாதிபதி! இன்று ஒருநாள் முழுவதும் நம் வீரர்கள் எல்லோரும் ஓய்வெடுத்தார்கள். நாளைக் காலையில் நாம் விழிஞத்தை நோக்கிப் புறப்படலாம் அல்லவா? எதற்காக ஆய்வேளுக்குத் தேவையில்லாமல் நாமாக அவகாசம் கொடுக்கவேண்டும்?" என்று சேனாதிபதியின் கருத்தை ஆராய்ந்தான் பாண்டிய வேந்தன்.

"நாளைக் காலையிலேயே புறப்படலாம். விழிஞத்தைக் கீழ்ப்படுத்த நமக்கு இவ்வளவு பெரியபடை தேவை இல்லை. ஆகவே நமது படையின் ஒரு பகுதியை விழிஞத்தின் வடக்கு வாயிலுக்குச் சென்று ஒருவேளை சேரன் படை வருமானால் அதனை எதிர்த்துப் போரிடுவதற்கு ஆயத்தமாக நிறுத்தலாம் என்று நினைக்கிறேன். மாறன் எயினன் தலைமையில் மூவாயிரம் வீரர்களும் நூறு குதிரைவீரர்களும் அங்கே போகட்டும். நாம் தெற்கிலும் கிழக்கிலும் தாக்குதல் நடத்துவோம்." என்று யோசனை கூறினார் சேனாதிபதி.

பாண்டியன் நெடுஞ்சடையன் சேனாதிபதியின் கருத்தை ஏற்றுக்கொண்டு அவ்வாறே ஆணையிட்டான். மாறன் எயினன் தலைமையிலான படை கிழக்கு நோக்கிப் புறப்பட்டது. விழிஞத்திற்குள் நுழையாமல், சுற்றிச் சென்று, வடதிசையிலிருந்து சேரன் படை வருமானால் அதைத் தடுப்பதற்காகக் காத்திருப்பதே அதன் நோக்கம்.

விழிஞத்தின் மீது தாக்குதலுக்காகப் பாண்டியர் தலைமையில் படை புறப்படும் நேரத்தில் சாத்தன் அனுப்பியிருந்த வீரர்களில் ஒருவன் வந்து கடற்படையின் வரவை அறிவித்தான்.

21. கடற்படைக் காப்பு

"அரசே! நான் கொற்கையில் தருமனைச் சந்தித்த பொழுது, விழிஞம் துறைமுகத்திலிருந்து சற்று தூரத்திலேயே நம்முடைய கடற்படை நிலைகொள்ள வேண்டும் என்றும், அதற்குமேல் எப்படிச் செயலாற்ற வேண்டும், என்பதை அங்கு வந்து அறிவிப்பதாகவும் சொல்லியிருந்தேன். நான் கடற்கரைக்குச் சென்று ஒரு குன்றின்மேல் ஏறி நின்று ஒரு வெள்ளை நிறத் துணியை வீசிச் சைகை காட்டுவேன் என்றும் சொல்லியிருக்கிறேன். ஆகவே நான் அந்த வேலையைச் செய்து முடித்தபின் தங்களுடன் வந்து சேர்ந்துகொள்கிறேன். தருமனிடம் இப்பொழுது நான் சொல்ல வேண்டியது என்ன என்று தாங்களே முடிவு செய்தால் நல்லது" என்று வேண்டினான் சாத்தன். பாண்டியர் படை நெய்யாற்றின் கரையிலிருந்து, விழிஞத்தை நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருந்தது.

"ஆய்வேளின் கடற்படையை வலியிழக்கச் செய்வதே நம் நோக்கம். ஆகவே அந்தக் கடற்படை எவ்வாறு இந்தப் போரில் பங்குகொள்கிறது என்பதை நன்றாக அறிந்தபின்தான் நமது கடற்படை என்ன செய்யவேண்டும் என்பதை நாம் முடிவு செய்யவேண்டும். நீ ஒன்று செய்யலாம். தருமனுடைய உதவியாளன் ஒருவனை உன்னோடு அழைத்துக் கொண்டுவா தருமன் தன் கடற்படையுடன் மரக்கலத்திலேயே இருக்கட்டும். போரின் போக்கையும், ஆய்வேளின் கடற்படையின் பங்கையும் அறிந்தபின் நாம் தருமனுக்குக் கட்டளை அனுப்புவோம் அதன்படி அவன் செய்தால் போதும்" என்று சாத்தனை அனுப்பி வைத்தான் நெடுஞ்சடையன்.

நெய்யாறு கடலில் கலக்கும் இடத்தின் அருகிலேயே ஒரு குன்று இருப்பதை முன்னரே கண்டு வைத்திருந்த சாத்தன் மறுபடியும் ஆற்றங்கரை வழியாகவே தன் குதிரையைச் செலுத்தினான். அந்தக் குன்றில் ஏறித் தான் கொண்டுவந்திருந்த ஒரு வெள்ளைக் கொடியைச் சற்று நேரம் மரக்கலங்கள் கடலில் நிற்கும் திசையில் வீசினான். அவன் கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தபொழுது அதேபோல ஒருகொடி ஒரு மரக்கலத்திலிருந்து வீசப்படுவதைக் கண்டான். அதைத் தொடர்ந்து ஒரு படகு அங்கிருந்து புறப்படுவதையும் அவன் நின்ற இடத்தை நோக்கி வருவதையும் கண்டான். படகு அருகில்

வர வர அதில் தருமனும், அவனுக்கு அடுத்த உதவியாளனான பொன்மணியும் வருவதைக் கண்டுகொள்ள முடிந்தது. மேலும் இரு வீரர்கள் படகோட்டிகளாக வந்தனர்.

கடற்படைத் தளபதி தருமன் முதலில் படகிலிருந்து இறங்கிவந்து சாத்தனை வணங்கினான் "சாத்தனாரே! எதிர்பாராமல் ஏற்பட்ட ஒரு கடல் கொந்தளிப்பு எங்களைச் சற்றே அல்லலுக்குள் ஆழ்த்தியது. அதனால்தான் தங்களிடம் கூறியபடி நேற்று வந்து சேரமுடியவில்லை. நீங்களும் படையும் குறித்த நேரத்திலேயே வந்துவிட்டீர்களா?" என்று வினவினான்.

"ஆமாம் உங்கள் படை எதிர்பார்த்ததைவிடத் தாமதமாக வந்தது. எங்கள் படையோ எதிர்பார்த்ததைவிட ஒரு நாள் முன்னதாகவே வந்து சேர்ந்தது. எங்களுக்கு இயற்கை உதவியாக இருந்தது. சற்று நேரத்திற்குமுன் தரைப்படை விழிஞத்தை முற்றுகையிடுவதற்காகப் புறப்பட்டுச்சென்றது. நான் உங்களைச் சந்தித்து மன்னரின் ஆணையை அறிவிப்பதற்காகவே இங்கு வந்தேன்" என்றான் சாத்தன்.

"சொல்லுங்கள்! எனக்கு மன்னரின் கட்டளை என்னவோ?"

"ஆய்வேள் தன் கடற்படையின் பலத்தில் மிக்க நம்பிக்கை வைத்திருக்கிறார். இந்தப் போரில் அந்தக் கடற்படையை எவ்வாறு பயன்படுத்தப் போகிறார் என்பது நமக்குத் தெரியாது. அதைத் தோற்கடிப்பதே நம் கடற்படையின் வேலை. ஆய்வேளின் நீக்கங்களை அறிந்த பின்னரே நாம் செயலாற்ற முடியும். ஆகவே நீங்கள் பொன்மணியை என்னுடன் அனுப்புங்கள். போரின் போக்கை அறிந்தவுடன் நம் கடற்படை எவ்வாறு போரில் செயல்பட வேண்டும் என்பதைப் பொன் மணியிடம் சொல்லி அனுப்புகிறோம். இதுதான் அரசரின் ஆணை" என்று அறிவித்தான் சாத்தன்.

"சரி! அப்படியானால் நான் மரக்கலத்திற்குச் சென்று காத்திருக்கிறேன். இந்தப் படகு இரு வீரர்களுடன் நாளை காலையிலிருந்து இங்கேயே இருக்கும். பொன் மணி எப்பொழுது வேண்டுமானாலும் வந்து என்னுடன் சேர்ந்து கொள்ளலாம்." என்று கூறி, அந்தப் படகில் ஏறித்திரும்பிச் சென்றான் தருமன்.

தன்னுடன் வேறொரு குதிரையைப் பிடித்துக் கொண்டு ஒரு குதிரை வீரன் வந்திருந்ததால் அந்தக் குதிரை மீது பொன் மணியை ஏற்றிக்கொண்டு, பாண்டியன் படையுடன் சேர்ந்து கொள்வதற்காக விழிஞம் நோக்கிப் புறப்பட்டான் சாத்தன்.

வேணாடு என்றும் ஆய் நாடு என்றும் வழங்கப்பட்ட நிலப்பரப்பு குமரிமுனையிலிருந்து கொல்லம்வரை பரவியிருந்தது. சங்ககாலத்தில் கடையேழு வள்ளல்களில் ஒருவன் என்று புகழ்பெற்ற ஆய் அண்டிரன் காலம் தொட்டே சேரநாட்டின் தென்பகுதியைத் தனி நாடாகவே ஆட்சிசெய்து வந்தனர் வேணாட்டு மன்னர்கள். தெற்குப் பக்கமும் மேற்குப் பக்கமும் கடலும், கிழக்குப் பக்கம் மலையும் இயற்கை அரணாக விளங்கியதால் வடக்குப் பக்கத்திலிருந்து வரக்கூடிய சேரர்களைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் ஆய் அரசர்களுக்கு இருந்தது. பாண்டியர்கள் சில நேரங்களில் வேணாட்டை அடிமைப்படுத்த எண்ணிப் போர்தொடுத்தாலும், வெகுதொலைவில் மலைக்கு அப்பால் உள்ள மதுரையிலிருந்து விழிஞத்தை அடக்கி ஆள்வது கடினமாகையால் திறைசெலுத்தும் சிற்றரசாக வேணாட்டை மாற்ற முடியவில்லை. இந்த வரலாற்றுப் பின்னணியில்தான் பாண்டியன் நெடுஞ்சடையன் விழிஞத்தை முற்றுகையிட்டான்.

வேணாட்டு மன்னன் கருநந்தன் தன் அரண்மனையில் அமைச்சர், சேனாதிபதி, படைத் தலைவர்கள், ஆகியோருடன் பாண்டியர் படையெடுப்பைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தான்.

"இத்தகைய ஒரு படையெடுப்பு, வரும் என்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை, பாண்டியநாடு மூன்று நான்கு ஆண்டுகளாக மழையில்லாமல் வறண்டு, வறுமையால் வாடிக் கிடக்கிறது என்று எண்ணினோம். கொங்கு நாட்டு மன்னன் அதியன் சில நாள்களுக்கு முன்புகூடச் செய்தி அனுப்பியிருந்தான். பாண்டியனின் தலைநகரில் நிகழும் எல்லாவற்றையும் அறிந்துகொள்ளும் வண்ணம் அவன் ஏற்பாடு செய்திருக்கிறான் என்று பெருமை அடித்துக் கொண்டான். இப்பொழுது படையெடுக்கும் எண்ணமோ வசதியோ பாண்டியனுக்கும் இல்லை என்று தெளிவாக எழுதியிருந்தான், முன்பொரு முறையும் மதுரையைத் தாக்குவதற்கு நல்ல தருணம் என்று அவன் தந்த தகவலின்படி நாம் படை நடத்திச் சென்று பாண்டியனிடம் தோல்வி அடைந்தோம். அவனுடைய தகவல்கள் நம்பத் தகுந்தவை அல்ல என்பது இப்பொழுது நன்றாக விளங்குகிறது" என்று சலிப்புடன் பேசினான் கருநந்தன்.

"அரசே! நாஞ்சில் நாட்டுப் பகுதியில் சில வீரர்கள் நுழைந்ததாகச் செய்தி வந்தபொழுதுகூட அதை ஒரு படையெடுப்பாக நாம் கருதவில்லை. பாண்டி நாட்டு மக்களின் பசியை அடக்குவதற்கு உணவுப்பொருள்களைக் கொள்ளையடிக்கும் கூட்டமாக இருக்கும் என்றுதான் கருதினோம். அப்படி ஓர்

எண்ணத்தை உருவாக்குவதற்காகவே பாண்டியன் தந்திரமாகச் சிறு சிறு அணிகளாகப் படையை நடத்தி வந்திருக்கிறான். பெரும் படையாக வந்திருந்தால் நமக்குச் செய்தி வந்த பின்னர் நான்கைந்து நாள் நேரம் கிடைத்திருக்கும். நமது படையைப் பலப்படுத்தவும், சேரநாட்டிலிருந்து படையுதவி வந்து சேரவும் அவகாசம் கிடைத்திருக்கும். இப்பொழுது நம் கைகளைக் கட்டி விட்டதுபோன்ற நிலைமை" என்று இக்கட்டான நிலைமையை எடுத்துக் காட்டினார் அமைச்சர்.

"இப்பொழுது நம் படை எப்படி இருக்கிறது? யானைகள், குதிரைகள், காலாள் எல்லாவற்றையும் கணக்கிட்டுப் பார்த்தீர்களா?" என்று சேனாதிபதியிடம் வினாவினான் வேந்தன்.

"நமது யானைப்படையில் உள்ள பெரும்பாலான யானைகளை மலைச்சாரலுக்கு அனுப்பிவிட்டோம். அங்கே சில இடங்களில் மரம்வெட்டும் வேலை நடப்பதால் பெருமரத் துண்டுகளைச் சுமக்கும் வேலைக்காக அனுப்பினோம். கோட்டை வாயிலை அடைப்பதற்குமுன் முடிந்த அளவு யானைகளை அருகில் உள்ள இடங்களிலிருந்து கொண்டுவந்தோம் ஆயினும் நாற்பது யானைகளே உள்ளன. இருநூறு குதிரை வீரர்கள் உள்ளனர். காலாள் வீரர்கள் மூவாயிரம் பேர் சேர்க்க முடிந்தது. ஐந்நூறுக்கு மேற்பட்ட வீரர்களை விழிஞத்துக்கு வெளியிலிருந்து கொண்டு வந்தோம். அரிவியூர் கோட்டையிலிருந்து ஐந்நூறு வீரர்களைக் கொண்டு வந்தோம். அப்படியும் மூவாயிரம் பேரைத்தான் திரட்ட முடிந்தது" என்று அறிவித்தார் சேனாதிபதி.

"நமது கடற்படை எப்படி இருக்கிறது?" கடற்படைத் தலைவனிடம் வினவினான் கருநந்தன்.

"நமது கடற்படையில் உள்ள பெரிய மரக்கலமும், ஐந்து சிறிய மரக்கலன்களும் இப்பொழுது துறைமுகத்தில் உள்ளன. இரு மரக்கலன்கள் பழுதுபட்டு இருப்பதால் கரையில் ஏற்றி அவற்றைச் சரிசெய்யும் வேலை நடந்துகொண்டிருக்கிறது. இரு மரக்கலன்கள் வழக்கமான கண்காணிப்பு வேலையாக ஆழ்கடலுக்குச் சென்றுள்ளன. பெரிய மரக்கலனில் இருநூறு வீரர்களும், சிறிய மரக்கலன்களில் நூறு வீரர்களும், வீதமாக மொத்தம் எழுநூறு வீரர்கள் உள்ளனர். தேவைப்படும் பொழுது கடற்கரைப் பகுதியிலிருந்து பாண்டியர் படையை வில்லாலும் வேலாலும் தாக்க நம்மால் முடியும்" என்று விடையளித்தான் கடற்படைத் தலைவன்.

"பாண்டியனிடம் ஒரு கடற்படை இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஒருவேளை அந்தக் கடற்படை வந்தால்?" கருநந்தன் எழுப்பிய வினா கடற்படைத் தலைவனுக்கு முக்கியமானதாகத் தோன்றவில்லை.

"பாண்டியனின் கடற்படையின் இருப்பிடம்கொற்கை. அங்கிருந்து ஒரு கடற்படை புறப்பட்டு இங்கே வருவதென்றால் இரண்டுமாதங்கள் ஆகும். மிகவும் சிறிய கடற்படைதான் அங்கு உள்ளது. நான்கோ ஐந்தோ மரக்கலன்களே உள்ளனவாம். இவ்வளவு தொலைவு பயணம் செய்து வந்தாலும் நமது கடற்படையுடன் மோதும் அளவிற்கு வலிமை இருக்காது. இதற்குமுன் பாண்டியர்கள் நம்மீது படையெடுத்த காலங்களிலும் கடற்படையுடன் வந்ததாக வரலாறு இல்லை" என்று ஓரளவு உறுதியுடன் பேசினான் அவன்.

சேனாதிபதி, வேணாட்டுப்படை, பாண்டியர் படையின் முற்றுகையை எதிர்த்துப் போராடுவதற்கு எவ்வாறு பிரித்துப் பரவப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துரைத்தார்.

"அரசே! பாண்டியர் படையில் பதினாயிரம் வீரர்களுக்குமேல் இருப்பார்கள் என்று தோன்றுகிறது. அதிலிருந்து ஓர் அணி விழிஞத்தைச் சுற்றி நடந்து, வடக்குத் திசையில் நான்கு நாழிகை தொலைவில் அணிவகுத்து நிற்கிறது. நாம் சேர மன்னனிடம் படையுதவி கோரியது தெரிந்தோ அல்லது அவ்வாறு செய்யக்கூடும் என்று ஊகித்தோ, வடக்கிலிருந்து படையுதவி வந்தால் அதைத் தடுத்து நிறுத்துவது நோக்கமாக இருக்கலாம் என்று நினைக்கிறேன். கிழக்கு வாயிலின் பக்கம் ஏறத்தாழ இருநூறு யானைகளுடன் ஓர் அணி நிறுத்தப் பட்டிருக்கிறது. இப்பொழுது செய்யப்பட்டுள்ள அணிவகுப்பை வைத்துப் பார்த்தால், தெற்கிலிருந்துதான் முழுத் தாக்குதல் வரும் என்று நினைக்கிறேன். ஐம்பது யானைகளாவது அங்கே நம் கோட்டை வாயிலுக்குமுன் நிறுத்தப்பட்டிருக்கின்றன. மேற்கில் ஒன்றுமே இல்லை. நம் கடற்படைக்கு அஞ்சி அந்தப் பகுதியை விட்டுவைத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் படைகள் அணிவகுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றன என்பதைத் தவிர இதுவரை கோட்டை வாயிலைத் தாக்கவோ, கோட்டை மதிலைக் கடக்கவோ முயற்சி ஒன்றும் செய்யவில்லை."

"நம்மை முற்றுகையிட்டு, நம் பொறுமையைச் சோதித்து, அச்சுறுத்தி, நம்மைப் பணியவைக்கலாம் என்று எண்ணுகிறான் நெடுஞ்சடையன்! ஆனால் படைபலம் குறைவாயினும் நம்மிடம்

மனபலம் நிறைய உள்ளது என்பதை நாம் காட்டுவோம். இதற்கு முன்பும் என் முன்னோர்கள் காலத்தில் பாண்டிய மன்னர்கள் படையெடுத்து வந்திருக்கிறார்கள. சில போர்களில் நாம் தோற்றோம். ஆயினும் நம்மை அடிப்படுத்த அவர்களால் முடியவில்லை. நமது இறையாண்மையையும் அரசியல் உரிமையையும் நாம் விட்டுக் கொடுக்க மாட்டோம். அஞ்சி ஓடவும் மாட்டோம். பாண்டியன் நம் கோட்டையைத் தாக்கட்டும். நாம் போராடித் தோற்போம். போர்க்களத்தில் மாய்வோம். ஆனால் எளிதில் அடிபணிய மாட்டோம். பகைவனுக்குப் பேரழிவை ஏற்படுத்துவோம். நம் நாட்டின் மீது ஒரு காரணமும் இன்றிப்படையெடுத்து வந்த பாண்டியனை முறியடித்து விரட்டுவோம் என்று நம் வீரர்களுக்கு ஊக்கமூட்டுங்கள். நானும் நேரில் வந்து வீரர்களிடம் பேசுகிறேன்" என்று தன் படைத் தலைவர்களை ஊக்குவித்தான் வேணாட்டுவேந்தன் கருநந்தன்.

கடற்படைத் தலைவன் தருமனின் உதவியாளன் பொன்மணியுடன் விழிஞத்திற்கு வந்து சேர்ந்த சாத்தன் அடுத்த நாள் காலையில் வணிகன் போல் மாறுவேடம் பூண்டு கடற் கரைக்குச் சென்றான். விழிஞத்தின்கோட்டை மதில் மற்ற இடங்களில் பாண்டியன் படையால் சூழப்பட்டிருந்தாலும், கடற்கரைப் ப்குதியில் வாழ்க்கை அதிகமாகக் குலையவில்லை பல கடைகள் திறந்திருந்தன. அரபி நாட்டிலிருந்து வந்த ஒரு கப்பலில் மிளகு, பட்டைபோன்ற மலைச் சரக்குகள் ஏற்றும் பணி நடந்துகொண்டிருந்தது. அந்தக் கப்பலில் வந்த வெளிநாட்டு மாலுமிகள் பல்வேறு பொருள்களை வாங்குவது பழக்கமாதலால், சங்கு, பவளம், முத்து போன்ற பொருள்கள் விற்கும் கடைகளில் ஓரளவு கூட்டமும் காணப்பட்டது.

சங்கரனின் கடை முழுவதும் திறக்கவில்லை. ஆயினும் அதன் ஒரு பகுதியைத் திறந்து வைத்துக்கொண்டு வெளியில் பார்த்துக்கொண்டு அமர்ந்திருந்தான் சிவராமன். சாத்தனை அடையாளம் கண்டுகொண்ட சிவராமன் அவனை வரவேற்று வீட்டிற்குள் அழைத்துச் சென்று அமரச் செய்தான். "சங்கரன் யாரையோ காணவேண்டும் என்று சொல்லி வெளியில் போயிருக்கிறான். விரைவில் வந்து விடுவான்" என்று அறிவித்தான்.

சாத்தன் அமர்ந்த இடத்திலிருந்து துறை முகத்தை ஒட்டியிருந்த அந்தப் பகுதியால், பகைவர் படையெடுப்பு நடந்து கொண்டிருக்கும் நேரத்திலும்கூட பல பொருள்களையும் விற்போரும் வாங்குவோரும் நடந்து திரிவதைக் கண்டு வியந்தான். கிரேக்கம்,

உரோமாபுரி போன்ற மேலை நாடுகளும், அரேபிய நாடுகளும் சேரநாட்டுடனும் வேணாட்டுடனும் வணிகத்தொடர்பு கொண்டிருப்பதே அந்நாடுகளின் செல்வச் செழிப்பிற்குக் காரணம் என்பது அவனுக்கு நன்கு விளங்கியது. மரக்கலன்கள் நிலப்பரப்பை நெருங்கி நிலைகொள்ளும் துறைமுகங்களாக விழிஞம், முசிறிபோன்ற மேலைக் கடற்கரைப் பட்டிணங்கள் விளங்கியதால் ஏற்றுமதியும் இறக்குமதியும் எளிதில் நடந்தன. இவ்விருநாடுகளிலும் நீர்வளமும், நிலவளமும் சிறந்து விளங்குவதற்கு மூல காரணம் ஆறு மாதங்களுக்குமேல் பொழியும் பருவ மழையே. மலைச்சாரல்களில் விளையும் மிளகு, ஏலம், பட்டை மஞ்சள் போன்ற பொருள்கள் வெளி நாட்டில் உள்ளவர்கள் மிகவும் விரும்பும் பொருள்கள் ஆதலால் வணிகம் நாள் தோறும் வளர்ந்து செல்வம் பெருகுகின்றது என்பதும் காணமுடிந்தது. வெளிநாட்டார் பெரும் அளவில் வருவதால் அவர்களுடன் பேசியும் அவர்களுடைய மொழிகளிலிருந்து பல சொற்களைக் கலந்தும், அங்குள்ள மக்கள் பேசும் தமிழ், பாண்டி நாட்டிலும் சோழ நாட்டிலும் வழங்கும் தமிழிலிருந்து ஓரளவு வேறுபட்டு நிற்பதையும் மொழியறிவு பெற்ற சாத்தனால் அறிய முடிந்தது. வடநாட்டிலிருந்தும் பல பொருள்களை வாங்குவதற்காக வருவோரிடம் கலந்து பழகுவதால் வடமொழிச் சொற்களும், பேச்சு முறைகளும், ஒலிவேற்றுமைகளும் தமிழ் மொழியில் கலந்து பேசப்படுவது தெரிந்தது. இந்தப் பலமொழிக்கலப்பு இவ்வாறு வளர்ந்து கொண்டேபோனால் இந்தப் பகுதியில் வழங்கும் தமிழ் ஒரு புதியமொழியாகக்கூட மாறலாமே என்று அஞ்சினான் சாத்தன். அவ்வாறு நடந்தால் மேற்குத் தொடர்ச்சி மலை தமிழ்பேசும் நல்லுலகை இருபகுதிகளாகப் பிரித்து, மலைக்கு மேற்குப் பகுதியில் புதியமொழி பிறக்க வழி வகுக்குமே என்ற அச்சமும் அவன் மனத்தில் தோன்றியது.

சாத்தன் இத்தகைய சிந்தனையில் ஆழ்ந்திருந்த நேரத்தில் வெளியில் போயிருந்த சங்கரன் திரும்பி வந்தான். சாத்தன் வரவைச் சற்றும் எதிர்பாராத அவன் சாத்தனைக் கண்டதும் பரபரப்புடன் அருகில் வந்தான். "தளபதி யாரே! தாங்கள் இந்த நேரத்தில் வருவீர்கள் என்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அரசு அலுவலர்களோ, துறைமுக அலுவலர்களோ தங்களைக் கண்டு ஏதேனும் ஐயம் கொண்டால் தங்கள் உயிருக்கே ஆபத்து. தங்களுக்கு அச்சமே இல்லையா!" என்று வியப்பும் அச்சமும் கலந்து வினவினான் அவன்.

சாத்தன் புன்னகை பூத்தான். "சங்கரா! நான் பாண்டியரின் படைத்தலைவன் என்பதை அறிந்துள்ளதால் உனக்கு என்னைப்பற்றி அச்சம் தோன்றுகிறது. ஆனால் என்னைக் காண்பவர்கள் யாரும்அவ்வாறு எண்ணமாட்டார்கள். யாரோ ஒரு வணிகன் இந்த நேரத்திலும் தன் தொழிலில் ஈடுபட்டி ருக்கிறான் என்றுதான் நினைப்பார்கள். நாம் மாறுவேடத்தில் ஒரு வேலைசெய்யும் பொழுது நம்மை யாரேனும் கண்டுபிடித்து விடுவார்களோ என்ற அச்சத்துடன் செயல்படக் கூடாது. அவ்வாறு அஞ்சினால் நாம் வேலையும் சரியாகச் செய்யமுடியாது, நம்முடைய நடமாட்டம் சந்தேகத்தையும் ஏற்படுத்தும். நீயும் இப்பொழுது ஒரு வணிகனாகத்தானே இயங்குகிறாய். அந்த எண்ணம்தான் உன் மனத்தில் ஓங்கி நிற்கவேண்டும். ஒற்றன் என்பது உனக்கு நீ தேர்ந்தெடுத்து உருவாக்கிய உன்னுடைய செய்தியாளர்களுக்கு மட்டுமே தெரியும்! இதை உன் நன்மைக்காகவும் உன் தொழில் துறைவளர்ச்சிக்காகவும்தான் சொன்னேன். மனத்தில் பதித்து வைத்துக்கொள். அது போகட்டும் நமக்குப் பயன்படும் தகவல் எதுவேனும் கிடைத்ததா?"

"அவ்வளவு முக்கியமான தகவல் எதுவும் உள்ளதாகத் தோன்றவில்லை. நேற்றுமாலை ஆய்வேள் மந்திராலோசனை நடத்தினார். கடற்படையைத்தான் பெரிதும் நம்பியிருக்கிறார்கள். மூவாயிரம் வீரர்கள்தான கோட்டைக்குள் இருக்கிறார்களாம். இங்கிருந்து பத்துக்கல் தொலைவில் உள்ள அரிவியூர் கோட்டையிலிருந்து ஐந்நூறு வீரர்களைக் கொண்டுவந்து விட்டார்களாம். பாண்டியரின் பெரும்படையைத் தோற்கடிப்பது இயலாத செயல் ஆயினும் போராடி நிற்பது என்று முடிவு செய்திருக்கிறார்கள். எளிதில் சரணடைவதில்லை என்று துணிவாக நிற்கிறார்கள்" என்றான் சங்கரன்.

"அரிவிக்கரையில் கோட்டை இருப்பதாகச் சொன்னாயே, அது ஒரு முக்கியமான இடமா?" என்று வினவினான் சாத்தன்.

"அரிவிக்கரை ஒரு சிறிய இடம். அந்தக் கோட்டைக்குள் படைக்கலன்கள், உணவுப்பொருள்கள் போன்றவை சேர்த்து வைக்கப் படுகின்றன. சில அரசு அலுவலர்களும் ஒரு சிறிய படையும் அங்கே இருந்துகொண்டு அவற்றைக் கண்காணிப்பதும், காவல் புரிவதும் வழக்கம் படைவீரர்களுக்குப் பயிற்சியளிக்கும் களமும் அங்கே இருக்கிறது. ஐந்நூறு வீரர்களை அங்கிருந்து இழுத்துவிட்டதால் இப்பொழுது இருநூறு வீரர்களுக்குமேல் அங்கு இருக்கமாட்டார்கள்" என்றான் சங்கரன்.

"சரி நான் திரும்பவேண்டும். இனிமேல் நாம் இங்கே சந்திக்க வேண்டாம். நாளை மறுநாள் காலையில் கதிரவன் உதிக்கும்பொழுது நகர் எல்லையில் இருக்கும் காளிகோயிலுக்கு வா" என்று சொல்லி, துறைமுகச் சாலையை மேலும் நன்கு பார்வையிட்டு விட்டுத் தெற்குவாயிலை அடைந்தான் சாத்தன்.

22. ஒற்றனை ஒற்றிய உறவினன்.

பாண்டியன் நெடுஞ்சடையனும், அவனுடைய சேனாதிபதி சாத்தன் கணபதியும் தங்கள் குதிரைகளில் ஏறி விழிஞம் நகரின் கோட்டையை வலம் வந்தனர். ஆனால் ஆய்வேளின் கடற்படை காத்துநிற்கும் மேற்குப் பகுதிக்குச் செல்லவில்லை. மற்ற மூன்று பக்கங்களிலும் உள்ள கோட்டை மதிலையும், வாயில்களையும் அகழியையும் பார்வையிட்டு, பாண்டிய வீரர்கள் முற்றுகையிட்டு நிற்கும் அணிவகுப்பையும், கோட்டையின் தற்காப்பிற்காக ஆய்வேள்செய்துள்ளஏற்பாடுகளையும்நோக்கினர். அணிவகுப்பில் ஒரு சில இடங்களில் சில மாற்றங்களைச் செய்து அவர்கள் தங்களுடைய கூடாரங்களுக்குத் திரும்பும்பொழுது, சாத்தஞ் சாத்தன் அவர்களுடைய வரவிற்காகக் காத்திருந்தான். "என்ன சாத்தா! உன் மனத்தில் என்னவோ ஒரு யோசனை உருவாகியிருப்பதாகத் தெரிகிறதே, என்ன அது? சேனாதிபதி! நீங்களும் உள்ளே வாருங்கள் சாத்தனின் யோசனையைக் கேட்போம்." என்று இருவரையும் அழைத்துக்கொண்டு தன் கூடாரத்தில் நுழைந்தான் பாண்டிய மன்னன். சாத்தன் தனக்குக் கிடைத்த தகவல்களை விரிவாக எடுத்துரைத்தான். தொடர்ந்து அவனுக்குத் தோன்றிய ஒரு யோசனையையும் விளக்கினான்.

"நம்முடைய படைபலத்தையும் அச்சுறுத்தலையும் கண்டு அஞ்சாமல், நம்மோடு போர் புரிந்து, முடிந்த அளவு நம் படைக்குச் சேதம் விளைவித்து, அதற்குப் பின்தான் என்ன நடக்கும் என்று பார்க்க முடிவுசெய்திருக்கிறார் ஆய்வேள் என்பது தெளிவு. ஆகவே நாம் வெறும் மிரட்டல் செய்பவர்கள் அல்ல என்றும், கால வரையின்றி முற்றுகையிடப் போவதில்லை என்றும் அவருக்கு உணர்த்த வேண்டும். போர் புரிவது என்ற நிலை ஏற்பட்டால் ஈவுஇரக்கம் இன்றி நடப்போம். விழிஞம் நகரையும் கோட்டையையும் மண்மேடாக்குவோம் என்பதைத் தெரிவிக்க வேண்டும். அதற்கு ஒரு வழி பிறந்துள்ளது என்று எண்ணுகிறேன்"

"என்ன வழி?"

"அருவிக்கோட்டை இப்பொழுது காவல் இல்லாமல் இருக்கிறது என்றே சொல்லலாம். அங்கே தானியங்கள் நிறைந்த களஞ்சியமும், படைக்கலக் கொட்டிலும் உள்ளன. நாம் ஒரு சிறு படையையும் சில யானைகளையும் அனுப்பினால் அங்குள்ள வீரர்களையும் மற்றவர்களையும் விரட்டிவிட்டு அங்குள்ள தானியங்களையும் படைக்கலன்களையும் கவர்ந்து, அந்தக் கோட்டையையும் அழித்துவிடலாம். அது முடிந்தவுடன் இதுதான் விழிஞத்திற்கும் நேரப்போகிறது என்று செய்தி அனுப்பிவிட்டு நம்முடையதாக்குதலைத்தொடங்கலாம். ஆய்வேள் நிலைமையைப் புரிந்துகொண்டு நம்மிடம் பேரம் பேச முன்வருவார்" என்றான் சாத்தன்.

"அது நல்ல யோசனைதான். நாம் இங்கே கோட்டை வாயிலையும், மதிலையும் தாக்கத் தொடங்கும் அதே நேரத்தில் நமது கடற்படையும் ஆய்வேளின் கடற்படையைத் தாக்கவேண்டும். கடற்படையைப் பெரிய காப்பாக நம்பியிருக்கும் ஆய்வேள், அந்த நம்பிக்கையையும் இழந்தால் தான் கீழே இறங்கி வருவார்" என்று தன் கருத்தை வெளியிட்டார் சேனாதிபதி. "சரி நாளை விடியற்காலையிலேயே அருவிக் கோட்டையைத் தாக்குவோம். அந்தக் கோட்டை அழிந்த செய்தி கருநந்தனுக்கு அன்றோ அடுத்த நாளோ எட்டும். வியாழன் அன்று விழிஞத்தில் தாக்குதல் தொடங்குவோம். சேனாதிபதி சொன்னதுபோல நம்கடற்படை அதே நேரத்தில் மேற்குப் பகுதியில் அவர்களுடைய கடற்படையைத் தாக்கவேண்டும். தருமனுக்கு உடனே சொல்லியனுப்பி விடுங்கள்" என்று மன்னன் ஆணையிட்டான்.

சாத்தன் பொன்மணியை அழைத்து அரசனின் ஆணையை அறிவித்தான் "வியாழக்கிழமை காலையில் கதிரவன் முளைத்து மூன்று நாழிகை நேரத்தில் நமது யானைகள் விழிஞும் கோட்டையின் தென் வாயிலைத் தாக்கும். அப்பொழுது நமது முரசுகள் முழங்கும், கொம்பு ஊதும் ஒலியும் எழும். அதே நேரத்தில் நமது கடற்படை மேற்கு வாயிலுக்குப் பக்கம் எவ்வளவு நெருங்கி வரமுடியுமோ அவ்வளவு நெருங்கி வந்து, ஆய்வேளின் கடற்படையைத் தாக்கவேண்டும். வேல் எறிவதும், அம்பு எய்வதும் கல்வீசுவதும் முறைப்படி நடக்கட்டும் தீப்பந்தங்களைச் செலுத்தும் பொழுது மட்டும் மிகவும் எச்சரிக்கையுடன் செயலாற்ற வேண்டும் என்று தருமனிடம் சொல். ஆய்வேளின் கடற்படையைச் சிதைப்பது மட்டும் நமது நோக்கமல்ல. முடிந்தால் அவர்களுடைய மரக்கலன்கள் சிலவற்றையாவது கைப்பற்ற வேண்டும். கொற்கையிலிருந்து

விழிஞம் வரை வந்து வெற்றியுடன் திரும்பும்பொழுது பகைவரிடமிருந்து கைப் பற்றிய மரக்கலன்களைக் காண்பிக்க முடிந்தால், மக்கள் பெருமிதம் கொள்வார்கள். அது நம் படைக்கு, குறிப்பாகக் கடற் படைக்கு வெற்றிச்சின்னமாக விளங்கும். நமது கடற்படையும் மேலும் விரிவடையும்" என்று அறிவுறுத்தினான் சாத்தன்.

அருவிக்கரைக் கோட்டை, பாண்டியன் படையின் திடீர்த் தாக்குதலை எதிர்த்து நிற்கும் வலிமை உடையதன்று. விழிஞத்தில் உள்ள கோட்டையுடன் ஒப்பிடும்பொழுது அது அளவிலும், அரணிலும் சிறியது. ஆயிரம் வீரர்கள் அதன் பாதுகாப்பிற்காக ஒதுக்கப் பட்டிருந்தாலும், பலரும் பல வேலைகள் செய்தவதற்காக வெளியில் போக வேண்டியிருந்ததால் எழுநூறு வீரர்களுக்குமேல் அங்கு காண்பது அரிது. இப்பொழுது ஐந்நூறு வீரர்கள் விழிஞத்தின் பாதுகாப்பிற்காகச் சென்று விட்டதால் கோட்டையின் காவல் மிகவும் வலிகுன்றியிருந்தது. கோட்டையை நோக்கி யானைகளும், குதிரைகளும் அடங்கிய ஒரு படை வருவதைக் கோட்டையின் காவல் கோபுரத்திலிருந்து கண்ட காவலன் அபாய ஒலி எழுப்பி மற்ற வீரர்களுக்கு அறிவித்தான். ஆயினும் கோட்டை வாயிலின். கதவுகளை முற்றிலும் மூடும் முன்பே பாண்டியர் படையின் முன்னணிக் குழு கோட்டைக்குள் நுழைந்தது. அதைத் தடுக்க வந்த துணிவு மிக்க வீரர்கள் பாண்டிய வீரர்களின் வாளுக்கும் வேலுக்கும் இரையாகி வீழவே இனிச் செய்வதற்கு ஒன்றுமில்லை என்பதை உணர்ந்து மறுபக்க வாயில் வழியாகக் கோட்டையை விட்டு ஓடி ஒளிந்து உயிர்தப்பினர் மற்ற வீரர்கள். அரசு அலுவலர் சிலரும் அவர்களுடைய குடும்பங்களும் உள்ளே சிக்கினாலும், தேவையில்லாமல் பொதுமக்களைத் துன்புறுத்த விரும்பாத பாண்டியன் நெடுஞ்சடையன் அவர்களை விடுவித்து அனுப்பினான். முக்கியமான பொறுப்புகளை வகித்த ஐந்து அலுவலர்கள் மட்டும் கைது செய்யப்பட்டனர். வேணாட்டு அரசைப் பற்றிய பல தகவல்களையும் அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளும் நோக்கத்துடன் அவர்கள் கைதிகளாக விழிஞத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

அருவிக்கரைக் கோட்டையிலிருந்து ஏராளமான நெல்லும் மற்ற தானியங்களும், பலவிதமான படைக்கலக் குவியல்களும், போர்த்தளவாடங்களும், பெரியமரங்களும் கிடைத்தன. அவற்றையெல்லாம் பல சகடங்களிலும் யானைப்புறத்தும் ஏற்றித் தம் பாசறைக்குக் கொண்டு போயினர் பாண்டிய வீரர்கள். அருவிக்கரைக்

கோட்டையும் இடித்து நொறுக்கப்பட்டது. கோட்டையிலிருந்து தப்பி ஓடியவர்கள் மூலம் இந்தச் செய்தி ஆய்வேளுக்கு எட்டியது.

"அருவிக்கரைகோட்டையிலிருந்து நாம் நம் படைவீரர்களை இங்குக் கொண்டு வந்தது தவறு. ஆயிரம் வீரர்கள் அங்கே எச்சரிக்கையுடன் காவல் காத்திருந்தால் பாண்டியன் இவ்வளவு எளிதில் கோட்டையைத் தகர்த்திருக்க முடியாது. ஒரு முக்கியமான கோட்டையை நாம் இழந்தது மட்டுமன்றி, பாண்டியனின் படைகளுக்குப் பல நாள்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களும், படைக்கலன்களும் கிடைத்தன. எனவே நமக்கு இரண்டு விதமாகச் சேதம் ஏற்பட்டுள்ளது" என்று வேதனையோடு தன் படைத்தலைவர்களிடம் பேசினான் கருநந்தன்.

"அருவிக்கரையில் இப்படி ஒரு கோட்டை இருப்பது, அதில் உணவுப்பொருள்களும், படைக்கலக் கொட்டிலும் இருப்பது, அங்குள்ளபாதுகாப்புகுறைக்கப்பட்டதும்எப்படியோபாண்டியனுக்குத் தெரிய வந்திருக்கின்றன. அதனால் தான் முற்றுகையிட்டிருக்கும் படையிலிருந்து ஒரு சிறு பகுதியைப் பிரித்து நேரில் சென்று இந்தச் செயலைச் செய்துள்ளான். நம்மைப் பற்றிய தகவல்கள் அவ்வப்போது பாண்டியனுக்குத் தெரியவருகின்றன என்பது இதனால் தெளிவாகிறது" என்றார் அமைச்சர்.

"அவ்வாறு தகவல்களைச் சேகரித்துப் பகைவனுக்குக் கொடுக்கும் ஒற்றன் யார் என்பது எனக்கு ஒரு புதிராகவே இருந்தது. நேற்றுத்தான் அதைப்பற்றி ஒரு முக்கியமான துப்பு கிடைத்திருக்கிறது. அந்த ஒற்றனை மட்டுமன்றி அவனைச் சந்திக்கும் பாண்டியனின் ஒற்றர் படைத் தலைவனையும் பிடிக்க ஏற்பாடு செய்து விட்டேன். என் திட்டம் நிறைவேறினால் நாளையேகூட அவர்களைப் பிடிக்கமுடியும் என்று நம்புகிறேன்" என்று தெரிவித்தான் சேனாதிபதி.

"அந்த ஒற்றர் படைத் தலைவனையும் ஒற்றனையும் பிடித்துத் தூக்கில் தொங்கவிட்டால் அதுவே இந்தப் போரில் முதல் வெற்றியாகும். நம்முடைய படை வீரர்களுக்கும் ஒரு பெரிய மன எழுச்சியை ஏற்படுத்தி நமது இறுதி வெற்றிக்கு வழிவகுக்கும். அதை உடனே செய்யுங்கள்" என்று ஆணையிட்டான் வேணாட்டரசன் கருநந்தன்.

இத்தகைய மிகவும் முக்கியமும், பலருக்கும் தெரியாமல் காக்கவேண்டியதும் ஆகிய பொருள்களைப் பலர் பங்குகொள்ளும் கூட்டங்களில் பேசவோ, முடிவு செய்யவோ கூடாது என்ற

அடிப்படை அரசியல் முறையை மன்னனும் சேனாதிபதியும் மறந்தனர். விழிஞும் துறைமுகக் காவலில் ஈடுபட்டிருந்த ஒரு படைத் தலைவனைத் தன்னுடைய செய்தியாளனாக வளர்த்திருந்தான் சங்கரன். ஆகவே ஒற்றனைக் கண்டு பிடித்த செய்தியும் ஒற்றனையும், ஒற்றர் படைத் தலைவனையும் அடுத்த நாளே பிடிக்க ஏற்பாடு செய்த செய்தியும் அவர்களைப் பிடித்தவுடன் தூக்கிலிடவேண்டும் என்ற முடிவும் அந்தப் படைத் தலைவன் மூலம் சங்கரனுக்குத் தெரிய வந்தது. இந்தச் செய்திகளைக்கேட்டுத் திடுக்கிட்டான் சங்கரன். தன் தலை மட்டுமின்றி சாத்தன் தலையும் போகும் நிலைமை ஏற்பட்டுள்ளது என்பதை அறிந்து அச்சமும் கவலையும் கொண்ட அவன் இந்தத் தகவலை எப்படியாவது உடனே சாத்தனுக்குத் தெரிவிக்கவேண்டும் என்று முடிவுசெய்து, அதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டே தன் வீட்டிற்குத் திரும்பினான்.

வீட்டின் திண்ணையில் ஏறியவுடன் உள்ளே யாரோ பேசும் குரல் கேட்டது. ஒரு குரல் சிவராமனுடையது என்பது விளங்கியது. மற்றொரு குரல் யாருடையது என்பது சங்கரனுக்குப் புரியவில்லை. அவன் மனத்தில் ஐயம் குடிகொள்ளவே அவர்கள் பேசுவதைக் கூர்ந்து கவனித்துக் கேட்டான். "நாளைக்குக் கண்டிப்பாக. காளி கோயிலில் சந்திப்பார்கள் அல்லவா?" என்று புதிய குரலில் பேசியவன் கேட்க, சிவராமன் விடையிறுத்தான். "ஆமாம் நாளைக் காலையில் கதிரவன் உதிக்கும் பொழுது காளி கோயிலுக்கு வா" என்று சொன்னதை நான் நன்றாகக் கேட்டேன் சந்தேகமே இல்லை" "நல்லது நாளை அவனுடைய கதை முடியப் போகிறது. இருவரும் தூக்கில் தொங்கப் போகிறார்கள். அதற்குப் பின் இந்தக் கடையும் அதில் உள்ளவை எல்லாமே உன்னுடையவைதான். அதோடு நூறு பொற்காசுகளும் உனக்குக் கிடைக்கும். சரி சங்கரன் எந்நேரமும் வரலாம். நான் போகிறேன்" என்று கூறி வெளியில் வந்தான் மற்றவன். தூணின் மறைவில் விரைவில் ஒளிந்து கொண்ட சங்கரனை அந்த இருண்ட இரவில் அவனோ சிவராமனோ பார்க்கவில்லை.

சங்கரன் வெகுநேரம் அசையாமல் அந்தத் தூணின் மறைவிலேயே நின்றான் இப்பொழுது அவனுக்கு எல்லாம் புரிந்தது தன்னைக் காட்டிக் கொடுத்தவன் தன்னுடைய மாமன் மகனான சிவராமன்தான் என்பது விளங்கியது. ஓராண்டுக்கு மேல் தன்னுடன் வணிகத் தொழிலில் ஈடுபட்டு உண்மையுள்ளவன் என்றும் நம்பத் தகுந்தவன் என்றும் தான் எண்ணியிருந்தவன் தன்னைக் காட்டிக்கொடுத்து விட்டானே என்று கலங்கினான்

அவன். சங்கரன் தன்னுடைய ஒற்றறியும் பணியைப் பற்றி ஒன்றுமே பேசியதில்லை. ஆயினும் ஓரளவு புத்தியுள்ள யாரும் சங்கரன் இரகசியமாக நடமாடுவதையும், அகாலங்களில் போவதும் வருவதையும் கண்டால் சந்தேகம் ஏற்படுவது இயல்பே. சங்கரனும் தன்னுடைய செயல்களை முற்றிலுமாகச் சிவராமனிடமிருந்து மறைக்கவில்லை. சாத்தஞ்சாத்தன் கடைக்கு வந்து சங்கரனிடம் பேசிவிட்டுச் சென்றபின் அவர் யார்? என்று சிவராமன் கேட்க பாண்டிய நாட்டைச் சேர்ந்த ஒரு பெரிய வணிகர்' என்று மட்டும் சொல்லிவைத்தான். ஆனால் சிவராமன் எப்படியோ உண்மையைக் கண்டு பிடித்துவிட்டான். இப்பொழுது சிவராமனிடம் பேசிவிட்டுச் சென்றவன், வேணாட்டு ஒற்றர்படையைச் சேர்ந்தவனாக இருக்க வேண்டும் என்றும், சங்கரனின் கடை முழுவதுமாகக் கிடைக்கும் என்ற ஆசையைத் தூண்டிவிட்டுச் சிவராமனை வளைத்து விட்டான் என்றும் சங்கரன் உணர்ந்தான் அவன் மனத்தில் கோபம் பொங்கி எழுந்தது. சிவராமனைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணமும் உதித்தது. ஆனால் அதே நேரத்தில் ஆத்திரம் அறிவை மறைத்து விடக் கூடாது என்ற அறிவுரை அவனைச் சிந்திக்கச் செய்தது.

சிவராமனைக் கொல்வது என்பது அவனால் எளிதாகச் செய்து முடிக்கக்கூடிய செயல் என்பதில் அவனுக்கு ஐயம் இல்லை. ஆனால் அவ்வாறு செய்யும் பொழுது சிவராமன் அபயக்குரல் எழுப்பினாலோ, அல்லது எப்படியாவது அது வெளியில் தெரிய வந்தாலோ அவனைக் காவலர்கள் கைது செய்யலாம். அவ்வாறு நேர்ந்தால் சாத்தனுக்குச் செய்தி எட்டாது. நாளை காலையில் கதிரவன் முளைக்கும் நேரத்தில் தன்னைச் சந்திக்கச் சாத்தன் காளிகோயிலுக்கு வருவான். அதற்காகக் காத்திருக்கும் வேணாட்டு வீரர்கள் அவனைப் பிடித்துக்கொண்டு செல்வர். ஆய்வேளின் ஆள் சொன்னதுபோல் சாத்தன் தூக்கில் தொங்கநேரும். ஆகவே சிவராமனைப் பழிவாங்குவதை விட முக்கியமாகச் செய்யவேண்டியது சாத்தனுக்குச் செய்தி சொல்வதாகும். நேரம் நள்ளிரவை அடுத்துவிட்டதால் பாண்டியன் பாசறைக்குச் செல்வது ஆபத்தானது என்பதையும் சங்கரன் மனம் கொண்டான்.

திண்ணைத் தூணின் மறைவிலிருந்து கீழே இறங்கி, அப்பொழுதுதான் திரும்பி வந்ததாகச் சிவராமனுக்குத் தோன்றும் வண்ணம் வீட்டிற்குள் நுழைந்தான் சங்கரன். உறங்குவது போல் பாசாங்கு காட்டிப் படுத்திருந்த சிவராமனிடம் ஒன்றும் பேசாமல் கதவைத் தாழிட்டு வழக்கம்போல் படுத்துக் கொண்டான்.

வெகுநேரம் உறக்கம் வராமல் கிடந்தாலும் எப்பொழுதோ சற்று நேரம் உறங்கியிருக்கக்கூடும். முதற் கோழி கூவியவுடனேயே எழுந்து, ஓசையில்லாமல் நடந்து, அங்கிருந்த பொற்காசுகளையெல்லாம் ஒரு கிழியாகக்கட்டி எடுத்துக் கொண்டு கதவை மெல்லத் திறந்து வீட்டைவிட்டு வெளியேறினான்.

பாண்டியனின் ஒற்றர் படையைச் சார்ந்தவன் என்ற இலச்சினை அவனிடம் இருந்ததால் இருள்மாறாத அந்த இளங்காலை நேரத்திலும் பாண்டியர் பாசறைக்குச் சென்று சாத்தஞ்சாத்தனைச் சந்திக்க முடிந்தது. சங்கரன் வந்த நேரத்தையும் அவனுடைய தோற்றத்தையும் கண்ட சாத்தன், "என்ன சங்கரா! என்ன நடந்தது? ஏன் இந்நேரத்தில் இங்கு வந்தாய்? நாம் காளிகோயிலில் அல்லவா சந்திக்க முடிவு செய்திருந்தோம்?" என்று வினாக்களை அடுக்கினான். "எல்லாம் முடிந்தது தளபதியாரே! நாம் காளி கோயிலில் சந்திக்கும் பொழுது நம்மைப் பிடிக்கவும், அதன்பின் தூக்கில் தொங்கவிடவும் ஆய்வேள் கட்டளை இட்டிருக்கிறார். நான் சற்றும் எதிர்பார்க்காத ஒருவன் என்னைக் காட்டிக் கொடுத்துவிட்டான்" என்று குமுறினான் சங்கரன்.

"உன் உறவினன் சிவராமன் தானே?" என்று குறிப்பிட்டுக் கேட்டான் சாத்தன். சங்கரன் வியப்புற்றான்." உங்களுக்கு முன்னரே தெரியுமா! எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?" என்று வினவினான்.

"எனக்குத் தெரியாது! ஆனால் சந்தேகப்பட்டேன். நாம் பேசிக்கொண்டிருந்த பொழுது அவன் எதையோ தேடுவதுபோல் அங்கும் இங்கும் அலைந்தான். நாம் பேசுவதைக் கேட்பதற்காகத்தான் அவ்வாறு செய்கிறானோ என்று ஐயம் எழுந்தது என் மனத்தில்! அதனால் தான் இனிமேல் உன் வீட்டில் நாம் சந்திக்க வேண்டாம் என்று முடிவுசெய்தேன். இன்று நாம் காளிகோயிலில் சந்திக்கும் பொழுது சிவராமனைப் பற்றி உனக்கு எச்சரிக்கை தரவேண்டும் என்று எண்ணியிருந்தேன். நீ சொன்ன கதை எனக்குப் புரியவில்லை. ஆய்வேளின் கட்டளை உனக்கு எப்படித் தெரியவந்தது?"

"ஆய்வேளின் கட்டளை என்பது என் ஊகம். நான் நேற்று என்னுடைய செய்தியாளன் ஒருவனைச் சந்தித்துவிட்டு இரவில் வீட்டிற்குத் திரும்பியபொழுது சிவராமனுடன் ஒருவன் பேசிக்கொண்டிருந்தான். எனக்கு ஐயம் எழவே, நான் இருட்டில் ஒளிந்து நின்று கவனித்தேன். நாளைக்குக் கண்டிப்பாகக்

காளிகோயிலில் சந்திப்பார்கள் அல்லவா என்று வந்தவன் கேட்க, சிவராமன் அதை உறுதிசெய்தான். நாளை அவனுடைய கதை முடிந்து விடும். இருவரும் தூக்கில் தொங்குவார்கள். இந்தக் கடை உனக்குச் சொந்தமாகும் என்று உறுதிகூறிவிட்டுச் சென்றான் மற்றவன். இதுதான் நடந்தது" என்று விளக்கினான் சங்கரன்.

"சரி நாம் இன்னும் சற்று நேரத்தில் காளி கோயிலில் சந்திப்போம். அந்த முடிவை மாற்ற வேண்டாம்." என்றான் சாத்தன்.

சாத்தனுக்கு மூளை குழம்பிவிட்டதோ என்று அஞ்சினான் சங்கரன். "நீங்கள் என்ன சொல்கிறீர்கள் தளபதியாரே! நான் சொன்னது தங்களுக்கு விளங்க வில்லையா? நம்மைப் பிடிப்பதற்காக வேணாட்டு வீரர்கள் அங்கு காத்திருப்பார்கள்" என்று மீண்டும் வலியுறுத்தினான்.

"ஆமாம் அவர்களை அதிகநேரம் காக்க விடவேண்டாம். நாம் குறித்த நேரத்திலேயே சந்திப்பு நடக்கட்டும். ஆனால் ஒரே ஒரு மாற்றம். அவர்கள் நம்மைப் பிடிப்பதற்கு மாறாக நாம் அவர்களைப் பிடிப்போம்! சரிதானே?" என்று சிரித்துக்கொண்டே கேட்டான் சாத்தன். சங்கரனுக்கு அப்பொழுதுதான் சாத்தனின் திட்டம் புரிந்தது. சாத்தன் தன் அணியிலிருந்து பத்து வீரர்களைப் பின்னால் வரும்படி கூறி அவர்களுக்குத் தேவையான அறிவுரை நல்கி சங்கரனையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டான்.

கதிரவன் தோன்றிய நேரத்தில், மேற்குத் திசையிலிருந்து காளி கோயிலுக்குள் நுழைந்தான் சங்கரன். சற்றுநேரம் கழித்து, கீழ்த்திசையிலிருந்து கோயிலுக்குள் நுழைந்தான் சாத்தன். கோயிலுக்குள் ஒரு மூலையில் நின்று அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் பொழுது வேலும் வாளும் ஏந்திய ஆறு வேணாட்டு வீரர்கள் அவர்களைச் சூழ்ந்து பிடிக்க முனைந்தனர். சாத்தனும் சங்கரனும் தங்கள் வாள்களை உருவி அவர்களை எதிர்த்துப் போராடத் தொடங்கும் பொழுது பாண்டிய வீரர்கள் பதின்மர் அவர்களைச் சூழ்ந்துகொண்டு எல்லோரையும் சரணடையும்படி பணித்தனர். வேறு வழியில்லாமையால் வேணாட்டு வீரர்கள் சரண் அடையவே, அவர்களைக் கைது செய்து எல்லோரும் பாண்டியர் பாசறைக்குச் சென்றனர். வேடனையே வேட்டையாடிய வெற்றிப் பெருமிதத்துடன் சாத்தன் நடந்தவற்றை விளக்கி உரைத்தான் சேனாதிபதியிடமும் பாண்டியன் நெடுஞ்சடையனிடமும்.

"எல்லாம் நன்மைக்கே. நாம் கோட்டையைத் தாக்கும் பொழுது, நமது நிபந்தனைகளை விளக்கி ஓலை அனுப்பவேண்டும். கருநந்தனுக்கு இன்று கைதுசெய்த வேணாட்டு வீரர்களின் தலைவன் அந்த ஓலையைக் கொண்டுசெல்வான்" என்றார் பாண்டியர்.

23. விழிஞத்தின் வீழ்ச்சி

அருவிக்கரைக் கோட்டையைத் தகர்த்த பாண்டியன் நெடுஞ்சடையனின் செயல் ஆய்வேள் கருநந்தனின் கோபத்தை கொதிக்கவைத்தது போலவே, சாத்தஞ்சாத்தனைப் பிடித்துத் தூக்கில் தொங்கவிடுவதற்காக வீரர்களை அனுப்பிய ஆய்வேளின் செயல் பாண்டியன் சினத்தைப் பதின் மடங்கு பெருக்கியது. ஆகவே அருவிக்கரைக் கோட்டைக்கு நேர்ந்தது போலவே விழிஞத்தின் கோட்டையையும் இடித்துத் தகர்க்க வேண்டும். எந்த விதமான இரக்கமோ கருணையோ காட்டாமல் கோட்டை வாயிலும் மதிலும் மட்டுமன்றி, நகருக்குள் நுழைந்தவுடன் மாட மாளிகைகளையும் தலை உயர்த்தி நிற்கும் கட்டிடங்களையும் தகர்த்தெறிய வேண்டும் என்று கட்டளையிட்டான் மன்னன்.

குறித்த நாளிலேயே கதிரவன் முளைப்பதற்கு முன்னரே போர் முரசு முழங்கியது. முரடுகள் அதிர்ந்தன. பெரு மரத்துண்டுகளைத் தும்பிக்கையில் ஏந்திக்கொண்டு களிறுகள் கோட்டை வாயில்களைத் தெற்கு, வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஒரே நேரத்தில் தாக்குதல் தொடங்கின. கோட்டை மதில்களின் மேலும், புழைகளிலும், காவல் கோபுரங்களிலும் காவல் காத்த வேணாட்டு வீரர்கள், மேலிருந்து வேல் எறிந்தும், அம்பு எய்தும், பொறிகள் மூலம் பெரும் கற்களை வீசியும் பாண்டிய வீரர்களின் முன்னேற்றத்தைத் தடுத்தனர். ஆனால் மேலிருந்து ஒரே நேரத்தில் நூறு வேல் வீசினால், கீழேயிருந்து ஆயிரம் வேல்கள் வீசப்பட்டன. அதைப் போலவே வேணாட்டு வில்லாளர்கள் நூறு அம்புகளை எய்யும் நேரத்தில் பாண்டிய வீரர்கள் ஆயிரம் அம்புகளை எய்யும் எண்ணிக்கைப் பெருக்கம் அவர்களிடம் இருந்தது. மேலிருந்து பறந்து வந்த கல்லில் நசுக்குண்டும், வேலும் அம்பும் பாய்ந்தும் பாண்டிய வீரர்கள் சிலர் மடியவும் பலர் புண்படவும் நேர்ந்தாலும், அதிலும் பன்மடங்கு சேதம் வேணாட்டுப் படைக்கு நேர்ந்தது.

ஆய்வேள் கருநந்தனும் அவனுடைய படைத் தலைவர்களும், விழிஞத்தின் அரண் மிகவும் வலிமை உடையதாயினும், பாண்டியன் கொண்டு வந்திருக்கும் பெரும் படையின் தாக்குதலை அதிக நாள்கள் எதிர்த்து நிற்கமுடியாது என்பதை உணர்ந்தே செயல்பட்டனர். தெற்கு வாயிலையோ,

வடக்கு வாயிலையோ நொறுக்கிவிட்டு உள்ளே நுழையும் பாண்டியன் படையுடன் மோதுவதற்கு யானைகளையும், குதிரைகளையும், காலாள் வீரர்களையும் அணிவகுத்து நிறுத்தியிருந்தனர். இந்தப் போர் நடக்கும்பொழுது கடற்படையின் தாக்குதல் மேற்குத் திசையிலிருந்து தொடங்கி முன்னேறும் என்றும் அது ஒரு திருப்புமையமாக இருந்து, பாண்டியன் படையின் தோல்விக்கும் ஆய்வேளின் வெற்றிக்கும் வழிவகுக்கும் என்றும் அவர்கள் கணக்கிட்டனர். ஆனால் முற்றுகையை மூன்று நான்கு நாள்களிலேயே முடித்துக்கொண்டு இவ்வளவு விரைவில் கோட்டை தாக்குதலைப் பாண்டியர் தொடங்குவார் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்ல. பாதுகாப்புப் பணிகளைமுழுமையாகச்செய்து முடிக்கும் முன்னரே பகைவனின் போர்முரசு கொட்டிவிட்டது.

போர் தொடங்கியபின்தான் கடற்படைமீது வைத்த நம்பிக்கை வீணாகிவிட்டதை ஆய்வேள் உணர்ந்தான். பாண்டியனிடம் ஒரு கடற்படை இருப்பினும், அது மிகவும் சிறியது என்றும் கொற்கையிலிருந்து விழிஞத்திற்கு வந்து போர் புரியும் வாய்ப்பு இல்லையென்றும் ஆய்வேளின் படைத் தலைவர்கள் உறுதியாக நம்பியிருந்தனர். ஆனால் கோட்டையை முற்றுகையிட்டிருந்த படை கோட்டைவாயிலைத் தாக்கத் தொடங்கிய அதே நேரத்தில், அதற்கு முந்திய நாள் மாலை வரை கண்ணுக்குத் தெரியாமல் மறைந்திருந்த பாண்டியனின் கடற்படை இரவோடு இரவாக விழிஞம் துறை முகத்திற்கு வந்து அதிகாலையில் ஆய்வேளின் கடற்படையைத் தாக்கியது. பாண்டியன் கடற்படையைச் சேர்ந்த ஒரு மரக்கலத்திலிருந்து எறியப்பட்ட வேல், ஆய்வேளின் கடற்படையின் பெரிய மரக்கலத்தில் நின்ற காவலனின் மீது பட்டு அவன் அலறிக்கொண்டு விழுந்தபொழுதுதான் தங்கள் மரக்கலம் தாக்கப்படுகிறது என்பது வேணாட்டு வீரர்களுக்குத் தெரிந்தது. அதை ஒருக்காலும் எதிர்பாராமல் மரக்கலத்தில் உறங்கிக் கண்விழித்த கடற்படை வீரர்களுக்கும் மாலுமிகளுக்கும் தங்கள் கண்களையே நம்ப முடியவில்லை.

மிகச் சிறியது என்று படைத்தலைவர்கள் அவர்களிடம் கூறியிருந்த பாண்டியன் கடற்படை மிக மிகப் பெரியதாக அவர்கள் முன் அச்சுறுத்திக் காட்சியளித்தது. வேணாட்டின் கடற்படையில் மிகவும் பெரியதும் வலிமை மிக்கதுமாக இருநூறு வீரர்களைத் தாங்கிப் போர் புரியும் ஆற்றலுள்ளதாக விளங்கிய பெரிய மரக்கலம் ஒன்றே ஒன்றுதான் இருந்தது. ஆனால்

பாண்டியன் கடற்படையில் அதே அளவுள்ள ஒரு மரக்கலமும், அதனைவிடப் பெரியதான, முந்நூறு வீரர்கள் நின்று போராட வசதியுள்ள ஒரு மரக்கலமும் இருந்தன. நூறு வீரர்களைச் சுமந்து போர்செய்ய வல்ல எட்டு மரக்கலன்கள் இடைவெளி விட்டு நிறுத்தப்பட்டு, வேணாட்டுக் கடற்படையைச் சூழ்ந்து மிதந்து கொண்டிருந்தன. ஒவ்வொரு மரக்கலத்தின் மேல் தட்டிலும் வேலும், வில்லும், வாளும், மழுவும் ஏந்திய வீரர்கள் ஆரவாரம் செய்துகொண்டு போருக்கு ஆயத்தமாக நிற்பதையும் காணமுடிந்தது. எனவே கோட்டைக்குள் நுழையும் பாண்டியனின் தரைப்படையை எதிர்த்துப் போராடுவதற்கு வேணாட்டுப் படைக்குத் துணையாகச் செயல்படுவதற்கு ஆய்வேளின் கடற்படையால் முடியாது என்பது தெளிவாக விளங்கியது. பாண்டியனின் கடற்படையைச் சமாளித்து நிற்க முடியுமா என்பதே ஒரு கேள்விக் குறியாக நின்றது.

தரையில் நடக்கும் போரும், கடலில் நடக்கும் போரும் பல விதத்தில் மாறுபட்டவை. போர் புரிவது நிலையாக நிற்கும் பூமியின்மேல் ஆதலால் படைக்கலன்களைப் பகைவர்கள் சாயும் வண்ணம் ஓச்சுதலே வீரர்களின் குறிக்கோள். ஆனால் மரக்கலங்களிலிருந்து கொண்டு போர் செய்யும்பொழுது கடலின் கொந்தளிப்பும் அதற்கேற்ப மாலுமிகள் கப்பல் தலைவனின் கட்டளை கேட்டு மரக்கலத்தை இயக்கும் விதமும் போர் முறையை மாற்றக் கூடியவை. பாண்டியன் படையின் தாக்குதல் மிக்க கடுமையாக இருந்தது. மாரியெனப் பாய்ந்து நிறைந்து வரும் அம்புகள் வேணாட்டு வீரர்கள் பலரையும் வீழ்த்தின. பொறிகளிலிருந்து வேகத்துடன் வீசப்பட்ட கருங்கற்கள் நசுக்கின. வேல் வீச்சிலும் பலர் வீழ்ந்தனர். ஆகவே தன் வீரர்களையும் மாலுமிகளையும் காப்பாற்றும் பொருட்டு கப்பல் படைத் தலைவன் கப்பலைத் திருப்பிபின் வாங்க ஆணையிட்டான். பெரிய மரக்கலம் சில கேடுபாடுகளுடன் பின்வாங்கியது. நான்கு நாள்கள் நீண்ட போரில் இரண்டு சிறிய மரக்கலன்களைப் பாண்டியர்கள் கைப்பற்றினர். பெரிய மரக் கலமும், மூன்று சிறிய மரக்கலங்களும் வடமேற்குத் திசையில் சென்று மறைந்தன. பாண்டியன் கடற்படை அவற்றைத் துரத்திச் செல்லவில்லை. கோட்டையை முற்றுகையிட்டுத் தாக்கும் தரைப்படைக்குப் பக்கபலமாகப் பணியாற்றுவதே அதற்குக் கொடுக்கப்பட்ட வேலையாதலால் தருமன் அந்த வேலையை வெற்றிகரமாக நிறைவேற்றினான். வேணாட்டுக் கடற்படையின் இரு மரக்கலன்களைக் கைப்பற்றியதே போதும் என்று மனநிறைவு கொண்டான் அவன்.

வேணாட்டுக் கடற்படை வீணாகிவிட்டதையும் இனிமேல் கடலிலிருந்து தாக்குதல் வரும் என்ற அச்சத்திற்கு இடமில்லை என்பதையும் உறுதிசெய்தபின், விழிஞத்தை முற்றுகை யிட்டிருந்த பாண்டியரின் படை கோட்டையை மேலும் மும்முரமாகத் தாக்கத் தொடங்கியது. தொடர்ச்சியாக நான்கு நாள்கள் யானைகளால் தாக்குண்ட கோட்டை வாயில் நிலை குலைந்தது. கோட்டைமதிலின் மேலிருந்து கோட்டையைக் காவல் புரிந்துகொண்டிருந்த வேணாட்டு வீரர்கள் வேலும், அம்பும், கல்லும் விளைவித்த புண்களுக்கு இலக்காகி, மதிலைவிட்டு இறங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. யானைகள் தூக்கிக் கொண்டு வந்து இடித்த மரத்துண்டுகளின் வலிமையால் சில இடங்களில் கோட்டையின் மதிலும் இடியத் தொடங்கியது. நொறுங்கிய வாயில்கள் வழியாகவும், இடிந்த மதில்கள் வழியாகவும் பாண்டியரின் படைகள் விழிஞம் நகருக்குள் புகுந்தன. அவர்களை வரவேற்பதற்காக ஆய்வேள் நிறுத்தி வைத்திருந்த யானைப்படையுடன் பாண்டியரின் யானைப்படை மோதியது. எண்ணிக்கையில் பன் மடங்கு பெரிய குதிரைப்படையும், காலாள் படையும் வேணாட்டு வீரர்களைப் பின்வாங்கச் செய்தன.

அதே நேரத்தில் பாண்டியன் நெடுஞ்சடையன் விடுத்த முடங்கல் வேணாட்டரசன் கருநந்தனுக்குக் கிடைத்தது. ஒற்றனையும் ஒற்றர் படைத் தலைவனையும் பிடிப்பதற்குக் காளிகோயிலுக்கு வந்து, பாண்டிய வீரர்களால் கைதுசெய்யப் பட்ட வேணாட்டு வீரர்களின் தலைவன் அந்த முடங்கலைக் கொண்டு வந்து கொடுத்தான்.

விழிஞத்தின் துறைமுகத்தைக் காவல் காத்து நின்ற வேணாட்டின் கடற்படையைத் தோற்கடித்து, தன்னுடைய கடற்படை துறை முகத்தைக் கைப்பற்றிவிட்டது என்று அறிவித்தது அந்த முடங்கல். மேலும் விழிஞத்தின் கோட்டை வாயிலையும், மதிலையும் தகர்த்து, தன்னுடைய படைகள் நகருக்குள் நுழைந்துவிட்டன. கடுமையான போர் நடந்துகொண்டிருந்தாலும் வலிமை மிக்க பாண்டியர் படை வேணாட்டுப்படையை விரைவிலேயே முறியடிக்கும். விழிஞம் பட்டினம் இன்னும் சில நாள்களில் மண்மேடாகிவிடும். அதைத் தவிர்க்க எண்ணினால் ஆய்வேள் உடனே சரணடைய வேண்டும். ஆயிரம் பொற்காசுகள் கொண்ட பதினாயிரம் பொற்கிழிகளும், ஐம்பது யானைகளும், அவை சுமக்கக் கூடிய நெல், அரிசி முதலான தானியங்களும், நூறு அரபிக் குதிரைகளும் நூறு

சகடங்கள் நிறைய மிளகு, பட்டை, ஏலம், மஞ்சள் போன்ற மலைச்சரக்குகளும் காணிக்கையாக வழங்க வேண்டும். மேலும் வேணாடு, பாண்டியப் பேரரசிற்குத் திறைசெலுத்தும் சிற்றரசாக இயங்குவதற்கு இணங்கி ஆண்டு தோறும் பதினாயிரம் பொன் மதுரையில் கொண்டுவந்து செலுத்த வேண்டும் என்று அந்த முடங்கல் விதித்தது.

அமைச்சர் பாண்டியரின் முடங்கலை உரக்கப் படித்து முடித்தார். சினத்தின் வெப்பம் சிறிது சிறிதாக ஏறிக்கொண்டே இருந்த ஆய்வேள், கருநந்தனின் மனக்கட்டுப்பாடு, இறுதியாக ஒரு பெரும் உறுமலுடன் வெளிப்பட்டது.

"நான் பாண்டியனின் சிற்றரசனாக வேண்டுமா! எங்கோ இருக்கும் மதுரையில் இருந்துகொண்டு வேணாட்டையும் ஆட்சிபுரிய விரும்புகிறானா! நடக்கக் கூடியதுதான். எப்படியோ நாம் யாரும் அறியாமல் நம் நாட்டிற்குள் புகுந்து, எதிர்பாராமல் நம்மைத் தாக்கி வெற்றி பெற்றான் என்றால் அதற்காக நம்மை என்றும் அடக்கி ஆளலாம் என்று மனப் பால் குடிக்கிறானா? விழிஞத்தை மண்மேடாக மாற்றட்டும். அந்த மண்மேட்டில் நானும் மடிந்துவிடுகிறேன். பகைவனிடம் மண்டியிட்டு அவனுக்கு அடங்கிய சிற்றரசனாக வாழ்வதைவிடப் போராடி உயிர் நீப்பதே அரசனுக்கு உகந்த செயல்! அமைச்சரே! கடைசிமூச்சு உள்ள வரை போராடுவோம். அடிபணிய மாட்டோம் என்று அறிவித்து விடுங்கள்" என்று அலறினான் அரசன்.

சற்று நேரம், புயலுக்குப்பின் நிலவும் அமைதிபோல, அரசனின் வெகுளி வெளிப்பாட்டிற்குப்பின் யாரும் பேச முன்வராததால் எந்தவித ஓசையும் எழவில்லை. கருநந்தனின் தந்தையாகிய சடையன் வேணாட்டை ஆண்டுகொண்டிருந்த நாள்களில் வடநாட்டிலிருந்து வந்த வட மொழிப் பண்டிதர் பரத்துவாசர் அரசனின் நன்மதிப்பைப் பெற்று, வடமொழி பயிற்றுவித்து நாளடைவில் 'ராஜகுரு' என்ற பதவியையும் பெற்றிருந்தார். கருநந்தன் சிறுபிள்ளையாய் இருந்த காலம் தொட்டு அவனைக் கல்வியும் கலைகளும் கற்பித்து அவன் முடி சூட்டிக்கொண்டபின் அவனுக்கும் ராஜகுருவாக விளங்கினார். ஆய்வேள் கருநந்தன் அவரிடம் அளவற்ற நன் மதிப்பும் குருபக்தியும் கொண்டிருந்தான். அரசனின் கோபத்தையும், கொந்தளிப்பையும் நன்கறிந்த அமைச்சர் அரசன் இப்பொழுது இருக்கும் மனநிலையில் தான் பேசினால் பயன் விளையாது என்பதை உணர்ந்து, பரத்துவாசரிடம் கண்களால் சைகை

காட்டினார். போரின் போக்கைப் பற்றியும் தோல்வியால் ஏற்படக்கூடிய இன்னல்களைப் பற்றியும் பரத்துவாசரோடு முன்பே உரையாடியதால் அவருடைய கருத்தை அமைச்சர் நன்கு அறிந்தவர். ஆகவே பரத்துவாசர் முதலில் பேசி அரசனைச் சற்று அமைதிகொள்ளச் செய்தபின்னர் தானும் அறிவுரை கூறலாம் என்று முடிவுசெய்தார் அமைச்சர். பரத்துவாசரும் அதைப் புரிந்துகொண்டு பேசத் தொடங்கினார்.

"கருநந்தா! நீ மகா வீரன்! மகா வீரர்களின் வம்சத்தில் வந்தவன்! பகைவனுக்கு அஞ்சாதவன்! பாண்டியன் நாம் சற்றும் எதிர்பாராமல் நம் நாட்டின்மீது படையெடுத்து வந்து விட்டதால் வெற்றி அவன் பக்கம் சாய்கிறது. நாம் தக்க சமயத்தில் அறிந்திருந்தால், உன்னுடைய வீரம் மிகுந்த படை பாண்டியனை விரட்டியடித்திருக்கும்! இப்பொழுது நாம் தோல்வியைத் தழுவும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. போரில் வெற்றியும் தோல்வியும் இயல்பே! இன்று நீ தோல்வி அடையலாம். ஆனால் நாளை ஒரு போர் மூண்டால் நீ வெற்றி பெறுவது உறுதி. ஆனால் அதற்கு வேண்டியது பொறுமை. உன் நாட்டையும், மக்களையும் நாசத்திலிருந்து காப்பாற்ற வேண்டும். அதற்காகப் பகைவனுடன் சமரசம் செய்து கொள்வதில் தவறில்லை. நாட்டைக் காப்பாற்றுவதற்காகப் பகைவனுடன் சமாதானம் செய்துகொள்வது உன் வீரத்திற்கு இழுக்கு அல்ல! அது ஓர் அரச தந்திரம்தான். உன் ஆத்திரம் அறிவை மறைக்காமல் அமைதியாகச் சிந்தித்துச் செயல்படுவதே அறிவுடைமை" என்று போதித்தார் அந்தப் பண்டிதர்.

"ஆம் அரசே! பரத்துவாசர் கூறிய கருத்துகள் ஆழ்ந்த அறிவு நிறைந்தவை. வெற்றி, தோல்வி என்பதைவிட விழிஞத்தையும் வேணாட்டையும் காப்பதே இப்பொழுது நம் கடமை பாண்டியனுடன் சமரசம் செய்துகொள்வதுதான் அதற்கு ஒரே வழி. திறைசெலுத்தும் சிற்றரசன் என்பதைப் பற்றிக் கவலைப்படவேண்டாம். பாண்டியர்கள் இதற்கு முன்பும் நம் நாட்டை அவர்களுக்குத் திறைசெலுத்தும் சிற்றரசாக்க முயற்சி செய்துள்ளனர். அரிகேசரி மாறவர்மன் செந்நிலத்து நடந்த பெரும்போரில் அன்றைய வேணாட்டரசைத் தோற்கடித்து அரசரையும் உறவினர்களையும் சிறையில் அடைத்தான். அதற்குப்பின் கோச்சடையன் ரணதீரன் மருதூர்ப் போரில் வேணாட்டு மன்னரை முறியடித்து, பாண்டியருக்குத் திறைசெலுத்த வேண்டுமென்று பணித்தான். ஆனால் போரில் தோற்று, பொன்னும் பொருளும் இழந்தோமே யன்றி நாம்

ஆண்டுதோறும் திறை செலுத்தும் சிற்றரசர்களாக ஒருபோதும் இருந்ததில்லை. இப்பொழுதும் பாண்டியன் நெடுஞ்சடையன் கேட்கும் பொன்னும் பொருளும் கொடுப்போம்! திறை செலுத்தவும் இணங்குவோம். ஆனால் திறை செலுத்துவோமா இல்லையா என்பதைப் பின்னர் பார்க்கலாம்" என்று அறிவுரை கூறினார் அமைச்சர்.

"கருநந்தா! நான் முதலில் சொன்னது போல் போரில் தோல்வியடைவது உன் வீரத்திற்குக் களங்கம் என்று எண்ணாதே. கிரேக்க நாட்டிலிருந்து படையெடுத்து வந்த சிக்கந்தரிடம் புருஷோத்தமன் தோற்றான். மவுரிய சக்கரவர்த்தி சமரசம் செய்துகொண்டான். அதனால் அவர்கள் வீரர்கள் அல்ல என்று யாரும் கருதவில்லை. அவர்களை மகா வீரர்கள் என்றுதான் சிக்கந்தரே புகழ்ந்தார். வரலாறும் அவர்களை வாழ்த்துகிறது. ஆகவே அமைச்சரின் உபதேசத்தை ஏற்றுக்கொண்டு, பாண்டியன் கேட்கும் பொன்னும் பொருளும் கொடுத்து, சமரசம் செய்துகொள்" என்று ராஜகுரு பரத்துவாசர் மேலும் வற்புறுத்தினார்.

"எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்ற பெரியோர் வாக்கிற்கு ஏற்ப, தன் குருவும் அறிவுக் கண்களைத் திறந்தவரும், வேதங்களையும் புராணங்களையும் கற்பித்தவருமான பரத்துவாசரின் உபதேசமும், தன் தந்தையார் காலம் முதல் வேணாட்டின் அமைச்சராகப் பணியாற்றும் அமைச்சரின் அறிவுரையும் ஆய்வேளின் சினத்தைப் போக்கி, சிந்தனையைத் தூண்டிவிட்டன. போர்க்களத்தில் வீரத்துடன் போர்புரிந்து மடிவது புகழ்மிக்க செயலாயினும், தானும் அழிந்து தன் நாடும் அழியச் செய்வது அறிவுடைமையாகாது என்று அவனுக்கும்தோன்றியது. இப்பொழுது தோல்வி யடைந்தாலும், எதிர்காலத்தில் தன் படைபலத்தைப் பெருக்கி இதே பாண்டியனைப் போரில் முறியடிக்க முடிந்தால் அதுவே உண்மையான வெற்றி என்ற முடிவுக்கு வந்தான். அமைச்சரையும், பரத்துவாசரையும் சமரசம் பேசும்படி வேண்டி நெடுஞ்சடையனிடம் அனுப்பிவைத்தான்.

பாண்டியன் நெடுஞ்சடையன் வேணாட்டின்மீது படையெடுத்ததன் நோக்கம் அந்த நாட்டை வென்று தன்னுடைய பேரரசிற்குக் கட்டுப்பட்டு, திறை செலுத்தும் சிற்றரசாக மாற்றவேண்டும் என்பதன்று. எவ்வளவோ தொலைவில் மேற்குத் தொடர்ச்சி மலைக்கு அப்பால் இருக்கும் விழிஞத்தையும் அதனைத் தலைநகராகக் கொண்ட வேணாட்டையும் அடக்கி ஆள்வது என்பது முடியாத செயல் என்பது அவனுக்குத் தெரியும். தன் முன்னோர்கள் அதற்காகச்

செய்த முயற்சிகள் தோல்வியடைந்ததையும் பாண்டியன் அறிந்திருந்தான். மாரி பொய்த்தலால் வறட்சியும் வறுமையும் வருத்தும் தன் நாட்டு மக்கள் ஓரளவு வளம்பெறுவதற்கும், அவர்களுடைய பசிப்பிணியை ஒழிப்பதற்கும் தேவையான பொருள் ஈட்டும்நோக்கம்தான் பாண்டியனைத் தூண்டியது. இவ்வளவு பெரிய படையெடுப்பிற்குப் பெரும் பொருட்செலவு தேவை ஆயினும், அதைவிடப் பன்மடங்கு அதிகமாகப் பாண்டிய நாட்டிற்குப் பொன்னும் பொருளும் கொண்டுவர போரில் பெறும் வெற்றியால் முடியும் என்ற துணிவால்தான் இந்தப் படையெடுப்பை அவன் மேற்கொண்டான் ஆகவே பரத்துவாச குருவும், வேணாட்டு அமைச்சரும் வந்து, பாண்டியனின் நிபந்தனைகளை ஆய்வேள் ஏற்றுக் கொண்டதாக அறிவித்தவுடனேயே போரை நிறுத்த உத்தரவிட்டான் நெடுஞ்சடையன்.

பொன்னும், மணியும், பவளமும் யானை குதிரை ஆகியவையும் நெல்லும், அரிசியும் பிற பொருள்களும் பெரும் அளவில் திரட்டி நிபந்தனையில் விதித்த அளவிற்குக் கொடுப்பதற்கு ஐந்து நாள்கள் ஆயின. பாண்டிய மன்னனும், படைத்தலைவர்களும் தங்கள் பாசறையிலேயே ஓய்வெடுத்துத் தங்கியிருந்தனர்.

போர் புரிவது மட்டுமன்றி, மொழியறிவும் இலக்கிய விருப்பமும்., எழுத்தாற்றலும் மிக்க சாத்தஞ் சாத்தனோ விழிஞத்தையும், வேணாட்டின் பல பகுதிகளையும் சுற்றிப் பார்த்தான். சங்கரனைக் காட்டிக்கொடுத்த சிவராமனைக் கைதுசெய்து, பாண்டிய சேனாதிபதியிடம் ஒப்படைத்துவிட்டு, சங்கரனையும் உடனழைத்துக்கொண்டு வேணாட்டின் வளமிகு மலைப் பகுதிகளையும், மலைச்சாரல்களையும், நீர்நிலைகளையும், கடலோரங்களையும், கண்டு மகிழ்ந்தான். வடநாட்டிலிருந்து ஓரிரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் வரத்தொடங்கி, இப்பொழுது வேணாட்டின் மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்குப் பெற்று விளங்கும் வடமொழிப் பண்டிதர்களைச் சந்தித்துப் பேசினான். நான்கு வேதங்களையும், இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களையும் கற்பிக்கும் 'பாடசாலை' களையும் கண்டு, அங்கு நடக்கும் கல்வி முறைகளையும் கேட்டறிந்தான்.

பெரும் செல்வத்துடன் பாண்டியனின் வெற்றிப்படை விழிஞத்திலிருந்து புறப்பட்டது. சாத்தனும் புத்துணர்வு மட்டுமன்றிப் புத்தறிவும் பெற்று அங்கிருந்து திரும்பினான்.

24. பொருள் வளர மொழி தேய்கிறது

வேணாட்டிலிருந்து கொண்டுவந்த செல்வம் பாண்டியன் நெடுஞ்சடையன் திட்டமிட்டது போலவே பாண்டிய நாட்டின் வறுமையின் கொடுமையை ஓரளவு குறைப்பதற்கு உதவியது. நெல்லும், அரிசியும் பிற உணவுப் பொருள்களும் ஏழை எளியோர்க்கு வழங்கப்பட்டன. வேளாண்மை, மழையின்மையால் நிலைத்துவிட்ட இடங்களில் ஏரி, குளம், கண்மாய் போன்ற நீர் நிலைகளை ஆழப்படுத்தும் வேலையும் அவற்றின் கரைகளைச் சீர்செய்யும் வேலையும் முடுக்கி விடப்பட்டன. தொழில் வாய்ப்பு ஏற்பட்டது மட்டுமன்றி எதிர் காலத்தில் இந்த நீர் நிலையங்களில் மழை நீர் பெரும் அளவில் சேமித்து வைப்பதற்கு வசதியும் மிகுந்தது. பழுதுபட்ட நெடுஞ்சாலைகளையும், தூண்களையும், விளக்குக் கம்பங்களையும் தூய்மையாக்கும் வேலையும் நாடெங்கும் எடுத்துக் கொள்ளப்பட்டது. இத்தகைய வேலைகள் செய்து, அவற்றிற்கான ஊதியமும் பெற்று மக்கள் வறுமையுடன் போராடும் ஊக்கமும் உள்ளத்திட்பமும் கொண்டனர். மீண்டும் பருவமழை பொய்க்காமல், தேவையான அளவு பொய்த்ததால் இயல்பு நிலை விரைவிலேயே திரும்பி, பாண்டிய நாடும், தமிழகம் முழுவதும் வளம் கொழிக்கும் நிலப்பரப்பாக மாறின.

பாண்டிய நாட்டு அமைச்சர் மாறன் காரி உடல் நலம் குன்றி இருப்பதாக அறிந்து அவரைக் காணச் சென்றான் சாத்தஞ்சாத்தன். நெடுஞ்சடையனின் தந்தையான பராங்குசன் மாறவர்மனின் காலம்முதலே அமைச்சராகவும் அதற்குமுன் படைத்தலைவராகவும் பணியாற்றியுள்ள மாறன் காரி முதுமைப் பருவத்தை அடைந்து விட்டது அவருக்கே விளங்கத் தொடங்கியது. சொந்த ஊரான களக்குடியில் மனைவி மக்களுடன் வாழவேண்டும் என்ற எண்ணம் சில நாள்களாக அவருக்கு இடையிடையே தோன்றியது. பாண்டிய நாட்டின் ஆட்சிப் பொறுப்பால் மதுரையிலிருந்து வெளியில் செல்வதற்கு நேரம் கிடைக்காமல் இருந்த நாள்களிலும் ஒரு நாள் அவகாசம் கிடைக்கும் பொழுது களக்குடிக்குச் சென்று திரும்புவது அவரால் எளிதில் முடிக்கக் கூடிய செயலாக இருந்தது இளமையில். இப்பொழுது நாள்கள் செல்லச் செல்ல களக்குடிக்குப் பயணம் செய்தால் அந்தக்

களைப்பு அகலவே ஒரு நாள் தேவைப்பட்டது. மதுரைக்குத் திரும்பினாலும், ஒரு நாள் முழுவதும் ஓய்வெடுத்தபின்னரே தன் வேலையைத் தொடங்க முடிந்தது. தொடங்கினாலும் போதிய விரைவில், எண்ணியாங்கு செய்து முடிக்காமல் களைப்பு மேலிட்டது. உள்ளம் இளமையும் வளமையும் கொண்டு விளங்கினாலும், உடல் ஒத்துழைக்க மறுத்தது.

உடல் நலம் குன்றியிருந்தாலும் சாத்தனை உற்சாகத்துடன் வரவேற்றார் மாறன் காரி சாத்தஞ் சாத்தனைச் சிறுவனாக இருந்த நாள்களிலிருந்து நன்கறிந்த அமைச்சர் அவனிடம் பேரன்பும் பெருமதிப்பும் வைத்திருந்தார். தான் உயிருக்குயிராகக் கொண்டொழுகும் பாண்டிய நாட்டின் எதிர்காலத்தில் பெரும் பங்கு வகிக்கப்போகும் ஒரு சிலரில் சாத்தன் மிகவும் முக்கியமானவன் என்பதை அவர் நன்கு உணர்ந்தவர். அவருடைய இளவலான மாறன் எயினன் அவருக்குப்பின் அமைச்சராகப்போவது உறுதியாயினும், மாறன் எயினனைவிட மிகவும் வயது குறைந்த சாத்தஞ் சாத்தன் அதற்கடுத்து அமைச்சராவான் என்று தன் மனத்தில் குறித்து வைத்திருந்தார் மாறன் காரி. பாண்டிய வேந்தனின் மனத்திலும் அதே கருத்து நிலவியது என்பதும் அவருக்குத் தெரியும். ஆகவே மிக முக்கியமான அரசியல் செய்திகளைக்கூட அவனோடு கலந்து பேசுவது அவருடைய பழக்கம். "என்ன சாத்தா! உன்னைத் தனியாகக் கண்டு பேசி எவ்வளவோ நாள்கள் ஆகிவிட்டன. நான் உடல் நலம் குன்றி இருப்பதால்தான் இப்பொழுது அதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. முதுமையும், பிணியும் என்னைத் தளரச்செய்தாலும் உன்போன்ற இளைஞனிடம் உரையாடும்பொழுது நானும் இளமையைத் திரும்பப்பெற்றது போல் தோன்றுகிறது எனக்கு" என்று கூறி அவனை வரவேற்றார் அமைச்சர் மாறன் காரி.

"அமைச்சர் பெருமானே! எனக்கும் அப்படியே! தங்களைப் போன்ற பெரியோரிடம் பேசும் வாய்ப்புக் கிடைக்கும் பொழுது அனுபவமும் அறிவும் ஒன்று சேர்ந்து வெளிவருவதால் நான் திடீரென்று முதிர்ச்சி பெற்றதுபோல் தோன்றும் எனக்கு. நான் பல ஆண்டுகள் பணியாற்றி அதன் மூலம் பெறும் அனுபவத்தைத் தங்களுடைய ஒருசில வார்த்தைகள் எனக்குத் தந்து விடுகின்றன. தங்களிடம் அடிக்கடி வந்து உரையாடி, தங்களுடைய விலை மதிப்பற்ற பொழுதை வீணாக்க விரும்பாததால்தான் நான் வருவதில்லை" என்று அடக்கமுடன் பேசினான் சாத்தன்.

"வேணாட்டில் வெற்றிபெற்றுத் திரும்பியவுடனேயே உன்னிடம் சில முக்கியமான செய்திகளைப் பற்றி விவரமாகப்

பேசவேண்டும் என்று எண்ணினேன். ஆனால் பலவிதமான வேலைகள் என் நேரத்தை முற்றிலுமாகக் கவர்ந்துகொண்டதால் உன்னை அழைத்துப் பேசுவதற்கு முடியாமல் போயிற்று. இப்பொழுது இரண்டு மூன்று நாள்கள் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அரண்மனை மருத்துவரே விதித்திருப்பதால் உன்னிடம் நெடுநேரம் பேசமுடியாவிட்டாலும், நீ பேசுவதைக் கேட்டுக் கொண்டிருக்கலாமே. ஆகவே நீ வந்தது மிகவும் நல்லது."

"குறிப்பாக என்னிடம் எதைப்பற்றிப் பேச விரும்பினீர்கள்?"

"வேணாட்டைப் பற்றித்தான் பேச விரும்பினேன். போரில் எவ்வாறு வெற்றி பெற்றீர்கள் என்பதைப் பற்றியல்ல! பதினாயிரம் வீரர்களைக் கொண்ட பெரும்படை, அதிலும் உன்னையும் உன் அண்ணனையும் போன்ற மாவீரர்கள் நடத்திச் செல்லும் படை வெற்றிபெறும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. நீ ஒரு சிறந்த போர்வீரன் மட்டும் அல்ல, மொழியறிவு பெற்றவன். எழுத்தாற்றல் உள்ளவன்! கவிதை எழுத வல்லவன். பலரோடும் உரையாடி அறிவை வளர்த்துக் கொள்ளும் இயல்புடையவன். அதனால்தான், நான் கேள்விப்பட்ட சில செய்திகளைப் பற்றி உன் கருத்தை அறியவேண்டும் என்று எண்ணினேன்"

"கேளுங்கள்! போர் முடிந்து, நமது நிபந்தனைகளை ஆய்வேள் ஏற்றபின் சில நாள்கள் நான் அங்கே தங்க நேர்ந்தது தங்களுக்குத் தெரியும் அல்லவா? அப்பொழுது நான் விழிஞத்தை மட்டுமன்றி, அருகிலுள்ள ஊர்களையும் மலைச்சாரல்களையும் சுற்றிப் பார்த்தேன். ஏராளமான பொதுமக்களிடம் பேசினேன். அந்த நாட்டின் சமுதாய வழக்கங்கள், பண்பாடு முதலியவற்றையும் ஓரளவு புரிந்துகொண்டேன். தாங்கள் கேட்கப் போகும் கேள்விகளுக்கு எனக்குத் தெரிந்தவரை விளக்கமாக விடையளிக்க முயற்சிக்கிறேன்! கேளுங்கள்" என்று அமைச்சரை ஊக்குவித்தான் சாத்தன்.

அமைச்சர் தம் சொற்களைத் தேர்ந்தெடுத்து எண்ணங்களைத் திரட்டிக்கொண்டு பேசுவது சாத்தனுக்கு நன்றாகத் தெரிந்தது.

"வேணாட்டிலும், சேரநாட்டிலும் மேற்குத்தொடர்ச்சி மலைக்கு மறுபுறம் இருக்கும் பாண்டிய நாட்டினரோடும், சோழ நாட்டினரோடும் பகைமை உணர்ச்சி மிகவும் வளர்ந்திருக்கிறது என்று ஓரிருவர் என்னிடம் கூறினர். பாண்டியரும், பல்லவரும் அவர்கள் இருவரும் பகிர்ந்து வைத்திருக்கும் சோழரும், கொங்கரும், சேர்ந்த தமிழ்நிலப்பரப்பின் ஒரு பகுதியினர்தான்

தாங்களும் என்ற எண்ணமே அவர்களிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துகொண்டிருக்கிறது என்று ஒரு கருத்து நிலவுகிறது. அவர்கள் பேசும் தமிழ்மொழியில் கூட மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் சொல்கிறார்கள். இதைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?"

சாத்தன் ஒரு பெருமூச்சு விட்டுப் பேசினான். "நானும் இதைப்பற்றித் தங்களிடம் பேசவேண்டும் என்று எண்ணியிருந்தேன். பாண்டிய வேந்தர் நாங்கள் விழிஞத்திற்குப் புறப்படும் முன் ஒரு நாள் என்னிடம் கூறியது இப்பொழுதும் என் நினைவில் நிற்கிறது. நான் முதன் முதலாக என் அமைச்சரின் கருத்தைப் புறக்கணித்து இந்தப் போரைத் தொடங்குகின்றேன். நம் நாட்டின் வறுமையின் கொடுமையைக் குறைப்பதற்காக வேணாட்டின்மீது படையெடுப்பது சரியல்ல என்பது அமைச்சரின் கருத்து என்று மன்னர் சற்று மனவருத்தத்துடன் கூறினார். அப்பொழுது பொதுவான ஒரு நீதிநெறி யைத்தான் தாங்கள் எடுத்துச்சொன்னீர்கள் என்று நான் நினைத்தேன். ஆனால் வேணாட்டில் நான் கண்டதும் கேட்டதும் என்னை ஆழ்ந்து சிந்திக்கவைத்தன. தாங்கள் மன்னனுக்குக் கூறிய அறிவுரையில் நீதி நெறிமட்டுமல்ல. ஒரு சிறந்த அரசியல் நெறியும் அடங்கியிருக்கிறது என்று உணர்ந்தேன். இந்தப் படையெடுப்பும், இதற்கு முன்பும் பாண்டிய வேந்தர்கள் வேணாட்டை அடிப்படுத்துவதற்காக மேற்கொண்ட படையெடுப்புகளும் நமக்குச் செய்த நன்மைகளைவிட இழைத்த தீங்கு அதிகம் என்று என் மனச்சாட்சி உறுத்தியது. பாண்டியர்கள் தங்கள் தேவைக்கு ஏற்பப் பொருள் திரட்டும் சுரங்கமாக வேணாட்டைக் கருதுகிறார்கள் என்ற எண்ணம் அந்நாட்டு அரசியல் தலைவர்களிடம் மட்டுமன்றி, பொதுமக்களிடம்கூட நிலவுகிறது. அதே கருத்து வேணாட்டின் வடக்கில் விரிந்து கிடக்கும் சேரநாட்டிலும் நிலவுகிறது. மேற்குத் தொடர்ச்சி மலையின் மேற்குப் பகுதி தமிழகம் என்னும் பொதுமை உணர்விலிருந்து விலகிப் போகிறதோ என்ற அச்சம் கூட என் மனத்தில் எழுகின்றது. அதற்கு வேறு ஒரு காரணமும் உள்ளது" என்று கூறி, ஓர், இடைவெளிக்குப்பின், அமைச்சரின் தூண்டுதலால் மேலும் தொடர்ந்து பேசினான் சாத்தன்.

"தமிழகத்தின் கிழக்குப் பகுதியான சோழ பல்லவ, பாண்டிய நாடுகளில் வெளிநாடுகளிலிருந்து வருபவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. ஆனால் மேற்குப் பகுதியான சேர நாட்டிலும் வேணாட்டிலும் பல்வேறு நாடுகளிலிருந்தும் பலவிதமான கலாச்சாரத்தையும், மொழிகளையும் கொண்ட மக்கள் ஏராளமாக வருகிறார்கள். கிரேக்கம், உரோமாபுரி,

அரேபியா போன்ற கடல்கடந்து வெகுதொலைவில் கிடக்கும் நாடுகளிலிருந்து வணிகர்கள் வருகிறார்கள். வடநாட்டிலிருந்து குடகு வழியாக வடமொழிப் புலவர்களும், வேத விற்பன்னர்களும் வேதாந்திகளும் வந்து மக்களுடன் கலந்து உறவாடுகின்றனர். நான் விழிஞத்திலுள்ள ஒரு வேத பாட சாலைக்குச் சென்றேன்; அங்கு கல்வி பயிலும் மாணவர்கள் வடமொழியை விரும்பிக் கற்கின்றனர். காளிதாசர் போன்ற கவிஞர்களின் கவிதைகளிலும் நாடகங்களிலும் புதுமையும் புலமையும் துய்த்து மகிழ்கின்றனர். வடமொழியிலுள்ளவையும், தமிழ்மொழியில் இல்லாதவையும் ஆன புதிய ஒலிவகைகளும், உச்சரிப்புகளும் அங்குள்ளவர்களின் மனத்தைக் கவர்கின்றன. இராமாயணம், மகாபாரதம் போன்ற புராணங்கள் அவர்களின் எண்ணப்போக்கில் செல்வாக்குப் பெற்று இறைவணக்கமாக மாறிவிட்டன. இங்கே தோன்றிய ஆழ்வார்களும் நாயன்மார்களும், தமிழ்மொழியிலேயே பக்திப் பாடல்களைப் பாடி மக்களிடையே பரப்பிய பக்தியும், ஆசாரமும் மொழிக்குத் தீங்கிழைக்காமல் காத்ததுபோல் அங்கு யாரும் செய்யவில்லை.

அங்கு வாழும் மக்களின் பேச்சிலும் எழுத்திலும் வடமொழிக் கலப்பு பெருகிவருகிறது. மணிப்பிரவாளமான மொழியின் சாயல்கள் இப்பொழுது புலப்படத் தொடங்கியுள்ளன. இன்னும் ஒன்றிரண்டு நூற்றாண்டுகள் இந்த நிலை தொடர்ந்தால் அந்தப் பகுதிகளில் தமிழுக்கு மாற்றாக ஒரு புதிய மொழியே வழங்கத் தொடங்குமோ என்றும் அஞ்சுகிறேன் நான்" என்று கவலை மிகப் பேசினான் சாத்தன்.

அமைச்சர் மாறன் காரி பலமாகத் தலையாட்டினார். "அதைத்தான் நானும் குறிப்பிட்டேன். வடமொழி வளம் மிகுந்த மொழி. தலைசிறந்த இலக்கியங்கள் வடமொழி வல்லுநர்களால் இயற்றப்பட்டுள்ளன. நான்கு வேதங்களும், உபநிஷத்துக்களும் மதக் கொள்கைகளை எடுத்துரைப்பதோடு இலக்கியச் சுவையும் மிக்கவை. நானும் வடமொழி பயின்றுள்ளேன். நீயும் ஓரளவு வடமொழியைக் கற்றுக்கொண்டிருக்கிறாய். நமது ஆழ்வார்களும், நாயன்மார்களும் வடமொழி அறிந்தவர்களே. வடமொழிப் புராணங்களும், இலக்கியங்களும் நமது மதவழிபாட்டிலும் செல்வாக்குப் பெற்றுள்ளன. நமது தமிழகத்தின் பழங்காலத் தெய்வமான கொற்றவை பார்வதியின் அவதாரமாகிவிட்டது. குறிஞ்சிக் குமரன், சிவ பார்வதியரின் திருமகன் ஆகிவிட்டான். திருமால் விஷ்ணுவாகி, விஷ்ணுவின் அவதாரமான கண்ணன் நமது வைணவத்தின் மூலக் கடவுள் ஆகிவிட்டான். இவ்வாறு

வடநாட்டினரின் கலாச்சாரமும், வாழ்க்கைக் கூறுகளும், யாகம், வேள்வி போன்ற மதச் சடங்குகளும், சாதிப் பிரிவுகளும் நமது சமுதாயத்தின் கூறுகளாக வளர்ந்து விட்டன. ஆனால் வடமொழி எவ்வளவு செல்வாக்குப் பெற்றாலும் வடவரின் வாழ்க்கை நெறி நம்மை எவ்வளவு ஆட்கொண்டாலும், நம் தமிழ்மொழியின் செம்மையையும் சிறப்பையும் நாம் கைவிடவில்லை. வடமொழியின் சிறந்த அம்சங்கள் பலவற்றையும் நம் சிவனடியார்களும், ஆழ்வார்களும் அவர்களுடைய பாடல்களில் உட்கொண்டு, தமிழுக்கு அழகும், விரிவும் சேர்த்தார்கள். வடமொழியின் வனப்பில்மனமிழந்துதாய்மொழியானதமிழைப்புறக்கணிக்கவில்லை. ஆனால் பரணர் இளங்கோவடிகள் போன்ற பெரும் புலவர்களும் தமிழில் முதல் காப்பியத்தைப் படைத்தோரும் பிறந்து, வாழ்ந்து, அழியாத இலக்கியங்களை இயற்றிய வேணாட்டிலும் சேரநாட்டிலும் தமிழ் சிதையத் தொடங்கியுள்ளது என்பதை என்னால் கற்பனைசெய்து கூடப் பார்க்க முடியவில்லை" என்று தன்னுடைய மெய்வருத்தத்தையும் மறந்து உணர்ச்சி பொங்கப் பேசினார் அமைச்சர்.

"முதல் காப்பியத்தைப் படைத்த இளங்கோவடிகள் தம்முடைய காப்பியத் தலைவியாகிய கண்ணகியின் இறுதி நாள்கள் சேரநாட்டில் கழித்ததாக முடித்திருப்பதால் கண்ணகி வழிபாடு இன்றும் அங்கே காணப்படுகிறது. கண்ணகி மலைமேல் ஏறிச்சென்றதாகக் கருதப்படும் மலை உச்சியில் மங்கள தேவி கோயில் இருப்பது போலவே, வேணாட்டில் விழிஞத்திற்கு அருகில் ஆற்றுக்கால் என்னும் இடத்தில் கண்ணகிவழிபாடு நடக்கிறது. "ஆற்றுக்கால் அம்மை" என்று வணங்கப்படும் தெய்வம் கண்ணகியே என்பதில் ஐயமில்லை. தாங்கள் கூறியது போலவே வேணாட்டிலும் சேரநாட்டிலும் உள்ள கொற்றவை பார்வதியின் அவதாரமாகவே மாறி விட்டாள். மலை முகட்டில் கோவில் கட்டி, மக்கள் விரதம் இருந்து தொழுது வரும் ஐயப்பன் என்னும் தெய்வமும், அரிஅர சுதன் ஆக வணங்கப்படுகிறான். இவ்வாறு வடவர் புராணங்களும் வடமொழி இலக்கியச் செல்வாக்கும் அங்கே பரந்து விரிந்து உள் நாட்டுக் கலாச்சாரத்துடன் கலந்து விளங்குகின்றன. ஆனால் பாண்டிய நாட்டிலும் சோழ நாட்டிலும்போல அல்லாமல் அங்கே அவை தமிழ்மொழியின் மீதும் ஆதிக்கம் செலுத்தி அதன் தேய்வுக்கு வழிகோலுவதாகத் தோன்றுகிறது" என்று அமைச்சரின் கருத்தோடு இசைவு கூறினான் சாத்தன்.

"தமிழகத்தை, மேற்குத் தொடர்ச்சிமலை, வடக்கிலிருந்து தெற்குநோக்கி வியாபித்து, இரண்டு பகுதிகளாகப் பிரிந்துள்ளது.

மேற்குப் பகுதியான சேரநாடு கிழக்குப் பகுதியோடு ஒப்பிடும் பொழுது பரப்பிலும், மக்கள் தொகையிலும் மிகவும் சிறியது. பருவ மழை மிகுதியால் வளம் கொழிக்கும் மலைப்பகுதிகளும், வற்றாத ஆறுகளும், அவற்றின் நீரால் வாடாமல் வளரும் பயிர்களும், செடி, கொடிகளும் கொண்டது. பாண்டிய சோழ பல்லவ நாடுகளோ பரப்பிலும் மக்கள் தொகையிலும் பன் மடங்கு பெரியவை. பருவமழையைப் பெரிதும் நம்பியுள்ளவை. ஆறுகளில் நீர் அளவு குறைந்தால் வளம் குன்றும் நிலைமை நேரிடக் கூடியவை. இவ்வாறு இயற்கையே வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகை" இருவிதமாகப் பிரித்துவைத்துள்ளது. இந்தப் பின்னணியில் சேரநாட்டிலும், அதன் தென்கோடியாகிய வேணாட்டிலும் இரண்டு விதமான படையெடுப்பு நடந்துள்ளது. ஒன்று மொழியாலும், பண்பாட்டாலும் ஏற்பட்டது. அன்பும் அறிவும், கவர்ச்சியும் காட்டி, அமைதியாக நிகழ்ந்த படையெடுப்பு அது. வன்முறை சற்றும் இல்லை. மக்களுக்கோ, மன்னனுக்கோ எவ்விதமான அல்லலும் தொல்லையும் ஏற்படவில்லை. அவர்கள் அந்தப் படையெடுப்பை, அமைதிப் புரட்சியை ஆவலுடன் வரவேற்றனர். இரண்டாவது படையெடுப்பு பாண்டியர் படையெடுப்பு! சயவர்மன், அரிகேசரி மாறவர்மன், கோச்சடயன் ரணதீரன் ஆகிய பாண்டிய வேந்தர்கள் வேணாட்டின் மேல் படையெடுத்துச் சென்றனர். படையெடுத்துச் செல்லும் மன்னன் எவ்வளவு நல்லவன் ஆயினும், நீதிநெறியைத் தவறாமல் கடைப்பிடிப்பவன் ஆயினும், ஆவும், ஆனியற் பார்ப்பன மக்களும், பெண்களும், குழவியரும் கொடுமைக்குள்ளாகக் கூடாது என்று விதிப்பவன் ஆயினும், படையெடுப்பு என்றாலே அது கொடுமை நிறைந்ததாகத்தான் இருக்கும். கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற இழிசெயல்கள் எந்தப் படையெடுப்பிலும் தவறாமல் நடக்கும் என்பதை யாராலும் மறுக்க முடியாது. போர்வீரர்களை விட அதிகமாகத் துன்பம் அனுபவிப்பது பொது மக்களே! அந்தத் துன்பம் விரைவிலேயே படையெடுக்கும் பகைவனிடம் வெறுப்பாக மாறிவிடுகிறது. அதுதான் சேரநாட்டிலும் அதன் சிற்றரசான வேணாட்டிலும் நிகழ்ந்துள்ளது. தமிழகத்தின் ஒரு பகுதியான தங்களை அதே தமிழகத்தின் பகுதியான பாண்டிய நாட்டினர், தம்முடையபடைபலத்தாலும்எண்ணிக்கைப்பெருக்காலும் அடக்கியாள முயல்கிறார்கள் என்றும், தங்கள் செல்வத்தைக் கொள்ளையடித்துச் செல்கிறார்கள் என்றும் அங்கே நம்புகிறார்கள். அதனால் விளைந்த வெறுப்பு தமிழகத்தின் ஒருமைப்பாட்டைத் தகர்த்துக் கொண்டிருக்கிறது. தமிழ்

மொழியையும் தாழ்த்திக் கொண்டிருக்கிறது. இதை நாம் தொடர்ந்து கொண்டிருந்தால் நாளடைவில் அந்தப் பகுதி வேறு மொழிபேசும் நிலப்பரப்பாக மாறி,தமிழகத்திலிருந்தே பிரிந்துவிடுமோ என்று அஞ்சுகிறேன் நான். அதனால் தான் இளைஞரான நம் மன்னரிடம் வேணாட்டின் மீது படையெடுப்பது நல்லதல்ல என்று என் கருத்தை நான் உறுதியாக வெளியிட்டேன்" என்று விளக்கியுரைத்தார் மாறன் காரி.

"வேணாட்டில் பல நாள்கள் செலவழித்து விட்டு வந்த எனக்குத் தங்கள் அறிவுரை சாலச்சிறந்தது என்பது நன்கு விளங்குகிறது. தன்னுடைய நாட்டு மக்களின் குறைகளைத் தீர்த்து, நல்வாழ்வை அமைத்துக் கொடுப்பது ஓர் அரசன் கடமை என்ற கொள்கைப்படி நமது மன்னர் அயல் நாட்டின் மீது படையெடுத்துப் பொன்னும் பொருளும் கொண்டு வந்தார் என்பது உண்மையே. அந்த வகையில் அவரைக் குறை கூறவோ குற்றம் சாட்டவோ முடியாது. ஆனால் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் இந்த நாட்டின் வரலாற்றையே திருப்பக் கூடியவை என்பது நமக்குப் புரிகிறது. இப்பொழுது பாண்டியன் நெடுஞ்சடையனின் படையெடுப்பு நம்மீதுள்ள வெறுப்பை மேலும் அதிகமாக்கியுள்ளது என்றுதான் நானும் நம்புகிறேன். நடந்தவற்றை எண்ணி நொந்து கொள்வதால் பயனில்லை. இனிமேல் நாம் என்ன செய்யவேண்டும் என்பதை ஆராயவேண்டும்" என்று ஆக்கவழிகளைத் தேடினான் சாத்தன்.

"சாத்தா! நான் இன்னும் சில நாள்களில் என் தலையில் ஏறியிருக்கும் அமைச்சர் என்னும் சுமையை இறக்கிவைக்கப் போகிறேன். என் உடல்நிலை குன்றியதோடு, உள்ளமும் அமைதியை நாடுகிறது. நான் வணங்கும் தெய்வமான பெரியாழ்வார் இட்ட கட்டளையை நிறைவேற்றப் போகிறேன். ஆனைமலையில் திருமால் கோயில் கட்டும் பணியைத் தொடங்கப் போகிறேன். மன்னரிடம் இன்னும் என் முடிவை அறிவிக்கவில்லை ஆயினும் மன்னர் என் கோரிக்கையை ஏற்றுக் கொள்வார். இதை ஏன் உன்னிடம் சொல்கின்றேன் தெரியுமா? இனிமேல் என்ன செய்யவேண்டும் என்று நீ என்னிடம் கேட்டாய் அல்லவா! இனிமேல் செய்யவேண்டியவற்றை, நீயும், உன்னைப் போன்ற இளைஞர்களும் நன்கு சிந்தித்து முடிவு செய்ய வேண்டும். பாண்டியநாடு மட்டுமன்றி தமிழகம் முழுவதும் சிறந்து விளங்கும் வழிகளைத் தேடிக் கண்டுபிடித்து அதற்கேற்றவாறு செயலாற்றவேண்டும். இந்த முதியவனால் நல்வாழ்த்துக் கூறத்தான் முடியும்" என்று சாத்தனுக்குப் பெரும் பொறுப்பைக் கொடுத்து நல்வாழ்த்தும் கூறினார் அமைச்சர்.

25. தேரில் வந்த ஊர்வசி

"அமைச்சர் மாறன் காரி பேசுவதைக் கேட்டால் அவர் போரின் கொடுமையைப் பற்றியும், அதனால் பொதுமக்களுக்கு நேரும் இன்னல்களைப்பற்றியும் எவ்வளவு ஆழமாகச் சிந்திக்கிறார் என்பது நன்றாக விளங்கும். போர்க்களம் பல கண்டு, பகைவரைச் சாடி பாண்டிய வேந்தர்க்காகப் பல வெற்றிகளைக் குவித்த பெரும் படைத் தலைவர் அவர் என்பதை அறிந்தவர்களுக்குத்தான் அவருடைய சொற்களுக்கும், செயலுக்கும் உள்ள முரண்பாடு விளங்கும். ஆனால் அதைப் பற்றி மேலும் ஆராய்ந்தால் அது முரண்பாடு அல்ல என்றும், அனுபவத்தின் வெளிச்சத்தில் அவர் கண்டறிந்த உண்மை என்றும் தெரிய வரும்" என்று ஓரளவு வியப்பும் ஆனால் அதே நேரத்தில்பாராட்டும் கலந்து பேசினான் சாத்தன்.

இளவரசி தேவந்தி அவன் சொன்னவற்றை நன்கு புரிந்துகொண்டவள் போல் தலையாட்டினாள்.

"ஆம். நம் அமைச்சர் சேனாதிபதியாகப் பொறுப்பேற்றுப் பாண்டியர் படைகளைப் போர்க்களத்தில் தலைமையேற்று நடத்திய வீரச்செயல்களைப் பற்றி என் அன்னை பேசுவதை நான் பலமுறை கேட்டிருக்கிறேன். அன்னையின் சகோதரர்கள் பகைவர்களோடு போர் புரிய நேர்ந்தபொழுது, மாறன் காரி அவர்களுக்கு உதவியாகப் பாண்டியர் படையை நடத்தி வந்து பகைவர்களை விரட்டியடித்து அந்தப் போரின் போக்கையே மாற்றினார் என்றும், கங்க அரசரின் மகளான தன்னைப் பாண்டிய மன்னரான மாறவர்மனுக்கு மணம் முடித்து வைத்தவர் அவர்தான் என்றும் அன்னை கூறுவார். அத்தகைய மகாவீரர் போரை வெறுத்துப் பேசினால் அது விந்தையாகத்தான் தோன்றும், ஆனால் நீங்கள் சொன்னதுபோல் அமைச்சரானபின் தான் பெற்ற அனுபவத்தாலும் அறிவு வளர்ச்சியாலும் அவ்வாறு பேசுகிறார் என்றுதான் நானும் நினைக்கிறேன்" என்றாள் அவள்.

சாத்தன் அரசுப் பணிகளுக்காக வெளியூர் செல்லாமல் மதுரை மாநகரிலேயே இருக்கும் நாள்களில் அவனும் இளவரசியும் தவறாமல் மாலையில் சந்திப்பது வழக்கம். கொற்றவை கோயிலை அடுத்து அமைந்திருந்த பூங்கா எப்பொழுதும் அந்தச்

சந்திப்பிற்கு வாய்ப்பும் வசதியும் அளித்தது. அவள் பாண்டிய நாட்டின் இளவரசியாகவும், அவன் மன்னரின் நம்பிக்கைக்குரிய தளபதியாகவும் வெளியுலகின் பார்வையில் நடந்துகொண்டாலும் அந்தப் பூங்காவில் மல்லிகையும் முல்லையும் மணம்பரப்பும், அல்லி மலர்க் குளத்தின் கரையில் அவர்கள் காதலர்களாகவே வாழ்ந்தனர். நாட்டு நடப்பும், அரசியல் விளைவுகளும், அரண்மனைச் செய்திகளும் அவர்களுடைய காதல் பொங்கும் கரும்புச் சொற்களிடையே இடம்பெறுவதுண்டு. அதனால்தான் அன்று பகலில் அமைச்சரோடு உரையாடிய விவரங்களை இளவரசியிடம் எடுத்துரைத்தான் சாத்தன்.

"நானும் போர்ப்பறையின் முழக்கம் கேட்டால் ஆர்ப்பரித்துக் குதிப்பவன்தான். என் வாளிலும் அதை வீசும் என்னுடைய திறமையிலும் பெருமை கொள்பவன். போர்க்களத்தில் வீரத்துடன் போராடி, எதிரிகளைப் பதறச் செய்யும் புகழே ஓர் ஆண்மகனின் வாழ்க்கையின் இலக்கு என்று எண்ணுபவன். இதுவரை நான் பங்கு கொண்ட போர்களில் வெற்றி மட்டுமே கண்டேன். ஆகவே தோல்வி அடையும் பகைவனின் தொல்லைகளை அனுபவிக்கவோ அதைப் பற்றி எண்ணிப்பார்க்கவோ வாய்ப்பு எழவில்லை. வேணாட்டை வென்றபோதும் வெற்றிக் களிப்பு மேலோங்கி நின்றது. ஆயினும் அதற்குப்பின் தோல்வியடைந்த நாட்டில் சில நாள்கள் தங்க நேர்ந்தது. அப்பொழுதுதான் போர்க்களத்தில் பெறும் வெற்றி தோல்வியுடன் எல்லாம் முடிந்து விடுவதில்லை. தோல்வியடைந்த நாட்டில் வாழும் மக்களுக்கு வெற்றிபெறுவோர் மீது எவ்வளவு வெறுப்பு ஏற்படுகிறது என்பதை என்னால் உணர முடிந்தது. நாம் கேட்பதை எல்லாம் தருவதைத் தவிர வேறுவழி இல்லை வேணாட்டு மன்னனுக்கு. ஆனால் அவற்றையெல்லாம் திரட்டுவதற்காக அந்நாட்டு மக்களைக் கசக்கிப் பிழிந்தே ஆகவேண்டும். அத்தகைய போர்கள் ஒவ்வொரு தலைமுறையிலும் நிகழும்பொழுது அந்த வெறுப்பு பன்மடங்காகப் பெருகிவிடுகிறது. இப்பொழுது பாண்டியர் மீது வேணாட்டு மக்கள் கொண்டிருக்கும் வெறுப்பு அவர்களைத் தமிழகத்திற்கே எதிராக மாற்றும் நிலைமையை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. அதை எண்ணிப் பார்க்கும் பொழுது எனக்கு அதிர்ச்சி ஏற்படுகிறது. அதைத்தான் அமைச்சரும் என்னிடம் கூறினார். போர் சிலருக்கு நன்மை பயக்கும்பொழுது பலருக்குத் தீங்கிழைக்கிறது என்பதில் ஐயம் இல்லை" என்று உணர்ச்சி வசப்பட்டுப் பேசினான் சாத்தன்.

தேவந்தி அவனை அமைதிப்படுத்தும் குரலில் பேசினாள். "போரின் கொடுமையைப் பற்றி அதிகமாகச் சிந்திக்காதீர்கள். கலிங்கப் போரை வென்றபின் பிணக்குவியல்களையும், கை கால் இழந்த வீரர்களையும் கண்டு மனம் நொந்து, போரையே அடியோடு வெறுத்து, புத்தமதத்தைத் தழுவிய அசோகச் சக்கரவர்த்தியைப்போல் மாறிவிடாதீர்கள். ஏனென்றால் அதியனிடம் செய்த சபதத்தை நிறைவேற்றி என்னை மணம் புரிவதற்காவது போர் செய்துதான் ஆகவேண்டும். அதற்குப்பின் வேண்டுமானால் போர் செய்வதை நிறுத்த முடியுமா என்று பார்க்கலாம்" என்று நயத்துடன் பேசி, தன் வேட்கையையும் வெளியிட்டாள் அவள்.

"இல்லை! இல்லை! நான் என் சபதத்தை மறக்க வில்லை. அதை நிறைவேற்றியே தீருவேன். நான் போரை வெறுக்கவும் இல்லை. நம் நாட்டின்மீது பகைவன் படையெடுத்து வந்தால் போர் புரிந்துதானே ஆகவேண்டும்? போர் வராமல் காக்கவேண்டும் என்பது ஒரு சிறந்த கொள்கை. அதன் பொருள் கோழையாக வாழவேண்டும் என்பதல்ல. எளியவனை வலியவன் வாட்டுவதற்காக ஒரு போர் நிகழக்கூடாது என்பதுதான் நான் வலியுறுத்தப் போகும் கருத்து. தக்க தருணம் வரும்பொழுது அதை நம் மன்னரிடமும் நான் எடுத்துரைப்பேன்." என்று உறுதியுடன் கூறினான் சாத்தன்.

அடுத்தநாள் அரண்மனைக்குள் வேலையாக இருந்த அண்ணனைக் கண்டுபேசும்பொருட்டு அரண்மனை வாயிலில் நுழையப் போகும்பொழுது அன்னை மகாராணியாரின் தேர் வெளியில் போவதற்காக வந்து கொண்டிருப்பதைக் கண்ட சாத்தஞ்சாத்தன் வழிவிட்டு ஒதுங்கி நின்றான். தேர் அவன் நின்ற இடத்தைக் கடந்து சென்றபொழுது தேரின் திரைச் சீலையைச் சற்றே விலக்கியது ஓர் அழகான கை. அந்தக் கைவிரல் ஒன்றில் ஒளி வீசும் கணையாழி மிளிர்ந்தது. உற்று நோக்கிய சாத்தன், அந்தக் கையின் அழகிற்கு ஏற்ற எழில் பொங்கும் முகத்தையும் கண்டான். அழகும் இளமையும் பூத்துக் குலுங்கும் அந்தப் பெண் அன்னை மகாராணியல்ல என்பதை அவன் நன்குணர்ந்தான். அது பாண்டியன் நெடுஞ்சடையனின் மனைவியும் பட்டத்தரசியுமான இளவெயினியும் அல்ல. அது யாராக இருக்கும் என்று அவனால் அடையாளம் காண முடியவில்லை. எனவே சேனாதிபதியிடமே வினவினான்.

"அண்ணா! நான் சற்றுமுன் அரண்மனை வாயிலில் அன்னை மகாராணியின் தேர் செல்வதைக் கண்டேன். அதற்குள் வேறொரு

இளம் பெண்ணும் இருந்தாள். அவள் யார் என்று தங்களுக்குத் தெரியுமா?"

"தெரியாதே, நான் ஓர் இளம் பெண்ணைக் கண்டால் அவள் யார் என்று அறியத் துடிக்கும் வயதைத் தாண்டிவிட்டேன்" என்று கூறித் தன் இளவலைக் கேலிசெய்தார் சேனாதிபதி. பின்னர் தொடர்ந்து பேசினார்." அவள் அழகியாகவும் இருந்திருக்க வேண்டும். அதனால்தான் நீ என்னிடம் அவளைப்பற்றிக் கேட்கிறாய் அல்லவா?"

"அவள் அழகிதான்! இளம்பெண்தான். ஆனால் நான் கேட்டது அதனால் அல்ல. அரண்மனைக்குள் அன்னை மகாராணியுடன் தேரில் செல்லும் அளவுக்கு அவரோடு நெருக்கம் உள்ள ஆள் யார் என்று நாம் தெரிந்துகொள்ள வேண்டும் அல்லவா? அதற்காகத்தான் கேட்டேன். அவள் ஒரு பணிப்பெண் அல்ல என்பது உறுதி" என்று மேலும் விளக்கினான் சாத்தன்.

"நீ இப்பொழுது ஒற்றர் படைத்தலைவனின் பொறுப்பையும் ஏற்றிருப்பதால் உனக்குச் சந்தேகங்கள் பலவும் தோன்றுகின்றன. உன்சந்தேகத்தை இப்பொழுதேதீர்த்துவைக்கிறேன்" என்று பதில் .அளித்த சேனாதிபதி, ஒரு காவலனை அழைத்து அரண்மனையின் தலைமைக் காப்பாளனை அழைத்துவர ஆணையிட்டார்.

தன் முன் வந்து வணங்கி நின்ற தலைமைக் காப்பாளனிடம் சேனாதிபதி வினவினார்.

"சற்று முன் அன்னை மகாராணியுடன் தேரில் சென்ற இளம் பெண், யார்?"

"அன்னை மகாராணியின் உறவினளாம். கங்க நாட்டிலிருந்து வந்திருக்கிறாள். ஆனால் நன்றாகத் தமிழ்பேசுகிறாள். காஞ்சியில் சில ஆண்டுகள் வாழ்ந்ததால் தமிழில் பேசவும் எழுதவும் கற்றுக் கொண்டாளாம்."

"கங்க நாட்டிலிருந்து தனியாகவா வந்தாள்?"

"காஞ்சியிலிருந்துதான் இப்பொழுது வந்திருக்கிறாள். மூன்று நாள்களுக்குமுன் இரு வீரர்களின் துணையுடன் ஒரு தேரில் வந்தாள். அவள் சிறு குழந்தையாக இருந்தபொழுதுதான் அன்னை மகாராணியார் அவளைக் கண்டார்கள். அவர்களுடைய தாய்வழியில் உள்ள உறவாம்".

"அவள் இங்கு வந்து எத்தனை நாள்கள் ஆகின்றன?" சாத்தன் வினவினான்.

"நான்கு நாள்கள் ஆகிவிட்டன"

"அரண்மனைக்குள் தனியாக வசிக்கிறாளா அல்லது அன்னை மகாராணியுடன் வசிக்கிறாளா?" என்று மேலும் வினவினான் சாத்தன்.

"அன்னை மகாராணியின் கட்டளைப்படி அவர்களுடைய அறை இருக்கும் பகுதியில் இறுதி அறையைத் தூய்மையாக்கி அவளுக்குக் கொடுத்தேன்."

"அந்த அறையிலிருந்து வெளியில் போவதற்கு வேறு வழியும் உண்டு அல்லவா?"

"ஆம். பின்புறக் கதவைத் திறந்து தோட்டத்திற்குள் செல்ல முடியும்."

கேள்விகளுக்குப் பதிலளித்துவிட்டு அரண்மனை தலைமைக் காப்பாளன் சென்ற பின்னர், சேனாதிபதி சாத்தனிடம் வினவினான்.

"உன்னுடைய வினாக்களையும் கேட்டு, உன்னுடைய முகத்தையும் பார்க்கும்பொழுது, உனக்கு இப்பொழுது புதிய சந்தேகங்கள் முளைத்துள்ளனவோ என்று எனக்குச் சந்தேகம் தோன்றுகிறது. உறவினளான ஓர் இளம்பெண் அன்னை மகாராணியுடன் அரண்மனையில் வசிப்பதில் என்ன தவறு இருக்கிறது?"

"நீங்கள் சொல்லும் விதத்தில் பார்த்தால் அதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால் பாண்டிய மன்னருக்குப் பகைவர்கள் பலர் இருப்பதால் அரண்மனையில் வசிக்கும் அனைவரும் முற்றிலும் நம்பத் தக்கவர்களாக இருக்கவேண்டும். இந்த இளம் பெண்ணைப் பற்றி நமக்கு ஒன்றுமே தெரியாது. சிறு குழந்தையாக அவள் இருந்தபொழுது அன்னை மகாராணியார் அவளைக் கண்டதுதானாம். ஆகவே அவர்கள் குழந்தையாகக் கண்ட ஆள்தான் இவள் என்று அன்னை மகாராணியாலும் உறுதியாகச் சொல்ல முடியாது. அவளைப் பற்றிய எல்லா விவரங்களையும் அறிந்து, அவளால் மன்னருக்கோ, அரச குடும்பத்திற்கோ எவ்விதமான தீங்கும் ஏற்படாது என்பதை உறுதி செய்ய வேண்டியது நம் கடமை. நீங்கள் கூறியவாறு இப்பொழுது ஒற்றர் படைத் தலைவன் பொறுப்பும் என்னிடம் தரப்பட்டிருப்பதால்,

அந்த வேலையை நான் தான் செய்தாக வேண்டும்" என்று சுட்டிக் காட்டினான் சாத்தன்.

"இவ்வளவு பாதுகாப்பு மிகுந்த அரண்மனையில் தலைசிறந்த வீரரான நம் மன்னரை ஓர் இளம்பெண் தன்னந்தனியாளாக என்ன செய்துவிடமுடியும்? நீ இல்லாத அபாயத்தை மிகைப்படுத்தித் தேவையில்லாமல் கவலைப்படுகிறாய் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. ஆயினும் நான் உன்னைத் தடைசெய்ய மட்டேன். உன் விருப்பம்போல் செய்" என்று தன் கருத்தை வெளியிட்டார் சேனாதிபதி.

அன்று மாலை வழக்கம்போல் பூங்காவில் இளவரசி தேவந்தியுடன் உரையாடியபொழுது சாத்தன் அவளிடம் வினவினான். "அரண்மனையில் ஒரு புதிய விருந்தாளி வந்திருப்பதாகத் தெரிகிறதே. யார் அது?"

"புதிய விருந்தாளியா? ஓ! ஊர்வசியைச் சொல்கிறீர்களா?"

"ஊர்வசி என்று பெயரா? அது எனக்குத் தெரியாது. இன்று நான் அரண்மனை வாயிலில் அன்னை மகாராணியின் தேரில் ஓர் இளம் பெண்ணைக் கண்டேன். யார் அவள்?"

"ஓர் இளம்பெண்ணைக் கண்டவுடன் அவள் யார் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமா!" என்று குறும்பாகக் கேட்டாள் தேவந்தி.

"அது ஓர் இளம்பெண் என்பதால் அல்ல. அரண்மனையில் வசிப்பதால் யாராக இருந்தாலும் அந்த ஆளைப்பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதனால்தான் கேட்டேன்."

"அவள் இளமை மட்டுமல்ல அழகும் உள்ளவள் அதனால்தான் எனக்குச் சந்தேகம் வந்தது" என்று தன் பெண் மனத்தைக் காட்டினாள் அவள்.

"என்னைப் பொறுத்தவரை இந்த உலகின் பேரழகி என் இதயத்தில் வீற்றிருக்கிறாள். அந்த இடத்தை வேறு எந்தப் பெண்ணாலும் பிடிக்க முடியாது. ஆகவே, உன் பெண்ணுள்ளத்தில் தோன்றிய ஐயத்தை அகற்றிவிட்டு, அவள் யார் எதற்காக இங்கு வந்திருக்கிறாள், எவ்வளவு நாள் அரண்மனையில் வசிக்கப் போகிறாள் என்ற தகவல்களைச் சொல்" என்று தன்னுடைய

இதயத்தைத் திறந்து காட்டி அவளுடைய உள்ளத்தைக் கிள்ளினான் சாத்தன்.

"ஊர்வசியை நான் இதற்குமுன் கண்டதில்லை. அவள் மதுரைக்கு முதன்முதலாக வந்திருக்கிறாள். நான் என் அன்னையின் நாடான கங்க நாட்டிற்குக் குழந்தைப் பருவத்தில் மூன்று முறை சென்றதாக நினைவு. ஆனால் எல்லாமே ஐந்து அல்லது ஆறு வயதிற்குமுன் நிகழ்ந்ததால் எனக்குச் சரியாக நினைவில் வரவில்லை. என் அன்னைக்குக்கூட அவளைச் சரியாக நினைவில்லை. அவர்களுடைய சகோதரர்களில் ஒருவராகிய மாயவர்மன் என்பவருடைய மனைவியின் தங்கை மகள் தான் இந்த ஊர்வசி! எனக்கும் அவளுக்கும் ஒரே வயது என்றும் நாங்கள் ஒன்றாக விளையாடியிருக்கிறோம் என்றும் அன்னை சொல்கிறார். எனக்கு நினைவில்லை. அந்தக் குடும்பத்தில் சில சிக்கல்கள் ஏற்பட்டு அவளுடைய தந்தை அங்கிருந்து வெளியேறி, காஞ்சியில் போய் வாழ்ந்ததாகவும் தெரிகிறது. அவள் சிறுவயது முதலே காஞ்சியில் வாழ்ந்ததாலும், அங்குள்ள பாடசாலையில் கல்விகற்றதாலும் நன்றாகத் தமிழ்பேசுகிறாள். இவ்வளவுதான் அவளைப் பற்றி எனக்குத் தெரிந்த செய்திகள்" என்று எடுத்துரைத்தாள் இளவரசி

"இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு, இப்பொழுது வந்திருப்பது குழந்தைப் பருவத்தில் கண்ட ஊர்வசிதான் என்று அன்னை மகாராணியார் எப்படித் தெரிந்து கொண்டார்கள்? என்று மேலும் ஆராய்ந்தான் சாத்தன்.

"கங்க அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் குலச் சின்னமாகக் கொண்டு ஒழுகும் ஓர் இலச்சினை பொறித்த கணையாழி அவளும் அணிந்திருக்கிறாள். அவளுடைய நிறமும் முகச்சாடையும் என் அன்னைக்கு அவளை எளிதில் அடையாளம் கண்டுகொள்ளுமாறு உள்ளது. உங்களுக்கு இன்னும் இத்தகைய சந்தேகங்கள் இருந்தால் ஒன்று செய்யலாம். நான் நாளைக்கு அவளை என்னோடு இங்கே அழைத்து வருகிறேன். நீங்களே அவளிடம் கேட்கவேண்டியதை எல்லாம் கேட்டுக் கொள்ளுங்கள்" என்று யோசனை கூறினாள் தேவந்தி. சாத்தனும் அதற்கு ஒப்புதல் கூறினான்.

அடுத்தநாள் மாலையில் தேவந்தி ஊர்வசியுடன் பூங்காவிற்கு வந்தாள். சாத்தன் ஊர்வசியைப் பற்றி விசாரித்ததையோ, பூங்காவில் அவளைச் சந்திக்கும் பொருட்டுக் காத்திருப்பதையோ தேவந்தி அவளிடம் கூறவில்லை. கொற்றவை கோயிலை

ஒட்டியுள்ள பூங்கா அழகும் மணமும் நிறைந்தது என்றும் மாலையில் உலவிவிட்டு வரலாம் என்றும் சொல்லி அவளை அழைத்து வந்தாள். அங்கே தற்செயலாகச் சாத்தனைச் சந்தித்ததுபோல் காட்டிக்கொண்டு, ஊர்வசியை அறிமுகப்படுத்தினாள்.

"தளபதியாரே! இது ஊர்வசி, என் உறவினள்! கங்க அரச குடும்பத்தைச் சேர்ந்தவள்" என்றாள். இளவரசியையும், உறவினளையும் வணங்கினான் சாத்தன்.

"ஊர்வசி! இது தளபதி சாத்தஞ்சாத்தன். அண்ணன் நெடுஞ்சடையரின் உயிர்த்தோழன் சேனாதிபதியின் இளவல்" என்று அவனையும் அறிமுகம் செய்து வைத்தாள்.

ஊர்வசியை அன்னை மகாராணியின் தேரில் சென்று கொண்டிருந்தபொழுது ஒரு மின்னலைப் போல் கண்டிருந்த சாத்தனுக்கு நேருக்கு நேர் அவளைக் கண்டபொழுது தோன்றிய முதல் எண்ணம் 'இவள் பேரழகி' என்பது தான். தன் உள்ளம் கவர்ந்த கன்னியான தேவந்தியின் அழகிலும், அறிவிலும், அன்பிலும் மயங்கியிருந்தாலும் அவளைவிட அழகிற் சிறந்தவள் இந்த ஊர்வசி என்ற உண்மையை அவன் ஒத்துக்கொள்ள வேண்டி இருந்தது. தாமிரம் போன்ற வண்ணப் பொலிவுள்ள தேவந்தியின் அருகில் ஊர்வசி பொன்போன்ற நிறத்துடன் மிளிர்ந்தாள். கருணையும், காதலும் ஒளிவீசும் கருநெடுங் கண்கள் தேவந்திக்கு உரியவை. ஊர்வசியின் கண்களோ கருநீல நிறத்தைக் கொண்டவை. அந்தக் கண்களில் அவன் கண்டது கருணையாக அவனுக்குத் தோன்றவில்லை. அவள் கண்கள் பளிச்சென்று அங்கும் இங்கும் பாய்ந்தனவே யன்றி அவனுடைய முகத்தில் பதியவேஇல்லை. அவற்றில் ஒரு விதமான கடுமை நிழலிட்டதோ என்றும் ஐயுற்றான் சாத்தன். முழுமைபெற்ற செவ்விதழ்களும், முத்தென வடிவொத்த பற்களும் அவளுடைய முகத்திற்கு அழகு சேர்த்தன.

"தளபதி சாத்தஞ் சாத்தனாரைப் பற்றி நான் கேள்விப் பட்டிருக்கிறேன்" என்று தன் வாயைத் திறந்து ஒருசில வார்தைகளைப் பேசினாள் ஊர்வசி. அவளுடைய குரல் சாத்தனின் செவியில் இனிதாக ஒலிக்கவில்லை. ஆண் குரலின் ஒரு சிறிய விழுக்காடு அவளுடைய குரலில் அடங்கிஇருப்பதாக அவனுக்குத் தோன்றியது. தேவந்தியின் யாழிசை போன்ற குரலின் முன் ஊர்வசியின் உரசல் குரல் ஓர் ஒப்பாரியாகப் பட்டது அவனுக்கு. ஒருக்கால் தேவந்தியின் குரலில் மிதந்துவரும் கனிவு இல்லாமையால் அவ்வாறு தோன்றியிருக்கலாம் என்று எண்ணினான் அவன். குரல்

ஒலியைப் பற்றிய குறையை ஒரு புறம் ஒதுக்கிவைத்துவிட்டு, அவள் உதிர்த்த வார்த்தைகளில் கவனம் செலுத்தினான் அவன். கங்க நாட்டில் பிறந்து வெகுநாள்களாகக் காஞ்சி என்னும் பல்லவ நாட்டின் தலைநகரில் வாழ்ந்த ஊர்வசி தளபதி சாத்தஞ் சாத்தனைப் பற்றி எவ்வாறு கேள்விப்பட்டாள்? தன் புகழ் அவ்வாறு பரவி இருப்பதாக அவன் எண்ணவில்லை! அவளிடமே விளக்கம் கேட்க விரும்பினான் அவன்.

"அது எளியேனின் பாக்கியம் தான். இளவரசி அவ்வாறு சொல்வது எனக்கு மிகவும் பெருமையாக இருக்கிறது. ஆனால் என்மீது இரக்கம் கொண்டு என்னைப் புகழ்வதாகவே நான் கருதுகிறேன்" என்று பணிவுடன் மொழிந்தான் சாத்தன்.

"தளபதியாரின் அடக்கமும் பணிவும் மிகவும் பாராட்டிற்கு உரியவை. ஆனால் நான் முகப்புகழ்ச்சியாகப் பேசவில்லை. உண்மையைத்தான் சொன்னேன்" என்று மீண்டும் வலியுறுத்தினாள் ஊர்வசி.

"இளவரசி!" என்று அவளிடம் மேலும் பேசத் தொடங்கிய சாத்தனை அவள் இடைமறித்துப் பேசினாள்.

"தளபதியாரே! என்னை இளவரசி என்று அழைக்க வேண்டாம். நான் அரச குடும்பத்தில் பிறந்தவளே தவிர, அரசரின் மகள் அல்ல. இளவரசி என்றால், தேவந்தியைப்போல் அரசரின் மகளாகப் பிறந்து, எதிர்காலத்தில் அரசியாகும் பாக்கியமும் படைத்தவளாக இருக்க வேண்டும். எனக்கு அந்தத் தகுதிகள் இல்லை. தாங்கள் என்னை ஊர்வசி என்று என் பெயராலேயே அழைக்கலாம்."

அவளுடைய பேச்சில் தன்னடக்கம் இருந்தாலும் அதில் தேவந்தியின்மீது அவள் கொண்டிருந்த பொறாமையும் பொதிந்து நின்றதோ என ஐயுற்றான் சாத்தன். அவளுடைய சொற்களையே பயன்படுத்தி அவளுடைய பூர்வீகத்தை அறிந்துகொள்ள முயன்றான் அவன்.

"இளவரசியார் தங்களை உறவினள் என்றும் அரசகுடும்பத்தினர் என்றும் அறிமுகப் படுத்தியதால்தான் நான் அவ்வாறு அழைத்தேன். அரச குடும்பத்தில் தங்கள் உறவின் முறை என்ன என்று தெரிந்தால் அதற்கு ஏற்றவாறு அழைப்பேன்" என்றான் அவன்.

26. ஊர்வசி வரலாறு

"கங்க நாட்டில் அரச குடும்பத்தினர் பலர் இருக்கிறார்கள். பல தலைமுறைகளாக ஒருவர்க்குப்பின் ஒருவராக அரியணையில் ஏறிய அரசர்களுக்கு ஆண்மக்கள் பலர் பிறந்ததால் ஒவ்வொரு தலைமுறையிலும் அரசரின் உடன் பிறந்தோரும் அவர்தம் மக்களுமாக அரச குடும்பம் விரிவடைந்தது. இதனால் அரசு பலமடைந்தது என்று கூற முடியாது. ஏனென்றால் பல வகையான அரசுப் பொறுப்புகளையும் அரசகுடும்பத்தினரே வகித்தனர். எல்லாருக்குமே அரசரிடம் நேரடித் தொடர்பு வைத்துக்கொள்ளும் வசதியும் உரிமையும் இருந்ததால் அவர்களுக்குக்குள்ளேயே போட்டியும் பொறாமையும் வளர்ந்தன. அப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் என் தந்தையும் சிக்கிக்கொண்டார். பாண்டிய நாட்டின் அன்னை மகாராணி எங்கள் நாட்டின் இளவரசியாக வாழ்ந்த நாள்களில் அவருக்கு உறுதுணையாக இருந்த சகோதரர்களில் என் தந்தையான மாயவர்மன் முக்கியமானவர். பாண்டிய மன்னருக்கு அவரை மணம்முடிப்பதை ஆதரித்து, அதை எதிர்த்தவர்களுடன் போர் புரிந்தவர் என் தந்தை. ஆனால் அவருடைய மூத்த சகோதரர் மன்னராக முடி சூட்டிக்கொண்டபின் அவர்களுக்குள் மனக்கசப்பு ஏற்பட்டது. என் அன்னை என் தந்தையின் முதல் மனைவியின் தங்கையாவார். மனைவி இறந்தபின் அவளுடைய தங்கையை மணம் புரிந்ததும் என் தந்தைக்கு எதிரான ஒரு குற்றச் சாட்டாக மாறியது. கங்க நாட்டில் வாழ்ந்தால் தன் உயிருக்கே ஆபத்துநேரும் என அஞ்சிய என் தந்தை, ஏழு வயதான என்னையும் என் அன்னையையும் அழைத்துக்கொண்டு வெளியேறினார். பல இடங்களிலும் சுற்றி இறுதியில் நாங்கள் காஞ்சியில் குடியேறினோம்."

ஊர்வசி தன் உருக்கமான வரலாற்றைச் சற்று நிறுத்தினாள். அவள் பேச்சில் உணர்ச்சியோ துன்பமோ வெளிப்படவில்லை என்பதையும், ஒரு பாடப்புத்தகம் வாசிப்பதுபோல் அவள் இயல்பாகப் பேசிக்கொண்டிருக்கிறாள் என்பதையும் சாத்தஞ் சாத்தன் உணர்ந்தான். இந்த வரலாற்றை ஓரளவு முன்பே கேட்டிருந்த தேவந்தியும் தான் அனுபவித்த இளமைப் பருவத் துன்பங்களை, யாருக்கோ நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் போல்

உணர்ச்சி வசப்படாமல் பேசும் ஊர்வசியை வியப்புடன் நோக்கிக் கொண்டிருந்தாள். ஊர்வசி தன் வரலாற்றைத் தொடர்ந்தாள்.

"சில ஆண்டுகளாக நோய்வாய்ப்பட்டுக் கிடந்த என் தந்தை நான்கு ஆண்டுகளுக்குமுன் இறந்தார். நானும் என் அன்னையும் மட்டும் இப்பொழுது காஞ்சியில் வசித்து வருகிறோம். என் அன்னை கங்கநாட்டில் உள்ள சில உறவினர்களைக் காணச்செல்ல விரும்பியதால் நான் பாண்டிய நாட்டில் உள்ள என் அம்மாமியான அன்னை மகாராணியைக் கண்டு அவர்களுடன் சில நாள் வாழலாம் என்று இங்கு வந்தேன். தளபதியாருக்கு அரசகுடும்பத்துடன் எனக்குள்ள உறவின்முறையைப் பற்றிய ஐயங்கள் இனியும் இருந்தால் நான் விளக்குகிறேன்" என்று சவால் விடுவதுபோல் ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தாள் ஊர்வசி.

அவளுடைய சவாலை ஏற்கவேண்டும் என்றோ அல்லது அவளுடைய வரலாற்றை மேலும் ஆராயவேண்டும் என்றோ அப்பொழுது சாத்தன் எண்ணவில்லை. ஆனால் அவள் முதன்முதலாகப் பேசிய வார்த்தைகளை அவன் மறக்கவில்லை. அதைப் பற்றிய விளக்கம்தான் அவனுக்குத் தேவைப்பட்டது.

"தங்களுடைய வரலாற்றைப் பற்றி நான் எந்த விளக்கமும் கேட்கவில்லையே! இளவரசி என்று அழைக்கவேண்டாம் என்று தாங்கள் கூறியதால்தான் உறவின் முறையைப் பற்றிக் கேட்டேன். அது இருக்கட்டும் தாங்கள் இந்த எளியேனைப் பற்றிக் கேள்விப்படும் வாய்ப்பு எவ்வாறு ஏற்பட்டது என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று வினவினான் சாத்தன்.

ஊர்வசி ஒரு மோகனப் புன்னகையை வீசினாள். தன் கருநீலக்கண்களைச் சிமிட்டினாள்.

"சாத்தனார் தன்னை எளியவன் என்று தன்னடக்கம்படப் பேசினாலும், வெளிநாட்டிலும் புகழ் பரவியிருக்கிறது என்பதைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறார் என்பது விளங்குகின்றது. இல்லையா தேவி?" என்று இளவரசியிடம் கேட்டாலும் அவளுடைய பார்வை சாத்தனின் முகத்திலேயே பதிந்திருந்தது.

"சொல்கிறேன் கேளுங்கள் காஞ்சியில் வாழத் தொடங்கியபின் எந்த அரசியல் நடவடிக்கைகளிலும் பங்குகொள்ளாமல்தான் என் தந்தை வாழ்ந்துகொண்டிருந்தார். பரம்பரைச் சொத்தாக இருந்த வைரம், மாணிக்கம் போன்ற இரத்தினங்களையும், பொன் அணிகலன் களையும் விற்றுத்தான் எங்கள் செலவு நடந்தது. ஆயினும் அரசகுடும்பத்தில் பிறந்து பல போர்களிலும் கலந்து

வீரவாழ்க்கை நடத்திய அவருக்கு முற்றிலும் அந்த வாழ்க்கையிலிருந்து விடுபட்டு வாழமுடியவில்லை. பல்லவ அரசோடு தொடர்புகொண்ட படைத் தலைவர்களும், பெரியவர்களும் எங்கள் வீட்டிற்கு இன்றும் வருவதுண்டு.

தந்தை இறந்தபின் அது மிகவும் குறைந்துள்ளது என்பது உண்மைதான். அப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் பல்லவ மன்னர் பாண்டியர் மீது படையெடுத்து வந்ததும், காவிரியாற்றின் கரையில் பெண்ணாகடப் போரில் தோல்வியுற்றுக் காஞ்சிக்குத் திரும்பியதும் எங்கள் வீட்டிலும் பேச்சுப் பொருள் ஆயின. அந்தப் போரில் உறையூரில் பாண்டியர்கள் நிறுத்தி வைத்திருந்த நிலைப்படைதான் பல்லவப் படையின் தோல்விக்கு முக்கியக் காரணம் என்றும் அந்தப் படையின் தளபதியாக இருந்த சாத்தஞ்சாத்தன் என்னும் இளைஞன் அதற்குத் தேவையான பயிற்சி யளித்தான் என்றும் பல்லவப் படைத்தலைவர்கள் பேசிக்கொண்டனர். அதனால்தான் தளபதி சாத்தனாரைப் பற்றிக் கேளவிப்பட்டிருக்கிறேன் என்று நான் சொன்னேன்" என்று விளக்கினாள் ஊர்வசி.

"அந்தப் போரில் நாங்கள் வெற்றிபெறக் காரணம் எங்களுடைய சிறந்த போர்த்திட்டமாகும். பாண்டிய மன்னரும், சேனாதிபதியும் மற்ற படைத் தலைவர்களும் கலந்து பேசி எல்லோருடைய சிந்தனைகளையும் தழுவி உருவாக்கிய திட்டம் அது. நான் மட்டும் ஒன்றும் செய்துவிடவில்லை. உறையூர்ப் படைக்குக் காவிரியாற்றின் கரையில் போர்ப்பயிற்சி அளிக்கப் பட்டிருந்ததால் அது முன்னணியில் நின்று போர் செய்தது அவ்வளவுதான். எப்படி ஆயினும் என்னுடைய சிறிய பங்கு இவ்வளவு சிறப்பாகப் பேசப்பட்டதைக் கேட்கும் பொழுது மகிழ்ச்சி ஏற்படுவது இயல்பே. நன்றி" என்று கூறிய சாத்தன் மேலும் வினவினான்.

"இப்பொழுது தங்கள் அன்னையார் தனியாகக் கங்க நாட்டிற்குச் செல்வது ஆபத்தல்லவா?"

ஒருகணம் தயங்கிய ஊர்வசி விடை இறுத்தாள். "எனக்குப் பாதுகாப்பாகச் சில வீரர்களை அனுப்பியது போலவே என் அன்னைக்குப் பாதுகாப்பாகவும் சில வீரர்களை அனுப்பியுள்ளார் என் தந்தையின் நண்பரான பல்லவ சேனாதிபதி. மேலும் என் தந்தை இறந்து விட்டதாலும் அவருக்கு ஆண் மக்கள் இல்லாததாலும் கங்க அரச குடும்பத்தினருக்கு இப்பொழுது எங்களிடம் பகைமை உணர்ச்சி எதுவும் இல்லை" என்றாள்.

சாத்தன் மனநிறைவோடு தலை ஆட்டினான். அவன் தெரிந்துகொள்ள விரும்பிய செய்தியைத் தெரிந்துகொண்டான். ஊர்வசி பல்லவருடன் தொடர்பு கொண்டவளா என்பதை அறிவதே அவனுடைய நோக்கம். பல்லவ சேனாதிபதி அவளுக்கும், அவளுடைய அன்னைக்கும் பாதுகாப்பு அளிக்கிறார் என்பதிலிருந்தே அந்த உண்மை தெளிவாக விளங்கியது. ஊர்வசி அவளுடைய அம்மாமியாகிய அன்னை மகாராணியிடம் அன்பு பொழிவதற்காக வந்திருக்கலாம். ஆனால் வேறு காரணமும் இருக்கலாம் என்பதால் அவளைக் கண்காணிப்பது அவசியம். அவளுடைய காஞ்சி வாழ்க்கையைக் கூர்ந்து நோக்குவதும் அவசியம். இந்த முடிவுடன் அந்த அழகிய மங்கையரிடம் விடைபெற்று வெளியேறினான் சாத்தன்.

அடுத்தநாள் அன்னை மகாராணி அவனைக் காண விரும்புவதாகக் காவலன் வந்து அறிவிக்க, அரண்மனைக்கு விரைந்தான் சாத்தன். முன்பு ஒரு முறை இதுபோல் அழைத்து அதியனிடம் செய்த சபதத்திற்காக அவனை அன்னை மகாராணி எச்சரித்தது அவன் மனத்தில் நிலைத்து நின்றது. இன்று அழைத்ததன் நோக்கம் என்னவோ என்று எண்ணிக்கொண்டே உள்ளே சென்றான் சாத்தன்.

அன்னை மகாராணி தன் பெயருக்கேற்றவாறு எழிலும் செம்மாப்பும் விளங்க அமர்ந்திருந்தார். கருங்கூந்தல் என்று உண்மையாக விளக்கமுடியாத அளவுக்கு நரைமுடியின் எண்ணிக்கை பெருகியிருந்தாலும், முதுமை நெருங்கியிருந்தாலும் அடர்ந்த கூந்தலும், பொலிந்த முகமுமாக நெடுங்காலம் அரசுகட்டிலில் வீற்றிருந்ததால் விளைகின்ற பெருமிதத்துடன் சாத்தனை வரவேற்றார்.

"வா! சாத்தா! நீ நலம் தானே என்று கேட்க வேண்டிய தேவையில்லை. ஏனென்றால் நீ மிகவும் நலத்துடனும், வெகுவிரைவாகவும் செயல்படுகின்றாய் என்பதை நான் அறிவேன்" என்று ஒரு புன்னகையுடன் வாய்திறந்து பேசினார் அன்னை மகாராணி. அந்தப் பேச்சில் அடங்கியிருந்தது அன்பும் அரவணைப்புமா அல்லது கேலியும் கிண்டலுமா என்று புரியவில்லை சாத்தனுக்கு. தான் பேசுவது அன்னை மகாராணியிடம் என்பதை மனத்தில் கொண்டு அவன் அடக்கத்துடன் பதில் கூறினான்.

"அன்னை மகாராணியின் ஆசியாலும் அருளாலும் நான் நலமாக இருக்கிறேன். எனக்கு அளிக்கப்படும் பொறுப்புகளை

என்னால் முடிந்தவரை செவ்வனே செய்து முடிக்கவும் முயற்சி செய்கிறேன்."

"என் விருந்தினளாக வந்திருக்கும் மருமகள் ஊர்வசியை விசாரணை செய்வதும் உனக்கு அளிக்கப்பட்ட பொறுப்புகளில் அடங்கியுள்ளதோ?"

அன்னை மகாராணியின் வாயிலிருந்து அந்த வினா வெளிப்பட்டபொழுதுதான் அவர் தன்னை அழைத்ததன் காரணம் சாத்தனுக்குப் புலனாகியது.

"நான் விசாரணை எதுவும் செய்யவில்லையே மகாராணி! தற்செயலாக இளவரசி தேவந்தியுடன் ஊர்வசியைச் சந்தித்தேன். இளவரசி உறவினள் என்று அறிமுகப்படுத்தியதால் இளவரசி என்று அழைத்தேன். இளவரசி என்று அழைப்பது சரியன்று என என்னைத் திருத்தி அவருடைய அரச குடும்பத் தொடர்பை விளக்கினார் ஊர்வசி. என்னைப்பற்றி முன்னரே கேள்விப்பட்டதாக அவர் சொன்னதால் அது எவ்வாறு நேர்ந்தது என்றும்கேட்டேன். அவ்வளவுதான்."

ஒன்றும் அறியாதவன்போல் சாத்தன் விளக்கியபொழுது அதில் குறை காணமுடியவில்லை மகாராணியால். ஆயினும் நுண்ணறிவாளனான சாத்தன் தன்னிடம் பேச வேண்டியதை மட்டும் பேசுகிறான் என்பதையும், மனம் திறந்து பேசவில்லை என்பதையும் அரசியல் அனுபவம் மிக்க அன்னை மகாராணியால் உணர்ந்து கொள்ள முடிந்தது. "அவள் என் உடன் பிறந்த சகோதரனின் மகள். என் பாதுகாப்பில்தான் இங்கு வாழப் போகிறாள். அவளைப் பற்றி நீ கவலைப்பட வேண்டாம் என்று சொல்லத்தான் உன்னை அழைத்தேன்" என்று எச்சரிக்கை செய்வதுபோல் பேசினார் அவர்.

"தங்கள் கட்டளைப்படியே நடந்துகொள்கிறேன் மகாராணி. ஆனால் பணிவோடு ஒன்றுமட்டும் சொல்ல அனுமதிக்கவேண்டும். இப்பொழுது ஒற்றர்படைத் தலைவன் பொறுப்பும் என்னிடம் உள்ளதால் அரசருக்கும், அரசிக்கும், தங்களுக்கும் எத்தகைய தீங்கும் நேராமல் பாதுகாப்பு அளிக்கும் பணியும் என்னைச் சார்ந்தது. அதற்காக அரண்மனைக்குள் வருவோர், போவோரையும் விருந்தினரையும் கண்காணிப்பது அவசியம். அந்த வேலையில் என்னுடைய ஆள்கள் ஈடுபடுவதை முறையற்ற தலையீடு என்று தாங்கள் கருதக்கூடாது. என்று வேண்டுகிறேன்" என்று தலைவணங்கினான் சாத்தன்.

"அப்படி நான் நினைக்கமாட்டேன். நீ உன் கடமையைச் செய்யலாம்" என்ற அவளிடமே அனுமதி பெற்றான் சாத்தன்.

அன்னை மகாராணியின் அறையிலிருந்து ஒரு பெருமூச்சுடன் வெளியேறிய சாத்தன், பாண்டியன் நெடுஞ்சடையனையும் பார்த்துவிட்டுப் போகலாம் என்ற எண்ணத்துடன் நடந்தான். மன்னர் அறையின் கதவு அப்பொழுது திறந்தது. ஓர் அழகிய ஆரணங்கு அந்த அறையிலிருந்து வெளியில் வந்தாள்! ஊர்வசி! சாத்தனுக்கு மிகவும் வியப்பாக இருந்தது. மன்னர் அரசு அலுவல்களைக் கவனிப்பதற்காக மட்டும் அமைக்கப்பட்டிருந்த அந்த அறையில், அவரைத் தனிமையில் சந்திக்கவேண்டிய அவசியம் ஊர்வசிக்கு எப்படி வந்தது? உறவினள் என்ற முறையில் அவள் சந்திப்பதாக இருந்தால் நெடுஞ்சடையனும் இளவெயினியும் வாழும் அரண்மனைப் பகுதிக்குச் சென்றிருக்கவேண்டும். அவ்வாறு செய்யாமல் அவள் ஏன் அரசரைத் தனிமையில் சந்திக்கவேண்டும்? ஒருவேளை அரசரே அதைப்பற்றித் தன்னிடம் பேசக்கூடும். மன்னனும் தளபதியும் என்ற உறவைவிட நட்பு என்னும் மிகக்கெழுமிய உறவு அவர்களுக்குள் நிலவுவதால் அந்த எண்ணம் உதித்தது அவன் மனத்தில். ஊர்வசியின் கண்களில் படாமல் மறைந்து நின்றுவிட்டு, சற்றுநேரம் கழித்து அரசனின் அறைக்குள் நுழைந்தான் சாத்தன்.

எப்பொழுதும் போலவே முகம்மலர்ந்து சாத்தனை வரவேற்றான் நெடுஞ்சடையன். ஆனால் எதையும் கூர்ந்து நோக்கும் இயல்புடைய சாத்தனுக்கு மன்னன் வழக்கத்தை விட மிகுதியான உற்சாகத்துடன் இருப்பதாகத் தோன்றியது. அவன் வார்த்தைகளிலும் ஒரு புதுவேகம் வெளிப்பட்டது. புன்னகை இதழ்களிலிருந்து மறையாமலே பேசினான். "வா சாத்தா, வா. நீ வழக்கமாக வரும் நேரத்திற்கு முன்பே இன்று வந்து விட்டாயே. நல்லதாகப் போயிற்று உன்னிடம் பேசவேண்டிய முக்கியமான சில காரியங்கள் உள்ளன" என்று முன்னுரை மொழிந்தான் அரசன்.

"அன்னை மகாராணி என்னை அழைத்திருந்தார் அதனால்தான் இப்பொழுது வந்தேன்" என்று தான் முன்னதாகவே வந்ததற்கான காரணத்தைக் கூறினான் சாத்தன்.

"அன்னை மகாராணி எதற்காக அழைத்தார்?" "அவருடைய விருந்தினளாக வந்து அரண்மனையில் வசிக்கும் ஊர்வசி என்னும் மங்கையைப் பற்றி நான் எவ்வித விசாரணையும் செய்யக் கூடாது என்று ஆணையிடுவதற்காக" என்று சுருக்கமாகச் சொல்லி,

மன்னரின் முகத்தைக் கூர்ந்து நோக்கினான் சாத்தன். அவன் எதிர்பார்த்த வண்ணமே மன்னர் முகத்தில் மாறுதல் ஏற்பட்டது. மலர்ந்த முகம் சற்றே சுருங்கியது. மகிழ்ச்சி பொங்கிநின்ற முகத்தில் சினத்தின் சாயல் படர்ந்தது.

"நீ ஏன் அவளைப் பற்றி விசாரணை செய்தாய்?" ஓரளவு சூடாகவே வந்தது அந்த வினா. சாத்தன் அமைதியாக, காரண காரியத்துடன் விடையிறுத்தான்.

"அன்னை மகாராணியுடன் ஓர் இளம்பெண் தேரில் சென்றதைக் கண்டேன். அந்தப் பெண் அரண்மனையிலே வாழ்வதாகத் தெரிந்தவுடன் அது யார் என்று அறிந்துகொள்ள முயற்சிசெய்தேன். அது என் கடமையல்லவா? இப்பொழுது அன்னை மகாராணியார் அவளுக்காகப் பொறுப்பேற்று விட்டதால் என் பொறுப்பு முடிந்துவிட்டது" என்றான்.

சாத்தனின் பதிலில் மன்னர் மனநிறைவு கொண்டதாகத் தோன்றியது.

"ஆமாம். அவள் என் மாமன் மகள். இளையவராகப் பிறந்ததால் அரியணை ஏற முடியாமல் அண்ணனால் நாடு கடத்தப்பட்டார் அவர். மூத்தவராகப் பிறந்திருந்தால் கங்க அரசராக இருந்திருப்பார். ஒருவேளை ஊர்வசி பாண்டியநாட்டின் அரசிகூட ஆயிருக்கலாம்" என்று தேவையற்ற கற்பனையில் ஈடுபட்டான் நெடுஞ்சடையன்.

ஊர்வசியின் பேரழகு தன் தோழனான பாண்டிய மன்னரையும் ஆட்கொண்டு விட்டதோ என்று அஞ்சினான் சாத்தன். அன்னை மகாராணியும், பாண்டிய மன்னரும் தடை விதித்தாலும் அவர்களுடைய நன்மைக்காகவே இந்த ஊர் வசியின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பது அவசியம் என்ற எண்ணம் அவன் மனத்தில் உறுதியானது.

"அரசே! தாங்கள் என்னவோ முக்கியமான சில காரியங்களைப் பற்றி என்னிடம் பேச நினைத்ததாகச் சொன்னீர்களே" என்று நெடுஞ்சடையன் சாத்தனைக் கண்டவுடன் கூறியதை நினைவுபடுத்தினான் சாத்தன்.

"ஆமாம் மிக முக்கியமான காரியம் நம் அமைச்சரைப் பற்றியது தான். அமைச்சர் மாறன் காரி நேற்று மீண்டும் என்னைச் சந்தித்தார். உடல் நலம் முன்னைவிடத் தேறியிருந்தாலும் தன்னால் முன்புபோல் உழைக்க முடியவில்லை என்று கூறினார்.

வேணாட்டின்மீது படையெடுத்துச் சென்றது அவருடைய அறிவுரையைமீறிச் செய்த செயல் ஆகையால் அன்றிலிருந்தே அமைச்சர் என்மீது வருத்தம் கொண்டிருக்கிறார் என்றுதான் நான் எண்ணினேன். நாளடைவில் அது மாறிவிடும் என்றும் எதிர்பார்த்தேன். ஆனால் அது மட்டும் காரணம் அல்ல. அவருடைய மனம் போலவே உடலும் தளர்ச்சி அடைந்து வருகிறது என்பதை இப்பொழுது உணரமுடிகிறது. அது மட்டுமின்றி, பெரியாழ்வாரின் கட்டளையை நிறைவேற்றவில்லை என்பதும் அவருக்குக் கவலைதருகிறது. தான் இன்னும் அதிக நாள் வாழப்போவதில்லை என்றும், அதற்குள் ஆனைமலையில் பெருமாளுக்குக் கோயில் எழுப்பாவிட்டால் கடமை தவறிய கயவனாக மடிய நேரிடும் என்றும் அவர் அஞ்சுகின்றார். எனவே இனிமேலும் அவரை வற்புறுத்தி அமைச்சராகத் தொடரச் செய்வது சரியல்ல" என்றான் பாண்டியன் நெடுஞ்சடையன்.

"உண்மைதான் அரசே! பாண்டியப் பேரரசின் அமைச்சர் என்னும் பதவியும் பொறுப்பும் சாதாரணமானவை அல்ல. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சிக்கல் எழலாம். ஒவ்வொன்றும் ஆழமாகச் சிந்தித்துச் செயல்படவேண்டியிருக்கும். அமைச்சர் உடல் நலம் குன்றியிருந்தபொழுது அவரைக்காணச் சென்ற என்னிடமும் அவர் தமது இயலாமையைப் பற்றிக் குறிப்பிட்டார். அமைச்சர் பொறுப்பிலிருந்து ஓய்வு பெற்று, கோயில் எழுப்பும் பணியில் முற்றிலும் ஈடுபடவேண்டும் என்பது அவர் விருப்பம். அதை நிறை வேற்றிவைப்பதும்தான் நல்லது என்று நானும் எண்ணுகிறேன். நல்ல வேளையாக நாம் அந்தப் பொறுப்பை ஏற்பதற்கு ஓர் ஆளைத் தேட வேண்டிய சூழ்நிலை இல்லை. மறைந்த தங்கள் தந்தையார் முடிவு செய்த வண்ணம் அமைச்சரின் தம்பிமாறன் எயினனை உறையூரிலிருந்து வரச்சொல்லி அமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொள்ளச் சொல்லலாம். அண்ணனுடன் சில நாள்கள் ஒன்றாக அமர்ந்து பணியாற்றியபின் முழுப்பொறுப்பையும் அவர் எடுத்துக் கொள்ளலாம்." என்று தன் கருத்தை வெளியிட்டான் சாத்தன்.

நெடுஞ்சடையன் முகத்தில் ஒரு தயக்கம் தேங்கிநிற்பதாகத் தோன்றியது சாத்தனுக்கு. என்றோ முடிவுசெய்யப்பட்டதை நிறைவேற்றுவதில் மன்னருக்கு என்ன குழப்பம் என்று வியந்தான் சாத்தன்.

"நீ சொன்னது உண்மைதான். மாறன் காரி அமைச்சர் பதவியிலிருந்து ஓய்வுபெறும் பொழுது அவருடைய தம்பியான

மாறன் எயினனுக்கு அந்தப் பதவியை அளிக்கவேண்டும் என்று என் தந்தை முடிவு செய்திருந்தார். ஆனால் அவர் அவ்வாறு முடிவு எடுத்த காலத்தில் சாத்தஞ்சாத்தன் என்ற இளைஞன் ஒரு எளிய படைத் தலைவனாகவும் இளவரசனின் தோழனாகவும் இருந்தான். அவன் ஒரு சிறந்த படைத் தளபதியாகவும், அறிவும் திறமையும் மிக்க அரசியல் வல்லுநன் ஆகவும் திகழ்வான் என்று யாருக்கும் தெரியாது. எனவே மாறன் எயினனைவிடச் சிறந்த திறமைசாலியான சாத்தஞ் சாத்தனை அமைச்சர் ஆக்கலாம் என்று நான் நினைக்கிறேன்" என்றான் மன்னன்.

சாத்தனின் மறுப்பு உடனடியாக வெளிப்பட்டது.

"அரசே! தாங்கள் என் மீது கொண்டுள்ள அன்பும் நட்பும் தங்கள் கண்களை மறைக்கின்றன. வயதில் சிறியவனும், அனுபவத்தில் குறைந்தவனுமான நான் அமைச்சர் பொறுப்பை ஏற்பது தவறு. அதை இப்பொழுதே மறந்து விடுங்கள்" என்று உறுதியாக நின்றான் அவன்.

27. சிங்கத்தின் குகையில் சிறுநரி

நெடுஞ்சடையன் எவ்வளவோ வற்புறுத்தியும், உறுதியாக நின்று, அமைச்சர் பதவியை உதறித் தள்ளிவிட்டு வந்த சாத்தனுக்கு, தான் செய்தது பெரிய தியாகமாகத் தோன்றவில்லை. அமைச்சர் மாறன் காரியுடன் பதினைந்து ஆண்டுகளுக்குமேல் வாழ்ந்து பல விதமான சூழ்நிலைகளைச் சந்திக்க நேரிட்டும், பல சிக்கல் களைத் தீர்த்துவைத்தும் அனுபவம் என்னும் விலை மதிக்கமுடியாத செல்வத்தைப் பெற்றமாறன் எயினன் இருக்கும் பொழுது, அவருக்கு அமைச்சர் பதவியை அளிக்காமல் சாத்தனுக்கு அளித்தால் அது அரசு அலுவலர்களுக்கும், நாட்டுமக்களுக்கும் மன்னரின் தன்னிச்சையான செயலாகக் காட்சியளிக்கும். அவ்வாறு அமைச்சர் ஆனால் மக்களின் வெறுப்புக்கும் அலுவலர்களின் ஏளனத்திற்கும் தான் பாத்திரமாக வேண்டிவரும் என்பதையும் சாத்தன் நன்குணர்ந்தான். இந்த நேரத்தில் அதைவிட முக்கியமாகத் தான் மேற்கொள்ள வேண்டிய வேலை மற்றொன்று இருக்கிறது என்பதையும் அவன் மனச்சாட்சி அவனுக்கு உணர்த்தியது.

ஊர்வசியின் வரவு அன்னை மகாராணியின் அன்பிற்கும் அரவணைப்பிற்கும் ஏங்கி வந்த உறவினளின் வரவு என்பதை அவனால் நம்ப முடியவில்லை. கண்டாரைக் கவர்ந்திருக்கும் அழகும், மனப்பாடம் செய்து ஒப்பிப்பது போன்ற உணர்ச்சியற்ற பேச்சும், யார் முகத்திலும் பதியாமல் எப்பொழுதும் தெறித்துப் பாய்ந்து கொண்டிருக்கும் பார்வையும், செயற்கையான சிரிப்பும், அவள் ஒரு சாதாரணப் பெண் அல்லள் என்பதைத் தெளிவுபடுத்தின. மன்னரின் அறையிலிருந்து அவள் வெளிவந்ததைக் கண்டபின் அவள்மேல் எழுந்த ஐயம் மேலும் வலுப்பட்டது. அவள் ஏதோ நோக்கத்துடன் தான் பாண்டியர் அரண்மனைக்குள் நுழைந்திருக்கிறாள் என்றும் அந்த நோக்கம் நல்லதாக இருக்க முடியாது என்றும் அவன் நம்பினான். அவளுடைய நடவடிக்கைகளைக் கண்காணிப்பதோடு அவளுடைய அண்மைக்கால வரலாற்றையும் நுணுகி அறிய வேண்டும் என்று துணிந்தான் அவன்.

தகடூரில் இருந்த அறம்வளர்த்த நாதரைக் காண மதுரை மடத்திலிருந்து ஒரு சீடன் விரைந்து சென்றான். அந்தச் சீடன் கொண்டுவந்த ஓலையைப் படித்த அறம்வளர்த்த நாதர் அடுத்த நாளே காஞ்சியிலிருந்த தன்னுடைய மடத்திற்குப் புறப்பட்டார்.

அங்கு மடத்தில் வாழ்ந்து கொண்டிருந்த சீடர்களுக்கு, விரைவாகச் செய்து முடிக்கவேண்டிய சில வேலைகளைப் பற்றி விளக்கிப் பேசி, அவர்களை அனுப்பிவைத்தார். அந்தச் சீடர்கள் பல வகையான வணிகர்களாகவும் தொழிலாளர்களாவும் உருமாறி ஊர்வசியின் அன்னையான காயத்ரி தேவியின் வீட்டில் வேலை செய்துவந்த வேலையாள்களையும், காவல் காரர்களையும், மற்றும் அவர்களோடு தொடர்புகொண்ட பலரையும் கண்டு பேசினர். பதினைந்து ஆண்டுகளாகக் காஞ்சியில் வாழ்ந்த அந்தக் குடும்பத்தின் நடவடிக்கைகளை அலசி ஆராய்ந்தனர். குறிப்பாகப் பல்லவ அரசியல் அலுவலர்களோடும் படைத்தலைவர்களோடும் காயத்ரிதேவியும், பல ஆண்டுகளாக நோய்வாய்ப்பட்டுக் கிடந்த அவருடைய கணவரும் வைத்திருந்த தொடர்புகளை விசாரித்து அறிந்தனர். சாத்தனின் ஆணை கிடைத்துப் பதினைந்து நாள்களிலேயே இளந்தத்தன், தன்னுடைய ஆள்கள் கண்டறிந்த விவரங்கள்அடங்கிய ஓர் அறிக்கையை மதுரை மடத்தின் மூலமாக அவனுக்கு அனுப்பினான்.

"மாயவர்மர் காஞ்சிக்கு வந்து பல்லவ மன்னரிடம் அடைக்கலம் புகுந்தார் என்றுகூடக் கருதவாய்ப்பு உண்டு. அவர்களுக்குள் ஏற்பட்ட உடன்பாடு என்ன என்பது தெரியவில்லை! ஆயினும் பல்லவ அரசின் உதவி மாயவர்மர் குடும்பத்திற்குக் கிடைத்துவந்தது என்பது தெரிய வருகிறது. மாயவர்மன் பத்து ஆண்டுகளுக்கு மேலாகவே உடல்நலம் குன்றியிருந்தார். பல்லவ அரசின் அமைச்சராக இப்பொழுது விளங்கும் கருணாகரனுக்கும் காயத்ரி தேவிக்கும் தவறான தொடர்பு இருந்ததாகவும் தெரிய வருகிறது. மாயவர்மர் காலஞ்சென்ற பின்னரும் இந்தத் தொடர்பு நீண்டது. காயத்ரி தேவியும், ஊர்வசியும் வருமானம் ஒன்றும் இன்றி, செழிப்பான வாழ்வு வாழ்வதற்கு அமைச்சரின் கருணையே காரணம் என்பதில் ஐயம் இல்லை. இப்பொழுது ஊர்வசி மதுரைக்குச் செல்வதற்குத் தேரும், காவலர்களும் அமைத்துக் கொடுத்ததும் அமைச்சர்தான் என்று கருத இடம் உண்டு. ஊர்வசி மதுரைக்கு வந்ததன் நோக்கம் தெரியவில்லை என்றாலும் அமைச்சர் அறிவுரைப்படியே அது நடந்திருக்கிறது என்றுதான் தோன்றுகிறது."

இளந்தத்தன் அனுப்பிய ஓலையை ஊன்றிப் படித்த சாத்தன், தனக்குத் தோன்றிய ஐயம் சரியானதே என்பதை உணர்ந்தான். மதுரையில் நிகழக்கூடிய அரசியல் விளைவுகளை அறிந்து கொள்வதற்குப் பல்லவ அமைச்சர் கண்டு பிடித்த வழிஇது

என்பதை அவனால் புரிந்துகொள்ள முடிந்தது. பாண்டியரின் அரண்மனைக்குள்ளேயே ஓர் உளவாளியை உருவாக்குவது மிகமிகக் கடினம். ஆகவே தனக்குக் கடமைப்பட்டுள்ள ஓர் ஆளை உள்ளே புகுத்திவிட்டால் ஒரு கதவு திறந்துகொண்டதுபோல் ஆகும். அந்த ஆள் அரசரிடமும் அரசியிடமும், அன்னை மகாராணியிடமும் நேரில் பேசும் தகுதியுள்ள ஆளாக அமைந்து விட்டால் அந்தக் கதவைத் திறந்து செய்திக் களஞ்சியத்தையே அடைந்து விட்டதுபோல்தான். ஊர்வசியைப்போல் இளமையும் எழிலும் பொங்கும் பெண்ணாக இருந்தால் யாருக்கும் ஐயமும் எழாது. எல்லோரும் மனம் திறந்து பேசவும் முன்வருவர். பல்லவ அமைச்சர் மிகத் திறமையுடன் ஓர் உளவுக் கருவியைப் பாண்டியர் தலைமைப் பீடத்திலேயே திணித்து விட்டார் என்று அவரைப் பாராட்டத் தோன்றியது சாத்தனுக்கு. அறம் வளர்த்த நாதரின் மடத்தையும், அதன் கிளைகளையும் நிறுவி, ஒற்றர் படையை விரிவுபடுத்திய தன்னைவிட மிகவும் திறமையாக, பாண்டியரின் அரண்மனையிலேயே ஒற்றாடலைத் தொடங்கிய பல்லவ அமைச்சரின் திறமையை மெச்சினான் அவன். இனி, அமைச்சரின் சூழ்ச்சியை முறியடிப்பது அவனுடைய கடமை என்பதையும் சாத்தன் உணர்ந்தான்.

ஒற்றறிதல் என்பது ஆட்சித் திறமையின் பெற்றியை நிர்ணயிக்கக் கூடிய, இன்றியமையாத அரசியல் கூறு என்பதை ஆட்சிப் பொறுப்பில் உள்ள யாவரும் அறிவர். பகைவனைப் பற்றிய செய்திகளை அவ்வப்பொழுது அறிந்து கொள்வது அதன் முதன்மையான நோக்கம் ஆகும். அதைப் போலவே முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாவது நோக்கம், நம் அரசைப் பற்றிய செய்திகள் பகைவனுக்குக் கிடைக்காமல் தடுப்பது ஆகும். அது போலவே செய்திகளை ஒற்றறிவது மிக முக்கியம் என்பதோடு அறிந்த செய்திகளைத் தேவையான இடத்தில் சேர்ப்பதும் முக்கியமான வேலையாகும். இந்த அடிப்படைக் கூறுகளை மீண்டும் மீண்டும் அலசிய சாத்தன் ஒரு முடிவுக்கு வந்தான்.

ஊர்வசி உண்மையிலேயே ஒற்றறியும் பணிக்காகப் பல்லவ அமைச்சரால் மதுரையில் புகுத்தப் பட்டிருந்தால், அவள் கண்டறியும் தகவல்கள் காஞ்சியில் உள்ள அமைச்சருக்குக் கிடைப்பதற்கான வழிகளும் வகுக்கப்பட்டிருக்கும். ஊர்வசி அடிக்கடி காஞ்சிக்குப் பயணம் செய்து அமைச்சரைக் கண்டு தகவல்களைத் தெரிவிப்பது என்பது எளிதல்ல. அது போலவே பல்லவ நாட்டின் அமைச்சர் மதுரைக்கு வந்து ஊர்வசியைச் சந்திப்பதும் இயலாத செயல். ஆகவே ஊர்வசி, தான் அறிந்த

செய்திகளைத் தூதன் மூலமாகவே காஞ்சிக்கு அனுப்ப வேண்டும். சாதாரணமாக அத்தகைய தூதனிடம் வாய்ச் சொல்லால் செய்தி அனுப்புவதில்லை. ஓலை எழுதி அனுப்புவதே வழக்கம். அவ்வாறு தூதன் யாராவது ஊர்வசியைச் சந்திக்க முடிந்ததா என்பதை விசாரித்தபொழுதுதான் தன் கண்களுக்கு நேராகவே எல்லாம் நடக்கிறது என்பதை அறிந்து திடுக்கிட்டான் சாத்தன்.

காஞ்சியிலிருந்து ஊர்வசியின் அன்னை காயத்ரிதேவி தன் மகளுக்குத் தேவையான சில பொருள்களை ஒரு தூதன் மூலமாக அனுப்பியிருந்தார் என்று மதுரை அரண்மனையின் தலைமைக் காப்பாளன் தெரிவித்தான். அதோடு அன்னை மகாராணிக்கும், அரசருக்கும் சில பரிசுப்பொருள்களையும் அந்த அம்மையார் கொடுத்தனுப்பியதாகச் சாத்தன் அறிந்தான். ஊர்வசியைச் சந்தித்து இவற்றையெல்லாம் கொடுத்த தூதன் திரும்பிச் செல்லும்பொழுது வெறும் கையுடன் சென்றிருக்கமாட்டான் என்றும் ஊர்வசி அவனிடம் யாருடைய ஐயத்திற்கும் இடம் கொடாமல் மிக வசதியாக ஓர் ஓலையைக் கொடுத்தனுப்பியிருப்பாள் என்றும் நம்பினான் சாத்தன். ஊர்வசியின் ஒவ்வொரு அசைவையும் கண்காணிப்பதற்காக அரண்மனைக்குள் இரு புதிய ஒற்றர்களையும், அரண்மனைப் பூங்காவில் இரு புதிய தோட்டக்காரர்களையும் வேலைக்கு அமர்த்திய சாத்தன், அவர்கள் எல்லோர் கண்களிலும் மண்தூவி, எளிமையாகவே செய்திகளைக் கடத்திவிட்டாள் என்று வியப்பும் சலிப்பும் அடைந்தான். இனிமேலாவது தூதன் வரும்பொழுது எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை அவன் சிந்தித்து முடிவு செய்தான்.

இதற்கிடையில் அரண்மனையின் அமைதிகுலைவதைப் பற்றிய சில செய்திகளும் சாத்தனை வருந்தச் செய்தன. நெடுஞ்சடையனிடம் ஊர்வசி நெருங்கிப் பழகுவதையும், அரசரைத் தனிமையில் சந்திப்பதையும் அரசி இளவெயினி விரும்பவில்லை. நெடுஞ்சடையனிடம் தன் மனக்குறையை அவள் வெளியிட்டபொழுது, ஊர்வசி நெருங்கிய உறவினள் என்றும், அவளோடு பேசுவதும் பழகுவதும் இயல்பே என்றும் கூறியது மட்டுமன்றி, பாண்டிய நாட்டின் அரசி பொறாமைக்கு இடம் கொடாமல் பக்குவத்துடனும் பெருந்தன்மையுடனும் நடந்துகொள்ள வேண்டும் என்றும் மன்னர் கடிந்துரைத்தார். ஊர்வசியின் வரவால் இவ்வாறு அரசருக்கும் அரசிக்கும் மனத்தாங்கல் விளைந்ததும் மற்றும் ஒரு தீமையாகச் சாத்தன் கருதினான்.

நெடுஞ்சடையனின் தோழன் என்ற உரிமையாலும், மன்னரின் பாதுகாப்புக்குப் பொறுப்பானவன் என்ற கடமையாலும் உந்தப்பட்டு அவரிடம் அதைப்பற்றிப்பேச முயன்றான் சாத்தன்.

"இந்த ஊர்வசி அடிக்கடி வந்து தங்களைத் தொல்லைப் படுத்துவதாகத் தெரிகிறது. உறவினள் ஆயினும் சற்றுத் தூரத்திலேயே நிறுத்தி வைப்பது நல்லது என்று நினைக்கிறேன்" என்றான்.

"சாத்தா! நீயும் மகாராணியைப்போல் உனக்குத் தேவையற்ற காரியங்களில் நேரத்தை வீணாக்காதே. ஊர்வசி எனக்கு நெருங்கிய உறவினள் என்று முன்பே சொன்னேன் அல்லவா? அவள் வருவது எனக்குத் தொல்லை அல்ல. அதை நான் வரவேற்கிறேன். அவளிடம் பேசுவதால் காஞ்சிமா நகரைப் பற்றியும் பல்லவ நாட்டைப் பற்றியும் எவ்வளவோ தெரிந்துகொண்டேன்" என்று சாத்தனிடம் சற்றுக் கடுமையாகவே பேசினான் நெடுஞ்சடையன்.

சாத்தன் தான் அஞ்சியவாறே நடக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டான். பாண்டிய மன்னரிடம் பல்லவனைப் பற்றிப் பேசிய ஊர்வசி, அவரிடமிருந்து பாண்டிய நாட்டைப் பற்றிய எத்தனைத் தகவல்களைத் தெரிந்துகொண்டிருப்பாளோ என்று வியந்தான் அவன். ஆனால் அரசரிடம் ஊர்வசியைப் பற்றிப் பேசுவதால் பயன் இல்லை. அவளுடைய அழகிலோ, உறவிலோ அரசர் மயங்கியிருக்கிறார் என்பது தெளிவு. அன்னை மகாராணியிடமும் பேசிப் பயன் இல்லை. ஊர்வசி ஒற்றாளாக வந்திருக்கிறாள் என்று அவர்களிடம் சொன்னால் அவனை எள்ளி நகையாடுவார்கள் என்பது உறுதி. ஊர்வசியை அதிகநாள் அரண்மனையில் வாழவைப்பது ஆபத்தாகும். ஆகவே அவளுடைய துரோகச் செயலைக் கையும் களவுமாகப் பிடித்து அரசன் முன் நிறுத்துவதே இதற்கான வழி என்று முடிவுசெய்தான் சாத்தன்.

சாத்தன் எதிர்பார்த்தது போலவே காஞ்சியிலிருந்து காயத்ரி தேவியின் தூதன் விரைவிலேயே மீண்டும் சில பரிசுப் பொருள்களுடன் மதுரை அரண்மனைக்கு வந்தான். சாத்தனின் ஆணைப்படி அரண்மனைக் காப்பாளன் அந்தச் செய்தியை அறிவித்தவுடனேயே, சாத்தன் தான் முன்னரே உருவாக்கியிருந்த திட்டத்தைச் செயல்படுத்தினான்.

மதுரையிலிருந்து அடுத்த நாள் காஞ்சிக்குத் திரும்பிய காயத்ரிதேவியின் தூதன் சாரங்கனுக்காக அரண்மனை வாயிலில் காத்திருந்தான்சாத்தனின்உதவியாளர்களில்ஒருவனாகியகண்ணப்பன்.

கோட்டைக்காவலன் அவனை அறிமுகப் படுத்தினான். "இவன் கண்ணப்பன். ஒரு வேலையாகப் பெண்ணாகடம் வரை போகவேண்டும். அவனுக்கு அந்த வழி சரியாகத் தெரியாது. நீ அந்த வழியாகத் தானே போகிறாய். அவனையும் உன்னுடன் கொண்டுபோ" என்று வேண்ட, சாரங்கன் அவ்வாறே கண்ணப்பனையும் உடன்கொண்டு புறப்பட்டான். இருகுதிரைகளில் இருவரும் பயணம் செய்து இரவில் துறையூர் என்னும் சிற்றூரை அடைந்தனர். அங்குள்ள பயணிகள் சத்திரத்தில் தங்கினர். "அண்ணே! இது எங்க ஊரிலே மட்டும் கிடைக்கும் கள். கொஞ்சம் குடிங்க" என்று சொல்லி சாரங்கனிடம் நீட்டினான் கண்ணப்பன். "பயணக் களைப்பே தெரியாது. நல்லா உறக்கம் வரும்" என்று ஊக்கு வித்தான். இருவரும் மதுவும் உணவும் முடிந்து படுத்தச் சற்று நேரத்திலேயே கண்ணப்பன் கள்ளில் சேர்த்துக்கொடுத்த மயக்க மருந்து வேலைசெய்யவே சாரங்கன் சவம்போல் உறங்கினான். இன்னும் பத்து நாழிகை கழிந்த பின்னரே சாரங்கன் கண்விழிப்பான் என்பதை நன்கறிந்த கண்ணப்பன், அவனுடைய உடலைத் தடவிப் பார்த்து, இடுப்பில் பாதுகாப்பாகச் செருகி வைத்திருந்த ஓலையை வெளியில் எடுத்தான். சாத்தனின் கட்டளைப்படி அந்த ஓலையில் எழுதியிருந்த செய்திகளை வேறு ஓர் ஓலையில் முற்றிலுமாக எழுதி எடுத்துக்கொண்டான். அதன்பின் சாரங்கனின் இடுப்பில் முன்பு இருந்தது போலவே ஓலையைச் செருகிவைத்தான்.

அடுத்த நாள் காலையில் கண்விழித்த சாரங்கன் அருகிலேயே படுத்திருந்த கண்ணப்பனை ஆழ்ந்த உறக்கத்திலிருந்து எழுப்பினான். "நீ இன்னும் முழிக்கல்லியா? நானே இவ்வளவு நேரம் அசந்து உறங்கி விட்டேனே என்று பார்த்தால், நீ என்னைவிட நன்றாக உறங்குகிறாய்" என்றான்.

"உண்மையிலேயே உன் கள் சரியான கள்தான். நான் படுத்ததுதான் தெரியும். கண்விழித்தபொழுது நேரம் வெளுத்துவிட்டது" என்று கண்ணப்பனின் கள்ளைப் பாராட்டினான் சாரங்கன். அடுத்த நாள் பெண்ணாகடத்திலிருந்து காவிரிக்கரையில் சாரங்கனுக்கு விடைகொடுத்துவிட்டு மதுரைக்குத் திரும்பினான் கண்ணப்பன்.

"எனக்கும் அடிக்கடி இங்கே வரவேண்டி இருக்கும். அடுத்த தடவை நீங்கள் மதுரைக்கு வரும்பொழுதும் நாம் சேர்ந்து பயணம் செய்வோம்" என்று சொல்லி அனுப்பினான். கண்ணப்பன் கொண்டுவந்து கொடுத்த ஓலையைப் படித்தான் சாத்தன்.

"நான் மதுரைக்கு வந்து ஒரு மாதத்திற்குமேல் ஓடிவிட்டது. இப்பொழுது இந்த அரண்மனையும், அதன் சுற்றுப் புறமும், மதுரை நகரமும்கூட எனக்கு மிகவும் பழக்கம் ஆகி விட்டன. அன்னை மகாராணியாரின் கருணையால் அவருடைய தேரிலேயே எப்பொழுது வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும் நான் தனியாகவே போய்வரலாம். அவர் என்னுடன் வரவேண்டும் என்ற நிபந்தனை இல்லை. அவருடைய தேரோட்டியிடம் அவ்வாறு கட்டளை இட்டிருக்கிறார் அன்னை மகாராணி!, அது போலவே அவருடைய பணிப்பெண்களில் ஒருத்தியை எனக்குப் பணிவிடை செய்வதற்காகத் தந்திருக்கிறார். பொன்னி என்ற பெயருள்ள அந்தப் பெண்ணை நான் நன்றாக வளைத்துவிட்டேன். நான் என்ன சொன்னாலும் செய்வாள். அன்னை மகாராணி என்மீது பொழியும் அன்பையும் பாசத்தையும் பார்க்கும்பொழுது என் நெஞ்சு சிலநேரங்களில் கூசுகிறது. ஆனால் எனக்குத் தந்த வேலையை நான் திறமையாக நிறைவேற்றுவேன். எந்த விதமான பற்றும் பாசமும் அதிலிருந்து என்னைத் தடுக்காது."

இந்த வரிகளை நன்கு கூர்ந்து படித்தான் சாத்தன். அவளுக்குக் கொடுக்கப்பட்ட வேலை என்னவாக இருக்கும்? அந்த வேலையை நிறைவேற்றுவதில் அன்னை மகாராணியின் பற்றும் பாசமும் தடையாக இருக்காது என்றால் அதன் பொருள் என்ன? அன்னை மகாராணிக்குத் துரோகம் செய்யத்தான் அவள் வந்திருக்கிறாள் என்பது நன்கு விளங்கவில்லையா! அவன் தொடர்ந்து படித்தான்.

"நெடுஞ்சடையனிடம் படிப்படியாக நெருங்கி வருகிறேன். என்னைத் தனியாகச் சந்தித்து உரையாடுவதை அரசர் விரும்புகிறார். என்னைக் காணும்பொழுது அவர் முகம் மலர்கிறது. தொடக்கத்தில் அதிகம் பேசவில்லை! ஆயினும் இப்பொழுது மனம் திறந்து பேசத் தொடங்கியுள்ளார். ஒரு முக்கியமான செய்தியை இரண்டு நாள்களுக்கு முன் என்னிடம் தெரிவித்தார். அமைச்சர் மாறன் காரி ஓய்வுபெற விரும்புகிறாராம். அந்தப் பதவியில் அரசருடைய தோழனான சாத்தஞ்சாத்தனை அமர்த்த விரும்பினார் அரசர். ஆனால் சாத்தஞ் சாத்தன் அதை ஏற்க மறுத்துவிட்டாராம். இவ்வளவு இளம் பருவத்தில் அவ்வளவு பெரிய பதவி வேண்டாம் என்று தள்ளி விட்டாராம் அந்தப் பைத்தியக்காரர்! ஆகவே மாறன் காரியின் தம்பி, மாறன் எயினன் விரைவிலேயே அமைச்சர் ஆவார் என்று நெடுஞ்சடையனே என்னிடம் கூறினார். இன்னும் கொஞ்ச நாள்களில் அரசரும் நானும் இன்னும் நெருக்கம் ஆவோம் என்று நம்புகிறேன்.

அப்பொழுது இன்னும் பல அரசியல் செய்திகளைப் பற்றிப் பேசும் வாய்ப்பு வரும். மன்னரின் எதிர் காலத்திட்டங்களைப்பற்றிய பேச முயற்சி செய்வேன்.

"பாண்டிய அரசி இளவெயினிக்கு என்னைக் கண்டது முதலே பிடிக்கவில்லை என்று நினைக்கிறேன். என்னிடம் அதிகம் பேசுவதும் இல்லை பழகுவதும் இல்லை. நான் நெடுஞ்சடையனிடம் நெருங்கிப் பழகுவதை அவள் விரும்பவில்லை! பொறாமைப் படுகிறாள் என்று தோன்றுகிறது. என் அழகும் அவளுக்கு எரிச்சல் ஊட்டுகிறது. என்று நினைக்கிறேன். ஆனால் அதைப்பற்றிக் கவலைகொள்ள வேண்டியதில்லை. அவள் பட்டத்தரசி ஆனாலும் அவளுக்கு இங்கே ஒரு முக்கியத்துவமும் இல்லை. அரசன் முக்கியமான அரசியல் எதுவும் அவளிடம் பேசுவதுகூட இல்லை என்று நினைக்கிறேன். இளவரசி தேவந்தி பட்டும் படாமலும் நடந்து கொள்கிறாள். என்னைக் காணும் பொழுது மகிழ்ச்சியோடு உரையாடுவாள். ஆனால் நெருங்கிப் பழக முயற்சிசெய்வதில்லை. நான் ஒரு ரகசியத்தைக் கண்டுபிடித்துவிட்டேன். இளவரசிதேவந்தி தளபதி சாத்தஞ் சாத்தனைக் காதலிக்கிறாள். அவரும் அவளைக் காதலிக்கிறார். ஆனால் அன்னை மகாராணி அதை விரும்பவில்லை என்று தோன்றுகிறது. இந்தச் சாத்தஞ்சாத்தனிடம் நான் விழிப்பாக இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. அவர் என்னைப் பார்ப்பதும், என்னிடம் பேசுவதும் ஒரு வேளை என்னைப் பற்றிய சந்தேகம் அவருக்கு உள்ளதோ என்று எனக்கு அச்சம் தருகின்றன. முகப்புகழ்ச்சியால் அவரை மகிழ்விக்க முயன்றேன். எந்த அளவு வெற்றிபெற்றேன் என்று தெரியவில்லை.

இப்போதைக்கு இவ்வளவே. அடுத்தமுறை இன்னும் முக்கியமான தகவல்களைத் தர முயற்சி செய்கிறேன்" என்று முற்றுப் பெற்றது ஓலை.

28. வலைக்குத் தப்பிய பறவை

ஓலையைப் படித்து முடித்த சாத்தன் ஊர்வசி எத்தகைய துணிச்சல்காரி என்று வியந்தான். அவளுடைய துரோகம் வெளிப்பட்டால் அவளுடைய அழகு கெழுமிய கழுத்தில் தூக்குக் கயிறு விழும் என்பதை உணர்ந்தும் அபாயம் நிறைந்த ஒற்றர் பணியில் ஈடுபடுவது அவளுடைய துணிச்சலை மட்டும் அல்ல, அவளுடைய பேராசையையும் எடுத்துக் காட்டுவதாகும். பல்லவ அமைச்சர் அவள் வெற்றி பெற்றால் ஒரு மிகப் பெரிய பரிசை அவளுக்கு அளிப்பதாக வாக்குறுதி அளித்திருக்க வேண்டும். என்றோ கண்டு மறந்த தந்தையின் உடன்பிறந்தாளான அன்னை மகாராணியின் அன்பையும் பாசத்தையும் அடிப்படையாக வைத்து ஒரு பெரிய சதித்திட்டத்தை உருவாக்கிய பல்லவ அமைச்சர் கருணாகரனையும், அதை நிறைவேற்றுதற்கு வேண்டிய துணிவு காட்டிய ஊர்வசியையும் அவனுடைய தொழில் வன்மைகொண்ட உள்ளம் பாராட்டியது. ஆனால் இப்பொழுது அவன் கையில் அவளை அழிக்கவல்ல ஆயுதம் கிடைத்துவிட்டது என்ற எண்ணம் அவனுக்கு மனநிறைவு அளித்தது.

அடுத்த கணமே அந்த மனநிறைவு சற்று ஆட்டம் கண்டது. அவனுடைய கையில் இருக்கும் ஓலை ஊர்வசி எழுதிய ஓலையின் பிரதிதான். அதனை எழுதியது அவனுடைய உதவியாளர்களில் ஒருவனான ஒற்றன். கடிதம் எழுதியவள் ஊர்வசி என்பதற்கு என்ன அத்தாட்சி? மன்னர் இப்பொழுது ஊர்வசியிடம் மையல் கொண்டிருக்கிறார் என்பதை அவன் மனம் சற்றே தயக்கத்துடன் ஆயினும் சம்மதிக்கத்தான் செய்தது. அத்தகைய மனநிலையில், எவ்வளவு நெருங்கிய தோழன் ஆயினும் சாத்தனுடைய சொற்களை மட்டும் நம்பி, ஊர்வசியின் துரோகத்தை ஒத்துக் கொண்டு அவள் மீது நடவடிக்கை எடுக்க நெடுஞ்சடையன் முன்வருவானா? சாத்தனுடைய குற்றச் சாட்டை அடியோடு மறுத்து ஊர்வசி அழுது புலம்பினால், அவளுடைய கருநீல விழிகளிலிருந்து ஒழுகும் அந்தக் கண்ணீரில் அவனுடைய வாய்ச்சொல் வார்த்தைகள் அடித்துச் செல்லப்படுமா? யாரோ எழுதிய ஓர் ஓலையைக் கொண்டுவந்து காட்டி, அதை எழுதியது ஊர்வசி என்று சொன்னால் அதை நான் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் என்று அரசர் கேட்டால் அவன் என்ன பதில் சொல்ல

முடியும்? அத்தகைய ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் ஊர்வசி தப்புவாள் என்பது ஒரு புறம் இருக்க, நெடுஞ்சடையனுக்கும் சாத்தனுக்கும் இருந்த நட்புறவில் விரிசல் ஏற்படும். சாத்தனின் வார்த்தைகளை நெடுஞ்சடையன் நம்ப மறுத்தால் அதன்பின் அரசனின் பணிகளை மேற்கொள்வதே கடினமாக இருக்கும். அது மட்டுமன்றி இந்தத் தருணத்தில் பல்லவனின் சூழ்ச்சி வெற்றி பெற்றால் பாண்டியரும் பாண்டிய மண்டலமும் தோல்வி அடையும். அது நடக்காமல் தடுத்தே ஆகவேண்டும் என்பதில் சாத்தன் உறுதியாக இருந்தான்.

அவன் மேலும் ஆழமாகச் சிந்தித்தான். ஊர்வசி அனுப்பிய முடங்கல் இன்னும் ஓரிரு நாளில் பல்லவ அமைச்சரைச் சென்றடையும். அது ஊர்வசியின் தொடக்க நடவடிக்கைகளைக் குறிப்பிடுவதிலேயே கவனம் செலுத்துகிறது. ஊர்வசி எவ்வாறு அரசரையும், அன்னை மகாராணியையும் கைக்குள் அடக்கி முக்கியமான தகவல்களை அறிவதற்கான களம் அமைத்திருக்கிறாள் என்பதைத்தான் அந்தக் கடிதத்தில் பெரும்பாலும் விளக்கியுள்ளான். ஆகவே பாண்டிய நாட்டை இன்னலுக்குள் உய்க்கவல்ல தகவல் எதுவும் இல்லாத அந்தக் கடிதத்தால் ஆபத்து ஒன்றும் விளையப்போவதில்லை. இனியும் இத்தகைய கடிதங்களை எழுதி அனுப்புவதாக ஊர்வசியே எழுதி அறிவித்துள்ளாள். எனவே இனி வரும் தூதனிடம் அவள் கடிதம் கொடுத்து அனுப்புவாள் என்பதும், அக்கடிதத்தில் அவள் சேகரிக்கும் முக்கியத் தகவல்கள் இடம்பெறும் என்பதும் உறுதி. இப்பொழுது ஐயம் யாவும் அகன்றுவிட்டதால் அடுத்த தூதனைச் சிறைப்படுத்தி அவன் கொண்டு செல்லும் கடிதத்தையும் கைப்பற்றி அரசன்முன் கொண்டு நிறுத்தினால் ஊர்வசியின் சதி ஒளிவு மறைவின்றி வெளிப்படும். அதுவே நெடுஞ்சடையனின் கண்களைத் திறப்பதற்கும், அன்னை மகாராணியின் நம்பிக்கையை நசுக்குவதற்கும் உகந்த வழி என்று சாத்தன் முடிவு செய்தான்.

ஊர்வசியின் தூதனான சாரங்கனுடன் பெண்ணாகடம்வரை பயணம் செய்து அவனுடன் நட்பை வளர்த்துக்கொண்ட கண்ணப்பனை அழைத்து அவனிடம் விவரமாகப் பேசினான் சாத்தன். "கண்ணப்பா! நீ மயக்க மருந்து கள்ளில் கலக்கிக் கொடுத்து அவனை உறங்கவைத்ததைப் பற்றி அவனுக்குச் சந்தேகம் ஒன்றும் எழவில்லையே?"

"இல்லை தளபதியாரே! கண்டிப்பாக இல்லை! அடுத்த நாள் காலையில் எழுந்து என் கள்ளின் குணத்தைப் பாராட்டினான். என்னிடம் விடை பெறும்பொழுது கூட தாங்கள் என்னிடம்

கூறியிருந்தவாறு, அடுத்த முறை வரும்பொழுதும் இருவரும் ஒன்றாகப் பயணம் செய்வதற்குச் சம்மதம் தெரிவித்துவிட்டுத்தான் போனான்."

"நீங்கள் மதுரையிலிருந்து புறப்பட்டுச் செல்லும் பொழுது முதலில் இளைப்பாறும் இடம் எது?"

"சென்ற தடவை கரிமங்கலத்தில்தான் முதலில் இளைப்பாறினோம். அங்கே குதிரைகளுக்குக் குடிநீர் கொடுப்பதற்கும், எங்களுக்குச் சிற்றுண்டி தின்பதற்கும் வசதி உள்ளது. இரு நாழிகை நேரம் பயணம் செய்தால் கரிமங்கலத்தை அடையலாம்."

"சரி அடுத்த முறை தூதன் வந்தவுடன் நீ என்னை வந்து பார். நாம் சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" என்று ஆணையிட்டுக் கண்ணப்பனை விடுத்தான் சாத்தன்.

சாத்தன் எதிர்பார்ப்பு வீண்போகவில்லை. இருபது நாள்கள் சென்றபின் சாரங்கன் மீண்டும் வந்திருப்பதாக அரண்மனையின் தலைமைக் காப்பாளன் சாத்தனிடம் தெரிவித்தான். வழக்கம்போல் ஊர்வசியிடம் தான் கொண்டு வந்த பொருள்களைக் கொடுத்து விட்டு, அன்று அங்கேயே தங்கி, அடுத்த நாள் அவள் கொடுக்கும் ஓலையைப் பெற்றுக்கொண்டு போவான் என்று தெரிந்துகொண்டு, அதற்கேற்பத் திட்டமிட்டான் சாத்தன். கண்ணப்பன் அந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றினான்.

கரிமங்கலத்தில் குதிரைகளை நீர் பருகச் செய்து இளைப்பாறிக்கொண்டிருந்த கண்ணப்பனையும் சாரங்கனையும், அங்கே மறைந்திருந்த நான்கு வீரர்கள் திடீரென்று வந்து சூழ்ந்துகொண்டனர். தற்காப்பிற்காகத் தன் வாளை உருவமுயன்ற சாரங்கனைக் கண்ணப்பன் இறுக்கமாகக் கட்டிப்பிடித்ததால் அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. சாரங்கனின் கைகளைக் கட்டி, கண்ணப்பனின் குதிரையிலே அவனை உட்காரவைத்து, மதுரைக்குக் கொண்டு வந்தனர். சாரங்கனின் இடுப்பில் செருகி வைத்திருந்த ஓலையை எடுத்துப் பாதுகாப்பாகத் தன்னிடம் வைத்துக் கொண்டான் கண்ணப்பன்.

கண்ணப்பன் கொண்டு வந்து தன் முன்னால் நிறுத்திய சாரங்கனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு அவனிடமிருந்து கைப்பற்றிய ஓலையைக் கண்ணப்பனிடமிருந்து வாங்கிப் படித்தான் சாத்தன். மகளிர் கையெழுத்து என்று கண்டவுடனேயே சொல்லும் வண்ணம் அழகான எழுத்து வடிவத்தில் தெளிவாக

எழுதியிருந்த முடங்கல் அது. அதனைப் பெறுவது யார் என்றோ, எழுதியது யார் என்றோ குறிப்பிட வில்லை. காயத்ரி தேவி அதைப் பெற்றுக்கொண்டவுடனேயே அமைச்சருக்கு அனுப்புவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று எண்ணினான் சாத்தன்.

"நான் முன்னரே குறிப்பிட்டதுபோல் நாள் செல்லச் செல்ல மதுரை அரண்மனையில் என் செல்வாக்கு மேலும் பெருகிவிட்டது. பாண்டிய மன்னரும் அன்னை மகாராணியும் என்னிடம் நெருக்கமாக இருக்கிறார்கள் என்பது அரண்மனையில் வாழ்வோருக்கும் அரண்மனையோடு தொடர்புள்ளவர்களுக்கும் தெரியுமாதலால் என்னை எல்லோரும் மதிக்கிறார்கள். நான் எங்குச் சென்றாலும் யாரும் தடுத்து நிறுத்துவதில்லை. இரண்டு நாள்களுக்குமுன் மதுரை அரண்மனையின் பின்புறத்தில் இருக்கும் படைக்கலக் கொட்டிலைக்கூட நான் உள்ளே சென்று பார்த்தேன். ஆயிரக் கணக்கான ஆயுதங்கள் அங்கே குவிந்து கிடக்கின்றன. ஆனால் அவை பெரும்பாலும் பழுதுபட்டவை. பகைவர் யாரும் படையெடுத்து வருவர் என்றோ அல்லது அடுத்த நாள்களில் ஒரு போர் வரக்கூடும் என்றோ சற்றும் அச்சம் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. நான் அரசரிடம் அடிக்கடி அரசியல் பற்றிப் பேசும் வாய்ப்பும் கிடைத்தது. அப்பொழுதும் அதே கருத்துத்தான் வெளிப்பட்டது. உண்மையில் பாண்டிய மன்னர் மிகவும் பெருமையுடனும் கர்வத்துடனும் பேசினார்! உங்கள் பகைவர் யாரையும் கண்டு நீங்கள் அஞ்சவில்லையா என்று நான் கேட்டபொழுது அவர் பேசிய விதம் எனக்கு வேடிக்கையாகத் தோன்றியது. 'பகைவர்களிடம் அஞ்சுவதா! என்னை அச்சுறுத்தக் கூடிய பகைவர்கள் எங்கே இருக்கிறார்கள்? பல்லவன், நான் அவனைவிட வல்லவன் என்பதை உணர்ந்துவிட்டான்! சோழன் ஏழையாகிவிட்டான்! வேணாட்டரசனை நான் வீணாட்டரசனாக்கி விட்டேன்! தகடூரான் தகர்ந்து போய் விட்டான் எங்கே இருக்கிறான் பகைவன்?' என்று எக்காளமாகச் சிரித்தார் பாண்டிய அரசர்."

அந்த வரிகள் சாத்தனுக்கு வியப்பளித்தன..நெடுஞ்சடையன் அவ்வாறு பெருமை பேசியிருப்பாரா அல்லது ஊர்வசி மிகைப்படுத்தி எழுதியிருக்கிறாளா என்று ஐயுற்றான் அவன். ஒருவேளை அழகிய இளம்பெண் ஒருத்தியின் உள்ளத்தில் இடம் பிடிப்பதற்காக அவ்வாறு பேசினார் போலும்!

அவன் மேலும் தொடர்ந்து படித்தான் "இப்பொழுது திடீரென்று மதுரைமீது படையெடுத்து வந்தால் அது பாண்டியருக்குப் பேரதிர்ச்சியாக இருக்கும் என்று எனக்குத்

தோன்றுகிறது. அவர் அதற்கு மேலும் விளக்கியபோதுதான் அவருடைய அளவு கடந்த தன்னம் பிக்கைக்குக் காரணம் என்ன என்பது எனக்குப் புரிந்தது. 'வடக்கிலிருந்து வரும் பகைவனை என் உறையூர்ப்படை கவனித்துக் கொள்ளும். தெற்கிலிருந்து வரும் பகைவனை என் கரவந்தபுரம் படை விரட்டிவிடும்.' என்று உறுதியுடன் பேசினார் அவர். மேலும் உறையூர்ப்படை இவ்வளவு வலிவுபெறக் காரணம் அவருடைய ஆருயிர் நண்பனான தளபதி சாத்தஞ் சாத்தன் என்றும் அரசர் சொன்னார். ஆனால் இப்பொழுது சாத்தன் தேவையற்ற செயல்களில் இறங்கிப் பொழுதை வீணாக்குவதாகவும் குறிப்பிட்டார். சாத்தன் என்னைச் சந்தேகக் கண்களுடன் பார்க்கிறார் என்று எனக்குத் தோன்றியதால் அந்த சந்தர்ப்பதைப் பயன்படுத்திக்கொண்டு நான் அரசரிடம் ஒரு யோசனை கூறினேன். அடுத்து அமைச்சர் ஆகப் போகும் மாறன் எயினன் இப்பொழுது உறையூர்படையின் தளபதியாக இருக்கிறார். அவர் அமைச்சராக மதுரையில் பொறுப்பேற்கும்பொழுது சாத்தனை மீண்டும் உறையூருக்கு அனுப்பலாமே என்றேன். அது நல்ல யோசனை என்று அவரும் ஏற்றுக்கொண்டார். விரைவிலேயே அது நடக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

குறிப்பாக இங்கிருந்து எதைப்பற்றியாவது தகவல் வேண்டும் என்றால் அடுத்த முடங்கலில் தெரிவிக்கவும். இப்போதைக்கு இவ்வளவே"

ஊர்வசியின் செய்தி மடலைப் படித்து முடித்த சாத்தன் சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான். தன் உயிரைவிட மேலாகக் கருதியிருக்கும் நெடுஞ்சடையன், நேற்று வந்த ஒரு பெண்ணின் யோசனையை ஏற்று, தன்னை உறையூருக்கு அனுப்ப முடிவுசெய்தான் என்ற கூற்றை அவனால் நம்பமுடியவில்லை. ஆனால் நம்பாமலும் இருக்க முடியவில்லை. ஒரு மங்கை மீது மையல் வளர்ந்து விட்டால் அவளை அடைய வேண்டும் என்ற ஆர்வத்தில், மற்ற நட்பு, பாசம், பற்று போன்ற உணர்ச்சிகள் பின்னடைந்துவிடும் என்பது அவனுக்கு விளங்கியது. எவ்வாறாயினும் தன் கடமையைத் தான் செய்தே ஆகவேண்டும் என்பதில் சாத்தனுக்கு எந்தத் தடுமாற்றமும் ஏற்படவில்லை.

"வா கண்ணப்பா! இவனையும் கொண்டு போவோம். தூக்கில் தொங்கும்முன் இவன் பாண்டிய அரசரை நேரில் காணும் புண்ணியமாவது பெறட்டும்" என்று கூறி மன்னனின் இருப்பிடத்திற்குக் கொண்டுசென்றான் சாத்தன்.

கைகள் இரண்டும் முதுகோடு சேர்த்துக் கட்டுண்டு, அலங்கோலமாகத் தன்முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்ட சாரங்கனையும், அவனைக் கொண்டு வந்த காவலனையும் வெளியில் அனுப்பிவிட்டு "அரசே! முன்னறிவிப்பின்றி இவ்வாறு திடீரென்று தங்கள்முன் வந்து நின்று தொல்லை கொடுப்பதை மன்னிக்க வேண்டும். தள்ளி வைக்கமுடியாத காரியம் ஆதலால்தான் இவ்வாறு செய்யத் துணிந்தேன்.' என்று தாழ்மையுடன் பேசிய சாத்தனையும் நெடுஞ்சடையன் வியப்புடன் பார்த்தான்.

"என்ன சாத்தா! என் அறைக்குள் எப்பொழுது வேண்டுமானாலும் வருவதற்கு உரிமையுள்ள நீ ஏன் இவ்வாறு பேசுகிறாய்? இவன் கொலை செய்தானா அல்லது கொள்ளையடித்தானா? கையோடு பிடித்து என்முன் கொண்டு வந்து நிறுத்தவேண்டிய அவசியம் என்ன வந்தது?" என்று வினவினார்.

"இவன் கொலையோ கொள்ளையோ செய்யவில்லை. ஆனால் அதைவிடக் கொடிய செயலுக்கு உடந்தையாக இருந்தான். இந்த ஓலையைப் படியுங்கள் எல்லாம் விளங்கும்" என்று ஊர்வசி எழுதிய ஓலையை மன்னரிடம் கொடுத்தான் சாத்தன்.

ஓலையைப் படிக்கத் தொடங்கிய நெடுஞ்சடையன் முகத்தையே உற்று நோக்கிக்கொண்டிருந்த சாத்தனுக்கு அந்த முகத்தில் தோன்றிக் கொண்டிருந்த மெய்ப்பாட்டின் மாற்றங்கள் மன்னரின் மனத்தையே படம்பிடித்துக் காட்டிக்கொண்டிருந்தன. முதலில் வியப்பும், அதன்பின் வேதனையும், இறுதியில் வெகுளியும் பளிச்சிட்டதை அவன் தெளிவாகப் புரிந்து கொண்டான். படித்து முடிந்தவுடன் சாரங்கனை மேலும் கீழும் பார்த்துவிட்டு, சாத்தனிடம் கடுமையாகவே கேட்டார்.

"இதை இவனிடமிருந்து எப்படிக் கைப்பற்றினீர்கள்?"

"இந்த ஓலையைப் பல்லவ அமைச்சரிடம் கொடுப்பதற்காக இவன் சென்று கொண்டிருந்த பொழுது கரிமங்கலத்தில் ஐந்தாறு நாழிகைக்குமுன் தான் இவனைச் சிறைப்பிடித்து இந்த ஓலையைக் கைப்பற்றினோம்."

"இவன் ஓலை கொண்டு போகிறான் என்று தெரிந்துதான் சிறைப்பிடித்தீர்களா?"

"ஆம் இப்படி ஒரு சூழ்ச்சி நடக்கிறது என்று எனக்கு ஐயம் எழுந்தது. அதனால் இருபது நாள்களுக்குமுன் இவன் மதுரைக்கு

வந்து திரும்பிச் செல்லும்பொழுது இவனை உறக்கத்தில் மயக்கி இவன் அறியாமலே இடுப்பில் செருகிவைத்திருந்த ஓலையைக் கண்ணப்பன் பார்த்து எழுதி என்னிடம் கொண்டு வந்தான். அப்பொழுதுதான் என் ஐயம் உறுதிப்பட்டது. தங்களுடைய உறவினள் செய்யும் காரியம் ஆதலால், தக்க ஆதாரங்களுடன் பிடித்துக்கொண்டு வரவேண்டும் என்று காத்திருந்து, இந்த முறை பிடித்துக் கொண்டு வந்து விட்டோம்" என்று விளக்கினான் சாத்தன்.

நெடுஞ்சடையன் சாரங்கனிடம் வினவினான். "நீ யாருக்காக இந்த ஓலையைக் கொண்டு செல்கிறாய்? இதை உன்னிடம் தந்தது யார்?"

சாரங்கன் வாய்திறக்கவில்லை.

"கேட்டதற்குப் பதில் சொல்" மன்னர் உறுமினார். சாரங்கன் கற்சிலை போல் நின்றான்.

"இவன் இவ்வாறு கேட்டால் பேசமாட்டான். நம் கண்ணப்பனிடம் ஒப்படைத்தால் நான்கு நாழிகைக்குள் கிளிபோல் பேசுவான்" என்று வழி காட்டினான் சாத்தன்.

"வேண்டாம் இனிக் கேட்பதற்கு ஒன்றும் இல்லை. இவனுடைய கைவிரல்களையும் கால் விரல்களையும் ஒவ்வொன்றாக இவன் பேசும்வரை வெட்டுங்கள். பேசவில்லையானால், நாளை கதிரவன் உதிக்கும் நேரத்தில் கழுத்தையும் வெட்டிவிடுங்கள்" என்று ஆணையிட்டான் நெடுஞ்சடையன். அடுத்த கணமே சாரங்கன் பேசினான்.

"வேண்டாம் கேளுங்கள் நான் எல்லாவற்றையும் சொல்கிறேன்" எனக்கு உயிர்ப் பிச்சை கொடுங்கள் என்று கெஞ்சினான்.

"உன்னிடம் இந்த ஓலையைத் தந்தது யார்?" அரசன் மீண்டும் வினவினான்.

"ஊர்வசி"

"ஓலையை யாரிடம் கொடுப்பதற்காக உன்னிடம் தந்தாள்?"

"பல்லவ அமைச்சரிடம்."

"இதுவரை எத்தனை ஓலைகள் இதுபோல் கொண்டுபோய்க் கொடுத்திருக்கிறாய்?"

"இது இரண்டாவது ஓலைதான். நான் முதன் முறை வந்தபொழுது எழுதித்தரும் அளவிற்கு ஒன்றும் இல்லை என்று சொன்னார்கள். சென்ற முறையும், இந்த முறையும்தான் ஓலை தந்தார்கள்."

"சரி இவனைக் கொண்டுபோய் சிறையில் அடையுங்கள். என்ன செய்ய வேண்டும் என்று பின்னர் முடிவு செய்வோம்" என்று ஆணையிட்டார் நெடுஞ்சடையன். காவலர்கள் சாரங்கனைக் கொண்டு சென்றபின் தன்னுடைய வாயில்காப்போனை அழைத்து, "நீ போய் ஊர்வசியை அழைத்து வா, அவளிடம் இங்கு நடந்தது எதையும் சொல்லக்கூடாது" என்று ஆணையிட்டான்.

அதற்காகச் சென்ற காப்போன் சற்று நேரத்தில் திரும்பி வந்து "ஊர்வசி அம்மாள் அவர்களுடைய அறையில் இல்லை. பணிப்பெண் பொன்னியிடம் கேட்டபொழுது எங்கோ வெளியில் சென்றதாகச் சொன்னாள்" என்றான்.

"அவள் எங்கே சென்றிருக்க முடியும்? அந்தப் பொன்னியை அழைத்து வா" என்று மீண்டும் அவனை விடுத்தார் அரசர்.

அதுவரை அரசர் முன் நின்ற அனுபவம் இல்லாத பொன்னி தயங்கித் தயங்கி, வந்து தலை குனிந்து நின்றாள்.

"ஊர்வசி எங்கே போனாள்?" மன்னர் கேட்டார்.

"எங்கே போனார்கள் என்று தெரியாது. நான் அரண்மனைக்கு வந்து கொண்டிருந்தபோது நேற்று ஊர்வசியம்மாவிடம் வந்த ஆளைக் குதிரைமேல் கைகளைக் கட்டிக் காவலர்கள் கொண்டு செல்வதைப் பார்த்தேன். உடனே வந்து ஊர்வசியம்மாவிடம் அதைச் சொன்னேன். 'சரி நீ வேறு யாரிடமும் அதைப் பற்றி ஒன்றும் சொல்லவேண்டாம். அன்னை மகாராணியிடம்கூடச் சொல்ல வேண்டாம். நான் பார்த்துக் கொள்கிறேன்' என்று சொன்னார்கள். சற்று நேரத்தில் வெளியில் புறப்பட்டுப் போனார்கள். எங்கே போனார்கள் என்று தெரியாது" என்று அஞ்சி நடுங்கிக்கொண்டு சொல்லி முடித்தாள்.

"அரசே ! நான் உடனே திரும்பி வருகிறேன் என்று கூறி, மன்னரின் அனுமதிக்கும் காத்து நிற்காமல் சாத்தன் அரசரின் அறையில் இருந்து வெளியில் ஓடினான். சற்று நேரம் சென்றபின் வாடியமுகத்துடன் திரும்பிவந்தான்.

"அரசே! பறவை கூட்டில்தானே இருக்கிறது. எப்பொழுது வேண்டுமானாலும் பிடித்துக்கொள்ளலாம் என்று நினைத்தேன்.

ஆனால் அது பறந்துவிட்டது. வலைவீசிப் பிடிக்க ஏற்பாடு செய்துள்ளேன்" என்றான் மன்னனிடம்.

"அவள் இந்த அரண்மனைக்குள்தானே எங்காவது இருக்க வேண்டும். அல்லது மதுரைக் கோட்டைக்குள் கண்டிப்பாக இருக்க வேண்டும். கோட்டையை விட்டு வெளியில் போனதைக் காவலர்கள் பார்த்தார்களா?" என்று வினவினார் வேந்தர்.

"இல்லை அரசே! ஊர்வசி வெளியில் போனதை யாரும் பார்க்கவில்லை. அன்னை மகாராணியின் தேர் வெளியில் போயிற்று. கோட்டைக் காவலர்கள் வணங்கி வழிவிட்டனர். ஆனால் அந்தத் தேரில் பயணம் செய்தது அன்னை மகாராணி அல்ல. ஊர்வசிதான் என்பது அவர்களுக்குத் தெரியாது. அன்னை மகாராணி அரண்மனையில்தான் இருக்கிறார்கள். ஓலையைத் தாங்கள் படித்தீர்களே! அவளுடைய செல்வாக்கு பெருகியிருப்பதைப் பற்றி அன்னை மகாராணி அவள் எங்கு போக விரும்பினாலும்அவளைக் கொண்டுபோக வேண்டும் என்று அவருடைய தேரோட்டிக்கு ஆணையிட்டுள்ளார். பொன்னியை வளைத்தது போலவே அந்தத் தேரோட்டியையும் ஊர்வசி வளைத்துத் தன் வசப்படுத்தியிருப்பாள். இப்பொழுது அன்னை மகாராணியின் தேரில் ஊர்வசி மதுரையை விட்டு வேகமாக அகன்றுகொண்டிருக்கிறாள். அவள் புறப்பட்டு நான்கு நாழிகை நேரம் ஆகிவிட்டது. பல்லவ நாட்டை அடைவதற்காகப் பெண்ணாகடத்தை நோக்கித்தான் தேர் போய்க்கொண்டிருக்கும். நான்கு குதிரை வீரர்களை அனுப்பியுள்ளேன். பிடித்துக்கொண்டு வருவார்களா, அல்லது நுண்மதியும் துணிச்சலும் மிக்க ஊர்வசி அவர்களையும் ஏமாற்றித் தப்பி விடுவாளா என்பதை என்னால் உறுதியாகச் சொல்ல முடியவில்லை" என்று மனக் கலக்கத்துடன் பேசினான் சாத்தன்.

29. அன்னை அளித்த பரிசு

"சாத்தா! நீ முதல் ஓலையை ஏன் என்னிடம் கொண்டு வரவில்லை?" என்று சற்றுக் கடுமையுடன் ஆனால் அதே நேரத்தில் வேதனையுடனும் கேட்டார் நெடுஞ்சடையன். சாத்தன் மன்னரின் மனநிலையை நன்கு உணர்ந்துகொண்டான்.

"அரசே! தாங்கள் ஊர்வசியின்மீது உறவினள் என்ற முறையில் அன்பு செலுத்தினீர்கள். நான் தங்களை எச்சரிக்கை செய்ய முயன்றபொழுது 'நீ தேவையற்ற காரியங்களில் தலையிடாதே' என்று கடிந்து கொண்டீர்கள். எனக்கும் ஊர்வசியைப் பற்றி ஐயம் தோன்றியதே தவிர உறுதியாகக் குற்றம் சாட்டும் அளவிற்குத் தெளிவு இல்லை! அவள் என்னை முகப்புகழ்ச்சி செய்து மகிழ்விக்கும் நோக்கத்துடன் என் புகழ் காஞ்சியிலும் பரவியிருக்கிறது என்றும் நான் பெண்ணாகடப் போரில் செய்த வீரச்செயல்கள் அவளுக்கும் தெரியும் என்றும் கூறியபொழுது, நான் அவள் நினைத்ததுபோல் மகிழ்ச்சி அடையவில்லை. என்னிடம் அவ்வாறு பேசி என்னைக் கைக்குள் ஆக்கவேண்டும் என்று யாரோ அவளிடம் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள் என்று எண்ணினேன். ஆகவே இளந்தத்தனுக்கு ஓலை அனுப்பி அவளுடைய பின்னணியை ஆராயச் சொன்னேன். அவளுடைய அன்னை காயத்ரிதேவிக்கும் பல்லவ அமைச்சருக்கும் தொடர்பு இருந்ததாகத் தெரியவந்தபொழுது நான் ஐயுற்றது சரியாக இருக்கும் என்று முடிவு செய்தேன். அவள் நம் அரண்மனையில் வசித்துக்கொண்டு ஒற்றறியவே வந்திருக்கிறாள்·என்று ஊகித்தேன். இங்கு கிடைக்கும் தகவலை அவள் அமைச்சருக்கு அறிவிப்பதற்குத் தூதன்வழியே ஓலை அனுப்புவதைத் தவிர வேறு வழி இல்லாததால் அதைக் கண்காணிக்க ஏற்பாடு செய்தேன். தூதனைக் கைது செய்தபின் அவனிடம் ஓலை எதுவும் இல்லையெனில் நான் தங்கள் சினத்திற்கு ஆளாக நேரும். அதனால்தான் தூதன் அறியாமலே சோதனை செய்து, ஓலை கொண்டு செல்கிறான் என்பதை உறுதி செய்தேன். அந்த ஓலை காஞ்சியில் கிடைத்தாலும் ஊறு விளையாது. ஆகவே இம்முறை தக்க ஆதாரங்களுடன் தங்கள்முன் வந்து ஊர்வசியின் மீது குற்றம் சாட்டினேன். ஆனால் அதற்குமுன்பே அவள் தப்பிவிடுவாள் என்று நான் நினைக்கவே

இல்லை. பொன்னி தற்செயலாகச் சிறைப்பிடித்த தூதனைக் கண்டதும், அதை உடனே ஊர்வசியிடம் கூறியதும் அவள் தப்பிச் செல்லவழி வகுத்து விட்டன" என்று தன் செயலைக் காரண காரியங்களுடன் விளக்கினான் சாத்தன்.

நெடுஞ்சடையன் உடனே ஒன்றும் பேசவில்லை! பின்னர் ஒரு பெருமூச்சுடன் பேசத்தொடங்கினான். "உனக்கே உரிய முறையில் மிகவும் நயமாகப் பேசினாய். நீ நேரடியாகச் சொல்லாமல், இலைமறை காயாகச் சொன்னவற்றை நான் நன்கு புரிந்துகொண்டேன். நான் ஊர்வசியின் அழகிற்கு அடிமையாகி என்னுடைய சமநிலையை இழந்துவிட்டேன் என்பதை நீ சொல்லாமல் சொன்னாய். அவளுடைய பேச்சைக் கேட்டு உன்னை உறையூருக்கு அனுப்புவதற்குக்கூட நான் துணிந்துவிட்டேன் அல்லவா? அவள் எழுதியுள்ளதை நான் மறுக்கவில்லை. நீ அதைப் பற்றி ஒரு வார்த்தைகூட என்னிடம் பேசவில்லை! ஆயினும், அது உன் மனத்தை எவ்வளவு வருத்தியிருக்கும் என்பதை நான் உணர்கின்றேன். சில நேரங்களில் சில மனிதர்கள் சில உணர்ச்சிகளுக்கு அடிமையாகி, தங்களுடைய நடுவு நிலைமையை இழந்து விடுகிறார்கள் என்று பெரியோர் சொல்வது உண்மையே! கோப்பெருந்தேவியின் ஊடலைப்போக்கும் நோக்கத்துடன் போய்க்கொண்டிருந்ததால் தான் பாண்டியன் நெடுஞ்செழியன் பொற்கொல்லன் கூறியதைத் தீர விசாரிக்காமல், சிலம்பு அவன் கையில் இருந்தால் அந்தக் கள்வனைக் கொன்று அச்சிலம்பு கொணர்க ஈங்கு, என்று ஆணை யிட்டான் என்று இளங்கோவடிகள் சுட்டிக்காட்டுகிறார். அவ்வாறு நானும் ஒரு பெண்ணை மகிழ்விக்கும் நோக்கத்தில் உன்னுடைய நட்பைக்கூடப் புறக்கணித்தேன் என்பது எனக்கே வெட்கமாகத் தெரிகிறது இப்பொழுது! ஆயினும் நீ அதைக்கண்டு என் மீது சினம் கொள்ளாமல் என்னையும் இந்த நாட்டையும் காக்கும் பணியில் மூழ்கினாய். அதை நான் என்றும் மறக்கமாட்டேன். நம் நட்பும் என்றும் போல் உறுதியாக நிற்கும்."

நெடுஞ்சடையனின் உணர்ச்சி நிறைந்த சொற்கள் சாத்தன் மனத்தை நெகிழச் செய்தன. "அரசே! நட்பு என்பது நிலையான உணர்வு. தாங்கள் கூறியதுபோல் ஒருசில நேரங்களில் சிலகாரணங்களால் அது சோதனைக் குள்ளாயினும், என்றுமே மறையாது. நட்பு இல்லாவிட்டாலும் அரசனுக்குத் தொண்டு செய்யவேண்டியது என் கடமை. கடமையுடன் நட்பும் சேரும் பொழுது தங்களை எதிர்த்தே தங்களுக்கு நன்மைசெய்யமுடியும் என்ற நிலைமை ஏற்பட்டால் அவ்வாறு எதிர்க்கவும் நான் தயங்க மாட்டேன். அந்த அடிப்படையில்தான் நான் தேவையற்ற செயல்களில் தலையிட

வேண்டாம் என்று தாங்கள் ஆணையிட்டாலும், அந்த ஆணையையும் மீறி நான் என் கடமையைச் செய்தேன். அதற்குத் தங்கள் மன்னிப்பைக் கோரவேண்டியவன் நான்" என்று மேலும் கடமையும் அடக்கமும் மேலிடப் பேசினான் சாத்தன்.

நண்பர்கள் இருவரும் இவ்வாறு மனம் உருகி அன்புபொழிந்துகொண்டிருந்த வேளையில் காவலன் உள்ளே வந்து "மன்னரிடம் பேசி முடிந்தவுடன் தளபதிசாத்தனார் அன்னை மகாராணியைச் சென்று காணவேண்டும் என்று ஆணை வந்துள்ளது" என்று அறிவித்தான். சாத்தன் நெடுஞ்சடையனிடம் விடைபெற்று அன்னை மகாராணியிடம் சென்றான். அவன் மனத்தில் இப்பொழுது ஓரளவு அச்சம் எழுந்தது. நெடுஞ்சடையன் சாத்தனின் தோழன். இருவரையும் பாசமும் பற்றும் இறுகப் பிணைத்திருந்தன. அதனால்தான் தன் ஆணையை மீறி ஊர்வசியைக் கண்காணித்ததை மன்னித்து, சாத்தனின் சேவையைப் பாராட்டினான் அவன். ஆனால் அன்னை மகாராணி சாத்தனிடம் வெறுப்புக் கொண்டவர் அல்ல என்றாலும் சொல்லத் தக்க அன்பும் உள்ளவர் அல்ல. அது மட்டுமன்றி இளவரசியான தேவந்தியை அரசகுலத்தில் பிறக்காத சாத்தஞ்சாத்தன் திருமணம் செய்து கொள்ள விரும்புவது பேராசை என்று கருதுபவர். மேலும், ஊர்வசியைச் சாத்தன் விசாரணை செய்ததைக் கண்டித்தவர். இப்பொழுது ஊர்வசியின் தூதுவனைக் கைது செய்து வேண்டுமென்றே அவளைக் குற்றவாளியாக்கச் சாத்தன் முயல்கின்றான் என்று அவர் நினைக்கக் கூடும். அன்னை மகாராணியின் திருவுள்ளம் எவ்வாறு இருக்குமோ என்ற ஐயம்தான் அவன் அச்சத்திற்குக் காரணம். எதையும் தாங்க வேண்டும்! தன் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு அன்னை மகாராணியின் முன் சென்று வணங்கி நின்றான் சாத்தன்.

"வா சாத்தா! உன் முகத்தில் நான் எதிர்பார்த்த வெற்றியின் அறிகுறியும் மகிழ்ச்சியும் காணவில்லையே!" என்று வியப்புடன் பேசி அவனை வரவேற்றான் அன்னை மகாராணி.

"எந்த வெற்றியைக் குறிப்பிடுகிறீர்கள் மகாராணி? நான் மகிழ்ச்சியடையும் வண்ணம் எந்த வெற்றியும் ஏற்படவில்லையே!" என்று ஒன்றும் புரியாதவன் போல் பேசினான் சாத்தன்.

"ஏன்? நம் அரண்மனைக்குள்ளேயே புகுந்து என்னையும் என் மகனையும் ஏமாற்றி எங்கள் கண்முன்னாலேயே ஒற்றுப் பணி நடத்திய ஊர்வசியின் சூழ்ச்சியைக் கண்டு பிடித்தது வெற்றியாகத் தெரியவில்லையா உனக்கு?" என்று அன்னை மகாராணி கேட்டபொழுது அவர் தன்னைப் புகழ்கிறாரா அல்லது கேலிசெய்கிறாரா

என்று விளங்கவில்லை சாத்தனுக்கு! ஆனால் அவனது விடை சற்றும் தயக்கமின்றி வெளிவந்தது.

"சூழ்ச்சியைத்தானே கண்டுபிடித்தோம். சூழ்ச்சி செய்த ஆளைப் பிடிக்கவில்லையே. அதனால் வெற்றியைவிட, தோல்வியல்லவா மேலோங்கி நிற்கிறது?" என்று திருப்பிக் கேட்டான் அவன்.

அது உன் தவறல்ல. உண்மையில் அது என் தவறு. என் குடும்பப் பாசத்தில் மதிமறந்து நான் தவறு செய்துவிட்டேன். சிறு குழந்தையாகக் கண்டவள் ஒரு குமரியாக வளர்ந்த காலத்தில் அவளுடைய வாழ்க்கையில் பல விதமான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம்! அதைப் பற்றி எண்ணிப் பார்க்காமல் கண்மூடித்தனமாக அவளை நேசித்து, அளவற்ற உரிமைகளையும் அளித்தேன். அவளைப்பற்றி விசாரணை செய்யத் தொடங்கிய உன்னையும் தடுத்தேன். நான் கொடுத்த சலுகைகளை அவள் எனக்கும் இந்த நாட்டிற்கும் கேடு இழைப்பதற்காகப் பயன் படுத்தியுள்ளாள். பொன்னி என்னிடம் எல்லாவற்றையும் சொன்னபொழுதுதான் நான் செய்த தவறும், நீ செய்த சேவையும் எனக்கு விளங்கின. நான் அவள் சுற்றித் திரிவதற்காகக் கொடுத்த தேர்தான் இப்பொழுது அவள் தப்பிச் செல்வதற்குப் பயன்பட்டிருக்கிறது. அதில் இணைத்திருக்கும் குதிரைகள் வேகத்திற்காகச் சிறப்பாக வளர்க்கப்பட்ட உயர்தரக் குதிரைகள். நீ ஊர்வசியைப் பிடிப்பதற்காக வீரர்களை விடுத்திருப்பதாகப் பொன்னி சொன்னாள். ஆனால் அவர்களால் என் தேரை விரட்டிப் பிடிக்க முடியுமா என்பது சந்தேகமே" என்று தன்னுடைய தவறை மனக்கவலையுடன் அவர் வெளியிட்டபொழுது அன்னை மகாராணி உண்மையாகவே தன் செயலுக்கு வருந்துகிறார் என்பதைச் சாத்தன் உணர்ந்தான்.

"மகாராணி! பாசமும் பற்றும் நிறைந்த தங்கள் தாயுள்ளம், உடன்பிறந்த தம்பியின் மகளாக மட்டுமே அவளைக் கண்டது. அதனால் அன்பும், செல்வமும் அள்ளிக் கொடுத்து அவளை மகிழ்வித்தது. அதில் எந்தத் தவறும் இல்லை. அரசரையும் அவர் குடும்பத்தினரையும் பாதுகாப்பது என் தொழில். அதனால்தான் ஊர்வசியின் திடீர்வரவும், வருவதற்கு முன் பல ஆண்டுகளாகக் காஞ்சியில் வாழ்ந்ததும் என் மனத்தில் சில ஐயங்களை எழுப்பின. நான் அவளைப்பற்றி விசாரிப்பதைத் தாங்கள் விரும்பவில்லை என்று தெரிந்துகொண்டபின்னும் நான் என் கடமையைச் செய்தே ஆகவேண்டும் என்று முடிவுசெய்தேன். அதனால்தான் தங்கள் விருப்பதையும் பொருட்படுத்தாமல் என் பணியைத் தொடர்ந்தேன். எப்படியானாலும், பெரும் சேதம் விளையும்முன் பல்லவனின்

சூழ்ச்சியை நாம் கண்டறிந்து முறியடித்துவிட்டோம்" என்று அன்னை மகாராணிக்கு ஆறுதல் அளித்துத் தன்னுடைய கடமையையும் எடுத்துரைத்தான் சாத்தன்.

"ஆனால் ஊர்வசி தப்பிவிட்டாளே!" என்று அவளால் ஏமாற்றத்திற்குள்ளான அன்னை மகாராணி வெறுப்புடன் பேசினாள்.

"மகாராணி! நான் அரசரிடம் இதைச் சொல்லமாட்டேன். ஆனால் தங்களிடம் மட்டும் சொல்கிறேன். ஒரு விதத்தில் பார்த்தால் ஊர்வசி தப்பிச் சென்றது நல்லது தான்" என்றான் சாத்தன். அன்னை மகாராணி வியப்பும் அதிர்ச்சியும் அடைந்தவள் போல் அவனைப் பார்த்தாள்.

"என்ன சொல்கிறாய் நீ?"

"மகாராணி! ஊர்வசி நமக்குச் செய்தது துரோகத்தைச் சற்று நேரம் மறந்து அமைதியாகச் சிந்தித்துப் பாருங்கள். ஊர்வசி அரண்மனையிலிருந்து போகாமலிருந்தால் இந்நேரம் அவளைக் காவலில் வைத்திருக்கவேண்டும். அவள் செய்த குற்றம் ஆதாரத்துடன் நிருபிக்கப்படும். அது சிறிய குற்றம் அன்று! மரண தண்டனை விதிக்கவேண்டிய மிகக் கடுமையான குற்றம். அப்படி நாம் செய்ய நேர்ந்தால் தங்கள் தாயுள்ளம் எவ்வளவு பாடுபடும் என்று நினைத்துப் பாருங்கள். குழந்தைப் பருவத்தில் கண்டு, மறந்து, மீண்டும் குமரிப் பருவத்தில் தங்களிடம் வந்த அந்த அழகிய இளம்பெண்ணை மதுரையில் தூக்கில் தொங்கவிட்டால் தங்கள் வாழ்நாள் முழுவதும் அந்தக் காட்சி தங்கள் மனத்தைவிட்டு அகலுமா? நான் அவளைப் பிடித்து வருவதற்காக ஆட்களை அனுப்பியது என் கடமையை நிறைவேற்றுவதற்காகத்தான். ஆனால் அவள் தப்பிச் செல்லட்டும் என்றுதான் தங்களுக்காக என் உள்ளம் வேண்டுகிறது" என்றான் சாத்தன்.

அன்னை மகாராணி சற்று நேரம் அமைதியாக நின்றாள். சாத்தன் விவரித்த அந்தக் காட்சி அவள் மனக்கண்முன்னால் நிழலிட்டதுபோல் தோன்றியது சாத்தனுக்கு.

ஈரடிகள் எடுத்து வைத்து முன்னால் நடந்து சாத்தனின் இரண்டு கைகளையும் பற்றிக் கொண்டாள். தழுதழுக்கும் குரலில் பேசினாள்.

"சாத்தா! உன்னைச் சிறுவனாக இருந்த நாள்களிலேயே நான் அறிவேன். சடையனைப் போலவே உன்னிடமும் நான் அன்பு செலுத்தினேன். நீயும் தேவியும் நெருங்கிப் பழகியதையோ கூடி

விளையாடியதையோ நான் தடைசெய்யவில்லை. ஆனால் நீங்கள் இருவரும் பருவம் அடைந்தபின் காதலர்களாக மாறுவீர்கள் என்று நான் எதிர் பார்க்கவில்லை. அவ்வாறு நேர்ந்தவுடன் நான் தடை விதித்தேன். பாண்டிய இளவரசி ஓர் இளவரசனின் மனைவியாகி, நாளடைவில் ஒரு பட்டத்தரசியாக வேண்டும் என்று விரும்பினேன். அதற்கு அரசியல் நோக்கம் காரணமேயன்றி உன்னிடம் இருந்த அன்பு குறையவில்லை. ஆனால் இன்று என் கண்கள் திறந்தன. நானும் என் மகனுமே தடைசெய்தும், உன் கடமையைச் செய்து எங்களைப் பாதுகாக்கத் துணிந்த உன் அரசப் பற்றும், கடமை உணர்ச்சியும் நீ எந்த அரசகுமாரனையும் விடச் சிறந்தவன் என்பதைக் காட்டுகின்றன. ஊர்வசி தப்பிச் சென்றாலும் தவறில்லை! என் மனம் கவலையில் மூழ்கக் கூடாது என்று எண்ணிய உன் மனத்தின் அன்பையும் தூய்மையையும் என்னால் பாராட்டாமல் இருக்க முடியாது. நான் என்றோ செய்திருக்க வேண்டியதை இன்று செய்கிறேன். நீ என் மகளின் கைப்பிடிக்கத் தகுதியுடையவன். நான் விதித்திருந்த தடையை விலக்கி விட்டேன். நீ அவளை மணந்து இன்பமுடன் வாழ்ந்து பாண்டிய மன்னரின் வாளாகவும் கேடயமாகவும் வாழ்வாயாக!" என்று உணர்ச்சி வசப்பட்டு மொழிந்தாள் அன்னை மகாராணி.

சாத்தனும் உணர்ச்சி மயமானான். அவன் உள்ளத்தில் உவகை பொங்கி எழுந்தது. தேவந்தியின் எழில் முகம் அவன் கண்முன் காட்சியளித்தது.

"மகாராணி! தாங்கள் என்னை மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கடித்து விட்டீர்கள். நானும் தேவந்தியும் என்று காதலிக்கத் தொடங்கினோம் என்பது எங்களுக்கே தெரியாது. ஆனால் ஒருவர் இன்றி மற்றவர்க்கு வாழ்வு இல்லை என்பதைப் புரிந்து கொண்டோம். ஆயினும் தங்கள் அனுமதியின்றி மணம் முடிப்பதில்லை என்றும், அந்த அனுமதிக்காக எத்தனை காலம் வேண்டுமானாலும் காத்திருப்பது என்றும் முடிவு செய்தோம். அந்த அனுமதி ஒரு நாள் கட்டாயம் கிடைக்கும் என்று இருவரும் நம்பினோம். இப்பொழுது அது கிடைத்துவிட்டது. இன்று என் வாழ்வில் மறக்க முடியாத பொன்னாள். எனக்கு விடைகொடுங்கள். இந்த மகிழ்ச்சியிலும் நான் என் கடமையை மறக்கக் கூடாது" என்று அவரை வணங்கி, தன் கண்களில் ததும்பிய உவகைத் துளிகளைத்துடைத்துக் கொண்டு வெளியேறினான் சாத்தன்.

அன்று மாலையில் பூங்காவில் இளவரசியைச் சந்தித்தான் சாத்தன். அவளுடைய முகத்தில் மாற்றம் ஒன்றும் காணவில்லை. அன்னை மகாராணியின் அனுமதி கிடைத்துவிட்டது என்ற மிக

முக்கியமான செய்தி - அவர்கள் இருவருடைய கனவுகளும் நிறைவேறும் நாள் நெருங்கிவிட்டது என்ற நற்செய்தி - இன்னும் தேவந்தியின் செவிகளில் எட்டவில்லை என்பது அவனுக்குத் தெளிவாக விளங்கியது. ஒரு வேளை அன்னை மகாராணியைச் சந்திக்கும் வாய்ப்பு அவளுக்கு ஏற்படவில்லை போலும்! அல்லது அந்த இனிக்கும் செய்தியை அவனே அவளிடம் நேரில் அறிவித்து மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளட்டும் என்று எண்ணி, வேண்டுமென்றே அவளிடம் அன்னைமகாராணி சொல்லாமல் இருந்திருக்கலாம். அவளை எதிர்பாராத இன்ப உலகிற்கு இழுத்துச் செல்லும் வாய்ப்பை அவனிடமே ஒப்படைத்து விட்டாரோ! அது அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

தேவந்தி மிக்க ஆர்வத்துடன் அவனிடம் வினவினாள். "ஊர்வசியைப் பற்றிய தகவல் ஏதேனும் கிடைத்ததா?"

"இல்லை. நம் வீரர்கள் பின்தொடர்ந்து சென்றிருக்கிறார்கள். விரட்டிப் பிடித்தால்கூட நாளை மாலைவரை நமக்கும் செய்தி கிடைக்குமா என்பது சந்தேகமே" என்றான் சாத்தன். அவளுடைய வினா அவனுடைய கருத்தை உறுதிப் படுத்தியது. அன்னை மகாராணியும் சாத்தனும் சந்தித்ததைப் பற்றி அவளிடம் யாரும் சொல்லவில்லை!

"அவள் தப்பிச் செல்வதே நல்லது என்று நினைக்கிறேன் நான்" என்றாள் தேவந்தி. தன் எண்ணமே அவள் மனத்திலும் உதித்திருக்கிறது என்பதை எண்ணி வியந்தான் அவன்.

"ஏன் அவ்வாறு நினைக்கிறாய்?"

"அவளை நம் வீரர்கள் பிடித்துக்கொண்டு வந்தால் என்ன ஆகும்? நம் நாட்டிற்கு எதிராக ஒற்றுப்பணி நடத்தியவளுக்கு மரணம் தானே தண்டனை? அதைப் பொறுத்துக் கொள்வது என் அன்னைக்கு மிகவும் கடினமாக இருக்கும். எனக்கே அது பிடிக்கவில்லை. அவள் செய்தது துரோகம் ஆயினும், அவளுடைய இளமையையும் அழகையும் எண்ணிப் பார்க்கும்பொழுது அவளைத் தூக்கில் இடுவதை என்னால் கற்பனை செய்யக்கூட முடியவில்லை" என்றாள் அவள்.

"எனக்கும் அதே எண்ணம்தான்" என்றான் அவன்."அதனால்தான் எப்பொழுதும் உள்ளதைவிட மிக உற்சாகமாக இருக்கிறீர்களோ? உங்கள் முகத்தில் மகிழ்ச்சி பொங்கி நிற்கிறது. நான் நினைத்தேன், ஒற்றனைப் பிடித்த வெற்றிப்பெருமிதம் என்று." அவனைப் போலவே அவளும் அவன் முகத்தை வைத்தே அகத்தை அளந்து விடுகிறாள் என்பது புரிந்தது அவனுக்கு.

"என் உற்சாகத்திற்கும் மகிழ்ச்சிக்கும் வேறொரு காரணமும் உண்டு" என்றான் அவன்.

"அது என்ன காரணம்?" ஆவலுடன் வினவினாள் அரசகுமாரி.

"எனக்கு அன்னை மகாராணியார் ஒரு பரிசு தந்தார்கள். அதனால்தான் இவ்வளவு மகிழ்ச்சியோடு இருக்கிறேன்." என்று புதிர் வளர்த்தான் சாத்தன்.

"அப்படியா! என்ன பரிசு?" அவளுடைய ஆவல் அதிகரித்தது.

"அவருடைய அருமை மகள்!"

"என்ன!" அந்த ஒரு வார்த்தையில் எத்தனையோ உணர்ச்சிகள் ஒளிந்திருந்தன என்பதை அவன் உணர்ந்தான். அவளுக்குப் புரிந்துவிட்டது என்பதை அவன் புரிந்துகொண்டான். அதை மேலும் விளக்கும் நேரம் இதுவன்று என்று இருவருக்கும் தோன்றியிருக்க வேண்டும்!

அவனுடைய தோள்களுக்கிடையே அவள் துவண்டாள். அவளுடைய கைகள் அவன் புறத்தைத் தழுவி நெஞ்சோடு சேர்த்தன. அந்த நெஞ்சில் நிமிர்ந்து நின்ற அவளுடைய பெண்மையின் மதர்ப்பு அவனுடைய காழ்த்த மார்பைத் துளைக்க முயல்வதுபோல் அழுத்தியது. அவளுடைய செவ்விதழ்கள் அவன் திறந்த வாயில் தேன் பொழிந்தன. அந்த இன்பத் திளைப்பில் எவ்வளவு நேரம் தங்களையே இழந்து விட்டனர் என்பது அவர்களுக்கே தெரியவில்லை. இறுகிய தழுவலிலிருந்து முற்றிலும் விடுபடாமல், தன் இதழ்களை அவன் விடுவித்த இடைவேளையில் அவள் வினவினாள் "அது எப்படி நிகழ்ந்தது? எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லுங்கள். ஒரு சிறிய பகுதியைப் போலும் விடாமல் முற்றிலுமாகச் சொல்லுங்கள். என் அன்னை என்னை உங்களுக்குத் தர எப்பொழுது அனுமதித்தார்? ஏன் அனுமதித்தார்? அந்தப் பரிசு தருவதற்கான காரணம் என்ன? எல்லாம் ஒன்று விடாமல் சொல்லுங்கள். இன்று இரவு முழுவதும் நான் அதையே என் மனத்தில் மீண்டும் மீண்டும் அசைபோட்டு மகிழ்வேன். கனவு கண்டு களிப்பேன். சொல்லுங்கள்!" என்று பணித்தாள் அவள்.

சாத்தன் அவ்வாறே செய்தான். அன்னை மகாராணி அழைத்தது முதல், அவரிடம் பரிசு பெற்று அறையிலிருந்து வெளியேறியதுவரை படிப்படியாக அவளிடம் விவரித்துப் பேசினான் தன்னுடைய வாழ்க்கையின் மிக முக்கியமான கட்டம், திருப்பு முனை தன் முன்னாலேயே நாடகமாக நடத்திக் காட்டியதுபோல் அவன் தன்னுடைய சொற்களால் வடித்த ஓவியத்தை அவள் கண்டு களித்தாள்!

30. ஊர்வசி புராணம்

மதுரையில் ஒரு சூறாவளியைக் கிளப்பிவிட்டு, அரண்மனையிலிருந்து யாரும் அறியாமல் வெளியேறிய ஊர்வசி, காஞ்சியை நோக்கிப் புயல்போல் விரைந்து கொண்டிருந்தாள். அவளுடைய தூதனைக் கைதுசெய்த தகவலைப் பொன்னி அறிவித்த ஒரு சில கணங்களிலேயே அவள் வெளியேறி விட்டாள். அவளிடம் இருந்த பொற்காசுகளைத் தவிர, அன்னை மகாராணியும், தேவந்தியும் அவளுக்குப் பரிசாக அளித்த பொன் அணிகலன்களும், சில விலை உயர்ந்த பட்டாடைகளும் மட்டுமே எடுத்துக்கொண்டுபோக நேரம் கிடைத்தது அவளுக்கு! உயிரைக் காக்க வேண்டிய நேரம் ஆகையால், அவள் வேறு எதையும் பற்றிக் கவலைப்படவும் இல்லை.

தூதனைக் கைதுசெய்து தளபதியாரிடம் கொண்டு போயிருக்கிறார்கள் என்பது அவளுக்குத் தெரியும். அவனிடம் பேசி, உண்மையை வரவழைத்து, ஓலையைப்படித்து ஒரு முடிவுக்கு வந்த பின்னரே சாத்தன் மன்னரிடம் செல்வான். ஊர்வசி அரண்மனையில் வசிப்பதால் அரசரும், அன்னை மகாராணியும் அனுமதி அளித்த பின்னரே அவளைக் கைதுசெய்ய முடியும். அவள் புறப்பட்டுச் சென்றது யாருக்கும் தெரியாததால் எப்பொழுது வேண்டுமானாலும் அவளைக் கைது செய்யலாம் என்று தான் எண்ணியிருப்பார்கள். ஆகவே குறைந்தது நான்கு நாழிகை நேரமேனும் கழிந்த பின்னரே அவளைத் துரத்திப் பிடிப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும். நுண் மதியளான ஊர்வசி அதிலும் ஒரு தந்திரம் செய்தாள். அவள் காஞ்சிக்குத்தான் போவாள் என்பது சாத்தனுக்குத் தெரியுமாதலால், வழக்கமாக மதுரையிலிருந்து காஞ்சிக்குச் செல்லும் பெண்ணாகடம் வழியிலேயே அவள் போவாள் என்றுதான் கருதுவர். அவளோ உறையூர் வழியில் சென்று கொண்டிருந்தாள்.

அன்னை மகாராணியின் தேரோட்டி அண்மையில் பல்வேறு இடங்களுக்கு அவளைக் கொண்டு சென்றுள்ளான். அன்னை மகாராணி பெரும்பாலும் வருவதில்லை. முதுமையால் ஏற்படும் தளர்ச்சியும் வாட்டமும் அவரைப் பிணிக்கத் தொடங்கியிருந்ததால் வெளியில் போவது மிகவும் அருமை. அதனால்தான் ஊர்வசியின் விருப்பப்படி, தன்னுடைய தேரைப் பயன்படுத்த அனுமதித்ததோடு,

தேரோட்டிக்குக் கட்டளையும் இட்டிருந்தார் அன்னை மகாராணி. அவ்வாறு தனியளாக அந்தத் தேரில் பயணம் செய்யும்பொழுது அன்னை மகாராணி தேரில் இருக்கிறாரா இல்லையா என்பது காவலர்களுக்குத் தெரியாது. திரைச்சீலையை உள்ளேயிருந்து விலக்கினாலன்றி உள்ளே இருப்பது யார் என்று வெளியிலிருந்து தெரிந்து கொள்ள முடியாது. ஆகவே அந்தத் தேருக்கு வழி விட்டு மரியாதை செய்வர் காவலர்களும் பொது மக்களும். அந்த மரியாதைதான் இப்பொழுது மிக விரைவில் பயணம் செய்ய வசதியளித்தது அவளுக்கு.

ஓடிவந்து தேரில் ஏறிய ஊர்வசி தேரோட்டியிடம் தெளிவாகக் கூறினாள். "உன்னால் எவ்வளவு வேகமாகச் செல்லமுடியுமோ அவ்வளவு வேகமாகச் செல், என் அன்னை நோய் வாய்ப்பட்டிருக்கிறார். திருவரங்கத்திற்கு இறைவழிபாட்டிற்காக வந்த இடத்தில் நோயுற்றதாக இப்பொழுதுதான் செய்தி வந்தது! உறையூர் செல்லும் வழியில் சென்று, காவிரியின் கரையை அடையவேண்டும். அங்கிருந்து நீ திரும்பிவிடலாம். நான் ஆற்றைக்கடந்து போய்க்கொள்வேன். இரவு பகல் பாராமல் சென்று, நாளை பொழுது சாய்வதற்குமுன் என்னைக் காவிரி யாற்றின் கரையில் சேர்த்தால் நூறு பொற்காசுகள் பரிசு தருவேன்" என்று அவனை ஊக்கு விக்கவும் செய்தாள்.

'கட்டாயம் கொண்டு விடுகிறேன். நூறு பொற்காசுகளுக்காக அல்ல! தாங்கள் அன்னை மகாராணியின் மருமகள் என்பதால்" என்று உறுதியளித்து வேகமாகத் தேரைச் செலுத்தினான் தேரோட்டி. வேகத்திற்கும் வலிமைக்கும் பெயர்பெற்ற இருகுதிரைகளும், அவனுடைய ஆணையை ஏற்றுக்கொண்டு பாய்ந்தன. இரவில் சற்று நேரமும், ஓய்விற்காக வேறு இரண்டு இடங்களிலும் தேரை நிறுத்திக் குதிரைகளுக்குக் கொள்ளும் நீரும் கொடுத்து, தேரோட்டியும் உணவு உண்டான். ஊர்வசியோ அவன் வாங்கிக்கொண்டு வந்த சில பழங்களைமட்டும் அருந்தினாள். அவள் விரும்பியவாறே, உறையூர் நகருக்குள் புகாமல் சுற்றிவந்து, காவிரியாற்றின் கரையில், படகுகள் நிறுத்தப்பட்டிருந்த படித்துறையில் தேரை நிறுத்தினான் தேரோட்டி. பொழுது சாய இன்னும் இரண்டு நாழிகைக்குமேல் இருந்தது. ஒரு பெருமூச்சுடன் தேரைவிட்டிறங்கிய ஊர்வசி, தேரோட்டியைப் பாராட்டி, நூறுபொற்காசுகளும் கொடுத்து அவனைத் திருப்பி அனுப்பினாள். ஒரு படகில் ஏறி, அக்கரையில் இருந்த திருவரங்கத்தை அடைந்தாள்.

காவிரியாற்றின் வடகரையிலிருந்து சோழ நாட்டின் பகுதி பல்லவர் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததால், ஆற்றைக் கடந்து வந்து

தன்னைப் பிடிப்பதற்குத் துணியமாட்டார்கள் பாண்டிய வீரர்கள் என்பது ஊர்வசிக்குத் தெரியும். ஆகவே அன்று இரவில் திருவரங்கத்தில் தங்கி, அங்குக் கோயில் கொண்டிருக்கும் அரங்கநாதப் பெருமானை வழிபட்டு, அடுத்த நாள் காஞ்சிக்குப் புறப்படலாம் என்று முடிவு செய்தாள் அவள். பல்லவ அமைச்சர் அவளுக்குத் தேவை ஏற்பட்டால் பயன்படுத்துவதற்காகக் கொடுத்திருந்த இலச்சினை பொறித்த ஓலை அவளிடம் இருந்ததால் பல்லவ அரசின் அலுவலர் அவளுடைய பயணத்திற்குத் தேவையான வசதிசெய்து கொடுப்பார்கள் என்பதும் அவள் அறிந்ததே. அதையும் பயன்படுத்தி வேறு தொல்லைகள் எதுவும் இல்லாமல் அவள் காஞ்சியை அடைந்தாள்.

சற்றும் எதிர்பாராமல் வீட்டிற்குள் நுழைந்த தன் மகளைக் கண்டவுடன் துடித்துப் போனாள் காயத்ரிதேவி. மதுரை அரண்மனைக்குள் ஆறுமாத காலமாவது வாழ்ந்து அமைச்சருக்குத் தேவையான தகவல்களையெல்லாம் அறிந்து தெரிவிப்பதாக உறுதியளித்துச் சென்ற ஊர்வசி ஏன் இவ்வளவு விரைவில் திரும்பி வந்தாள் என்று காயத்ரிதேவிக்கு விளங்கவில்லை. அது மட்டுமன்றி, மதுரை அரண்மனையில் அன்னை மகாராணியின் பற்றும் பாசமும் பெற்று வசதியாக வாழத்தொடங்கி விட்டதாக அவளே ஓலையும் அனுப்பியிருந்தாளே!

ஊர்வசி வீட்டிற்குள் ஓடிவந்து தன் அன்னையைக் கட்டிப் பிடித்து அழத்தொடங்கினாள். அதுவரை அவள் அடங்கிவைத்திருந்த அவலமும், அச்சமும், களைப்பும் எல்லாம் ஒன்று சேர்ந்து வெளிப்பட்டன. சென்ற மூன்று நாள்களாக உயிருக்கு அஞ்சி ஓடிய ஓட்டமும், மயிரிழையில் உயிர்தப்பிய பாக்கியமும், இறுதியாகப் பாதுகாப்பு உள்ள இடத்திற்கு வந்து சேர்ந்த நிம்மதியும் அந்த அழுகையின் வழியாக முடிவுக்கு வந்தன என்பதை அவள் உணர்ந்தாள். மகளை மார்போடணைத்து, "அழாதே கண்ணே! அழாதே! நீ உயிரோடு தப்பி வந்தாயே அதுவே போதும்." என்று தேற்றினாள் காயத்ரி தேவி. தான் எதுவும் சொல்லாமலே, உயிர் பிழைத்து வந்த கதையை அன்னை எவ்வாறு புரிந்துகொண்டாள் என்று வியந்தாள் ஊர்வசி. அழுகை அடங்கிய பின் வினவினாள் "நான் தப்பி வந்தேன் என்று எப்படிப் புரிந்து கொண்டீர்கள் அம்மா?"

"நீ என் மகள்! சிங்கத்தின் குகைக்குள் நுழையும் துணிச்சலைக் காட்டினாய்! ஆறுமாதம் அங்கு வாழ்வதாக உறுதி பூண்டு சென்ற நீ, இரண்டு மாதங்களில் திரும்பியிருக்கிறாய். வந்தவுடன் என்னைக் கட்டிப்பிடித்து அழுகிறாய்! உன் முகத்தில் அச்சமும்

சோர்வும் நிலவுகின்றன. உனக்குப் பெரிய அபாயம் நேர்ந்து நீ அதிலிருந்து தப்பி வந்திருக்கிறாய் என்று புரிந்துகொள்வது கடினமா?" என்று தன் எண்ணப் போக்கை எடுத்துக் காட்டினாள் காயத்ரி தேவி. தன் அன்னையின் அறிவையும் ஆற்றலையும் நன்கறிந்த ஊர்வசி தலையை ஆட்டினாள்.

"ஆம் அம்மா, என் உயிர்தப்பியது பெரிய பாக்கியம் என்றுதான் சொல்லவேண்டும். பொன்னி என்ற பணிப்பெண் இங்கிருந்து வந்த தூதனைக் கைதுசெய்துவிட்டார்கள் என்று தெரிவித்தாள்! வேறு யாருக்கும் தெரியும் முன்பே நான் அரண்மனையிலிருந்து வெளியேறினேன். அதனால்தான்தப்பமுடிந்தது" என்று தொடங்கிய ஊர்வசி, மதுரை அரண்மனையில் அவள் நுழைந்தது முதல், தப்பி வந்ததுவரை விவரமாக எடுத்துரைத்தாள்.

"சாரங்கன் இன்னும் சிறையில்தான் இருக்கிறானா அல்லது கொன்று விட்டார்களா?" என்று வினவினாள் காயத்ரி தேவி.

"எனக்குத் தெரியாது அம்மா. அவனைக் கைது செய்துவிட்டார்கள் என்று அறிந்தவுடனேயே நான் புறப்பட்டுவிட்டேன். சார்ரங்கனைப் பற்றி நினைக்கக்கூட முடியாத சூழ்நிலை அப்பொழுது! ஆனால் அந்தச் சாத்தன் மிகவும் பொல்லாத ஆள்! அவ்வளவு விரைவில் பல்லவ நாட்டிலிருந்து வந்த தூதனைக் கொல்ல மாட்டான். அவனிடமிருந்து இன்னும் என்னென்ன தகவல்கள் கறக்கமுடியும் என்று முயற்சி செய்வான்" என்றாள் ஊர்வசி.

"சரி அதைப்பற்றிய கவலை இனி நமக்கு வேண்டாம்! உடனே அமைச்சரிடம் நீ வந்த செய்தியை அறிவித்துவிடுவோம். அவர் இங்கு வந்து உன்னைச் சந்தித்தாலும் சரி, அல்லது உன்னை அவர் அலுவலகத்திற்கு அழைத்தாலும் சரி, அவரைக் கண்டு பேசிய பின்தான் நீ ஓய்வுகொள்ள வேண்டும்! நான் இப்பொழுது அமைச்சருக்குச் சொல்லி அனுப்புகிறேன்" என்று ஊர்வசியிடம் கூறிவிட்டு ஒரு வேலையாளை, அமைச்சரிடம் கொடுக்கச் சொல்லி ஓலையுடன் விடுத்தாள் காயத்ரிதேவி.

பல்லவப் பேரரசின் அமைச்சர் கருணாகரன் இருபது ஆண்டுகளுக்குமேல் அந்தப் பதவியில் இருப்பவர். பல்லவ மன்னன் நந்திவர்மனின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். அறுபது வயதை நெருங்கிக் கொண்டிருந்தாலும் உடலும் மனமும் வலிமை குன்றாமல் இருந்ததால், தன் பணியைத் திறமையுடன் செய்து முடிக்கும் பெற்றியும் அவருக்கு அமைந்திருந்தது. பல்லவப் பேரரசும் நரசிம்மவர்மன் காலத்தில் தமிழகம் முழுவதையும்

கையடக்கியிருந்தது. தெற்கில் பாண்டியர்கள் ஆட்சிபுரியத் தொடங்கினாலும் பல்லவருக்கு அடங்கியே இருந்தனர். ஆனால் இப்பொழுது பாண்டியன் பல்லவருக்கு நிகராகவளர்ந்துவிட்டான். அவனைத் தோற்கடித்துத் தமிழகத்தின் தலை சிறந்த பேரரசாகப் பல்லவ அரசை ஆக்கவேண்டும் என்பது கருணாகரனின் ஆசை. அந்த ஆசையை நிறை வேற்றுவதற்காக வெகு நாள்கள் திட்டமிட்டு, பாண்டியனின் நண்பனாக இருந்த கொங்கு வேந்தனைப் பல்லவர் பக்கம் இழுத்து வேணாட்டு மன்னனையும் தூண்டி விட்டு, பலமுகமாகப் பாண்டிய நாட்டைத் தாக்க முயற்சி செய்தார். ஆனால் பெண்ணாகடப் போரில் பாண்டியன் எதிர்பாராத விதமாகப் பல்லவப் படையையும், அதனுடன் சேர்ந்திருந்த கொங்குப் படையையும் முறியடித்து, திரும்பிப் போகும் வழியில் வேணாட்டுப் படையையும் விரட்டியடித்தான். இதனால் கருணாகரனின் கனவுகள் யாவும் கலைந்தன. அதற்குப் பின் பல்லவ நாட்டிலும் கொங்கு நாட்டிலும் அரசு கொடிய பஞ்சத்துடன் போராடிக்கொண்டிருந்த பொழுது சற்றும் எதிர்பாராமல் பாண்டியன் திடீரென்று வேணாட்டின் மீது படையெடுத்துச் சென்று ஏராளமான பொன்னும் பொருளும் பெற்றுத் தன் வலிமையை மேலும் பெருக்கிக்கொண்டான். இனிமேலும் பாண்டியனை வளரவிட்டால் அவன் எதிர்பாராத நேரத்தில் பல்லவ நாட்டையும் தாக்கி அடிப்படுத்த முயல்வான் என்று நம்பினார் கருணாகரன். அவன் அவ்வாறு செய்வற்கு முன்னால் அவனைத் தாக்கி வலிமை இழக்கச் செய்யவேண்டும் என்று முடிவு செய்தார்.

கருணாகரனின் அனுபவம் அவருக்கு உணர்த்திய உண்மை என்னவென்றால் பாண்டியன் அடுத்தபடியாக என்ன செய்யப் போகிறான் என்று அறிய முடியாமையால் தான் அவனுடன் மோதுவது கடினமாகிவிட்டது. பல்லவர் படை கொங்குப் படையுடன் பாண்டிய நாட்டின்மீது சில ஆண்டுகளுக்கு முன் படையெடுத்துச் சென்ற பொழுது பாண்டியன் படையை விட வலிமையும் வாய்ப்பும் பெற்றிருந்தது. ஆனால் காவிரிக் கரையில் காத்திருந்து, படைகள் ஆற்றைக் கடக்கும் நேரத்தில் தாக்குதல் நடத்தி வெற்றிபெற்றான் பாண்டியன். அதைப் பற்றி முன்னரே தகவல் கிடைத்திருந்தால், அதற்குத் தக்கவாறு திட்டத்தை மாற்றிப் பாண்டியனைத் தோற்கடிக்கும் ஆற்றல் பல்லவர் படைக்கு இருந்தது. அதே நேரத்தில் பல்லவர் படையின் ஒவ்வொரு அசைவையும் பாண்டியன் அறிந்து கொண்டிருந்தான் என்பதைக் கருணாகரன் உறுதியாக நம்பினார். அதாவது பாண்டிய ஒற்றர்கள் பல்லவர் ஒற்றர்களைவிடச் சிறப்பாகப் பணியாற்றியதால்தான்

பாண்டியன் வெற்றி பெற்றான். அந்த நிலைமையை மாற்ற வேண்டும் என்று அதற்கான பல வழிகளையும் ஆராய்ந்த பின் தான் ஊர்வசியைப் பாண்டியன் அரண்மனையில் புகுத்தும் திட்டத்தை வகுத்தார் அமைச்சர்.

மாயவர்மன் கங்கநாட்டரசனின் தொல்லைகளைத் தாங்க முடியாமல், காஞ்சி நகரில் தன் மனைவி காயத்ரி, ஆறுவயதான மகள் ஊர்வசி ஆகியோருடன் சரணடைந்தபொழுது நந்திவர்மன் அவர்கள் காஞ்சியில் வாழ்வதால் தனக்கு அபாயம் நேருமோ என்று அஞ்சினான். அவர்களுக்கு அபயம் அளிக்கவும் தயங்கினான். அமைச்சர் கருணாகரனின் வற்புறுத்தலுக்கு இணங்கியே இறுதியில் சம்மதித்தான். அதனால் அமைச்சரிடம் நன்றி கொண்ட மாயவர்மன், அவரோடு நட்பையும் வளர்த்துக் கொண்டான். உடல் நலம் மிகவிரைவில் குன்றத் தொடங்கிய மாயவர்மனின் வீட்டிற்கு அடிக்கடி வரத்தொடங்கிய கருணாகரன் அழகியான காயத்ரி தேவியுடனும் நெருங்கிப் பழகினார். கணவனும்மனைவியும் கங்க நாட்டிலிருந்து கொண்டுவந்த விலை உயர்ந்த இரத்தினங்களும், அணிகலன்களும் குறைந்துகொண்டே வந்தாலும் அமைச்சரின் உதவி காயத்ரி தேவியும் குடும்பமும் வளமுடன் வாழச் செய்தது. அந்த நன்றி கடப்பாடும் காயத்ரி தேவியைக் கருணாகரனிடம் மிகவும் நெருங்கச் செய்தது. மேலும் அழகும் துடிப்பும் மிக்க சிறுமி ஊர்வசி. நல்ல ஆசிரியர்களிடம் கல்விகற்கும் வாய்ப்பை அமைத்தார் அமைச்சர். மாயவர்மன் இறந்த பிறகும் இந்த தொடர்பு நிலவியது.

காயத்ரி தேவியுடன் ஒருநாள் தனிமையில் அளவளாவிக் கொண்டிருந்த பொழுது தன் மகளின் எதிர்காலத்தைப் பற்றிக் கவலை தெரிவித்த அவள் "பூ சுந்தரி இவள் குழந்தையாக இருந்தபொழுது இவளை மிகவும் விரும்பினாள். எவ்வளவு அழகாக இருக்கிறாள்! இவள் வளரட்டும் நான் என் மகனுக்கே இவளை மணம் முடிக்கிறேன் என்று என்னிடம் கூறினாள். எங்கள் நிலைமை இப்படி மாறியிருக்காவிட்டால் இந்நேரம் ஊர்வசி பாண்டிய நாட்டின் பட்டத்தரசியாக இருந்திருப்பாள்" என்று கற்பனை செய்து பெருமூச்சு விட்டாள். அப்பொழுதுதான் அமைச்சரின் மூளையில் ஒரு மின்னல் பாய்ந்தது!

ஊர்வசி பாண்டிய நாட்டின் அன்னை மகாராணியின் மருமகள். அவள் விரும்பினால் பாண்டியனின் அரண்மனைக்குள் புகுவது மிகவும் எளிது. புகுவது மட்டுமல்ல அன்னை மகாராணியின் மருமகள் என்ற முறையில் எவ்வளவு காலம் வேண்டுமாயினும் அந்த அரண்மனையில் வாழவும் செய்யலாம். அன்னை

மகாராணியிடம் மட்டுமன்றி நெடுஞ்சடையனிடமே நெருங்கிப் பழகவும் பேசவும் அவளுக்கு வாய்ப்புக் கிடைக்கும். இளைஞனான நெடுஞ்சடையன் அவளுடைய அழகிற்கு ஆட்படவும் கூடும். அப்படி நடந்தால் பாண்டியன் அரண்மனைச் செய்திகள் எல்லாமே ஊர்வசியின் செவிகளுக்கு எட்டும்! எவ்வளவு சிறப்பான திட்டம்! தனக்குத் தானே பாராட்டுத் தெரிவித்துக் கொண்டார் பல்லவ நாட்டு அமைச்சர்.

அமைச்சரின் திட்டத்தைக் கேட்டவுடன் நடுங்கினாள் காயத்ரி தேவி. "ஐயய்யோ! அதெல்லாம் வேண்டாம் இது சிங்கத்தின் வாயில் தலையை விடுவது போன்ற செயல். என் ஒரே மகள் அவள். அவளுக்காகத்தான் நான் வாழ்கிறேன். இவ்வளவு ஆபத்து நிறைந்த திட்டத்தை ஏற்றுக்கொண்டு அவள் பாண்டியன் அரண்மனையில் பிடிபட்டால் அவளுடைய கழுத்தைச் சீவிவிடுவார்கள்! நான் ஒத்துக்கொள்ள மாட்டேன்" என்று மறுத்தாள் அவள்

அமைச்சர் அவளுடைய மறுப்பைப் பெரிது படுத்தவில்லை." காயத்ரி! நீ அவசரப்படாதே நாம் ஊர்வசியிடம் இந்தத் திட்டத்தை விளக்குவோம். அவளுக்குத் துணிவு இருந்தால் செய்யட்டும்! இல்லையென்றால் விட்டு விடுவோம். ஆனால் எல்லாவற்றையும் சேர்த்துச் சிந்தித்துப் பார். தன் உடன்பிறந்த தம்பியின் மகள் சிறு குழந்தைப் பருவத்தில் கண்டவள், இத்தனை ஆண்டுகளுக்குப்பின்னர்எழில்பூத்துக் குலுங்கும் இளம்பெண்ணாகத் தன்னைக் காண வந்திருக்கிறாள் என்று அறிந்தால் பூசுந்தரி அவளை ஏற்றுக் கொள்ளாமலா இருப்பாள்? கட்டாயம் அவளை அரண்மனைக்குள் அழைத்து, கட்டிஅணைத்து முத்தம் கொடுப்பாள் என்றுதான் நான் நினைக்கிறேன். ஒருவேளை அவ்வாறு செய்யாமல் ஊர்வசியைக் காணவிருப்பமில்லை என்று சொன்னால் ஊர்வசி திரும்பி வரட்டும். அவ்வளவுதானே! அவளைப் பிடித்துச் சிறையிலா அடைக்கப் போகிறார்கள்? அவள் எந்தக் குற்றமும் செய்யவில்லையே! அதே போல்தான் அதற்குப் பின் செய்யவேண்டிய பணியும்! ஊர்வசி காண்போரைக் கவரும் வனப்பும் பருவஎழிலும் உள்ளவள். கல்வியறிவு படைத்தவள். அரச குடும்பத்தில் பிறந்தவள். அவள் தன் மாமியுடன் சிலகாலம் வாழ்ந்தால் மாமியையும், மாமியின் மகனாகிய பாண்டியன் நெடுஞ்சடையனையும் மகளாகிய தேவந்தியையும் தன் பண்புச் சிறப்பால் கவர்வாள். நாளடைவில் பல அரசியல் தகவல்களும் அவளுடைய செவிகளில் விழும்! கண்களில் படும்! அவ்வாறு கிடைக்கும் தகவல்களைத்தான் நான் கேட்க விரும்புகின்றேன். அவள் இரவும் பகலும் உளவறியும் பணியில் ஈடுபட வேண்டும்

என்றா சொல்கிறேன். ஏதாவது அபாயம் நேரும் என்று தோன்றினால் அவள் நிறுத்திக் கொள்ளலாம். ஊர்வசி எனக்கும் மகள் போன்றவள். அவளுக்கு எந்த ஆபத்தும் நேர்வதை நானும் பொறுத்துக் கொள்ள மாட்டேன்' என்று தன்னுடைய அனுபவங்களால் பெற்ற அறிவும் திறமையும் கலந்து பேசினார் அமைச்சர். இருள் நிறைந்த பகுதியைக் கண்டு அஞ்சத் தேவையில்லை என்று இதுவரை விளக்கிய அமைச்சர் ஒளிமயமான பகுதியையும் எடுத்துக் காட்டினார்.

"ஊர்வசி இந்தப் பணியை வெற்றிகரமாய்ச் செய்து முடித்தால், அதனால் விளையக்கூடிய பயன்களையும் நினைத்துப் பார்! பாண்டியனின் படை நிலைமையையும் போர்த்திட்டங்களையும் நாம் அறிந்து கொள்ள முடிந்தால் நமது வெற்றி உறுதி. பல்லவப் பேரரசர் நன்றி உள்ளவர். நான் அவருக்கு அறிவுரை கூறுவேன். ஊர் வசியின் பணிக்குத் தக்க பலன் கிடைக்கும். குறைந்தது இரண்டோ மூன்றோ கிராமங்களை உங்களுக்கு வழங்க நான் ஏற்பாடு செய்வேன். அது மட்டுமல்ல! பல்லவப் பேரரசனின் கீழ் வாழும் சிற்றரசர்கள் என்னை மதிப்பவர்கள். என் கோரிக்கையைத் தட்டமாட்டார்கள். ஊர்வசி ஒரு சிற்றரசனை மாலை சூடி மீண்டும் அரசி ஆவாள்' என்று காயத்ரி தேவியின் கண்களை அகலமாகத் திறக்கச் செய்தார் கருணாகரன்.

அவர் எதிர்பார்த்தது போலவே அழகுடன் ஆசையும் அதிகமாகப் படைத்த ஊர்வசி அமைச்சரின் திட்டத்தை ஆர்வத்துடன் ஏற்றுக் கொண்டாள். கற்பனையில் எழக் கூடிய ஆபத்துகளுக்கு அஞ்சினால் காஞ்சியில் எங்காவது ஒரு மூலையில் தன் வாழ்க்கை முழுவதும் முடிந்துவிடும் என்று அஞ்சிய அவள், மதுரைக்குச் செல்லும் வாய்ப்பை மனமார ஏற்றுக் கொண்டாள். அமைச்சர் பலமுறை அவளுடன் அமர்ந்து அவள் செயல்படவேண்டிய முறையையும் ஓலை எழுதும் விதத்தையும் விளக்கினார். அவள் மதுரை அரண்மனைக்குள் புகுந்து முதலில் அனுப்பிய ஓலை அவருடைய நம்பிக்கையை மேலும் வலுவாக்கியது. அதனால்தான் ஊர்வசி காஞ்சிக்குத் திரும்பிவிட்டாள் என்ற செய்தி தாங்கிய காயத்ரியின் ஓலை அவரைத் திடுக்கிடச் செய்தது. தன் வேலைகளையெல்லாம் நிறுத்திவிட்டு ஊர்வசியைக் காண விரைந்தார்.

31. மதுரைக் காஞ்சி

காயத்ரி தேவியும் ஊர்வசியும் மதுரை அரண்மனையில் ஊர்வசி பெற்ற அனுபவங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போதே அமைச்சர் கருணாகரன் அங்கு வந்து சேர்ந்தார். ஊர்வசியைக் கண்டவுடன் தனது முகத்தில் மலர்ச்சியை வரவழைத்துக் கொண்டு "நல்லவேளை. நீ நலமுடன்தான் வந்து சேர்ந்திருக்கிறாய்! உன் அன்னையின் ஓலையைக் கண்டவுடன் நீ முழுமையாக வந்து சேர்ந்தாயா அல்லது உனக்கு சேதம் ஏற்பட்டுள்ளதா என்று அஞ்சினேன். நீ எப்பொழுதும்போல் அழகு குன்றாமல் விளங்குகிறாய். பயணக் களைப்பைத் தவிர வேறு எதுவும் தெரியவில்லை" என்று ஆறுதல் மொழி பேசினார்.

"நானும் என் முன்னோர்களும் செய்த புண்ணியத்தால்தான் என் மகள் மயிரிழையில் உயிர்தப்பி வந்திருக்கிறாள். இல்லையெனில் நாம் அவளுடைய உடலைக்கூடப் பார்த்திருக்க முடியாது" என்று கண்களில் நீர் மல்க, அழுகையை அடக்கிக் கொண்டு பேசினாள் காயத்ரி தேவி.

"அப்படி என்ன நடந்தது? எல்லாவற்றையும் விவரமாகச் சொல்" என்று வேண்டினார் கருணாகரன். ஊர்வசி அவர் விரும்பிய வண்ணம் எல்லாவற்றையும் எடுத்துரைத்தாள்.

"நான் தங்களுக்கு எழுதிய முதல் ஓலையிலேயே குறிப்பிட்டிருந்தேன் அல்லவா! அந்தச் சாத்தஞ்சாத்தன் என் மீது ஐயம் கொள்கிறான் என்று தோன்றுகிறது என்று, அது முற்றிலும் உண்மை என்பது எனக்குப் புரிந்துவிட்டது. அவனுடைய ஆள்கள் தான் நம் சாரங்கனைப் பிடித்துக் கைகளைக் கட்டிக் குதிரைமேல் ஏற்றிக் கொண்டு சென்றதைப் பொன்னி கண்டாள். நான் அரண்மனைக்குள் இருந்ததால்தான் தப்பினேன். இல்லையெனில் சாரங்கனைக் கைது செய்த உடனேயே என்னையும் கைது செய்திருப்பான் அந்தச் சாத்தன். நான் வெளியில் செல்ல முடியாது, எப்பொழுது வேண்டுமானாலும் பிடித்துக் கொள்ளலாம் என்று நினைத்திருப்பான். அது மட்டுமன்றி தூதனைக் கைது செய்த செய்தி எனக்கு எட்டும் என்றும் அவனால் எண்ணிப் பார்க்க முடியாது" என்று தன் கதையைச் சொல்லிமுடித்தாள் ஊர்வசி.

"அந்தச் சாத்தன்தான் நாம் பெண்ணாகடப் போரில் தோல்வியடைந்ததற்கும் மூல காரணம் என்பது கொங்கு நாட்டு

வேந்தன் அதியனின் கருத்து. அதியன் கொஞ்ச நாள்கள் மதுரையில் தங்கி நெடுஞ்சடையனோடும் நெருங்கிப் பழகியவன். அவன் சொல்வதைப் பார்த்தால் சாத்தன் சிறந்த வீரன் மட்டுமல்ல, சிறந்த சிந்தனையாளனும்கூட. அதியன் அவனைப் பிடித்துத் தகடூர்ச் சிறையில் அடைத்ததும், நெடுஞ்சடையனே நேரில் சென்று சாத்தனைச் சிறைமீட்டுச் சென்றதும் இன்றும் அதியனை அலட்டும் கனவுகள். அதனால்தான் நான் முகப்புகழ்ச்சி மூலமும், உன் கண்களின் கவர்ச்சியாலும் அவனை மகிழ்விக்க வேண்டும் என்று சொன்னேன். உன்னிடம் அவனுக்கு ஐயம் வராமல் இருந்தால் இன்னும்கொஞ்சம் நாள்கள் நீ மதுரை அரண்மனைக்குள் இருந்து செய்தி அனுப்பி யிருக்கலாம். ஆயினும் இந்த அளவாவது முடிந்ததே. அதுவரை நல்லதே! நான் இன்னும் சில கேள்விகள் கேட்கிறேன். நீ உனக்குத் தெரிந்தவரை பதில் சொல்! உனக்கே தெரியாமல் சில நிகழ்ச்சிகளோ., செய்திகளோ உன் நெஞ்சில் பதிவாகி இருக்கலாம். அவற்றை வெளியில் கொண்டு வருவதற்காகத்தான் முயற்சி செய்கின்றேன்" என்றார் அமைச்சர்.

"கேளுங்கள் நான் பதில் சொல்கிறேன்" என்று சம்மதித்தாள் ஊர்வசி

"நீ எழுதியிருந்தாயே உன் ஓலையில் சாத்தனும் தேவந்தியும் காதலிக்கிறார்கள், ஆனால் அன்னை மகாராணி அதை எதிர்க்கிறார் என்று, ஒருவேளை அந்தக் காதல் நிறைவேறவில்லை என்று வைத்துக்கொள்வோம். அப்படி யானால் சாத்தன் பாண்டிய மன்னனுக்கு எதிராகத் திரும்புவானா? அவர்கள் காதல் அவ்வளவு ஆழமானதா?"

"காதல் ஆழமானதுதான். ஆனால் அதற்காகச் சாத்தன் அரசருக்கு எதிராகத் திரும்புவான் என்று நான் சொல்லமாட்டேன். அரசன், தளபதி என்ற உறவிற்குமேல் அவர்கள் இருவரும் உயிருக்குயிரான தோழர்கள்! அரசனுக்காக உயிரைக் கொடுக்கவும் சாத்தன் தயங்க மாட்டான் என்று சொல்கிறார்கள். அரசன் உயிரைச் சாத்தன் காப்பாற்றியுள்ளதாகப் பொன்னி என்னிடம் சொன்னாள். சாத்தன் காதலைத் தியாகம் செய்வானே தவிர, அரசரை எதிர்க்க மாட்டான்" ஊர்வசி உறுதியாகவே கூறினாள். பின்னர் தொடர்ந்து பேசினாள்.

"நான் என்னுடைய இரண்டாவது ஓலையில் அதுதான் தங்களுக்குக் கிடைக்கவில்லையே, எழுதியிருந்தேன். மாறன் எயினன் அமைச்சராகும்பொழுது உறையூர்ப் படையின் தலைவனாக மீண்டும் சாத்தனை உறையூருக்கு அனுப்பலாமே என்று நான்

யோசனை கூறினேன். அரசர் அதற்கு இணங்கியதாகத் தோன்றியது எனக்கு. ஆனால் இப்பொழுது என் சூழ்ச்சியைக் கண்டு பிடித்ததால் சாத்தனிடம் மேலும் நம்பிக்கை வளர்ந்திருக்கும் அரசருக்கு! ஆகவே சாத்தன் மதுரையிலேயே இருப்பதற்கு வாய்ப்பு அதிகம்" என்று நினைவுகூர்ந்து பேசினாள்.

"நீ சொன்னவற்றை வைத்துப் பார்த்தால் இப்பொழுது பாண்டிய அரசின் ஒற்றர் படைத்தலைவனும் சாத்தன்தான் என்று தெரிகிறது. உன்னையோ, உன்னைப்போல் இன்னும் வெளியிலிருந்து வந்து அரண்மனையில் வசிப்பவர்களையோ கண்காணிக்கும் பொறுப்பு ஒற்றர் படைத் தலைவனுடையது. படைத் தளபதியான சாத்தனின் வேலையல்ல. ஆகவே சாத்தன் இப்பொழுது இருவேலைகளையும் செய்கிறான். அப்படியானால் ஒற்றர் படைத் தலைவனான இளந்தத்தன் எங்கே? அதைப்பற்றி நீ என்னவாவது கேள்விப்பட்டாயா?"

"இல்லை அப்படி ஓர் ஆளைப்பற்றி யாரும் பேசிக்கொண்டது என் செவியில் விழவில்லை."

"நீ நெடுஞ்சடையனிடம் தனியாக அமர்ந்து பேசும் வாய்ப்புக் கிடைத்தது அல்லவா?"

"கிடைத்தது. நான்கு அல்லது ஐந்து முறை அவருடைய அறையில் அவரைத் தனியாகச் சந்தித்துப் பேசினேன்."

"நெடுஞ்சடையன் உன் அழகில் மயங்கியதாக உனக்குப் பட்டதா? உன்னிடம் நெருங்கி உறவாட அவன் முனைந்தானா?"

ஊர்வசி சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தாள். "அதை என்னால் உறுதியாகச் சொல்ல முடியாது. நான் அவரைச் சந்தித்தது அவருடைய அலுவலகமாகப் பயன்படும் அறையில்தான். என்னிடம் சிரித்துப் பேசினார் என்பது உண்மையே. ஆனால் நீங்கள் கேட்டதுபோன்ற ஒரு நெருக்கத்திற்கு அவர் முயற்சிசெய்தார் என்று சொல்லமுடியாது. இன்னும் கொஞ்ச நாள் அங்கு வாழ்ந்து வேறு விதமான சூழலில் அவரைச் சந்தித்திருந்தால் ஒரு வேளை அவ்வாறு நடந்திருக்கலாம். அவர் என்னை விரும்பினார் என்று மட்டும் என்னால் சொல்ல முடியும்" என்று விடையிறுத்தாள்.

"நீபார்த்ததையும், கேட்டதையும், மன்னனிடம்உரையாடியதையும் எண்ணிப் பார்த்தால், உனக்கு என்ன தோன்றுகிறது? பாண்டிய அரசன் பல்லவ நாட்டின் மேலோ அல்லது வேறு எங்கேனுமோ படையெடுக்கும் எண்ணம் அவனுக்கு உண்டா?அல்லது

யாராவது பாண்டிய நாட்டின் மீது படையெடுக்கக் கூடும் என்ற எதிர்பார்ப்போ அச்சமோ உண்டா? நன்றாக யோசித்துப் பதில் சொல்" என்று தெளிவாக வினவினார் கருணாகரன்.

அமைச்சர் நினைத்ததற்கு மாறாக இந்த வினாவிற்கு விடையளிப்பதற்காக அவள் அதிக நேரம் எடுத்துக் கொள்ளவில்லை. அவளுடைய விடை உடனேயே வெளிவந்தது.

"அதைப் பற்றியும் நான் உங்களுக்குக் கிடைக்காமல் போன என் ஓலையில் விரிவாக எழுதியிருந்தேன். அப்படிப்பட்ட எண்ணம் எதுவும் பாண்டிய அரசருக்கு இருப்பதாகத் தெரியவில்லை! தன்னோடு போர்புரியும் ஆற்றலோ, துணிச்சலோ எந்தப் பகைவனுக்கும் இல்லை என்று கர்வத்துடன் என்னிடம் பேசினார் நெடுஞ்சடையன். அவர் சொன்ன வார்த்தைகள் என் மனத்தில் பதிந்துவிட்டன. 'பல்லவன், நான் அவனைவிட வல்லவன் என்பதை உணர்ந்து விட்டான்! சோழன் ஏழையாகிவிட்டான்! நான் வேணாட்டரசனை வீணாட்டரசனாக்கி விட்டேன்! தகடூரான், தகர்ந்து போய்விட்டான்! எங்கே இருக்கிறான் பகைவன்?' என்று கொக்கரித்தார் என்னிடம்! நான் மற்றொன்றையும் அந்த ஓலையில் குறிப்பிட்டிருந்தேன். எனக்குக் கிடைத்த சலுகைகளைப் பயன்படுத்தி, அன்னை மகாராணியின் தேரில் சென்று பாண்டிய அரசின் படைக்கலக் கொட்டிலைப் பார்வையிட்டேன் நான் ஒரு நாள். அங்கு எல்லோரையும் அனுமதிப்பதில்லை. அங்கே ஆயிரக் கணக்கான வேலும், வாளும், மழுவும், வில்லும் மேலும் எனக்குப் பழக்கமில்லாத பலவிதமான ஆயுதங்களும் குவிந்து கிடக்கின்றன. ஆனால் எல்லாமே ஒடிந்தும், சிதைந்தும், பிடி இன்றியும், முனை மழுங்கியும் துருப்பிடித்தும்தான் கிடக்கின்றன. அதாவது மதுரையைத் தாக்க யாரும் துணிய மாட்டார்கள் என்ற நம்பிக்கைதான் இதிலிருந்து தெரிய வருகின்றது என்று நினைக்கிறேன் நான். அது போலவே வேறு நாட்டின்மீது படையெடுத்துச் செல்ல வேண்டுமானாலும் படைக்கலன்களைச் சீர் செய்ய வேண்டும் அல்லவா? ஆகவே, தாக்கவேண்டும் என்ற எண்ணமோ, தாக்கப்படுவோம் என்ற அச்சமோ பாண்டிய அரசருக்கு இல்லை என்று தான் நான் நினைக்கிறேன்| என்று தெளிவாக விடையளித்தாள் ஊர்வசி.

"சரிநீமிகவும்களைப்புடன்காணப்படுகிறாய்ஓய்வெடுத்துக்கொள். இன்னும் உன்னிடம் ஏதேனும் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும் என்று தோன்றினால் நான் மீண்டும் வருவேன். காயத்ரீ! நீயும் ஊர்வசியும் ஒரே கதைதான் யார் கேட்டாலும் சொல்லவேண்டும். ஊர்வசி உறவினர்களைப் பார்ப்பதற்காகக்

கங்க நாட்டிற்குப் போயிருந்தாள். அவ்வளவுதான்! அவள் போனது மதுரைக்கு என்பது யாருக்கும் தெரிய வேண்டாம். உங்கள் வீட்டிற்கு இரவும் பகலும் காவலுக்கு ஏற்பாடு செய்யப் போகிறேன். காஞ்சியில் ஊர்வசியைப் பிடிக்கும் துணிச்சல் பாண்டிய வீரர்களுக்கு இருக்காது. எனினும் நாம் முன் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. இன்னும் சில நாள்கள் ஊர்வசி வீட்டைவிட்டு வெளியில் செல்லவே வேண்டாம். அவ்வாறு போகவேண்டிய தேவை ஏற்பட்டால் தக்க காவலுடன் சென்று விரைவில் திரும்பிவிடவேண்டும்" என்று அறிவுரை கூறிவிட்டுப் புறப்பட்டார் அமைச்சர்.

ஊர்வசி மதுரையிலிருந்து திடீரென்று திரும்பி வந்ததால் பல்லவ அமைச்சர் கலக்க முற்றதுபோலவே அவள் தப்பிச் சென்றதால் பாண்டிய அரசும் கலக்கமுற்றது. முதிர்ச்சியும் தளர்ச்சியும் மேலிட்ட அமைச்சர் மாறன் காரிக்குத் தொல்லை கொடுக்காமல் சாத்தஞ்சாத்தனே அந்தச் சிக்கலைத் தீர்க்கும் பணியை மேற்கொண்டான். ஊர்வசியைத் துரத்திப் பிடிப்பதற்காக அனுப்பிய குதிரை வீரர்கள் பெண்ணாகடம் வரை சென்று வெறுங்கையுடன் திரும்பினர். அன்னை மகாராணியின் தேருடன் தேரோட்டி திரும்பி வந்தபின்தான், அவள் எல்லோரையும் ஏமாற்றித் தப்பிச்சென்றுவிட்டாள் என்று உறுதியானது. சாத்தன் அன்னை மகாராணியிடம் கூறியவண்ணம், அவள் தப்பிச் சென்றது ஒரு வகையில் நல்லது என்ற முடிவுக்கே வந்தான். அவளைப் பிடிப்பதைப் பற்றி யோசிக்காமல், அவளுடைய மதுரை வரவாலும் செயலாலும் விளைந்த தீமைகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளில் இறங்கினான் சாத்தன். நெடுஞ்சடையனிடம் விரிவாக உரையாடினான்.

"அரசே! ஊர்வசி தப்பிவிட்டாள் என்று உறுதியாகிவிட்டது. அன்னை மகாராணியின் தேரோட்டியிடம் ஊர்வசி அறிவித்த செய்தியை உறுதிசெய்யுமாறு இந்த சம்பவத்துடன் தொடர்புடைய எல்லோரிடமும் சொல்லி விட்டேன். ஊர்வசியின் அன்னையின் உடல் நலம் குன்றியதால்தான் அவள் திடீரென்று புறப்பட்டுச் சென்றாள் என்றே பொதுமக்கள் கருதுவது நல்லது. பொன்னி என்னும் பணிப் பெண்ணிடமும் தக்க முறையில் அறிவுரை கூறி அவள் வாயையும் அடைத்துவிட்டேன். தங்கள் அன்னையின் குடும்பத்தில் பிறந்த ஒருத்தி மதுரை அரண்மனையில் தந்திரமாகப் புகுந்து ஒற்றுப் பணிசெய்தாள் என்பது களங்கம் ஆகிவிடும். ஆகவே ஊர்வசி கண்டுபிடித்த காரணமே எங்கும் பரவட்டும் நாம் சிலர் மட்டும் உண்மை காரணத்தை அறிந்தால் போதும்" என்று சாத்தன் கூறிய கருத்தை மன்னர் ஆதரித்து ஏற்றுக் கொண்டார்.

சாத்தன் மேலும் தொடர்ந்தான். "அடுத்து நாம் சிந்திக்க வேண்டியது இனி மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைளைப் பற்றியது. ஊர்வசி காஞ்சிக்குப் போய்ச் சேர்ந்தவுடன், அவளை மதுரைக்கு அனுப்பிவைத்த பல்லவ அமைச்சரைச் சந்தித்து இங்கு நடந்தவற்றையெல்லாம் விவரமாக விளக்கியிருப்பாள். அவள் இறுதியாகத் தூதனிடம் எழுதிக் கொடுத்த ஓலைதான் அவள் கூறியவற்றின் அடிப்படையாக இருக்க முடியும். ஏனெனில் அதனை எழுதியபின் அதிக நேரம் ஆவதற்கு முன்பே வெளியேற வேண்டி வந்ததால், புதிதாகத் தகவல் எதையும் அவள் சேகரிக்க வாய்ப்பில்லை. எனவே அவள் எழுதிய ஓலை நம்மிடம் இருப்பதால் அவளால் அமைச்சரிடம் என்னவெல்லாம் தெரிவிக்க முடியும் என்பதை நம்மால் ஊகிக்கமுடியும்" என்ற சாத்தனின் உரை கேட்டுப் புன்முறுவல் பூத்தான் பாண்டியன்.

"ஆம் நான் இலக்கிய நடையில் பேசிய பல்லவன் - வல்லவன், வேணாடு - வீணாடு, சோழன் - ஏழை, தகடூர் - தகர்ச்சி என்றெல்லாம் ஓலையில் எழுதியிருப்பதை அவள் இன்னும் சில அலங்காரம் சேர்த்து அந்த அமைச்சரிடம் சொல்லியிருப்பாள். அதைக் கேட்கும் பல்லவனுக்குச் சினம் பொங்கும். ஆனாலும் அவனால் என்ன செய்ய முடியும்?" என்று அப்பொழுதும், ஏளனமாகவே பேசினான் நெடுஞ்சடையன். ஆனால் சாத்தன் பகைவனைக் குறைத்து மதிப்பிடுவது பேதைமை என்பதை உணர்ந்தவன்.

"அரசே! நாம் அவ்வாறு பல்லவனை ஒதுக்கிவிடுவதோ புறக்கணிப்பதோ சரியன்று. பல்லவன் படைபலம் உடையவன். நாம் பெண்ணாகடப் போரில் பல்லவர் படையை முறியடித்தது உண்மையே. ஆனால் நாம் தூரத்திச் செல்லவும் இல்லை. பல்லவ நாட்டிற்குச் சேதம் விளைவிக்கவும் இல்லை. பஞ்சத்தில் வாடினாலும் சென்ற இரண்டு ஆண்டுகளில் பல்லவ நாடு மீண்டும் முழுவலிமை பெற்றுவிட்டது என்றுதான் தோன்றுகிறது ஆகவே நாம் முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்" என்று எடுத்துரைத்தான்.

"நாம் என்ன செய்யவேண்டும் என்கிறாய்?" என்று பொறுமை இழப்பவர் போல் கேட்டான் நெடுஞ்சடையன்.

"ஊர்வசி பல்லவ அமைச்சரிடம் நாம் ஒருபோரை எதிரிடும் நிலைமையில் இல்லை என்று கட்டாயம் சொல்லியிருப்பாள். நம் படைக்கலக்கொட்டிலைப் பற்றி அவள் எழுதியிருப்பதும், தங்களுடைய ஆணவப் பேச்சை அவள் அப்படியே எழுதியிருப்பதும் அதைத்தான் குறிக்கின்றன" என்று சுட்டிக்காட்டினான் சாத்தன்.

"படைக்கலக் கொட்டிலைப் பற்றி அவள் எழுதியது அவளுடைய அறியாமையைத்தானேகாட்டுகின்றது? நம் பழுதுபட்ட படைக்கலன்களைச் செப்பனிடும் நம் பழைய கொட்டிலைத்தான் அவள் பார்த்திருக்கிறாள். கோட்டைக்கு வெளியில் உள்ள பெரிய உலைக் களத்தையும், அங்கு உருவான ஆயுதங்களை அடுக்கி வைத்திருக்கும் புதிய கொட்டிலைப் பற்றியும் அவளுக்கு எதுவும் தெரியாது" என்று அவளுடைய அரைவேக்காட்டுச் செய்திகளைச் சுட்டிக் காட்டி மேலும் சிரித்தார் அரசர்.

"ஆம் அரசே! அதைத்தான் நானும் குறிப்பிடுகிறேன். ஆயுதங்களைப் பற்றிய கருத்துகளைப் போலவே, நமது படைபலத்தைப் பற்றியும் அவள் அறிவிக்கக்கூடிய தகவல் அறியாமை கலந்ததாக இருக்கும். தாங்கள் குறிப்பிட்ட உறையூர்ப்படை, கரவந்தபுரப் படை ஆகியவைதான் அவளுக்குத் தெரிந்தவை. நாம் விசலூரிலும் நன்னிலத்தும் நிறுத்திவைத்திருக்கும் நிலைப்படைகளைப் பற்றி அவளுக்குத் தெரிய வாய்ப்பில்லை. ஆகவே அவள் மதுரையைப்பற்றி அமைச்சரிடம் வரையப் போகும் படம் பல்லவனைக் கவரக் கூடியதாக இருக்கும் மதுரை மன்னர் போர் வருமென்று எதிர் பார்க்கவும் இல்லை படையெடுத்துச் செல்ல வேண்டும் என்று எண்ணவும் இல்லை! ஒரு போருக்கான நடவடிக்கைகள் ஒன்றும் பாண்டிய நாட்டில் இப்பொழுது எடுத்துக்கொள்ளவில்லை! தாக்குவதற்கோ, தாக்குதலைத் தடுப்பதற்கோ ஆயத்தமாக இல்லை என்று தான் பல்லவன் முடிவுசெய்வான். அவ்வாறு முடிவு செய்தால் அவனுக்கு அடுத்து எழக்கூடிய எண்ணம் என்ன? இதுதான் பாண்டியனைத் தாக்குவதற்குத் தக்கநேரம். இப்பொழுது படையெடுத்துச் சென்றால் மதுரையைக் கைப்பற்ற முடியும் என்பதே! பல்லவன் அவ்வாறு செய்ய வாய்ப்பு உள்ளதல்லவா?"

சாத்தனின் வினா நெடுஞ்சடையனைச் சிந்தனையில் ஆழ்த்தியது.

"நீ சொல்வது உண்மைதான். பல்லவன் அவ்வாறு செய்யத் துணிந்தால் அதியனும் அவனுக்குத் துணையாக வருவான். நம்மிடம் உள்ள பகையைத் தீர்ப்பதற்குப் பல்லவனைவிட அதிகமாகத் துடிப்பவன் அதியன். நாம் அதற்குத் தகுந்தவாறு தேவையான ஏற்பாடுகளைச் செய்யத்தான் வேண்டும்" என்று ஒப்புதல் அளித்தான் அரசன்.

"அதற்காகத்தான் நான் தங்களைக் காண வந்தேன். அமைச்சர் மீண்டும் உடல் நலம் குன்றியிருக்கிறார். தங்கள் ஆணைப்படி

மாறன் எயினன் நாளை மதுரைக்கு வருகிறார். அவர் தன் அண்ணனுடன் அமர்ந்து அமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கான தொடக்க வேலைகளைத் தெரிந்து கொள்ளட்டும். இப்பொழுது அவரிடம் ஆலோசிப்பதைவிட நாம் யோசித்து முடி வெடுக்கலாம் என்று நினைக்கிறேன். அரசே! போரின் கொடுமைகளை நேரில் கண்டபின் போர் புரியவே கூடாது என்று எண்ணினேன் நான். ஆனால் நம்மீது போர் திணிக்கப்படுமானால் அதை எதிர்த்துப் போராடியே ஆகவேண்டும். எப்படியானாலும் பகைவர்ப் படையை நம் எல்லைக்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது. பல்லவனோ அதியனோ பாண்டிய நாட்டின்மீது படையெடுத்து வருகிறான் என்று தெரியவந்தால் அந்தப் படையை நம் நாட்டில் புகுவதற்கு முன்பே முறியடித்து விரட்ட வேண்டும். நம் நாட்டு மக்களுக்குப் பகைவர்களால் இன்னல்கள் ஏற்படக் கூடாது. எந்தப் போர் நடத்த வேண்டியிருந்தாலும் நம் எல்லைக்கு வெளியிலேயே நடத்தவேண்டும் என்று நான் நம்புகின்றேன். ஆகவே நாம் ஆரவாரம் ஒன்றும் இல்லாமல், அமைதியாக நமது படைபலத்தைப் பெருக்குவோம். முறையான பயிற்சியும் அளிப்போம். ஆனால் நாமாகப் படையெடுத்துச் செல்லமாட்டோம். பகைவன் நம்மை நோக்கி வரும் தகவல் கிடைத்ததும் அவன் புறப்பட்டு நம் எல்லையை அடையும் முன்பே அவனைத் தாக்குவோம்" என்று தன் கருத்தை எடுத்துரைத்தான் சாத்தன்.

நெடுஞ்சடையன் தலையாட்டினான். "அதற்கு முதல் தேவை, தக்க நேரத்தில் நமக்குத் தகவல் கிடைக்க வேண்டும் என்பது தான். இல்லையெனில் பகைவன் நம் நாட்டிற்குள் புகுந்தபின்தான் நாம் அறிந்துகொள்ள நேரிடும்" என்று சுட்டினான் அரசன்.

"சரியாகச் சொன்னீர்கள் அரசே! தக்க நேரத்தில் முற்றிலும் சரியான தகவல் நமக்குக்கிடைக்க வேண்டும். அதில் தான் நம் வெற்றி அடங்கியிருக்கிறது. அதைப் பற்றி நாம் கவலை கொள்ளத் தேவையில்லை. இளந்தத்தர் மிகத் திறமையாகச் செயலாற்றியுள்ளார். பல்லவர்களின் காஞ்சியிலோ, கொங்குவேந்தனின் தகடூரிலோ எடுக்கும் எந்த முடிவும் நமக்குத் தெரியாமல் போகாது. நான் இன்று அவருக்கு ஓலை அனுப்புகிறேன்" என்று எழுந்தான் சாத்தன்.

32. அருள் பொழியும் அறம் வளர்த்த நாதர்

அறம் வளர்த்த நாதரின் மடம் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குமுன் காட்சியளித்ததுபோல் மக்கள் நிரம்பி வழியும் இடமாகத் தோன்றவில்லை. பஞ்சமும் வறுமையும் அகன்று விட்டதால் கஞ்சிக்கும் கூழுக்கும் ஏங்கும் பட்டினிக் கூட்டம் அங்கு இல்லை. ஆயினும் பக்தர்களின் கூட்டம் இப்பொழுதும் இருந்தது. மாலையில் இறைவணக்கமும் பக்திப்பாடல் இசையும் முடிந்து, நாதர் எழுந்து நின்று பக்தர்களுக்கு ஆசி வழங்கிவிட்டு உள்ளே சென்றதும், பக்தர்களும் ஒவ்வொருவராக வெளியேறிக்கொண்டிருந்தனர். அமைச்சரின் அந்தரங்கச் செயலாளரான சுந்தரமூர்த்தி, வழக்கம்போல், தங்கவேலு நாதனாருடன் உள்ளே சென்று திரும்பிவருவதற்காகக் காத்திருந்தான். இரண்டு நாழிகை நேரமாவது தங்கவேலுடன் உரையாடிய பின்னரே தன் வீட்டிற்குச் செல்வது என்று வழக்கப்படுத்திக்கொண்டான் அவன்.

அறம் வளர்த்த நாதர் தன் அறைக்குள் நுழைந்ததும் தங்கவேலனிடம் வினவினார். "மதுரை மடத்திலிருந்து வந்த நம் சீடன் எங்கே இருக்கிறான்?"

"அவன் மிகவும் களைப்பாக இருந்தான். அவனுக்கு உணவு கொடுத்து ஓய்வெடுத்துக் கொள்ளச் சொன்னேன். தங்களுக்கு ஓர் ஓலை கொண்டு வந்திருப்பதாகவும், அதைத் தங்கள் கையில் மட்டுமே கொடுக்கவேண்டும் என்றும் கூறினான். அவனை இப்பொழுதே தங்களிடம் அனுப்பி வைக்கிறேன்" என்று சொல்லி வெளியேறினான் தங்கவேலன்.

மதுரையிலிருந்து வந்த சீடன் அறைக்குள் நுழைந்து வணங்கி நின்றபொழுதுதான் அவன் சாத்தஞ்சாத்தனின் நம்பிக்கைக்குரிய காவலன் மணிவண்ணன் என்பது புரிந்தது அறம்வளர்த்த நாதருக்கு. ஆகவே தன்னுடைய கையை நீட்டி "நீயே வந்திருப்பதால் முக்கியமான காரியமாக இருக்கும். கொடு ஓலையை" என்று வாங்கிக் கொண்டார் அவர்.

"ஆமாம் அதில் மிகமுக்கியமான சில செய்திகள் அடங்கியிருப்பதாகவும், வேறு யாருக்கும், தங்கவேலன் உட்பட தெரியக்கூடாது என்றும் தங்களிடம் தெரிவிக்கும்படி தளபதியாரின்

கட்டளை. அதனால்தான் நான் தங்கவேலனிடம் இதைக் கொடுக்கவில்லை" என்று விளக்கி, ஓலையை நாதரிடம் கொடுத்தான் மணிவண்ணன்.

"சரி நீ போய் படுத்துக் கொள்" என்று அவனை அனுப்பிவிட்டு, தன் தலைமேல் இருந்த கனமான முடிக்கட்டையும் இறக்கி வைத்து, தாடியையும் அகற்றி, இளந்தத்தனாக மாறியபின் கூட்டிலிருந்து ஓலையை எடுத்துப் படித்தார்.

ஓலையைப் படித்து முடித்ததும் சாத்தன் ஏன் அதனை வேறுயாரும் பார்க்கக்கூடாது என்று கட்டளை யிட்டான் என்பது இளந்தத்தனுக்கு விளங்கியது. மதுரை அரண்மனைக்குள் ஓர் இளம்பெண் நுழைந்து இரண்டு மாதம் வசித்து ஒற்றறியும் பணியில் ஈடுபட்டிருந்தாள் என்பதும், அவளைப் பிடிக்கமுடியாமல் போய்விட்டது என்பதும் அவனைத் திடுக்கிடச்செய்தன. சாத்தஞ்சாத்தனின் நுண்மதியும். இளந்தத்தனின் தொழில் ஆற்றலும் சேர்ந்ததால் சிறந்த முறையில் ஒற்றறியும் பணியில் ஈடுபட்டிருந்தாகப் பெருமிதம் கொண்டிருந்த இளந்தத்தன், பல்லவ அமைச்சர் எவ்வளவு திறமையாக அதே பணியைச் செய்துவிட்டார் என்று வியந்தான். சாத்தன் அடிக்கடி குறிப்பிடும் கருத்தை அவன் நினைவு கூர்ந்தான். பகைவனை ஒரு நாளும் குறைத்து மதிப்பிடக் கூடாது" என்பது எவ்வளவு உண்மை!

காஞ்சியிலும் தகடூரிலும் உள்ள பாண்டிய ஒற்றர்கள் எல்லோரையும் முடுக்கிவிட்டு, கண்களையும் செவிகளையும் திறந்து வைத்து, அவ்விரு தலைநகர்களிலும் நடக்கும் அரசியல் விளைவுகளை அவ்வப்போது அறியவேண்டும் என்பது அரசரின் ஆணை என்று சாத்தன் ஓலையில் எழுதியிருந்தான். பல்லவ மன்னன் பாண்டியரைத் தாக்க முடிவுசெய்தால் கொங்குமன்னன் உதவியை நாடுவான் என்பது உறுதியாதலால் இந்த இரு நகரங்களுக்கிடையே தூதர்களின் போக்கும் வரவும் குறிப்பாகக் கவனிக்கத் தக்கவை என்றும் சாத்தன் ஒரு வழிகாட்டியைச் சுட்டிக்காட்டினான். ஆனால் தூதர்கள் வருவதும் போவதும் எளிதில் கண்டறியத் தக்க செய்திகள் அல்ல என்பது இளந்தத்தனுக்குத் தெரியும். அரண்மனைக்குள் முக்கியமான வேலையில் ஈடுபட்டிருக்கும் அலுவலர்கள் மட்டுமே அத்தகைய செய்திகளை அறிய முடியும். தகடூரைப் பொறுத்தவரை அமைச்சரின் அந்தரங்கச் செயலாளனான சுந்தரமூர்த்தியிடம் எதையும் கேட்டறிவதற்குத் தங்கவேலனால் முடியும். ஆனால் அதைப் போன்ற ஒரு திறவுகோல்" பல்லவ அரண்மனையில் உருவாக்க பரதனால் முடியவில்லை இளந்தத்தனே காஞ்சிக்குச்

சென்று அந்தக் குறையை நிறைவுசெய்ய முயல வேண்டும் என்று எண்ணினான்.

அன்று இரவிலேயே தங்கவேலனிடம் தன்னுடைய திட்டத்தை விளக்கினான்.

"வேலு! தளபதியாரிடமிருந்து வந்த ஓலையில் சில மிக முக்கியமான செய்திகள் உள்ளன. நாம் மிகவும் விழிப்பாக இருந்து செயலாற்றவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மிகவிரைவிலேயே பல்லவன் மதுரைமீது படை யெடுக்கும் வாய்ப்பு இருப்பதாகச் சாத்தனாரும் அரசரும் கருதுகிறார்கள். அதற்கான முயற்சி தொடங்கி விட்டதா என்பதைக் கண்டறிவதுதான் நம்முடைய முதல் வேலை. அவ்வாறு பல்லவன் படையெடுத்தால் முன்பு செய்தவாறு கொங்குவேந்தனையும் அந்தப் படையெடுப்பில் சேர்த்துக் கொள்ளவும் முயற்சி செய்வான். ஆகையால் காஞ்சியிலும் தகடூரிலும் நடப்பதை எல்லாம் நாம் அறிந்து அப்போதைக்கப்போது மதுரைக்குத் தெரிவிக்கவேண்டும். தகடூரில் நடப்பதை அறிவதற்கு உன் நண்பன் சுந்தர மூர்த்தியே போதும். தேவைப்பட்டால் காமினியையும் பயன் படுத்திக் கொள்ளலாம். ஆனால் அதுபோன்ற ஆள் காஞ்சியில் இதுவரை நம்மிடம் சிக்கவில்லை. ஆகவே நானே காஞ்சிக்குச் சென்று முயற்சிசெய்யப் போகிறேன். நாளையே நான் புறப்படுகிறேன். நீ சுந்தரமூர்த்தியிடமும் உலகணனிடமும் என்றும் தொர்புகொண்டு நம்பத்தகுந்த தகவல் கிடைத்தால் சற்றும் தாமதம் இன்றி எனக்கும் தளபதியாருக்கும் ஓலை எழுதி அனுப்பவேண்டும். நான் என் முயற்சி வெற்றி பெற்றால் விரைவிலேயே திரும்புவேன். எப்படியும் ஒரு மாதத்தில் திரும்பிவருவேன்" என்று தங்கவேலனுக்குப் பொறுப்பை ஒப்படைத்து அடுத்த நாளே காஞ்சிக்குப் பயணமானான் இளந்தத்தன்.

சாத்தஞ்சாத்தனும் பாண்டியர் நெடுஞ்சடையனும் அறம்வளர்த்த நாதரின் மடத்தை உருவாக்கும் திட்டத்தைவகுத்தபொழுது கொங்கு நாட்டு வேந்தன் அதியமான் தான் அவர்களுடைய மனத்தில் முக்கிய இடம் பெற்றான். தகடூர் அறம் வளர்த்த நாதரின் மடங்களில் முதல் இடத்தையும் பெற்றது. ஆகவே நாதர் பெரும்பாலும் தகடூரிலேயே தங்குவது வழக்கம். இடையிடையே காஞ்சிக்கும் மதுரைக்கும் சென்று இரண்டோ மூன்றோ நாள்கள்அங்குள்ள பக்தர்களுக்குத் தரிசனம் அளிப்பதோடு சரி. ஆகவே இம்முறை அறம்வளர்த்த நாதர் ஒரு மாதகாலம் காஞ்சியில் தங்கப் போகிறார் என்ற செய்தி மக்களின் கவனத்தைக் கவர்ந்தது.

மடத்தின் வாயிலில் ஒரு பெரிய பந்தல் எழுப்பி மக்கள் கூட்டமாக அமர்ந்து பிரார்த்தனைக் கூட்டங்களில் கலந்துகொள்ளவும், பக்திப்பாடல்கள் பாடவும் வசதிசெய்யப்பட்டது. பொதுவாக மாலையில் மட்டும் பக்தர்களுக்குக் காட்சி தரும் அறம்வளர்த்த நாதர் காலையிலும் மாலையிலும் இக்கூட்டங்களில் கலந்து கொண்டார்.

தகடூரில் உலகணன் பணியாற்றியதுபோல் காஞ்சியில் பாண்டியரின் ஒற்றனாகப் பணியாற்றிக் கொண்டிருந்த பரதன், தான் செய்து கொண்டிருந்த வெளிப்புற வேலையை விட்டுவிட்டு, மடத்தின் முக்கிய சீடனாக மாறினான். அறம் வளர்த்த நாதரிடம் ஏற்பட்ட பக்தி அவனை அவருடைய முழுநேரச் சீடனாக மாற்றிவிட்டது என்ற செய்தி மேலும் பலரையும் நாதரின் பக்தர்களாக மாற்றியது. அறம் வளர்த்த நாதர் பரதனிடம் தன் நோக்கத்தைத் தெளிவாக வெளியிட்டார்.

"நீ பல ஆண்டுகளாகக் காஞ்சியில் வாழ்ந்து பணியாற்றி வருகிறாய். பெரும்பாலான முக்கியப் புள்ளிகளை உனக்குத் தெரியும். எனவே என்னுடைய தலைமைச் சீடனாக மடத்தில் தங்கிக்கொண்டு இங்கு வரும் பக்தர்களைக் கண்காணிக்க வேண்டும். அரசர், அமைச்சர், சேனாதிபதி ஆகியோரிடம் வேலைசெய்பவர்களையும், அல்லது அவர்களோடு நெருங்கிய தொடர்புள்ளவர்களையும் கண்டறியவேண்டும். அவர்களுடைய குடும்ப விவரங்கள், பொருளாதார நிலை, குறிப்பிடத்தக்க பண்புகள், பலவீனங்கள் ஆகியவற்றையும் கண்டறிந்து என்னிடம் சொல்ல வேண்டும். அரசு எடுக்கும் தீர்மானங்களை அறியக் கூடிய அளவுக்கு உயர்ந்த நிலையில் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

ஒற்றறியும் பணியில் ஊறிய பரதனுக்குத் தன் தலைவரின் நோக்கம் நன்கு விளங்கியது. வந்து போகும் பலரையும் அவன் நோட்டமிட்டான். ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும்' காத்திருக்கத் தயங்கவில்லை. அரசு அலுவலர்கள் பலரும் மடத்திற்கு வந்து பிரார்த்தனைக் கூட்டத்தில் பங்குபெற்றுச் சென்ற தைக் கண்டாலும், தலைவர் குறிப்பிட்ட தகுதிகள் உள்ள ஆளாகத் தெரியவில்லை அவனுக்கு. மூன்றாவது நாள் மாலையில் உள்ளே வந்த ஒருவரைக் கண்டதும் அவனுடைய முகம் மலர்ந்தது. பல்லவப் பேரரசின் திணைக்கள நாயகம் வரதப்பர்! அவன் உடனே உள்ளே சென்று நாதரிடம் பேசினான். "தலைவரே! பல்லவ அரசின் திணைக்கள நாயகம் வரதப்பன் இங்கே வந்திருக்கிறார். அவருடைய ஒரே மகன் சில நாள்களுக்கு முன் கடலில் மூழ்கி இறந்துவிட்டான்.

அதனால் பெருந்துன்பத்தில் ஆழ்ந்தவர் இங்கு வந்தால் மனத்திற்கு ஆறுதல் கிடைக்கும் என்று எண்ணி வந்திருக்கிறார் என்று நினைக்கிறேன்" என்றான் பரதன்.

திணைக்கள நாயகம் என்பவர் அரசின் வரவு செலவுக் கணக்குகளைக் கண்காணிக்கும் மூத்த அலுவலர். கருவூல அதிகாரி திணைக்கள நாயகத்தின் கீழ் பணியாற்றுபவர். விதிக்கப்பட்ட வரிகள் சரியாக வசூல் செய்யப்படுகின்றனவா என்று ஆராய்வதும் திரட்டப்பட்ட பொருள் திட்டமிட்டவாறு செலவழிக்கப் படுகிறதா என்பதைக் கண்காணிப்பதும் அவருடைய வேலை. ஆகவே அரசு மேற்கொள்ளும் எந்தத் திட்டமும் அதற்கான செலவும் திணைக்கள நாயகத்துக்குத் தெரியாமல் செயலாற்ற முடியாது.

"சரி நீ அவரை வசதியான இடத்தில் அமரச் செய். நான் பிரார்த்தனைக் கூட்டத்தில் தனி மனிதர் யாரிடமும் பேசமாட்டேன். ஆகவே அவர் கூட்டம் முடிந்து வெளியேறும் பொழுது, நான் அவரைக் காண விரும்புவதாகக் கூறி என்னிடம் அழைத்து வா. என் அறையில் நான் அவரிடம் தனியாகப் பேசுகிறேன்" என்று பரதனிடம் கூறினார் அறம் வளர்த்த நாதர்.

பக்திப் பாடல்களிலும், பிரார்த்தனையிலும் மனம் நிறைந்து ஒவ்வொருவராக வெளியேறிக் கொண்டிருந்தனர். வரதப்பர் வெளியில் செல்லத் தொடங்கியபொழுது தலைமைச் சீடன் பரதன் அவரிடம் வந்து வணங்கினான். "ஐயா! சுவாமிகள் தங்களை அவரை வந்து காணும்படி அருளிச் செய்திருக்கிறார்" என்று அறிவித்தான்.

"என்னையா?" என்று வியப்புடன் வினவினார் வரதப்பர்.

"ஆமாம் இது எப்பொழுதும் எல்லோருக்கும் வரும் பாக்கியம் அல்ல. எப்பொழுதாவது ஒரு சிலருக்கு மட்டும் கிடைக்கும் பேறு. இன்றைய பிரார்த்தனைக் கூட்டத்தில் தங்கள் முகத்தைக் கூர்ந்து கவனித்த சுவாமிகள், தங்களிடம் குறிப்பாக எதுவேனும் கண்டிருக்க வேண்டும். அதனால்தான் இவ்வாறு கருணை காட்டியிருக்கிறார்" என்று மெய்சிலிர்த்து மனம்குளிரும் வண்ணம் பேசினான் பரதன். வரதப்பரும் பக்தியும் வியப்பும் ஒன்று சேர்ந்து உந்த, அறம்வளர்த்த நாதரின் அறைக்குள் நுழைந்தார்.

"வாருங்கள் அன்பரே! என் முன்னால் வந்து அமருங்கள்!" என்று வரதப்பனை வரவேற்றார் அறம்வளர்த்த நாதர்.

"அடியேன் இதை மிகப்பெரிய பாக்கியமாகக் கருதுகிறேன். சுவாமிகள் எனக்கு அருள்புரிய எண்ணியதை நம்பவே முடியவில்லை" என்று கண்களில் நீர் மல்க, தரையில் வீழ்ந்து நாதரின் திருவடிகளைத் தொட்டு வணங்கினார் வரதப்பர். தன் வலது கையை உயர்த்தி அவருக்கு ஆசி கூறிவிட்டு" அமருங்கள்" என்று மீண்டும் கையைக் காட்டினார் சுவாமிகள். வரதப்பர் அவ்வாறே கைகட்டி, வாய்புதைத்து, கால்களை மடக்கி அமர்ந்தார்.

"இதற்குமுன் உங்களை நான் பார்த்ததில்லை. இன்றுதான் முதன் முதலாக உங்கள் முகத்தைக் கண்டேன். அந்த முகத்தில் குடிகொண்டிருக்கும் துக்கமும் கவலையும் என் கவனத்தைக் கவர்ந்தன. உங்களுக்குப் பேரிழப்பு எதுவோ நேர்ந்திருக்கிறது என்றும் தங்கள் துயரத்தைப் போக்கி மனத்திற்கு ஆறுதல் தேடி என்னிடம் வந்திருக்கிறீர்கள் என்றும் என்னுடைய உள்மனம் எனக்கு உணர்த்திற்று. அவ்வாறு என்னை நாடி வருவோரை என் அருகில் அழைத்துப் பேசி, இறைவன் அருளை வேண்டி, அவர்களைத் தேற்றுவது என் கடமை என்று கருதுகிறேன் நான். என்னைக் காண வரும் நூற்றுக்கணக்கான பக்தர்களில் ஓரிருவரே உயர்ந்த பண்புகளும், உண்மையான பற்றும் உள்ளவர்கள். அவர்களைக் கண்டவுடனேயே என்னால் உணர்ந்து கொள்ள முடியும். அந்த உணர்வால்தான் நான் உங்களை அழைத்துவரச் சொன்னேன். இப்பொழுது சொல்லுங்கள் அன்பரே! உங்களுக்கு நேர்ந்த இடுக்கண் யாது? ஏன் உங்கள் உள்ளம் இவ்வாறு சோர்ந்திருக்கிறது?" என்று வரதப்பரின் மனம் உருகுமாறு பேசினார் அறம்வளர்த்த நாதர்.

வரதப்பரின் விழிகளிலிருந்து நீர் வழிந்தது. குரல் கம்மியது. அறம்வளர்த்த நாதரின் கருணை மிகுந்த வார்த்தைகளா அல்லது தான் மறப்பதற்கு முயன்றுகொண்டிருந்த பேரிழப்பா காரணம் என்று அவருக்கே தெரியவில்லை. ஆயினும் இந்த உலகின் கண்கண்ட தெய்வம் தன்முன்னால் வீற்றிருக்கும் சுவாமிதான் என்பதில் அவருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை பிறந்தது.

"சுவாமி! ஞானக்கண் படைத்த தங்களிடம் நான் எதை மறைக்க முடியும்? என் துக்கமும், ஏக்கமும் வெளியில் தெரியக் கூடாது என்று எண்ணி என் வேலையில் முற்றிலும் முழுக விரும்பினேன் நான். ஏனென்றால் சில முக்கியமான வேலைகளைத் தொடங்க வேண்டியிருக்கிறது என்றும் அவற்றில் நான் ஆற்றவேண்டிய பங்கு இன்றியமையாதது என்றும் அமைச்சர் சொல்லியனுப்பினார். என் சொந்த இழப்பில் மூழ்கியிருந்த நான் கடமையைத் தட்டிக்

கழிப்பது தவறு என்று எண்ணி மீண்டும் வேலையில் சேர்ந்தேன். தேவரீர் எப்படியோ என் முகத்திலிருந்தே அகத்தில் புகைந்து கொண்டிருக்கும் தீயைக் கண்டு பிடித்து விட்டீர்கள். ஆமாம் சுவாமி, எனக்குத் திருமணமாகி ஆண்டுபல ஆகியும் மகப்பேறு என்னும் பாக்கியம் கிடைக்கவில்லை! பல கோயில்களுக்குச் சென்று காணிக்கை செலுத்தியும் நேர்ந்தும் பத்தாண்டுகளுக்குப்பின் ஒரு மகன் பிறந்தான். எங்கள் வாழ்க்கையில் ஒளிபரப்ப வந்த கதிரவன் போல் நாளும் புத்தொளியுடன் வளர்ந்தான். கல்வியிலும் வீர விளையாட்டுகளிலும் சிறந்து விளங்கினான். பதினெட்டு வயது பருவக் காளையாக எங்கள் எல்லோருக்கும் பெருமை சேர்த்தான். மாமல்ல புரத்தில் சில தோழர்களுடன் கடல் விளையாட்டுகளுக்காகச்சென்றான். ஆழ்கடல் அவனைக் கொண்டு சென்றுவிட்டது. இரண்டுநாள் கழித்துத்தான் அவனுடைய உடலே கிடைத்தது. என் வாழ்க்கை இருளடைந்துவிட்டது. என் மனைவி அதற்குப்பின் எழுந்து நடக்கவே இல்லை. தேவரீர் என் முகத்திலும் அகத்திலும் கண்டது அந்தப் பேரிழப்பின் விளைவுதான்" என்று அழுதுகொண்டே பேச்சை நிறுத்தினார் வரதப்பர்.

"தாங்கள் அமைச்சரிடம் பணிபுரிகிறீர்களா? தங்கள் பெயர் என்னவேர்?" என்று அக்கறையுடன் வினவினார் அறம்வளர்த்த நாதர். தனக்கு அவரைப் பற்றி ஒன்றுமே தெரியாது என்பதையும் வரதப்பரின் துயரம் அவர் முகத்தில் நிழலிட்டதனால் மட்டும் அவரை அழைத்தார் என்பதையும் வலியுறுத்துவதே அந்த வினாவின் நோக்கம்.

"என் பெயர் வரதப்பன். நான் பல்லவ நாட்டின் திணைக்கள நாயகம்" என்று தன்னை அறிமுகம் செய்துகொண்டார் வரதப்பன்.

"எனக்கு உங்களைக் கண்டபொழுதே தோன்றியது நீங்கள் மிகவும் உயர்ந்த பொறுப்புள்ள பதவியை வகிப்பவர் என்று. இந்த நாட்டின் பொருளாதாரமே தங்கள் கையில் அல்லவா இருக்கிறது. ஆனால் இப்பொழுது வறுமையும் வறட்சியும் அகன்று நாடு ஓரளவு நலமடைந்துவிட்டதே. அப்படி யிருந்தும் ஏன் அமைச்சர் உங்களை வற்புறுத்த வேண்டும்?" என்று ஒரு மெல்லிய வலையை வீசினார் சுவாமிகள்.

"வறுமையும் வறட்சியும் ஒழிந்து நாடு நலம் பெற்றதால் தானே அரசர் வேறு திசையில் பார்வையைச் செலுத்துகிறார். இனியும் வலிமை பெற வேண்டும். படையை விரிவு படுத்தவேண்டும் பிரிந்து சென்ற படைவீரர்களை மீண்டும் திரட்ட

வேண்டும். புதிய இளைஞர்களைப் படையில் சேர்க்கவேண்டும். உயர்ந்தரகக் குதிரைகளை வாங்க வேண்டும் என்றால் பலவிதமான செலவுகள் எழும். அதற்கான பொருள் ஈட்டும் வழிகளைக் கண்டு பிடிப்பது என் வேலை."

நல்ல தொடக்கம்! வீசிய வலையில் மீன் சிக்கத் தொடங்கிவிட்டது! ஆனால் அவரசப்பட்டு வலையை இழுப்பது தவறு என்பது அறம்வளர்த்த நாதரான இளந்தத்தனுக்கு நன்கு தெரியும்.

"உண்மைதான் அரசர்களுக்கு அமைதிக்குப்பின் போரும், போருக்குப் பின் அமைதியும் தேவைப்படுவது இயல்பே. உங்கள் பணி, பொறுப்பும் தொல்லையும் நிறைந்ததுதான். சொந்தத் துன்பத்தையும் இழப்பையும் மறப்பதற்கு இரு வழிகள் உள்ளன. ஒன்று தன் வேலையில் முற்றிலும் மூழ்குவது. மற்றொன்று பக்தியால் மன அமைதி பெறுவது. இந்த இரண்டு வழிகளுமே இப்பொழுது உங்கள் முன் திறந்து கிடக்கின்றன. நீங்கள் நாள் தோறும் மாலையில் வாருங்கள். பிரார்த்தனை நேரத்தில் வேலைமிகுதியால் வரமுடியாவிட்டாலும் அதற்குப்பின் என்னிடம் வந்து உரையாடுங்கள். உங்கள் மனம் அமைதி பெறும்- நான் இந்தத் திருநீறை மந்திரித்துத் தருகிறேன். அதைத் தங்கள் மனைவியின் நெற்றியில் காலையிலும் மாலையிலும் பூசுங்கள். அவர்களும் விரைவில் நலமடைவார்கள். என்று ஆறுதல் மொழிகள் பேசி" திருநீறைக் கையில் எடுத்து, சற்று நேரம் ஓசையின்றிக் கண்மூடி இருந்துவிட்டு அதையும் கொடுத்தார் நாதர்.

மனத்திற்கு நிம்மதிதேடி மடத்தில் நடக்கும் பிரார்த்தனையில் கலந்துகொள்ள வந்த வரதப்பர் மன அமைதியோடு மனைவிக்கும் நலம் தரும் மருந்தும் பெற்று வீட்டிற்குத் திரும்பினார். அறம் வளர்த்த நாதரின் அருள் மொழிகள் அவர் உள்ளத்தில் ஆழப் பதிந்தன. ஒரு நாள் கூடத் தவறாமல் ஒவ்வொரு நாளும் மாலையில் நாதரின் மடத்திற்கு வந்து, பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு சுவாமிகளின் அறிவுரையும் பெற்று மகிழ்ச்சியுடன் திரும்பினார். உடலுக்கு ஊறு எதுவும் இன்றி உள்ளம்மட்டும் மகனின் மறைவால் புண்ணாகியிருந்த வரதப்பரின் மனைவியும் அறம்வளர்த்தநாதரின்திருநீறாலும், கணவனின்கருணைமொழிகளாலும் அவர் தெரிவித்த சுவாமிகளிடம் வளர்ந்த பக்தி உணர்வினாலும் நாளடைவில் நலம் பெற்றாள். வரதப்பருக்கு சுவாமிகள்மேல் இருந்த பக்தி வெள்ளம் இதனால் மேலும் பெருகியது. சுவாமிகளுக்கும் வரதப்பர் தன்னுடைய பக்தராக மாறிவிட்டார் என்றும், எதையும் மறைக்காமல் தன்னிடம் பேசுவார் என்றும்

நம்பிக்கை ஏற்பட்டது. அதைச் சோதித்துப் பார்க்க முனைந்து ஒரு நாள் அவரோடு உரையாடிக்கொண்டிருந்த பொழுது அறம் வளர்த்த நாதர் மெல்ல வினவினார்.

"அன்பரே உங்கள் வேலையில் உங்களுக்கு முழுக் கவனமும் செலுத்த முடிகிறதல்லவா? படை திரட்டுவதற்கான பொருட் செலவுக்கு வழிவகுத்து விட்டீர்களா?"

வரதப்பர் தயக்கம் சற்றும் இன்றிச் சரளமாக விடையிறுத்தார்.

"ஆமாம் சுவாமிகளே! தங்களுடன் உரையாடிச் சென்றால் என் மனத்தில் புதிய தெம்பு தோன்றுகிறது. அமைச்சரே என்னைப் பாராட்டுகிறார். பதினாயிரம் வீரர்களைக் கொண்ட படை போருக்காகவே திரட்டப்படுகிறது. அதற்கான செலவும், குதிரைகள், யானைகள், தேர்கள், படைக்கலன்கள், ஆகியவற்றின் செலவும் மிக அதிகமாகும். அதற்கான வழிமுறைகளை வகுத்து அமைச்சரிடம் கொடுத்துவிட்டேன்" என்றார் வரதப்பர்.

"பல்லவ மன்னர் படை திரட்டுகிறார் என்றால் அது பாண்டியனுக்கு எதிராகத்தானே இருக்கும்" என்று எல்லோருக்கும் தெரிந்த செய்தியைப் பேசினார் சுவாமிகள்.

"அதில் என்ன ஐயம்?" என்று அதை ஒப்புக்கொண்டார் வரதப்பர்.

"பாண்டியனைத் தோற்கடிக்க அந்தப் படை போதுமா?"

"நாம் தனியாகவா போர்செய்யப் போகிறோம் இன்னும் சில நாள்களில் கொங்கு நாட்டிற்கும் சேர நாட்டிற்கும் போகிறார் நம் சேனாதிபதி. அவர்களையும் ஒன்றுசேர்த்து ஒரு பெரிய படை பாண்டியனுடன் மோதும்" என்று பெருமையுடன் பேசினார் வரதப்பர்.

33. போர்த்திட்டமும் எதிர்த்திட்டமும்

வரதப்பர் சென்றபின் இளந்தத்தன் வெகு நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். பல்லவ மன்னனின் திட்டத்தை அவனால் நன்கு புரிந்துகொள்ள முடிந்தது. சென்ற முறை பாண்டியருடன் போர் புரிந்தபொழுது தனிமையாகப் போர்செய்து பாண்டியரைத் தோற்கடித்து மதுரையைக் கைப்பற்றுவது கடினம் என்பதை உணர்ந்த நந்திவர்மன், கொங்கு நாட்டு மன்னனையும் கூடச் சேர்த்துக் கொண்டு மதுரையை நோக்கிச் சென்றான். பாண்டியர் பல்லவனுடனும் அதியமானுடனும் போரில் ஈடுபட்டிருக்கும் நேரத்தில் மேற்கிலிருந்து மதுரையைத் தாக்குவதற்கு வேணாட்டு மன்னனுடனும் உடன்படிக்கை செய்திருந்தான். ஆனால் சாத்தஞ்சாத்தனின் அறிவுரைப்படி போர்த்திட்டத்தை மாற்றி எதிர்பாராத நேரத்தில், எதிர்பாராத இடத்தில் பாண்டியர் படை பல்லவர் படையைத் தாக்கியதால் பல்லவனின் எண்ணத்தில் மண்விழுந்தது. மேலும் போர் மிகவிரைவிலேயே முடிந்து பாண்டியர் படை மதுரையை நோக்கித் திரும்பியதாலும் தக்க நேரத்தில் தகவல் எட்டியதாலும் வேணாட்டுப் படை மதுரையை நெருங்குவதற்கு முன்னரே அதனை இடைமறித்துத் தாக்கவும் முடிந்தது. இவ்வாறு தான் இட்ட திட்டம் முற்றிலும் தோல்வியடைந்ததால் இப்பொழுது நந்திவர்மன் திட்டத்தில் சிலமாறுதல்கள் செய்துள்ளான்.

வேணாட்டின்மீது படையெடுத்துச் சென்று அந்நாட்டின் அரணை அழித்து ஏராளமான பொன்னும் பொருளும் பெற்றுத் திரும்பிய பாண்டியன், அந்நாட்டை முற்றிலும் வலியிழக்கச் செய்து விட்டதால் அங்கிருந்து எவ்விதமான பங்கும் பாண்டியனுக்கு எதிரான படையெடுப்பில் தனக்குக் கிடைக்காது என்பதைப் பல்லவன் உணர்ந்துகொண்டான். அதனால் ஆய்வேளை ஒதுக்கிவிட்டு, அவனைவிட வலிமையுள்ளவனும் இதுவரை பாண்டியருடன் போர் புரியாதவனுமான சேரனைத் தன்னுடன் சேர்த்துக்கொள்ள முயற்சி செய்கின்றான். கொங்கு வேந்தனோ இப்பொழுது பாண்டியரோடு கடும் பகையும் பெரும் வெறுப்பும் கொண்டவன். முன்னைவிடப் பதின்மடங்கு ஆர்வத்துடன் பல்லவனுடன் சேர்ந்து பாண்டியரை அழிக்கப் புறப்படுவான். ஆகவே இம்முறை பல்லவன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தால்

அது முன்னைவிட மிகப்பெரிய படையாக இருக்கும். மேலும் போர்த்திட்டமும் மாறும்.

காவிரியாற்றைக் கடந்து பாண்டிய நாட்டிற்குள் புகுந்து பகைவனுடன் போர்புரிய எண்ணியிருந்த பல்லவப்படை, ஆற்றைக் கடக்கும் பொழுதே பெண்ணாகடத்தில் தாக்கப் பட்டதால்தான் தோல்வி ஏற்பட்டது. ஆற்றைக் கடப்பதற்கு முன்னரோ அல்லது ஆற்றைக் கடந்து தென்கரையில் சேர்ந்த பின்னரோ இரு படைகளும் மோதியிருந்தால், பல்லவனின் பெரியபடை பாண்டியரின் சிறியபடையைத் தோற்கடித்திருக்கும் என்று பல்லவன் உறுதியாக நம்பினான். ஆகவே இம்முறை போர்க்களம் எங்கு அமையவேண்டும் என்பதை அவன் நிர்ணயிக்க முயற்சி செய்வான். பல்லவன், சேரன், கொங்கன் ஆகிய மூவருடைய படையும் ஒன்றாகத் திரண்டு சென்று பாண்டியரை எதிர்ப்பதே பல்லவனின் திட்டமாக இருக்கும். அவ்வாறு நேர்ந்தால் அதற்கு ஈடான ஒரு பெரும்படை திரட்டுவது பாண்டியரால் முடியாத செயலாக இருக்கும் என்று தோன்றியது இளந்தத்தனுக்கு.

வரதப்பரின் துணையால் நந்திவர்மப் பல்லவனின் போர்த் திட்டத்தை நன்கறிந்த இளந்தத்தன் தான் காஞ்சிக்கு வந்ததன் நோக்கம் வெற்றிகரமாக நிறைவேறியதில் மனநிறைவு கொண்டான். வரதப்பரின் மனக்கவலையையும் அவர்தம் மனைவியின் நலக்குறைவையும் மாற்றியவர் அறம்வளர்த்த நாதரே என்று அசைக்க முடியாத நம்பிக்கையை வரதப்பரின் மனத்தில் பதித்துவிட்டதால், எப்பொழுது தேவைப்பட்டாலும் காஞ்சிக்கு வந்து இரண்டு நாள் தங்கினால் போதும் பல்லவ மன்னனின் திட்டங்களையும் மனப் போக்கையும் அறிந்து கொண்டு செல்ல முடியும் என்ற நம்பிக்கையும் இளந்தத்தனுக்கு இருந்தது.ஆகவே இனி அதிகநாள் காஞ்சியில் தங்குவதில் பயனில்லை என்றும் முடிவு செய்தான். அதுமட்டுமன்றி, தான் கண்டறிந்த தகவல்களைச் சாத்தனிடம் அறிவித்து மேலும் மேற்கொள்ள வேண்டிய செயல்களைப் பற்றியும் பேசவேண்டும் என்று எண்ணினான். வரதப்பரிடம் மேலும் ஆறுதல் மொழிகள் பேசி, இனிமேல் தான் அடிக்கடி காஞ்சிக்கு வரத் திட்டமிட்டிருப்பதாகவும், அவ்வாறு வரும்பொழுது வரதப்பர் தன்னை வந்து காணத் தவறக் கூடாது என்று வற்புறுத்தியும் அங்கிருந்து புறப்பட்டார் அறம்வளர்த்த நாதர். மதுரை மடத்தில் ஓரிரு நாள்கள் கழித்துவிட்டு, அங்குள்ள பக்தர்களின் கூட்டங்களில் கலந்து கொண்டு அதன் பின்னரே தகடூருக்குப் போவதாகவும் பரதனிடம் தெரிவித்தார்.

தங்கவேலனுக்கும் தகவல் அறிவிக்கும் பொறுப்பைப் பரதனுக்குக் கொடுத்துவிட்டு மதுரைக்குப் பயணமானார் நாதர்.

அறம்வளர்த்த நாதர் மதுரை மடத்திற்கு வந்த செய்தியைத் தலைமைச் சீடன் பொன்முடி அறிவிக்கும் முன்னரே சாத்தஞ் சாத்தனுக்கு எட்டியது. தகடூரிலிருந்து காஞ்சிக்குப் போகும் திட்டத்தை மணிவண்ணன் வாயிலாக அறிந்ததால், இளந்தத்தன் காஞ்சியில் ஒரு மாதகாலம் தங்கியிருந்து முக்கியமான தகவல்களைத் திரட்டியிருப்பான் என்று சாத்தன் நம்பினான். ஆகவே அறம்வளர்த்த நாதர் வந்து சேர்ந்த அன்று மாலையே, பக்தர்கள் கலைந்து சென்றபின் மடத்திற்குச் சென்று அவரைச் சந்தித்தான்.

சாத்தனின் வரவை எதிர்பார்த்து, தன்னுடைய தலைமேல் இருந்த பாரத்தை இறக்கிவைத்து, முகத்தை மறைத்திருந்த தாடியையும் அகற்றி இளந்தத்தனாக முற்றிலும் மாறியே காத்திருந்தான் ஒற்றர் படைத் தலைவன். சாத்தனை வரவேற்று அழைத்து வந்த பொன்முடியை வெளியில் அனுப்பிவிட்டு இருவரும் அமர்ந்து பேசத் தொடங்கினர்.

"தளபதியாரே! தங்கள் வலையில் சிக்காமல்பறந்து சென்ற பறவை இப்பொழுது காஞ்சியில்தான் இருக்கிறது. எவ்வளவு அழகான பறவை! இந்தப் பறவையா அவ்வளவு துணிச்சலான செயலில் இறங்கியது என்று வியப்படைந்தேன் நான். தாங்கள் கட்டளையிட்டால் அந்தப் பறவையை ஒரு கூண்டில் அடைத்துக் கொண்டுவர என்னால் முடியும்" என்று சாத்தனால் செய்யமுடியாமல் போன செயலைத் தன்னால் செய்யமுடியும் என்ற பொருள் பொதிந்த வார்த்தைகளைப் பேசினான் இளந்தத்தன்.

"அழகான பறவைதான் இளந்தத்தரே! ஆனால் அதை முதன் முதலாகக் கண்டபொழுதே அதன் வெளிப்புறத் தோற்றம் அழகாக இருந்தாலும் உள்ளே அழுக்கு நிறைந்திருக்கிறது என்று புரிந்து கொண்டேன். நச்சுப்பையை மறைத்து வைத்திருக்கும் நாகம் என்று எண்ணினேன். அதன் அசைவுகளைக் கண்காணித்தேன். தக்க நேரத்தில் அதனை வெளியேற்றிவிட்டோம் நீங்கள் சொன்னதுபோல் அதைக் கூட்டில் அடைக்க விரும்பவில்லை அதனிடம் இருந்த நஞ்சை எடுத்துவிட்டோம். அது பறந்து போனால் போகட்டும் என்றுதான் விட்டோம். வீணாகக் கூட்டில் அடைத்து, அதனைக் காண்போருக்குக் கண்வலி ஏற்படக்கூடாது அல்லவா? அது இருக்கட்டும் அதுதான் இங்கிருந்து பறந்து சென்ற பறவை என்பதை அடையாளம் கண்டுகொண்டீர்களே. என் பாராட்டுகள். பாண்டியப் பேரரசின் ஒற்றர் படைத்தலைவர்

என்பதைக் காட்டிவிட்டீர்கள்' என்று இகழ்ச்சியில் தொடங்கிப் புகழ்ச்சியில் முடித்தான் சாத்தன்.

"காயத்ரி தேவியின் குடும்பத்தைப் பற்றி விசாரணை செய்து விவரங்கள் அறிவித்து பரதன் தான் என்னிடம் கூறினான். 'மதுரைக்குப் போயிருந்த ஊர்வசி திரும்பிவந்து விட்டாள்' என்று அவளுடைய வீட்டில் வேலைக்காரனாக இருக்கும் ஆள் அவனிடம் சொன்னானாம். அந்த வேலையாள் மூலம்தான் பரதன் அவர்களைப் பற்றிய பல தகவல்களையும் அறிந்தான். தாங்கள் நரன் தகடூரிலிருந்து புறப்படும்முன் மணிவண்ணனிடம் கொடுத்தனுப்பிய ஓலையில் இருந்த செய்தியையும் ஊர்வசி காஞ்சிக்குத் திரும்பிவிட்டாள் என்ற செய்தியையும் இணைத்த பொழுது மதுரை அரண்மனையில் ஒற்றறியும் பணியைச் செய்தவள் அவள்தான் என்று முடிவு செய்வது எளிமையாக இருந்தது. என் வேலையே அதுதானே" என்றான் இளந்தத்தன்.

"அதைத்தான் நானும் குறிப்பிட்டேன். பாம்பின் கால் பாம்பறியும் என்று சொல்வார்கள் அல்லவா! அதைப் போல்தான் தற்போதைக்கு ஊர்வசியின் ஆட்டம் முடிந்துபோன கதை. இப்பொழுது நிகழ்காலத்திற்கு வருவோம் எதிர்காலத்தையும் எட்டிப் பார்ப்போம்! உங்கள் காஞ்சிப் பயணம் என்ன சொல்கிறது. நான் எண்ணியதுபோல் போர் மேகங்கள் திரளத் தொடங்குகின்றனவா இல்லையா?" என்று நேரடியாக வினவினான் சாத்தன்.

"தங்கள் ஊகம் என்றுமே தவறியதில்லை. இப்பொழுதும் அப்படியே! பல்லவன் படைதிரட்டத் தொடங்கிவிட்டான். இன்னும் ஆறுமாதத்தில் பதினாயிரம் வீரர்கள் கொண்ட படை உருவாக வேண்டும் என்று ஆணையிட்டுள்ளான்" என்றான் இளந்தத்தன்.

"பதினாயிரம் வீரர்களா? சென்ற முறையும் அவ்வளவுதானே இருந்தது. அந்தப் படையை நாம் தோற்கடித்து விட்டோமே! இம்முறை அதைவிடப் பெரிய படை உருவாகும் என்றல்லவா நான் எண்ணினேன்!"

"பதினாயிரம் வீரர்கள் என்று நான் சொன்னது புதிதாக உருவாக்கப் போகும் படையைப்பற்றி. காஞ்சியில் இப்பொழுது ஐயாயிரம் வீரர்களுக்குமேல் இருக்கிறார்கள் என்பது பரதனின் கணக்கு! ஆகவே ஒரு சிறிய படையைக் காஞ்சியில் நிறுத்திவிட்டு, போருக்காக வெளியில் புறப்படக் கூடிய படையில் பன்னீராயிரம் வீரர்களாவது இருப்பார்கள் என்பது உறுதி" என்று விளக்கினான் இளந்தத்தன்.

"அதியனும் பல்லவனுக்கு உதவியாகப் படை அனுப்புவானே! இந்த முறை படை அனுப்புவது மட்டுமா செய்வான்? இப்பொழுது நம்முடைய பகைவன் அல்லவா! தன்னுடைய முழு வலிமையையும் சேர்த்துப் பல்லவனோடு கைகோர்த்துப் போர்க்களத்திற்கே வருவான் என்று நினைக்கிறேன். அதியனோடு பல்லவன் அதைப் பற்றிப் பேசிவிட்டானா?" என்று ஆராய்ந் தான் சாத்தன்.

"இதுவரை அதைப் பற்றி அவர்களுக்குள் பேச்சுவார்த்தை நடந்ததாகத்தகவல் இல்லை! ஆனால் விரைவிலேயே காஞ்சியிலிருந்து தூதனை அனுப்புவான் பல்லவன் என்ற செய்தி கிடைத்திருக்கிறது என்றான் இளந்தத்தன்" பின்னர் தொடர்ந்து பேசினான்.

"அது மட்டுமல்ல ஒரு புதிய படையும் நமக்கெதிராக வரும்வாய்ப்பு உண்டு" என்றான்.

"ஆம் நினைத்தேன். சென்ற முறையும் ஆய்வேள் மதுரையைத் தாக்க முயன்றானே. ஆனால் வேணாடு இப்பொழுது ஒரு போருக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிலைமையில் இல்லை! மிகவும் நொடிந்துப் போய் இருக்கிறது. ஆய்வேள் பல்லவனுடன் இணைவானா என்பது கேள்விக்குறியாகும்" என்று இடைமறித்துப் பேசினான் சாத்தன்.

"அது பல்லவனுக்கும் தெரியும். அதனால் இந்த முறை ஆய்வேளை அணுகமாட்டான். ஆனால் அதைவிட வலிமைசாலியான சேரமன்னன் உதவியை எதிர்பார்க்கிறான்" என்று புதிய பகைவனைச் சுட்டிக் காட்டினான் ஒற்றர் படைத் தலைவன்.

"அப்படியா! நாம் வேணாட்டின்மீது படையெடுத்துச் சென்று ஆய்வேளை அடிப்படுத்தியது முதல் சேரன் அச்சம் கொண்டிருக்கிறான் என்று ஒரு தகவல்கிடைத்தது. வேணாடு இப்பொழுது முற்றிலும் வலியிழந்து கிடப்பதால் பாண்டியர் படை வேணாட்டைக் கடந்து வடக்கு நோக்கிச் சென்று சேரநாட்டைத் தாக்கும் நாள் வருமோ என்பதுதான் சேரனின் அச்சத்திற்குக் காரணம். ஆகவே பாண்டியனை ஒடுக்குவதற்குப் பல்லவன் முனைகிறான் என்றால், அவனுக்கு உதவி செய்யச் சேரன் முன்வருவான் என்பதில் ஐயம் இல்லை! சேர நாட்டிலிருந்து படைவர வேண்டுமானால் கொங்குநாடு வழியாகத்தான் வரவேண்டும். ஆகவே இந்தப் போர்த்திட்டத்தில் அதியமானின் பங்கு மிக முக்கியமானதாக இருக்கும்" என்று எதிர்காலத்தில் நிகழப்போகும் விளைவுகளைக் கண்முன் நிறுத்தினான் சாத்தன்.

"ஆம் அதுவும் ஒரு விதத்தில் நமக்கு நல்லதுதான். தகடூர் அரண்மனையில் எடுக்கும் எந்த முடிவும் விரைவிலேயே நமக்குத் தெரிய வரும். அதற்கான முற்றிலும் நம்பத் தகுந்த செய்தி ஊற்றுக்களை நாம் உருவாக்கி விட்டோம். அதுமட்டுமல்ல அவ்வாறு கிடைத்த தகவல்களைச் சரியானவைதானா என்று பரிசோதித்துப் பார்க்கவும் வழிமுறைகளை வகுத்துவிட்டோம். காஞ்சியில் ஒரு மிக நல்லதும் நம்பத்தக்கதுமான செய்திக் கதவைத் திறந்துவிட்டோம். ஆனாலும் அதைப் பரிசோதித்துப் பார்க்க இதுவரை வழி பிறக்கவில்லை. அதனால்தான் காஞ்சிக்குச் சென்று சில தகவல்களை நேரடியாகவே திரட்டுவதற்கும், மதுரைக்கு வந்து தங்களிடம் கலந்து பேசுவதற்கும் நான் தகடூரைவிட்டு வெளிவர வேண்டியிருந்தாலும் பெரும்பாலும் தகடூரிலேயே வசிப்பது நல்லது என்று முடிவு செய்துவிட்டேன்" என்று அறிவித்தான் இளந்தத்தன். "ஆம் அதுதான் நல்லது. அதனால் இன்னும் மற்றொரு நன்மையும் உள்ளது. சேரனின் தலைநகரான வஞ்சிக்கும் பல்லவனின் தலைநகரான காஞ்சிக்கும் உள்ள தொடர்பு பெரும்பாலும் இவை இரண்டிற்கும் நடுவில் அமைந்திருக்கும் தகடூர் வழியாகத்தான் நடக்கும். தூதர்களின் போக்கும் வரவும்கூடத் தகடூர் வழியாகவே நடைபெறும். அதையும். கண்காணிப்பது முக்கியம்" என்று இளந்தத்தனின் கருத்தை ஆதரித்தான் சாத்தன்.

"நான் தகடூரில் முழுநேரமும் செலவிடுவதால் மதுரையில் நிகழும் நிகழ்ச்சிகள் தெரியாமல் போய்விடுகின்றன. அமைச்சர் மாறன்காரிபதவியிலிருந்து ஓய்வு பெற்றது உண்மைதானா?" என்று வினவினான் இளந்தத்தன்.

"உண்மைதான் அவருடைய இளவல் மாறன் எயினன் அந்தப் பதவியை ஏற்றுக் கொண்டார். ஓய்வுபெறும் அமைச்சருக்கு அரசர் "மூவேந்த மங்கலப் பேரரையன்" என்ற பட்டம் அளித்துப் பெருமைப்படுத்தினார். ஏராளமான செல்வமும் அளித்தார். இப்பொழுது மதுரைக்கு அருகிலேயே உள்ள ஆனைமலையில் நரசிங்கப் பெருமாளுக்குக் கோயில் கட்டுகிறார் மாறன் காரி" என்று விவரித்தான் சாத்தன்.

"அமைச்சர் பதவியிலிருந்து ஓய்வுபெறும்முன் நான் அவரைச் சந்தித்து ஆசிபெற வேண்டுமென்று எண்ணியிருந்தேன். ஆனால் காஞ்சியில் முக்கியமான வேலை இருந்ததால் அது முடியாமல் போயிற்று" என்று வருந்தினான் இளந்தத்தன்.

"அவர் இன்னும் சில ஆண்டுகளாவது மதுரையில்தான் வசிக்கப் போகிறார். இந்தப் போர் ஒரு முடிவுக்கு வரும்வரை அறம்வளர்த்த நாதர் வாழ்ந்தாக வேண்டும். அதற்குப்பின் இளந்தத்தர் திரும்பிவரலாம். அது ஓய்வு பெற்ற அமைச்சருக்கும் தெரியும். இதெல்லாம் ஒற்றர்படைத் தலைவராக இருந்தால் நேரக்கூடிய சிக்கல்கள். ஆகவே கொஞ்ச நாள் பொறுத்திருங்கள்" தொழில் தருமத்தைச் சுட்டிக் காட்டினான் சாத்தன். பின்னர் "நான் மன்னரிடம் கலந்துபேசிவிட்டு நாளை இரவில் மீண்டும் உங்களைச் சந்திக்கிறேன்" என்று அறிவித்துவிட்டு அறம்வளர்த்த நாதரின் மடத்திலிருந்து வெளியேறினான் சாத்தன்.

அடுத்தநாள் காலையில் அரண்மனைக்குச் சென்று நெடுஞ்சடையனிடம், இளந்தத்தன் கொண்டுவந்த செய்திகளைத் தெரிவித்தான் சாத்தன். மன்னர் உடனே அமைச்சர் மாறன் எயினனையும், சேனாதிபதி சாத்தன் கணபதியையும் அழைத்து வரச் செய்து ஓர் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். தன்னிடம் சாத்தன் அறிவித்த தகவல்களை அவர்களிடமும் விளக்கி உரைக்கும்படி அரசர் வேண்ட சாத்தன் அவ்வாறே செய்தான்.

"நம் வேந்தர் விரும்பியவண்ணம் ஒற்றர் படைத்தலைவர் இளந்தத்தரை ஒரு சிறப்புத் தொழிலை நிறைவேற்றுவதற்காக நியமித்து நான் அவருடைய பொறுப்பையும் ஏற்றுக் கொண்டேன். இளந்தத்தரை ஏற்பித்த வேலையை மிக நன்றாகச் செய்து வருவதால் நம் திட்டப்படியே நமக்குத் தகவல்கள் தக்க நேரத்தில் வருகின்றன. இப்பொழுது நான் கூறிய தகவல் எவ்வளவு முக்கியமானவை என்பதை நான் சொல்லவேண்டியதில்லை. பல்லவன், கொங்கன், சேரன் என்ற மூன்று மன்னர்கள் இணைந்து நம்மைத் தாக்க முனைவது நமக்குப் பெரிய சோதனை என்பது தெளிவு. ஆகவே நாம் மிக விழிப்புடன் இருக்கவேண்டும் என்பதுடன் திட்டமிட்டு, செயலாற்றவும் வேண்டும் என்று முடித்தான் சாத்தன்.

சேனாதிபதி தன் கருத்தை எடுத்துரைத்தார் "பல்லவனும் சேரனும் பேரரசர்கள், அதியமான் அவ்வளவு இல்லையானாலும் அவர்களோடு சேரும் பொழுது எண்ணிக்கை இன்னும் அதிகமாகும். பல்லவன் படை பதினாயிரம் வீரர்களுடன் காஞ்சியிலிருந்து புறப்படலாம். நான்கு அல்லது ஐந்து நாளில் பாண்டிய நாட்டை அடையலாம். கொங்கர் படை இரண்டே நாளில் வந்துவிடலாம்.

ஆனால் சேரநாட்டிலிருந்து புறப்படும் படைபத்து நாள்களுக்குமேல் பயணம் செய்தால்தான் பாண்டிய நாட்டை அடையும். மலையும் காடும் நதியும் கடந்து வரவேண்டும். எப்படியும் ஐயாயிரம் வீரர்களுக்குமேல் இருக்காது. கொங்கன் எவ்வளவு முயன்றாலும் ஐயாயிரம் வீரர்களுக்குமேல் திரட்ட முடியாது. இந்த மூன்று படைகளும் இணைந்தால் ஒன்றாகச் சேர்ந்து நம்மைத் தாக்கினால் இருபதினாயிரம் வீரர்கள் அவர்களிடம் இருப்பார்கள் என்று கருதலாம். சேரன் சேர்வதால் யானைப்படை பலமாக இருக்கும். பல்லவனின் குதிரைப் படையும் வலிமையானது. நாம் கரவந்தபுரத்திலும் விசலூரிலும், நன்னிலத்திலும் நிறுவியிருக்கும் நிலைப் படைகளில் ஒன்பதினாயிரம் வீரர்கள் இருக்கிறார்கள். உறையூர் நிலைப் படையில் மூவாயிரம் வீரர்கள் உள்ளனர். மதுரையில் ஐயாயிரம் வீரர்கள் உள்ளனர். கரவந்த புரத்தில் நூறு யானைகளுக்குமேல் போர்ப் பயிற்சி பெற்றவையே உள்ளன. உறையூரின் குதிரைப் படை சாத்தஞ்சாத்தனே போர்ப்பயிற்சி அளித்து நன்கு சேவை செய்தது. ஆகவே இன்னும் ஓரளவு நம் படைபலத்தைப் பெருக்கினால் இந்த மூவரையும் நம்மால் எதிர்த்து நிற்க முடியும்" என்று களம் பல கண்ட காழ்த்த வீரரான சேனாதிபதி நம்பிக்கையுடன் பேசினார்.

அமைச்சர் மாறன் எயினன் சில நாள்களுக்கு முன்புதான் அமைச்சர் பொறுப்பை ஏற்றிருந்தாலும், தன் அண்ணனுடன் நெருக்கமாக வாழ்ந்த அனுபவம் அவருக்குத் துணைசெய்தது. அவர் தன் கருத்தைத் தெளிவாக எடுத்துரைத்தார். "நமது பொருள் நிலை நன்றாகவே இருக்கிறது. நாட்டு மக்களின் மனநிலையும் மன உறுதியும் நமக்குத் துணைசெய்கின்றன. நமது படைவீரர்கள் மன்னனுக்காக உயிரைக் கொடுக்கவும் தயங்க மாட்டார்கள். ஆகவே சேனாதிபதி கூறியபடி நம் படையை இன்னும் சற்றே விரிவுபடுத்தினால் நாம் இந்தப் பகைவர்களுக்கு அஞ்சத் தேவையில்லை" என்றார் அவர்.

சாத்தஞ்சாத்தனும் நம்பிக்கையுடன் பேசினான். "சேனாதிபதி கணக்கிட்டது போல இருபதினாயிரம் வீரர்களுக்குமேல் திரட்டுவது இந்த மூவரும் இணைந்தாலும் இயலாத காரியம் என்றுதான் நான் நினைக்கிறேன். எனக்குத் தோன்றுவது என்னவென்றால் அந்த இருபதினாயிரம்கூட ஓர் இடத்தில் ஒன்றாகச் சேர்வதை நாம் அனுமதிக்கக் கூடாது. அவ்வளவு பெரிய படையும் யானை, குதிரை, தேர் ஆகியவற்றில் கூட்டமும் அந்தப் படைத் தலைவர்களுக்கும் வீரர்களுக்கும் தன்னம்பிக்கையைப்

பெருக்கும். நாம் பல்லவர் படையையும் சேரர் படையையும், கொங்கர் படையையும் தனித்தனியாக எதிர்த்துப் போரிட வேண்டும். ஒவ்வொரு போரிலும் நம் படை அவர்கள் படையைவிடப் பெரியதாக இருக்கவும் வேண்டும். அதற்காக ஒரு திட்டம் தீட்டி நான் உங்கள்முன் விரைவிலேயே வைக்கிறேன்" என்றான்.

"மிகவும் நல்லது! அவ்வாறே செய். நாம் அடுத்த கூட்டத்தில் அதை ஆராய்வோம்" என்று முடிவுக்குக் கொண்டுவந்தான் மன்னன்.

34. வெற்றிக்குத் தேவை ஒற்றரின் சேவை

இளந்தத்தனிடம் சொன்னவாறு சாத்தஞ்சாத்தன் அன்று இரவில் மீண்டும் அறம்வளர்த்த நாதரின் மடத்திற்குச் சென்றான். போருக்கான விரிவான திட்டம் ஒன்று அவனுடைய மனத்தில் உருவாகியிருந்ததனால்தான் அத்தகைய ஒரு திட்டத்தை அடுத்த ஆலோசனைக் கூட்டத்தில் வைப்பதாகச் சாத்தன் அறிவித்தான். ஆயினும் அந்தத் திட்டம் சரிவர நிறைவேற வேண்டுமாயின், தக்க நேரத்தில் முற்றிலும் சரியான தகவல் கிடைத்தாக வேண்டும் என்றும், அந்தத் தகவலைத் தருவதற்கு இளந்தத்தனாலும், அவனுடைய உதவியாளர்களாலும் மட்டுமே முடியும் என்றும் சாத்தனுக்குத் தெரியும். இளந்தத்தனின் முழு ஒத்துழைப்பு இல்லையாயின் திட்டம் வெற்றி பெறுவது கடினம். திட்டம் வெற்றிபெறாவிட்டால் அது பாண்டிய நாட்டின் அழிவிற்கே வழிவகுக்கக்கூடும். ஆகவே இளந்தத்தனிடம் திட்டத்தை விளக்கி அதன் வெற்றிக்கு ஒற்றர்படை ஆற்றவேண்டிய பங்கையும் எடுத்துக் காட்டவேண்டும் என்று முடிவு செய்தான்.

"இளந்தத்தரே! இன்றைய ஆலோசனைக் கூட்டத்திற்கு ஒற்றர் படைத் தலைவர் என்ற முறையில் நீங்களும் வந்திருந்தால் எவ்வளவோ நல்லதாக இருக்கும். ஆனால் இப்பொழுது சடையிலும் தாடியிலும் ஒளிந்திருக்கும் உங்களை வெளியில் கொண்டுவர முடியாத சூழ்நிலையாதலால் நானே அந்தப் பொறுப்பை ஏற்கவேண்டியுள்ளது. ஆலோசனை எப்படியெல்லாம் நடந்தாலும், யார் எந்தக் கருத்தைச் சொன்னாலும் இறுதியில் ஒற்றர் படையின் திறமையினால்தான் எந்த அரசும் வெற்றிபெற முடியும் அந்தப் பொறுப்பை நீங்கள் தான் ஏற்கவேண்டும்" என்ற முன்னுரையுடன் இளந்தத்தனின் மனத்தில் தேன் பெய்தபின் சாத்தன் எல்லாவற்றையும் விளக்கிப் பேசினான்.

"நம் சேனாதிபதியின் கணக்குப்படி, பல்லவனும், சேரனும், கொங்கனும் இணைந்து செயல்பட்டாலும் அவர்கள் திரட்டும் படையின் பலம் இருபதினாயிரத்தைத் தாண்டாது. நம்மிடம் உள்ள நிலைப்படைகளையும் மதுரையிலுள்ள படையையும் சேர்த்து எண்ணினால் நமது படை அதைவிடச் சற்றுச் சிறியதாயினும் வேறுபாடு பெரியதாக ஒன்றும் இல்லை, இன்னும் ஓரளவு விரிவுபடுத்தினால் பகைவரின் படையைப் போரில் முறியடிக்க

முடியும் என்று சாத்தன் கணபதி நம்புகின்றார். புதிதாகப் பொறுப்பேற்றவர் ஆயினும், அமைச்சர் மாறன் எயினனும் நம்பிக்கையுடன் பேசுகிறார். நமது பொருளாதார நிலை வலிமையாக இருப்பதாகவும், படையை விரிவு படுத்துவதற்கும் போருக்குத் தேவையான படைக்கலன்களையும் மற்ற தளவாடங்களையும் உருவாக்குவற்கு ஆகும் செலவைத் தாங்கக்கூடிய சக்தி உள்ளது என்றும் உறுதி கூறுகிறார். நான் எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு ஒரு போர்த்திட்டம் வகுத்து அடுத்த ஆலோசனைக் கூட்டத்தில் வைப்பதாக ஏற்றுக் கொண்டேன். என்னுடைய திட்டம் என் மனத்தில் கருவாகியிருக்கிறது. ஆனால் முழுமையாக உருவாக வேண்டுமானால் தங்களுடைய ஒத்துழைப்பும் தேவை."

"தளபதியாரே! நான் என்ன செய்யவேண்டும் என்று சொல்லுங்கள்! நான் என் திறமையை எல்லாம் பயன்படுத்தி எவ்வளவு நன்றாகச் செய்ய முடியுமோ செய்கிறேன். அது மட்டும் அல்ல! அரசரோ அமைச்சரோ சொல்லும் வண்ணம் இதைச் செய்யவேண்டும் என்று மட்டும் அன்றி அதை எவ்வாறு செய்யவேண்டும் என்று சொல்லும் தொழில் ஆற்றலும் தங்களுக்கு உண்டு. தங்களின் மதிநுட்பமும் என்னுடைய அனுபவமும் சேர்ந்தால் கட்டாயம் தங்கள் திட்டம் வெற்றிபெறும்." என்று "சாத்தனிடம் முழு நம்பிக்கையுடன் பேசினான் இளந்தத்தன்.

"என் திட்டம் மிகவும் எளிமையானது. பெரியபடை சிறிய படையைத் தோற்கடிக்கும் என்ற தத்துவத்தில் அமைந்தது, மொத்தமாக பல்லவனும், சேரனும், கொங்கனும் சேர்ந்து உருவாக்கப் போகும் படை, பாண்டியர் படையைவிடப் பெரியதாகவே இருக்கும் என்று வைத்துக் கொள்வோம். அந்த இருபடைகளும் மோதினால் என்னுடைய கணக்கின்படி பல்லவன் படை வெற்றிபெற வாய்ப்பு உள்ளது. ஏனென்றால் அது எண்ணிக்கையில் பெரியது. ஆனால் மூன்று மன்னர்கள் திரட்டும் படைகள் ஒன்றாகச் சேர்ந்தால் மட்டுமே அந்தப் படை நம் படையைவிடப் பெரியதாக இருக்கும். அவ்வாறு சேரமுடியாமல் போய்விட்டது என்று நினைத்துப் பாருங்கள்! பல்லவன் மட்டும் திரட்டும் படையைவிட நம் படை கட்டாயம் பெரியதாக இருக்கும்! அதே போல சேரன் படையையும் கொங்கன் படையையும் எடுத்துக் கொண்டாலும் நம் படை அவற்றைவிட மிகப் பெரியதாக இருக்கும். இந்த மூன்று படைகளுடனும் நாம் தனித் தனியாக மோதினால், ஒவ்வொரு போர்க்களத்திலும் நம் படை பகைவனின் படையைவிடப் பெரியதாக இருக்கும். ஆகவே நான் முன் குறிப்பிட்ட தத்துவத்தின் அடிப்படையில்

ஒவ்வொரு போரிலும் நாம்தான் வெற்றி பெறுவோம் இல்லையா?" என்று இளந்தத்தனிடம் வினவினான் சாத்தன்.

இளந்தத்தன் தலையாட்டினான். "தங்கள் திட்டமும் அதன் அடிப்படைத் தத்துவமும் எனக்கு நன்றாக விளங்குகின்றன. பல்லவன், சேரன், கொங்கன் ஆகிய மூவரும் திரட்டும் படைகள் ஓரிடத்தில் ஒன்று சேர்ந்து பெரும் படையாக உருவாகி நம்மைத் தாக்காமல், நாம்தடுக்கவேண்டும்! அவ்வாறு தடுக்க வேண்டுமானால் அவர்களுக்குள் நடக்கும் பேச்சு வார்த்தைகளும், ஓலைச் செய்திகளும் தாமதம் இன்றி உடனுக்குடன் நமக்குத் தெரியவேண்டும். அதுதான் நான் செய்ய வேண்டிய வேலை அல்லவா?" என்று சாத்தனிடம் திருப்பிக் கேட்டான் ஒற்றர் படைத் தலைவன்.

"அனுபவமும் திறமையும் நிறைந்த ஒற்றர் படைத் தலைவரிடம் அதிகமாக விளக்கவேண்டிய தேவை இல்லை என்பது எனக்குத் தெரியும். ஒரு குறிப்பைக் காட்டினால் போதும். எல்லாவற்றையும் புரிந்துகொள்வீர்கள் என்பதைக் காட்டிவிட்டீர்கள். பல்லவன் சேனாதிபதி விரைவிலேயே வஞ்சிக்கும் தகடூருக்கும் செல்வார் என்று சொன்னீர்கள் அல்லவா. முதலில் தகடூரில் பேச்சுவார்த்தைகள் நடக்கும். உங்களால் அதைப் பற்றிய விவரங்களை உடனுக்குடன் அறிய முடியும் என்பது எனக்குத் தெரியும். வஞ்சியில் சேரனுடன் நிகழும் பேச்சுவார்த்தையின் முழுவிவரங்களும் கிடைப்பதற்கு அவ்வளவு வசதி இல்லை. நமது ஒற்றர்கள் இதுவரை அங்குக் கால் ஊன்றவில்லை. இதற்குமுன் அதற்கான தேவையும் ஏற்படவில்லை. ஆயினும் பல்லவ சேனாதிபதி சேரனுடன் பேசிவிட்டுத் திரும்பும்பொழுது தகடூர்வழியாகத்தான் போவார். அதியனிடம் சேரனுடன் நடந்த ஒப்பந்தத்தைப் பற்றித் தெரிவிப்பார். ஆகவே அந்த விவரங்களையும் நீங்கள் அறிந்துகொள்ளமுடியும். அது நம்முடைய முதல் படிதான். சேனாதிபதியின் ஒரு பயணத்திலேயே எல்லா முடிவுகளும் எடுக்கமுடியாது. அவர் மன்னரிடம் எல்லா விவரங்களையும் அறிவித்தபின் அங்கிருந்து தூதர்கள் தகடூருக்கும் வஞ்சிக்கும் புறப்பட்டுச் செல்வர். அதை நாம் தவறாமல் கண்காணிக்க வேண்டும். தகடூர்தான் இந்த முக்கூட்டுப் படையெடுப்புத் திட்டத்தில் முக்கியமான இடம் பெறப் போகிறது. ஆகவே எப்பொழுதாவது காஞ்சிக்குப் போய்வந்தால் போதும். பெரும் பாலும் தகடூரிலிருந்தே நமக்குத் தேவையான தகவல்கள் கிடைக்கும் என்று நம்புகிறேன்" என்று இளந்தத்தனின் திறமையில் முழு நம்பிக்கை வைத்துப் பேசினான் சாத்தன்.

"ஆமாம் காஞ்சியில் நம்மிடம் சிக்கியுள்ள ஆளும் மிகமுக்கியமானவன். அறம்வளர்த்த நாதரை அவனைக் காப்பாற்ற வந்த கடவுளாகக் கருதுபவன். ஆகவே தகடூரிலிருந்தும், காஞ்சியிலிருந்தும் வரும் தகவல்களை ஒப்பிட்டுப் பார்த்து உறுதிசெய்ய முடியும். தகடூரில் நமக்குக் கிடைக்கும் தகவல்கள் முற்றும் உண்மையானவை என்பதை நாம் பலமுறை சோதனைசெய்து உறுதியாக்கிவிட்டோம். அதை நினைக்கும்பொழுது எவ்வளவு தூரப்பார்வையுடன் தாங்கள் திட்டம் தீட்டினீர்கள் என்பதை எண்ணி வியப்படைவதுண்டு நான். வறுமை கொடுமையாக வருத்திய நாள்களில் முன்யோசனையுடன் நாம் தொடங்கிய அறம்வளர்த்த நாதரின் மடம்தான் இப்பொழுது ஒரு தங்கச் சுரங்கமாக நமக்கு வற்றாமல் செய்திகளைத் தந்துகொண்டிருக்கிறது. இப்பொழுது காஞ்சியிலும் அதே மடத்தின் கிளை பயன்தரத் தொடங்கியுள்ளது. அன்று அதைச் செய்யவில்லையானால் இன்று நாம் எத்தனை ஒற்றர்களை ஏவினாலும் இவ்வளவு நம்பத்தகுந்த செய்திகளைப் பெற முடியாது" என்று ஒற்றறியும் பணியில் தேவைப்படும் நெடுந்தூரப் பார்வை சாத்தனுக்கு இயல்பாக அமைந்திருந்ததைப் புகழ்ந்தான் ஒற்றர்படைத் தலைவன்.

"அன்று அதியன் நம்மைப் பகைத்துக் கொண்டதால் அவனை ஒடுக்கவேண்டும் என்ற நோக்கத்தில்தான் தகடூரை மையமாக்கி நாம் செயலாற்றினோம். இப்பொழுது அது இவ்வளவு பெரிய முக்கூட்டுப் பகைவர்களின் செய்கைகளுக்கும் மையப்புள்ளியாகிவிட்டது. அதை நமது பாக்கியம் என்று தான் சொல்ல வேண்டும்" என்று அடக்கமுடன் பேசினான் சாத்தன்.

"சரி நான் நாளையே புறப்படுகிறேன். எனக்கு வேறு ஒரு யோசனையும் தோன்றுகிறது. சொல்லட்டுமா?" என்று வினவிய இளந்தத்தனை வியப்புடன் நோக்கினான் சாத்தன்.

"கட்டாயம் சொல்லுங்கள். என்ன தயக்கம்?" தாங்கள் மதுரையில் இருப்பதைத்தான் விரும்புவீர்கள் என்பது எனக்குத் தெரியும். அரசர்கூடத் தாங்கள் அவருக்குப் பக்கத்தில் இருப்பதையே விரும்புவார். ஆனால் இப்பொழுது மாறன் எயினன் உறையூரிலிருந்து மதுரைக்கு வந்து அமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டதால், தாங்கள் மீண்டும் உறையூர் படையின் தலைமையை ஏற்றுக் கொள்வது நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது. அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. முதல் காரணம் அடுத்து வரும் போரில் உறையூர்ப்படை சென்றமுறை பெண்ணாகடப் போரில் நடந்தது போலவே மிக

முக்கியமான பங்கு வகிக்கவேண்டிய கட்டம் வரும் என்பது உறுதி. ஏனென்றால் வடக்கிலிருந்தும், வடமேற்கிலிருந்தும் தான் பகைவர்கள் நுழையப்போகிறார்கள். தாங்கள் உறையூர் படைக்குத் தலைமை ஏற்றால் அதை விரிவுபடுத்துவதோடு, சிறந்த போர்ப் பயிற்சியும் கொடுக்க முடியும். இரண்டாவது காரணம் என்னுடைய சுயநலமும் கலந்தது. எனக்கு அடிக்கடி தங்களைச் சந்தித்துப் பேசவேண்டிய கட்டாயம் நேரக்கூடும். நான் மதுரைக்கு வந்து போவது என்றால் பத்து நாள் வீணாகும். தாங்கள் உறையூரில் இருந்தால் மூன்று நாளில் முடியக்கூடியது அது. என் கருத்தோடு தாங்கள் உடன்பட்டால் மன்னரிடம் கலந்துபேசி விரைவிலேயே உறையூருக்கு வருவது மிகவும் பயன்தரும் என்று நினைக்கிறேன்" என்று சாத்தனின் அறிவுரை தனக்கு எவ்வளவு தேவைப்படுகின்றது என்பதை வெளிப்படையாகவே எடுத்துக்காட்டினான் இளந்தத்தன்.

சாத்தனுக்கும் இளந்தத்தனின் கருத்து வெறும் முகப் புகழ்ச்சியாகத் தோன்றவில்லை. பல முடிவுகளையும் விரைவாக எடுக்கவேண்டிய கட்டங்களில் இளந்தத்தனுக்கு வழி காட்டியாக அருகில் இருப்பது மிகவும் நல்லது என்று அவனுக்கும் தெரியும் இளந்தத்தனின் யோசனை வரவேற்கத் தக்கதே. மதுரையை விட உறையூர் மையப் புள்ளியின் அருகில் இருக்கிறது என்பது உண்மை: தொலைவில் உள்ள மதுரையில் வசித்துக் கொண்டு செய்திகள் வரும் வரை காத்திருப்பதை விட உறையூரில் வசித்தால் விரைவில் நடவடிக்கை எடுக்க முடியும். அவசரமான தேவை ஏற்பட்டால் அவனே மாறுவேடம் பூண்டு தகடூருக்குச் சென்று இளந்தத்தனுக்கு உதவிசெய்ய முடியும் என்பது மற்றொரு வசதி. மன்னர் இணங்குவாரா என்பது மட்டுமன்றி தேவந்தியைப் பிரிந்து வாழவேண்டிவரும் என்பதும் அவனை ஒரு கணம் தயங்கச் செய்தது. ஆனால் கடமையாற்றுவது தான் முதல் கொள்கை என்பதை அவனால் மறக்க முடியவில்லை. தேவந்தி என்றும் அவனுக்காவே வாழ்பவள். தன் கடமையை நிறைவேற்றுவதற்காகச் சில நாள்கள் அவளைப் பிரிந்து வாழ நேர்ந்தானல் அவளே அதை ஏற்றுக் கொள்வாள். நிலைமையை விளக்கினால் மன்னரும் அவனை உறையூருக்கு அனுப்ப இசைவார் என்று நம்பினான் சாத்தன்.

"உங்கள் யோசனையை நான் ஏற்றுக் கொள்கிறேன். நீங்கள் சொன்னதுபோல் ஓரிரு சிக்கல்கள் இருப்பினும் அவற்றை எளிதில் நீக்கிவிடலாம். அமைச்சர் மாறன் எயினன் புதியவர் ஆகையால் மன்னர் பலவற்றிற்கும் என்னோடு கலந்து ஆலோசிக்கிறார். அதனால் என்னை உறையூருக்கு அனுப்பத் தயங்குவார். ஆனால்

நாம் உருவாக்கிக்கொண்டிருக்கும் திட்டங்களை விளக்கி, நான் உறையூரில் வசிப்பதால் ஏற்படும் நன்மைகளை எடுத்துரைத்தால் ஏற்றுக் கொள்வார் என்பது உறுதி. நீங்கள் தகடூருக்குச் சென்று உங்கள் பணியைத் தொடங்குங்கள். உலகணனையும் தங்கவேலனையும் மற்ற இளைஞர்களையும் முடுக்கி விடுங்கள். நான் எப்படியும் ஒரு மாதத்திற்குள் உறையூருக்கு வரமுடியும் என்று நம்புகிறேன்" என்று கூறிய சாத்தன் வேறு ஒன்றையும் நினைவு கூர்ந்தவன்போல் மேலும் தொடர்ந்தான்.

"ஓலை எழுத்தில் மாற்றம் செய்யும் இளைஞன், அவன் பெயர் உத்தமன் என்று நினைக்கிறேன். உங்களிடம் இருக்கிறான் அல்லவா?"

"இருக்கிறான். ஆனால் அவன் தகடூரில் இல்லை. மதுரையில்தான் இருக்கிறான். ஏன்? அவனுக்கு ஏதாவது வேலை வைத்திருக்கிறீர்களா?"

"இப்பொழுது இல்லை. ஆனால் அவனைத் தகடூரிலேயே வைத்துக் கொள்ளுங்கள். நாம் அவனைப் பயன்படுத்தவேண்டிய தேவை வரலாம்."

இளந்தத்தன் சாத்தனின் முகத்தை உற்று நோக்கினான். பின் ஒரு புன்னகையுடன் தலையாட்டினான்.

"புரிந்து கொண்டேன் தளபதியாரே! புரிந்துகொண்டேன். இன்றே அவனுக்குச் செய்தி அனுப்புகிறேன். விரைவில் தகடூருக்கு வந்து சேரும்படி" என்றான்.

"அப்படியே செய்யுங்கள். நாம் விரைவிலேயே சந்திப்போம்! எங்கு என்பதை இப்பொழுது சொல்வதற்கில்லை" என்று கூறி ஒற்றர்படைத் தலைவனிடம் விடைபெற்று மடத்தைவிட்டு வெளியேறினான் சாத்தன்.

அன்று மாலையில் பூங்காவில் இளவரசியுடன் உரையாடிய பொழுது அவளிடம் செய்தியை அறிவிப்பதற்காகத் தொடக்கமிட்டான். அவளைத் திடுக்கிட வைக்கும் பிரிவுச்செய்தியை இறுதியாகத் தெரிவிக்க முடிவுசெய்து நல்ல, செய்தியை முதலில் கூறினான்.

"உன்னுடைய அழகான கழுத்தில் ஒளிவீசும் இந்தப் பொன் மாலையைப் பார்க்கும் பொழுது அதற்கருகில் ஒரு சிறிய மஞ்சள் கயிறு இருந்தால் இன்னும் எவ்வளவு எழில்பொங்கும் என்று நான் எண்ணிப் பார்ப்பேன். அதற்கான வாய்ப்பு இப்பொழுது நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று நினைக்கிறேன்" என்று

அவளுடைய அழகைப் புகழ்ந்து பேசி ஆர்வத்தைத் தூண்டினான்.

கொங்குநாட்டு மன்னன் அதியனைப் போரில் வென்று, உயிருடன் பிடித்துக் கொண்டுவந்து மதுரைச் சிறையில் அடைத்தபின்னரே தேவந்தியை மணம் புரியப் போவதாகச் சாத்தன் சபதம் செய்தது எப்பொழுதும் அவளுடைய மனத்தில் உறுத்திக்கொண்டிருந்ததால், சாத்தன் எதிர்பார்த்தவண்ணமே அவள் ஆவலுடன் கேட்டாள்.

"ஏன்? கொங்கு நாட்டின்மீது படையெடுக்கப் போகிறீர்களா?"

"நாம் கொங்கு நாட்டின் மீது படையெடுக்க வில்லை. கொங்கு வேந்தன் நம் மீது படை யெடுக்கப் போகிறான்."

"அதியனுக்குப் பைத்தியம் முற்றிவிட்டதா? அல்லது உங்கள் சபதத்தை நிறைவேற்றுவதற்காக அவன் தன் உயிரைத் தியாகம் செய்கிறானா?"

"அவன் பைத்தியம் பிடித்தவன் என்பது உண்மையானாலும், மதுரைமேல் படையெடுத்து வரும் அளவுக்கு மடையன் அல்ல! பல்லவனுடன் சேர்ந்து நம்மைத் தாக்குவதற்கு முயற்சிசெய்கிறான்.

"ஏன்? பெண்ணாகடப் போரிலிருந்து எதையும் கற்றுக்கொள்ளவில்லையா பல்லவனும் அதியனும்?"

"கற்றுக் கொண்டார்கள் என்றுதான் நினைக்கிறேன். அதனால்தான்இந்தமுறைசேரனையும்துணைக்குஅழைத்திருக்கிறார்கள்."

இதுவரை ஏளனமாகப் பேசிய இளவரசியின் முகத்தில் இப்பொழுது சற்றே கவலை தோன்றியது. "அப்படியானால் அது நமக்குப் பெரிய தலைவலியாகுமே. போரின்றி அமைதியாக வாழவே முடியாதா? தாங்கள் செய்த சபதம்தான் தங்களைப் போருக்குத் தூண்டுகிறது என்று எண்ணினேன் நான். என் திருமணம் நீண்டாலும் போரைத் தவிர்க்கவேண்டும் என்றுகூட என் மனம் எண்ணியது. இப்பொழுது ஏன் இந்தப் போர்வெறி பல்லவனுக்கு ஏற்பட்டது?"

"பெரும் எதிர்பார்ப்புடன் மதுரையைக் கைப்பற்ற படையுடன் வந்து, காவிரிக் கரையிலேயே தோல்வியடைந்து காஞ்சிக்குத் திரும்பவேண்டி வந்த அவமானத்தைப் பல்லவன் மறக்கவில்லை. அதற்குப் பழிவாங்கும் நோக்கத்துடன்தான் ஊர்வசியை மதுரைக்கு அனுப்பி உளவறிந்தான். நாம் இப்பொழுது ஒரு போரை எதிர்பார்க்கவில்லை என்று ஊர்வசி தெரிவித்ததை நம்பி,

நம்மீது படையெடுக்கத் திட்டமிட்டுள்ளனர். ஆனால் இம்முறையும் ஒரு பெரிய ஏமாற்றம்தான் அவர்களுக்குக் காத்திருக்கிறது" என்று தன்னம்பிக்கை மேலிடப் பேசினான் சாத்தன்.

"ஆனாலும் பல்லவன், சேரன், கொங்கன் என்று மூவரும் ஒன்று சேர்ந்தால் மிகப்பெரிய படையைத் திரட்ட முடியுமே! நம்மால் அவர்களை எதிர்த்து நிற்க முடியுமா?" என்று தயக்கத்துடன் வினவினாள் தேவந்தி.

"முடியும்! அவ்வளவு பெரிய படை ஒன்றாகத் திறள்வதற்கு முன்னரே நாம் அவர்களுடன் மோதவேண்டும். அதாவது வருமுன் காப்பதே அறிவுடைமை. அதற்கான நடவடிக்கைகளை இப்பொழுதே நாம் தொடங்கி விட்டோம். முதல் கட்டமாக நம் நிலைப்படைகளை வலுப்படுத்திப் போர்ப்பயிற்சி அளிக்கப் போகிறோம். உறையூர், கரவந்தபுரம், விசலூர், நன்னிலம் ஆகிய நான்கு இடங்களிலும் இந்த வேலை உடனே தொடங்கும். மதுரையில் சேனாதிபதி நேரடியாகவே ஐயாயிரம் பொறுக்கி எடுத்த வீரர்களுக்குப் பயிற்சியளிப்பார். நான் அதே வேலையை உறையூரில் செய்யப் போகிறேன்" என்று மெல்ல வெளிப்படுத்தினான் சாத்தன்.

"நீங்கள் உறையூருக்குப் போகிறீர்களா?" அவளுடைய வினாவில் வியப்பைவிட வேதனை மிகுதியாக இருந்தது என்பதை அவன் புரிந்துகொண்டான்.

"ஆமாம். நான் இரண்டாண்டு காலம் அங்கேயே வாழ்ந்து வீரர்களுடன் நெருங்கிப் பழகி, தீவிரப் பயிற்சி யளித்த படை அல்லவா அது? இன்னும் இரண்டாயிரம் இளைஞர்களையும் சேர்த்து ஐயாயிரம் வீரர்களைக் கொண்ட ஒரு சிறப்புப் படையாக அதை உருவாக்கப் போகிறேன். அது மட்டுமன்று உறையூரிலிருந்து தகடூர் அதிக தூரம் இல்லை. அதியனின் ஒவ்வொரு அசைவையும் கண்காணித்து, தக்க நேரத்தில் அவனை எதிர்பாராமல் தாக்கவும் வசதி ஏற்படலாம். அதில்தானே, இந்த நாட்டின் நலத்தோடு நம் இருவருடைய வாழ்வின் நலமும் அடங்கியிருக்கிறது?" என்று தேவந்தியின் மனத்தில் ஏற்படும் புண்ணிற்கு மருந்து தடவினான் சாத்தன்.

"உண்மைதான். தனிமையில் வாழ்ந்து பழகிவிட்டேன் நான்! இன்னும் சில நாள் மீண்டும் அவ்வாறே ஆகட்டும். அதன்பின் பிரியமாட்டோம்" என்று மனம் தேறினாள் அவள்.

35. அறிந்த தகவலும்அறிவித்த செய்தியும்

சாத்தனும் இளந்தத்தனும் எதிர்பார்த்ததுபோல் சாத்தனை உறையூருக்கு அனுப்புவதற்குப் பாண்டியன் நெடுஞ்சடையன் தயங்கினார்.

"சாத்தா! அமைச்சர் மாறன்காரி உடல்நலம் குன்றி அவருடைய முழுகவனத்தையும் அரசுப்பணிகளில் செலுத்தமுடியாத நிலை ஏற்பட்டபொழுது நீ என் அருகில் இருந்ததால் எந்தக்குறையும் வராமல் எல்லாம் ஒழுங்காக நடந்தது. உன்னிடம் சில பொறுப்புகளை ஒப்படைப்பதற்கு அவரே முன்வந்தார். இப்பொழுது நம்மை நோக்கி வரும் பகைவரின் பல நடவடிக்கைகளையும் உன் யோசனையைக் கேட்டு எடுக்கிறேன். மாறன் எயினன் நல்லவர். திறமையும் உள்ளவர். ஆனால் அனுபவம் குறைந்தவர். மேலும் உன்னிடம் பேசுவது போல் மனம்விட்டு அவரிடம் பேசுவது கடினம் எனக்கு. அது போலவே நீ என்னிடம் மனம் திறந்து பேசுவதுபோல் அவர் என்னோடு பேசத் தயங்குவார். இவை எல்லாவற்றையும் சிந்தித்துப் பார்க்கும் பொழுது நீ மதுரையில் இருப்பதுதான் நல்லது என்று நான் நினைக்கிறேன்." என்று காரணம் கூறினான் அரசன்.

"அரசே! நான் சென்ற ஆலோசனைக் கூட்டத்தில் ஏற்றுக்கொண்டபடி ஒரு போர்த்திட்டம் உருவாக்கியுள்ளேன். அதை என் அண்ணனான சேனாதிபதியிடம் எடுத்துரைத்து நாங்கள் இருவரும் நெடுநேரம் வாதாடினோம். இறுதியில் அவரும் நான் தகடூருக்கு மிக அருகில் இருந்தால்தான் அந்தத் திட்டத்தை வெற்றி கரமாக நடத்த முடியும் என்று ஒத்துக்கொண்டார். இன்னும் ஆறுமாதத்திற்குள் படைதிரட்டி முடித்து, பயிற்சியளித்து, போரும் தொடங்க வேண்டும் என்பது பல்லவ மன்னனின் ஆணை என்பது உறுதியாகத் தெரிந்துவிட்டது. அதற்கான தீவிர நடவடிக்கைகள் காஞ்சியிலும் வஞ்சியிலும் தகடூரிலும் தொடங்கும். பல்லவ சேனாதிபதி தன் பயணத்தைத் தொடங்கிவிட்டாரா என்று இதுவரை தெரியவில்லை. இன்னும் இரண்டு மூன்று நாள்களில் அது தெரிய வரும். அதன்பின் விரைவில் மற்ற வேலைகள் தொடங்கும். ஆறு மாத்தில் முடியாவிட்டாலும் எட்டு அல்லது ஒன்பது மாதங்களில் அதாவது பங்குனி, சித்திரை மாதங்களில் நாம் போர்க்களத்தில் இறங்கியே ஆக வேண்டும். இந்த முக்கூட்டுப்

படையை நாம் முறியடித்துவிட்டால் அதற்குப்பின் நாம் அமைதியாக வாழலாம். நானும் தங்களுடன் மதுரையிலேயே வாழமுடியும். தாங்கள் ஆணையிட்டால் அடுத்த இரண்டு நாளில் நான் இங்கு வந்து சேரமுடியும். அதுபோலவே தேவை ஏற்பட்டால் விரைவிலேயே தகடூருக்கும் செல்ல முடியும். நான் முக்கியமான முடிவுகளை எல்லாம் தங்கள் அனுமதி பெற்றபின்னரே எடுப்பேன். சற்றும் தாமதிக்கக்கூடாத சில அவசரமான விரைவு நடவடிக்கைகளை மட்டும் நானே எடுப்பேன். அதற்கு இளந்தத்தனால் முடியாது. எனக்குத் தங்களிடம் உள்ள உரிமை அவருக்கு இல்லாததே முக்கியக் காரணம். ஆகவே நான் எவ்வளவு விரைவில் உறையூருக்குச் செல்கிறேனோ அவ்வளவு நல்லது" என்று மன்னரிடம் மன்றாடினான் சாத்தன்.

"சரி நாளையே அமைச்சரையும் சேனாதிபதியையும் அழைத்துக் கூட்டம் நடத்துவோம். நீ தெரிவித்தவாறு உன்னுடைய போர்த்திட்டத்தை விளக்கு. எல்லோருமாகச் சேர்ந்து ஒரு முடிவுக்கு வருவோம்" என்று தன் முந்திய நிலையிலிருந்து சற்று இறங்கி வந்தான் நெடுஞ்சடையன். சாத்தன் அதற்கு இசைந்து மகிழ்ச்சியுடன் சென்றான்.

அடுத்த நாள் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் சாத்தன் தன்னுடைய திட்டத்தை விளக்கி உரை ஆற்றினான். பெரியபடை சிறிய படையை வெல்லும் என்ற அடிப்படைத் தத்துவத்தை ஆதாரமாக்கிப் பல்லவன், சேரன், கொங்கன் ஆகிய முக்கூட்டுப் பகைவர்கள் திரட்டும் படையை ஓரிடத்தில் இணையாமல் தடுத்து அவர்களுடன் தனித்தனியாகப் போர் புரியக் கூடிய சூழ்நிலையை எவ்வாறு உருவாக்க முடியும் என்பதை அவன் எடுத்துக்காட்டினான். எத்தனையோ போர்களில் பங்கு பெற்றும் படை நடத்தியும் பெரும்பாலும் வெற்றியும் ஓரிரு தோல்விகளும் கண்டிருந்த சேனாதிபதி சாத்தன் கணபதிகூட தன்னுடைய தம்பியின் மதிநுட்பத்தையும், ஒற்றர்படையைக் கையாளும் ஆள்வினையையும் கண்டு வியந்து பாராட்டினார்.

"அரசே! நானே என் தம்பியிடம் இப்பொழுது சில புதிய முறைகளைக் கற்றுக்கொள்கிறேன். சாத்தனின் திட்டம் மிக அருமையான திட்டம். ஆனால் அதை நிறைவேற்றுவதற்கு அவன் இளந்தத்தனுடன் இடையறாமல் தொடர்பு வைத்திருந்தால்தான் முடியும். ஆகவே அவனை உறையூருக்கு அனுப்புவதே உகந்தது என்று கருதுகிறேன். உறையூர் நிலைப்படையையும் இன்னும் சற்று விரிவாக்கலாம். சாத்தன் விளக்கியவண்ணம் தகடூர்ப்

படையை எதிர்ப்பதற்கு உறையூர்ப்படையே போதுமானது என்ற அளவுக்கு அதைப் பெரிதாக்கினால் முக்கூட்டுப் படையை முறியடிப்பதற்கு அது மிகவும் உதவியாக இருக்கும்" என்று சாத்தனை ஆதரித்துப் பேசினார் சேனாதிபதி. அமைச்சர் மாறன் எயினனும் அவ்வாறே பேச, மன்னனும் ஏற்றுக்கொண்டான். சாத்தன் விரைவிலேயே உறையூர் நிலைப்படையின் தலைமை ஏற்க உறையூருக்குப் புறப்படுவான் என்று உறுதிசெய்யப்பட்டது.

புறப்படுவதற்குமுன் சாத்தன் தேவந்தியிடம் விடைபெறச் சென்றான். அவளிடம் அன்புடன் மொழிந்தான் "தேவந்தி! நான் முன்பு உறையூரில் வாழ்ந்ததுபோல் அல்ல. அன்று உறையூர் நிலைப்படை வளர்ச்சிமட்டுமே என் வேலை. இப்பொழுது நான் சேனாதிபதிக்கு அடுத்த பதவியில் உள்ள தளபதி. உறையூர் வாழ்வின் ஒரு பகுதிதான் அந்த நிலைப்படை. வேறு பல பொறுப்புக்களும் என்னிடம் தரப்பட்டுள்ளன. ஆகவே நான் அடிக்கடி மதுரைக்கு வந்து மன்னரையும், அமைச்சரையும் சேனாதிபதியையும் சந்திக்கவேண்டும். அப்பொழுது என் வாழ்வின் ஒளியாகிய உன்னையும் கண்டு பேசமுடியும். ஆகவே நாம் தொலை தூரத்தில் வாழ்ந்தாலும் சந்திப்பிற்கு நீண்ட இடைவெளி வராது."

அன்னை மகாராணியையும் கண்டு வணங்கினான் "மகாராணி! தங்களிடம் ஆசிபெறுவதற்காகவே வந்தேன். நான் ஏற்றுக் கொண்ட பணி நிறைவேறும்பொழுது பாண்டிய நாடே அமைதி பெறும். திரும்பி வந்தவுடன் தங்கள் ஆசியுடன் நான் இளவரசியின் கைபிடிப்பேன். நான் வெற்றியடைய எனக்கு ஆசி வழங்குங்கள்!" என்று வேண்டினான்.

"சாத்தா! நெடுஞ்சடையன் நேற்று என்னிடம் தெரிவித்தான். நீ சில முக்கியமான வேலைகளைச் செய்து முடிப்பதற்காக உறையூருக்குச் செல்கின்றாய் என்று! நீ வெற்றி பெறுவது உறுதி தேவந்திக்கு தாலிகட்டுவதும் உறுதி. போய் வா! வெற்றிவீரனாகத் திரும்பிவா" என்று வாழ்த்தி அனுப்பினாள் பூசுந்தரி மகாராணி.

சாத்தன் உறையூருக்குச் சென்று நிலைப்படையின் தலைமைப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட அன்றே இளந்தத்தன் விடுத்த தூதன் அவனிடம் ஓர் ஓலையைக்கொண்டு வந்து கொடுத்தான். மதுரையிலிருந்து புறப்படும்முன்தான் உறையூருக்கு வந்தடையும் நாள் குறிப்பிட்டு, தனக்குத் தெரிவிக்கவேண்டிய தகவல் எதுவேனும் இருந்தால் உறையூருக்கு ஓலை அனுப் புமாறு சாத்தன் இளந்தத்தனுக்குச் செய்தி தெரிவித்ததன் விளைவே அந்த ஓலை.

"நான் நேரில் சொன்னவாறு பல்லவ சேனாதிபதி நேற்று தகடூருக்கு வந்தார். அதியனைச் சந்தித்துப் பேசிவிட்டு இன்று வஞ்சிக்குப் புறப்பட்டுச் சென்றார். ஆறு மாதத்திற்குள் ஐயாயிரம் வீரர்கள் கொண்ட படைதிரட்ட வேண்டும் என்றும், இந்த முறை பாண்டியனைத் தோற்கடித்து மதுரையைக் கைப்பற்றுவது உறுதி என்றும் பல்லவ மன்னர் அறிவித்திருக்கிறார். சேரனைக் கண்டு திரும்பும் வழியில் மீண்டும் அதியனைச் சந்திப்பதாக வாக்களித்துவிட்டுப் போயிருக்கிறார். இரண்டு குதிரைகள் பூட்டிய தேரில், ஆறு குதிரைவீரர்களின் பாதுகாப்போடு பயணம் செய்கிறார்" என்று ஒற்றர் படைத்தலைவன் சுருக்கமாக எழுதி அனுப்பிய ஓலையை ஊன்றிப் படித்தான் சாத்தன். எதிர்பார்த்த வண்ணமே நிகழ்ச்சிகள் நடந்தேறுகின்றன என்று திருப்தியடைந்தான்.

உறையூர் நிலைப்படையின் துணைத்தளபதியான பார்த்திபன் திறமை வாய்ந்த இளைஞன். அவன் சோழ நாட்டைச் சார்ந்தவன். எனினும், சோழநாடு பாண்டியரின் ஆதிக்கத்தில் சிற்றரசாக இருந்த காலம் ஆதலால், பாண்டியர் படையில் சேர்ந்து பணியாற்றி வந்தான். சாத்தன் உறையூர்ப்படையின் தலைவனாக இருந்தபொழுது அவனுடைய திறமையையும் வீரத்தையும் மெச்சி அவனைப் படையின் துணைத்தளபதியாக நியமித்தான். அவனுக்குப்பின் மாறன் எயினன் படையின் தலைமைப் பொறுப்பை ஏற்ற நாள்களிலும் அவருக்கு உதவியாக இருந்தவன் பார்த்திபனே. சாத்தன் மறுபடியும் வந்து தலைமை ஏற்றவுடன் பார்த்திபனிடம் கூறினான்" பார்த்திபா! நான் அதிகநாள் இங்கே இருக்கமாட்டேன். உன்னையே இங்குப் படைத்தலைவன் ஆக்கவேண்டும் என்றுதான் நான் முடிவு செய்திருக்கிறேன். மன்னரும் அதற்கு இணங்குவார். நான் வந்திருப்பதன் முக்கிய நோக்கம், உறையூர் நிலைப்படையை இன்னும் சற்று விரிவாக்குவதும், தகடூரிலிருந்து விரைவில் தகவல்கள் அறிந்து நடவடிக்கை எடுப்பதும்தான்! அதில் முதல் வேலையான படையை விரிவாக்கும் பணியை உன்னிடம் ஒப்படைக்கப் போகிறேன். இப்பொழுது இந்த நிலைப்படையில்மூவாயிரம் பேர் உள்ளனர். ஏறத்தாழ இரண்டாயிரம் வீரர்கள் பாண்டிய நாட்டுப் பகுதியையும் ஆயிரம் பேர் சோழநாட்டுப் பகுதியையும் சேர்ந்தவர்கள். இன்னும் இரண்டாயிரம் வீரர்களை இந்தப் பகுதியிலிருந்தே திரட்டவேண்டும். ஆனால் நாம் படை திரட்டுகிறோம் என்பதை விளம்பரம் செய்யாமல் வேலைசெய்ய வேண்டும். காவிரிக் கரையைச் செப்பனிடுவதற்காகவும், புதிய கால்வாய்கள் வெட்டுவதற்கும் ஆள் எடுப்பதாகவே மக்கள் எண்ண வேண்டும். புதிதாகச் சேர்க்கும் வீரர்களைப் பழைய

வீரர்களுடன் கலந்து போர்ப் பயிற்சி அளிக்கவேண்டும். நானும் நீயும் சேர்ந்து பயிற்சி அளித்து, பெண்ணாகடப் போரில் மிகச் சிறப்பாகப் போர் புரிந்தவர்கள் அவர்கள். இந்த வேலையை நீயே முற்றிலும் செய்யவேண்டும். நான் அடிக்கடி மதுரைக்குப் போவேன். உன்னிடம் மட்டும், நான் தகடூருக்குப் போவதாக இருந்தால் உண்மை சொல்வேன். மற்றவர்கள் யாராக இருந்தாலும், நான் இங்கு இல்லையென்றால் மதுரைக்குப் போவதாகவே நினைக்க வேண்டும்" என்று செய்ய வேண்டிய வேலையையும், அதைச் செய்யவேண்டிய முறையையும் விளக்கிக் கூறினான் சாத்தன்.

"தளபதியாரே! ஒன்றும் அறியாத கற்றுக் குட்டியாக இருந்த எனக்குப் பயிற்சியளித்து ஊக்குவித்து, இரண்டு ஆண்டுகளில் படைத் தலைவனாக்கியவர் தாங்கள். மீண்டும் தாங்கள் உறையூருக்கு வந்ததை என்னுடைய பாக்கியமாகக் கருதுகிறேன் நான். இன்னும் எவ்வளவு தங்களிடமிருந்து கற்றுக்கொள்ள முடியுமோ அவ்வளவும் கற்கவேண்டும் என்பதே என் விருப்பம்! தங்கள் கட்டளைப்படி எல்லா வேலைகளையும் செய்து முடிப்பேன்" என்று உறுதி கூறினான் பார்த்திபன்.

பார்த்திபன் உறையூர் நிலைப்படைக்கு ஆள்சேர்க்கும் வேலையைச் செம்மையாகச் செய்து முடிப்பான் என்று சாத்தனுக்குத் தெரியும். ஆகவே அதைவிட முக்கியமானதாக அவன் கருதிய ஒற்றறியும் பணியில் முழுவீச்சாக இறங்கினான். பகைவனின் பாளையத்தில் ஏற்படும் மாற்றங்களையும் நிகழ்ச்சிகளையும் அறிந்து கொள்வது ஒற்றறியும் கலையின் ஒரு பகுதியே. தவறான சில செய்திகளை வெளியே பரவ விட்டு ரகசியமாகப் பகைவர்களுக்கு எட்டுமாறு திணித்தும் அவர்களை நம்பவைப்பதும், அதனால் விளையக்கூடிய பயனை அறுவடை செய்வதும் அந்தக் கலையின் மற்றொரு பகுதியாகும். முதல் பகுதியைவிட மிகக் கடினமானது இரண்டாவது பகுதி. ஏனெனில் அதைப்பற்றி விசாரணை செய்து தவறானது என்பது தெரியவந்தால் பகைவன் விழிப்படைந்து விடுவான். மேலும் அத்தகைய செய்தியை அறிவித்தவர்கள் மீதும் ஐயம் தோன்றி அவர்களுடைய உயிருக்கே ஆபத்து ஏற்படலாம். இந்தக் கருத்துகளையெல்லாம் மனத்தில் கொண்டு விவரமாக ஓர் ஓலை எழுதி, தன்னுடைய சிறப்புத் தூதனான மணிவண்ணனிடம் கொடுத்து அனுப்பினான் சாத்தன். ஓலையை ஊன்றிப் படித்த இளந்தத்தன் தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டான். இந்தச் சாத்தன் எவ்வாறெல்லாம் சிந்தித்துச் செயல்படுகின்றான் என்று வியப்பும்

பெருமையும் அடைந்தான் அந்த ஒற்றர்படைத் தலைவன். தங்கவேலனை அழைத்து அவனிடம் விளக்கமாக உரைசெய்தான்.

தகடூர் அறம்வளர்த்த நாதர் மடத்தின் தலைமைச் சீடனான தங்கவேல் தன்னுடைய நண்பரான சுந்தர மூர்த்தியிடம் அடுத்த நாள் பேசிக்கொண்டிருந்தான். மாலையில் பிரார்த்தனையும் பக்திப்பாடல்கள் இசைத்தலும் முடிந்து பக்தர்கள் கலைந்து சென்ற பிறகு நண்பர்கள் இருவரும் அளவளாவுவது வழக்கம்.

"அரண்மனை வாயிலில் பெரிய பரபரப்பு காணப்பட்டதே இன்று பிற்பகலில். ஒரு தேரும், குதிரைப் படை வீரர்களும் உள்ளே நுழைவதைப் பார்த்தேன்" என்று சுந்தர மூர்த்தியின் வாயைக் கிளறினான் தங்கவேலன்.

"ஆமாம். பல்லவ சேனாதிபதி சில நாள்களுக்கு முன்பு வந்து இங்கு ஒரு நாள் தங்கி, அடுத்த நாள் வஞ்சி நகருக்குப் போனார் அல்லவா? இன்று அவர் திரும்பி வந்தார். அதுதான் பரபரப்பு. நமது சேனாதிபதி அவரை வரவேற்று அரசரிடம் அழைத்துச் சென்றார்".

"அப்படியா! வஞ்சியில் என்ன நடந்ததாம்?"

"சேரமன்னரும்பாண்டியனைஎதிர்த்துப்போராடச்சம்மதித்தாராம். பாண்டியன் வேணாட்டில் செய்த கொடுமைகளைக் கேட்டறிந்த சேரமன்னன், பாண்டியனை அடக்கிவைக்காவிட்டால் அவன் சேரநாட்டின்மீது படையெடுப்பான் என்று அஞ்சுகிறார்".

"அப்படியானால் இப்பொழுது கொங்கு நாட்டிலும், பல்லவ நாட்டிலும் நடப்பதுபோல் சேர நாட்டிலும் படைதிரட்டும் வேலை தொடங்கும் என்று சொல்" என்று தன் கருத்தை வெளியிட்டான் தங்கவேலன்.

"அதைப் பற்றி விவரமாகத் தெரியவில்லை. ஆனால் பல்லவ மன்னருக்கும், கொங்கு மன்னருக்கும் துணையாகச் சேரமன்னரும் படை அனுப்புவார் என்பது உறுதியாகிவிட்டது" என்று தான் அறிந்த செய்தியை மட்டும் உறுதிப்படுத்தினான் சுந்தர மூர்த்தி.

தங்கவேலன் பெருமூச்சுவிட்டான். "எனக்கோ என் சுவாமிக்கோ சொந்த ஊரோ நாடோ இல்லை. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று தமிழகம் முழுவதும் சொந்த நாடாகக் கருதுபவர்கள் நாங்கள். ஆயினும் பாண்டிய நாட்டில் பிறந்தவர்கள். அதனால்தான் மனத்தில் கவலை தோன்றுகிறது. இப்படியாகப் பல்லவனும் சேரனும் கொங்கனும் ஒன்று சேர்ந்து மதுரையைத்

தாக்க முயலும் நேரத்தில் அங்கே பாண்டியன் அரண்மனையில் பெரியகுழப்பம் நிலவுகிறது. அதை நினைத்தாலே எரிச்சல் வருகிறது" என்று அலுப்போடு பேசினான் தங்கவேலன்.

"ஏன்? என்ன குழப்பம் பாண்டியன் அரண்மனையில்?" ஆர்வமுடன் வினவினான் சுந்தர மூர்த்தி.

"அதை ஏன் கேட்கிறாய்! அரசனுடைய நடவடிக்கைகள் பலவும் பிடிக்காத அமைச்சர் மாறன் காரி மனம் நொந்து போனார். அரசன் அமைச்சரின் அறிவுரைக்குச் செவிசாய்க்காமல் தன்னிச்சையாகச் செயலாற்றும்போது தன்னைப் போன்ற அனுபவம் மிக்க அமைச்சருக்கு அங்கே வேலை இல்லை என்று முடிவு செய்து, பதவியிலிருந்து ஓய்வுவேண்டும் என்று அரசரிடம் வேண்டினார். அரசனும் அதுவே நல்லது என்று எண்ணி அவருக்கு ஓய்வு கொடுத்து அனுப்பிவிட்டான். நெடுஞ்சடையனின் தந்தை காலத்திலிருந்தே அமைச்சராக இருந்து பாண்டியனுக்குப் பெரும்தொண்டு செய்தவர் மாறன் காரி. அவர் இருந்த இடத்தில் அவருடைய தம்பியான மாறன் எயினனை அமைச்சராக நியமித்திருக்கிறான் அரசன். அதுவும் ஒரு கல்லில் இரண்டு மாங்காய் என்று கருதி நெடுஞ்சடையன் செய்ததாகச் சொல்கிறார்கள். அரசனுக்கு அவனுடைய உற்ற தோழனும் தளபதியும் ஆன சாத்தஞ்சாத்தன் தேவையில்லாத காரியங்களில் தலையிடுவதாகத் தோன்றியது. இப்பொழுது உறையூர் நிலைப்படையின் தலைவராக இருந்த மாறன் எயினனை அமைச்சர் ஆக்கிய நெடுஞ்சடையன் சாத்தஞ் சாத்தனை உறையூருக்கு அனுப்பிவிட்டான். ஆகவே சிறந்த அறிஞரான அமைச்சரையும் சிறந்த வீரனான சாத்தஞ்சாத்தனையும் மதுரையிலிருந்து வெளியேற்றிவிட்டு, தன்னிச்சையாகச் செயல்படுகிறானாம் பாண்டிய மன்னன். இப்பொழுதுதான் அமைச்சராகியுள்ள மாறன் எயினன் அரசன் சொல்வதைக் கேட்டு நடப்பாரே தவிர அரசனுக்கு அறிவுரை சொல்லமாட்டார். ஆகவே பாண்டிய நாடு பரிதாப நிலையில் இருக்கிறது என்று தோன்றுகின்றது. நம் சுவாமிகள் அண்மையில் மதுரைக்குச் சென்றபொழுது பல பக்தர்கள் வழக்கம்போல் சுவாமிகளிடம் ஆசிபெற வந்தனர். அவர்களில் அரசோடு தொடர்புடைய பலரும் இதைப் பற்றிப் பேசி சுவாமிகளிடம் தங்கள் மனவருத்தத்தை வெளியிட்டார்களாம்" என்று தங்கவேலனும் தன்னால் முடிந்த அளவு வருத்தத்தை முகத்தில் வரவழைத்துக்கொண்டு துன்பம் பொங்கப் பேசினான்.

"அப்படியா! இந்தச் செய்திகள் பலவும் எங்கள் அரசருக்கோ அமைச்சருக்கோ தெரியாது என்று நினைக்கிறேன். ஏனென்றால்

மன்னர் எப்பொழுதுமே பாண்டியனை எண்ணி அஞ்சியே வாழ்கிறார் என்று அமைச்சர் என்னிடம் அடிக்கடி சொல்வார். பல்லவ சேனாதிபதி வந்திருந்த வேளையில்கூட அவர்கூறிய கருத்துகளை முழுவதுமாக ஏற்றுக்கொள்ளவில்லை எங்கள் அரசர்" என்றான் சுந்தரமூர்த்தி.

"என்ன கருத்து வேறுபாடு அவர்களுக்குள்? தங்கவேலன் துருவிக்கேட்டான்.

"சேனாதிபதி கூறினார், பல்லவ அமைச்சருக்கு மிகவும் நம்பத் தகுந்த தகவல் கிடைத்துள்ளது. பாண்டியன் சற்றேனும் போரைப்பற்றி கவலைப்படவில்லை என்றும் எந்தப் பகைவனும் தன்னைத் தாக்கத் துணியமாட்டான் என்று எண்ணியிருப்பதாகவும் தெரிகிறது என்றும். ஆனால் எங்கள் அரசர் சொன்னார் அப்படி நினைக்கக் கூடாது. பாண்டியன் ரகசியமாகச் செயலாற்றக் கூடியவன். வெளிப்படையாகத் தோன்றுவதை முற்றிலும் நம்பக்கூடாது" என்று பதிலுரைத்தான் சுந்தரமூர்த்தி.

"யாருக்குத் தெரியும் ஆனால் மதுரையில் குழப்பம் நிலவுகிறது என்பது உண்மை" என்று மீண்டும் வலியுறுத்தினான் தங்கவேலன்.

அடுத்த நாளே சுந்தர மூர்த்தி கொங்கு நாட்டு அமைச்சரிடம் தங்கவேலன் கூற்றை அப்படியே அறிவிப்பான் என்பது இளந்தத்தன் கருதியவாறு தங்கவேலனுக்கும் தெரியும். அவர்கள் எண்ணியது போலவே, அதாவது சாத்தன் சிந்தித்துத் திட்டம் தீட்டியதுபோலவே சுந்தர மூர்த்தி வழியாகக் கொங்கு மன்னருக்கும், அமைச்சருக்கும் செய்தி எட்டியது. பாண்டியனுக்கு ஒரு துன்பம் என்றால் அதை ஒரு பெரிய நெற்செய்தியாக எடுத்துக்கொள்ளும் அதியன் அந்தச் செய்தியை ஓலைமூலம் பல்லவ மன்னனுக்கும் அறிவித்தான். பாண்டிய அரசின் தலைமையகத்திலேயே குழப்பம் தோன்றியிருக்கிறது என்ற செய்தி பல்லவ மன்னனுக்கும் இனித்தது.

காஞ்சி அமைச்சர் அடுத்தமுறை காயத்ரி தேவியின் வீட்டிற்குச் சென்றபொழுது ஊர்வசியை அழைத்துப் பேசிப் பாராட்டினார். "ஊர்வசி! நீ நெடுஞ்சடையன் மனத்தில் ஊன்றிய விதை முளைத்துவிட்டது. சாத்தஞ் சாத்தனை மதுரையிலிருந்து உறையூருக்கு விரட்டிவிட்டான் நெடுஞ்சடையன்" என்றார். ஊர்வசிக்கு உச்சி குளிர்ந்தது.

36. காஞ்சிப் பயணம்

கொங்கு நாட்டு மன்னன் அதியமான் மனம் மகிழ்ந்தான் என்று சொல்வது முற்றிலும் உண்மையாக இருக்க முடியாது. ஏனெனில் மகிழ்ச்சி என்பது எண்ணியவற்றை எய்தும் திண்ணியருக்கு உரிய உணர்ச்சி. மன நிறைவு ஏற்பட்ட பின்னரே மகிழ்ச்சி விளையும்! அதியனைப் பொறுத்தவரை மனநிறைவு என்பது ஏற்பட முடியாத ஒன்று! எட்டாத தூரத்திலிருக்கும் வெட்டிக் கனவு! ஆட்டிவைத்தால் யாரொருவர் ஆடாதாரே என்று பக்திப் பெருக்கில் அடியார்கள் பாடினாலும்., இறைவனைப் போலவே மனிதனை ஆட்டிவைக்கும் சில குணங்கள் உள்ளன. அத்தகைய குணங்களில் தலையாயது அழுக்காறு அல்லது பொறாமை. அழுக்காறு ஒருவனை ஆட்கொண்டுவிட்டால் அது அவனை விட்டுப் பிரியாது. அவன் அழிந்தபின் அவனோடு அழியும். அவா, வெகுளி வெறுப்பு என்பவை அழுக்காறு தவறாமல் தரும் துணையுறுப்புகள். ஆகவே அதியனுக்கு மகிழ்ச்சி என்பது ஓரளவு அருகில் வரலாமே ஒழிய அவனை முற்றிலும் ஆட்கொள்வது என்பது முடியாத செயல்.

இப்பொழுது மகிழ்ச்சியை நெருங்கி வரக்கூடிய அந்த உணர்வு தோன்றுவதற்கு முக்கிய காரணம், அதியனுடைய பொறாமை தோன்றுவதற்கும் வளர்வதற்கும் மூலப்பொருள் ஆகிய பாண்டியன் நெடுஞ்சடையனை இருள் சூழ்ந்து கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அறிவித்த செய்திதான். மதுரையில் இரண்டு ஆண்டுகள் தங்கி, பாண்டிய அரச குடும்பத்தினருடன் நெருங்கிப் பழகி, உயர் கல்வியும் பெற்றுத் திரும்புவதற்காகச் சென்ற கொங்கு நாட்டு இளவரசன், நெடுஞ்சடையனிடம் பொறாமையும், இளவரசி தேவந்தி இகழ்ந்ததால் நேர்ந்த வெறுப்புமாகத் தகடூருக்குத் திரும்பினான். அந்தப் பாண்டிய குலத்தைச் சீரழிப்பதே தன் குறிக்கோள் எனக் கொண்டான். பெண்ணாகடப் போரில் பல்லவனுக்குத் துணைசென்று பெற்ற தோல்வியும், சிறையில் அடைத்த சாத்தனைப் பாண்டியன் மீட்டுச் சென்ற இழிவும் அதியனின் வெறுப்பையும் சினத்தையும் பன்மடங்காகப் பெருக்கியிருந்தன. பாண்டியனைப் பழிவாங்கும் நேரம் அடுத்து வந்துவிட்டது என்பது பல்லவனின் ஓலையாலும், பல்லவ சேனாதிபதியின் பேச்சாலும் அதியனுக்குத் தெரியவந்தது.

அதனால்தான் இப்பொழுது அவனுடைய அமைச்சர் சொன்ன செய்தி அவனுக்குத் தேனாக இனித்தது.

"சாத்தஞ்சாத்தன் உறையூருக்குப் போய் விட்டானா?" அவன் அமைச்சரிடம், அவர் கூறியதை உறுதி செய்யும் பொருட்டு மீண்டும் வினவினான்.

"ஆமாம் அரசே! உறையூர்ப் படையின் தலைவனாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுவிட்டானாம். ஆனால் அவன் தொடங்கியுள்ள வேலையைப்பார்த்தால் படையைப் பற்றிக் கவலைப் படுவதாகத் தெரியவில்லை" என்று தன் கருத்தை வெளியிட்டார் அமைச்சர்.

"ஏன்? என்ன செய்கிறான்?" அதியன் ஆர்வமுடன் வினவினான்.

"காவிரி யாற்றின் கரையைச் செப்பனிடவும் புதிய வாய்க்கால்கள் தோண்டவும் ஏற்பாடு செய்கிறான்" என்றார் அமைச்சர்.

அதியன் உரக்கச் சிரித்தான். "செய்யட்டும் செய்யட்டும். காவிரியின் கரையைச் செப்பனிட்டு, புதிய கால்வாய்களும் வெட்டி முடிக்கட்டும். மிகவும் நல்லது! ஏனென்றால் இன்னும் சில மாதங்களில் அந்தப் பகுதி நமக்குச் சொந்தமாகப் போகிறது. சோழ நாட்டில் காவிரி பாயும் பகுதியில் சிராப்பள்ளிக்கு மேற்கிலும் வடமேற்கிலும் உள்ள பகுதியைக் கொங்கு நாட்டுடன் இணைப்பதற்குப் பல்லவ மன்னர் இசைந்திருக்கிறார். சாத்தனின் பணி நமக்குத்தான் பயன் தரும்" என்று விளக்கினான் அதியன்.

"புதிய அமைச்சராக வந்திருக்கும் மாறன் எயினனுக்கும் சாத்தனுக்கும் இடையில் பகைமை தோன்றியிருக்கலாம். மாறன் காரி ஓய்வு பெற்றால் தனக்கு அமைச்சர் பதவி கிடைக்கும் என்றோ அல்லது அண்ணன் சாத்தன் கணபதிக்குக் கிடைக்கும் என்றோ சாத்தன் எதிர்பார்த்திருப்பான். அது கிடைக்காததால் மன்னனிடம் கசப்பும், எயினனிடம் பொறாமையும் தோன்றியது இயல்பே. அதனை உணர்ந்த நெடுஞ்சடையன் சாத்தனை தொலைவில் வைப்பதே நல்லது என்று எண்ணியிருக்க வேண்டும்" என்று தன்னுடைய ஊகத்தை எடுத்துரைத்தார் அமைச்சர்.

"அது மட்டுமல்ல! சாத்தன் தேவந்தியிடம் கொண்டுள்ள காதல் உறவு நெடுஞ்சடையனுக்குத் தெரிந்திருக்கும். மதுரையிலிருந்து தொலைவில் சாத்தனை வைத்தால் அவளுடைய காதல் வியாதி

குணமாகிவிடும் என்று எண்ணி அவனை உறையூருக்கு அனுப்பிவிட்டான். ஆனால் ஒன்று மட்டும் உறுதி. சாத்தன் நெடுஞ்சடையனிடம் பற்றும் நட்பும் மிகுந்தவன். அவனை வெளியில் அனுப்பியது பாண்டியனின் அழிவுக்காலம் நெருங்கிவிட்டது என்பதைத்தான் காட்டுகிறது" என்று தன்னுடைய ஊகத்தையும் வெளியிட்டான் அதியன்.

அமைச்சர் போனபிறகும் அதியன் மதுரை அரண்மனையிலும், பாண்டியன் அரசியலிலுமே மூழ்கியிருந்தான். பல்லவ சேனாதிபதி பரந்தாமன் சில நாள்களுக்குமுன் கூறிய செய்திகளும் அவனுக்கு உற்சாகம் ஊட்டின. பல்லவ மன்னனுக்கும், அமைச்சருக்கும், சேனாதிபதிக்கும் மட்டுமே தெரிந்த ஒரு செய்தி என்ற முன்னுரையுடன் அவர் மிகவும் பெருமையுடன், ஆனால் வேறுயாருக்கும் தெரியக்கூடாது என்ற எச்சரிக்கையுடன் தெரிவித்த செய்தி அது.

நெடுஞ்சடையனின் அன்னை பூசுந்தரி மகாராணியின் உறவினளான ஓர் இளம்பெண்ணை அவரைக் காண்பதற்காகச் செல்வதாகக் கதை கட்டி, மதுரை அரண்மனைக்குள் தந்திரமாகப் புகுத்தி, இரண்டு மாதங்கள் அங்கேயே வாழச் செய்து, திறமையுடன் உளவறிந்த செயலைக் கேட்டபொழுது அதியனால் நம்ப முடியவில்லை. அந்த இளம்பெண் பேரழகி என்றும், நெடுஞ்சடையன் அவளுடைய மோகவலையில் வீழ்ந்தான் என்றும் சேனாதிபதி வெளியிட்டார். பொறாமை கொண்ட சாத்தன் அவளைக் கண்காணித்து சூழ்ச்சியைக் கண்டுபிடித்தான். ஆனால் அவனையும் ஏமாற்றி அவள் மிகத் திறமையுடன் அங்கிருந்து தப்பிச் சென்றாள். ஒரு வேளை அவளுடைய அழகில் அந்தச் சாத்தனும் மயங்கி அவள் பின்னால் நடந்து, எதிர்பாராத விதமாக அவள் உளவறிகிறாள் என்பதைக் கண்டு பிடித்திருக்கலாம் என்று எண்ணினான் அதியன்.

தன்னுடைய கொடிய பகைவனான நெடுஞ்சடையனையும், தன் முகத்தில் கரிபூசிய சாத்தஞ் சாத்தனையும் ஏமாற்றி, இத்தகைய வீரச்செயல் புரிந்த அந்த இளம்பெண் கட்டாயம் பேரழகியாகத்தான் இருக்கவேண்டும். மனைவியான இளவெயினியுடன் வாழும் அரசனையும், காதலி தேவந்தியுடன் நாளும் கொஞ்சிக் குலாவும் சாத்தனையும் மயக்கியவள் அழகு மட்டுமல்ல, அறிவும் ஆற்றலும் நிறைந்தவளாகத்தான் இருக்க வேண்டும். அவள் பெயர் என்ன? ஊர்வசி! தேவலோகத்தின் பேரழகியாகவல்லவா ஊர்வசியைப் படம் பிடித்துக் காட்டுகின்றன புராணங்கள்! இவளும் அப்படித்தான் இருக்கவேண்டும். அவளை உடனே

காணவேண்டும் என்ற ஆசையும் அவன் மனத்தில் எழுந்தது. எப்படியும் பாண்டியனுடன் போர் புரியப் போகும் திட்டத்தைப் பல்லவனுடன் விரிவாக அலசிப் பேசவேண்டும். அதற்காகக் காஞ்சிக்கு ஒரு பயணம் மேற்கொள்ள வேண்டும் என்று எண்ணியிருந்தான் அதியன். அந்தப் பயணத்தின்போது காஞ்சியில் வசிக்கும் ஊர்வசியையும் காணவேண்டும் என்று முடிவு செய்தான். தன்னுடைய பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு அமைச்சருக்கு ஆணையிட்டான்.

இரண்டு நாள்கள் தொடர்ச்சியாக அறம்வளர்த்த நாதரின் மடத்தில் சுந்தரமூர்த்தியைக் காணாதது தங்கவேலனுக்கு அதிசயமாக இருந்தது. அவனுக்கு உடல் நலம் குன்றியிருக்கலாம் என்று எண்ணினான். மூன்றாவது நாள் அவனைக் கண்டவுடன் வினவினான். "என்ன நேற்றும், முந்திய நாளும் உன்னைக் காணவில்லையே உடம்பு சரியில்லையா?" என்று.

"அதெல்லாம் ஒன்றும் இல்லை. வேலை அதிகமாக இருந்தது! இரவு வெகுநேரம்வரை அமைச்சருடன் அமர்ந்து வேலைசெய்யவேண்டி இருந்தது. அதனால்தான் மடத்திற்கு வரமுடியவில்லை."

"ஏன் அப்படி என்ன வேலை திடீரென்று?"

"எங்கள் அரசர் பல்லவ மன்னரைக் கண்டு பேசுவதற்காகக் காஞ்சிக்குப் போகிறார். அதற்கான ஏற்பாடுகள் செய்யவும், பல்லவ மன்னருடன் பேச வேண்டியவற்றையெல்லாம் வரிசைப் படுத்தவும் அமைச்சருக்கு ஆணையிட்டிருக்கிறார். அந்த வேலைதான் இப்பொழுது நடந்திருக்கிறது."

"பாண்டிய நாட்டில் படையெடுப்பதைப் பற்றிப் பேசுவதற்காகத்தான் போகிறார் அல்லவா?"

"ஆமாம்! போர் தொடங்குவதற்குமுன் செய்து முடிக்க வேண்டிய காரியங்கள், ஒருபுறம் போரில் வெற்றி பெற்றபின் ஏற்படக் கூடிய பலவித நன்மைகளும், அவற்றைப் பகிர்ந்துகொள்வது எவ்வாறு என்று திட்டம் செய்வதும் மற்றொன்று. பல்லவனும் சேரனும் பேரரசர்கள். கொங்கு வேந்தரோ அவர்களோடு ஒப்பிடும்போது சிறிய நாட்டை ஆள்பவர். ஆகவே பகைவனை முறியடித்தபின் கொங்கு நாடு பல்லவனின் சிற்றரசாக இயங்கவேண்டும் என்று நிபந்தனை வரக்கூடாதல்லவா? அதற்காகத்தான் போர் தொடங்கும் முன்பே இதையெல்லாம் உறுதிசெய்ய வேண்டும் என்று எங்கள் அரசர் விரும்புகிறார்."

"போரில் வெற்றி கிடைக்கும் என்பதை அதற்குள் உறுதி செய்துவிட்டீர்களா?" தங்கவேலன் வியப்புடன் வினவினான். சுந்தர மூர்த்தியும் அந்த வினாவைக் கேட்டு வியப்புற்றதுபோல் பேசினான்.

"அதில் என்ன சந்தேகம்? பல்லவர், சேரர், கொங்கர் என்ற மூன்று அரசர்கள் ஒன்று சேர்ந்து ஒரு பெரும்படைதிரட்டிப் போர்புரிந்தால், பாண்டியனால் தனியாக என்ன செய்ய முடியும்?" என்றான் அவன்.

"ஆனால் சில ஆண்டுகளுக்குமுன் பல்லவர் படையும் கொங்கர் படையும் ஒன்று சேர்ந்து தாக்கியும் பாண்டியர் படை வெற்றி பெறவில்லையா?" தங்கவேலன் எடுத்துக் காட்டினான்.

"அவ்வாறு மீண்டும் நடக்கக் கூடாது என்றுதானே இப்பொழுது சேரனையும் சேர்த்திருக்கிறோம். சேர நாட்டிலிருந்து மட்டும் நூறு யானைகளும் ஆயிரம் குதிரைகளும் வரும் என்று பல்லவ சேனாதிபதி சொன்னார்" என்று விடையிறுத்தான் சுந்தரமூர்த்தி. "நீ சொல்வது சரிதான்" என்று தலையாட்டினான் வேலு.

தகடூரிலிருந்து இளந்தத்தன் கொடுத்தனுப்பிய ஓலையை இரண்டு தடவை படித்த சாத்தஞ்சாத்தன் சிந்தனையில் ஆழ்ந்தான். பாண்டியனின் அரண்மனையில் குழப்பம் நிலவுகிறது என்றும், சாத்தன் உறையூருக்கு அனுப்பப்பட்டதால் வெறுப்படைந்து படையைக் கவனிக்காமல் காவிரிக்கரையைச் செப்பனிடவும், கால்வாய்கள் வெட்டவும் முனைந்திருக்கிறான் என்றும் பரப்பிய தகவல்களைப் பகைவர்கள் நம்பியிருக்கிறார்கள் என்று அறிந்து மகிழ்ச்சி யடைந்தான் அவன். அதியன் நம்பி விட்டால், அவன் பல்லவனுக்கும் அறிவித்திருப்பான் என்பது உறுதி. ஒருவேளை அவனுடைய காஞ்சிப் பயணம்கூட அதன் பொருட்டாக இருக்கலாம். அந்தக் காஞ்சிப் பயணத்தின்போது பல்லவனுக்கும் அதியனுக்கும் இடையில் நடக்கும் பேச்சுவார்த்தைகளையும், அதியன் எடுக்கும் மற்ற நடவடிக்கைகளையும் நன்கறிய வேண்டும். இளந்தத்தனை உடனே புறப்பட்டுச் சென்று அதியன் வருவதற்கு முன்னரே அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி பணிக்கவேண்டும் என்று எண்ணினான் சாத்தன். அப்பொழுது அவனுக்கு வேறு ஒரு யோசனையும் உதித்தது. இளந்தத்தனுடன் அவனும் காஞ்சிக்குச் சென்றால் என்ன? உறையூரில் அவன் நேரில் செய்து முடிக்கவேண்டிய வேலை எதுவும் இல்லை. காவிரிக்கரையைச் செப்பனிடுவதற்கு ஆள் எடுக்கும் தோற்றத்தில்

ஐந்நூறு இளைஞர்களுக்குமேல் சேர்த்தாகிவிட்டது. இன்னும் ஆயிரம் பேரையாவது பார்த்திபன் சேர்த்து விடுவான். அவர்களுக்குத் தொடக்கப் பயிற்சி அளிக்கும் பொறுப்பும் பார்த்திபனைச் சார்ந்ததே. இறுதிப் பயிற்சியளிக்கும் பருவத்திலேயே சாத்தன் அங்கு இருக்க வேண்டும். ஆனால் உறையூரிலிருந்து தகடூருக்கும் காஞ்சிக்கும் போகவேண்டுமானால், முதலில் நெடுஞ்சடையனிடம் அனுமதி பெறவேண்டும். அதற்காக ஓலை அனுப்புவதைவிட நேரில் செல்வதே நல்லது என்று முடிவு செய்தான். தேவந்தியின் திருமுகத்தையும் காணும் வாய்ப்புக் கிடைக்குமே!

இன்னும் ஒரு வாரத்தில் தான் தகடூருக்கு வரப் போவதாகவும், அங்கிருந்து இருவரும் காஞ்சிக்குப் போகவேண்டும் என்றும் குறிப்பிட்டு இளந்தத்தனுக்கு ஓலை எழுதி அனுப்பிவிட்டு மதுரைக்கு விரைந்தான் சாத்தன்.

சற்றும் எதிர்பாராமல் உறையூரிலிருந்து தன்முன் வந்து குதித்த சாத்தனைக் கண்டு வியப்படைந்தார் பாண்டியன் நெடுஞ்சடையன்.

"என்ன சாத்தா! இவ்வளவு விரைவில் உறையூரிலிருந்து திரும்பிவிட்டாய்? உன்னை மதுரைக்கு இழுத்த சக்தி நட்பா அல்லது காதலா?" என்று வினவினார்.

சாத்தன் திடுக்கிட்டான். இதுவரை தான் நெடுஞ்சடையனின் தங்கையும் இளவரசியுமாகிய தேவந்தியைக் காதலிப்பதைப் பற்றி நெடுஞ்சடையனிடம் பேசியதே இல்லை. அன்னை மகாராணியே தடைவிதித்திருந்ததால் அவருடைய மகனான மன்னனிடம் அதைப் பற்றிப் பேசுவதால் பயனில்லை என்று எண்ணினான் சாத்தன். அந்தத் தடையை அவராகவே நீக்கியபொழுதும் போர் மேகங்கள் பாண்டிய நாட்டைச் சூழ்ந்து வரும் நேரத்தில் தன்னுடைய காதலைப் பற்றி அரசரிடம் பேசுவது உகந்தது அன்று என்று நினைத்தான் சாத்தன். இப்பொழுது நெடுஞ்சடையன் விடுத்த வினாவிலிருந்து அவருக்கு எல்லாம் தெரிந்திருக்கிறது என்பது தெளிவாகிவிட்டது. காதலைப் பற்றிய பேச்சு மட்டுமன்றி, உற்ற நண்பனுடன் அதை மறைத்துவைத்த செயலும் சாத்தனை நாணுறச் செய்தன. குனிந்த தலையும் பேச்சிழந்த வாயுமாக நின்ற சாத்தனைக் கண்டு உரக்கச் சிரித்தார் நெடுஞ்சடையன்.

"என் ஆருயிர் நண்பன், புலவன், கவிஞன், அறிஞன் என்றெல்லாம் நான் கொண்டாடும் சாத்தன் வாய்திறந்து பேசமுடியாமல் தலைகுனிந்து நிற்கும் காட்சியை ஒரு நாள் காணமுடியும் என்று நான் கற்பனை கூடச் செய்ததில்லை. நாணமா இல்லை குறுகுறுப்பா! இந்த மவுனத்திற்குக் காரணம் என்னவோ?" என்று கேட்டு இரண்டு அடிகள் முன்னால் நடந்து தன் தோழனை நெஞ்சோடு சேர்த்து தழுவினான் பாண்டியன் நெடுஞ்சடையன்.

"எனக்கு எப்படித் தெரிந்தது என்று வியப்படைகிறாய் நீ. நீ என் தோழன். தேவந்தி என் உடன்பிறந்த தங்கை. உங்களுடைய உணர்ச்சிகளைக் கண்டறிய என்னால் முடியவில்லையானால் இந்த நாட்டுமக்களின் உணர்ச்சிகளையும் குறைகளையும் நான் எப்படி அறிய முடியும். எனக்கு வெகு நாள்களாகவே இது தெரியும். நீயோ, தேவந்தியோ என்னிடம் சொல்வீர்கள் என்று எதிர்பார்த்தேன். நீங்கள் இருவருமே என்னிடம் பேசுவதற்குத் தயங்கியது போலவே நானும் அதைப் பற்றி உங்களிடம் கேட்கத் தயங்கினேன். நீ உறையூருக்குச் சென்றபின் அன்னை மகாராணி என்னிடம் சொன்னபொழுதுதான், அவருக்கும் தெரியும் என்று நான் தெரிந்துகொண்டேன். சாத்தா! உன்னை என் மைத்துனனாக அடைவதை என் பாக்கியம் என்று கருதுகிறேன் நான். எனவே இனி அதை நீங்கள் இருவருமே என்னிடம் மறைத்துவைக்க வேண்டாம் என்று தெரிவிப்பதற்காகவே நான் இன்று மனம் திறந்து பேசினேன்" என்றான் மன்னன்.

மகிழ்ச்சியும், நெகிழ்ச்சியும் கலந்ததால் சற்றுநேரம் வாயடைத்துப்போன சாத்தன் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு மெல்லப் பேசினான்.

"அரசே! தங்களிடமிருந்து மறைத்து வைக்கவேண்டும் என்று நாங்கள் இருவரும் திட்டம் இடவோ அல்லது பேசி முடிவெடுக்கவோ இல்லை. எங்களுக்குள் வளர்ந்த அன்பு காதலாக மலர்வதை அறிந்த அன்னை மகாராணியார் அதை வரவேற்கவில்லை. தடையும் செய்தார்கள். பாண்டிய நாட்டின் இளவரசி ஓர் இளவரசனை மணம் புரியவேண்டும் என்று அவர்கள் விரும்பியதில் தவறும் இல்லை! ஆனால் தேவந்தியின் மனவுறுதி தளரவில்லை. நாளடைவில் நானும் இளவரசியைக் கைபிடிக்கும் தகுதி உள்ளவன் என்று அன்னை மகாராணியும் எண்ணத் தொடங்கினார்கள். ஊர்வசியின் சூழ்ச்சியைக் கண்டுபிடித்ததற்குப் பரிசாக இளவரசியை மணந்துகொள்ள எனக்கு அனுமதியும் தந்தார்கள். அப்பொழுதே தங்களிடமும்

பேசவேண்டும் என்று நினைத்தேன் ஆயினும் பகைவர்கள் நமக்கு எதிராகக் களத்தில் இறங்க முயலும் இந்த நேரத்தில் என் காதலைப்பற்றியும் திருமணத்தைப் பற்றியும் பேசுவது சற்றும் பொருந்தாதது என்று தோன்றியதால் அந்த எண்ணத்தைக் கைவிட்டேன். நான் இளவரசியிடம் மிகத்தெளிவாகச் சொல்லியிருந்தேன் என்னுடைய அரச பக்திக்கும் நட்புக்கும் இணையானது வேறு எதுவுமே இல்லை. ஒரு சோதனை ஏற்பட்டால் காதலைத் துறப்பேனே ஒழிய, கடமையிலிருந்து மாறமாட்டேன் என்று. அன்னை மகாராணியின் ஆசியும், அரசரின் அனுமதியும் இருந்தால் மட்டுமே நான் இளவரசியின் கழுத்தில் மாலை சூட்டுவேன் என்பது அவருக்கும் தெரியும். இன்று தாங்களும் அனுமதித்ததால் இனி அது நடக்கும் என்று பெருமகிழ்ச்சி அடைவதோடு என்னுடைய நன்றியையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்" என்றான்

"இன்னொரு சிறிய தடையும் உள்ளதல்லவா?" நெடுஞ்சடையன் சுட்டிக்காட்டினான்.

"எதனைக் குறிப்பிடுகிறீர்கள் அரசே?"

" கொங்கு வேந்தனைப் போரில், வென்று, சிறைப்பிடித்து, மதுரைச்சிறையில் அடைத்தபின்தானே திருமணம் செய்யமுடியும்?"

சாத்தன் புன்முறுவல் பூத்தான். "அதையும் தங்களிடம் சொல்லிவிட்டார்களா! ஆனால் அதைப்பற்றிக் கவலைகொள்ளத் தேவை இல்லை. நாமாக ஒரு போருக்குப் போவதை நான் விரும்பவில்லை ஆனால் இப்பொழுது அவர்களே போரைத் தொடங்குவதால் நாம் போர்க்களத்தில் இறங்கியே ஆகவேண்டும். வெற்றி உறுதி என்பதால் அந்தத் தடையும் நீங்கிவிடும்" என்று நம்பிக்கையுடன் பேசினான் சாத்தன். மேலும் தொடர்ந்தான்.

"அதைப் பற்றித் தங்களிடம் பேசுவதற்காகத்தான் நான் மதுரைக்கு வந்தேன். என்னை இங்கு இழுத்த சக்தி காதலும் நட்பும் அல்ல! கடமை! இதுவரை நான் அறிந்த செய்திகளையும் செய்து முடித்த காரியங்களையும் இனிமேல் செய்யப் போகும் செயல்களையும் எடுத்துரைத்து, தங்கள் அறிவுரையையும் பெற்றுச் செல்லவே வந்தேன்" என்று தொடங்கி இளந்தத்தனுடன் காஞ்சிக்குச் செல்ல முடிவு செய்திருப்பதன் காரணத்தையும் கூறினான்.

"நமக்குள் நட்புக் குலைந்து, பகை தோன்றியுள்ளதாகப் பகைவர்களை நம்பவைத்திருக்கிறாய். ஆனால் நம்மோடு

ஈராண்டுக்காலம் நெருங்கிப் பழகி, உன்னையும் என்னையும் நன்கறிந்த அதியன் அந்தக் கதையை நம்புவானா?" நெடுஞ்சடையனின் வினா ஐயத்தை வெளிப்படுத்தியது.

"உண்மைதான் அவனுக்கு ஐயம் எழலாம். ஆயினும், நான் உறையூரில் வசிப்பதும் காவிரிக் கரையைச் செப்பனிடுவதற்கு ஆள் எடுப்பதும் கண்ணால் காணக் கூடிய உண்மைகள் அல்லவா? ஆகவே உறுதியாக நம்பவில்லை என்றாலும் அதியனுக்கும் அதில் ஓரளவாவது உண்மை இருக்கலாம் என்று தோன்றும். ஆனால் பல்லவன் கட்டாயம் நம்புவான்" என்றான் சாத்தன்.

"நீ காஞ்சிக்குச் செல்வதால் உனக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்தால் நம் திட்டம் எல்லாமே குலைந்துவிடும் என்பதை மறந்து விடாதே" என்று எச்சரித்தான் நெடுஞ்சடையன்.

"ஆபத்து எதுவும் வருவதற்கு வாய்ப்பில்லை. நான் அறம் வளர்த்த நாதருடன், அவருடைய அந்தரங்கச் சீடர்களில் ஒருவனாக அல்லவா செல்கிறேன்! போலி ஓலை வல்லுநன் உத்தமனைத் தங்களுக்குத் தெரியுமல்லவா? அவனைப்போல் மாறுவேடம் புனைவதில் வல்லுநனான உதயனையும் நினைவு இருக்குமே! தங்களை மனுபமனாக மாற்றிய உதயன். அவனை என்னுடன் கொண்டுபோகிறேன். மாறு வேடத்தில்தான் காஞ்சிக்குச் செல்வேன்" என்று உறுதியளித்தான் சாத்தன்.

"சரி! வெற்றியுடன் திரும்பிவா" என்று விடைகொடுத்து அனுப்பினார் அரசர்.

இப்பொழுது தேவந்தியைச் சந்திப்பதற்கு மாலை நேரமோ, பூங்காவோ தேவையில்லை ஆகையால் சாத்தன் அரண்மனையிலேயே அவளைக் காணச் சென்றான். அண்ணனைப் போலவே தங்கையும் அவனுடைய எதிர்பாராத வரவில் பேருவகை கொண்டாள். அன்னை மகாராணி அறிவித்த பின்னர். நெடுஞ்சடையன் அவளோடு சாத்தனைப் பற்றிப் பேசியிருந்ததால் அவனைக் கண்டவுடனேயே நெடுஞ்சடையன் சாத்தனிடமும் நேரடியாகப் பேசிவிட்டான் என்பதைப் புரிந்து கொண்டாள் தேவந்தி. இல்லையெனில் அவன் அரண்மனைக்குள் வந்து தன்னைக் காணமாட்டான் என்பது அவளுக்குத் தெரியும். சாத்தனை மார்போடு அணைத்து வரவேற்றாள். கன்னித் தமிழில் காதல் மொழி பேசிக் களிப்புற்றனர் காதலர்கள். புதிய தெம்பும் உற்சாகமும் புத்துணர்ச்சி அளிக்க அங்கிருந்து பயணமானான் சாத்தன்.

37. மீண்டும் ஊர்வசி

காஞ்சி மாநகர் தமிழகத்தின் தலை சிறந்த நகரமாக விளங்கியது. நான்மாடக் கூடல் என்று புகழ்பெற்ற மதுரை மாநகர் தொன்மையிலும் சங்கம் வளர்த்த இலக்கியச் செழிப்பிலும் முந்திநின்றாலும், மகேந்திர பல்லவனும் அவனுடைய மகனான நரசிம்மனும் கட்டடச்சிறப்பாலும் சிற்பம், ஓவியம் போன்ற கலைவளத்தாலும் காஞ்சியைப் புதுமையும் பொலிமையும் மிக்க பெருநகரமாக வளர்த்தனர். அவர்களுக்குப் பின் அரியணையில் ஏறிய பல்லவ மன்னர்களும் அந்தச் சிறப்புகளைக் கட்டிக் காத்ததோடு கோயில்கள் பலவும் எழுப்பித்தலைநகரத்தின் வனப்பைப் பெருக்கினர். கோயில்களைச் சுற்றியும் சார்ந்தும் பிறந்து வளரும் நாட்டியம், நாடகம் ஆகியவை நிகழும் கலைக்கூடங்களும் அதற்கேற்ப வளர்ச்சி பெற்று, மக்கள் கேளிக்கைகளிலும் ஆடல் பாடல்களிலும் ஈடுபட்டு இன்பமுடன் வாழ்வதற்கு வகை செய்தன. இருநூறு ஆண்டுகளுக்குமேல் நிலையான ஆட்சியும், முறையான வளர்ச்சியும் நிலவிய பல்லவப் பேரரசின் தலைநகர் வெளிநாட்டிலிருந்து வருவோரை அதிசயத்தில் ஆழ்த்தும் வண்ணம் வலுவும் பொலிவும் பெற்றுவிளங்கியது. காஞ்சி மாநகருக்குள் முதன்முறையாக வந்த சாத்தஞ்சாத்தனும் அதே அனுபவத்தைத்தான் பெற்றான்.

மாறுவேடம் அணிவித்து ஒரு மனிதனின் அடையாளத்தை அறவே மாற்றியமைக்கும் கலையில் வல்லுநனான உதயன் சாத்தனையும் அவ்வாறே மாற்றியிருந்தான். மதுரை அறம் வளர்த்த நாதரின் மடத்திற்குள் நுழைந்த தளபதி சாத்தன் மாயமாய் மறைந்து, நாதரின் அந்தரங்கச் சீடன் பசுபதி, வேறு இரு சீடர்களுடன் வெளியே வந்தான். பிறகு மூவரும் ஒரு விரிவான இறைவணக்கச் சடங்கை நிறைவேற்றிவிட்டு ஒரு தேரில் ஏறி, தகடூரில் இருந்த தலைமை மடத்திற்குப் பயணமாயினர். பரந்த நெற்றியில் பட்டையான திருநீறும் நடுவில் பெரிய வட்டத்தில் குங்குமப் பொட்டும் கழுத்தில் வில்வமாலையும், மார்பில் பூநூலும் விளங்க, நீண்ட முடியைத் தலையின்மீது சுருட்டிக் கட்டி, குறுந்தாடி முகத்தின் முக்கால் பகுதியை மறைக்க, காவி உடையில், கமண்டலத்துடன் தோன்றிய பசுபதி எப்பொழுதும் இறைவனின் திருநாமங்களில் எதையேனும் ஒன்றை

ஒலித்துக்கொண்டே இருந்தான். அவனுடன் இருந்த ஒரு சீடன் இரண்டாண்டுகளாகவே இளந்தத்தனுடன் வாழ்ந்து மடத்தின் நடைமுறைகளையும் ஒழுங்குகளையும் நன்கு கற்றிருந்த நாராயணன். மற்றொருவன் புதிதாகச் சீடனாக மாறிய மெய்க்காப்பாளன் மேகநாதன்.

தகடூர் அறம்வளர்த்த நாதர் மடத்தின் தலைமைச்சீடனான தங்கவேலன், மதுரையிலிருந்து தேரில் வந்து இறங்கிய மூவரையும் வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றான். நாராயணனும், மேகநாதனும் மற்ற சீடர்களுடன் கலந்துகொள்ள பசுபதிமட்டும் அறம்வளர்த்த நாதரின் அறைக்குள் நுழைந்தான். பசுபதியைக் கண்ட அறம்வளர்த்த நாதர் ஒருகணம் தன் கண்களையே நம்பமுடியாதவர்போல் வியப்புடன் நோக்கினார்.

" இந்த உதயன் உண்மையிலேயே ஒரு மந்திர வாதிதான். மன்னரை மனுரபமன் ஆக்கியபொழுது நானும்கூட இருந்தேன். உதயன் செய்யும் ஒவ்வொரு செயலையும் உற்று நோக்கியதால் கொஞ்சம் கொஞ்சமாக எவ்வாறு மாற்றம் ஏற்படுகிறது என்பதைக் கண்டேன். ஆனால் பசுபதி என்ற பெயருடன் சாத்தனார் வந்திருக்கிறார் என்று என்னிடம் தங்கவேலன் சொல்லிவிட்டுப் போகவில்லையானால் நான் இப்பொழுது என்முன் நிற்பது தளபதி சாத்தனார் என்று நம்பவே மாட்டேன். என்னுடைய மடத்தின் தலைவன் என்ற நிலையைக் காக்கவே நான் எழுந்து நின்று வரவேற்கவில்லை" என்று கூறிச் சாத்தனை வரவேற்றான் ஒற்றர் படைத் தலைவன்.

"அதைத்தான் இன்னும் சில நாள்கள் முற்றிலும் கடைப்பிடிக்கவேண்டும். நாம் தனியாக இருக்கும் பொழுதும் நீங்கள் என்னைப் பசுபதி என்றே அழையுங்கள். நானும் சுவாமிகள் என்றே அழைக்கிறேன். தங்கவேலனிடம் நடந்து கொள்ளுவது போலவே என்னிடம் நடந்துகொள்ளுங்கள் இல்லாவிடில் வெளியார் யாரேனும் இருக்கும் பொழுதும் தவறிப் போய் தளபதி என்று அழைக்கும் வாய்ப்பு வரலாம். நாம் நாளைக்கே காஞ்சிக்குப் புறப்படலாம் அல்லவா சுவாமிகளே!" என்று வணக்கத்துடன் வினவினான் பசுபதி.

"ஆம். எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டேன். நாளை காலையில் நாம் புறப்படுவோம். நாளை புகழியூரில் தங்கி, அடுத்த நாள் மாலையில் காஞ்சியை அடைவோம். தலைமைச் சீடன் கைலாசம் நம்மை எதிர்பார்த்துக் கொண்டிருப்பான்" என்று விடையிறுத்தார் அறம்வளர்த்த நாதர். திட்டமிட்டபடி காஞ்சிமா

நகருக்குள் அவர்கள் பயணம் செய்ததேர் நுழைந்தபொழுதுதான் சாத்தன் அந்த நகரின் செல்வச் சிறப்பைக் கண்டு பாராட்டினான். சுவாமிகளும் தலை ஆட்டினார்.

"இங்கே வரும்பொழுது எனக்கும் தோன்றும், நம் மதுரையைவிடப் பொலிவுடன் விளங்குகின்றது காஞ்சி" என்றார். "மதுரை ஆயிரம் ஆண்டுகளுக்குமேல் தலை நகராக இருக்கும் தொன்மை உடையது. அதனால் பழமை மிகுதியாகவும், புதுமை குறைவாகவும் தோன்றும். ஆனால் காஞ்சி ஒரு சில நூற்றாண்டுகளில் உருவான மாநகர். ஆகவே புதுமைப் பொலிவுடன் விளங்குகின்றது" என்று விளக்கம் அளித்தான் பசுபதி.

அறம்வளர்த்த நாதர் சுவாமிகள் காஞ்சிமா நகருக்கு எழுந்தருள்கிறார் என்ற செய்தி நன்கு விளம்பரம் செய்யப்பட்டிருந்ததால் அன்று மாலையிலேயே பக்தர்கள் கூட்டம் திரண்டது. வழக்கம்போல் பக்தர்களுக்குக் காட்சியளிக்க அவர்கள் முன்மண்டபத்தில் வந்து அமர்ந்த சுவாமிகள், அன்றைய பிரார்த்தனையைத் தலைமையேற்று நடத்தியதுடன் பக்தர்களுக்கு ஆசி வழங்கினார். பக்திப் பாடல்களும் இசைக்கப்பட்டன. அன்றைய கூட்டம் கலைந்து சென்றபின் அறைக்குள் அமர்ந்திருந்த சுவாமிகளிடம் தலைமைச் சீடன் கைலாசம் கூறினான்.

"சுவாமிகளே! கவனித்தீர்களா? பெண்கள் பலர் இன்றையக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்" என்று.

"ஆம் நானும் கவனித்தேன் என்ன காரணம்?" என்று வினவினார் நாதர்.

"திணைக்கள நாயகம் வரதப்பரின் மனைவியார் கொடும் நோய்வாய்ப் பட்டிருந்தார் என்றும் அறம் வளர்த்த நாதரின் ஆசியாலும், அவர் கொடுத்த திருநீறாலும் அந்த அம்மையார் நலமடைந்தார் என்றும் செய்தி பரவிவிட்டது. அதனால்தான் இப்பொழுது ஏராளமான பெண்கள் நம் மடத்திற்கு வருகிறார்கள்." என்று விளக்கினான் கைலாசம்.

"மதுரையிலிருந்து வந்திருக்கும் சீடன் பசுபதி தங்களுடனேயே தங்குவான் என்றும் எல்லோருக்கும் செய்ததுபோன்ற ஏற்பாடுகளை அவனுக்குச் செய்யவேண்டாம் என்றும் மேகநாதன் என்னிடம் சொன்னான். அது உண்மை தானா?" என்று ஓர் ஐயத்தை வெளியிட்டான் கைலாசம்.

சுவாமிகள் உரக்க நகைத்தார்! "பசுபதியை உனக்கும் அடையாளம் தெரியவில்லையா?" என்று வினவினார், கைலாசத்திற்கு ஒன்றும் புரியவில்லை.

"நீ மதுரையில் தளபதி சாத்தஞ்சாத்தனைக் கண்டு பேசியதில்லையா?"

"பேசியிருக்கிறேன்" என்று ஒத்துக்கொண்ட கைலாசம் உடனே புரிந்துகொண்டான். "அப்படியா! ஐயோ! நான் அவரிடம் மரியாதைக் குறைவாக நடந்துகொண்டேனே" என்று வருந்தினான் கைலாசம். அந்த நேரத்தில் உள்ளே நுழைந்த பசுபதி "அதைப்பற்றி நீ சற்றும் கவலைகொள்ள வேண்டாம். சுவாமிகளின் ஒரு சீடனுக்கு மட்டும் சில புதிய சலுகைகளும் வசதிகளும் வேண்டும் என்று மேகநாதன் கூறியபொழுது அது உனக்குப் பிடிக்கவில்லை. அவ்வாறு சலுகைகள் கோரியது மேகநாதனின் தவறு. சுவாமிகளின் சீடனாக வந்திருக்கும் நான் எல்லா விதத்திலும் சீடனைப்போல நடந்து கொள்வதுதான் சரி. ஆனால் நானும் மற்றவர்களோடு ஒன்றாகத் தங்கியிருந்தால் அவர்கள் என்னுடைய உண்மை நிலையை அறிந்தவர்கள் ஆயின் அவர்களுக்குத் தொல்லையாக இருக்கும். அதனால்தான் நான் சுவாமிகளுடனேயே தங்குவது நல்லது என்று மேகநாதன் சொன்னான்" என்று கைலாசத்துக்கு ஆறுதல் கூறினான் பசுபதி.

"அது எப்படியானாலும் தாங்கள் என்னுடன் தங்கினால் போதும். மடத்திற்குள் யார் யார் எங்குத் தங்குகிறார்கள் என்பது வெளியாருக்குத் தெரியாது. ஆனால் இதில் பாராட்டுக்கு உரியவன் உதயன்தான். புத்திசாலியான கைலாசத்திற்கே தங்களை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை என்றால் மாறுவேடம் எவ்வளவு சிறப்பாகச் செய்யப்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது" என்று பாராட்டினார் சுவாமிகள்.

சென்ற முறை சுவாமிகள் காஞ்சிக்கு வருகை தந்த பொழுது அவருடைய ஆழ்ந்த பக்தராக மாறிய வரதப்பர் அடுத்தநாள் மாலை பக்தர்களின் கூட்டம் கலைந்தபின் சுவாமிகளைக் காண வந்தார்.

"சுவாமிகள் நேற்றே வந்தது எனக்குத் தெரியும். ஆனால் நான் மிகமுக்கியமான வேலையில் மூழ்கி இருந்ததால் உடனே வந்து வணங்க முடியவில்லை. இன்னும் இரண்டு நாளில் கொங்குமன்னர் அதியமான் காஞ்சிக்கு வருகிறார். அதற்கான ஏற்பாடுகள் செய்யும் பொறுப்பு எனக்குத் தரப்பட்டிருக்கிறது" என்றார்.

அருகில் அமர்ந்திருந்த பசுபதியை வரதப்பர் அடிக்கடி பார்ப்பதைக் கவனித்த சுவாமிகள் "இவன் என் அந்தரங்கச் சீடன் மதுரை மடத்தைப் பார்த்துக்கொள்பவன். பெயர் பசுபதி. என் முழு நம்பிக்கைக்கும் உரியவன் ஆதலால், தாங்கள் அவன் முன்னிலையில் எதுவும் பேசுவதற்குத் தயங்கவேண்டாம்" என்று பசுபதியை அறிமுகப் படுத்தினார் சுவாமிகள். எனக்கு ஒரு கோரிக்கை உள்ளது" என தாழ்மையாக அறிவித்தார் வரதப்பர். "தயங்காமல் சொல்லுங்கள்" என்றார் சுவாமிகள் "என் மனைவி இப்பொழுது எங்கள் துன்பம் எல்லாம் மறந்து முழுநலம் பெற்று விட்டாள். தங்கள் திருவடிகளைத் தொட்டு வணங்க வேண்டும் என்று விரும்புகிறாள். சுவாமிகள் அனுமதித்தால் நான் நாளையே அழைத்துக்கொண்டு வருகிறேன்" என்று வேண்டினார் வரதப்பர்.

"கட்டாயம் அழைத்து வாருங்கள் மாலைக்கூட்டம் தொடங்குவதற்குமுன் வாருங்கள்" என்றார் சுவாமிகள். ஆனால் அடுத்தநாள் குறித்த நேரத்தில் திணைக்கள நாயகமான வரதப்பருக்கு வரமுடியாத சூழ்நிலை ஏற்பட்டதால் அவருடைய மனைவி ஒரு இளம்பெண்ணுடன் சுவாமிகளிடம் வந்தாள். கைலாசம் வந்து செய்தி அறிவிக்க, அவர்களை உள்ளே அனுப்பப் பணித்தார் சுவாமிகள்.

ஐம்பது வயது மதிக்கத்தக்க, செம்மாந்த தோற்றம் கொண்ட ஒரு பெண்மணியும் ஓர் அழகிய இளம் பெண்ணும் அறம் வளர்த்த நாதர் முன் வந்து தரையில் மண்டியிட்டு வணங்கினார்கள். சுவாமிகள் அவர்களை ஆசீர்வதித்து அமரச்சொல்லவே, அந்தப் பெண்மணி பயபக்தியுடன் அமர்ந்தாள்.

"சுவாமிகளை நேரில் கண்டு என் பக்தியையும் நன்றியையும் தெரிவிக்கவே நான் வந்தேன். என் கணவர் அரசரின் ஆணைப்படி வெளியூர் செல்லவேண்டியிருந்ததால் என்னுடன் வரமுடியவில்லை. சுவாமிகளிடம் கொடுத்த வாக்கு தவறக் கூடாது என்று கூறி என்னை அனுப்பி வைத்தார். இவள் எனக்கு மகள் போன்றவள். என் தோழியின் மகள், தனியாக வரத்தயங்கியதால் இவளைத் துணைக்கு அழைத்துக்கொண்டு வந்தேன். பெயர் 'ஊர்வசி' என்று தன்னுடன் வந்த இளம்பெண்ணை அறிமுகப்படுத்தினாள் அந்தப் பெண்மணி.

அறம்வளர்த்த நாதரின் மூளையில் அந்தப் பெயர் முன்னரே பதிவு செய்யப்பட்டிருந்தால் அவர்முன் அமர்ந்திருந்த பெண்ணை உற்று நோக்கினார். அருகில் அமாந்திருந்த பசுபதியின் முகம் மங்கிய ஒளியில் தெளிவாகத் தெரிய வில்லையாயினும் அவனும்

அந்த இளம்பெண்ணின் முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தான் என்பது புலனாயிற்று. பசுபதி சுவாமிகள் பக்கம் முகத்தைத் திருப்பி, அவருக்கு மட்டும் புரியும் வண்ணம் மெல்லத் தலையை ஆட்டினான். தான் எண்ணியவாறு அந்த ஊர்வசிதான் இந்த ஊர்வசி என்று அறம்வளர்த்த நாதருக்கு உறுதியானது.

வரதப்பரின் மனைவி தொடர்ந்து பேசினார் "சுவாமி! இவள் உயர்குலத்தில் பிறந்தவள். நாட்டியம், இசை எல்லாம் கற்றவள். என் மாணவியாக இருந்து இலக்கியம் கற்றிருக்கிறாள். அண்மையில் ஒரு பெரிய விபத்திலிருந்து மயிரிழையில் உயிர்தப்பினாள் என்று இவளுடைய அன்னை என்னிடம் கூறினாள். என் ஒரே மகனை இளம்வயதிலேயே பறிகொடுத்த எனக்கு அந்தத் துன்பம் எவ்வளவு கொடுமையானது என்பது தெரியும். தங்கள் ஆசியால் நான் நலமடைந்துவிட்டேன். இவளுக்கு இனி எந்த ஆபத்தும் நேராமல் இருக்கவும், மாங்கல்யபாக்கியம் ஏற்படவும் தாங்கள் அருள் செய்ய வேண்டும்" என்று வேண்டினாள்.

'உனக்கு என்ன விபத்து நேர்ந்தது மகளே'! என்று அன்புடன் வினவினார் நாதர்.

"நான் என் உறவினரான ஒரு மூதாட்டியைக் காண வெளியூர் சென்றிருந்தேன். அங்கே என்னைக் கொலைசெய்வதற்குச் சிலர் முயற்சி செய்தார்கள். நான் தக்கசமயத்தில் தப்பி உயிர் பிழைத்தேன்" என்று பொய்சொல்லாமலே உண்மையை மறைத்த ஊர்வசியின் மதிநுட்பத்தை மனத்திற்குள் பாராட்டினான் பசுபதி. பெண்குரலில் ஆண்குரல் நிழலிட்ட அவளுடைய ஓசையும், ஓரிடத்தில் பதியாமல் சுழலும் அவளுடைய கண்களும் அவன் வலையிலிருந்து தப்பிச்சென்ற ஊர்வசி இவள்தான் என்பதை மேலும் வலியுறுத்தின.

"இனி உனக்கு அத்தகைய ஆபத்து வராமல் இறைவன் காக்கட்டும்! அவன் அருளால் உனக்கு விரைவிலேயே மாங்கல்ய பாக்கியமும் மலரட்டும்" என்று அருள் செய்து திருநீறும், மலரும் கொடுத்து ஆசீர்வதித்தார் அறம்வளர்த்த நாதர். மீண்டும் அவரை மண்டியிட்டு வணங்கி வெளியேறினர் இரு பெண்களும்.

"இனி இந்த ஊர்வசியைக் காணும் வாய்ப்பு ஏற்படும் என்று நான் நினைக்கவே இல்லை. என் பிடியிலிருந்து தப்பிச்சென்ற ஊர்வசி ஒருசில நாள்களின் நான் இருக்கும் இடத்தில் என் அருகிலேயே வந்து அமர்வாள் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?" என்று வியப்புடன் பேசினான் பசுபதி.

"இவ்வளவு அழகான பெண் எல்லோரையும் மயக்கியதில் வியப்பில்லை. என் மருமகள் எவ்வளவு அழகாக இருக்கிறாள் என்று அன்னை மகாராணி அவளைக் கண்டவுடன் பெருமைப் பட்டிருக்க வேண்டும். என் முறைப்பெண்ணாக இருக்கவேண்டியவள் பேரழகியாக இருக்கிறாளே என்று பாண்டிய வேந்தர் ஏங்கியிருக்கவேண்டும். தாங்கள் எப்படி இந்த அழகிய உடலில் அழுகிய உள்ளம் ஒளிந்து இருந்ததைக் கண்டீர்கள் என்பதுதான் எனக்கு அதிசயமாகத் தோன்றுகிறது" என்று வியந்தார் நாதர்.

"திடீரென்று அவள் மதுரை அரண்மனையில் வந்து குதித்ததும், வந்தது பல்லவன் தலைநகரான காஞ்சியிலிருந்து என்று அறிந்ததும் என்னை என்மனம் எச்சரித்தன. அவளைக் கண்டு பேசியபொழுது அவள் கண்கள் நேரடியாக நம் கண்களில் நிலையாகப் பார்க்காமல் எப்பொழுதும் தாவிப் பாய்ந்து கொண்டிருப்பதைக் கவனித்தேன். அதேபோல் அவளுடைய குரலில் பெண்மை ஒலியைவிட மேலெழுந்து நிற்பது ஆண்மைக்குரல். இவை இரண்டுமே ஒருபெண்ணின் நிலையற்ற மனத்தையும், பேராசை கொண்ட குணத்தையும் குறிப்பிடும் அறிகுறிகள் என்று பெரியோர் கருதுகின்றனர். அதனால்தான் அவளுடைய வரலாற்றை ஆராயும்படி உங்களிடம் வேண்டினேன். நான் சந்தேகப்பட்டது போலவே அவளுக்குப் பல்லவ அமைச்சருடன் தொடர்பு இருந்தது என்பது தெரிந்தவுடன் அவள் எதற்காக மதுரை அரண்மனையில் நுழைந்திருக்கிறாள் என்று விளங்கியது" என்று விளக்கம் அளித்தான் பசுபதி.

"எப்படியானாலும் அவள் பெரிய துணிச்சல் காரி என்பதில் ஐயம் இல்லை" என்று பாராட்டினார் சுவாமிகள்.

"துணிச்சல்காரி மட்டுமல்ல, புத்திசாலியும்கூட. அவளுக்கு நேர்ந்த விபத்தை எவ்வளவு சாமர்த்தியமாக எடுத்துரைத்தாள். அவள் உறவினரைக் காண வெளியூர் சென்றதும், பிடிபட்டால் மரணதண்டனை உறுதியாகையால் அவளைக் கொலைசெய்ய முயற்சி செய்ததும் தக்க சமயத்தில் தப்பியதும் எல்லாமே உண்மை. அவள் பொய் சொல்கிறாள் என்று யாரும் குறைசொல்ல முடியாது. நாளை சுவாமிகளுக்கு எல்லாம் தெரியவந்தால்கூட நான் உண்மைதானே சொன்னேன் என்று அவளால் வாதாட முடியும்" என்று அந்தப் பாராட்டில் சாத்தனும் சேர்ந்துகொண்டான்.

"எனக்கு ஒரு சந்தேகம் எழுகின்றது! வரதப்பரின் மனைவியாருடன் அவள் தற்செயலாக வந்தாளா, அல்லது நமது

மடத்தைப் பற்றி ஐயம் ஏதாவது தோன்றி, அதை ஆராய்வதற்காகப் பல்லவ அமைச்சர் அவளைத்திட்டமிட்டு அனுப்பினாரா என்பதுதான் அந்தச் சந்தேகம்" என்று பேச்சைப் புதிய திசையில் திருப்பினார் அறம்வளர்த்த நாதர்.

"காயத்ரி தேவியின் வீட்டில் ஒரு வேலையாளிடம் நம் ஆள் தொடர்பு வைத்திருக்கிறான் அல்லவா?" சாத்தன் வினவினர்ன்.

"ஆம் நம்முடைய பரதன்தான் அதைக் கவனித்து வருகிறான்" என்றார் சுவாமிகள். "பரதனை மறுபடியும் முடுக்கி விடுங்கள். ஒரு கண் எப்பொழுதும் அந்த வீட்டின்மீது இருக்கவேண்டும். இந்த ஊர்வசி இனியும் நம் பாதையில் குறுக்கிடுவாள் என்றுதான் தோன்றுகிறது எனக்கு" என்று அறிவுரை செய்தான் சாத்தன்.

"பரதன் நேற்று வந்தபொழுது கொங்குவேந்தனின் காஞ்சி வருகையைப் பற்றித்தான் பேசினேன். அப்பொழுது இந்த ஊர்வசியைப் பற்றிய எண்ணமே இல்லையாதலால் ஒன்றும் பேசவில்லை. நாளைக்கு மறுபடியும் வருவான் அப்பொழுது ஊர்வசியின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க ஏற்பாடு செய்வோம். அதியமான் மூன்றோ நான்கோ நாள்கள் காஞ்சியில் தங்கப் போகிறானாம். பல்லவ மன்னரின் அரண்மனையிலேயே எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. கொங்கு வேந்தனை மிகச் சிறப்பாக வரவேற்று விருந்தோம்பலால் மூச்சுத்திணரச் செய்ய வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறார்கள். நாட்டியம், நாடகம் போன்ற கலைநிகழ்ச்சிகளும், வாள்போர், மற்போர், வேலெறிதல், அம்பெய்தல் போன்ற வீர விளையாட்டுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. அரசு அலுவலர்களும் பலதுறைவல்லுநர்களும் அவரைச் சந்திக்கும்பொழுது பல்லவ மன்னனுக்கு ஒப்பாக நடத்துவதாகத் தோன்ற வேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறான் பல்லவ மன்னன். கொங்கு மன்னன் ஒரு சிற்றரசன் என்ற எண்ணம் எவ்விதச் சூழ்நிலையிலும் அவனுக்கு வரக்கூடாது என்பதுதான் குறிக்கோள். பாண்டியனின் தலைநகரில் அவனைச் சிற்றரசனாக நடத்தியதுதான் பாண்டியனிடம் அதியன் இவ்வளவு பகைமை பாராட்டுவதற்குக் காரணம் என்று நந்திவர்மன் அமைச்சரிடமும், திணைக்கள நாயகத்திடமும் கூறினானாம். ஆகவே அவன் காஞ்சியில் இருக்கும் நாள்களில் அத்தகைய எண்ணம் வராமல் காக்க வேண்டும் என்பது பல்லவ மன்னனின் விருப்பம்" என்று பரதன் தெரிவித்த தகவல்களைத் தெரிவித்தார் சுவாமிகள்.

"ஆம் அதியனும், சேரனும் முழுமனத்துடன் தன்னோடு இணைந்து செயலாற்றினால் மட்டுமே மாவீரனான பாண்டியனை முறியடிக்க முடியும் என்று பல்லவமன்னன் நன்கறிவான். அதனால் அதியன் காஞ்சியிலிருந்து திரும்பிச் செல்லும்பொழுது மனநிறைவுடன் செல்ல வேண்டும். பல்லவன் தன்னைச் சமமாக மதித்துப் போற்றும் நண்பன் என்ற நம்பிக்கை தோன்றவேண்டும் என்று விரும்புகிறான் நந்திவர்மன். போர் முடிந்தவுடன், வெற்றியானாலும் தோல்வியானாலும் நிலைமை மாறும். அதியன் மீண்டும் சிற்றரசன் ஆவான்" என்றான் பசுபதி.

38. அதியமான் காணும் கனவு

கோட்டை வாயிலிலேயே பல்லவப் பேரரசின் அமைச்சரும் சேனாதிபதியும், கொங்கு நாட்டு மன்னன் அதியமானையும் அவனுடன் வந்த அமைச்சர் சேனாதிபதி முதலிய உயர்நிலை அரசு அலுவலர்களையும் வரவேற்று, மாலையணிவித்து அழைத்துச் சென்றனர். அரண்மனை வாயிலில் பல்லவ மன்னன் நந்திவர்மப் பல்லவ மல்லவன் நேரில் வந்து வரவேற்றான். தனக்குச் சமமான அரசர்களையும் சமயத் தலைவர்களையுமே அரசன் நேரில் வந்து வரவேற்பது அரசியல் முறைவழக்கம். ஆதலால் அத்தகைய வரவேற்பைப் பல்லவ மன்னன் அளித்தது அதியனுக்குப் பெருமையாகத் தோன்றியது. அதுபோலவே கொங்கு நாட்டு அமைச்சரும் சேனாதிபதியும் பல்லவர்களின் விருந்தோம்பலில் மனம் மகிழ்ந்தனர். தொடக்கம் மன நிறைவை அளித்ததால், அவர்களுக்குள் நடக்கவிருக்கும் பேச்சு வார்த்தைகளும் நன்முறையில் நடந்தேறும் என்று நம்பினர்.

அடுத்தநாள் மன்னர்கள் இருவரும் சந்தித்துக் கருத்துகளைப் பரிமாறிக்கொண்டார். நந்திவர்மன் மிகவும் நம்பிக்கையுடன் பேசினான். "பாண்டியன் ஒரு போர் வரும் வாய்ப்பு இருப்பதாகவே நினைக்கவில்லை என்பது நன்கு தெரியவந்துள்ளது. நாம் படை திரட்டும் செய்தி ஒற்றர்கள் மூலம் தெரிந்தால் கூட நம்மால் அவனைத் தோற்கடிக்க முடியும் என்று அவன் சற்றும் அஞ்சவில்லை. அந்தக் கர்வம்தான் இப்பொழுது அவனை அழிக்கப்போகிறது. அனுபவம்மிக்க அமைச்சர் ஓய்வுபெற்றுப் போய்விட்டார். அவர்தான் இந்தப் பாண்டியன் தந்தை அரசராக இருந்த காலத்தில் பல போர்களையும் நடத்தி வெற்றிகளைக் குவித்தவர். ஆகவே நெடுஞ்சடையனுக்கு அறிவுரை கூறவும் இப்பொழுது யாரும் இல்லை" என்றான்.

"அது மட்டுமல்ல பெண்ணாகடப் போரில் நம் தோல்விக்கு வழிகோலிய சாத்தஞ்சாத்தனும் நெடுஞ்சடையனும் இப்பொழுது பிரிந்துவிட்டார்கள். சாத்தனை உறையூருக்கு அனுப்பிவிட்டான் நெடுஞ்சடையன். சாத்தனோ படையைப் பற்றியும், போரைப்பற்றியும் கவலைகொள்ளாமல், காவிரியாற்றின் கரையைச் செப்பனிட முனைகிறான். ஆனால் ஒன்றுபட்டும் உறுதி. நாம் சற்றும் நேரத்தை வீணாக்காமல் மிகவும் வேகமாகப் பாண்டியனைத் தாக்க

வேண்டும். பாண்டிய சேனாதிபதி சாத்தன் கணபதி சிறந்த வீரன். போர்க்களம் பல கண்டவன். பாண்டிய நாட்டில் அனுபவம் மிக்க போராளிகளும் உள்ளனர். பதினாயிரம் வீரர்களைக் களத்தில் இறக்க அவனால் முடியும். அதற்குள் நாம் படை யெடுத்துச் செல்ல வேண்டும்" என்று தன் கருத்தை வெளியிட்டான் அதியமான்.

"ஆம் நாம் வேகமாக முன்னேறிச் சென்று பாண்டிய நாட்டிற்குள் புகவேண்டும். போர்க்களம் பாண்டிய நாட்டிற்குள் அமையவேண்டும். அவ்வாறு செய்தால்மட்டுமே அங்குள்ள மக்கள் அஞ்சுவார்கள். ஆள் சேதமும், பொருள்சேதமும், பயிர் நாசமும் எல்லாம் நடக்கும். நெடுஞ்சடையனிடம் மக்களுக்கு வெறுப்பும் ஏற்படும்" என்றான் பல்லவன்.

"அரசே! தகடூர் வஞ்சிக்கும் காஞ்சிக்கும் நடுவில் அமைந்திருக்கிறது. ஆகவே சேரர் படைகள் தகடூரை அடையும் பொழுது, தங்களுடைய படையும் வந்து சேர்ந்தால் குறைந்தது இருபதினாயிரம் வீரர்களும், அதற்கேற்ற யானை, குதிரை, தேர் ஆகியவையும் திரளும். அந்தப் படை முன்னேறத் தொடங்கினால், பாண்டியன் படை எங்கு வந்து மோதினாலும் அதைத் தோற்கடித்து, விரட் டி, நேரே மதுரை மா நகருக்கே செல்ல முடியும். நாம் அதற்கான நாள் எதுவென்று உறுதிசெய்தால் சேரமன்னருக்கு நான் தூதனை அனுப்பமுடியும்" என்று தன் திட்டத்தை வெளியிட்டான் அதியமான்.

"அமைச்சர், திணைக்கள நாயகம், சேனாதிபதி ஆகியோருடன் கலந்து ஆலோசித்த பின்னரே அவ்வாறு நாள் குறிக்க முடியும். நான் போர் செய்வதற்கான முடிவை எடுத்து, அதற்கான நடவடிக்கைகளுக்குத் தொடக்கம் குறித்து மூன்று மாதங்கள் ஓடிவிட்டன. இன்னும் பல வேலைகளும் நிறைவு பெறவில்லை. ஆள் திரட்டுவதும், பொருள் திரட்டுவதும், ஆயுதங்கள் செய்வதும் போன்ற ஏராளமானவை உள்ளன. மார்கழியில் போர் தொடங்கவேண்டும் என்று திட்டமிட்டிருந்தேன். அது முடியாது என்று இப்பொழுது தெரிகிறது. நாளை, அமைச்சர் முதலான அலுவலர்களையும் சேர்த்துக் கூட்டம் நடத்துவோம். அப்பொழுது போருக்கு நாள் குறிப்போம்" என்று பல்லவன் கூற, அதியனும் இசைந்தான்.

அவ்வாறே அடுத்த நாள் உயர்நிலை அரசு அலுவலர்களையும் அழைத்து விரிவான கூட்டம் கூடி முக்கியமானவர்களிடம் கருத்துகளை ஆராய்ந்தனர் அமைச்சரும்,

அரசரும். அரசின் பொருள் நிலையை விளக்கியுரைத்த திணைக்கள நாயகமும், சேனையின் பயிற்சியைப் பற்றி விளக்கிய சேனாதிபதியும் மேலும் நான்கைந்து மாதங்கள் தேவைப்படும் என்று கருத்துக் கூறினர் எல்லோர் கருத்துகளையும் ஆராய்ந்து, மழைக்காலத்தையும் கணக்கிட்டு இறுதியில் நாள் குறிக்கப்பட்டது. பங்குனித் திங்களில் பதினைந்தாம் நாள் பல்லவர் படையும், பதினாறாம் நாள் சேரர் படையும் தகடூரில் வந்து சேரவேண்டும் என்ற முடிவு எல்லோராலும் ஏற்கப்பட்டது. சேரநாட்டிற்குத் தூதுவனை அனுப்பிச் செய்தி அறிவிக்கும் பணியை அதியமான் ஏற்றுக்கொண்டான்.

போரைப் பற்றிய பேச்சுவார்த்தைகள் திருப்திகரமாக முன்னேறி, உகந்த முடிவும் எடுக்கப்பட்டதில் மகிழ்ச்சியடைந்த அதியன் பல்லவ சேனாதிபதியைத் தனிமையில் அழைத்து ஒரு விருப்பத்தை அறிவித்தான்.

"சேனாதிபதி! நீங்கள் தகடூருக்கு வந்தபொழுது என்னிடம் சில தகவல்களை அறிவித்தீர்கள். அதில் என்னைக் கவர்ந்த முக்கியமான தகவல் காஞ்சியிலிருந்து சென்ற ஓர் இளம் பெண், மதுரை அரண்மனையில் பல நாள் வசித்து, அங்கே நடப்பவற்றை அறிந்து வந்த அதிசயம்தான். அந்தத் துணிச்சல்காரியை நான் காண விரும்புகிறேன். உங்களால் ஏற்பாடு செய்ய முடியுமா?"

"கட்டாயம் முடியும் அரசே! ஆனால் அந்தப் பெண் அமைச்சரின் வளர்ப்பு மகள் போன்றவள். அவளை மதுரைக்கு அனுப்பிவைத்ததே அவர்தான். ஆகையால் நான் அமைச்சரிடம் சொல்லிவிடுகிறேன். அவர் ஏற்பாடு செய்து தங்களிடம் சொல்வார்' என்று கூறினார் சேனாதிபதி. அவ்வாறே அமைச்சரிடம் பேசினார்.

சற்றுநேரம் கழிந்தபின் பல்லவ அமைச்சர் கருணாகரன் காயத்ரி தேவியின் இல்லத்திற்கு விரைந்தார்.

"காயத்ரி! ஊர்வசி எங்கே?" என்று வினவினார் அமைச்சர்.

"ஏன்? அவளை வேறு எங்காவது அனுப்புவதற்குத் திட்டமிடுகிறீர்களா?" என்று ஓரளவு எரிச்சலுடன் திருப்பிக் கேட்டாள் ஊர்வசியின் அன்னை. "இல்லை... இல்லை! நான் எங்கும் அனுப்பவேண்டும் என்று நினைக்கவும் இல்லை, திட்டம் இடவும் இல்லை. ஆனால் ஒரு பெரிய இடத்திலிருந்து அவளுக்கு அழைப்பு வந்திருக்கிறது. உனக்கு விருப்பம் இல்லையானால் வேண்டாம்" என்று அவளுடைய ஆவலைத் தூண்டிவிட்டார் அமைச்சர்.

"பெரிய இடத்திலிருந்து அழைப்பா? என்ன சொல்கிறீர்கள்? விவரமாகச் சொல்லுங்கள்" என்று வேண்டினாள் காயத்ரி. அவளுடைய குரலில் சற்று ஆவல் தோன்றியது.

"கொங்கு நாட்டு மன்னர் அதியமான் நம் காஞ்சி அரண்மனையில் விருந்தினராக வந்து தங்கியிருக்கிறார். அவர் நம் ஊர்வசியைச் சந்திக்கவேண்டும் என்று விரும்புகிறார்" என்று அறிவித்தார் அமைச்சர்.

"கொங்குநாட்டு மன்னருக்கு இங்கே காஞ்சியில் ஒரு மூலையில் வாழும் ஊர்வசியை எப்படித் தெரியும்?" என்று வியப்புடன் வினவினாள் காயத்ரி.

"நம் சேனாதிபதி அண்மையில் தகடூருக்குச் சென்றிருந்தார். அப்பொழுது ஊர்வசி மிகத் துணிச்சலுடன் மதுரை அரண்மனைக்குள் புகுந்ததையும், திறமையுடன் செயலாற்றியதையும் எடுத்துரைத்தார். அவளுடைய அழகையும் இளம் பருவத்தையும் கூடக் குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆகவே இவ்வளவு அழகும், துணிச்சலும், திறமையும் நிறைந்த பெண்ணைக் காண வேண்டும் என்று அவருக்குத் தோன்றியது இயல்பே. இப்பொழுது அரசாங்க வேலையாகக் காஞ்சிக்கு வந்ததாலும், அதோடு ஊர்வசியையும் காணலாம் என்று எண்ணுகிறார். உனக்கு அவளை அவர் காண்பது பிடிக்கவில்லையானால் விட்டுவிடுவோம்" என்று அவருக்கு இதில் எந்த அக்கறையும் இல்லை என்ற மட்டில் பேசினார் அமைச்சர். ஆனால் அது காயத்ரியின் ஆவலைத் தூண்டிவிடும் என்று அவருக்குத் தெரியும்.

"நான் அப்படிச் சொல்லவில்லையே! அவருக்கு அவளை எப்படித் தெரியும் என்றுதானே கேட்டேன். இப்பொழுது புரிந்துவிட்டது. அவளை இனிமேலும் அதைப் போன்ற வேறு ஏதாவது ஆபத்தில் கொண்டுபோய்த் தள்ளிவிடும் திட்டமா என்று தெரிந்து கொள்வதற்காகத்தான் கேட்டேன். கொங்கு மன்னர் யார், எப்படிப்பட்டவர், அவர் ஊர்வசியை ஏன் காண விரும்புகிறார் என்பதையும் சொல்லுங்கள்" என்று வேண்டினாள் காயத்ரி. ஓர் அன்னையின் மனப்போக்கை உணர முடிந்தது அமைச்சரால்.

"கொங்குமன்னர் அதியமான் இளைஞர். இளமையிலேயே மன்னனாக முடிசூட்டிக் கொண்டவர். இன்னும் திருமணம் செய்து கொள்ளவில்லை. தகடூர் அரியணையில் பட்டத்தரசியின் இடத்தை இதுவரை ஒரு பெண்ணும் நிரப்பவில்லை. அந்த பாக்கியம் ஒரு வேளை ஊர்வசிக்குக் கிடைக்கலாம். அவளை

நானும் என் மகள் போலக் கருதுவதால்தான் நான் இந்தச் சந்திப்பிற்கு இசைந்தேன். ஊர்வசியின் வாழ்வில் ஒரு பெரிய மாற்றம் - நாம் கற்பனைகூடச் செய்யமுடியாத மாற்றம் ஏற்படுவதற்கு இந்தச் சந்திப்பு வழிதிறக்கலாம்" என்று தன்னுடைய உள்நோக்கத்தையும் வெளிப்படுத்தினார் அமைச்சர் கருணாகரன்.

காயத்ரியின் பேராசை மேலெழுந்து நின்றது. "உண்மையாகவா சொல்கிறீர்கள்! அவ்வளவு பெரிய பாக்கியம் என் மகளுக்குக் கிடைக்குமா?" என்று ஏக்கத்துடன் வினவினாள்.

"ஏன் கிடைக்கக் கூடாது? வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கிறேன் நான்! அதற்குப்பின் நடப்பது ஊர்வசியின் திறமையைப் பொறுத்தது. அவள் உன் மகள் அல்லவா? அதியமானை அடிப்படுத்த அவளால் முடியும் என்றுதான் நான் நம்புகின்றேன்" என்று பொருள் பொதிந்த பார்வையுடன் காயத்ரியிடம் பேசினார் அமைச்சர். "இது என்ன முகப்புகழ்சியா அல்லது வஞ்சப் புகழ்ச்சியா?" என்று நாணத்தால் சிவந்த முகத்துடன் தலை குனிந்தாள் காயத்ரி, ஆனால் அந்த நாணத்திற்கிடையிலும் ஒரு மகிழ்ச்சியின் கதிர் மின்னியது என்பதைக் கண்டார் அவர்.

"இரண்டும் அல்ல! நான் உண்மையைத்தான் சொல்கிறேன். உன்னை முதன்முதலாகக் கண்டபொழுது உன் அழகும் இளமையும் என்னை எவ்வாறு கவர்ந்தன என்பது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. உன் மகள் உன்னையும் மிஞ்சியவள் அதனால்தான் அவள் வெற்றியடைவாள் என்று நான் நம்புகின்றேன்" என்று மீண்டும் புகழ்ச்சி கூறினார், பேச்சில் வல்லுநரான பல்லவ அமைச்சர்.

"அறம் வளர்த்த நாதரின் ஆசி பலனளிக்கிறது என்று தோன்றுகிறது. இரண்டு நாள்களுக்குமுன் வரதப்பர் மனைவி விசாலாட்சியுடன் அவள் அந்த மடத்திற்குப் போயிருந்தாள். விசாலாட்சியின் கொடிய நோயைத் தீர்த்துவைத்தவர் அவர். ஊர்வசிக்கு விரைவில் மாங்கல்ய பாக்கியம் கிடைக்கும் என்று கூறி ஆசீர்வதித்தாராம்" என்று விளக்கினாள் காயத்ரி.

"நல்லது! ஊர்வசியைக் கூப்பிடு. அவளிடம் பேசுவோம்" என்றார் அமைச்சர்.

மதுரை அரண்மனையில் அன்னை மகாராணியின் ஆதரவுடன் வாழ்ந்த நாள்களில் அரண்மனை வாழ்வின்

ஆடம்பரத்தையும், அதிகாரச் சுவையையும் அனுபவித்த ஊர்வசியின் உள்ளத்தில் அந்த இன்ப உணர்வு இன்னும் பசுமையாக நின்றது. இன்னும் சில நாள்கள் அங்கே வாழ முடிந்திருந்தால் பாண்டியன் நெடுஞ்சடையனே தன் கைவலயத்தில் வந்திருப்பான் என்று நம்பினாள் அவள்.

இப்பொழுது அதியமானிடமிருந்து அழைப்பு வந்திருக்கிறது என்று அமைச்சர் கருணாகரனும், அன்னை காயத்ரியும் அறிவித்த பொழுது அன்னையைப் போலவே மகளும் அறம் வளர்த்த நாதர் வழங்கிய மாங்கல்ய பாக்கிய ஆசியைத்தான் நினைவு கூர்ந்தாள். அவளுடைய அழகும் இளமையும் அறிவும் திறமையும் எந்த ஆண்மகனையும் ஆட்கொள்ள வல்லவை என்று அவள் உண்மையிலேயே நம்பினாள். ஆகவே கொங்கு மன்னனின் அழைப்பை ஏற்று அவனைச் சந்திக்கவேண்டும் என்று அவளை அதிகம் வற்புறுத்த வேண்டிய நிலைமை ஏற்படவில்லை. அவள் முழு விருப்பத்துடனும் உற்சாகத்துடனும் அன்று மாலையிலேயே சென்றாள். அமைச்சரின் ஆலோசனைப்படி வெளியார் பலர் அறியத் தேவையில்லை என்று அமைச்சரின் தேரிலேயே காஞ்சி அரண்மனைக்குச் சென்றாள்.

அதியனின் மெய்க்காப்பாளன் ஊர்வசியை அதியனின் அறைக்குள் விட்டுவிட்டு வெளியேறினான். சற்றும் தயக்கமோ, அச்சமோ இன்றி, தன்முன் மிகுந்த தன்னம்பிக்கையுடனும், பெண்மைக்கே உரிய அடக்கத்துடனும் வந்து நின்ற ஆரணங்கைக் கூர்ந்து நோக்கினான் கொங்கு நாட்டின் அரசன். தான் எதிர்பார்த்தது முற்றிலும் சரியே என்று விளங்கியது அவனுக்கு.

உருக்கிய பொன்னில் முக்கியெடுத்தது போன்ற மேனி ஒளியும் வண்ணத்துப் பூச்சிபோல் வலமும் இடமும் பாய்ந்து தைத்த வேல் விழிகளும், அவைகளுக்கு மேலே அமைந்த வில்லென வளைந்த புருவங்களும் வெண்ணுதலில் மின்னிய வண்ணப்பொட்டும் அதியனின் கண்ணைப் பறித்தன. வெண்ணிலவை விழுங்க முயலும் கருநாகம்போல் கால்கள் வரை நீண்டு கிடந்த கார்குழல் அவளுடைய முகத்தின் ஒளியைப் பெருக்கிக் காட்டியது. முத்துப் பற்களை முற்றிலும் மூடிவைக்காமல் சற்றே வெளிக்காட்டிய செவ்விதழ்களில் மோகன முறுவல் முட்டிநின்றது. ஒவ்வோர் உறுப்பையும் தனித்தனியாக வடித்தெடுத்து, பின்னர் அவற்றின் முழுமையும் செழுமையும் தெரியுமாறு ஒன்று சேர்த்து உருவாக்கிய வடிவம் போல் அவளுடைய வண்ண உடல் வனப்பால் ஒளிர்ந்தது. மதர்ப்புடன்

எழுந்து நின்ற மார்பகமும், அவற்றைச் சுமக்க முடியாமல் துவண்டது போன்ற துடியிடையும், அதன்கீழ் அகன்று விரிந்து அழகு சேர்த்த பின்புறமும், அதியனின் மனத்தில் கற்பனைக் காட்சிகளுக்கு வித்திட்டன.

"என் எதிர்பார்ப்பு வீண் போகவில்லை!" என்ற முதல் மொழிகளுடன் அவளை வரவேற்றான் கொங்கு வேந்தன். அவள் அவன் முகத்தில் தன் வேல் விழிகளைப் பாய்ச்சினாள்.

"என்ன எதிர்பார்த்தீர்கள்?" அவள் ஆவலுடன் வினவினாள். அந்தக் குரலிலே யாழ் இசை இல்லை. அந்த அழகுச் சிலைக்கு ஏற்ற குரல் வளம் இல்லையே என்று எண்ணினான். அவன் "உன் பெயர் ஊர்வசி. அல்லவா?" என்று அவளுடைய வினாவிற்கு விடையளிக்காமல் வேறொரு வினாவை எழுப்பினான். "ஆம். என் பெயர் ஊர்வசிதான். அதுதான் உங்களுக்குத் தெரிந்திருக்கிறதே" என்று தெரிந்ததை ஏன் தெளிவுசெய்கிறீர்கள் என்று கேட்காமல் கேட்டாள் அவள்.

"அது நீ பிறந்த பொழுதே உனக்கு இட்ட பெயரா அல்லது நீ குமரியாக வளர்ந்தபின் வைத்த பெயரா?" என்று மேலும் தன் போக்கிலேயே வினவினான் அதியன்.

"நான் பிறந்தவுடன் இட்டபெயராகத்தான் இருக்கவேண்டும். ஏனென்றால் எனக்குத் தெரிந்து என்னை வேறு பெயரால் யாரும் அழைத்ததில்லை" என்று அவன் கேள்விகளின் பொருள் விளங்காவிட்டாலும் விடையளித்தாள் ஊர்வசி.

"நான் ஏன் இவ்வாறு கேட்கிறேன் என்று வியப்படைகிறாய் நீ. அதற்குக் காரணம் உண்டு! ஊர்வசி தேவலோகத்தின் பேரழகி என்று புராணங்கள் பேசுகின்றன. நீ அவளைப் போன்ற அழகுடையவள் என்பதில் ஐயம் இல்லை. உன் பெற்றோர்கள் நீ பிறந்தவுடனேயே அந்தப் பெயரை உனக்குச் சூட்டினார்கள் என்றால் அவர்கள் எவ்வளவு தீர்க்க தரிசனம் உள்ளவர்களாக இருப்பார்கள் என்று வியந்தேன் நான். அதனால்தான் கேட்டேன்" என்று விளக்கினான் அவன்.

அவள் நாணித் தலைகுனிந்தாள். அவள் அழகி என்பது அவளுக்கே தெரியும். ஆனால் அதை இதுவரை யாரும் இவ்வளவு புகழ்ந்து பேசியதில்லை. அதிலும் ஒரு நாட்டின் அரசன் இவ்வாறு புகழ்ந்தால்! அவள் மனம் மிகவும் நிறைந்துநின்றது.

"ஆனால் அழகைமட்டும் வைத்துக்கொண்டு பாண்டியனின் அரண்மனைக்குள் நுழைந்திருந்தால் அங்கே திறமையாகச் செயலாற்றவோ உயிருடன் திரும்பவோ முடியாது என்பது எனக்குத் தெரியும். அதனால்தான் அழகும் துணிவும் அறிவும் மதியும்மிக்க அந்தக்கன்னியைக்காணவேண்டும்என்றுவிரும்பினேன். கண்டதால் பெருமகிழ்ச்சியும் அடைகிறேன்" என்று மேலும் பாராட்டினான் அவன்.

"தங்களைச் சந்திக்கவும் இவ்வாறு உரையாடவும் கிடைத்த வாய்ப்பை ஒரு பெரிய பாக்கியமாகக் கருதுகிறேன் நான்".

"எனக்கு ஓர் ஆசை. அதை நீ நிறைவேற்றுவாயா?" என்று வினவினான் அதியன்.

அவள் ஒருகணம் திடுக்கிட்டாள். இவன் என்ன ஆசைப்படுகிறான்? தன்னைச் சந்தித்த உடனேயே அழகையும் துணிச்சலையும் புகழ்ந்து பேசி, ஆசையை நிறைவேற்றுவாயா என்று கேட்பதன் பொருள் என்ன? அவன் ஓர் அரசன். தகாத வார்த்தைகள் பேசமாட்டான் என்று மனம் தேறினாள். "என்ன ஆசை? சொல்லுங்கள்" என்றாள்.

அதியன் கனவு காண்பதுபோல் கண்களை எங்கோ தொலைவில் பதித்துக்கொண்டு பேசினான். "நான் பாண்டியன் அரண்மனையில் இரண்டாண்டு காலம் வாழ்ந்தவன். அந்த அரண்மனையின் அமைப்பையும் அறைகளின் வரிசையையும் நன்றாக அறிந்தவன். அது போன்ற ஓர் அரண்மனையைத் தகடூரில் கட்ட வேண்டும் என்று கனவு காண்பவன். அந்த அரண்மனைக்குள் நீ நுழைந்ததும் அங்கு வாழ்ந்த முறையும், அங்கு நீ செய்து முடித்த வேலைகளும் நீ பேச, அதை நான் கேட்டு மனம் குளிரவேண்டும். பாதுகாப்பு மிக்க அந்தச் சூழலில் நீ நெடுஞ்சடையன் கண்ணிலும் சாத்தஞ்சாத்தன் கண்ணிலும் மண்தூவி அங்குள்ள எல்லாவற்றையும் கண்டறிந்த விவரத்தையும், பிடிபடும் நேரம் வந்த பொழுது மீண்டும் அவர்களை எல்லாம் ஏமாற்றி அங்கிருந்து வெளியேறிய திறமையையும் நீயே சொல்வதைக் கேட்டு நான் மகிழவேண்டும். சேனாதிபதியும் அமைச்சரும் சுருக்கமாகச் சொன்னகதை, என்னை உற்சாகப் படுத்தியது என் ஆவலையும் தூண்டிவிட்டது. முழுக் கதையும் கேட்டால் அதுவும் அந்தக் கதையின் நாயகியான நீயே கூறக்கேட்டால் நான் பேருவகை பெறுவேன். சொல்வாயா?"

அந்த கோரிக்கையை விடுத்தவுடன் அவனுடைய பார்வை மீண்டும் ஊர்வசியின் மதிமுகத்துக்கே திரும்பியது. அதியமான் அவனுக்கு மட்டுமே தெரிகின்ற இன்பக் காட்சி எதையோ ரசித்துக்கொண்டிருக்கிறான் என்று எண்ணினாள் அவள். பாண்டியன் மீது அவன் அடங்காத சினமும் வெறுப்பும் கொண்டிருக்கிறான் என்பதும் அவளுக்குப் புலனாகியது. அந்த முறையில் அவர்கள் இருவருக்குள் ஓர் ஒருமைப்பாடும் மன ஒற்றுமையும் இருந்தன என்பதை அவள் உணர்ந்தாள்.

"ஆகா! சொல்கிறேன், கேளுங்கள். அதை எண்ணும் பொழுதும், மீண்டும் என் மனக்கண் முன் கொண்டுவரும் பொழுதும் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்" என்ற முன்னுரையுடன் அவள் எல்லாவற்றையும் விரிவாக எடுத்துரைத்தாள். அவள் பேசி மகிழ்ந்தாள்! அவன் கேட்டு மகிழ்ந்தான்!.

கதை முடிந்தவுடன் அவன் அவளுடைய கைகள் இரண்டையும் பற்றிக்கொண்டு "நீ தகடூர் அரண்மனைக்கு வந்து என் விருந்தினளாகச் சில நாள் வசிக்கவேண்டும்" என்று வேண்டினான் அதியன்.

39. சேரன் விடுத்த செய்தி

"நான் சொன்னேன் அல்லவா! இந்த ஊர்வசி மறுபடியும் நம் பாதையில் குறுக்கிடுவாள் என்று! அதியன் அவளைத் தகடூருக்கு அழைத்ததும், அவள் அதற்கு இசைந்ததும் அதன் அறிகுறிகள் தான்" என்று அறம்வளர்த்த நாதரிடம் கூறினான் பசுபதி. சற்று நேரத்திற்குமுன் பரதன் சுவாமிகளைச் சந்தித்து அந்தத் தகவலை அறிவித்தான். காயத்ரிதேவியின் வீட்டில் பணியாற்றும் வேலைக்காரன் அறிவித்த தகவல் கொங்கு மன்னனைச் சந்தித்துத் திரும்பிவந்த ஊர்வசியும் அவனுடைய அன்னையும் பேசிக்கொண்டதை ஒற்றுக் கேட்டவேலையாள் பரதனிடம் கூறிய செய்தி அது.

"நாம் பரதனை முடுக்கிவிட்டு ஊர்வசியைக் கண்காணிக்கச் சொன்னது இவ்வளவு பயன் அளிக்கும் என்று நான் கருதவில்லை. ஊர்வசியின் நடவடிக்கைகளில் அதியமானின் பங்கும் சேரும் என்று சற்றும் நினைக்கவில்லை. ஒரு வேளை வரதப்பனுக்குக் கூட இந்தச் சந்திப்பைப்பற்றித் தெரியுமா என்பது சந்தேகமே. அமைச்சரின் தேரிலேயே ஊர்வசி அரண்மனைக்குச் சென்று அதியமானைச் சந்தித்ததால் வெளியில் யாருக்கும் தெரிய வாய்ப்பில்லை" என்றார் சுவாமிகள்.

"அதியன் பாண்டியருடன் குலப்பகைமை பூண்டவன். ஊர்வசி பாண்டியருக்குத் துரோகம் செய்ய மதுரை அரண்மனைக்குள் புகுந்து மயிரிழையில் உயிர் தப்பியவள். ஆகவே அவளுக்கும் தீராத பகை இருக்கும். அவர்கள் இருவரும் சந்தித்ததும், மீண்டும் தகடூர் அரண்மனைக்கு ஊர்வசி போவதும் நல்ல நோக்கத்துடன் இருக்க வாய்ப்பில்லை. எனவே அவள் வருகையின்போது மிகக் கூர்மையாகத் தகடூர் அரண்மனை நிகழ்ச்சிகளைக் கண்காணிக்க வேண்டும்" என்று எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துரைத்தான் பசுபதி.

அன்று மாலையில் வரதப்பர் மடத்திற்கு வந்து சுவாமிகளைச் சந்தித்த பொழுதுதான் அதியன் காஞ்சிக்கு வந்தபொழுது, ஊர்வசியைச் சந்தித்தது ஒரு புறம் இருக்க, அதைவிட முக்கியமான சில முடிவுகள் எடுக்கப்பட்டன என்பதைத் தெரிந்துகொண்டனர் சுவாமிகளும் பசுபதியும். மிகத் திறமையாகச் செய்திகளைக் கறந்தார் சுவாமிகள்.

"கொங்கு மன்னர் காஞ்சிக்கு வந்து மிகவும் மனம் மகிழ்ந்து போயிருப்பாரே. நாட்டியமும் நாடகமும், வாட்போரும், மல்யுத்தமும் எல்லாம் கண்டுகளித்தார் அல்லவா!" என்று பேச்சைத் தொடங்கினார் அறம் வளர்த்த நாதர்.

"ஆமாம் அரசர் தெளிவாகச் சொல்லியிருந்தார்! எவ்வளவு பொருள் செலவானாலும் கவலை இல்லை, கொங்கு வேந்தர் நம் விருந்தோம்பலில் மனம் நிறைய வேண்டும் என்று! அதுபோலவே எல்லாம் நடந்தது. அரசரும் அமைச்சரும் மிகவும் மனம் மகிழ்ந்தனர்."

"ஆனால் இந்தக் கேளிக்கைகள் மட்டும் போதாதே. போர்த்திட்டங்களும் அவருக்குத் திருப்தி அளிக்கவேண்டுமே" என்று மெல்லத் தூண்டிவிட்டார் சுவாமிகள்.

"எங்கள் மன்னர் ராஜதந்திரத்தில் வல்லவர். இந்தப் போரில் பல்லவருடனும் சேரருடனும் ஒப்பிடும்போது கொங்கு வேந்தர் ஒருசிற்றரசர் என்பது மூவருக்கும் தெரியும். ஆனால் தகடூர், காஞ்சிக்கும் வஞ்சிக்கும் இடையில் அமைந்திருப்பதால், மற்ற இருவரோடும் தொடர்புகொள்ளும் வசதி கொங்கு மன்னருக்கு உள்ளது. ஆகவே இந்த முக்கூட்டுப் போரில் மையப்புள்ளியாக விளங்கப்போவது தகடூர் என்று உறுதிசெய்துவிட்டோம். அதியன் நடுநாயகமாக விளங்குவார் என்ற எண்ணத்தை அவருடைய மனத்தில் ஊன்றிப் பதித்துவிட்டார் எங்கள் அரசர். மூன்று நாடுகளிலிருந்தும் உள்ள படைகள் தகடூரில் ஒன்றாக இணையும். நம் படை பங்குனித் திங்கள் பதினைந்தாம் நாள் தகடூரை அடையும். சேரர் படை அதற்கு அடுத்த நாள் அங்கு வந்து சேரும். அங்கே திரண்டிருக்கும் கொங்கர் படையும் சேர்ந்து ஒரு மாபெரும் படை தகடூரிலிருந்து புறப்பட்டுப் பாண்டிய நாட்டில் நுழையும். அதைக் கண்டு பாண்டியன் மதுரையைவிட்டு ஓடி ஒளிய நேரிடும்! அல்லது எதிர்த்துப் போரிடத் துணிந்தால் அவனது படை துடைத்தெறியப்படும்" என்று பல்லவ மன்னன் பேசிய வீரவசனத்தை அப்படியே எடுத்துரைத்தார் பல்லவ அரசின் திணைக்கள நாயகமான வரதப்பர்.

"நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. கற்பனைபோல் தோன்றுகிறது. ஆனால் நீங்கள் சொல்வது உண்மையே. இவ்வளவு பெரிய படையெடுப்பில் இரண்டு பேரரசர்களுக்கு ஒப்பாகச் சிற்றரசராகிய அதியன் நடத்தப் படுவதும்,அதில் நடுநாயகமாக விளங்க வாய்ப்பளித்ததும் கொங்கு மன்னருக்குப் பெரும் மனநிறைவை அளித்திருக்கும்" என்று மேலும் புகழ்ந்தார் நாதர்.

"ஆம் சேரனுடன் தொடர்புகொள்ளும் பணியை அவரே ஏற்றுக்கொண்டார். இன்னும் ஓரிரு நாள்களில் அவரே விவரமாக எழுதிச் சேரருக்கு ஓலை அனுப்பி விடுவார். இங்கிருந்து நெடுந்தூரம் பயணம் செய்து வஞ்சிக்கு ஒரு தூதனை அனுப்ப வேண்டிய தொல்லை இல்லை" என்று மேலும் திருப்தியுடன் கூறினார் வரதப்பர்.

"நான் நாளைக்கே என் தலைமை மடத்திற்குத் திரும்புகிறேன். அடுத்த முறை வரும்பொழுது மீண்டும் சந்திப்போம்" என்று விடைபெற்றார் அறம் வளர்த்த நாதர்.

"நாளைக்கே போகிறீர்களா! இன்னும் சில நாள்கள் தங்குவீர்கள் என்றல்லவா எண்ணினேன்" என்று வியந்தார் வரதப்பர்.

"அங்கே செய்யவேண்டிய சிலசெயல்கள் உள்ளன. நாளைக்கே போகவேண்டும்" என்று நாதர் வலியுறுத்தவே அவரைப் பாதங்களைத் தொட்டு வணங்கி வெளியேறினார் பல்லவ நாட்டின் திணைக்கள நாயகம்.

திரைமறைவில் அமர்ந்து இந்த உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்த பசுபதி வெளியில் வந்து சுவாமிகளைப் பாராட்டினான்.

"சுவாமி! வரதப்பரிடமிருந்து செய்திகளை வரச்செய்த திறமை மட்டுமன்றி, நாளைக்குப் புறப்படவேண்டிய கட்டாயம் வந்துவிட்டது என்பதை உணர்ந்து, அவரிடம் விடையும் பெற்றதை என்னால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. அவரிடம் சொல்லாமல் நாம் திடீரென்று நாளைக்குப் புறப்பட்டுச் சென்றால் அவருக்கு ஐயம் எழக்கூடும். இனி நாமும் மையப் புள்ளிக்குச் சென்று நடுநாயகமாக விளங்கவேண்டிய கட்டம் வந்துவிட்டது. அதியன் சேரனுக்குக் கொடுத்தனுப்பும் ஓலையைக் கைப்பற்றியே ஆகவேண்டும். அதற்காகத்தான் கண்ணப்பனையும், உத்தமனையும் கொண்டு வந்திருக்கிறோம்" என்றான் பசுபதி.

தகடூருக்கு வந்து சேர்ந்த அன்றே தங்கவேலனிடமும், உலகணனிடமும் சேரநாட்டுக்குத் தூதன் போவதைப்பற்றிய தகவலை எப்படியாவது அறிய வேண்டும் என்று கட்டளையிட்டான் ஒற்றர்படைத் தலைவன். அன்று மாலையிலேயே சுந்தர மூர்த்தியிடம் பேச்சுக் கொடுத்தான் தங்கவேலன்.

"எங்கள் அரசர் காஞ்சியிலிருந்து திரும்பியபின் மிகவும் மகிழ்ச்சியுடன் இருக்கிறார் பல்லவ நாட்டில் அவருக்கு மிகப்பெரிய வரவேற்பு அளிக்கப்பட்டதாம். அது மட்டுமல்ல, பாண்டிய நாட்டின்மீது படையெடுப்பு மிகவிரைவிலேயே நடக்கும் என்பது உறுதியாகிவிட்டது. அந்தப் போரில் எங்கள் அரசர் மிக முக்கியமான பங்கு வகிப்பார். பல்லவர் படையும், சேரர்படையும் இங்கேதான் வந்து சேரும் அரசரும் அமைச்சரும் ஒன்றாக அமர்ந்து திருமுக நாயகத்தை அழைத்து விவரமாக ஓலை எழுதச் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் ஓரிரு நாள்களில் சேரனிடம் அனுப்புவதற்காகத் தான் அந்த ஓலை" என்று சுந்தரமூர்த்தி தகவல் தெரிவித்தான். இது பெரும்பாலும் அவர்கள் அறிந்த செய்தியே. தூதன் சேரனுக்கான ஓலையுடன் இன்னும் போகவில்லை என்பது உறுதியாகிவிட்டது. ஆயினும் சரியாக எப்பொழுது தூதன் புறப்படுவான் என்றோ, செல்லும் தூதன் யார் என்றோ தெரியவில்லை.

சாத்தனும் இளந்தத்தனும் உலகணனை அழைத்து விரிவாகப் பேசினர்.

"சேரனுக்கு விரைவில் ஓலை அனுப்பியே ஆகவேண்டும் சேனாதிபதியிடம் அரசரோ அமைச்சரோ ஒரு தகுதியுள்ள ஆளைத்தேர்ந்தெடுக்கும்படி கேட்டிருப்பார்கள். அந்த ஆள் யார் என்று தெரியவேண்டும்" என்றான் இளந்தத்தன்.

"அதுமட்டுமல்ல. இங்கிருந்து வஞ்சிக்குச் செல்லும் தூதன் ஒரு நாளில் போய்ச் சேர முடியாது. வழக்கமாகச் சேரநாட்டிற்குப் போகும் வழியில் இரவில் தங்குவதற்கு வசதியான இடங்கள் யாவை என்று தெரியவேண்டும். அது தெரிந்தால்தான், நாம் தேவையான ஏற்பாடுகளை முன்னதாகவே செய்ய முடியும்" என்று மேலும் ஒரு தேவையைச் சுட்டிக் காட்டினான்சாத்தன்.

உலகணன் அவனுக்குப் பழக்கம் உள்ள ஒருசில படைத்தலைவர்களிடமும், வீரர்களிடமும் மறைமுகமாக விசாரித்தும் பயன் விளையவில்லை. சேரநாட்டிற்குச் செல்லும் வீரன் சிறந்த குதிரைவீரனாக இருக்க வேண்டும். ஏனென்றால் மலையுச்சியில் ஏறியும், அங்கிருந்து மீண்டும் கீழே இறங்கிக் கடற்கரை வரையும் சென்று வஞ்சியை அடைவதற்கு நல்ல பயிற்சியுள்ள குதிரையும் அதனைச் செலுத்தும் திறமையுள்ள வீரனும் தேவை என்பது தெரிய வந்தாலும், சேனாதிபதி யாரைத் தேர்ந்தெடுக்கிறார் என்பதை யாராலும் சொல்ல முடியவில்லை.

சேர நாட்டினளான காமினியையே மீண்டும் நாடிச் சென்றான் அவன். அவளோடு தொடர்புடைய வீரர்கள் பலரும் உள்ளதோடு, சேர நாட்டிற்குப் போகும் வழியில் தங்குவதற்குத் தக்க இடங்களைப் பற்றியும் அவளுக்குத் தெரியும் என்ற எண்ணமே அவனைச் சித்திரைத் தெருவிற்கு உந்தியது. தன்னுடைய தேவைகளைக் காமினியிடம் விளக்கியபொழுது அவள் நம்பிக்கையுடன் பேசினாள்.

"இங்கே அடிக்கடி வரும் துணைத்தளபதி ஒருவர் இருக்கிறார். அவர் இன்றோ நாளையோ கட்டாயம் வருவார். எனக்கு ஓர் ஆளைச் சிவபுரத்திற்கு அனுப்பவேண்டியுள்ளது. தனியாகப் போவதற்குத் தயங்குகிறான் அந்த ஆள். சேர நாட்டிற்குச் செல்லும் வீரர்கள் யாராவது இருந்தால் அவர்களுடன் என் ஆளையும் அனுப்ப வேண்டுகிறேன் என்று நான் சொல்கிறேன். அவர் கட்டாயம் என்னிடம் அங்குச் செல்லும் வீரன் யார் என்று சொல்வார்" என்றாள் அவள். வேறு வழி ஒன்றும் இல்லாததால் அவளிடமிருந்து செய்திக்காகக் காத்திருந்தான் உலகணன்.

சாத்தனின் யோசனைப்படி காமினியிடமிருந்து செய்தி வருவதற்குமுன் தூதன் புறப்படுவதானால் அறிந்து கொள்வதற்காக, தகடூரிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் சாலையைக் கண்காணிக்கவும் ஏற்பாடுசெய்தான்.

காமினி உறுதியாகச் சொன்னவாறே இரண்டாவது நாள் தகவல் கிடைத்தது. அவன் எதிர்பார்த்ததை விடத் தெளிவான செய்தியே கிடைத்தது. மணிகண்டன் என்ற பெயருள்ள இளைஞன் அடுத்த நாள் புறப்படுவான் என்றும், காமினி அனுப்ப விரும்பிய ஆளை அவனுடன் அனுப்பலாம் என்றும் துணைத்தளபதி அவளிடம் தெரிவித்தார்.

"நான் அனுப்பும் ஆள் நாளை காலையில் மேற்குக் கோட்டை வாயிலுக்கு வெளியில் குதிரையுடன் காத்திருந்தால் மணிகண்டனுடன் செல்லலாம் என்று தளபதி சொன்னார். நீங்கள் யாரையாவது மணிகண்டனுடன் அனுப்ப விரும்பினால் அனுப்புங்கள். இல்லை யென்றால் என் ஆளுக்கு உடல்நலம் இல்லாததால் அவன் வரவில்லை என்று நான் சொல்லி அனுப்பிவிடுகிறேன். உங்களுக்குத் தேவையான தகவல் கிடைத்துவிட்டதல்லவா?" என்றாள் காமினி.

"வேண்டாம் வேண்டாம்! நான் ஓர் ஆளை அனுப்பத்தான் போகிறேன். நல்லது, இங்கிருந்து புறப்பட்டால் எங்கே முதலில் தங்குவார்கள் என்பது தெரிந்ததா?" என்று வினவினான் உலகணன்.

"முதல்நாள் திருப்பூரிலும், இரண்டாவது நாள் மதுக்கரையிலும் தங்குவதுதான் வழக்கமாம்" என்று தெரிவித்தாள் காமினி. அவளுக்கு மனம் நிறையும் வண்ணம் பொற்காசுகள் வழங்கிவிட்டு, மடத்திற்குச் சென்று செய்தி அறிவித்தான் உலகணன்.

தகவல் கிடைத்தவுடனேயே தான் உருவாக்கியிருந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தினான் சாத்தன். ஊர்வசியின் தூதனான சாரங்கனை நண்பனாக்கி அவனிடமிருந்து ஓலையை அவனறியாமல் கைப்பற்றிய கண்ணப்பன், மணிகண்டனுடன் பயணம் செய்து திருப்பூர் சத்திரத்தில் இரவில் தங்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. உதயனின் கை வண்ணத்தால் உருமாறி இப்பொழுது ஒரு வணிகனைப்போல் தோற்றமளித்த சாத்தனும் போலி ஓலை வல்லுநனான உத்தமனும் முன்னதாகவே சென்று திருப்பூர் சத்திரத்தில் தங்கியிருப்பர். மணிகண்டனை மயக்கமான உறக்கத்தில் ஆழ்த்திவிட்டு, ஓலையைக் கைப் பற்றி, சாத்தனிடம் கொடுக்கவேண்டும் சாத்தன் அதைப்படித்துப் பார்த்தபின் தேவையான மாற்றங்கள் செய்யப்பட்ட வேறு ஓர் ஓலையை எழுத, உத்தமன் அதை உண்மை ஓலைபோல் உருவாக்கவேண்டும்! கண்ணப்பன் அந்த ஓலையை முன்பு இருந்தது போலவே மணிகண்டன் வைத்திருந்த இடத்தில் வைக்க வேண்டும்.

ஒரு வேளை ஓலை கிடைத்தவுடன் சேரன் ஒரு பதில் ஓலை எழுதிக்கொடுத்தனுப்பும் சம்பவம் ஏற்படலாம். அந்த ஓலையின் உள்ளடக்கம் அதியனின் ஓலையிலிருந்து மாறுபட்டால் தான் அனுப்பிய ஓலைக்குப் பதிலாகச் சேரனுக்குக் கிடைத்தது வேறு ஓலை என்பதை அதியன் புரிந்துகொள்வான். ஆகவே மணிகண்டன் திரும்பி வரும்பொழுதும் இதே வேலையை நிறைவேற்ற வேண்டும். கண்ணப்பன் காலையில் எழுந்தவுடனேயே கொடிய நோய்வாய்ப்பட்டதுபோல் நடித்துத் திருப்பூர் சத்திரத்திலேயே தங்கினால் போதும். திருப்பூருக்கு அப்பால் சேரநாட்டை நோக்கிச் செல்லவேண்டிய தேவை இல்லை என்றும் முடிவானது.

திட்டமிட்டவாறு அடுத்த நாள் காலையில் கண்ணப்பன் தகடூர் கோட்டையின் மேற்கு வாயிலுக்கு வெளியில் காத்திருந்தான்.

மணிகண்டனும் தளபதியின் கட்டளைப்படி அவனை எதிர்பார்த்ததால் இருவரும் எளிதில் ஒருவரை ஒருவர் அடையாளம் கண்டுகொண்டனர்.

"என்பெயர் மருதை. நான்தான் காமினியம்மாவின் ஆள். சிவபுரத்திற்குப் போகவேண்டும். அம்மாவிற்கு உறவினர்கள் அங்கே வாழ்கிறார்கள். அங்கிருந்து இருவரை நான் அழைத்துக் கொண்டு வரவேண்டும்" என்று அறிவித்தான் கண்ணப்பன்.

"காமினிக்காக இருவரைக் கொண்டுவரச் சேரநாட்டில் உள்ள சிவபுரத்திற்குப் போகிறாயா? அழைத்து வரப்போவது யாரை என்பது எனக்குப் புரிகிறது. திரும்பி வரும்பொழுது உன் பயணம் மிகவும் இன்பமயமாக இருக்கும்" என்று கூறி உரக்கச் சிரித்தான் மணிகண்டன். காமினியின் இல்லத்தில் சேரநாட்டு இளம்பெண்கள் விருந்தளிக்கின்றனர் என்பது பொதுவாக எல்லோருக்கும் தெரிந்த செய்தியாகையால் கண்ணப்பனும் அந்தச் சிரிப்பில் கலந்துகொண்டான். விரைவிலேயே இருவரும் நண்பர்கள் ஆயினர். கண்ணப்பன் எதுவும் சொல்லும் முன்பே, இரவில் திருப்பூரில் உள்ள சத்திரத்தில் தங்க வேண்டும் என்று மணிகண்டன் அறிவித்தான். ஆகவே சாத்தனும் இளந்தத்தனும் உருவாக்கிய திட்டம் வெற்றிகரமாக நடந்தேறியது.

நள்ளிரவில் கண்ணப்பன் கொண்டுவந்து கொடுத்த ஓலையைச் சாத்தன் ஆழ்ந்து படித்தான். முகப்புகழ்ச்சியும், முகமனும், முன்னுரையும் முடிந்த பின்னர் முக்கியமான பகுதி இவ்வாறு எழுதப்பட்டிருந்தது.

"பல்லவ வேந்தர் பதினையாயிரம் வீரர்கள் அடங்கிய பெரும் படையுடன் பங்குனித் திங்கள் பதினைந்தாம் நாள் தகடூரில் வந்து சேர்வார். பல்லவ சேனாதிபதி தங்களிடம் முன்பு வேண்டியதுபோல் தாங்கள் பதினாயிரம் வீரர்களையும் நூறு யானைகளையும் இருநூறு குதிரைகளையும் கொண்டபடையுடன், அதற்கு முந்திய நாள் அதாவது, பங்குனி திங்கள் பதினான்காம் நாள் வந்து சேரவேண்டுமென்று வேண்டுகிறோம். நம் படை புறப்பாடு தாமதித்தால் அது பாண்டியனுக்கு நன்மை பயக்கும் என்பதால் தாங்கள் தவறாமல் குறித்த நாளிலேயே வரவேண்டுமென்று வலியுறுத்துகிறோம்."

சற்றுநேரம் ஆழ்ந்து சிந்தித்த சாத்தன் இரண்டு மாற்றங்கள் செய்தான். பதினைந்தாம் நாள் என்பதை இருபத்தைந்தாம் நாள் என்றும் சேரர் படை வந்து சேரவேண்டிய நாள் இருபத்தாறாம் நாள்

என்றும் மாற்றினான். உத்தமன் தன் திறமையை முற்றிலும் பயன்படுத்தி உருவிலும் நிறத்திலும் ஒத்த வேறு ஓர் ஓலையில் இந்த மாற்றங்களைச் செய்தான். அவன் எழுதி முடித்தபின் இரு ஓலைகளையும் ஒப்பிட்டுப்பார்த்த சாத்தன் மனநிறைவுடன் புதிய ஓலையைக் கண்ணப்பணிடம் கொடுக்க அவன் மணிகண்டன் வைத்திருந்தது போலவே அவனுடைய படுக்கைக்கு அடியில் வைத்தான்.

விடியற்காலையில் துயிலெழுந்த மணிகண்டன் கண்ணப்பன் உறக்கத்தில் ஆழ்ந்திருப்பதைக் கண்டு அவனைத் தட்டி எழுப்பினான்.

"இன்னும் உறக்கமா? எழுந்திரு! நாம் சீக்கிரம் சென்றால்தான் இன்று மதுக்கரையை அடைய முடியும்" என்றான்.

"நான் இரவில் உறங்கவே இல்லை. என் உடல் முழுவதும் வலிக்கிறது. எழுந்தால் தலை சுற்றுகிறது. என்னால் இன்று குதிரைமேல் ஏறவோ பயணம் செய்யவோ முடியாது" என்று படுத்துக்கொண்டே பேசினான் கண்ணப்பன்.

"ஐயோ! நான் போயே ஆகவேண்டும். இன்று வெள்ளிக் கிழமை அடுத்த வெள்ளிக்கிழமை நான் தகடூருக்குத் திரும்பியே ஆகவேண்டும். இங்கிருந்து வஞ்சிக்குச்செல்ல மூன்று நாள் ஆகும். திரும்பி நான்கு நாளில் நான் தகடூர் சென்றே ஆகவேண்டும்" என்று தவித்தான் மணிகண்டன்.

"அப்படியானால் நீங்கள் போய் வாருங்கள்! நான் குணமாகும்வரை இங்கே தங்கிவிட்டு மெல்லப் போகிறேன்" என்று கண்ணப்பன் சொல்ல மணிகண்டன் புறப்பட்டான்.

மணிகண்டன் அடுத்த வெள்ளிக் கிழமை தகடூருக்கு வரவேண்டுமாயின் வியாழக்கிழமை திருப்பூரில் வந்து தங்குவான் என்று விளங்கியதால் கண்ணப்பனை அங்கேயே விட்டுவிட்டுச் சாத்தனும் உத்தமனும் தகடூருக்குத் திரும்பினர். பின்னர் வியாழக்கிழமை மீண்டும் திருப்பூருக்குச் சென்று மணிகண்டனின் வரவுக்காகக் காத்திருந்தனர்.

வியாழன் மாலையில் சத்திரத்திற்குத் திரும்பிய மணிகண்டன் கண்ணப்பனைக் கண்டவுடன் முகம் மலர்ந்தான்.

"நீ சிவபுரத்திற்குப் போய் கொண்டுவர வேண்டியவர்களைக் கொண்டு வந்திருக்கிறாயா?" என்று ஆர்வமுடன் வினவினான்.

"இல்லை, என்னால் முடியவில்லை! நேற்றுத்தான் குணமடைந்தேன். நீங்கள் இன்று வருவதால் உங்களுடனேயே தகடூருக்குத் திரும்பலாம் என்றுதான் காத்திருந்தேன். இப்போதைய நிலைமையில் என்னால் சிவபுரம்வரை பயணம் செய்ய முடியாது" என்று வருந்தினான் கண்ணப்பன்

"சரி எனக்குக் கொடுத்துவைத்தது அவ்வளவுதான்" என்று திருப்திப்பட்டான் மணிகண்டன்.

அன்று இரவும் "ஓலைத்திருட்டு" நடந்தது. எதிர்பார்த்தபடியே சேரன் பதில் ஓலை அனுப்பியிருந்தான். வழக்கமான வாழ்த்துரைகள் முடிந்தபின் முக்கியமான பகுதி இவ்வாறு எழுதப்பட்டிருந்தது.

"பதினாயிரம் வீரர்களைத் திரட்டுவது என்னால் முடியாத செயல். மேலும் மலைப்பகுதியில் அவ்வளவு பெரிய படையை நடத்தி வருவதும் கடினம். நான் ஐயாயிரம் வீரர்களைக் கொண்டு வருவேன். நூறு யானைகளும் இருநூறுகுதிரைகளும் நீங்கள் விரும்பியவாறு கொண்டு வருவேன். குறித்த நாளிலேயே கட்டாயம் வந்துவிடுவேன்."

சேரனின் ஓலையைப் படித்த சாத்தன் அதில் குறித்த நாள் என்று மட்டுமே இருந்ததால் மாற்றம் எதுவும் தேவையில்லை என்று முடிவுசெய்தான். ஓலை மீண்டும் இருந்த இடத்திலேயே வைக்கப்பட்டது.

40. திட்டங்களும் மாற்றங்களும்

மதுரை அரண்மனையில் பாண்டியன் நெடுஞ்சடையன் முன்னிலையில் ஆலோசனைக் கூட்டம் நடந்துகொண்டிருந்தது. உறையூர்ப் படையின் தலைமை ஏற்ற சாத்தஞ் சாத்தன் உறையூரில் நடந்து கொண்டிருக்கும் பணியைப் பற்றியும் காஞ்சியிலும் தகடூரிலும் தான் மேற்கொண்ட பணிகளைப்பற்றியும் விரிவாகப் பேசினான்.

"உறையூரில் இப்பொழுதும் காவிரியாற்றின் கரையைச் செப்பனிடும் பணி நடந்துகொண்டுதான் இருக்கிறது. அதற்காகவே நாம் ஆள் எடுத்ததாக எல்லோரையும் நம்பவைத்துவிட்டாம். ஆனால் இரவோடு இரவாக இரண்டாயிரம் இளைஞர்கள் உறையூர்ப் பாசறைக்குள் நுழைந்து போர்ப் பயிற்சி பெற்று வருகிறார்கள். அவ்வாறு பயிற்சிபெற்று முடித்த வீரர்கள் இரண்டாயிரம் பேர் ஆற்றின் கரையைச் செப்பனிடும் பணியில் மேலெழுந்தவாரியாக ஈடுபட்டிருக்கிறார்கள். போர் மூளும்போது ஆறாயிரம் வீரர்களுக்குமேல் உறையூரிலிருந்தே புறப்படுவார்கள். கொங்கர் படையை முறியடிப்பதற்கு அந்தப் படையே போதுமானது. அரசரும் சேனாதிபதியும் அனுமதித்தால் அதை நானே செய்துமுடித்துவிடுவேன்' என்றுமிகவும்தன்னம்பிக்கையுடன் பேசினான்சாத்தன்.

பாண்டியன் நெடுஞ்சடையன் அவனை இடை மறித்துப் பேசினார்.

"இல்லை இல்லை அந்தப் போரை நான் நடத்த விரும்புகிறேன். நீ அதற்கான நாள் குறித்தால் நான் மதுரையிலிருந்து ஒரு சிறிய படையுடன் வந்து உறையூர்படையுடன் சேர்ந்துவிடுவேன். நாம் எளிதில் தகடூரைக் கைப்பற்றிவிடலாம்" என்றார் பாண்டியர்.

நட்பையும் நன்றியையும் கொன்ற அதியனை அடிப்படுத்த வேண்டும் என்ற ஆர்வம் பாண்டிய வேந்தரை உய்க்கிறது என்பதை உணர்ந்த சேனாதிபதியும் சாத்தனும் அதற்கு இணங்கினார்கள். ஆனால் சேனாதிபதி சாத்தன் கணபதி அதோடு வேறு ஒரு கருத்தையும் எடுத்துரைத்தார்.

"நம் கரவந்தபுரம் நிலைப்படை மதுரைக்கு வந்து பின்னர் காஞ்சி வரைசெல்வது மிகவும் கடினமாக இருக்கும். மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரம் வழியாகவே மெல்ல நடந்து முன்னேறி காவிரியாற்றைக் கடந்து தகடூருக்கு வரச்சொல்லலாம். யானைகளுக்கு இரைதேவையான அளவு கிடைக்கவும் வசதியாக இருக்கும். ஆகவே அரசர் உறையூருக்குச் செல்லும்பொழுது படையுடன் செல்ல வேண்டியதில்லை. உறையூர்ப்படையும் கரவந்தபுரம் படையும் சேர்ந்தாலே ஒன்பதாயிரம் ஆகிவிடும்" என்று சுட்டிக் காட்டினார்.

"ஆம் மன்னர் ஓரிரு நாள் முன்னதாகவே வந்து என் விருந்தினராக இருக்க வேண்டுகிறேன்" என்று அழைப்பு விடுத்தான் சாத்தன். மன்னரும் அதை ஏற்றுக்கொண்டார்.

"சரி அப்படியே செய்கின்றேன். நன்னிலம் நிலைப்படையும் விசலூர் நிலைப்படையும் காவிரியாற்றைக் கடந்து காவிரியின் வடகரையில் தனித்தனி அணிகளாகவே இருக்கட்டும். சேனாதிபதி ஆறாயிரம் வீரர் படையுடன் மதுரையிலிருந்து புறப்பட்டு பெண்ணாகடத்தில் காவிரியாற்றைக் கடக்க வேண்டும். நன்னிலப் படையும் விசலூர்ப் படையுமாகப் பன்னீராயிரம் வீரர்கள் கொண்ட படை, அதன்பின் ஒன்றாகத் திரண்டு பல்லவன் படையுடன் மோதவேண்டும். அதே நேரத்தில் தகடூரைக் கைப்பற்றியபின் நானும், சாத்தனும் எங்கள் படையுடன் வந்து பல்லவன் படையை மேற்குத்திசையிலிருந்து தாக்குவோம்" என்று மேலும் விளக்கிப் பேசினார் நெடுஞ்சடையன்.

"சேரர் படையை விட்டுவிட்டீர்களே அரசே!" என்று சுட்டினார் சேனாதிபதி.

"இல்லை. விட்டுவிடவில்லை சேரனுக்குத்தானே மிகப் பெரிய அதிர்ச்சி காத்திருக்கிறது. சாத்தனின் சூழ்ச்சியால் இந்தப் போர் எல்லாம் முடிந்தபின் பங்குனி இறுதியில் அல்லவா சேரன் தகடூருக்கு வருகிறான். அதியனின் வரவேற்பை எதிர்பார்த்து வரும் சேரமன்னன் பாண்டியரின் படையைக் கண்டவுடன் பதறுவான். எல்லாம் முடிந்துவிட்டது என்பதை உணர்ந்து விரைவிலேயே திரும்பிச்செல்வான்" என்றான் பாண்டியன்.

"ஆகவே நாம் திட்டமிட்டது போலவே ஒவ்வொரு போர்க்களத்திலும் நமது படையின் எண்ணிக்கை பலம் பகைவனின் பலத்தைவிட அதிகமாக இருக்கும். மேலும் நம்மைப் பாண்டிய மண்ணில் தாக்கவேண்டும் என்று எண்ணி

வருகின்ற பகைவனை நாம் பகைவனின் நாட்டிலேயே தாக்குவோம். ஆகவே அவர்களுக்கு அது ஒரு எதிர்பாராத தாக்குதலாகவும் அமையும்" என்று எடுத்துரைத்தான் சாத்தன்.

பாண்டியரும் அவர் படைத்தலைவர்களும் கருதியது போலவே அதியமானும் வெற்றி பெறுவது உறுதி என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையுடன் செயல்பட்டான். எத்தனையோ ஆண்டுகளாக முயற்சி செய்து, திட்டமிட்டு கனவுகண்ட காட்சி விரைவிலேயே நிறைவேறப் போகிறது என்ற களிப்பு அவன் மனத்திற்குக் குளிர்ப்பு ஊட்டியது. அவனுடைய பெரும்புகழ்பெற்ற முன்னோர்களில் ஒருவனான சங்ககால வள்ளல் அதியமான் முதல் ஒவ்வொரு தலைமுறையினரும் கண்ட கனவு அது. சேர, சோழ, பாண்டியரை ஒத்த வேந்தனாகக் கொங்குநாட்டை ஆளவேண்டும் என்பது. இப்பொழுது சோழன் இல்லை. அந்த இடத்தில் பல்லவன் இருக்கிறான். அவனுடைய திட்டம் வெற்றிபெறும்பொழுது பாண்டியனும் இருக்கமாட்டான். சேர, சோழ, பாண்டியர் ஆண்ட நாட்டில் சேர பல்லவ கொங்கு மன்னர்கள் ஆள்வார்கள். சோழ நாட்டின் வடபகுதியைப் பல்லவனும் தென் பகுதியைப் பாண்டியனும் பகிர்ந்துகொண்டதுபோல் பாண்டியநாட்டின் கீழ்ப்பகுதியை பல்லவனும், மேல் பகுதியை கொங்கனும் பகிர்ந்து கொள்ளலாம்.

இரண்டு நாள்களுக்கு முன் அதியனின் அழைப்பை ஏற்று, தகடூர் அரண்மனைக்கு விருந்தினளாக வந்த ஊர்வசி அதியனின் கனவுகளுக்கு மேலும் மெருகுதீட்டினாள். அழைப்பு விடுத்த அதியன் காஞ்சியிலிருந்து திரும்பி மூன்று மாதங்கள் கழிந்தபின்னரும் ஊர்வசி வராததால் அவள் வரமாட்டாள் என்று அவன் நம்பிக்கை இழந்தபின் எதிர்பாராமல் வந்தாள் அவள். ஆயினும் அவன் நம்பியிருந்ததுபோல் அவள் தனியாக வரவில்லை. திருமணம் ஆகாத இளம்பெண், அரசி இல்லாமல் அரசன் தனியனாக வாழும் அரண்மனைக்குள் போய் தங்குவது தவறாகும் என்று கருதியதால் காயத்ரிதேவியும் தன் மகளுடன் தகடூருக்கு வந்தாள். வெளியோர் பழியிலிருந்து தப்புவதே காயத்ரியின் நோக்கம். அதியனும் ஊர்வசியும் நெருங்கிப்பழகி அவர்களுக்குள் உறவு வளர்ந்து தகடூர் அரியணையில் அதியனுடன் அவள் அமரவேண்டும் என்பதே அவளுடைய விருப்பம். எனவே அவர்கள் ஒன்றாக உலவச் செல்வதையும் வெகுநேரம் உரையாடி மகிழ்வதையும் அவள் தடைசெய்யவில்லை என்பது மட்டுமல்ல, அவளே ஊர்வசியை ஊக்குவித்தாள்.

ஊர்வசியின் இளமையும் அழகும் அவனைக் கவர்ந்தன என்பது உண்மையாயினும் அவளும் பாண்டியனோடு பகைமை கொண்டவள் என்ற நம்பிக்கைதான் அவளைத் தன் உற்ற தோழியாகக் கருத அதியனை ஊக்குவித்தது. ஆகவே தன்னுடைய கனவுகளையும் எதிர்கால மனக்காட்சிகளையும் அவளுடன் பகிர்ந்துகொள்ள அவன் தயங்கவில்லை படைதிரட்டலும் பயிற்சியளித்தலும், படைக்கலங்கள் செய்வதும்போன்ற பணிகள் பலவும் செய்து தீர்க்க முழுநேரம் செலவாக்கவேண்டியிருந்தாலும், நாளும் இருமுறையாவது அவளுடன் உரையாடி அவளை மகிழ்விக்கத் தவறவில்லை அவன்.

"இன்னும் இரண்டு மாதங்களில் இந்தத் தமிழகத்தின் அமைப்பும், அரசியலும் அடியோடு மாறும். நான்தான் எல்லோரிலும் வல்லவன் என்ற இறுமாப்போடு மதுரையை ஆளும் நெடுஞ்சடையன் ஓடி ஒளிவானோ, உயிர் விடுவானோ என்று தெரியாது. அவன் தனக்குத் திறைசெலுத்தவேண்டும் என்று விதித்த சிற்றரசன் அதியமான், பேரரசனாகி அவனுடைய பாண்டிய நாட்டின் பெரும் பகுதியைக் கொங்கு நாட்டுடன் இணைத்துக் கொள்வான்" என்று கனவுக் காட்சிகளைத் தன் கண்முன் கண்டதோடு, ஊர்வசியின் மனக்கண்களிலும் தெரியுமாறு படம்பிடித்துக் காட்டினான் அதியன்.

பலமுறை அவ்வாறு பேசக்கேட்ட ஊர்வசி ஒரு நாள் ஓர் ஐயத்தை எழுப்பினாள்." பல்லவ மன்னர் தங்களுக்கு அளித்துள்ள வாக்குறுதியை நம்பித்தானே தாங்கள் இவ்வளவு பெரிய மாற்றங்களை எதிர்பார்க்கிறீர்கள்? அவரோ பேரரசர்! தங்கள் படையைவிட மிகப்பெரிய படையுடன் இந்தப் போரில் கலந்துகொள்கிறார். போரில் வெற்றிபெற்றுப் பாண்டியன் என்ற பெரிய பகைவன் அழிந்த பின்னர் அவர் யாருக்கும் அஞ்சவேண்டியதில்லை. அப்பொழுது அவர் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்றால் என்ன செய்வீர்கள்?" என்று வினவினாள் அவள்.

"ஊர்வசி! நீ அரசியல் சதுரங்கம் என்னும் ஆட்டத்தில் ஓரளவு பங்குபெற்றப் பல்லவ அமைச்சரின் ஆற்றலால், அவர்செய்த சூழ்ச்சியில் ஒரு முக்கியப் பங்கு வகித்ததால் உனக்குச் சிலசுளிவு நெளிவுகள் புலப்படத்தொடங்கியுள்ளன. போரில் நாங்கள் வெற்றிபெறுவோம் என்பது உறுதி. ஆகையால், போருக்குப்பின் அந்த வெற்றியின் பயனை எவ்வாறு பகிர்ந்து கொள்வது என்பதைப்பற்றிய உடன்பாடு எங்கள் மூவரிடமும் எழுத்து

வடிவில் உள்ளது. சேர மன்னருக்கு மண்தேவையில்லை. மலைக்கப்பால் இருந்து கொண்டு இங்குள்ள மண்ணை ஆள்வது கடினம் என்பது அவருக்குத் தெரியும். ஆகவே அவருக்குப் பொன் வழங்கப்படும். பாண்டிய நாட்டைப் பல்லவ மன்னரும் நானும் பகிர்ந்து கொள்வோம். அவருடைய பலத்திற்கு ஏற்றவாறு மூன்றில் இருபங்கு அவருக்கும் ஒரு பங்கு எனக்கும் என்று உறுதிசெய்துள்ளோம். அதன்படி நடந்துகொள்ள அவரைக் கட்டாயம் செய்யும் சூழ்நிலையை உருவாக்கவும் என்னால் முடியும் ஏனென்றால், சேர மன்னன் என்னுடன் சேர்ந்து கொள்வார். அதற்குத் தேவையான ஒரு திட்டம் என்னிடம் உள்ளது" என்று மிகவும் நம்பிக்கையுடன் உரைத்தான். அதியன்.

"அப்படியா! அது என்ன திட்டம்?" ஆவலுடன் வினவினாள் ஊர்வசி.

"அதை உன்னிடம்கூட இப்பொழுது சொல்லமுடியாது. ஆனால் விரைவிலேயே நீ அறிந்து கொள்வாய்" என்று ஒரு ரகசியத்தை மறைத்துக்கொண்டு பேசினான் அதியன். பின்னர் தொடர்ந்து பேசினான். "ஆனால் ஒன்றுமட்டும் சொல்கிறேன். நான் பல்லவ வேந்தனை குருட்டுத்தனமாக நம்பும் முட்டாள் அல்ல. எனக்கு நம்பிக்கைத் துரோகம் செய்தால் அவர் எளிதில் தப்ப முடியாது. அவர் படையுடன் தகடூருக்கு வந்து சேர்ந்தபின் அடுத்த நாள் சேரமன்னர் படையுடன் வந்து சேரப்போகிறார் என்றுதான் பல்லவர் நந்திவர்மன் நம்பியிருக்கிறார். ஆனால் நான் செய்திருக்கும் ஏற்பாடு அப்படியன்று. பல்லவர் வருவதற்கு முந்திய நாளே சேரர் வந்துவிடுவார். அவரும் நானும் சேர்ந்து பேசி, தேவைப்பட்டால் நந்திவர்மனை எவ்வாறு மடக்கவேண்டும் என்று தீர்மானித்து வைத்துக்கொள்வோம். என்னுடைய நல்வாழ்வில்தான் அவருடைய நல்வாழ்வும் அடங்கியிருக்கிறது என்பதைச் சேரர் உணர்வார்" என்று கூறி ஒரு பொருள் பொதிந்த புன்னகையையும் வீசினான் அதியன். அதற்குமேல் அதைப் பற்றிக் கேட்பது சரியன்று என ஊர்வசியும் விட்டுவிட்டாள்.

ஊர்வசியின் ஊடுருவலைப்பற்றிக் கேட்டபொழுது அவள் மீது கொண்ட மதிப்பு அவளைக் கண்டவுடன் ஆசையாக உருவெடுத்தது அதியனுக்கு! அவளைத் தகடூர் அரண்மனைக்கு அழைத்ததும் அந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்ளத்தான். அவளுடைய அன்னையும் அவளுடன் வந்ததால் அவன் சற்றுத் தயங்கினான். பல்லவ அமைச்சருடன் நெருங்கியதொடர்பு கொண்ட காயத்ரியைப் பகைத்துக் கொண்டால் ஆபத்துவரும்

என்று அஞ்சினான் அவன். ஆயினும் ஊர்வசியின் இளமையும், உடலழகும் அவனை வெகுவாக ஈர்க்கத் தொடங்கின. ஊர்வசியும் அவனுடன் அன்பாகப் பழகியதால் இனி அவளை அடைவதில் தடை இருக்காது என்று துணிந்து ஒரு நாள் அவர்கள் தனிமையில் இருந்தபொழுது அவளை இறுகத் தழுவினான். அவளுடைய இதழ்களில் தன்னுடைய இதழ்களைச் சேர்க்க முயன்றபொழுது அவள் விலகிக் கொண்டாள்.

"அரசே! நான் இப்பொழுது தங்கள் விருந்தினள். தங்களை நான் மதிக்கிறேன். தங்களிடம் அன்பு செலுத்துகிறேன். ஆனால் அதற்குமேல் தாங்கள் என்னிடம் உரிமை கொண்டாட விரும்பினால் அது என் கழுத்தில் தாலிகட்டிய பின்னரே நடக்கவேண்டும்" என்று தெளிவாகக் கூறினாள் அவள்.

அதியன் சிரித்தான் "தாலிகட்டுவதா! ஊர்வசி! நீ பேராசைக்காரி. நான் தாலிகட்டும் பெண் இந்தக் கொங்கு நாட்டின் அரசியாக அரியணையில் வீற்றிருக்கவேண்டியவள். அரசன் மகளாகப் பிறக்கவேண்டியவள். உனக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கவில்லை" என்றான்.

ஊர்வசி அதியனைக் காதலிக்கவில்லை. ஆயினும், காயத்ரியும் கருணாகரனும் வற்புறுத்தியதால் அவனை மணந்துகொள்ள விரும்பினாள். ஊர் பேர் தெரியாமல் ஒரு மூலையில் வாழ்வதைவிட அதியனை மணந்து அரசியாக வாழ்வதுமேல் என்று அவள் எண்ணினாள். அதியன் அவளைத் தழுவியபொழுது அவன் முற்றிலும் தன் அழகில் மயங்கிவிட்டான் என்றும் ஆகவே அவனிடம் திருமணத்தைப் பற்றிய வாக்குறுதியைப் பெறுவதற்கு இதுவே தருணம் என்றும் துணிந்துதான் பேசினாள். ஆனால் அவன் மனத்தில் அத்தகைய எண்ணம் இல்லை என்பது அவளுக்குப் பேரிடியாக இருந்தது.

"நான் அரசன் மகள் இல்லை! ஆயினும் அரச குலத்தில் பிறந்தவள் தான்" என்று தற்பெருமை பேசினாள் அவள்.

"அந்தக் கதை எனக்குத் தெரியும். நான் அதைப் பற்றிப் பேச விரும்பவில்லை. இனி உன்னிடம் மறைத்துவைக்கவும் விரும்பவில்லை. நான் சேரமன்னரின் மகளை மணக்கப் போகிறேன். அதனால்தான் நானும் அவரும் ஒன்று சேர்ந்து பல்லவனை மடக்குவோம் என்று முன்பு ஒருநாள் உன்னிடம் சொன்னேன். உன்னை நான் மிகவும் விரும்புகிறேன். ஆனால் திருமணம் என்பது முடியாத ஒன்று. அதனால் எனக்கு எந்தப் பயனும்இல்லை. சேரன்மகளை

மணந்தால், ஒரு பேரரசர் எனக்கு மாமனார் ஆவார். அதனால் பல நன்மைகள் வரும் மேலும் பாண்டியன் அரண்மனையில் இரண்டு மாதம் வசித்த உன்னை நான் மணந்தால், அதை நன்றாக அறிந்த பல்லவமன்னர்கூட என்னை மதிக்கமாட்டார். ஆகவே அந்த ஆசையை விட்டுவிடு" என்று விளக்கினான் அதியன்.

அதியன் தன்னுடைய சொந்த நலனைக் கருதியே செயல்படுகிறான் என்பதை நன்குணர்ந்த ஊர்வசி அவளுடைய ஏமாற்றத்தை மறைத்துக்கொண்டு "நான் தாங்கள் என்னை மணந்துகொள்ளக் கோரவோ வற்புறுத்தவோ இல்லை அரசே! சேரன் மகளை மணந்து நீங்கள் நலமுடன் வாழுங்கள்" என்றாள். அவன் இறுதியில் குறிப்பிட்டது அவளுடைய மனத்தை மிகவும் உறுத்தியது. பாண்டியன் அரண்மனையில் இரண்டுமாதம் வாழ்ந்ததைச் சுட்டிக்காட்டி அவளை இழிவு படுத்திய அதியன் மீது வெறுப்பும் தோன்றியது. தன்னைப்பற்றி இழிவான எண்ணம் கொண்டவனும், எப்பொழுதும் சொந்த நலத்தில் மட்டுமே கண் வைப்பவனுமான அதியனை மணந்தாலும் மகிழ்வுடன் வாழமுடியாது என்பதையும் ஊர்வசி உணர்ந்தாள். அவன் அவளை மணக்க மறுத்ததும் ஒரு வகையில் நல்லதே என்று மனம் தேறினாள்.

அதியன் சேரன் மகளை மணக்கப் போவதால் ஊர்வசிக்குக் கொங்கு நாட்டின் அரசியாகும் வாய்ப்பில்லை என்று அறிந்தபின் தகடூர் அரண்மனையில் வசிப்பதைக் காயத்ரி விரும்பவில்லை. ஊர்வசியும் அதியனுடன் தனிமையில் சந்திப்பதையும் உரையாடுவதையும் நிறுத்திவிட்டாள். அதியன் சில நேரங்களில் ஊர்வசியை அடையவேண்டும் என்று எண்ணினாலும் அதனால் பல்லவன் சினத்திற்குப் பாத்திரமாக வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம் என அஞ்சி, தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொண்டான். ஆகவே நன்மையும் தீமையும் இன்றி, வந்ததுபோலவே காஞ்சிக்குத் திரும்பினர் அன்னையும் மகளும்.

காயத்ரியும் ஊர்வசியும் காஞ்சிக்கு வந்த செய்தி அறிந்தவுடன் அமைச்சர் கருணாகரன் ஊர்வசியைச் சந்தித்தார். அவள் தகடூருக்குப் புறப்படும்முன் அவர் சொல்லி அனுப்பியிருந்தார்.

"ஊர்வசி! நீ அதியமானின் விருந்தினளாக மட்டும் தகடூருக்குச் செல்வதாக நினைக்காதே. அதியன் உன்னை விரும்பி உன் கழுத்தில் மாங்கல்யம் புனைந்தால் எனக்குப் பெருமகிழ்ச்சி தரும் அது. ஆனால் அவன் உன்னை அழைத்தது உன் அழகை

அனுபவிப்பதற்காக என்று தெரிந்தால் அவனுடைய ஆசைக்கு இணங்காதே. பல்லவப் பேரரசின் கீழ் சிற்றரசர் பலர் உள்ளனர். பல்லவ மன்னன் பணித்தால் அவர்களில் ஒருவன் உன்னை ஏற்றுக்கொள்வான். ஆனால் நீ தகடூர் அரண்மனையில் வசிக்கும்பொழுது உன் கண்களையும் செவிகளையும் திறந்து வைத்துக் கொண்டு எல்லாவற்றையும் கவனித்துக்கொள். மதுரை அரண்மனையில் செய்ததுபோல் இங்கும் செயலாற்றலாம். அதியன் சுயநலவாதி! முற்றிலும் நம்பத் தக்கவன் அல்ல! நெருங்கிய நண்பனாக இருந்த பாண்டியனைக் கைவிட்டு நம்முடன் கைகோர்த்தவன். ஆகவே நாளைக்கு நம்மை விட்டு நம் பகைவனுடன் சேர்ந்து கொள்ளமாட்டான் என்று உறுதியாகச் சொல்லமுடியாது. நீ திரும்பி வந்தபின், உன் கருத்துகளை என்னிடம் சொன்னால் போதும். ஓலை எதுவும் அனுப்பவேண்டாம்" என்ற அமைச்சரின் அறிவுரையை மனத்தில் ஏற்றுக்கொண்டுதான் அவள் தகடூருக்குச் சென்றாள். அவ்வாறே திரும்பி வந்தவுடன் அமைச்சரிடம் தான் அறிந்த தகவல்களை வெளியிட்டாள்.

" தாங்கள் என்னிடம் சொன்னது முற்றிலும் சரியே. அதியன் பெரிய சுயநலவாதி. தனக்கு நன்மை பயக்கும் எந்தச் செயலையும் ஏற்றுக் கொள்வார். இப்பொழுது பாண்டியனை அழிப்பது என்ற ஒரே எண்ணம்தான் அவர் மனத்தில் மேலோங்கி நிற்கிறது. அது நிறைவேறிவிட்டால் அவர் என்ன செய்வார் என்று சொல்ல முடியாது. ஒரு வேளை பல்லவ மன்னர் போரில் வெற்றிபெற்ற பின் வாக்கு மாறினால் சேரமன்னனுடன் சேர்ந்து பல்லவ மன்னரை மடக்குவதற்கும் திட்டம் தீட்டியிருக்கிறார். அதற்காகவும் சேரமன்னனின் ஆதரவை என்றென்றைக்குமாகப் பெறுவதற்கும் அவர் செய்யும் தந்திரம் அந்த மன்னனின் மகளை மணம் புரிவது. அதனால்தான் பல்லவ மன்னரின் விருப்பத்திற்கு மாறாக அதியன் போர்த்திட்டத்தில் ஒரு சிறிய மாற்றம் செய்திருக்கிறார். திட்டப்படி பல்லவர் படை பங்குனித்திங்கள் பதினைந்தாம் நாளும், சேரர்படை அடுத்தநாள் ஆகிய பதினாறாம் நாளும் தகடூருக்கு சென்றடைய வேண்டும். அதை மாற்றி, சேரர்படை பதினான்காம் நாளே, அதாவது பல்லவர் படை வருவதற்கு முந்திய நாளே வந்துசேரவேண்டுமென்று எழுதியிருக்கிறார். சேரமன்னனின் நட்பையும், உறவையும் உறுதி செய்து, தேவை ஏற்பட்டால் பல்லவ மன்னரை எதிர்க்கவும் தயங்கமாட்டார் என்பது நன்கு விளங்குகின்றது" என்றாள் ஊர்வசி.

அமைச்சர் கருணாகரன் ஊர்வசியை மனம் உவந்து பாராட்டினார்.

"ஊர்வசி! நீ மிகவும் நல்ல வேலைசெய்திருக்கிறாய். உன் சேவையைப் பாராட்ட முன்வருவார் நம் மன்னர் என்பதில் சந்தேகம் இல்லை. போர் மூளும் சூழ் நிலையில் ஒவ்வொரு படையின் நீக்கங்களும் மிக முக்கியமானவை. அதை முன்னரே அறிந்தால் அதற்கேற்ப நாமும் சில தேவையான மாற்றங்கள் செய்ய முடியும்" என்றார் அமைச்சர்.

செய்தி அறிந்த பல்லவன் நந்திவர்மன் சிரித்தான்.

"மிகவும் நல்லது அமைச்சரே! சேரனும் கொங்கனும் நான்கைந்து நாள் சேர்ந்து இருக்கட்டும். நம் படை அதன்பின் அங்கு சென்றால் போதும். சேனாதிபதியை அழையுங்கள். நாமும் திட்டத்தில் சிறிய மாற்றங்கள் செய்வோம்" என்றான் அவன்.

41. முக்கூட்டுப் படையின் முடிவு

காலையும் மாலையும், இரவும் பகலும் ஒன்றையொன்று துரத்திக்கொண்டு விரைவாக ஓடின. காஞ்சியும் வஞ்சியும் மதுரையும் தகடூரும் வரப்போகும் போரை நோக்கியே இயங்கின. நான்கு மன்னர்களும் அவர்தம் படைத் தலைவர்களும் போர் வீரர்களும் ஆவலுடனும், சில நேரங்களில் அச்சத்துடனும், எதிர்பார்த்த பங்குனித் திங்கள் பிறந்தது. அந்த மாதப் பிறப்பிற்குச் சில நாள்கள் முந்தியே கரவந்த புரத்திலிருந்த பாண்டியரின் நிலைப்படை அங்கிருந்து புறப்பட்டு மெல்ல மெல்ல நடந்து, யானைகளும் குதிரைகளும் மூவாயிரம் காலாள் வீரர்களும் சற்றும் களைப்படையாமல் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரம் வழியாகவே வடக்கு நோக்கி முன்னேறியது. காவிரி ஆற்றையும் கடந்து, இன்னும் ஒரே நாளில் தகடூரை அடையக் கூடிய தொலைவில் பாசறை அமைத்தது. படைத் தலைவன் சங்கரன் சீதரன் விடுத்த தூதன் உறையூரிலிருந்த சாத்தஞ்சாத்தனுக்கும் மதுரையில் இருந்த பாண்டிய மன்னருக்கும் செய்தி அறிவித்தான். மதுரையில் நிகழும் ஒவ்வொரு அரசியல் நிகழ்ச்சியையும் கண்காணித்து வந்த பல்லவ, கொங்க அரசுகளின் ஒற்றர்கள், மதுரைக்கே வராமல் தகடூருக்கு அருகில் எட்டிய இந்தப் படை நீக்கத்தை அறியவில்லை.

விசலூரிலிருந்து மூவாயிரம் வீரர்கள் அடங்கியநிலைப்படை பெண்ணாகடத்தின் அருகில் காவிரி ஆற்றைக் கடந்து பாசறை அமைத்தது. இரண்டு நாள்களில் அதே அளவு படைபலம் கொண்ட நன்னிலத்திலிருந்த நிலைப்படை அதனோடு சேர்ந்து கொண்டது. சேனாதிபதியின் தலைமையில் மதுரையிலிருந்து வரும் படையை எதிர் நோக்கி இந்த நிலைப்படைகள் காத்திருந்தன. இவ்வாறு ஆறாயிரம் வீரர்கள் காவிரியின் வடகரையில் எட்டியதையும் மதுரையிலிருந்த ஒற்றர்கள் உணரவில்லை.

சேனாதிபதி சாத்தன் கணபதியின் தலைமையில் ஆறாயிரம் காலாள் வீரர்களும் ஆயிரம் குதிரை வீரர்களும், இருநூறு யானைகள் கொண்ட பெரும்படை, முரசு முழங்க, போர்ப்பறை அறைய, கொம்பு ஊத, கம்பீரமாக மதுரையிலிருந்து புறப்பட்டது. அந்தப் படைகாவிரியாற்றைக் கடக்கும் முன்னரே காஞ்சியிலும், தகடூரிலும் செய்தி எட்டியது.

நந்திவர்மப் பல்லவ மன்னன் தன்னுடைய அமைச்சருடனும் சேனாதிபதியுடனும் கலந்து ஆலோசித்தான். "மதுரையிலிருந்து சேனாதிபதியின் தலைமையில் ஆறு அல்லது ஏழாயிரம் பலமுள்ள படைபுறப்பட்ட தகவல் வந்திருக்கிறது. இந்நேரம் அந்தப் படை காவிரியாற்றின் கரையிலிருந்து ஐம்பது அல்லது அறுபது நாழிகை தொலைவில் இருக்கும். அதன் பொருள் என்ன? இவ்வளவு சிறிய படையுடன் காஞ்சியைத் தாக்குவது முடியாத காரியம் என்று பாண்டியனுக்குத் தெரியும். ஒரு வேளை தகடூரை நோக்கிப் போகிறதோ?" என்று வினவினான். "இல்லை அரசே! சற்றுமுன் வேறு ஒரு தூதன் வந்தான். அந்தப் படை உறையூரை நோக்கிப் போகவில்லை பெண்ணாகடத்தை நோக்கித்தான் போகிறது என்று தெரிகிறது. சென்ற முறை செய்ததுபோல் காவிரிக் கரையில் நமக்காகக் காத்திருக்கும் நோக்கமாக இருக்கலாம்" என்றார் அமைச்சர்.

"நாம் படை திரட்டுகின்றோம் என்றும் அது மதுரையைத் தாக்குவதற்குத்தான் என்றும் பாண்டியனுக்கு ஒற்றர்கள் மூலம் தெரிய வந்திருக்கும். நாம் பெண்ணாகடத்தில் ஆற்றைகடக்க முயல்வோம் என்றும் அப்பொழுது நம்மைத் தாக்கி, சென்ற முறைபோல் வெற்றி பெறலாம் என்றும் கனவு காண்கிறான் பாண்டியன்" என்றார் சேனாதிபதி.

"பாண்டியன் படை அங்கேயே கொஞ்ச நாள் இருக்கட்டும். அதன் முன்னேற்றத்தை நம் ஒற்றர்கள் கண்காணிக்கிறார்கள் அல்லவா" என்று வினாவினான் பல்லவன்.

"ஆம் அரசே! நாள்தோறும் ஒரு தூதன் வந்து நிலைமையை அறிவிக்க ஏற்பாடு செய்துள்ளேன்" என்றார் அமைச்சர்.

"நம் படை புறப்படுவதற்கு ஆயத்தமாகத் தானே இருக்கிறது?" மன்னன் வினவினான்

"ஆம் அரசே! எல்லா ஏற்பாடுகளும் செய்து முடித்து விட்டோம். இன்று மாலை ஆணையிட்டால் நாளை மறுநாள் காலையில் படை புறப்படும்" என்று விடையிறுத்தார் சேனாதிபதி.

"நாம் பாண்டியர் மண்ணில் இந்தப் போரை நடத்த வேண்டும் என்று திட்டமிட்டோம். ஆனால் இப்பொழுது பாண்டியன் முந்திக்கொண்டதால் போர்க்களம் நம் பகுதியிலேயே அமையும் என்று தோன்றுகிறது. அதுவும் நல்லதே நாம் தகடூர் வரை படைநடத்திச் சென்று கொங்கர் படையும் சேரர் படையும் வந்து சேர்ந்தபின் பாண்டிய நாட்டிற்குள் போகவேண்டிய தேவை

இல்லை. நாம் தகடூருக்கே போக வேண்டாம். அதியனுக்கு உடனே ஓலை அனுப்புவோம். சேரர் படை வரும் வரை காத்திருக்க வேண்டாம் இன்னும் மூன்று நாள்களில் அதாவது பங்குனி பதினான்காம் நாள் கொங்கர் படை தகடூரிலிருந்து புறப்படவேண்டும். ஆயிரம் வேலி அருர், புகழியூர் வழியாக, காவிரியாற்றின் வடகரையிலேயே நடந்து பெண்ணாகடத்திற்கு எதிரே வடபகுதியில் வந்து சேரவேண்டும் நாம் காஞ்சியிலிருந்து அதே நேரத்தில் புறப்பட்டுச் செல்வோம். பாண்டியன் படை ஆற்றைக்கடந்துவிட்டால் மேற்கிலிருந்து கொங்கர்படையும், வடக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் நம் படையும் தாக்கி முறியடிப்போம். சேரன்படையும் வந்து பின்னால் தகடூர் படையுடன் சேர்ந்து கொள்ளலாம் என்று ஆணையிட்டான் பல்லவன்.

"பாண்டியன் படை சேனாதிபதியின் தலைமையில் வடதிசை நோக்கிப் புறப்பட்டு மூன்று நாளாகியும் ஏன் உறையூர்ப் படை அசையாமல் அங்கேயே இருக்கிறது? போர் என்றால் புலிபோல் பாயும் சாத்தஞ்சாத்தன் ஏன் உறையூரில் உறங்கிக் கொண்டிருக்கிறான். நான் எவ்வளவோ சிந்தித்தும் இந்தக் கேள்விகளுக்கு விடைகிடைக்கவில்லை" என்று தன் மனக் கலக்கத்தை வெளிப்படுத்தினார் கருணாகரன்.

"சாத்தஞ்சாத்தனை ஒதுக்கிவைக்கும் நோக்கத்துடன்தானே பாண்டியன் அவனை உறையூருக்கு அனுப்பினான்? இப்பொழுதும் அவன் உதவி இல்லாமலே போரில் வெற்றிபெற முடியும் என்று காட்டுவது நோக்கமாக இருக்கலாம்" என்றார் சேனாதிபதி.

"இருக்கலாம். ஆயினும் என் ஐயம் அகல வில்லை மதுரையிலிருந்து பெரும் ஆர்ப்பாட்டத்துடன் புறப்பட்டிருக்கிறது ஒரு படை. அதில் பாண்டியனும் இல்லை. சேனாதிபதிக்கு அடுத்த படைத்தலைவனும் பெருவீரனும் ஆன சாத்தஞ்சாத்தனும் இல்லை என்று நம் ஒற்றர்கள் உறுதியாகச் சொல்கின்றனர். ஒருவேளை நம் கண்ணில் மண் தூவும் நோக்கத்துடன் எல்லோரும் காணுமாறு இந்தப் படையை இறக்கி ரகசியமாக வேறு ஒரு படை பாண்டியனின் தலைமையிலோ அல்லது சாத்தனின் தலைமையிலோ புறப்பட்டிருக்கிறதா என்றுதான் நான் கவலைப்படுகிறேன்" என்று மீண்டும் தன் ஐயப்பாட்டை எடுத்துரைத்தார் அமைச்சர் கருணாகரன்.

"ஆனால் மதுரையிலிருந்து அந்தப் படை புறப்பட்டபொழுது பாண்டியன் நெடுஞ்சடையனே வழியனுப்பி வைத்தான் என்றும், அப்பொழுது சாத்தஞ்சாத்தன் உறையூரில்தான் இருந்தான் என்றும் உறுதியான தகவல் கிடைத்துள்ளதே!" என்று சுட்டிக்காட்டினான் நந்திவர்மன்.

"உண்மைதான். ஆயினும் கரவந்தபுரத்திலிருந்த நிலைப்படை இப்பொழுதும் அங்கேதான் உள்ளதா என்று தெரியவில்லை. அந்தப் படை மதுரைக்கு வரவே இல்லை என்று அடித்துச் சொல்கிறார் நம் ஒற்றர்படைத் தலைவர்" என்று அமைச்சர் கவலையுடனேயே பேசினார்.

"வேணாட்டு அரசனும் பாண்டியனும் பகைவர்கள். ஆகையால் அங்கிருந்து தாக்குதல் வராமல் இருப்பதற்காகக் கரவந்தபுரம் நிலைப்படையை அங்கேயே நிறுத்திவைத்திருக்க வேண்டும்" என்றார் சேனாதிபதி.

"பாண்டியன் படையின் பலம் நமக்கு நன்கு தெரியும். உறையூர் படையும் கரவந்தபுரம் படையும் அந்தப் படையுடன் வந்து சேர்ந்து கொண்டால்கூட நம் படையும் அதியன் படையும் சேர்ந்தால் அதைவிடப் பெரிய படைதான். மேலும் அந்தப் படைகள் .எல்லாம் வெகுதூரம் பயணம் செய்து நம் நாட்டிற்குள் வந்து போர்புரியவேண்டும். நாம் இன்னும் மூன்று நாளில் புறப்பட்டால் இரண்டோ மூன்றோ நாள்களில் போர் வரலாம். ஆகவே நமது வெற்றி நிச்சயம். எனவே நான் சொன்னபடி உடனே அதியனுக்கு ஓலை அனுப்பி நம் படை புறப்பாட்டிற்கு ஏற்பாடு செய்யுங்கள்" என்று ஆணையிட்டான் நந்திவர்மன்.

பல்லவன் விடுத்த ஓலையைப் படித்த அதியனுக்கு ஊர்வசியின்மீதுதான்உடனேசந்தேகம்வந்தது. ஓர்உணர்ச்சிவேகத்தில் ஊர்வசியிடம் பேசிய பொழுது போர்த்திட்டத்தில் அவன் செய்த மாற்றத்தை அவளிடம் வெளியிட்டுவிட்டான். பல்லவன் விருப்பப்படி பங்குனித் திங்கள் பதினாறாம் நாள் வருவதற்குமாறாக சேரர்படை பதினான்காம் நாள் வரவேண்டும் என்று அவன் கோரியிருக்கிறான் என்பது ஊர்வசிக்கு மட்டும்தான் தெரியும். இப்பொழுது நந்திவர்மன் அதியனை அதே பதினான்காம் நாள் தகடூலிருந்து புறப்படவேண்டும் என்று தேவைப்பட்டிருப்பது வேண்டுமென்றே செய்த சூழ்ச்சியாகத் தோன்றியது அதியனுக்கு. பல்லவ அமைச்சரிடம் நேரடியாக பழகும் காயத்ரியிடம், ஊர்வசி கட்டாயம் அதியனின் சூழ்ச்சியை வெளியிட்டிருப்பாள். அமைச்சரிடம் காயத்ரி அதைக் கூறவே அதற்கு எதிர்ச்

சூழ்ச்சியாகப் பல்லவன் இந்த மாற்றத்தைச் செய்திருக்கிறான் என்று அவன் உறுதியாக நம்பினான். சேரன் படையுடன் வருவதானால் பதினான் காம் நாள் மாலைநேரம் ஆகும் தகடூர் வந்து சேர்வதற்கு. அன்று காலையிலேயே அதியன் புறப்பட்டுப் போய்விட்டான் என்று அறியும் பொழுது அதியன் தன்னை அவமதித்ததாகவே சேரமன்னன் எண்ணுவான். அதன்பின் சேரனுக்கும் அதியனுக்கும் இடையில் நட்போ, நல்லுறவோ ஏற்படும் வாய்ப்பு இல்லாததாகும் என்பதே பல்லவனின் திட்டம் என்று எண்ணினான் அதியன் அந்தத் திட்டத்தை முறியடிக்க வேண்டும். பதினான்காம் நாள் சேரன் படையுடன் வந்து சேர்ந்தபின் பதினைந்தோ, பதினாறோ ஆகிய நாளில் புறப்பட்டால் போதும் என்று முடிவு செய்தான் அதியன். இருவர் படையும் இணைந்து பெரும் படையாக வருவதற்காகவே சற்றுத் தாமதித்ததாகப் பல்லவனிடம் காரணம் கூறலாம் என்றும் கருதினான்.

•பல்லவனும் கொங்கனும் இவ்வாறு ஒருவரை ஒருவர் சந்தேகக் கண்ணுடன் பார்த்துக்கொண்டு திட்டங்களைத் திருத்திக்கொண்டிருந்த நேரத்தில், அவர்கள் இருவருக்கும் பொதுப் பகைவனான பாண்டியன் நெடுஞ்சடையன் தன் ஆருயிர்த் தோழனான சாத்தஞ் சாத்தனோடு உறையூர்ப்பாசறையில் அளவளாவிக் கொண்டிருந்தான்.

"நம் படை இப்பொழுது பெண்ணாகடத்தை அடைந்திருக்கும். விசலூரிலிருந்த நிலைப்படைகள் முன்னரே ஆற்றைக் கடந்து வடகரையில் காவல் காத்து நிற்பதால், எந்த ஆபத்தும் இன்றிக் காவிரி ஆற்றைக் கடந்துவிடும். பல்லவனுக்கும் இந்நேரம் செய்தி எட்டி இருக்கும். அவன் பாண்டிய நாட்டின்மீது படையெடுக்கத் திட்டமிட்டிருக்கும் பொழுது, பாண்டியரின் படை காஞ்சிக்கு வருவதைக் கண்டு வியப்படைந்திருப்பான்" என்று சாத்தனிடம் கூறினார் நெடுஞ்சடையன்.

"ஆம் அரசே! நம் படை மதுரையிலிருந்து புறப்பட்டவுடனேயே பல்லவனை அறிவித்திருப்பார்கள் ஒற்றர்கள். இப்பொழுது விசலூர் அணியும் அவன் செவிக்கு எட்டியிருக்கும் கிழக்கே இருக்கும் நன்னில நிலைப்படையும் வந்து சேரும் பொழுதுதான் அது எவ்வளவு பெரிய படை என்பது அவர்களுக்கு விளங்கும். அது மட்டுமல்ல தாங்கள் கோட்டை வாயிலில் நின்று படையை வழியனுப்பியதால் தாங்கள் ஏன் படையுடன் வரவில்லை என்ற ஐயமும் அவர்களை அலட்டும்" என்றான் சாத்தன்.

"சாத்தன் ஏன் உறையூரிலேயே இருக்கிறான் என்றும்அவர்கள் சிந்திப்பார்கள்!" என்று கூறிய நெடுஞ்சடையன் "நாம் எப்பொழுது புறப்பட வேண்டும் என்று நினைக்கிறாய்?" என்று வினவினார்.

"அதற்குத்தான் இளந்தத்தரின் ஓலையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். பல்லவனிடமிருந்து அதியனுக்கு ஓலை வந்திருக்கும். நம் படை காஞ்சியை நோக்கி வருவதாகத் தெரிந்தால் பல்லவன் அதை எதிர்க்கப் புறப்படுவானே தவிர தகடூருக்குப் போகமாட்டான். ஆகவே அதியனைக் காஞ்சிக்குப் படையுடன் வரச்சொல்லலாம். அப்படியானால் நாமும் அதற்கேற்பச் செயல்படலாம்" என்று சாத்தன் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே அவன் எதிர்பார்த்த தூதன் தகடூரிலிருந்து ஓலை கொண்டு வந்தான். அதைப் படித்து முடித்த சாத்தன் திருப்தியடைந்தான்.

"அரசே! நாம் எண்ணியதுபோலவே பல்லவன் போர்த்திட்டத்தை மாற்றியுள்ளான். சற்றும் எதிர்பாராமல் நம் படை முன்னேறியது அவர்கள் எல்லோரையுமே குழப்பிவிட்டது. அதியனைப் பதினான்காம் நாள் புறப்பட்டுக் காவிரியின் வடகரை வழியாகப் ப்டைநடத்தி வரும்படி ஆணையிட்டிருக்கிறான். நம் படை காவிரியைக் கடந்து காஞ்சியை நோக்கி முன்னேறினால் பல்லவன் படை காஞ்சியிலிருந்து புறப்பட்டு நம்முடன் போருக்காக வரும். அவ்வாறு போர் நடக்குமானால் கொங்கர் படை பின்னாலிருந்து நம்மைத் தாக்கலாம். ஆகவே பல்லவன் படைக்கும் கொங்கர் படைக்கும் நடுவில் நம் படை மாட்டிக்கொள்ளும் என்பது பல்லவனின் திட்டமாக இருக்கவேண்டும்" என்று தன் கருத்தை எடுத்துரைத்தான் சாத்தன். நெடுஞ்சடையன் அதை ஏற்றுக்கொண்டான்.

"ஆம் அப்படித்தான் இருக்கவேண்டும்! ஆனால் இப்பொழுது அந்த நிலைமை அதியனுக்கு ஏற்படப்போகிறது. நீ உடனே சங்கரன்சீதரனுக்கு ஓலை அனுப்பு! த்கடூரிலிருந்து அதியன் படை புறப்படுவதைக் கண்காணித்து, அதனைப் பின் தொடர்ந்து வரட்டும் கரவந்தபுரம் படை. நாம் நம்மது படையுடன் புகழியூரில் காத்திருப்போம். அந்த வழியாகத் தான் அதியனின் படை வரவேண்டும். அங்கே இருபுறமும் குன்றுகள் உள்ளன. நம் படை முன்னதாகவே சென்று இடம் பிடித்தால், இருபக்கங்களிலிருந்தும் அதியனின் படையைத் தாக்கலாம். பின்னால் வந்துகொண்டிருக்கும் கரவந்தபுரம் படை, அந்தப் பக்கத்திலிருந்தும் தாக்கலாம். அதியன்

கதையை முடித்துவிட்டு, சேனாதிபதிக்கு உதவியாக நாம் பல்லவன் படையுடன் மோதலாம்" என்று திட்டத்தை முழுமைப்படுத்தினான் பாண்டிய மன்னன்.

பங்குனித் திங்கள் பதினான்காம் நாள் கதிரவன் உதிக்கும் முன்பே, முந்திய இரவில் சரியாக உறங்காத அதியன் எழுந்து, தன் சேனாதிபதியை அழைத்தான்.

"சேரமன்னன் படையுடன் வரும் செய்தியை அறிந்து நம்மிடம் வந்து அறிவிக்குமாறு திருப்பூர்வரை செல்லும்படி நேற்று இரு வீரர்களை அனுப்பி வைத்தோமே. அவர்கள் செய்திகொண்டு வர வில்லையா?" என்று சற்றுக் கவலையுடன் வினவினான். "இல்லை அரசே! அவர்கள் இன்னும் திரும்ப வில்லை. இன்று படை வந்து சேரவேண்டுமானால் நேற்று திருப்பூரைவிட்டுப் புறப்பட்டிருக்க வேண்டும். ஏன் இன்னும் நம் வீரர்கள் வரவில்லை என்றுதெரியவில்லை" என்று கையை விரித்தார் சேனாதிபதி.

"இன்றும் இரண்டு வீரர்களை அனுப்புங்கள்" என்று ஆணையிட்டான் அரசன். அவன் பொறுமை குறைந்து வருகிறது என்பதைப் புரிந்துகொண்ட சேனாதிபதி, மேலும் இருவரை அனுப்புவதால் பயன் ஒற்றும்இல்லை என்று உணர்ந்தாலும் அவ்வாறே அனுப்பி வைத்தார்.

நான்கு வீரர்களும் அன்று மாலையில் திரும்பிவந்தனர். சேரர் படை இன்னும் திருப்பூருக்கு வரவில்லை என்பது மட்டுமல்ல அதற்கப்பால் இருந்த மதுக்கரைக்குக்கூட வந்ததாகத் தகவல் இல்லை என்று அறிவித்தனர். சேரனை மகிழ்விப்பதற்காகக் காத்திருந்த கொங்கர் மன்னன் திகைப்படைந்தான். ஆனால் சேரமன்னனின் வருகைக்காகப் காத்திருந்து, பல்லவனையும் பகைத்துக் கொள்வது பேதைமை என்பதை உணர்ந்ததால் பல்லவன் விருப்பத்தை நிறைவேற்ற முடிவு செய்தான். அடுத்தநாள் அதிகாலையிலேயே தன் படையுடன் கிழக்குத்திசையை நோக்கிக் காவிரியின் வடகரையில் முன்னேறினான்.

கொங்கர் படை புகழியூர் என்னும் ஊரை நெருங்கிக் கொண்டிருந்தபொழுது இருபக்கமும் குன்றுகள் இருந்த இடைவெளி வழியாகச் செல்ல வேண்டி இருந்தது. அப்பொழுது அந்த இரு குன்றுகளின் மறைவிலிருந்தும் திடீரென்று வீரர்கள் வெளிப்பட்டு, வேலாலும் அம்பாலும் தாக்கினர். அந்தத் தாக்குதலை எதிர்த்துப் போராடத் தொடக்கம் குறிக்கும் முன்பே

நூற்றுக்கணக்கான வீரர்கள் மண்மேல் சாய்ந்தனர். அதே நேரத்தில் புகழியூரிலிருந்து ஆயிரம் குதிரை வீரர்களும், ஏராளமான யானைகளும் காலாள் வீரர்களும் விரைந்து வந்து கொங்கர் படைமீது சாடினர். இவ்வாறு மூன்று பக்கத்திலிருந்தும் தாக்குதலுக்கு உட்பட்ட அதியன் தன் படை விரைவிலேயே அழிந்துவிடும் என்பதை உணர்ந்து பின்வாங்குமாறு கட்டளையிட்டான். அவனே ஒரு யானையின் மீது ஏறி வீரர்களைப் பின்னோக்கி நடத்தினான்.

பாண்டியன் நெடுஞ்சடையன் "துரத்திப்பிடியுங்கள்" என்று தன் வீரர்களுக்கு ஆணையிட்டதையும், சாத்தன் தன் வீரர்களை உற்சாகப் படுத்திய ஆரவார ஒலியையும் அதியமான் கேட்டான். விரைவில் சென்று தகடூர் கோட்டைக்குள் நுழைந்து கோட்டைவாயிலை அடைத்துவிட்டால் பாண்டியனிடமிருந்து தப்ப முடியும் என்று கருதினான். பாண்டியர் படை தகடூரை முற்றுகையிட்டாலும், சேரனோ பல்லவனோ விரைவில் வந்து தன்னைக் காப்பாற்றுவான் என்ற எண்ணம் அவனுக்கு ஓரளவு ஆறுதல் அளித்தது. ஆனால் அந்த எண்ணம் விரைவில் மண்ணானது.

அதியனின் படை ஆயிரம்வேலி அரூரை அடைந்தபொழுது, மீன்கொடி ஏந்தி மற்றொருபடை எதிரே வரக்கண்டான். சங்கரன் சீதரன் தலைமையிலான அந்த கரவந்தபுர நிலைப்படை நெடுஞ்சடையனின் ஆணைப்படி, தகடூரிலிருந்து புறப்பட்ட கொங்கு படையைப் பின்தொடர்ந்தது இப்பொழுது ஒரு பக்கம் சங்கரன் சீதரனும், மறுபக்கம் நெடுஞ்சடையனும் சாத்தனும் நெருங்கி வரவே, ஆயிரக்கணக்கான வீரர்களை ஏற்கெனவே இழந்த அதியன் பெருந்தோல்வி அடைந்தான். அவன் அமர்ந்திருந்த யானையிலேயே அதியனைக் கட்டிவைத்து, பத்து யானைகளும் தேவையான வீரர்களும் கொண்ட பாதுகாப்பு அணியுடன் மதுரைக்கு அனுப்பி அங்கே அவனைச் சிறையில் அடைத்தான் பாண்டியன் நெடுஞ்சடையன்.

பல்லவர் படையும், சேனாதிபதி சாத்தன் கணபதி நடத்திச் சென்ற பாண்டியர் படையும் பல்லவ நாடும், சோழநாடும் சேரும் இடத்தில் மோதின. மூன்று நாள்கள் வெற்றி தோல்வி இன்றிப் போர் நடந்தது. நான்காம் நாள், இன்னும் ஏன் கொங்கர் படை வந்து சேரவில்லை என்று வியப்புற்ற பல்லவன் மேற்குப் பக்கம் புழுதிப்படலத்தைக்கண்டு ஆறுதல் அடைந்தான். கொங்கர் படை வந்து விட்டது. அது மேற்கிலிருந்து தாக்கத் தொடங்கினால் தன் வெற்றி உறுதி என்று நம்பினான். ஆனால் வந்த படையோ

பாண்டியன் நெடுஞ்சடையனின் படை! இனித் தோல்வி உறுதி என்பதை உணர்ந்த பல்லவன் பின்வாங்கத் தொடங்கினான்.

"காஞ்சியில் ஐயாயிரம் வீரர்களுக்குமேல் இருக்கிறார்கள். நாம் துரத்திச் சென்று வெற்றிபெறுவது கடினம். மேலும் நாம் திரும்பிச் சென்று சேரனுடன் மோதவேண்டும்" என்று நெடுஞ்சடையனும் சாத்தனும் முடிவு செய்து, பல்லவன் பின்னால் போகவில்லை.

சாத்தனின் ஓலைச்சூழ்ச்சியால் பங்குனி இருபத்தாறாம் நாள் தகடூரை அடைந்த சேரர்படை கொங்கு மன்னனின் வரவேற்புக்கு மாறாக, பாண்டியனின் படை காத்திருப்பதைக் கண்டவுடனேயே பின் வாங்கியது. சேரநாட்டிலிருந்து வந்து ஏராளமான களிறுகளைப் பாண்டியர் படை கைப்பற்றியது.

இவ்வாறு, மூன்று பகைவர்களை முறியடித்து மிகப்பெரும் வெற்றி வீரனாக மதுரைக்குத் திரும்பினான் பாண்டியன் நெடுஞ்சடையன்.

42. மொழி காக்கும் முயற்சி

பல்லவன், சேரன், கொங்கன் ஆகிய மூன்று வேந்தர்களின் படைகளையும் போரில் புறங்கண்டு வெற்றிவாகை சூடிய பாண்டியன் நெடுஞ்சடையன், அதியன் ஆட்சிபுரிந்த கொங்கு நாட்டை மட்டும், பாண்டிய நாட்டின் ஒரு பகுதியாக இணைத்துக்கொண்டான். நட்புத் துரோகம் புரிந்து, பகைவர்களோடு சேர்ந்து பாண்டியனையே அழிக்கத் துணிந்த அதியனுக்கு இனி நாடாளும் உரிமை அளிப்பதில்லை என்று முடிவுசெய்தான். அதியன் போர் புரியும்பொழுது அமர்வதற்காகத் தேர்ந்தெடுத்த அவனுடைய பட்டத்து யானைமேலேயே அவனைக் கட்டிவைத்து, மதுரை நகருக்குள் கொண்டு சென்று சிறையிலிட்டான். சாத்தஞ் சாத்தனும் தகடூர்ச் சிறையில் தான் அதியனிடம் செய்த சபதத்தை நிறைவேற்றியதாலும் இனி தன் உள்ளம் கவர்ந்த கன்னியைக் கைபிடிக்கத் தடை எதுவும் இல்லை என்பதாலும் மகிழ்ச்சியடைந்தான்.

கொங்கு நாட்டை அடிப்படுத்திய பாண்டியன் நெடுஞ்சடையன் தன்னுடைய வெற்றியைக் கொண்டாடும் முகத்தாலும், இறைவனுக்கு நன்றி செலுத்தும் நோக்காலும் அந்நாட்டில் உள்ள காஞ்சிவாய்ப் போரூரில் திருமாலுக்குக் "குன்ற மன்னதோர் கோயில் எழுப்பினான். அன்றைய மன்னர்கள் தம்முடைய பெயரும் புகழும் என்றென்றும் நிலைக்குமாறு எழுப்பிய நினைவுச் சின்னமாகவும் இத்தகைய கோயில்கள் இன்றும் விளங்குகின்றன.

பெருவெற்றி பெற்ற பாண்டிய மன்னன் கூடல் மாநகரக்குத் திரும்பியவுடன் அந்த வெற்றிக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக ஏழை எளியோருக்கும், தக்கார்க்கும், தகவுடையோர்க்கும் ஏராளமாகப் பொன்னும், பொருளும், இறையிலி நிலங்களும் வழங்கினான். வேலங்குடி என்னும் கிராமத்தைச் சீவரமங்கலம் என்று பெயரிட்டுப் பிரமதேயமாக வழங்கிய செயலைச் சீவரமங்கலச் செப்பேடுகள் பறைசாற்றுகின்றன. பாண்டியர்தம் வரலாற்றை எடுத்துரைக்கும் முதல் பெட்டகமாகப் பாண்டியர் வெளியிட்ட வேள்விக் குடிச் செப்பேடுகள் போலவே சீவரமங்கலச் செப்பேடுகளும் வரலாற்றுச் செய்திகளை வரையிட்டுக் காட்டுகின்றன. பாண்டியன் நெடுஞ்சடையனின் வலக்கையாக

விளங்கிய சாத்தஞ் சாத்தன் இந்தப் பட்டயங்களை எழுதி வரலாற்றைச் சீர்செய்தான்.

சாத்தஞ் சாத்தனின் மாபெரும் சேவைகளையும், ஆற்றலையும் அறிவையும் பாராட்டி அவனுக்கு 'ஏனாதி' என்ற பட்டம் சூட்டிப் பெருமைப் படுத்தினான் பாண்டியன் நெடுஞ்சடையன். அந்தப் பட்டத்தைவிடச் சிறந்ததும் விலைமதிக்க முடியாததுமான வாழ்க்கைத் துணைவியாகத் தன் தங்கை தேவந்தியைச் சாத்தனுக்கு மணம் முடித்துவைத்தான். எனினும் திருப்தியடையாத வைகை வேந்தன் சாத்தஞ் சாத்தனைத் தழுவிக்கொண்டு அவனிடம் பேசினான்.

"சாத்தா! நானும் இந்தப் பாண்டிய நாடும் உனக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம். களப்பிரரை முறியடித்து மதுரையில் மீண்டும் பாண்டிய அரசை நிறுவிய என் முன்னோரான பாண்டியன் கடுங்கோனுக்கு உன்முன்னோரான சாத்தனார் வளர்ப்புத் தந்தையாகவும் வழிகாட்டியாகவும் இருந்து அரியணை ஏறுவதற்கும் உதவினார் என்று என் தந்தையார் சொல்லக் கேட்டிருக்கிறேன். அந்த அரசப் பற்றும் நாட்டுப் பற்றும் வாழையடி வாழையாக வளர்ந்து உன் முன்னோர்கள் ஒவ்வொரு தலைமுறையினரும் பாண்டிய அரசுக்குத் தொண்டு செய்தார்கள் என்பதும் தெரிந்ததே. உன் அண்ணனும் என் தந்தையாருக்கும், இன்று எனக்கும் செய்யும் சேவையை நான் நன்கறிவேன். ஆயினும் நீ என் உயிரையும் காத்து, என் நாட்டையும் காத்து, என்னுடைய ஒவ்வொரு வெற்றிக்கும் காரணமாக இருந்து எனக்குச் சேவை செய்து வருகிறாய். உன்னை அமைச்சராக்க நான் முன் வந்தபொழுது நீ மறுத்துவிட்டாய். உன் அண்ணன் இன்றும் நலத்தோடு வாழ்வதால் அவர் விரும்பும் வரை சேனாதிபதியாகவே இருக்கலாம். இப்பொழுது நீ எந்தப் பதவியை விரும்புகிறாய்? அமைச்சருடன் துணை அமைச்சராக இருப்பாயா அல்லது உன் அண்ணனுடன் துணைச் சேனாதிபதியாக இருப்பாயா? உன் விருப்பம் எதுவானாலும் அதை நிறைவேற்றி வைக்கச் சித்தமாக உள்ளேன் நான்" என்று உணர்ச்சி பொங்கக் கூறினான் மன்னன்.

தன் ஆருயிர்த் தோழனும் மைத்துனனும், அரசருமாகிய நெடுஞ்சடையனின் அன்புப் பெருக்கில் அகம் மகிழ்ந்த சாத்தன், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு, தன்னுடைய தகுதிக்கு ஏற்ப விடையிறுத்தான்.

"அரசே! என் முன்னோர்களும், என் அண்ணனும் நானும் செய்த சேவையைப் பாராட்டினீர்கள். அரசுப் பற்றும், நாட்டுப்பற்றும் மேலிட்டுச் சேவை செய்யும் பெரியோர்களும் வீரர்களும் பலரும் உள்ளனர். பாரினில் சிறந்த பாண்டிய நாடே அன்றி மற்ற நாடுகளிலும் அத்தகையோர் உள்ளனர். ஆனால் எனக்கும் என் முன்னோருக்கும் அரசர்களிடமிருந்து கிடைத்த ஆதரவும் பெருமையும் வேறு யாருக்குமே கிடைத்திருக்க முடியாது. அதிலும் எனக்குக் கிடைத்தது போன்ற பரிசு என் முன்னோருக்கும் கிடைக்கவில்லை. தங்களுடைய உடன் பிறந்த தங்கையை, இந்தத் திரு நாட்டின் இளவரசியை எனக்குத் தந்து என்னை உறவினன் ஆக்கியதோடு என் வாழ்வையே ஒளிபெறச் செய்தீர்கள். அதைவிடப் பெரிய பரிசு என்ன கிடைக்கமுடியும்? தாங்கள் அளிக்கும் எந்தப் பதவியையும் எந்தப் பணியையும் ஏற்றுக் கொள்வது என்கடமை. ஆனால் என் விருப்பத்தைக் கேட்பதால் நான் அதை வெளியிடுவதும் என் கடமையாகும். இப்பொழுது நான் தனி மனிதன் அல்ல! என் வாழ்க்கையைப் பங்கிடுவதற்கு ஒரு மனைவி ஏற்பட்டிருப்பதாலும், அவள் அரசகுமாரி ஆதலாலும் நான் அவளிடம் கலந்து பேசியபின் என் விருப்பத்தை அறிவிப்பதற்கு என்னை அனுமதிக்க வேண்டும்" என்று வேண்டினான் சாத்தன்.

"அப்படியே செய்" என்று அதற்கு இணங்கினார் பாண்டியன் நெடுஞ்சடையன்.

தன் மனம் நிறைந்த மணவாளனின் அகன்ற மார்பில் மலர்ந்த முகம் புதைத்து, கலவியின்பத்தின் களைப்பில் களிப்புற்று மயங்கிய தேவந்தி, அவனுடைய நலம்பாராட்டும் நயமொழிகளில் மூழ்கி இருந்தாள். மீண்டும் சுருண்டும் நெளிந்தும் விரிந்தும் கலைந்தும் கிடந்த அவளுடைய கருங்குழலில் தன் கைவிரல்களை மெல்ல அலையவிட்டு, அந்தச் சிறு செயலிலும் பெரும் இன்பம் கண்ட சாத்தன் அவளுடைய செவிகளில் செந்தமிழ்த் தேன் பாய்ச்சிக்கொண்டிருந்தான்.

"நம் சான்றோர்கள் அகமென்றும் புறமென்றும் இலக்கியப் படைப்பை ஏன் பிரித்தனர் என்று நான் பல காலம் சிந்தித்ததுண்டு. ஆனால் அதற்கு விடை அன்றெல்லாம் கிடைக்கவில்லை. நீ எனக்கு அளித்த புதுமண மதுவின் தேறல் உண்டபின்தான் அந்த விடை தெரியவந்தது. இந்த இன்பப் பெருக்கை என் அகத்தால் மட்டுமே உணரமுடியும். புறத்தாரிடம் விளக்க முடியாது. இதற்குமேல் இனிப்பெறுவதற்கு எதுவும் இல்லை என்ற

மனநிறைவு எனக்கு ஏற்படுகிறது. "வேட்ட பொழுதின் அவையவை போலுமே தோட்டார் கதுப்பினாள் தோள்' என்ற பொய்யாமொழிப் புலவரின் குறள் எவ்வளவு பொருட்செறிவு நிறைந்தது என்பதை நான் உணர்கிறேன். வில்லை முறித்து மிதிலைக் குமரியை வென்றான் இராமன் என்று இராமாயணமும், இலக்கில் அம்பெய்து பாஞ்சாலியை வென்றான் பார்த்தன் என்று மகாபாரதமும் புகழ்கின்றன. சேர பல்லவ கொங்க மன்னர்களைப் புறம்கண்டு உன்னை வென்றேன் நான் என்று எண்ணத் தோன்றுகிறது எனக்கு நான் ஈட்டிய எல்லா வெற்றிகளும் உன்னை அடைவது என்ற ஒரே இலக்கை நோக்கியே விளைந்தன என்று நம்புகிறேன் நான்" என்று காதல் கனிமொழி சிந்தினான் அவன்.

"நம் காதல் பாதையில் நேர்ந்த தடைகளும் நெடுநாள் பிரிவும் எல்லாம் பழங்கதையாய் மாறி என்றும் இணைபிரியாத இன்பவாழ்வு இனி நிலைக்கும் என்று நிம்மதியடைகிறேன். நான்" என்று அவன் மார்பில் முத்தமிட்டு இன்பம் சேர்ந்தாள் அவள்.

"அந்த இணைபிரியாத வாழ்வைப்பற்றித்தான் உன்னிடம் பேசவேண்டுமென்று நினைத்தேன். அரசர் என்னிடம்வினவினார் துணை அமைச்சர் பதவி வேண்டுமா, துணைச் சேனாதிபதி பதவி வேண்டுமா என்று! நான் அறிய விரும்புவது ஒன்றுதான். உனக்கு மதுரை அரண்மனையில் மட்டுமே வாழவேண்டும் என்று ஆசை உள்ளதா? உன் அன்னையும் அண்ணனும்அருகிலேயே இருக்க வேண்டும் என்று விரும்புகிறாயா? மதுரையிலிருந்து தொலைவில், ஓரிரு நாள் பயணம் செய்து எட்டவேண்டிய இடத்தில் வாழநேர்ந்தால், அது உனக்குப் பிடிக்காமல் போகுமா? உன் விருப்பத்தை அறிந்தபின்னரே நான் மன்னரிடம் என் கருத்தைக் கூற விரும்புகிறேன்" என்று அவளுடைய உள்ளக் கிடக்கையை அறிய விரும்பினான் சாத்தன்.

தேவந்தி தன் குவளைக் கண்களை அகலதிறந்து வியப்புடன் அவனை நோக்கினாள்.

"நான் என்ன சிறு குழந்தையா அல்லது ஓடி விளையாடும் சிறுமியா? அன்னையின் அரவணைப்பும் அண்ணனின் பாசமும்அன்றாடம் தேவைப்படும் பருவம் அல்லவே! எனக்கு என் கணவன் எங்கே வாழ விரும்பினாலும் அங்கே அவருடன் சேர்ந்து வாழ்வதே என் விருப்பம். அதுதான் என் கடமையும் கூட. இனியுள்ள காலம் எல்லாம் நாம் இணைபிரியாமல் வாழவேண்டும்.

அதுதான் எனக்கு முக்கியம்! இடம் எது என்பது முக்கியமே அல்ல" என்று உறுதியாகக் கூறினாள் அவள். பின்னர் தொடர்ந்து ஒரு வினாவையும் எழுப்பினாள்.

"ஆயினும் ஒன்றைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். மதுரையில் வாழாமல் வேறு எங்கே வாழலாம் என்று எண்ணுகிறீர்கள்? உறையூரிலா? இல்லை கரவந்த புரத்தில்? என்றான் சாத்தன்.

"தாங்கள் பிறந்த ஊர் அல்லவா?" என்று மேலும் வினவினாள் அவள்.

"ஆம், ஆனால்! நான் பிறந்த ஊர் என்பதால் அல்ல! அங்கே இப்பொழுது ஒரு நிலைப்படை அமைத்துள்ளோம். ஒரு சிறு கோட்டையும் கட்டியுள்ளோம். அது மிகவும் முக்கியம் வாய்ந்த இடம்! வேணாட்டிற்கும் பாண்டிய நாட்டிற்கும் இடையில் ஒரு முக்கிய வாயில்போல் அதனை உருவாக்க முடியும். நான் அங்கு வாழந்தால் சில செயல்களைச் செய்து முடிக்கவேண்டும் என்று நினைக்கிறேன். அதை மன்னரிடம் விளக்கினால் ஏற்றுக்கொள்வார் என்று நம்புகிறேன்" என்று சுருக்கிப் பேசினான் சாத்தன்.

"உங்கள் விருப்பம்போல் செய்யுங்கள்! எனக்கு முற்றிலும் சம்மதமே" என்றாள் அவள்.

அடுத்த நாள் சாத்தன் பாண்டியன் நெடுஞ்சடையனிடம் தன் நோக்கத்தை எடுத்துரைத்தான்.

"அரசே! தாங்கள் என்னிடம் கொண்ட நட்பிற்கும் பாசத்திற்கும் அறிகுறியாகவும், என் சேவைக்கு ஏற்ற பரிசாகவும் எனக்கு உயர்ந்த பதவி அளிக்க முன்வந்தீர்கள். அமைச்சராக மாறன் எயினனும் சேனாதிபதியாக என் தமையன் சாத்தன் கணபதிபும் விளங்கும்பொழுது நான் அவர்களில் ஒருவருக்கு துணையாக ஒரு பதவியை வகிப்பதில் பயன் ஒன்றும் இல்லை. இனி நம்மை எதிர்த்துப் படையெடுத்து வரும் துணிவு தங்கள் ஆட்சிக் காலத்தில் எந்தப் பகைவனுக்கும் வராது. உங்கள் அருகில் இருப்பது எனக்கு இன்பம் அளிக்கும் என்பது உறுதி. ஆனால் நான் மதுரையில் இருந்து ஆற்ற வேண்டிய பணி எதுவும் இப்பொழுது இல்லை ஆகவே தான் என் மனத்தில் வேறு ஒரு திட்டமும் ஆசையும் உருவாகியுள்ளன" என்றான் சாத்தன்.

"அது என்ன திட்டம்? விளக்கிச் சொல்" என்றான் நெடுஞ்சடையன். சாத்தன் அவ்வாறே செய்தான்.

"பல்லவனும் சேரனும் நம் மீது படையெடுத்து வந்தவர்கள். அதனால் அவர்களுக்கு விளைந்த இன்னல்களுக்கும் இழப்புக்களுக்கும் அவர்களே பொறுப்பு. ஆனால் வேணாட்டின் மீது நாம் படை யெடுத்துச் சென்றோம். அங்குள்ள அரணையும் கோட்டையையும் அழித்தோம். முற்றுகையிட்டு மக்களை வருத்தினோம். பொன்னும் பொருளும் திரையாகப் பெற்றோம். ஆகவே அங்கு நிகழ்ந்த நாசத்திற்கு நாமே பொறுப்பு! போரினால் விளையும் அழிவுகளையும், போர் தொடுப்போரிடம் மக்களுக்கு ஏற்படும் வெறுப்பையும் நான் வேணாட்டிலும் விழிஞம் நகரிலும் நன்கு உணர்ந்தேன். நம் முன்னோர்களும் அதே செயலில் இறங்கியதால் பாண்டியர் என்று கேட்டாலே அங்குள்ள மக்கள் வெறுப்பைக் காட்டுகின்றனர். அந்த வெறுப்பு பாண்டிய அரசர்களுக்கு எதிராக மட்டும் அல்ல, பாண்டிய மன்னர்கள் காலம் காலமாகக் காத்துப் போற்றிய நம் இனிய தமிழ்மொழி மீதும் திரும்பியிருக்கிறது. சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த பாண்டியரின் பெருமையை நாம் போற்றும் வேளையில் தமிழைப் பாண்டியரின் சொத்தாகக் கருதி அதன் அமைப்பையே மாற்றும் பணியில் சில புலவர்களும் அறிஞர்களும் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று தெரிய வந்துள்ளது. வடமொழியின் புதிய புதிய ஒலி வகைகளின் வனப்பை மிகைப் படுத்தி அதனைத் தமிழோடு இணைத்து, ஒரு புதிய கலப்பு மொழியையே உருவாக்கும் முயற்சி நடக்கிறது. அங்கே அந்த நிலையை மாற்றி மேற்குத்தொடர்ச்சி மலைக்கு அப்பால் தமிழ்கூறு நல்லுலகில் வாழும் மக்களும் தமிழர்களே என்ற உண்மையை நிலைநாட்டவேண்டும். அதற்கு முதற்படியாக வேணாட்டரசிடம் நாம் தொடர்புகொண்டு நட்பை வளர்க்க வேண்டும். இந்தப் பணியை நிறைவேற்றுவதில் தடையாக நிற்கும் ஒரு கூறு மதுரைக்கும் விழிஞத்திற்கும் இடையே உள்ள தூரம். நம் படை அங்குச் செல்வதைத் தவிர நட்புறவைப் பெருக்கும் நல்முயற்சிகள் எதுவும் நடப்பதில்லை. அந்தத் தடையை நீக்குவதற்குத்தான் நான் முயற்சி செய்கிறேன்" என்றான் சாத்தன்.

"என்ன முயற்சி?" மேலும் விளக்கம் கேட்டான் வைகை வேந்தன்.

சாத்தன் தொடர்ந்தான். "நம் கரவந்தபுரத்தில் ஒரு நிலைப்படையும் சிறிய கோட்டையும் உள்ளன. அந்தக் கோட்டையை இன்னும் பெரிதாக்கி, அரண்களை மேலும்

வலிதாக்கி, நான் அங்கே வாழ விரும்புகிறேன். வேணாட்டிலிருந்து நமக்கு எதிராக ஏதாவது நீக்கம் நடந்தால் அதை உடனே அறியவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் மிகவும் உதவும் அது. அது மட்டுமன்றி, மெல்ல மெல்ல வேணாட்டு அரசனோடும், அங்கு வாழும் மக்களோடும் நட்பையும் நல்லுறவையும் வளர்க்கவும் அது வழிவகுக்கும். நாளடைவில் பாண்டியரோடு உள்ள பகைமை மறைந்து பாசம் வளரச்செய்தால், மொழித் தொடர்பும், பண்பாட்டுக் கலப்பும் அதற்கேற்ப விரிவடையும். தமிழ்கூறு நல்லுலகம் "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகம்" என்ற தொல்காப்பிய விளக்கவுரைக்கு ஏற்ப ஒரு பெரும் நிலப் பரப்பாகவே தொடரும். மேற்குத் தொடர்ச்சி மலை தமிழகத்தை இரண்டாகப் பிரித்து மேற்கில் வேறு ஒரு மொழி உருவாகும் ஆபத்தை அதனால் தடுக்கமுடியும். ஒரு வேளை நான் அந்த முயற்சியில் தோல்வி அடையலாம். ஆனால் முடிந்த அளவு மொழிக்காப்பிற்காக முயற்சித்த மனநிறைவு எனக்கும் தங்களுக்கும் கிடைக்கும். ஆகவேதான் எனக்கு மதுரையிலிருந்து சென்று கரவந்தபுரத்தில் வாழ அனுமதி கொடுங்கள் என்று வேண்டுகிறேன். எப்பொழுதாவது அவசரத் தேவை ஏற்பட்டால் ஒரே நாளில் நான் இங்கு வந்து சேர்வேன் என்பது உறுதி." என்று மன்றாடினான் சாத்தன்.

சாத்தனின் விளக்கத்தை மனத்தில் கொண்டு சற்று நேரம் சிந்தித்த நெடுஞ்சடையன் தலையை ஆட்டினான். "நீ சொல்வது நியாயமே! வேணாட்டு மக்கள் நம்மிடம் வெறுப்படைந்திருக்கிறார்கள் என்பதை நானும் நேரில் கண்டேன். ஆனால் அதை மாற்றி, வெறுப்பை விருப்பாகச் செய்வதற்கு இனிமேல் முடியுமா என்பது கேள்விக்குறியாகத்தான் தோன்றுகிறது எனக்கு. ஆயினும் நீ சொன்னதுபோல் முயற்சி செய்வதில் தவறில்லை. நீ கரவந்தபுரத்தில் வாழ்வதும் ஒரு வகையில் நல்லதே. தென் மேற்குப் பகுதியைக் கண்காணிப்பதற்கு அது மிகவும் உதவியாக இருக்கும் அப்படியே செய்யலாம்" என்று அனுமதியளித்தார் அரசர்.

ஒற்றர்படைத்தலைவன் இளந்தத்தன் மன்னரைக்காணக் காத்திருப்பதாகக் காவலன் வந்து அறிவிக்கவே அவனை உள்ளே வரும்படி அழைத்தார் பாண்டிய மன்னர். இளந்தத்தன் உள்ளே வந்து மன்னரையும் தளபதியையும் வணங்கினான்.

"வருக! இளந்தத்தரே! நான் உங்களை இவ்வாறு கண்டு எத்தனை ஆண்டுகள் ஓடிவிட்டன?" என்று அவனை வரவேற்றான் அரசன்.

"அறம் வளர்த்த நாதரை இமயமலைக்கு அனுப்பிவிட்டீர்களா இளந்தத்தரே?" என்று புன்னகையுடன் விசாரித்தான் சாத்தன்.

"ஆமாம் தளபதியாரே! தாங்கள் கூறியவாறு, தகடூர் மடத்தை மூடிவிட்டோம். காஞ்சியில் கைலாசமும் இரு சீடர்களும் மடத்தை நடத்துவார்கள். மதுரையிலும் நான்கு சீடர்கள் மடத்தை நடத்துவார்கள். அறம் வளர்த்த நாதர் இமயமலையில் தவம்புரியச் சென்றிருப்பதால் என்று திரும்புவார் என்று சொல்ல முடியாது என்பதைச் சீடர்கள் பக்தர்களிடம் அறிவித்து விட்டனர்" என்றான் இளந்தத்தன்.

"காஞ்சியில் மடம் இனியும் தேவைப்படுமா?" என்று சாத்தனிடம் வினவினார் நெடுஞ்சடையன். "இருக்கட்டும் அரசே! நமக்குத்தேவை ஏற்படுமானால் இளந்தத்தர் அறம்வளர்த்த நாதர் ஆகிவிடலாம். மேலும் காஞ்சியைக் கண்காணிப்பது நிரந்தரமாகச் செய்யவேண்டிய பணி. மடம் அதற்குச் சிறந்த வழி" என்றான் சாத்தன்.

"நமது வெற்றி விழாக் கொண்டாட்டங்களில் இளந்தத்தருக்குச் சிறப்புச் செய்ய முடியாமல் போய்விட்டது. அவருடைய உயர்ந்த சேவை பெரும் பாராட்டுக்கு உரியது" என்று சற்று வருத்தத்துடன் பேசினார் நெடுஞ்சடையன்.

"நான் அவரை மறக்கவில்லை அரசே! அவருடைய சேவையைக் குறைத்து மதிப்பிடவும் இல்லை. ஆனால் அந்தச் சேவையை உலகறியப் பாராட்டுவது உகந்த செயல் அல்ல. அதை மன்னரும் அமைச்சரும், அவர்களைப் போன்றவர்களும் அறிந்தால் போதும். பொன்னும் பொருளும் ஏராளமாகக் கொடுங்கள். ஆனால் அவருடைய திறமை மிக்க சேவையை விளம்பரம் செய்யக் கூடாது. அவ்வாறு செய்தால் அவர் என்னசெய்தார் என்று பகைவனும் ஆராய்வான். வெளியில் வரக்கூடாத செய்திகள் வெளிவரத் தொடங்கும். அதனால் தான் திருவள்ளுவர், 'சிறப்பறிய ஒற்றின்கண் செய்யற்க செய்யின் புறப்படுத்தான் ஆகும் மறை' என்று மிகத் தெளிவாக அன்றே எச்சரிக்கை செய்துள்ளார்" என்று எடுத்துரைத்தான் சாத்தன்.

"ஆம் அரசே! சாத்தனாரின் அறிவுரை முற்றிலும்சரியே. போர்வீரர்களையும் அரசியல் வல்லுநர்களையும்போல் அல்ல ஒற்றறியும் தொழில். அது சற்றும் விளம்பரம் இன்றித் திரைமறைவில் நிறைவேறும் தொண்டு. மன்னரின் ஆதரவே அதற்குள்ள பாராட்டாகும்" என்று சாத்தன் கருத்தை ஆதரித்தான் ஒற்றர் படைத் தலைவன். மன்னரும் அதை ஏற்றுக்கொண்டார்.

அன்னை மகாராணி, பாண்டியன் நெடுஞ்சடையன் சேனாதிபதி சாத்தன் கணபதி, அவருயை மனைவி நக்கன் கொற்றி, முன் அமைச்சர் மாறன் காரி, அமைச்சர் மாறன் எயினன் ஆகியோரின் ஆசி பெற்றுச் சாத்தஞ்சாத்தனும் தேவந்தியும் கரவந்த புரத்திற்குப் பயணம் ஆயினர். போருக்குப்பின் அமைதியும், பிரிவிற்குப்பின் சேர்தலும், தங்கள் வாழ்க்கையை வளம்செய்யும் என்ற நம்பிக்கையுடன் புதுவாழ்வு தொடங்கினர். நாட்டிற்கும், தாய்மொழிக்கும் நன்மை நாடி, புதிய வழிகளைத் திறக்கவேண்டும் என்ற ஊக்கத்துடன் எதிர்காலத்தை நோக்கிச் சென்றான் சாத்தன். அவன் முயற்சி வெற்றி பெறுமா?

கண்ணன் கிருஷ்ணன்



செப்பேடு தந்த செம்மல்